ஸ்பியர் திட்டம்

மனிதநேய சாசனமும் மனிதநேய மறுசீரமைப்பின் அடிப்படைத் தரங்களும்

2011 பதிப்பு

ஸ்பியர் திட்டம்

மனிதநேய சாசனமும் மனிதநேய மறுசீரமைப்பின் அடிப்படைத் தரங்களும்

வெளியிடுபவர்கள்:
ஸ்பியர் திட்டம்
பதிப்புரிமை - ஸ்பியர் திட்டம் 2011

மின்னஞ்சல;: info@sphereproject.org
இணையத்தளம்: www.sphereproject.org
அரச சார்பற்ற நிறுவனங்களின் குழு, செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் என்பன இணைந்து, மனிதநேய மறுசீரமைப்பின் பிரதான பகுதிகள் தொடர்பில் உலகளாவிய அடிப்படைத் தரங்களின் தொகுதி ஒன்றினை வடிவமைக்கும் நோக்குடன் ஸ்பியர் கையேடு என்ற ஸ்பியர் திட்டம் 1997ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மோதல் போன்ற சூழ்நிலைகளின் போதும் மற்றும் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதநேய முறைமையின் பொறுப்புடைமையை விஸ்தரிப்பதற்கும் மனிதநேய மறுசீரமைப்பின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே இந்த கையேட்டின் நோக்கமாக உள்ளது. பல்வேறு நிறுவனங்கள் மற்றும் மக்களின் ஒன்றிணைந்த அனுபவமே மனிதநேய சாசனமும், மனிதநேய மறுசீரமைப்பின் அடிப்படைத் தரங்களும் என்ற இந்த கையேடு. எனவே, இந்த கையேட்டில் இடம்பெறும் கருத்துக்கள் எந்தவொரு தனிப்பட்ட நிறுவனத்தினதும் அல்லது நபரினதும் கருத்து என்ற ரீதியில் பார்க்கப்படக் கூடாது.

முதல் பரீட்சார்த்த பதிப்பு 1998
முதல் இறுதிப் பதிப்பு 2000
இரண்டாவது பதிப்பு 2004
மூன்றாவது பதிப்பு 2011

ISBN 978-1-908176-00-4

இந்த பிரசுரத்திற்கான அட்டவணை பதிவினை பிரித்தானிய நூலகம் மற்றும் ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நூலகம் என்பவற்றில் பெற்றுக் கொள்ளலாம்.
அனைத்து உரிமையும் கொண்டது. இந்த ஆவணம் பதிப்புரிமை பெற்றதாகும். ஆனால், கட்டணம் இன்றி, மீள் விற்பனை செய்யப்படாது கல்வித் தேவைகளுக்காக மீள்பிரசுரிக்கப்படலாம். இவ்வாறான பயன்பாட்டுக்கு முறைசார்ந்த அனுமதியினை பெற வேண்டியது அவசியமாகும். ஆனால், உடனடியாக இதற்கான அனுமதி வழங்கப்படும். வேறு சூழ்நிலைகளுக்கு பிரதியெடுத்தல் அல்லது வேறு பிரசுரங்களில் மீள் பயன்படுத்தல் அல்லது மொழிபெயர்ப்பு செய்தல் அல்லது உள்வாங்கல் என்பவற்றிற்கு பதிப்புரிமை உடையவரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறப்படல் வேண்டும். அதற்கான கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

Practical Action Publishing மற்றும் அதன் முகவர்கள் மற்றும் பிரதிநிதிகளினால் உலகம் முழுவதும்ஸ்பியர் திட்டத்திற்காக விநியோகிக்கப்பட்டுள்ளது. Practical Action Publishing, தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்திக்கான Schumacher நிலையம், Bourton on Dunsmore, Rugby, CV23 9QZ, ஐக்கிய இராச்சியம்
தொ.பே: +44 (0) 1926 634501; தொலைநகல்: +44 (0)1926 634502
மின்னஞ்சல்: sphere@practicalaction.org.uk |
இணையத்தளம்: www.practicalactionpublishing.org/sphere

Practical Actionஇற்கு முழுமையாக சொந்தமான பிரசுர நிறுவனமாக Practical Action Publishing (ஐக்கிய இராச்சிய நிறுவனம் பதிவிக்கம். 1159018) உள்ளது. தமது அறக்கட்டளை குறிக்கோள்களின் ஊடாக மாத்திரம் உதவி பெற்று செயற்பட்டு வருகின்றது.
வடிவமைத்தவர்: Metz-Tessy, பிரான்ஸ்
அச்சிட்டவர்: Hobbs the Printer, சவுத்எம்டன், ஐக்கிய இராச்சியம்

MIX
Paper from responsible sources
FSC® C020438
FSC www.fsc.org

முன்னுரை

நிறுவனங்களுக்கு இடையிலான பரந்த ஒத்துழைப்பின் விளைவாகவே *மனிதநேய சாசனமும், மனிதநேய மறுசீரமைப்பின் அடிப்படைத் தரங்களும்* என்ற ஸ்பியர் கையேட்டின் இந்த புதிய பதிப்பு வெளிவருகின்றது.

பொறுப்புடைமைக்கு பிரயோக ரீதியான சட்டகத்தை வழங்குவதன் ஊடாக தமது உதவியின் வினைத்திறன் மற்றும் தமது பங்குதாரர்கள் தொடர்பில் தமது பொறுப்புடைமை ஆகிய இரண்டையும் மேம்படுத்துவதற்கான நிறுவனங்களின் தீர்மானத்தை பிரதிபலிப்பதாக மனிதநேய சாசனமும், அடிப்படைத் தரங்களும் உள்ளன.

மனிதநேய சாசனமும், அடிப்படைத் தரங்களும் மனிதநேய சிக்கல்கள் இடம்பெறுவதனை நிறுத்தப் போவதில்லை. ஆனால், அவற்றின் மூலம் மனிதர்கள் இன்னலுறுவதனை தடுக்க முடியும். எவ்வாறாயினும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வருவதற்கான நோக்கத்துடன் உதவியினை விஸ்தரிப்பதற்கான சந்தர்ப்பமாக இதனை கருத முடியும்.

மனிதநேய அரச சார்பற்ற நிறுவனங்களின் குழு மற்றும் செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறை சங்கத்தின் முயற்சியாக 1990களின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கையின், ஸ்பியர் தரங்கள் தற்போது 21ஆம் நூற்றாண்டின் மனிதநேய மறுசீரமைப்பின் நிகழ்நிலைப்படியான தரங்களாக பிரயோகிக்கப்படுகின்றது.

இந்த முயற்சி வெற்றி பெறுவதற்கு காரணமாக இருந்து அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

Ton van Zutphen
ஸ்பியர் சபைத் தலைவர்

John Damerell
திட்ட முகாமையாளர்

நன்றிகள்

ஸ்பியர் கையேட்டினை மீட்டல் என்பது தனிப்பட்ட அடிப்படையில் பெயர்கள் குறிப்பிட முடியாத அளவில், உலகம் முழுவதிலும் இருந்து பெரும் எண்ணிக்கையிலான நபர்கள் ஈடுபடுத்தப்பட்ட பரந்துபட்ட, ஒருங்கிணைந்த மற்றும் ஆலோசனை ரீதியான செயற்பாடாகும். வழங்கப்பட்ட பங்களிப்பின் அளவு மற்றும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு வெளிப்படுத்திய ஆர்வம் என்பன தொடர்பில் ஸ்பியர் திட்டம் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தொழில் நுணுக்கம் சார்ந்த அத்தியாயங்கள் மற்றும் எழுந்தமான கருப்பொருள்களுக்கு மையப் புள்ளிகளைச் சேர்ந்த குழுவின் தலைமையில் கையேட்டு மீட்டல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. துறை அடிப்படையில் பெறப்பட்ட புதிதாக எழும்பும் அனைத்து விடயங்களுக்கும் எதிர்கொள்ளும் பணியின் மட்டத்தின் அடிப்படையில் மனிதநேய நிறுவனங்களால் பிரேரிக்கப்பட்ட அல்லது நேரடியாக நியமிக்கப்பட்ட வளவாளர்கள் உதவி வழங்கினர். கையேடு முழுமைக்கும் சம்பந்தப்பட்ட அம்சங்களின் மீட்டல் செயற்பாட்டிற்கும் ஆலோசகர்கள் தலைமை வகித்தனர். அத்துடன், இது முழுமையாக புதியதொரு பணியாக இருந்தது. வழங்கிய பங்களிப்பின் அடிப்படையில் ஆலோசகர்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

மனிதநேய சாசனம்: James Darcy, Mary Picard, Jim Bishop (InterAction), Clare Smith (CARE International) and Yvonne Klynman (IFRC)

பாதுகாப்பு கோட்பாடுகள்: Ed Schenkenberg van Mierop (ICVA) and Claudine HaenniDale

மிக முக்கியமான தரங்கள்: Peta Sandison and Sara Davidson

தொழில் நுணுக்க அத்தியாயங்கள்

- நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு: Nega Bazezew Legesse (Oxfam GB)
- உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு
  - **போஷாக்கு** -: Susan Thurstans (Save the Children UK)
  - **உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம்** -: Devrig Velly (Action contre la Faim)
  - **உணவு உதவி** -: Paul Turnbull (WFP) and Walter Middleton (World Vision International)
- **உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள்:** Graham Saunders (IFRC)
- சுகாதார நடவடிக்கை: Mesfin Teklu (World Vision International)

எழுந்தமான கருப்பொருள்கள்

- சிறுவர்கள்: Monica Blomström and Mari Mörth (both Save the Children Sweden)
- வயதானவர்கள்: Jo Wells (HelpAge International)
- மாற்றுத் திறனுடைய நபர்கள்: Maria Kett (Leonard Cheshire Disability and Inclusive Development Centre)
- பால்நிலை: Siobhán Foran (IASC GenCap Project)
- உளச்சமூக பிரச்சினைகள்: Mark van Ommeren (WHO) and Mike Wessells (Columbia University)
- எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ்: Paul Spiegel (UNHCR)
- சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்த அபாய குறைப்பு: Anita van Breda (WWF) and Nigel Timmins (Christian Aid)

ஸ்பியர் சக தரங்கள்

- கல்வி: Jennifer Hofmann and Tzvetomira Laub (both INEE)
- கால்நடை: Cathy Watson (LEGS)
- பொருளாதார மீட்சி: Tracy Gerstle and Laura Meissner (both SEEP network)

வளவாளர்கள்

- துரித மீளமைப்பு: Maria Olga Gonzalez (UNDP-BCPR)
- முகாம் ஒருங்கிணைப்பு மற்றும் முகாம் முகாமைத்துவம்: Gillian Dunn (IRC)
- பணப் பரிமாற்ற நிகழ்ச்சி: Nupur Kukrety (Cash Learning Partnership network)

மேலதிகமாக, சிவில்-இராணுவ இடைமுகம், முரண்பாட்டு கூருணர்வு மற்றும் நகராட்சி முறைகள் தொடர்பில் பலருடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

மையப் புள்ளிகளின் பணிக்கு உதவி வழங்கும் வகையில் **பணிக்குழுக்களும்** மற்றும் **குறிப்புதவி குழுக்களும்** ஸ்தாபிக்கப்பட்டன. அதேவேளை, இவர்கள் அனைவரதும் பங்களிப்புக்கு ஸ்பியர் திட்டம் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவர்களுடைய தனிப்பட்ட பெயர்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும், பணிக் குழு மற்றும் குறிப்புதவி குழு உறுப்பினர்களின் முழுமையான விபரங்களை ஸ்பியர் இணையதளத்தில் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். www.sphereproject.org.

ஆசிரியர்கள்: Phil Greaney, Sue Pfiffner, David Wilson

மீட்டல் செயலமர்வு வளவாளர்: Raja Jarrah

கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் நிபுணர்: Claudia Schneider, SKAT

ஸ்பியர் சபை (2010ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியின் போது)

Action by Churches Together (ACT) Alliance (John Nduna) * Agency Coordinating Body for Afghan Relief (ACBAR) (Laurent Saillard) * Aktion Deutschland Hilft (ADH) (Manuela Rossbach) * CARE International (Olivier Braunsteffer) * CARITAS Internationalis (Jan Weuts) * The International Council of Voluntary Agencies (ICVA) (Ed Schenkenberg van Mierop) * International Rescue Committee (IRC) (Gillian Dunn) * InterAction (Linda Poteat) * Intermón Oxfam (Elena Sgorbati) * International Federation of Red Cross and Red Crescent Societies (IFRC) (Simon Eccleshall) * The Lutheran World Federation (LWF) (Rudelmar Bueno de Faria) * Policy Action Group on Emergency Response (PAGER) (Mia Vukojevic) * Plan International (Unni Krishnan) * Save the Children Alliance (Annie Foster) * Sphere India (N.M. Prusty) * The Salvation Army (Raelton Gibbs) * World Vision International (Ton van Zutphen)

நிதியுதவியாளர்கள்

மேலே குறிப்பிடப்பட்ட சபையில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களின் பங்களிப்புக்கு மேலதிகமாக, கையேட்டின் மீட்டல் செயற்பாட்டுக்கு நிதியுதவி வழங்கிய நிறுவனங்கள் பின்வருமாறு:

Australian Agency for International Development (AusAID) * European Community Humanitarian Office (ECHO) * German Ministry of Foreign Affairs * Spanish Ministry of Foreign Affairs * Swiss Agency for Development and Cooperation (SDC) * United Kingdom Department for International Development (DFID) * United States Department of State Bureau of Refugees and Migration (US-PRM) * United States Agency for International Development Office of Foreign Disaster Assistance (US-OFDA)

ஸ்பியர் திட்ட ஊழியர் குழு

திட்ட முகாமையாளர்: John Damerell

பயிற்சி மற்றும் கற்றல் முகாமைத்துவம்: Verónica Foubert

விரிவாக்கல் மற்றும் மூலப்பொருட்கள் முகாமைத்துவம்: Aninia Nadig

பயிற்சி மற்றும் விரிவாக்கல் உதவி: Cécilia Furtade

நிர்வாகம் மற்றும் நிதி: Lydia Beauquis

கையேடு மீட்டல் செயற்பாட்டின் பல்வேறு நிலைகளில், மேலதிக குழு உதவிகளை Alison Joyner, Hani Eskandar, Laura Lopez மற்றும் Avishan Chanani ஆகியோர் வழங்கினர்.

உள்ளடக்கம்

முன்னுரை iii

நன்றிகள் iv

ஸ்பியர் என்றால் என்ன? 3

மனிதநேய சாசனம். 19

பாதுகாப்பு கோட்பாடுகள் 25

மிக முக்கியமான தரங்கள் 49

நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு
என்பவற்றில் அடிப்படை தரங்கள் 79

உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு என்பவற்றில் அடிப்படை
தரங்கள் 139

உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்களில்
அடிப்படைத் தரங்கள் 239

சுகாதார நடவடிக்கையில் அடிப்படைத் தரங்கள் 287

பிற்சேர்க்கைகள் 355

பிறசேர்க்கை 1. மனிதநேய சாசனத்தை வலியுறுத்தும் பிரதான .
ஆவணங்கள் 356

பிற்சேர்க்கை 2. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச்
சங்கம் மற்றும் பேரிடர் நிவாரணத்தில்
ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடனான
நடத்தை நெறிகளின் தொகுப்பு. 368

பிற்சேர்க்கை 3. சுருக்கச் சொற்களுக்கான பத விளக்கம் . . .377

பொருள் வரிசை 381

கையேடு


ஸ்பியர் என்றால் என்ன?
மனிதநேய சாசனம்
பாதுகாப்பு கோட்பாடுகள்
மிக முக்கியமான தரங்கள்
கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள்
மிக முக்கியமான தரங்களும், அடிப்படைத் தரங்களும்: பிரயோகத்தில் உள்ள கோட்பாடுகள்
நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு
உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு
உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள்
சுகாதார நடவடிக்கை
ஒவ்வொரு அத்தியாயத்திலும் தரங்களின் தொகுதி மற்றும் விளக்கங்கள், குறிப்புதவிகள், மற்றும் மேலதிக வாசிப்புக்கான பரிந்துரைகள் என்பன உள்ளன.
தரங்களின் கட்டமைப்பு:
அடிப்படைத் தரம்
பிரதான நடவடிக்கைகள்
பிரதான குறிகாட்டிகள்
வழிகாட்டல் குறிப்புக்கள்
மனிதநேய சாசனத்தை வலியுறுத்தும் பிரதான ஆவணங்கள்
நன்னடத்தை நெறித் தொகுப்பு

ஸ்பியர் என்றால் என்ன?

ஸ்பியர் என்றால் என்ன?

மனிதநேய மறுசீரமைப்புக்கு தரமான மற்றும் பொறுப்புடைமை வாய்ந்த பரிசீலணைகளை அறிமுகப்படுத்துவதில் பிரபலம் பெற்றதாக ஸ்பியர் திட்டம் மற்றும் அதன் கையேடு என்பன அமைந்துள்ளன. ஆனால் ஸ்பியர் திட்டத்தின் மூலங்கள் எவை? அதன் தத்துவம் மற்றும் அணுகுமுறை எவை? எவ்வாறு மற்றும் ஏன் இந்த கையேடு உருவாக்கப்பட்டது? பரந்தளவான பகுதியை கொண்ட மனிதநேய நடவடிக்கையில் அதன் பங்கு என்ன? யார் இதனை பயன்படுத்த வேண்டும்? எப்போது பயன்படுத்த வேண்டும்? மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான பதில்களை முன்வைக்க இந்த அத்தியாயம் முயற்சிக்கின்றது. மேலதிகமாக, இந்த அத்தியாயம் கையேட்டின் கட்டமைப்பை விளக்குவதுடன், எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் நீங்கள் அல்லது உங்களுடைய நிறுவனம் எவ்வாறு ஸ்பியர் அடிப்படை தரங்களை அனுசரித்து செயற்பட முடியும் என்பதனையும் விளக்குகின்றது.

ஸ்பியர் திட்ட தத்துவம்: கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமை

மனிதநேயப் பணியில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களின் குழு, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் என்பன இணைந்து ஸ்பியர் திட்டம் அல்லது “ஸ்பியர்“ என்பதனை 1997ஆம் ஆண்டு ஆரம்பித்தன. அனர்த்த மறுசீரமைப்பின் போது தமது நடவடிக்கைகளின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புடையவர்களாக இருத்தல் என்பனவே அவர்களது இலக்காக இருந்தது. **இரண்டு பிரதான நம்பிக்கைகளின்** அடிப்படையில் அவர்கள் ஸ்பியர் தத்துவத்தை அமைத்தனர். முதலாவது, இயற்கை அனர்த்தம் அல்லது முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்கள், கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமை உடையவர்கள். எனவே அவர்களுக்கு உதவி பெறுவதற்கான உரிமை உண்டு. இரண்டாவது, இயற்கை அனர்த்தம் அல்லது முரண்பாடு காரணமாக வெளித்தோன்றும் மனித இன்னல்களை ஒழிப்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும்

இந்த இரண்டு பிரதான நம்பிக்கைகளுக்கும் உதவி புரிவதற்கான உழைப்பில், ஸ்பியர் திட்டமானது மனிதநேய சாசனத்தை வடிவமைத்ததுடன், வாழ்க்கையை காப்பாற்றும் பிரதான துறைகளின் **அடிப்படைத் தரங்களின்** தொகுதியையும் அடையாளங் கண்டுள்ளது. அவை இந்த கையேட்டில், நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு, உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு, உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் மற்றும் சுகாதார நடவடிக்கை ஆகிய நான்கு தொழில் நுணுக்க அத்தியாயங்களில் வெளிக் கொணரப்பட்டுள்ளன. **பிரதான**

தரங்கள் செயற்பாட்டுக்கான தரங்களாக அமைவதோடு, அனைத்து அத்தியாயங்களுக்கு பிரயோகிக்கப்படக் கூடியவை. அடிப்படைத் தரங்கள் ஆதாரஞ் சார்நதவை. அத்துடன், மனிதநேய மறுசீரமைப்பின் சிறந்த பயிற்சி சார்ந்த பரந்த துறையின் உடன்பாட்டை பிரதிநிதித்துவம் செய்கின்றன. பிரதான நடவடிக்கைகள், பிரதான குறிகாட்டிகள் மற்றும் வழிகாட்டி குறிப்புக்கள் (கீழே உள்ள "தரங்களை எவ்வாறு பயன்படுத்துதல்" என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளன) ஒவ்வொரு தரத்திற்கும் துணையாக இருந்து, தரத்தை எவ்வாறு எட்டுவது என்பது தொடர்பிலான வழிகாட்டல்களை வழங்குகின்றன. **அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை** காப்பாற்றுவதற்கும் மற்றும் கௌரவத்துடன் அவர்களுக்கு நிலையான சூழ்நிலையை உருவாக்குவதற்குமான எந்தவொரு மனிதநேய மறுசீரமைப்பின் போதும் எட்டப்பட வேண்டிய சூழ்நிலைகளை அடிப்படைத் தரங்கள் விளக்குகின்றன. கலந்தாய்வு செயற்பாட்டில் பாதிக்கப்பட்ட மக்களையும் உள்ளடக்குவது ஸ்பியர் தத்துவத்தின் பிரதான அம்சமாக நிலவுகின்றது. ஆகையால், ஸ்பியர் திட்டம் என்பது, **தரமான மற்றும் பொறுப்புடைமை வாய்ந்த** (Q&A) முயற்சிகள் என தற்போது அறியப்படும் நடவடிக்கைகளில் ஒன்றாக உள்ளது.

மனிதநேய சாசனமும், அடிப்படைத் தரங்களும் ஒன்றிணைந்து **கையேடாக** பிரசுரிக்கப்பட்டுள்ளன. அதன் நவீன பதிப்பினையே நீங்கள் தற்போது வாசித்துக் கொண்டிருக்கின்றீர்கள். மனிதநேய மறுசீரமைப்பின் போது திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்காகவே ஸ்பியர் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. மனிதநேயப் பணிகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் மற்றும் வளங்கள் தொடர்பில் அதிகாரிகளுடன் பேரம் பேசலின் போது அது ஒரு வினைத்திறன் மிக்க பரிந்து பேசல் கருவியாகவும் உள்ளது. அது மாத்திரமின்றி, அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளுக்கும் மற்றும் தற்செயலாக இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பிலான திட்டமிடலுக்கும் அது பயனுள்ளதாக உள்ளது. நிதியுதவி வழங்குபவர்கள் தற்போது தமது அறிக்கையிடல் கோரிக்கைகளில் தரங்களை அதிகமாக உள்ளடக்குகின்றனர். ஏனெனில், இந்த கையேடு தனி நிறுவனத்திற்கு சொந்தமானது அல்ல. மனிதநேய துறை முழுவதிலும், பரந்துபட்ட ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இந்த கையேடு உள்ளது. மிகவும் பரந்த அளிவில் அறியப்பட்ட மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனிதநேய மறுசீரமைப்புக்கான தரங்களின் தொகுதியாக தற்போது இது மாறியுள்ளது. அத்துடன், நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைத்தல் கருவியாகவும் இது பயன்படுத்தப்படுகின்றது

முதன் முறையாக 2000ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட இந்த கையேடு, 2003ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. 2009-2010காலப்பகுதியில் மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டது. ஒவ்வொரு திருத்தி அமைத்தல் செயற்பாட்டின் போதும், அரசாங்க மற்றும் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் உள்ளடங்கலாக பரந்த எண்ணிக்கையிலான நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் மற்றும் தனிநபர்களை உள்ளடக்கி துறை சார்ந்த பரந்த அடிப்படையிலான கலந்தாய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

மனிதநேய மறுசீரமைப்பின் திட்டமிடல், முகாமைத்துவம் அல்லது நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களே ஸ்பியர் கையேட்டை பிரதா-னமாக பயன்படுத்துபவர்களாக உள்ளனர். மனிதநேய பணியில் ஈடுபட்டுள்ள உள்ளூர்

மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஊழியர்களும் மற்றும் தன்னார்வ தொண்டர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். நிதி சேகரித்தல் மற்றும் செயற்றிட்ட பிரேரணைகள் போன்ற சூழ்நிலையிலும் அடிப்படை தரங்கள் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்கம் மற்றும் உள்ளூர் அதிகாரிகள், இராணுவம் அல்லது தனியார் துறை போன்ற வேறு செயற்பாட்டாளர்களும் இந்த ஸ்பியர் கையேட்டை பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். அவர்களது சுய நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவது பயனுள்ளதாக இருக்கும். ஆனால், அவர்கள் இணைந்து செயற்படவுள்ள மனிதநேய பணி புரியும் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் தரங்கள் தொடர்பில் புரிந்துகொள்வதற்கும் அவர்களுக்கு உதவி வழங்கல் வேண்டும்.

கையேடு: ஸ்பியர் விழுமியங்களின் பிரதிபலிப்பு

உரிமைகள் அடிப்படையில் மற்றும் பங்குபற்றல் அணுகுமுறையில் மனிதநேய மறுசீரமைப்பை உறுதியாக தாங்குவதற்கான ஸ்பியரின் இலக்கினை இந்த கையேட்டு கட்டமைப்பு பிரதிபலிக்கின்றது.

மனிதநேய சாசனம், பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள்

மனிதநேய சாசனம், பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள் ஆகியன மனிதநேய மறுசீரமைப்பு தொடர்பான ஸ்பியரின் உரிமைகள் அடிப்படையிலான மற்றும் மக்களை பிரதானமாகக் கொண்ட அணுகுமுறையை தெளிவாக விளக்குகின்றன. மறுசீரமைப்பின் அனைத்து நிலைகளிலும் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உள்ளூர், தேசிய அதிகாரிகளை உள்ளடக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் அவை கவனஞ் செலுத்துகின்றன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் மீண்டும், மீண்டும் குறிப்பிடப்படுவதனை தவிர்ப்பதற்கு பாதுகாப்பு கோட்பாடுகளும், மிக முக்கியமான தரங்களும் கையேட்டின் ஆரம்பத்தில் ஒன்றாக இணைத்து தரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட விசேடமான தொழில் நுணுக்கத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் உள்ளடங்கலாக ஸ்பியரை பயன்படுத்துபவர்கள், அவற்றை இந்த அத்தியாயங்கள் ஒவ்வொன்றுடனும் இணைந்த பகுதியாக கருதல் வேண்டும்.

கையேட்டின் மிகவும் முக்கியமான பகுதியாக மனிதநேய சாசனம் (பிரதானமான சட்ட மற்றும் கொள்கை ஆவணங்களின் விளக்கமான பட்டியல் பக்கம் 356இல் பிற்சேர்க்கை 01இல் தரப்பட்டுள்ளது) காணப்படுகின்றது. அது பாதுகாப்பு கோட்பாடுகளுக்கும், மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்களுக்கும் ஒழுக்கஞ் சார்ந்த மற்றும் சட்ட பின்புலத்தை வழங்குகின்றது. அதன் மூலம், அவற்றின் சரியான விளக்கப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கின்றன. கட்டமைக்கப்பட்ட சட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்களின் கூற்றாக அது உள்ளது. அத்துடன், மனிதநேய நிறுவனங்களின் பகிரப்பட்ட நம்பிக்கைகளாகவும் மற்றும் அர்ப்பணிப்புக்களாகவும் அது விளங்குகின்றது. அனைத்தும், பொதுவான கோட்பாடுகள், உரிமைகள் மற்றும் கடமைகள் என்பதன் அடிப்படையில் திரட்டப்பட்டுள்ளன. மனிதநேயம் மற்றும் தவிர்க்க முடியாத மனிதநேய கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இவற்றில், கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, மனிதநேய

உதவிகளை பெறுவதற்கான உரிமை மற்றும் காவல் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை என்பன உள்ளடங்குகின்றன.

பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்கான நிறுவனத்தின் பொறுப்புடைமையின் முக்கியத்துவத்தையும் இந்த சாசனம் விளக்குகின்றது. மிக முக்கியமான தரங்களும், அடிப்படைத் தரங்களும் பிரயோக ரீதியில் இந்த கோட்பாடுகள் மற்றும் கடமைகள் எதனை விளக்குகின்றன என்பதன் இணைப்பாக உள்ளன.

மனிதநேய நடவடிக்கையின் மிகவும் சிக்கலான நிரப்பிடங்களாக உதவி மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டும் எவ்வாறு விளங்குகின்றன என்பதனை மனிதநேய சாசனம் விளக்குகின்றது. இந்த பாதுகாப்பு அம்சத்தை மேலும் விளக்குவதற்கு, பாதுகாப்பு கருதுகோள் என்ற நிலையில் இருந்து மனிதநேய பயிற்சியை விளக்கும் சாசனத்தில், குறிப்பிடப்பட்டுள்ள சட்ட கோட்பாடுகள் மற்றும் உரிமைகள் பலவற்றை, உபாயங்கள் மற்றும் நடவடிக்கைகளாக மாற்றும் பாதுகாப்பு கோட்பாடுகளின் தொகுதி இந்தக் கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு என்பது மனிதநேய நடவடிக்கையின் மிகவும் முக்கியமான பகுதியாகும். பாதுகாப்பு கோட்பாடுகள் என்பது மோதல் அல்லது அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்கள் பொதுவாக எதிர்நோக்கும் தீவிரமான அச்சுறுத்தல்கள் தொடர்பில் அக்கறை செலுத்துவதாக தமது நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டிய அனைத்து மனிதநேய நிறுவனங்களினதும் பொறுப்புக்களை சுட்டிக்காட்டுகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் துன்பத்தை விளைவிக்கக் கூடியதாக தமது நடவடிக்கைகள் அமையாது இருப்பதனை அனைத்து மனிதநேய நிறுவனங்களும் உறுதி செய்தல் வேண்டு (பாதுகாப்பு கோட்பாடு 1), யார் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்களோ மற்றும் பலவீனமடைந்துள்ளார்களோ அவர்களுக்கு விசேடமாக பயனளிக்கக் கூடியதாக அவர்களது நடவடிக்கைகள் அமைய வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 2), வன்முறை மற்றும் வேறு மனித உரிமை மீறல்களில் இருந்து பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பதற்கு உழைத்தல் (பாதுகாப்பு கோட்பாடு 3) மற்றும் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதிக்கப்பட்ட மக்கள் மீட்சி பெறுவதற்கு உதவி செய்தல் (பாதுகாப்பு கோட்பாடு 4). பாதுகாப்பு தொடர்பான மனிதநேய நிறுவனங்களின் பாத்திரங்களும், பொறுப்புக்களும் பொதுவாக அரசாங்கத்தின் அல்லது வேறு சம்பந்தப்பட்ட அதிகார சபைகளின் இரண்டாம் நிலை சட்ட பொறுப்புக்களாகும். இந்த அதிகார சபைகளுக்கு, தமது பொறுப்புக்கள் தொடர்பில் நினைவுபடுத்துவதாக இவை அமைந்திருக்கும்.

அடிப்படைத் தரங்களின் முதல் தொகுதியாகவும், ஏனைய அனைவருக்கும் தகவல் தெரிவிப்பதாகவும் மிக முக்கியமான தரங்கள் விளங்குகின்றன. மனிதநேய மறுசீரமைப்பின் போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மற்றும் அணுகுமுறைகள் எவ்வாறு பயனுள்ள மறுசீரமைப்புக்கு அடிப்படையானதாக உள்ளன என்பதனை அவை விளக்குகின்றன. மோதல் அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் இயலுமை மற்றும் செயற்றிறன் மிக்க பங்குபற்றல் தொடர்பிலான நோக்கம், தேவைகள் மற்றும் சூழ்நிலை தொடர்பில் முழுமையான பகுப்பாய்வு மற்றும் புரிந்துணர்வு, நிறுவனங்களின் மத்தியில் பயனுறுதி மிக்க ஒத்துழைப்பு, தொடர்ச்சியாக செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான அயராத உழைப்பு மற்றும் பொருத்தமான வகையில்

தகுதி வாய்ந்த மற்றும் ஆதரவான உதவிப் பணியாளர்கள் ஆகிய அனைத்தும் தொழில்நுணுக்க தரங்களை அடைவதற்கு மிகவும் அத்தியாவசியமானவையாகும்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் மீண்டும், மீண்டும் குறிப்பிடப்படுவதனை தவிர்ப்பதற்காக பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள் என்பன கையேட்டின் ஆரம்பத்தில் ஒன்றாக தரப்பட்டுள்ளன. மனிதநேய நடவடிக்கைகள் அனைத்தையும் வெளிப்படுத்தும் இவை, தொழில் நுணுக்க அத்தியாயங்கள் அனைத்துடனும் ஒன்றிணைந்ததாக பயன்படுத்தப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான தரம் மற்றும் பொறுப்புடைமை தொடர்பில் தொழில் நுணுக்க தரங்களை அடைவது என்பது சிக்கலானது.

நான்கு தொழில் நுணுக்க அத்தியாயங்களிலும் மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்கள்

மிக முக்கியமான தரங்களும் மற்றும் அடிப்படைத் தரங்களும், நிகழ்ச்சியாக்கல் மற்றும் வாழ்க்கையை காப்பாற்றும் நான்கு தொகுதி நடவடிக்கைகளான: நீர் விநி-யோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு; உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு; உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் மற்றும் சுகாதார நடவடிக்கை ஆகியவற்றுக்கான அணுகுமுறைகளை உள்ளடக்கியுள்ளன.

இந்த தரங்களை எவ்வாறு பயன்படுத்துவது?

மிக முக்கியமான தரங்களும் மற்றும் அடிப்படைத் தரங்களும் விசேடமான வடிவத்தை பின்பற்றுகின்றன. அவை பொதுவான மற்றும் உலகளாவிய கூற்றுடன் ஆரம்பிக்கின்றன. அடிப்படைத் தரமானது பிரதான நடவடிக்கைகள், பிரதான குறிகாட்டிகள் மற்றும் பிரதான குறிப்புக்கள் என்பவற்றின் தொகுதியினால் தொடரப்படுகின்றது.

முதலாவது, **அடிப்படைத் தரம்** குறிப்பிடப்பட்டுள்ளது. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை உள்ளது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு அத்தியாயமும் உருவாக்கப்பட்டுள்ளது. அவை இயற்கையாக தர அடிப்படையிலானதாக உள்ளன. அத்துடன், மனிதநேய மறுசீரமைப்பில் எட்ட வேண்டிய ஆகக் குறைந்த மட்டங்களை குறிப்பிடுகின்றன. அதன் வீச்சளவானது உலகளாவியதாக இருப்பதுடன், எந்தவொரு அனர்த்த சூழ்நிலைக்கும் பயன்படுத்தக் கூடியது. எனவே, அவை பொதுப் பதங்களினால் உருவாக்கப்பட்டுள்ளன.

அடுத்தது, அடிப்படைத் தரங்களை எட்டுவதற்கான பிரயோக **பிரதான நடவடிக்கைகளை** வெளிப்படுத்துகின்றன. சில நடவடிக்கைகள் அனைத்து சூழ்நிலைகளுக்கும் பொருந்தாது. பொருத்தமான நடவடிக்கைகளை தெரிவு செய்ய வேண்டியது மற்றும் தரங்களை எட்டக் கூடிய பெறுபேற்றை தரும் மாற்று நடவடிக்கைகளை தெரிவு செய்ய வேண்டியது பயிற்சி செய்பவரினை சார்ந்தது.

அடுத்து, **பிரதான குறிகாட்டிகளின்** தொகுதி, தரம் எட்டப்பட்டுள்ளதா என்பதனை குறிப்பிடும் “அடையாளங்களாக” செயற்படும். பிரதான நடவடிக்கைகளின் செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகள் தொடர்பில் அளவிடும் மற்றும் தொடர்பு கொள்ளும் வழிகளை

அவை வழங்கும். பிரதான குறிகாட்டிகள் பிரதான நடவடிக்கைகள் சார்ந்ததாக இல்லாது, அடிப்படைத் தரங்கள் சார்ந்ததாக இருக்கும்.

இறுதியாக, சூழ்நிலை சார்ந்த விசேட குறிப்புக்களை உள்ளடக்கிய **வழிகாட்டி குறிப்புக்கள்** பிரதான நடவடிக்கைகள் மற்றும் பிரதான குறிகாட்டிகளை எட்டுவதனை இலக்காகக் கொள்வது தொடர்பில் கவனஞ் செலுத்தும். அவை, பிரயோக பிரச்சினைகள், மட்டக் குறிகள் அல்லது முன்னுரிமை தொடர்பான ஆலோசனை மற்றும் எழுந்தமான தொனிப்பொருள்கள் என்பவற்றை எதிர்கொள்வதற்கான வழிகாட்டிகளை வழங்கும். தரங்கள், நடவடிக்கைகள் அல்லது குறிகாட்டிகள் சம்பந்தப்பட்ட சிக்கலான பிரச்சினைகளையும் அவை உள்ளடக்கியிருக்கலாம்.

அத்துடன். அவை தற்போதைய அறிவில் உள்ள இருதலைப்பட்சமான நிலை, குழப்பங்கள் மற்றும் இடைவெளிகள் தொடர்பில் விளக்கும். குறிப்பிட்ட நடவடிக்கையை **எவ்வாறு** நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பிலான வழிகாட்டிகளை அவை **வழங்காது**. **ஒவ்வொரு அத்தியாயத்திலும்** சம்பந்தப்பட்ட பாரிய விடயங்கள் தொடர்பான **சுருக்கமான விளக்கம்** இடம்பெற்றுள்ளது. தொழில் நுணுக்க அடிப்படை தரங்கள் அத்தியாயங்களிலும் மேலும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, மதிப்பீட்டு பரிசோதனை பட்டியல்கள், சூத்திரங்கள், அட்டவணைகள் மற்றும் உதாரணங்கள் அறிக்கை வடிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் மேலதிக வாசிப்புக்காக பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை உள்ளடக்கியுள்ளன. கையேட்டின் ஒவ்வொரு அத்தியாயத்திற்குமான விளக்கமான அருஞ்சொற் அகராதியினை ஸ்பியர் இணையத்தளத்தில் (www.sphereproject.org) பெற்றுக் கொள்ள முடியும்.).

அனைத்து அத்தியாயங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவையாகும். ஒரு பகுதியில் விளக்கப்பட்டுள்ள தரங்கள், ஏனைய பகுதியில் விளக்கப்பட்டுள்ள தரங்களுடன் ஒததுப் போகக் கூடியதாக இருத்தல் வேண்டும். இதன் விளைவாக, கையேட்டில் பல எழுந்தமான பரிந்துரைகள் உள்ளடங்கியுள்ளன.

ஸ்பியர் அடிப்படைத் தரங்களுடன் ஒத்துப் போதல்

தரம் மற்றும் பொறுப்புடைமைக்கான தன்னார்வ கோவையாகவும் மற்றும் சுய செயற்படுத்தல் கருவியாகவும் ஸ்பியர் கையேடு உள்ளது. அத்துடன், ஸ்பியர் திட்டமானது எந்தவொரு இணக்கமான பொறியமைப்பையும் செயற்படுத்துவதில்லை. ஸ்பியரில் “கையெழுத்திடல்”, ஸ்பியர் அங்கத்துவம் அல்லது ஏற்புறுதிக்கான வேறு வடிவம் என எதுவும் இல்லை. ஸ்பியர் திட்டம் என்பது உணர்வு ரீதியாக கையேட்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். அது ஒழுங்குப்படுத்தப்பட்ட அல்லது இணக்கம் சார்ந்தது அல்ல. மாறாக, கையேடு தொடர்பில் பரந்த உரிமைத்துவத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

குறிப்பிட்ட சேவைகளை எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பான பிரயோக வழிகாட்டல்களை இந்த கையடே வழங்கவில்லை (தரத்தை அடைவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதாகவே பிரதான நடவடிக்கைகள் உள்ளன. அதனை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என குறிப்பிடப்படவில்லை). பாதிக்கப்பட்ட மக்கள்

கண்ணியத்துடன் வாழ்வதனை உறுதி செய்வதற்கு **தேவையானது எவை** என்பது தொடர்பில் அவை விளக்கமளிக்கின்றன. எனவே, ஸ்பியர் அடிப்படைத் தரங்களின் ஒத்துப் போதலை உறுதி செய்வதற்கு முறைமை ஒன்றை தெரிவு செய்ய வேண்டியது நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தினை சார்ந்தது.

சில நிறுவனங்கள் முற்று முழுதாக உள்ளக பொறியமைப்புக்களை பயன்படுத்தும். அதேவேளை, ஏனையன சம அந்தஸ்தில் உள்ள மீளாய்வுகளை தேர்ந்தெடுக்கும். சில நிறுவனத்தின் வலையமைப்புக்கள் அவசர காலங்களில் தமது ஒருங்கிணைந்த மறுசீரமைப்பை மதிப்பீடு செய்வதற்கு ஸ்பியரை பயன்படுத்தியுள்ளனர்.

ஸ்பியருடன் ஒத்துப் போதல் என்பதன் மூலம், அனைத்து தரங்கள் மற்றும் குறிகாட்டிகள் எட்டப்படுகின்றன என கருத முடியாது. நிறுவனங்கள் எட்டக் கூடிய தரங்களின் அளவானது, அம்சங்களின் வீச்சிலேயே தங்கியுள்ளது. அவற்றில் சில கட்டுப்படுத்த முடியாதன. சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட மக்களை அடைவதற்கு உள்ள சிக்கல்கள், அதிகாரிகளிடமிருந்து குறைந்த அளவான ஒத்துழைப்பு அல்லது தீவிரமான பாதுகாப்பு அற்ற நிலை என்பன தரங்களை எட்டுவதில் உள்ள சிக்கல்களாகும்.

அனர்த்தத்திற்கு முன்னர், பாதிக்கப்பட்ட மக்களின் பொதுவான வாழ்க்கை நிலையானது குறிப்பிடத்தக்க வகையில் அடிப்படைத் தரங்களை விட குறைவானதாயின், அவர்களுடைய அடிப்படைத் தரங்களை எட்டுவதற்கு நிறுவனங்களிடம் போதிய வளங்கள் இருக்காது. அவ்வாறான சூழ்நிலையில், ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களினது அடிப்படைத் தரங்களை எட்டுவதனை விடுத்து, பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் அடிப்படை வசதிகளை வழங்குவது மிகவும் முக்கியமானதாகும்.

சில சந்தர்ப்பங்களில் அடிப்படைத் தரங்கள் சுற்றியுள்ள மக்களின் நாளாந்த வாழ்க்கை நிலையை கடந்து செல்லும். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தரங்களை பின்பற்றுதல் என்பது அத்தியாவசியமானதாக இருக்கும். ஆனால், அவ்வாறான சூழ்நிலைகளிலும், சுற்றியுள்ள மக்களுக்கு உதவி செய்ய வேண்டிய மற்றும் சமுதாயத் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டிய தேவை ஏற்படும். சூழ்நிலையின் அடிப்படையிலேயே எது பொருத்தமானது மற்றும் சாத்தியமானது என்பது தங்கியிருக்கும்.

தரங்கள் எட்டப்பட முடியாத சந்தர்ப்பங்களில், மனித நேய நிறுவனங்கள் :

- சம்பந்தப்பட்ட ஸ்பியர் குறிகாட்டிகள் மற்றும் பிரயோகத்தில் எட்டப்பட்டவை என்பவற்றுக்கு இடையிலான இடைவெளியை தமது அறிக்கைகளில் (மதிப்பீடு, பரிசோதனை, இன்னபிற) விளக்க வேண்டும்.

- இதற்கான காரணங்களை விளக்க வேண்டும். அத்துடன், எவை மாற்றப்பட வேண்டும் என குறிப்பிட வேண்டும்

- பாதிக்கப்பட்ட மக்களுக்கான எதிர்மறையான வெளியீடுகளை மதிப்பீடு செய்ய வேண்டும்.

- இந்த வெளியீடுகளினால் ஏற்பட்ட விளைவுகளை குறைப்பதற்கான பொருத்தமான தணித்தல் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக, ஸ்பியர் தத்துவத்துடன் நிறுவனங்கள் ஒத்துப் போவதனை வெளிப்படுத்த முடியும். அத்துடன், கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தரங்களை அடைய முடியாத போதிலும் அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தவர்களாக இருக்க முடியும்.

மனிதநேயப் பணியில் ஸ்பியருக்கான இடம்

அனைத்து நாடுகளிலும் இடம்பெறும் இயற்கை அனர்த்தங்கள், மோதல்கள், மெதுவான மற்றும் துரிதமான திடீர் நிகழ்ச்சிகள், கிராம மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வேறுபட்ட அரசியல் அவசர நிலைகள் போன்றன உள்ளடங்கலாக பல்வேறுப்பட்ட சூழ்நிலைகள் சார்ந்த மனிதநேய மறுசீரமைப்பின் போது பயன்படுத்துவதற்காகவே ஸ்பயிர் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. “அனர்த்தம” என்ற பதம் இந்த சூழ்நிலைகளை விளக்குகின்றது.

அத்துடன், பொருத்தமான சந்தர்ப்பங்களில் ”மோதல்” என்ற பதமும் பயன்படுத்தப்படுகின்றது. “மக்கள்” என்பது தனிநபர்கள், குடும்பங்கள், சமுதாயங்கள் மற்றும் பரந்த குழுக்கள் என்பவற்றை குறிக்கின்றது. கையேட்டின் பல இடங்களில் ”அனர்த்ததால் பாதிக்கப்பட்ட மக்கள்” என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கையேட்டை எப்போது பயன்படுத்த வேண்டும்

மனிதநேய மறுசீரமைப்பின் காலம் தொடர்பில் கவனஞ் செலுத்தும் போது, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி தப்பியிருத்தல் தேவைகளை எட்டுவதற்கான நடவடிக்கைகளை ஸ்பியர் அடிப்படைத் தரங்கள் உள்ளடக்குகின்றன.

இந்த படிநிலையானது சில நாட்கள் அல்லது வாரங்களில் இருந்து பல மாதங்கள் வரையும், வருடங்கள் வரையும் செல்லும். விசேடமாக பாதுகாப்பின்மை மற்றும் இடப்பெயர்வு போன்ற சந்தர்ப்பங்களை குறிப்பிடலாம். எனவே, ஸ்பியர் தரங்களின் பயனுக்கான குறிப்பிட்ட கால அவகாசத்தை நிர்ணயிப்பது சாத்தியமற்றது.

எவ்வாறாயினும், இந்த கையேட்டுக்கு மனிதநேய நடவடிக்கையின் பரந்த ஆதிக்கத்திற்குள் விசேடமான இடமொன்று உள்ளது. உடனடி நிவாரணங்களை வழங்குதலை தாண்டியதாக அது உள்ளது. அனர்த்த முன்னாயத்தம் என்பதில் ஆரம்பிக்கும் நடவடிக்கைகளின் அலைக்கற்றையையும், மனிதநேய மறுசீரமைப்பையும் உள்ளடக்கியுள்ளது. இறுதியாக, துரித மீளமைப்பு வரை நீள்கின்றது.

பரிந்துரை கருவி என்ற வகையில், அனர்த்த முன்னாயாத்தம் மற்றும் துரித மீளமைப்பு படிநிலைகள் என இரண்டு சந்தர்ப்பங்களிலும் இந்த கையேடு பயனுள்ளதாகும். இது கருத்தாக்க ரீதியில் மனிதநேய மறுசீரமைப்பை வடிவமைக்கின்றது. ஆனால், யதார்த்தத்தில் ஒரே சந்தர்ப்பத்தில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

அனர்த்த முன்னாயத்திற்கு, செயற்பாட்டாளர்கள் - அரசாங்கங்கள், மனிதநேய நிறுவனங்கள், உள்ளூர் சிவில் சமூக நிறுவனங்கள், சமுதாயங்கள் மற்றும் தனிநபர்கள் என இயலுமை, உறவு மற்றும் அறிவு உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இவர்கள் அனர்த்தம் அல்லது மோதலுக்கு, பயனுறுதி மிக்க வகையில் பதிலளிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். மறுசீரமைப்புக்கு முன்னரும், மறுசீரமைப்பின் போதும் எதிர்காலத்திற்கான முன்னாயாத்தம் மற்றும் சவால் குறைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க, ஆரம்பிக்க வேண்டும். எதிர்கால அனர்த்தங்களின் போது ஸ்பியர் அடிப்படைத் தரங்களை எட்டுவதற்கு அவர்கள் தயாராக இருத்தல் வேண்டும்.

நிவாரணத்தினை தொடர்ந்து வரும் செயற்பாடு, துரித மீளமைப்பு எனப்படும். இது நீண்டகால மீளமைப்புக்கு வழி வகுக்கும். மனிதநேய மறுசீரமைப்பின் மிகவும் முக்கியமான பகுதியில் இருந்து முந்திச் செய்தல் மற்றும் வசதியளிக்கப்படல் என்பவற்றின் மூலம் பெரும் பயனுறுதி மிக்க பயன்களை பெற முடியும். துரித மீளமைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டு, அது தொடர்பில் பொருத்தமான சந்தர்ப்பங்களில் கையேடு முழுவதிலும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மனிதநேயத் துறையில் அபிவிருத்திகளும் மற்றும் ஸ்பியரில் அதன் சம்பந்தப்படுத்தலும்

மனிதநேய துறையில் மற்றும் சம்பந்தப்பட்ட வேறு பகுதிகளில் கடந்த சில வருடங்களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அனர்த்தங்கள் மற்றும் மோதல்களின் தன்மையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், மனிதநேயப் பணியிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கையேடு திருத்தி அமைத்தல் செயற்பாட்டின் போது அவதானிக்கப்பட்ட முன்னேற்றங்கள் பின்வருமாறு::

- **பாதிக்கப்பட்ட மக்களுடன்** ஆலோசனை நடத்தப்படல் வேண்டும் மற்றும் மோதலில் பாதிக்கப்பட்ட அரசுகள் மற்றும் தேசிய நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் என்பவற்றின் மறுசீரமைப்பு இயலுமைகள் மீள் வலுவூட்டப்படல் வேண்டும் என்ற விழிப்புணர்வுடன், உள்ளூர் மற்றும் தேசிய மறுசீரமைப்பில் கருத்தியல் ரீதியாக மற்றும் செயற்பாட்டு ரீதியாக வளர்ந்து செல்லும் கவனம்

- மனிதநேய நடவடிக்கையின் மிகவும் செயற்றிறன் மிக்க பொறுப்புடைமை, விசேடமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புடைமை, ஆனால், மேலும் செயற்றிறன் மிக்க ஒருங்கிணைப்பு, மனிதநேய மறுசீரமைப்பு செயற்பாடுக்குள் உள்ளடங்கலாக, நிறுவனங்களுக்கு இடையிலான ஆலோசனைக் குழுவின் (IASC) உதவியின் கீழ்,

- **பாதுகாப்பு** பிரச்சினைகள் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் அதிகரித்த அக்கறை

- **காலநிலை மாற்றம் காரணமாக தூண்டப்படும் அனர்த்தத்தினால்** ஏற்படும் பாரிய அளவிலான பலாத்கார புலம்பெயர்வுக்கான சாத்தியங்கள் தொடர்பில் விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் சுற்றுச் சூழல் மாசடைதல் பலவீனத்தை அதிகரிக்கும் என்பது தொடர்பான விழிப்புணர்வு

- **வறிய நகர்ப்புற சனத்தொகையின்** எண்ணிக்கையானது துரிதமாக அதிகரித்துச் செல்கின்றது என்பதனையும், அவர்கள் பொருளாதாரம், சமூக இணக்கம் மற்றும் பௌதீக இடம் போன்றவற்றில் விசேடமான பலவீனத்தையும் கொண்டுள்ளார்கள் என்பதனை அறிந்து கொள்ளல்

- மனிதநேய உதவி என்பதற்குப் பதிலாக **பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள்** மற்றும் உள்ளூர் கொள்வனவுகள் போன்ற உதவிக்கான புதிய அணுகுமுறைகள்

- துறை மற்றும் அணுகுமுறை ஆகிய இரண்டு வழிகளிலும் **அனர்த்த அபாய குறைப்பு** தொடர்பில் அதிகரித்த கவனம்

- மனிதநேய மறுசீரமைப்பில் **இராணுவத்தின்** அதிகரித்த பங்களிப்பு, தவிர்க்க முடியாத மனிதநேயப் பணிகளில் குறிப்பிட்ட செயற்பாட்டாளர்கள் ஈடுபடுத்தப்படாமை, மனிதநேய சிவில்-இராணுவ கலந்துரையாடலுக்கான குறிப்பிட்ட வழிகாட்டிகள் மற்றும் ஒருங்கிணைத்தல் உபாயங்களில் அபிவிருத்தியின் தேவை.

- மனிதநேய மறுசீரமைப்பில் அதிகரித்து வரும் **தனியார் துறையின்** பங்களிப்புக்கு, அதேபோன்ற சிவில்-இராணுவ கலந்துரையாடலுக்கான வழிகாட்டிகள் மற்றும் உபாயங்கள் தேவை.

பணப் பரிமாற்றங்கள், துரித மீளமைப்பு மற்றும் சிவில்-இராணுவ உறவுகள் போன்ற **கிளர்ந்தெழும் பிரச்சினைகளுக்கு** பொருத்தமான வகையில் ஸ்பியர் திட்டம் இந்த அபிவிருத்திகளை தமது கையேட்டில் உள்ளடக்கியுள்ளது.

மனிதநேய மறுசீரமைப்பின் போதான சூழ்நிலையை புரிந்து கொள்ளல்

ஒவ்வொரு சூழ்நிலையின் போதும், மக்களின் தேவைகள், பலவீனங்கள் மற்றும் இயலுமைகளை பகுப்பாய்வு செய்வதற்கு பயனுறுதி மிக்க மனிதநேய மறுசீரமைப்பானது விரிவான, சூழ்நிலை சார்ந்த (மதிப்பாய்வு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு) அடிப்படையில் அமைய வேண்டும். வேறுப்பட்ட சூழ்நிலைகளை அறிந்து கொள்வதற்கும் மற்றும் மறுசீரமைப்பு நிகழ்ச்சிகளை ஏற்றவாறு உள்வாங்கிக் கொள்வதற்குமான மிக முக்கியமான கருவியாக இந்த கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்கியமான பலவீனங்கள் மற்றும் இயலுமைகள் தொடர்பில் சிறப்பு கவனஞ் செலுத்தி கடுமையான சூழ்நிலையின் போது, உலகளாவிய ரீதியில் பிரயோகிக்கப்படும் தரத்தை அடைவதனை நோக்காகக் கொண்டு, தமது பிரதிபலிப்புக்களை செலுத்துவதற்கு, பயன்படுத்துபவர்களை இந்த கையேடு வழி நடத்துகின்றது

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் உள்ள அனைத்து நபர்களுக்கும் வளங்கள் மற்றும் அதிகாரம் தொடர்பில் சமமான கட்டுப்பாடு இருக்காது. தமது இன அடையாளம், மதம் அல்லது அரசியல் நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையில் வேறுபட்ட வகையில் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பர். இதற்கு முன்னர் சவாலை எதிர்நோக்காத இயல்பான வாழ்க்கையை முன்னெடுத்து வந்தவர்களும் அனர்த்தத்தினால் பலவீனமடைந்திருப்பர்.

பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள், மாற்றுத் திறன் உடையவர்கள் அல்லது எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் போன்றோருக்கு அவர்களுடைய பௌதீக, கலாசார மற்றும்/அல்லது சமூக தடைகள் காரணமாக பரந்தளவிலான உதவிகள் மறுக்கப்படலாம் அல்லது சந்தர்ப்பம் வழங்கப்படாது இருக்கலாம். இந்த மக்களை "பலவீனமான குழுக்கள்" என்ற ரீதியில் நடத்துவது என்பது, கூறுகளான மற்றும் பயனற்ற இடையீடுகளை நோக்கிச் செல்ல வழி வகுக்கும் என அனுபவங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக பலவீனங்கள் அதிகரிப்பதுடன், குறிப்பிட்ட சிக்கலின் போது பலவீனத்தை மாற்றுவதற்கும் அதிக நேரம் அவசியமாக இருக்கும்.

சமுதாயங்களை மீள பாதுகாப்பானாதாக கட்டியெழுப்புவதற்கும் மற்றும் தீவிரமான நெகிழ்ச்சித் தன்மையை மேம்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் இடம்பெறக் கூடிய இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் நிவாரண மற்றும் மீளமைப்பு முயற்சிகள் கவனஞ் செலுத்தல் வேண்டும்.

உலகின் பல பகுதிகளில் காலநிலை மாற்றம் என்பது எதிர்நோக்கி வரும் சவாலில், ஏற்கனவே தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்துவிட்டது. இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான பாரம்பரிய அறிவு, பலவீனங்கள் மற்றும் இயலுமைகள் என்பன எதிர்கால காலநிலை சவால்கள் தொடர்பான மதிப்பீடுகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தனித்துவமான அனர்த்த சூழ்நிலையின் போதும் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் குறிப்பிட்ட பலவீனங்கள் மற்றும் இயலுமைகளின் போதும் சிறப்பாக செயற்படுவதற்கு சில **எழுந்தமான கருப்பொருள்களை** இந்த கையேடு அடையாளப்படுத்துகின்றது. **சிறுவர்கள், பால்நிலை, வயதானவர்கள், எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ், மாற்றுத் திறனுடையவர்கள் மற்றும் உளச்சமூக உதவி** போன்ற கருப்பொருள்கள், தனிநபர்களின் மற்றும் உபகுழுக்களின் பலவீனங்கள் தொடர்பில் விளக்குகின்றன. **அனர்த்த அபாயக் குறைப்பு** (காலநிலை மாற்றம் உள்ளடங்கலாக) மற்றும் **சுற்றுச் சூழல்** என்பன ஒட்டுமொத்த மக்களையும் பாதிக்கும் பலவீனமான விடயங்களை விளக்குகின்றன. இந்த அறிமுகத்தின் இறுதியில், ஒவ்வொரு கருப்பொருளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஏனைய மனிதநேய சாசனங்களுடனான தொடர்புகள்

ஒரே பதிப்பாகவும், பேணக் கூடிய அளவிலும் ஸ்பியர் கையேட்டை வைத்துக் கொள்வதற்கு, மனிதநேய மறுசீரமைப்பின் நான்கு பிரதான துறைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. பயனுறுதி மிக்க மனிதநேய மறுசீரமைப்பில் பகுதியாக இருக்கும் சம்பந்தப்பட்ட பல துறைகள் தமக்கான தரங்களை தயாரித்துள்ளன. அவற்றில் பல **ஸ்பியர் சக தரங்களின்** தொடரில்

உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை தனியான பதிப்புக்களாக வெளிவந்த போதிலும், ஸ்பியர் ஆலோசனைக்கான அதே வீரியம் மற்றும் செயற்பாடு என்பவற்றுக்காக வடிவமைக்கப்பட்டதாகும். அவற்றில் சில பின்வருமாறு:- கல்வி மற்றும் அவசர நிலைகளுக்கான நிறுவனங்களுக்கு இடையிலான வலையமைப்பு (Inter-Agency Network for Education in Emergencies (INEE)), கல்விக்கான அடிப்படைத் தரங்கள்: முன்னாயாத்தம், மறுசீரமைப்பு, மீளமைப்பு (Minimum Standards for Education: Preparedness, Response, Recovery), சிறு வர்த்தக கல்வி மற்றும் மேம்பாடு வலையமைப்பின் மோதலுக்குப் பின்னரான பொருளாதார மீட்சியின் அடிப்படைத் தரங்கள் (Small Enterprise Education and Promotion (SEEP) Network's Minimum Standards for Economic Recovery after Crisis) மற்றும் கால்நடை அவசர வழிகாட்டிகள் மற்றும் தரங்கள் (Livestock Emergency Guidelines and Standards (LEGS)).

அவசர கால நிலையில் கல்வி என்பது வாழ்க்கையை நிலைப்படுத்துவதற்கும் மற்றும் வாழ்க்கையை காப்பாற்றுவதற்கும் என இரண்டு வகையிலும் பயனுடையது. பாதுகாப்பான வகையில் வழங்கப்பட்டுள்ள கல்வியானது, இயல்பு நிலை மற்றும் உளச்சமூக உதவிக்கு ஆதரவான மற்றும் சுரண்டலுக்கும், காயப்படுத்தலுக்கும் எதிரான பாதுகாப்பு உணர்வுகளைத் தருகின்றது. பாதுகாப்பு சார்ந்த வாழ்க்கைத் திறன்கள் மற்றும் முக்கியமான சுகாதார, போஷாக்கு தகவல்கள் தொடர்பிலான செய்திகளை பரிமாறிக் கொள்ளவும் கல்வி பயன்படுத்தப்படலாம். கல்விக்கான INEE அடிப்படைத் தரங்கள்: முன்னாயத்தம், மறுசீரமைப்பு, மீளமைப்பு, 2004ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டு, 2010ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு ஸ்பியரின் சக தரமாக அது உள்வாங்கப்பட்டது. அவை கல்வி மற்றும் சுகாதாரம், நீர், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு, போஷாக்கு, உறைவிடம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கு இடையிலான சிக்கலான தொடர்பினை உறுதி செய்வதற்கும், கல்வியின் முன்னாயத்தம் மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றின் பாதுகாப்பு, தரம் மற்றும் பொறுப்புடைமையை பரவலாக்குவதற்கும் ஏற்ற சட்டகத்தை வழங்குகின்றன.

சிறு வர்த்தகங்களின் அபிவிருத்தி மற்றும் கால்நடை என்பன முறையே மோதலுக்கு பின்னரான பொருளாதார மீட்சிக்கான SEEP வலையமைப்பின் அடிப்படைத் தரங்கள் மற்றும் கால்நடை அவசர கால நிலை வழிகாட்டிகளும், தரங்களும் ஆகியவற்றினால் உள்ளடக்கப்பட்டுள்ளன. அடிப்படைத் தரங்களின் இந்த இரண்டு தொகுதிகளும் 2011ஆம் ஆண்டில் ஸ்பியர் சக தரங்களாக உள்வாங்கப்படும் என கருதப்படுகின்றது.

இந்த கையேட்டுடன் இணைத்து சக தரங்களையும் பயன்படுத்துவதன் மூலம் இயற்கை அனர்த்தம் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவியின் தரத்தை மேம்படுத்த முடியும். INEE, SEEP மற்றும் LEGS தரங்களில் பொருத்தமான வழிகாட்டல்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், கையேடு முழுவதிலும் பொருத்தமான இடங்களில் குறிப்புதவியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நிறுவனங்களின் ஆணைகள், தொழில் நுணுக்க நிபுணத்துவம் அல்லது வழிகாட்டலில் எதிர்பார்க்கப்பட்டுள்ள இடைவெளி போன்ற குறிப்பிடத்தக்க செயற்பாட்டுத் தேவைகளை எட்டுவதற்கு நிறுவனங்கள், கூட்டணிகள் மற்றும் வலையமைப்புக்கள் என்பன வெவ்வேறு தரங்கள் மற்றும் நடத்தை கோவைகளை ஸ்தாபித்துள்ளன. பொருத்தமான சந்தர்ப்பங்களில் இந்த கையேட்டின் தொழில் நுணுக்க அத்தியாயங்களில் வேறு தரங்களும் குறிப்புதவியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

துறைக்குள் **தரமான மற்றும் பொறுப்புடைமை வாய்ந்த முயற்சிகளை** முன்னெடுக்கும் குழுவின் ஒரு பகுதியே ஸ்பியர் திட்டமாகும்.

மனிதநேய பொறுப்புடைமை மற்றும் தர முகாமைத்துவ நிர்ணயம் ஊடாக பூரணமான விடயங்களை கையாண்டு வரும், Good Enough Guide மற்றும் மனிதநேய பொறுப்புடைமை பங்காளித்துவம் (Humanitarian Accountability Partnership - HAP) என்வற்றை வடிவமைத்ததில், அவசரகால இயலுமை கட்டியெழுப்பல் செயற்றிட்டத்துடன் (ECB) சிறந்த நெருக்கம் உள்ளது. ஸ்பியர் பொதுவாக இணைந்து செயற்படும் ஏனைய தரம் மற்றும் பொறுப்புடைமை சார்ந்த முயற்சிகள், People In Aid, Groupe URD (அவசரப் பணி, புனர்வாழ்வு, அபிவிருத்தி), Coordination Sud மற்றும் மனிதநேயப் பணியில் பொறுப்புடைமை மற்றும் செயற்பாட்டுக்கான செயற்றிறன் மிக்க கற்றல் வலையமைப்பு (ALNAP) என்பனவாகும்.

கையேட்டுக்கு அப்பால்

ஸ்பியர் திட்டத்தின் பிரதானமான மற்றும் மிகவும் பயன்படுத்தப்படுகின்ற கருவியாக இந்த கையேடு உள்ளது. ஸ்பியர் இணையத்தளத்தில் (www.sphereproject.org) இதன் மின்னூலைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த இணையத் தளத்தில், கிடைக்கக் கூடிய பதிப்புக்கள் மற்றும் வேறு வளங்கள் மூலம் புதிய செய்திகளையும் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

இந்தக் கையேடு உலகம் முழுவதிலும் பல மொழிகளில் கிடைக்கக் கூடியதாக உள்ளதுடன், பல்வேறு பயிற்சி மற்றும் விரிவாக்கல் மூலப்பொருட்களை கொண்டுள்ளது. பணிபுரிபவர்களின் அனுபவத்தின் அடிப்படையில் உள்ளூர் சூழ்நிலைகளுக்கு இவை பொதுவாக உள்வாங்கப்படுகின்றன. ஸ்பியர் சமூகத்தின் செயற்பாட்டின் உணர்வை இது விளக்குகின்றது. சில சந்தர்ப்பங்களில் முறைசாராததாக அது உள்ளது. பயிற்சி புரிபவர்களின் மத்தியில் இப்போது பரவலாகி வரும் வலையமைப்பான ஸ்பியர் திட்டத்தை புத்துணர்வுடன் வைத்திருக்கின்றது.

அனர்த்தம் அல்லது மோதலால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளை எட்டுவதற்கான மற்றும் அவர்களுக்கு பொறுப்புடைமையுடன் இருப்பதற்கான மனிதயே மறுசீரமைப்பை மேம்படுத்துவதற்கு உதவ வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே ஸ்பியர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை சிறந்த தேர்ச்சியை ஸ்பியர் திட்டம் வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், கையேடு மாத்திரம் இதனை சாதித்து விட முடியாது. உங்களால் மாத்திரமே முடியும்.

எழுந்தமான கருப்பொருள்களை சுட்டிக்காட்டல்

அனர்த்த மறுசீரமைப்பின் போது கவனஞ் செலுத்த வேண்டிய முக்கியமான பகுதிகள், தனிப்பட்ட, குழு அல்லது பொது பலவீனப் பிரச்சினைகள் என்பன தொடர்பில் இந்த கையேட்டின் எழுந்தமான கருப்பொருள்கள் அக்கறை செலுத்துகின்றன. இந்தப் பகுதியில், ஒவ்வொரு கருப்பொருளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள்: அனைத்து சிறுவர்களும் தீங்குகளில் இருந்து பாதுகாக்கப்பட்டு, அடிப்படை சேவைகளுக்கான சமமான பிரவேசம் வழங்கப்படுவதனை உறுதி செய்வதற்கு விசேட செயலேற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலான எண்ணிக்கையை பொதுவாக வகிப்பவர்கள் சிறுவர்க-ளாவர். இதன் காரணமாக அவர்களின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. சிக்கலான அவசர கால மதிப்பீடுகள் மற்றும் திட்டமிடலில் இவை பாதிப்பை ஏற்படுத்தும். மனிதநேய சேவையை வழங்கல் மற்றும் அதனை கண்காணித்தலிலும், மதிப்பீடு செய்தலிலும் சிறுவர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். போஷாக்கின்மை, சுரண்டல், கடத்தல் மற்றும் இராணுவ குழுக்களில் சேர்க்கப்படலும், போராடலும், பாலியல் வன்முறை போன்றன சம்பந்தப்பட்ட தீர்மானம் எடுத்தலில் பங்குபற்றுவதற்கு போதிய சந்தர்ப்பம் வழங்கப்படாத நிலையில் சிறுவர்களும், இளைஞர்களும் பலவீனத்தின் தீங்கான விளைவுகளை அனுபவிக்க நேர்கின்றது. 18 வயதுக்கு குறைவானவர்களை சிறுவர்கள் என சிறுவர் உரிமைகளுக்கான சாசனம் குறிப்பிடுகின்றது. கலாசார மற்றும் சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு இந்த வரைவிலக்கணம் மாறுபடுகின்றது. மனிதநேயப் பணியிலிருந்து எந்தவொரு சிறுவரும் அல்லது இளைஞரும் புறக்கணிக்கப்படுகின்றமையை தடுப்பதனை உறுதி செய்வதற்கு பாதிக்கப்பட்ட சனத்தொகை சிறுவர்களை எவ்வாறு வரையறுக்கின்றது என்பது தொடர்பான முழுமையான பகுப்பாய்வு முன்னெடுக்கப்படல் வேண்டும்.

அனர்த்த அபாயக் குறைப்பு: இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களை குறைத்தல், மக்கள் மற்றும் சொத்துக்களின் பலவீனங்களை குறைத்தல், நிலம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பில் சாதுர்யம் மிக்க முகாமைத்துவம் மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய நிகழ்வுகளுக்கான முன்னாயத்தம் என்பன உள்ளடங்கலாக அனர்த்தத்தை ஏற்படுத்தக் கூடிய காரணங்களை பகுப்பாய்வு செய்வதற்கும், முகாமை செய்வதற்கும் முறைசார்ந்த முயற்சிகள் ஊடாக அனர்த்த அபாயங்களை குறைக்கும் கருத்து மற்றும் பயிற்சி என இதனை வரையறுக்கலாம். கேடு விளைவிக்கக் கூடிய நிகழ்வுகள் என்பதில் இயற்கை அனர்த்தங்களான சூறாவளி, வெள்ளம், வரட்சி மற்றும் கடல் மட்டம் உயர்தல் என்பன உள்ளடங்கும். அவை தொடர்ச்சியாக வேறுபட்ட வகையிலும் மற்றும் தீவிரமாகவும் இடம்பெறும் நிலையில், இந்த தோற்றப்பாடுகள் உலக **காலநிலை மாற்றத்திற்கான** தன்மைகள் அதிகரித்துள்ளமையை வெளிப்படுத்துகின்றன.

சுற்றுச் சூழல்: சுற்றுச் சூழல் என்பது பௌதீக, இரசாயன மற்றும் உயிரியல் கூறுகளையும், செயற்பாடுகளையும் கொண்டதாக புரிந்து கொள்ளப்படுகின்றது.

அனர்த்தத்தினால் அவை பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதனால் உள்ளூர் மக்களின், வாழ்வும், வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றன. தனிநபர்கள் நிலைத்திருக்கக் கூடிய மற்றும் சிறந்த வாழ்க்கைக்கு உதவக் கூடிய வளங்களை அது கொண்டுள்ளது. அத்தியாவசியமான செயற்பாடுகள் பேணப்பட வேண்டுமாயின் அதற்கு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தேவையாக உள்ளது. சுற்றுச் சூழலை மேலதிக சுரண்டல், மாசடைதல் மற்றும் தரம் குறைதல் என்பவற்றில் இருந்து பாதுகாப்பதற்கான தேவையை அடிப்படைத் தரங்கள் அடையாளப்படுத்துகின்றன. அத்துடன், சுற்றுச் சூழலின் வாழ்க்கைக்கு உதவும் செயற்பாடுகளை பாதுகாப்பதனையும், சவால் மற்றும் பலவீனத்தை குறைப்பதனையும், சுய மீட்சிக்கான இயற்கை முறைமையின் உள்வாங்கும் தன்மைக்கான பொறியமைப்புக்களை அறிமுகப்படுத்துவதனையும் இது இலக்காக் கொண்டுள்ளது.

பால்நிலை: தமது பால்நிலைக்கு அமைய வேறுபட்ட வகையில் மக்கள் சூழ்நிலையை அனுபவிக்கின்றனர் என்பதனை இந்த பகுதி விளக்குகின்றது. பெண்கள் மற்றும் ஆண்களின் உயிரியல் பிணைப்பை **பால்நிலை** குறிக்கின்றது. அது இயற்கையானதாகவும், பிறப்பினால் தீர்மானிக்கப்பட்டதாகவும் உள்ளது. எனவே, மாற்றமற்றதாக, உலகளாவியதாக உள்ளது. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான சமமான உரிமை என்பது மனித உரிமைகள் ஆவணங்களில் விளக்கப்பட்டுள்ளது. அதுவே மனிதநேய சாசனத்தின் அடிப்படையை உருவாக்குகின்றது. மனிதநேய உதவி மற்றும் பாதுகாப்பு, தமது மனித கண்ணியத்திற்கான மதிப்பு, தெரிவுகளை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளடங்கலாக தமது சமமான மனித இயலுமைக்கான பாராட்டு, தெரிவுகளின் அடிப்படையில் செயற்படுவதற்கான சமமான சந்தர்ப்பங்கள் மற்றும் தமது நடவடிக்கைகளின் விளைவுகளை நேர் செய்வதற்கான சமமான பலம் போன்றவற்றுக்கு பெண்களும், ஆண்களும் சமமான ஏற்புறுதியை கொண்டுள்ளனர். வேறுபட்ட தேவைகள், பலவீனங்கள், ஆர்வங்கள், இயலுமைகள் மற்றும் அனைத்து வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த ஆண்களதும், பெண்களதும், சிறுவர்களதும், சிறுமிகளதும் இறுதி வெற்றிக்கான உபாயங்கள் மற்றும் அவர்கள் மீதான அனர்த்தம் அல்லது மோதலின் வேறுபட்ட தாக்கங்கள் போன்றன தொடர்பிலான புரிந்துணர்வின் அடிப்படையில் இருக்கும் போது மனிதநேய மறுசீரமைப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த வேறுபாடுகளை புரிந்து கொள்ளும் அதேவேளை, பெண்கள் மற்றும் ஆண்களின் பாத்திரங்கள் மற்றும் பணிச்சுமைகள், வளங்களுக்கான மற்றும் வளங்கள் மீதான கட்டுப்பாடு, தீர்மானம் எடுத்தல் அதிகாரம் மற்றும் திறன் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்கள் என்பவற்றில் உள்ள சமத்துவம் இன்மையையும் பால்நிலை பகுப்பாய்வு ஊடாக அடைய முடியும். ஏனைய எழுந்தமான கருப்பொருள்களுடன் கலந்ததாக பால்நிலை உள்ளது. மனிதநேயம் விகித சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மையை நோக்கமாக கொண்டுள்ளது என்பதன் அர்த்தம், வெளியீட்டில் சமத்துவத்தை உறுதி செய்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையில் நியாயமான தன்மையை எட்டுவதற்கு கவனஞ் செலுத்த வேண்டும் என்பதாகும். வரலாற்று ரீதியாக, பால்நிலை சார்ந்த கவனமானது பெண்கள் மற்றும் சிறுமிகளின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அடையாளங் காணும் தேவைகள் என்பன சார்ந்ததாகவே இருந்துள்ளது. ஆண்கள் மற்றும் சிறுவர்களையும் விட, பெண்கள் மற்றும் சிறுமிகள் அதிகளவில்

துரதிருஷ்டம் வாய்ந்தவர்களாக இருப்பதே இதற்கு காரணம். எவ்வாறாயினும், சிக்கலான சூழ்நிலைகளில் ஆண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் விடயங்கள் தொடர்பிலும் மனிதநேய சமூகம் அறிந்து கொள்கின்றமை அதிகரித்துள்ளது.

எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ்: பலவீனங்கள் மற்றும் சவால்களை புரிந்து கொள்வதற்கும், பயனுறுதி மிக்க மறுசீரமைப்பை திட்டமிடுவதற்கும் குறிப்பிட்ட மனிதநேய சூழ்நிலையில் எச்.ஐ.வி நோய் பாதிப்பு தொடர்பில் அறிந்து கொள்ளல் மிகவும் முக்கியமாகும். அதிக சவாலுடன் வாழும் மக்களுக்கு மேலதிகமாக (எ.கா. ஆணுடன் உடலுறவு கொள்ளும் ஆண், நரம்பூடாக போதைப் பொருள் ஏற்றல் மற்றும் பால்வினைத் தொழிலாளர்கள்), அவர்களுக்கு பொதுவாக புறக்கணிப்பு, பாரபட்சம் மற்றும் வன்முறைக்கு எதிரான பாதுகாப்பினை வழங்குவதற்கான விசேடமான செயலேற்பாடுகள் தேவையாக உள்ளன. சில சூழ்நிலைகளில் அகதிகள், புலம்பெயர்ந்தவர்கள், இளைஞர்கள் மற்றும் கைவிடப்பட்ட தாய்மார் என்ற பலவீனமான குழுக்களும் காணப்படும். பாரியளவிலான இடப்பெயர்வினால் குடும்ப உறுப்பினர்கள் பிரிதல் மற்றும் சமுதாய இணைக்கப்பாடு குலைதல் மற்றும் சமூக, பாலியல் ஒழுக்க விதி நடத்தைகள் மீறப்படல் என்பன, எச்.ஐ.வி பாதிப்புக்கள் மற்றும் எச்சரிக்கைகள் அதிகரிப்பதற்கு வழி வகுக்கும். பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் காரணமாக எச்.ஐ.வி பாதிப்புக்குள்ளான ஆயுத குழுக்களினால் பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு இலக்காகலாம். நோய் தவிர்ப்பு நிகழ்ச்சிகள் மற்றும் ரெட்றோவைரசுக்கு எதிரான சிகிச்சை பெறல், காசநோய்க்கான சிகிச்சை மற்றும் வேறு சந்தர்ப்பவசத் தொற்றுக்களுக்கு எதிரான சிகிச்சை மற்றும் நோய் தவிர்ப்பு நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய எச்.ஐ.வி இடையீடுகளுக்கு மனிதநேய அவசரப் பணிகளின் போது மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள் (PLHIV) பொதுவாக பாரபட்சம் மற்றும் இழுக்கு என்பவற்றுக்கு உள்ளாக்கப்படுவர். எனவே, அந்தரங்கத் தன்மை என்பது தீவிரமாக பின்பற்றப்படல் வேண்டும் என்பதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் போதிய பாதுகாப்பும் வழங்கப்படல் வேண்டும். இந்த கையேட்டின் துறைசார்ந்த நடவடிக்கைகளில் நோய் பாதிப்பு மற்றும் சூழ்நிலைகள் அடிப்படையிலும், எச்.ஐ.வியினால் மக்கள் பாதிக்கப்படல் மற்றும் எச்சரிக்கைகள் அதிகரிக்காது இருப்பதற்கு பொருத்தமான எச்.ஐ.வி இடையீடுகள் தரப்பட்டுள்ளன.

வயதானவர்கள்: ஐ.நா வரைவிலக்கணத்துக்கு அமைய 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் வயதான ஆண்கள், வயதான பெண்கள் என வகைப்படுத்தப்படுகின்றனர். ஆனால், “வயதானவர்கள்” என்பதற்கான வரைவிலக்கணம் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு வேறுபடும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வயதானவர்கள் பொதுவாக வறியவர்கள் மத்தியிலேயே காணப்படுகின்றனர். அத்துடன், அனர்த்தம் அல்லது மோதலால் பாதிக்கப்பட்ட சனத்தொகையில் அதிக எண்ணிக்கையிலானவர்களாகவும் மற்றும் அதிகரித்து வருபவர்களாகவும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக வயதானவர்கள் உள்ளனர் (உதாரணமாக, உலகிலேயே அதிகரித்துச் செல்லும் வயதுப் பிரிவாக 80வயதுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர்). இருப்பினும், அனர்த்தம் அல்லது மோதல்

முகாமைத்துவத்தின் போது பொதுவாக புறக்கணிக்கப்படுபவர்களாக அவர்கள் உள்ளனர். அனர்த்தங்கள் அல்லது மோதல்களின் போது வயதானவர்களை பலவீனப்படுத்துவதில் தனிமைப்படுத்தல் மற்றும் உடலியல் ரீதியான பலவீனம் என்பன குறிப்பிடத்தக்க காரணிகளாக உள்ளன. அவற்றுடன், வாழ்வாதார உபாயங்கள் சீர்குலைதல் மற்றும் குடும்ப, சமுதாய உதவி கட்டமைப்புக்கள் சீர்குலைதல், தீவிரமான சுகாதார மற்றும் இடம்பெயரல் பிரச்சினைகள் மற்றும் மன நலம் பாதிக்கப்படல் என்பனவும் முக்கியமான காரணிகளாக உள்ளன. வீட்டிற்குள்ளேயே இருக்கும் வயதான நபர்கள் மற்றும் குடும்பத்தின் தலைமை பொறுப்பில் உள்ள வயதான நபர்களை அடையாளங் கண்டு, அவர்களை அடைவதற்கான விசேட முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். வாழ்வதற்கும், புனர்வாழ்வுக்கும் பிரதான பங்களிப்புக்களை வயதான நபர்களும் வழங்க வேண்டும். சிறுவர்களை பராமரிப்பவர்கள், வள முகாமையாளர்கள் மற்றும் வருமானம் ஈட்டுபவர்கள் என்ற வகையில் மிகவும் முக்கியமான பாத்திரத்தினை அவர்கள் வகிக்கின்றனர். சமுதாயத்தை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் தொடர்பில் அறிவும், அனுபவமும் நிறைந்தவர்களாகவும், கலாசார மற்றும் சமூக அடையாளங்களை அறிந்தவர்களாகவும் அவர்கள் உள்ளனர்.

மாற்றுத் திறன் உடையவர்கள்: சிறுவர்கள் மற்றும் வயதான நபர்கள் உள்ளடங்கலாக உலக சனத்தொகையின் 7%க்கும், 10%க்கும் இடைப்பட்டவர்கள் மாற்றுத் திறனுடன் வாழ்வதாக உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) கணிப்பிட்டுள்ளது. அனர்த்தங்கள் மற்றும் மோதல்களின் போது அங்கங்களை இழத்தல் மற்றும் ஏற்கனவே இருந்த மாற்றுத் திறன் அதிகரித்தல் போன்ற சம்பவங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. மாற்றுத் திறன் என்பது வலுக்குறைந்த நபர்கள் (உடலியல், உணர்வியல், அறிவியல் மற்றும் உளச்சமூகவியல் ரீதியாக) மற்றும் நடத்தை சார்ந்த, சுற்றுச் சூழல் சார்ந்த தடைகள் அவர்களுடைய முழுமையான மற்றும் சமூகத்தில் ஏனையோருடன் சமத்துவமாக பயனுறுதி மிக்க பங்குபற்றலில் ஈடுபடுவதில் தடை ஏற்படுத்துவதாகவும் மாற்றுத் திறனுடைய நபர்களின் உரிமைகளுக்கான ஐ.நா சாசனம் (CRPD) வரைவிலக்கணப்படுத்துகின்றது. மனிதநேய உதவி நிகழ்ச்சிகளின் முதன்மைப்படுத்தலில் முழுமையாக மற்றும் அர்த்தமுள்ள வகையில் பங்குபற்றல் அல்லது பயன் பெறல் என்பவற்றில் மாற்றுத் திறனுடைய நபர்கள் கலந்து கொள்ள முடியாதவாறு இந்த தடைகள் கட்டுப்படுத்துகின்றன. மோதல் மற்றும் அவசர கால நிலைமைகளின் போது மாற்றுத் திறனுடைய நபர்களில் காவல் மற்றும் பாதுகாப்புக்கான விசேட குறிப்புதவிகளை CRPD உள்ளடக்கியுள்ளது (உறுப்புரை 11). மாற்றுத் திறனுடைய நபர்கள் அனர்த்த சூழ்நிலைகளின் போது அளவற்ற சவால்களை எதிர்கொள்கின்றனர். நிவாரண மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளிலும் அவர்கள் பொதுவாக புறக்கணிக்கப்படுகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தரமான அனர்த்த உதவி சேவைகளை பயன்படுத்துவதும், பங்குபற்றுவதும் சிக்கலான விடயமாக மாறி விடுகின்றது. மிகவும் முக்கியமாக, மாற்றுத் திறனுடைய நபர்கள் என்பது வேறுபட்ட சிறுவர்கள் மற்றும் வயதான நபர்களை உள்ளடக்கியது. அவர்களுடைய தேவையை அனைவருக்கும்

பொருந்தக் கூடியது என்ற வகையிலான அணுகுமுறையாக அடையாளங் காண முடியாது. எனவே, மனிதநேய மறுசீரமைப்பு என்பது வேறுபட்ட வகையிலான வலுக்குறைந்த தனிநபர்களின் குறிப்பிட்ட இயலுமைகள், தகைமைகள், வளங்கள் மற்றும் அறிவினை கவனத்திற் கொண்டதாக முன்னெடுக்கப்படல் வேண்டும். தமது சமூகத்தில் உள்ள ஏனையோரைப் போன்றே, அதே அடிப்படைத் தேவைகள் மாற்றுத் திறன் உடையவர்களுக்கு அவசியம் என்பதனை நினைவில் வைத்திருக்க வேண்டியது முக்கியமானது. மேலதிகமாக, உதவிகள் மற்றும் உபகரணங்களை மாற்றுதல் மற்றும் புனர்வாழ்வு சேவைக்கான பிரவேசம் போன்ற விசேட தேவைகள் அவர்களுக்கு இருக்கும். அத்துடன், மாற்றுத் திறனுடைய நபர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும், அவர்களை குடும்பத்தை அல்லது சமுதாய வலையமைப்பை விட்டு பிரிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. இறுதியாக, மனிதநேய மறுசீரமைப்பில் மாற்றுத் திறனுடைய நபர்களின் உரிமைகள் கவனத்திற் கொள்ளப்படாவிட்டால், அனைத்து மக்களுக்குமான சமுதாயத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பாரிய சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். நிவாரணம் மற்றும் மீளமைப்பின் அனைத்து அம்சங்களிலும் மாற்றுத் திறனுடைய நபர்களை உள்ளடக்குவது அத்தியாவசியமானது. இதற்கு முதன்மைப்படுத்தப்பட்ட மற்றும் இலக்கு வைக்கப்பட்ட மறுசீரமைப்புக்கள் இரண்டும் அவசியமாகும்.

உளச்சமூக உதவி: அனர்த்தங்களின் உணர்வு ரீதியான, சமூக ரீதியான, பௌதீக ரீதியான மற்றும் ஆன்ம ரீதியான விளைவுகளில் இருந்தே பலவீனங்கள் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்படுதல் ஆகியவற்றிற்கான முக்கியமான வளங்கள் பெறப்படுகின்றன. இந்த பிரதிபலிப்புக்களில் பல இயல்பானவை மற்றும் காலத்தினால் வெற்றிக் கொள்ளக் கூடியவை. பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கையாளும் மற்றும் வெற்றி கொள்ளும் திறன் என்பவற்றை சுய உதவி, மேம்படுத்தும் உள்ளூர் மட்டத்தில் பொருத்தமான மன நல மற்றும் உளச் சமூக உதவிகளை ஒழுங்கு செய்ய வேண்டியது அத்தியாவசியமாகும். வேகமாகவும், பொருத்தமான சந்தர்ப்பத்திலும் மனிதநேய உதவி வலுப்படுத்தப்படல் வேண்டும். அனர்த்த மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தலில் மற்றும் வழிப்படுத்தலில் பாதிக்கப்பட்ட மக்களும் ஈடுபடுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு மனிதநேய துறையிலும் உதவி நிர்வகிக்கப்படும் வகையில், உளச் சமூக தாக்கம் உள்ளது. அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அல்லது தீங்கினை ஏற்படுத்தலாம். கண்ணியத்தை மேம்படுத்தும், அர்த்தமுள்ள பங்குபற்றல் ஊடாக சுய நம்பிக்கையை உருவாக்கும், சமய மற்றும் கலாசார பயிற்சிகளின் முக்கியத்துவத்தை மதிக்கும் மற்றும் முழுமையான நலனுக்கு உதவக் கூடிய பாதிக்கப்பட்ட மக்களின் இயலுமையை வலுப்படுத்தும் வகையில் உதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

குறிப்புதவிகள்:

சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா சாசனம்: **www2.ohchr.org/english/law/crc.htm**

மாற்றுத் திறனுடைய நபர்களின் உரிமைகளுக்கான ஐ.நா சாசனம்: www.un.org/disabilities/

மாற்றுத் திறன் தொடர்பில் WHO: www.who.int/disabilities/en/

மனிதநேய
சாசனம்

இந்த கையேட்டில் பின்பற்றப்படும் பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்களிற்கான ஒழுக்க ரீதியான மற்றும் சட்ட பின்புலங்களை மனிதநேய சாசனம் வழங்குகின்றது. கட்டமைக்கப்பட்ட சட்ட உரிமைகள் மற்றும் கடமைகளின் கூற்றாக ஒரு பகுதியிலும், பகிரப்பட்ட நம்பிக்கையின் கூற்றாக மறு பகுதியிலும் உள்ளது.

சட்ட உரிமைகள் மற்றும் கடமைகள் என்ற பதங்கள், அனத்தம் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கள் தொடர்பில் அதிக பொறுப்புடைய மிக முக்கியமான சட்ட கோட்பாடுகளை விளக்குகின்றது. ஈடுபட்டுள்ள வேறுபட்ட செயற்பாட்டாளர்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக, அனர்த்தம் அல்லது மோதல் மறுசீரமைப்பினை நிர்வகிப்பதற்கான கோட்பாடுகள் தொடர்பில் மனிதநேய நிறுவனங்களுக்கு இடையிலான அக்கறையை பகிரப்பட்ட நம்பிக்கைகள் விளக்க முயற்சிக்கின்றது.

மனிதநேயப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஒரே கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும் என்ற அழைப்பினை விடுக்கும் மற்றும் ஸ்பியரினை அமுல்படுத்தும் மனிதநேய நிறுவனங்களின் ஏற்புறுத்திக்கான அடிப்படையை இது வழங்குகின்றது

மனிதநேய சாசனம்

எங்களுடைய நம்பிக்கைகள்

1. மனிதநேய நிறுவனங்கள் என்ற வகையில் அனர்த்தம் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்ட கண்ணியத்துடன் வாழ்வதற்கான அடிப்படை நிபந்தனைகளை உறுதி செய்வதற்கு அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பு மற்றும் உதவியை பெறுவதற்கான உரிமை உள்ளது எனப்படும் எங்களுடைய பகிரப்பட்ட பற்றுக்கோளை மனிதநேய சாசனம் வெளிப்படுத்துகின்றது. இந்த மனிதநேய சாசனத்தில் விளக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் உலகளாவியவை. அனர்த்தம் அல்லது மோதலால் பாதிக்கப்பட்டவர்கள் உலகின் எந்த பகுதியில் இருந்த போதிலும் அவர்கள் அனைவருக்கும் பிரயோகிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களுக்கு உதவுவதற்கு விருப்பம் உள்ளவர்கள் அல்லது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குபவர்களுக்கும் பொருத்தமானது. இந்த கோட்பாடுகள் சர்வதேச சட்டத்தில் இருந்து பெறப்பட்டவை. ஆனால், அனைத்து மனித உயிர்களும் சுதந்திரமாகவும், கண்ணியம் மற்றும் உரிமைகளில் சமத்துவமாகவும் நடத்தப்பட வேண்டும் என்கின்ற **மனிதநேயத்தின்** அடிப்படை ஒழுக்க கோட்பாடுகளில் இருந்தே பிரதான கோட்பாடுகள் பெறப்பட்டுள்ளன. இந்த கோட்பாட்டின் அடிப்படையில், அனர்த்தம் அல்லது மோதலினால் ஏற்படும் மனித துன்பங்களை தவிர்ப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்கிற **தவிர்க்க முடியாத மனிதநேயத்தின்** சிறப்புத் தன்மையை நாம் வலியுறுத்துகின்றோம். எந்தவொரு விடயமும் இந்த கோட்பாட்டை மீறிச் செல்லக் கூடாது.

உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மனிதநேய நிறுவனங்கள் என்ற வகையில், இந்த சாசனத்தில் உள்ள கோட்பாடுகளை மேம்படுத்துவதற்கும், பின்பற்றுவதற்கும்,

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதற்கும் மற்றும் பாதுகாப்பதற்குமான எமது முயற்சிகளில் அடிப்படைத் தரங்களை எட்டுவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் இருத்தல் வேண்டும். கீழே கூற்றாக தரப்பட்டுள்ள பகிரப்பட்ட மனிதநேய நம்பிக்கையின் பொதுவான கோட்பாடுகள், உரிமைகள் மற்றும் கடமைகளை ஏற்றுக் கொள்வது தொடர்பில் அரசாங்க மற்றும் தனியார் துறை செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கலாக மனிதநேய பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

எங்கள் பாத்திரம்

2. முதலாவதாக அவர்களுடைய சுய முயற்சியின் ஊடாகவும் மற்றும் சமுதாயத்தினதும், உள்ளூர் நிறுவனங்களினதும் உதவியின் ஊடாகவும் அனர்த்தம் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்பட்டமைக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்பான அரசாங்கம் உதவி வழங்குவதனை பிரதான பாத்திரமாகவும், பொறுப்பாகவும் நாம் கருதுகின்றோம். அது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், அவர்களுடைய மீட்சிக்கு உதவி வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். பயனுறுதி மிக்க தடுத்தல் மற்றும் மறுசீரமைப்புக்கு உத்தியோகப்பூர்வ மற்றும் தன்னார்வ நடவடிக்கையின் கூட்டிணைவு சிக்கலானது என நாம் நம்புகின்றோம். இதன் பொருட்டு செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் தேசிய சங்கங்கள் மற்றும் வேறு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வெகுசன அதிகாரிகளுக்கு உதவி புரிவதில் அத்தியாவசியமான பங்கினை வகிக்கின்றனர். தேசிய இயலுமையானது போதிய அளவு இல்லாத போது, அரசாங்க நிதியு-தவியாளர்கள் மற்றும் பிராந்திய நிறுவனங்கள் உள்ளடங்கலாக அரசாங்கம் தமது பொறுப்புக்களை பூர்த்தி செய்வதற்கு உதவி வழங்கும் பரந்த சர்வதேச சமூகத்தின் பாத்திரத்தை நாம் உறுதி செய்கின்றோம். ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதே செஞ்சிலுவை குழுவினால் கட்டளை அளிக்கப்பட்ட நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் விசேட பாத்திரங்களை நாம் அங்கீகரிப்பதோடு, உதவியும் வழங்குகின்றோம்.

3. மனிதநேய நிறுவனங்கள் என்ற வகையில், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளையும் இயலுமைகளையும், மற்றும் அவர்களுடைய அரசாங்கங்கள் அல்லது கட்டுப்படுத்தும் அதிகாரங்களின் பொறுப்புக்கள் என்பன சார்ந்ததாக எமது பாத்திரத்தை நாம் வரையறுக்கின்றோம். பிரதான பொறுப்புக்களை உடையவர்களால் எப்போதும் முழுமையாக தமது பாத்திரத்தை நிறைவேற்ற முடிவதில்லை அல்லது அதனை நிறைவேற்ற அவர்கள் விரும்புவதில்லை என்ற யதார்த்தத்தை உதவி வழங்குவதில் நாம் புரிந்து கொண்டுள்ளோம். இதுவரையில், தவிர்க்க முடியாத மனிதநேயப் பணிகள் மற்றும் வேறு கோட்பாடுகளை எட்டுவதற்கான தொடர்ச்சியான பணியில், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும் மற்றும் உதவி வழங்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளுக்கு சாசனத்தில் குறிப்பிட்டவாறு நாம் உதவி புரிகின்றோம். மனிதநேய நிறுவனங்களின் பக்கச் சார்பற்ற, சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற பாத்திரத்தை மதிக்குமாறு அனைத்து

அரச மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களிடம் நாம் கோருகின்றோம். அத்துடன், தேவையற்ற சட்ட மற்றும் பிரயோக தடைகளை நீக்கி அவர்களுடைய பணியை முன்னெடுக்க வசதியளிக்குமாறும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி, பாதிக்கப்பட்ட மக்களை உரிய நேரத்தில் அடைந்து உதவி வழங்குவதற்கு உதவுமாறும் கோருகின்றோம்.

பொதுவான கோட்பாடுகள், உரிமைகள் மற்றும் கடமைகள்

4. அனர்த்தம் அல்லது மோதலால் பாதிக்கப்பட்ட பெண்களும், ஆண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் என அனைத்து மக்களுடைய உரிமைகளையும் மனிதநேய கோட்பாடு மற்றும் தவிர்க்க முடியாத மனிதநேயப் பணி என்பதன் அடிப்படையில் மனிதநேய நிறுவனங்கள் என்ற வகையில் எமது சேவைகளை வழங்குகின்றோம். சர்வதேச மனிதநேயச் சட்டம், மனித உரிமைகள் மற்றும் அகதிகள் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் உதவி தொடர்பான உரிமைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த சாசனத்தின் தேவைக்காக இந்த உரிமைகளை பின்வருமாறு நாம் விளக்குகின்றோம்.

- கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை
- மனிதநேய உதவிகளைப் பெறுவதற்கான உரிமை
- பாதுகாப்புக்கான உரிமை

சர்வதேச சட்டத்தில் இந்த உரிமைகள் மேற்குறிப்பிட்ட பதங்களில் விளக்கப்படாத போதிலும், கட்டமைக்கப்பட்ட சட்ட உரிமைகள் பலவற்றை அவை முன்னுரை செய்கின்றன. அத்துடன், தவிர்க்க முடியாத மனிதநேயப் பணிக்கும் முழுமையான துணை வழங்குகின்றன.

5. **கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையானது** சர்வதேச சட்டத்தில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. விசேடமாக, மனித உரிமைகளானது வாழ்வதற்கான போதிய தரத்துடன் மற்றும் சித்திரவதை அல்லது குரூரம், கொடூரமான அல்லது தரமற்ற சிகிச்சை/தண்டனை என்பவற்றிலிருந்து சுதந்திரத்துடன் வாழ்வதற்கான உரிமைகள் குறித்த அக்கறையை அளவிடுகின்றது. வாழ்க்கை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் சந்தர்ப்பங்களில் வாழ்க்கையை காப்பாற்றுவதற்கான கடமையை வாழ்வதற்கான உரிமை விளக்குகின்றது. வாழ்க்கையை காப்பாற்றும் உதவியின் ஏற்பாடுகளில் பின்தங்குவதோ அல்லது அயர்ச்சி அடைவதோ இந்த கடமையில் பொருத்தமானது அல்ல. கண்ணியம் என்பது உடல் நலன் சார்ந்தது மாத்திரமல்ல. பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் தனிநபர்களின் விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகள் உள்ளடங்கலாக, அவர்களுடைய மனித உரிமைகள், மனசாட்சி மற்றும் மத நம்பிக்கை சார்ந்த சுதந்திரம் போன்ற அனைத்து மனிதர்களுக்குமான கௌரவத்தை அது எதிர்பார்க்கின்றது.

6. **மனிதநேய உதவிகளை பெறுவதற்கான உரிமை** என்பது கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையின் அத்தியாவசியமான அம்சமாக உள்ளது. சர்வதேச சட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள போதிய உணவு, நீர், உடைகள், உறைவிடம் மற்றும் சிறந்த ஆரோக்கியத்திற்கு தேவையானவை

என்பன உள்ளடங்கலாக போதிய தரமான வாழ்க்கைக்கான உரிமையை இது விளக்குகின்றது. ஸ்பியரின் மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்கள் என்பன இந்த உரிமைகளை பிரதிபலிக்கின்றன. அத்துடன், விசேடமாக அனர்த்தம் அல்லது மோதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவியின் ஏற்பாடுகள் சம்பந்தப்பட்டதாக பிரயோக ரீதியான தோற்றப்பாட்டையும் வழங்குகின்றன. அரச அல்லது அரசு சாராத செயற்பாட்டாளர்கள் அவ்வாறான உதவிகளை வழங்காத சந்தர்ப்பங்களில், ஏனையோர் அந்த உதவியை வழங்குவதற்கு அவர்கள் அனுமதி அளிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். பாரபட்சமின்மை என்பதன் அடிப்படையிலேயே அவ்வாறான உதவிகள் வழங்கப்படல் வேண்டும். அந்த உதவிகள் தேவையின் அடிப்படையிலும், தேவைக்கான அளவின் அடிப்படையிலுமே வழங்கப்படல் வேண்டும். **பக்கச்சார்பின்மை** என்ற பரந்த கோட்பாட்டை இது பிரதிபலிக்கின்றது. வயது, பால்நிலை, இனம், நிறம், சாதி, பாலியல் அமைப்பு, மொழி, மதம், மாற்றுத் திறன், சுகாதார நிலை, அரசியல் அல்லது வேறு விருப்புக்கள், தேசிய அல்லது சமூக அடையாளம் என்பன உள்ளடங்கலாக தரத்தின் அடிப்படையில் எவரும் **பாரபட்சத்திற்கு** உள்ளாக்கப்படக் கூடாது.

7. **பாதுகாப்புக்கான உரிமையானது** ஐக்கிய நாடுகள் மற்றும் வேறு அரசாங்கங்களுக்கு இடையிலான நிறுவனங்களின் தீர்வுகளில் சர்வதேச சட்டத்தின் ஏற்பாடுகளில் மிகவும் முக்கியமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தமது சட்ட எல்லைக்குள் உள்ள அனைவரையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் இறைமையாகும். அனர்த்தம் அல்லது மோதல் சூழ்நிலைகளின் போது அகதிகளின் பாதுகாப்பு மற்றும் உள்ளக இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்பு என்பன உள்ளடங்கலாக பொதுமக்களின் பாதுகாப்பு என்பது மனிதநேய அக்கறை சார்ந்ததாக இருத்தல் வேண்டும். சட்டத்தில் அறிந்து கொண்டுள்ளவாறு, வயது, பால்நிலை அல்லது இனம் போன்ற தமது தரத்தின் காரணமாக சில மக்கள் துஷ்பிரயோகம் மற்றும் பாரபட்சத்தினால் முக்கியமாக பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் விசேட செயலேற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

இந்த சூழ்நிலைகளில் சிக்கியுள்ள மக்களை பாதுகாப்பதற்கான போதிய இயலுமைகளை கொண்டதாக சில அரசுகள் இல்லை. எனவே, அவ்வாறான சந்தர்ப்பங்களில் சர்வதேச உதவி பெறப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். சிவில் மக்களின் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் என நிர்ப்பந்திக்கும் சில சட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(i) சர்வதேச மனிதநேய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, **ஆயுத மோதலின் போது,** மோதலில் ஈடுபடாதவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் உதவி வழங்குவது தொடர்பில் விசேட சட்ட ஏற்பாடுகள் உள்ளன. விசேடமாக, 1949ஆம் ஆண்டின் ஜெனீவா பிரகடனமும், 1977ஆம் ஆண்டின் மேலதிக நெறி முறைகளும் சர்வதேச மற்றும் சர்வதேசமற்ற ஆயுத மோதலில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கான பொறுப்புக்களை விதிக்கின்றன.

தாக்குதல் மற்றும் பதில் தாக்குதலில் இருந்து சிவில் மக்களின் பொதுவான சட்ட விலக்களிப்பு குறித்து நாம் வலியுறுத்துகின்றோம். விசேடமாக, சிவில் மக்கள் மற்றும் போராளிகளுக்கு இடையிலான மற்றும் சிவில் மக்கள் மற்றும் இராணுவத்தினருக்கு இடையிலான **தனிமதிப்பு** கோப்பாடு முக்கியமானது. தாக்குதலில் அதிகாரம் மற்றும் **முன்னெச்சரிக்கையை** பயன்படுத்தும் **விகித சமத்துவத்தின்** கோப்பாடுகளை பிரயோகிப்பதற்கான கடமை: பாகுபாடற்ற அல்லது தமது தன்மை, ஏற்படுத்தும் இழப்பு அல்லது தேவையற்ற துன்பங்கள் என்பதன் அடிப்படையில் ஆயுதங்களின் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான கடமை: பக்கச்சார்பற்ற நிவாரணம் வழங்கப்படுவதற்கு அனுமதி வழங்குவதற்கான கடமை. இந்த அடிப்படை கோப்பாடுகள் தொடர்பில் கவனஞ் செலுத்த தவறியமையின் காரணமாகவே ஆயுத மோதல்களின் போது சிவில் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

(ii) தொந்தரவு அல்லது வன்முறையை எதிர்நோக்குபவர்களின் பாதுகாப்பு தொடர்பான **புகலிடம் கோருவதற்கான உரிமை** தொடர்ந்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அனர்த்தம் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்டவர்கள் பொதுவாக தமது பாதுகாப்புக்காக வீடுகளை விட்டு வெளியேறி, வேறு உதவியை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பினை பெற்றுக் கொள்ள முடியாதவர்கள், வேறு நாடுகளில் பாதுகாப்பை நாடி செல்வதற்கான நிர்ப்பந்தத்திற்கு, 1951ஆம் ஆண்டின் அகதிகளின் நிலை தொடர்பான சாசனத்தின் ஏற்பாடுகள் (திருத்தப்பட்டது) மற்றும் வேறு சர்வதேச, பிராந்திய உடன்படிக்கைகள், அடிப்படை பாதுகாப்பினை வழங்குகின்றன. தமது வாழ்க்கை, சுதந்திரம் அல்லது உடல் சார்ந்த பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள அல்லது சித்திரவதை/குரூரத்தை எதிர்நோக்கக் கூடிய, மனிதத் தன்மையற்ற அல்லது தரக் குறைவாக நடத்தப்படக் கூடிய/தண்டனை வழங்கப்படக் கூடிய சந்தர்ப்பம் காணப்படும் **நாட்டுக்கு ஒருவர் மீண்டும் திருப்பி அனுப்பப் படக் கூடாது என வலியுறுத்தும்** தஞ்சம் கோரியவர்களைச் சொந்த நாட்டில் ஒப்படைக்காமை தொடர்பான கோப்பாடே இதில் பிரதானமானதாக விளங்குகின்றது. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிராந்திய மற்றும் தேசிய சட்டங்கள் தொடர்பான 1998ஆம் ஆண்டு வழிகாட்டி கோப்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளக இடம்பெயர்ந்த மக்களுக்கும் இந்த கோப்பாடு பொருந்தும்.

எங்கள் பொறுப்பு

8. மனிதநேய செயற்பாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் பிரதான இடத்தை வகிக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில் எங்களுடைய சேவைகளை வழங்குகின்றோம். அவர்களுடைய தேவைகளை சிறப்பான வகையில் எட்டும் உதவிகளை வழங்குவதற்கு சமூக ரீதியாக விலக்கப்பட்ட மக்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட மக்களுடைய செயற்றிறன் மிக்க பங்குபற்றல் அத்தியாவசியம் என்பதனையும் அறிந்து வைத்துள்ளோம். அனர்த்தத்தை தடுப்பதற்கான, அதற்கு தயாராவதற்கான மற்றும் அதற்கு பதில் நடவடிக்கை எடுப்பதற்கான உள்ளூர் முயற்சிகளுக்கு உதவி வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். அத்துடன், மோதல் தவிர்ப்பு சம்பந்தப்பட்ட முயற்சிகளுக்கும் மற்றும்

அனைத்து மட்டங்களிலும் உள்ளூர் செயற்பாட்டாளர்களின் இயலுமையை மீளுறுதி செய்வதற்கும் எமது உதவிகளை வழங்குவோம்.

9. மனிதநேய உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகள் சில சந்தர்ப்பங்களில் எதிர்-பாராத மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை நாம் அறிந்து வைத்துள்ளோம். பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் மற்றும் அதிகாரசபைகளுடனான ஒத்துழைப்புடன், உள்ளூர் சமுதாயம் அல்லது சுற்றுச் சூழலில் மனிதநேய நடவடிக்கையின் காரணமாக ஏற்படக் கூடிய எந்தவொரு எதிர்மறையான தாக்கங்களையும் குறைப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். ஆயுத முரண்பாடுகளின் போது, மனிதநேய உதவிகள் வழங்கப்படும் விதத்தில் சிவில் மக்கள் மேலும் பலவீனமடையச் செய்யப்படலாம் அல்லது மோதலில் ஈடுபட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தரப்புக்களுக்கு எதிர்பாராத நலன்களை கொண்டு சேர்க்கலாம். அவ்வாறான மோசமான விளைவுகள் ஏற்படாதவாறு தடுப்பதற்கு நாம் பொறுப்பாக உள்ளோம். இவை அனைத்தும் மேலே குறிப்பிட்ட கோட்பாடுகளிலும் சுட்டிக்காட்டப்படும் விடயங்களாக உள்ளன.

10. இந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதநேய நடவடிக்கை கோட்பாடுகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்கள் மற்றும் அனர்த்த நிவாரணத்தில் (1994) ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒழுக்க நடத்தைக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட வழிகாட்டல்கள் என்பவற்றின் அடிப்படையில் நாங்கள் செயற்படுவோம்.

11. கண்ணியத்துடனான வாழ்க்கை மற்றும் மனிதநேய உதவிகளை வழங்குவதில் நிறுவனங்களின் அனுபவம் என்பன உள்ளடங்கலாக நிறுவனங்களின் ஆகக் குறைந்த தேவைகளின் புரிந்துணர்வின் அடிப்படையில் ஸ்பியரின் மிக முக்கியமான தரங்களும், அடிப்படைத் தரங்களும் இந்த சாசனத்தின் பொதுவான கோட்பாடுகளுக்கு பிரயோக ரீதியான சாரம்சத்தை வழங்குகின்றன. காரணிகளின் விஸ்தீரணத்தின் அடிப்படையில் தரங்கள் எட்டப்படும் நிலை தங்கியுள்ள போதிலும், அவற்றில் பெரும்பாலானவை எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகும். அவற்றை அடைவதற்கு தொடர்ச்சியாக முயற்சி செய்வதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அதன் அடிப்படையில் பொறுப்புடையவர்களாக இருப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் நிதியுதவி வழங்கும் அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கலாக அனைத்து தரப்பினரும் ஸ்பியரின் மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்கள் என்பவற்றை ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களாக ஏற்புறுதி செய்யுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

12. மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்கள் என்பவற்றை பின்பற்றுவதன் மூலம், அனர்த்தங்கள் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்கள் போதிய நீர், தேகாரோக்கியம், உணவு, போஷாக்கு, உறைவிடம் மற்றும் சுகாதார பராமரிப்பு என்பன உள்ளடங்கலாக கண்ணியத்துடன் வாழல் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுப்பதற்கு நாம் பொறுப்புடையவர்களாவோம். இதன் அடிப்படையில், அரசுகள் மற்றும் வேறு தரப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்களை நோக்கிய தமது ஒழுக்க மற்றும் சட்ட பொறுப்புக்களை அடைவதனை நாம் தொடர்ச்சியாக பரிந்துரை செய்து வருகின்றோம். எங்களுடைய தரப்பில் எங்களுடைய பொறுப்புக்களை உள்ளூர் சூழ்நிலையின் மதிப்பீட்டாய்வு,

கண்காணித்தல் என்பன ஊடாக மிக முக்கியமான தரங்களிலும் அடிப்படைத் தரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகவலின் வெளிப்படைத் தன்மையையும், தீர்மானம் எடுத்தலையும் வேறு சம்பந்தப்பட்ட செயற்பட்டாளர்களுடன் பயனுறுதி மிக்க ஒத்துழைப்புடனும், ஒருங்கிணைப்புடனும் அனைத்து மட்டங்களிலும் பயனுறுதி மிக்கதாக, பொருத்தமானதாக மற்றும் நம்பகத் தன்மையுடையதாக மாற்றுவதற்கு நாம் பொறுப்பேற்கின்றோம். விசேடமாக, பாதிக்கப்பட்ட மக்களின் செயற்றிறன் மிக்க பங்குபற்றலை எதிர்பார்த்து அவர்களுடன் பங்காளித்துவத்துடன் பணியாற்றுவதற்கு நாம் பொறுப்புடையவர்களாக உள்ளோம். உதவி தேவையாக உள்ளவர்களுக்கு அதனை வழங்குவதே எமது அடிப்படை பொறுப்பாக உள்ளது.

பாதுகாப்பு கோட்பாடுகள்

இந்த அத்தியாயத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

மனிதநேய நடவடிக்கை என்பது பாதுகாப்பு மற்றும் உதவி என்ற இரண்டு பிரதான விடயங்களை உள்ளடக்கியது. இந்த கையேட்டின் பெரும்பாலான பகுதிகள், விசேடமாக தொழில் நுணுக்க அத்தியாயங்கள், உதவி என்ற வகையின் கீழ் வருகின்றன. அதேவேளை, இந்த அத்தியாயம் பாதுகாப்பு தொடர்பாக கவனஞ் செலுத்துகின்றது. மனிதநேய சாசனத்தில் இருந்து கட்டியெழுப்பப்படும் அது வன்முறை அல்லது பலாத்காரம் என்பவற்றின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளவர்களின் பாதுகாப்புக்கு எவ்வாறு மனிதநேய நிறுவனங்கள் பங்களிக்க முடியும் என்ற கேள்விக்கு பதிலளிக்கின்றது. மிக முக்கியமாக, உதவிக்கான பிரவேசம் உள்ளடங்கலாக சாசனத்தில் விளக்கப்பட்டுள்ள உரிமைகளை நிறைவேற்றல் மற்றும் அதற்கான மதிப்பை வழங்குவதனை உறுதி செய்வதற்கான நிறுவனங்களின் பாத்திரங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துகின்றது.

இந்த அத்தியாயம் இரண்டு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது:

- அறிமுகம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு உதவுபவர்கள் மற்றும் அவர்களுடைய உரிமைகளை மதிக்கப்படுவதனை உறுதி செய்பவர்கள் என மனிதநேய மறுசீரமைப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரதும் பொறுப்புக்களை விளக்குகின்றது. .

- நான்கு பாதுகாப்பு கோட்பாடுகள் அனைத்து மனிதநேய நடவடிக்கைகளை வலுப்படுத்தி, மனிதநேய மறுசீரமைப்பு சூழ்நிலையில் பாதுகாப்புக்கான அடிப்படை அம்சங்களை உள்ளடக்குகின்றது. அவை வழிகாட்டல் குறிப்புக்களினால் இணைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பில் மனிதநேய நிறுவனங்களின் பாத்திரத்தை அவை மேலும் விளக்குகின்றன. குறிப்புதவிகள் பகுதியில் பாதுகாப்பு தொடர்பில் மிகவும் முக்கியமான வேறு தரங்கள் மற்றும் மூலாதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

அறிமுகம் 35

பாதுகாப்பு கோட்பாடுகள். 40

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை 44

மனிதநேய சாசனம்

பாதுகாப்பு கோட்பாடுகள்

கோட்பாடு 1	கோட்பாடு 2	கோட்பாடு 3	கோட்பாடு 4
உங்களுடைய நடவடிக்கைகளின் விளைவாக மேலதிக தீங்கு ஏற்படாது தவிர்த்தல்	பக்கச்சார்பற்ற உதவிகள் மக்களுக்கு கிடைப்பதனை உறுதி செய்தல்	வன்முறை அல்லது பலாத்காரம் காரணமாக ஏற்படும் பௌதீக மற்றும் உளவியல் தீங்கிலிருந்து மக்களை பாதுகாத்தல்	துஷ்பிரயோகத்தில் இருந்து மீட்சி பெறுவதற்கு உரிமைகளை பெற்றுக் கொள்ளல், நட்டஈடு பெற்றுக் கொள்ளலுக்கு உதவுதல்.

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கள்

அறிமுகம்

பாதுகாப்பு மற்றும் மனிதநேய மறுசீரமைப்பு

பாதுகாப்பு என்பது, அனர்த்தம் அல்லது ஆயுத மோதலால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் உரிமைகள் என்பவற்றுடன் தொடர்புடைய அக்கறைகளாகும். மனிதநேய மறுசீரமைப்பில் சம்பந்தப்பட்டுள்ள சில முக்கியமான அடிப்படை உரிமைகளை மனிதநேய சாசனம் பொழிப்புரை செய்கின்றது. பாதுகாப்பு எண்ணக்கருவில் இருந்து மனிதநேய பயற்சிக்கான உரிமைகளை விளக்குவது தொடர்பில் இந்த அத்தியாயம் கவனஞ் செலுத்துகின்றது. அத்துடன், விசேடமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் தீங்கு ஏற்படாத வகையில் பாதுகாப்பு நிறைந்த நிலையை அடைவதற்கு அவர்கள் மக்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து நிறுவனங்கள் தவிர்க்க வேண்டிய விடயங்கள் குறித்து கவனஞ் செலுத்துகின்றது. பல்வேறுபட்ட வன்முறையிலும், பலாத்காரத்திலிருந்தும் சுதந்திரம் மற்றும் திட்டமிடப்பட்ட கையறு நிலையிலிருந்து சுதந்திரம் என்பன தொடர்பில் இந்த சூழ்நிலையில் மிக முக்கியமான மனிதநேய பாதுகாப்பு அக்கறை கொள்கின்றது.

அனைத்து மனிதநேய நடவடிக்கைகளையும் தெரிவிக்கும் **நான்கு பிரதான அடிப்படை பாதுகாப்பு கோட்பாடுகள்** தொடர்பில் இவை கவனஞ் செலுத்துகின்றன:

1. உங்களுடைய நடவடிக்கைகளின் காரணமாக மக்களுக்கு மேலும் தீங்கு ஏற்படுவதனை தவிர்த்தல்.

2. தேவையின் அடிப்படையில் பக்கச்சார்பற்ற உதவி மற்றும் பாரபட்சமின்மை என்பவற்றை மக்களுக்கு உறுதி செய்தல்.

3. வன்முறை மற்றும் பலாத்காரத்தினால் அதிகரிக்கக் கூடிய உடலியல் மற்றும் உளவியல் சார் தீங்குகளில் இருந்து மக்களை பாதுகாத்தல்.

4. மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும், நிவாரணங்களை பெற்றுக் கொள்ளவும், துஷ்பிரயோகத்தின் தாக்கத்தில் இருந்து மீட்சி பெறவும் உதவுதல்.

மனிதநேய மறுசீரமைப்பு என்ற சூழ்நிலையில், இந்த நான்கு கோட்பாடுகளும் மோதல் அல்லது அனர்த்த காலங்களின் போது மக்கள் பொதுவாக எதிர்நோக்கும் மிகவும் தீவிரமான அச்சுறுத்தல்களை பிரதிபலிக்கின்றன. வழிகாட்டற் குறிப்புக்கள், அதனுடன்

சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் தெரிவுகளையும், குறிப்பிடத்தக்க பாதுகாப்புத் தேவைகளையும் நிறுவனங்களுக்கு வழங்குகின்றன.

மனிதநேய சாசனத்தில் நிறுவப்பட்டுள்ள உரிமைகளின் தொகுதியின் பொழிப்பினை நான்கு பாதுகாப்பு கோட்பாடுகளும் பின்பற்றுகின்றன: கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, மனிதநேய உதவிக்கான உரிமை மற்றும் பாதுகாப்புக்கான உரிமை.

பாதுகாப்பு கோட்பாடுகளை புரிந்து கொள்ளல்

பின்வருவன பாதுகாப்பு கோட்பாடுகளை விளக்கக் கூடிய மிகவும் சுருக்கமான வழிகாட்டல் குறிப்புக்கள்:

கோட்பாடு 1 (தீங்கு விளைவித்தலை தவிர்த்தல்) மனிதநேய மறுசீரமைப்பின் காரணமாக எழுந்துள்ள அல்லது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அக்கறைகளை அடையாளப்படுத்தல். சாசனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, மனிதநேய மறுசீரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும், அனர்த்தம் அல்லது ஆயுத முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் தீங்கு ஏற்படாதவாறு தவிர்ப்பதற்கான அனைத்து விடயங்களையும் முன்னெடுக்க வேண்டும். உதாரணமாக, பாதுகாப்பற்ற பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உறைவிடங்களை அமைத்துக் கொடுத்தல்.

கோட்பாடு 2 (பக்கச்சார்பற்ற உதவிக்கான பிரவேசத்தை உறுதி செய்தல்) தேவையுள்ள அனைவருக்கும் மனிதநேய உதவி கிடைக்கக் கூடியதாக இருப்பதனை உறுதி செய்வதற்கான பொறுப்பு. விசேடமாக, மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அரசியல்∴வேறு பின்புலத்தின் அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு உதவி கிடைக்கக் கூடியதாக இருப்பதனை உறுதி செய்தல். தேவையான உதவிக்கான பிரவேசத்தை மறுத்தல் என்பது பாதுகாப்பு சார்ந்த மிகவும் முக்கியமான அக்கறையாகும். இதில் உதவி வழங்குவதன் பொருட்டு மனிதநேய நிறுவனங்களுக்கு பாதுகாப்பான அனுமதி மறுக்கப்படுகின்றமையும் உள்ளடங்கும் (ஆனால் இது மட்டுப்படுத்தப்பட்டது அல்ல).

கோட்பாடு 3 (வன்முறையில் இருந்து மக்களை பாதுகாத்தல்) வன்முறையில் இருந்து பாதுகாத்தல் மற்றும் ஒருவரின் விருப்பத்திற்கு எதிராக நடப்பதற்கு வற்புறுத்தப்படல் அல்லது தூண்டப்படலில் இருந்து பாதுகாத்தல் என்பனவாகும். உதாரணமாக, ஆயுதங்களை ஏந்தச் செய்தல், ஒரு இடத்திலிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தல் அல்லது ஒரு இடத்திலிருந்து நகர்ந்து செல்லவிடாது தடுத்தல், அல்லது கீழ்தரமாக நடத்தல் அல்லது தண்டனை வழங்கல் போன்ற விடயங்கள் உள்ளடங்கும். அச்சத்தை பரவச் செய்தல் மற்றும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பயங்கரம்∴அச்சம் என்பன உள்ளடங்கலாக உடலியல் மற்றும் உளவியல் தீங்குகளை தடுத்தல்∴தணித்தல் என்பவற்றுடன் சார்ந்த அக்கறைகளாகும்.

கோட்பாடு 4 (உரிமைகளைப் பெற்றுக் கொள்ளல், துஃபிரயோகத்தில் இருந்து நிவாரணம் மற்றும் மீட்சியை பெற்றுக் கொள்வதற்கு உதவுதல்) சட்ட நிவாரணம், சொத்துக்களுக்கான இழப்பீடு அல்லது நட்டஈடு போன்ற நிவாரணங்களை பெற்றுக் கொள்வதற்கான தமது உரிமைகளை மற்றும் பிரவேசத்தினை பாதிக்கப்பட்ட மக்கள் பெற்றுக் கொள்வதற்கு

மனிதநேய நிறுவனங்கள் உதவி புரிய வேண்டிய பாத்திரத்தை விளக்குகின்றது. பாலியல் பலாத்காரம் போன்ற தாக்கங்களில் இருந்து மக்கள் மீண்டு வருவதற்கு உதவும் விடயங்களையும் இது உள்ளடக்கியுள்ளது. மிகவும் முக்கியமாக, உடலியல் மற்றும் உளவியல், சமூக மற்றும் பொருளாதார துஷ்பிரயோகத்தின் தாக்கங்களிலிருந்து மக்கள் மீண்டு வருவதற்கு உதவுதல்.

வழிகாட்டல் குறிப்புக்களுடன் இணைந்ததாக, அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பதற்கு மனிதநேய நிறுவனங்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் என்ன செய்யலாம் என்பன தொடர்பில் நான்கு பாதுகாப்பு கோட்பாடுகளும் விளக்குகின்றன. ஆனால், இந்த சூழ்நிலையில் நிறுவனங்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன பொதுவாக இரண்டாம் நிலையானவை என்பதனை புரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியம். சாசனம் குறிப்பிடுவது போல், அரசு அல்லது வேறு சம்பந்தப்பட்ட அதிகார சபைகளின் பிரதான கடமையுடன் சம்பந்தப்பட்டதாக குறித்த பாத்திரங்கள் நோக்கப்படல் வேண்டும். உதாரணமாக, பிராந்தியத்தை கைப்பற்றும் அல்லது கட்டுப்படுத்தும் முரண்பாட்டின் தரப்புக்களின் குறித்த அதிகாரங்கள் தமது பிராந்தியத்திற்குள் அல்லது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்களின் நலனுக்கான முறைசார், சட்ட பொறுப்புக்களை தன்னகத்தே கொண்டிருக்கும். மிகவும் முக்கியமாக, ஆயுத முரண்பாட்டில் இருந்து சிவில் மக்களின் பாதுகாப்பு.

பிரதானமாக, பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பினை நடவடிக்கை அல்லது தடைகள் ஊடாக உறுதி செய்வது இந்த அதிகாரங்களின் மிகவும் முக்கியமான கடமையாகும். அதனை முன்னெடுக்குமாறு ஊக்குவித்தல் மற்றும் ஏற்கச் செய்தல் நிறுவனங்களின் பிரதான பாத்திரமாகும். அத்துடன், அதிகாரிகள் தவறும் பட்சத்தில், சூழ்நிலைகளை கையாளுவதற்கு மக்களுக்கு உதவி செய்ய வேண்டியதும் நிறுவனங்களின் பொறுப்பாகும்.

பாதுகாப்பு கோட்பாடுகளை பிரயோகத்தில் பயன்படுத்தல்

இந்த கையேட்டின் தரங்களை எட்டுவதற்கு, அனைத்து மனிதநேய நிறுவனங்களும் பாதுகாப்பு கோட்பாடுகளினால் வழிகாட்டப்படல் வேண்டும். அவர்களிடம், உறுதியான பாதுகாப்பு கட்டளை அல்லது பாதுகாப்பில் நிபுணத்துவம் பெற்ற இயலுமை இல்லாத போதிலும் இந்த பாதுகாப்பு கோட்பாடுகள் துணை புரியும்.

கோட்பாடுகள் முழுமையானவை அல்ல: சூழ்நிலைகளின் அடிப்படையில் எந்த நிறுவனங்களால் அதனை எட்ட முடியும் என்பது மட்டுப்படுத்தப்படுகின்றது. மிக முக்கியமாக, கோட்பாடு 3இன் அம்சங்கள் நிறுவனத்தின் இயலுமையின் அடிப்படையிலானது அல்ல. எவ்வாறாயினும், கோட்பாடுகள் உலகளாவிய மனிதநேய அக்கறைகளை பிரதிபலிக்கின்றன. அது எல்லா சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும்.

பலவீனமான குழுக்கள் என்பதன் அடிப்படையில் பல மனிதநேய நிறுவனங்கள் பாதுகாப்பு கட்டளைகள் அல்லது விசேட பாத்திரங்களை கொண்டிருக்கின்றன.

இவற்றில் பல நிறுவனங்கள் எமது பாதுகாப்பு நடவடிக்கைகளை தனியான நிகழ்ச்சிகள் அல்லது செயற்றிட்டங்களில் முன்னெடுக்கின்றன. அல்லது "பாதுகாப்பு குழு" அல்லது "பாதுகாப்பு துறை" என்பதற்குள் ஒதுக்கப்பட்ட வளங்கள் மற்றும் நிபுணத்துவ ஊழியர்கள் என்பவற்றுடன் வடிவமைத்துள்ளன. 2011ஆம் ஆண்டு ஒருங்கிணைப்பு கட்டமைப்புக்களின் பின்வரும் பிரிவுகளுக்கான அக்கறை சார்ந்த மையப்புள்ளிகளை உலக பாதுகாப்புக் குழு உள்ளடக்கியது

- சிறுவர் பாதுகாப்பு
- பால்நிலை சார்ந்த வன்முறை
- வீடமைப்பு, காணி மற்றும் சொத்து
- கண்ணிவெடி அகற்றல்
- சட்ட விதி மற்றும் நீதி

பாதுகாப்பின் சில பகுதிகளை இந்த பட்டியல் விளக்குகின்றது. ஆனால் இது முழுமையான பட்டியல் அல்ல. மேலும் பல பாதுகாப்பு அக்கறைகள் உள்ளன என்பதனை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

பொது மக்களினதும், உள்ளக இடம்பெயர்ந்தவர்களினதும் பாதுகாப்பு அல்லது இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு போன்ற வேறு பல பாதுகாப்பு தலைப்புக்களுக்கு, விசேடமான தரங்கள் மற்றும் வழிகாட்டிகள் என்பன ஸ்பியர் முயற்சிகள் தவிர்ந்த முயற்சிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை அத்தியாயத்தின் இறுதியில் குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்பு பகுதியில் தரப்பட்டுள்ளன. குறித்த தரங்களை எட்டுவதற்கான முயற்சியாகவே இந்த அத்தியாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கையின் வேறுபட்ட வடிவங்கள்

நான்கு பாதுகாப்பு கோட்பாடுகளும் நிபுணத்துவ பாதுகாப்பு நடவடிக்கைக்கு பிரயோகிக்கப்படும். அத்துடன், நடவடிக்கைகள் வேறுபட்டு இருக்கின்ற போதிலும் பொதுவான மனிதநேய நடவடிக்கைகளுக்கும் பிரயோகிக்கப்படும். அனைத்து மனிதநேய நிறுவனங்களினதும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள், பின்வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பான மூன்று வடிவங்களின் அடிப்படையில் பரந்தளவில் பிரிக்கப்படலாம். இவை ஒன்றில் ஒன்று தங்கியுள்ளதுடன், ஒரே சந்தர்ப்பத்திலும் முன்னெடுக்கப்படக் கூடியன:

- **தடுத்தல்:** அச்சுறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களினால் ஏற்படும் பாதிப்பினை குறைப்பதற்கான உடலியல் அச்சுறுத்தல்கள் அல்லது உரிமை

மீறல்களை தடை செய்தல். சர்வதேச சட்டத்திற்கு இணக்கமான பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் என அனைத்து வயதினரையும் சேர்ந்தவர்களுக்கு தமது உரிமைகள் மதிக்கப்படும் சூழல் ஒன்றை வழங்குவதற்கான முயற்சிகளே பாதுகாப்பு அச்சுறுத்தல்களை தடை செய்தல் என்பதில் உள்ளடங்குகின்றன.

- **பொறுப்பு:** வன்முறை சம்பவங்கள் மற்றும் வேறு உரிமைகள் சார்ந்த துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துவதன் ஊடாக தொடர்ச்சியான வன்முறைகளை நிறுத்துதல்.

- **நிவாரணமளித்தல்:** நட்ட ஈடு மற்றும் புனர்வாழ்வு என்பன ஊடாக, சுகாதார பராமரிப்பு, உளச்சமூக உதவி, சட்ட உதவி அல்லது வேறு சேவைகள் மற்றும் உதவிகளை வழங்குதல் மூலம் நடப்பு அல்லது முன்பு இடம்பெற்ற துஷ்பிரயோகங்களுக்கு நிவாரணம் வழங்கல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கிடைக்கக் கூடிய நிவாரணம் மற்றும் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்தல்.

பரிந்துபேசல் என்பது பொது மக்கள் சார்ந்ததாக இருந்தாலும் அல்லது தனியார் சார்ந்ததாக இருந்தாலும், நடவடிக்கையின் இந்த மூன்று வடிவங்களையும் ஒன்றிணைக்கும் பொதுவான அம்சமாக உள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் மீதான அச்சுறுத்தல்கள் முன்கூட்டியே எடுக்கப்பட்ட தீர்மானங்கள், நடவடிக்கைகள் அல்லது கொள்கைகள் காரணமாகவே எழுகின்றன. அத்துடன், சம்பந்தப்பட்ட பாதுகாப்பு மறுசீரமைப்புக்களில் பல அவ்வாறான நடத்தைகள் மற்றும் கொள்கைகளை மாற்றுவதற்கு முயற்சி செய்கின்றன. மனிதநேய நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை நிறுவனங்கள் போன்ற ஏனையோரின் பரிந்து பேசல் செயற்பாடுகள், குறித்த மாற்றத்தில் செல்வாக்கு செலுத்த முயற்சி செய்யும் பிரதான அம்சமாக உள்ளன. துஷ்பிரயோகங்கள் தொடர்பில் குரல் எழுப்புதல் மற்றும் செயற்பாட்டு ரீதியான அங்கத்தை வகிக்கும் தேவை என்பன காரணமாக மனிதநேய நிறுவனங்களுக்கு பதட்டம் இருக்கலாம். விடயம் ஒன்று தொடர்பில் அவர்கள் எவ்வாறு பரிந்து பேசலை முன்னெடுக்க முடியும் என்பதில் இந்த பதட்டங்கள் செல்வாக்கு செலுத்தலாம்.

பரிந்து பேசல் முன்னெடுக்கப்படும் போது, அதன் வெற்றியானது பொதுவாக சரியான ஆதாரங்களுக்கான பிரவேசம், பங்குதாரர் பகுப்பாய்வு மற்றும் முழுமையான சூழ்நிலை பகுப்பாய்வு என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இருப்பினும் அது, மிக முக்கியமான தரங்களின் மதிப்பாய்வு தரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (பக்கம் 61இல் மிக முக்கியமான தரம் 3இனைப் பார்க்கவும்). இதனை கீழே உள்ள வழிகாட்டல் குறிப்புக்கள் தெளிவாக விளக்குகின்றன. சாட்சியங்களின் கருத்துக்கள் போன்ற எந்தவொரு ஆதாரத்தினதும் பயன்பாடானது, தகவலின் மூலத்தை அடையாளங் காண்பதற்கு, அது அதிக கூருணர்வு மிக்கதாக இருக்கின்ற நிலையில், மக்களை அது சவாலுக்கு உட்படுத்தி விடலாம். அத்துடன், மிகுந்த அவதானத்துடன் கையாளப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 1இனைப் பார்க்கவும், வழிகாட்டல் குறிப்பு 8, பக்கம் 35)

பாதுகாப்பு கோட்பாடுகள்

பாதுகாப்பு கோட்பாடு 1: உங்களுடைய நடவடிக்கையினால் மக்களுக்கு மேலும் தீங்கு ஏற்படுவதனை தவிர்த்தல்

தமது இடையீட்டின் காரணமாக மோசமான தாக்கம் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு மனிதநேய மறுசீரமைப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விசேடமாக, அதிகரித்த அபாயம் அல்லது அவர்களது உரிமைகள் மீறப்படும் சூழ்நிலைகளுக்கு மக்கள் உள்ளாக்கப்படுவதனை குறிப்பிடலாம்.

இந்த கோட்பாட்டில் பின்வரும் அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன:

- மனிதநேய உதவியின் வடிவம் மற்றும் அது வழங்கப்படும் சுற்றுச் சூழலானது, உடலியல் அனர்த்தங்கள், வன்முறை அல்லது வேறு உரிமை மீறல்களுக்கு மக்களை உள்ளாக்கப்படக் கூடாது.
- உதவி மற்றும் பாதுகாப்பு முயற்சிகள் பாதிக்கப்பட்ட மக்களின் சுய பாதுகாப்புக்கான இயலுமையை குறைவானதாக மதிப்பிடக் கூடாது.
- தகவல் வழங்குபவரின் அல்லது தகவல் மூலம் அடையாளங் காணப்படக் கூடியவரின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்காத வகையில் மனிதநேய நிறுவனங்கள் கூருணர்வு மிக்க தகவல்களை கையாள வேண்டும்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு மற்றும் நலன் என்பவற்றிக்காக **சூழ்நிலையை மதிப்பாய்வு செய்து, மனிதநேய நடவடிக்கைகளினால் ஏற்படக் கூடிய விளைவுகளை எதிர்பார்த்தல்** வேண்டும்.

1. உரிமை மீறலின் போது **குற்றத்திற்கு பொறுப்பானவராக இருப்பதனை தவிர்த்தல்**: வேறுபட்ட தீர்மானங்கள் மற்றும் தெரிவுகள் இருக்கலாம். உதாரணமாக, தமது விருப்பத்திற்கு மாறாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்குவதா என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் நிலை. இவ்வாறான தீர்மானங்கள், சம்பவத்திற்கு, சம்பவம் என்பதன் அடிப்படையில்

எடுக்கப்படல் வேண்டும். ஆனால், சூழ்நிலைகள் மாறுவதற்கு அமைய அவை எப்போதும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

2. **சரிபார்த்தல் பட்டியல்:** நடவடிக்கைகளை பகுப்பாய்வு செய்யும் போது, பொதுவாக பின்வரும் கேள்விகளுக்கு அமைய செயற்பட முயற்சிக்கவும். ஒட்டு மொத்த மனிதநேய மறுசீரமைப்பு மற்றும் விசேடமான நடவடிக்கைகள் என்பன தொடர்பில், அவை சரிபார்த்தல் பட்டியலாக உதவி புரியலாம்.

- உங்களுடைய நடவடிக்கையின் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் எதனைப் பெற்றுக் கொள்வர்?

- மக்களின் பாதுகாப்புக்கான உங்கள் நடவடிக்கையின் எதிர்பாராத பாதகமான விளைவுகள் எவையாக இருக்கலாம், மற்றும் இந்த விளைவுகளை எவ்வாறு நாம் தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம்?

- பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் சாத்தியமான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் கவனஞ் செலுத்தியுள்ளனவா? தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் மக்களின் சுய முயற்சிகளை அது குறைத்து மதிப்பிடுகின்றதா?

- இந்த நடவடிக்கைகள் எந்த குழுவுக்கும் எதிராக பாரபட்சத்தினை வெளிப்படுத்துகின்றதா அல்லது அவர்களுக்கு உதவி வழங்குவதற்கு தாமதமாகின்றதா? வரலாற்று ரீதியாக ஒதுக்கப்பட்ட அல்லது பாரபட்சம் காட்டப்பட்ட மக்களின் உரிமைகளை இந்த நடவடிக்கைகள் பாதுகாக்கின்றதா?

- அவ்வாறான குழுக்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலில், சமுதாயத்துடனான மற்றும் அதற்கு அப்பாலான உறவு முறையில் ஏற்படக் கூடிய தாக்கம் என்ன?

- சமுதாயத்திற்குள் உள்ள அல்லது அயல் சமுதாயத்துடன் உள்ள பிரிவுகளை நடவடிக்கைகள் தூண்டி விடுகின்றனவா?

- நடவடிக்கைகள் ஆயுதக் குழுக்களின் அல்லது வேறு செயற்பாட்டாளர்களின் நிலைக்கு மறைமுகமான அதிகாரம் அல்லது வலுப்படுத்தலை வழங்குகின்றதா?

- நடவடிக்கைகள் குற்றவியல் துஷ்பிரயோகத்துடன் சம்பந்தப்பட்டதாக உள்ளதா?

3. ஒட்டுமொத்த மறுசீரமைப்பு மற்றும் முக்கியமான நடவடிக்கைகளின் சாத்தியமான, பாதகமான விளைவுகளை மதிப்பீடு செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின்

அல்லது அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான நிறுவனங்களின் **வேறுபட்ட பாகங்களை கலந்தாய்தல்.**.

4. **உதவிவழங்கப்படும் வடிவமானது** தாக்குதலில் மேலும் பாதிக்கப்படுபவர்களாக மக்கள் மாறுவதற்கு வழி வகுக்கலாம். உதாரணமாக, பெறுமதி மிக்க நிவாரணப் பொருட்களான உலர் உணவுப் பொருட்கள் கொள்ளையிடப்படலாம். இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீங்கு மற்றும் நட்டம் ஏற்படும். இவ்வாறான அச்சுறுத்தல் அதிகளவில் காணப்படும் சூழ்நிலைகளில் மாற்று வழியிலான வடிவத்தில் (உ-ம்: சமைக்கப்பட்ட உணவுகள்) உதவிகளை வழங்குவது தொடர்பில் கவனஞ் செலுத்தவும். பாதிக்கப்பட்ட சமூகம் விரும்பும் வடிவத்தில் உதவிகள் வழங்கப்படல் வேண்டும்..

5. மக்கள் சம்பந்தப்பட்டதாக பார்க்கும் போது **உதவி வழங்கப்படும் சுற்றுச் சூழலானது** இயலுமான வரையில், பாதுகாப்பானதாக இருக்க வேண்டும். சேவை தேவையாகவுள்ள மக்கள் உதவியைப் பெறுவதற்காக அபாயம் மிகுந்த அல்லது நீண்ட தூரத்துக்கு பயணஞ் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படக் கூடாது. முகாம்கள் அல்லது வேறு உறைவிடங்கள் அமைக்கப்படும் போது, தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய அல்லது வேறு அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய பகுதிகளில் இருந்து தொலைவில் அமைக்கப்படல் வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் சுய-பாதுகாப்பு

6. தம்மை, தமது குடும்பத்தினரை மற்றும் தமது சமூகத்தை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய மக்களின் **தேவைகளைப் புரிந்து கொள்ளல்.** சமுதாய சுய உதவி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கல் (பாதுகாப்பு கோட்பாடு 3ஐப் பார்க்கவும், வழிகாட்டல் குறிப்புக்கள் 13-14, **பக்கம் 40**). பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயரல், ஆயுதக் குழுக்களுடனான தொடர்புகளை தவிர்த்தல் என்பன உள்ளடங்கலாக தம்மையும் மற்றும் ஏனையோரையும் காப்பாற்றிக் கொள்வதற்கான மக்களின் இயலுமையை உள்ளடக்கமாக கொண்டதாக மனிதநேய நிறுவனங்கள் இடையீட்டினை முன்னெடுக்கும் வழிவகைகள் இருக்கக் கூடாது. .

7. **வாழ்வதற்கு அவசியமான பொருட்களின் தேவைகள்:** மக்கள் தமது வாழ்க்கைக்கு தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான பாதுகாப்பான தெரிவினை கண்டறிவதற்கு மக்களுக்கு உதவுதல். உதாரணமாக, ஆபத்தான, கஷ்டமான பயணங்களை மேற்கொள்ளாது நீர், விறகு அல்லது வேறு சமையல் எண்ணெய் போன்ற தமது நாளாந்த தேவைகளை அடைவதற்கு உதவக் கூடிய பொருட்கள் இதில் உள்ளடக்கப்படலாம். இது வயதானவர்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத் திறனுடையவர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும்.

கூருணர்வு மிக்க தகவல்களை முகாமை செய்தல்.

8. **பாதுகாப்பு சம்பந்தப்பட்ட தரவுகள் கூருணர்வு மிக்கதாக இருக்கலாம்.** சாட்சியங்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் குறிப்பிட்ட தகவலின் அந்தரங்கத்

தன்மை தொடர்பில் அறிந்து கொள்ளும் போது, தமது ஊழியர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து மனிதநேய நிறுவனங்கள் தெளிவான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வைத்திருக்க வேண்டும். சாட்சியங்கள், சம்பவங்கள் அல்லது குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொருத்தமான அறிக்கையிடல் தொடர்பில் ஊழியர்களுக்கு விளக்கமளிக்கப்படல் வேண்டும். .

9. **கூருணர்வு மிக்க தகவல்களை குறித்தல்:** சம்பந்தப்பட்ட பாதுகாப்பு கட்டளையுடன் பொருத்தமான செயற்பாட்டளார்களின் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களை குறிக்கும் போது கவனமாக இருத்தல். தகவல் கிடைக்கக் கூடிய பகுதிகளைவிட வேறு பகுதிகளிலும் இந்த செயற்பட்டாளர்கள் இருக்கலாம். .

10. **கூருணர்வு மிக்க தகவல்களை குறித்தல் சம்பந்தமான கொள்கையானது,** உரிய இடத்தில் இருத்தல் வேண்டும். அத்துடன், அதில் சம்பவ அறிக்கைகள் அல்லது முறைமை பகுப்பாய்வு என்பன உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது கூருணர்வு மிக்க தகவல்களை எவ்வாறு முகாமை செய்வது மற்றும் எவ்வாறான சூழ்நிலைகளில் தகவல்கள் குறிக்கப்படல் வேண்டும் என்பன தொடர்பில் விளக்க வேண்டும். இயலுமான வரையில், குறித்த தகவல்களை பயன்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர்களின் அனுமதியினை பெறல் வேண்டும். தகவல் தொடர்பான எந்தவொரு குறிப்புதவியும் தகவல் மூலம் அல்லது சம்பந்தப்பட்ட நபரை அபாயத்தில் தள்ளி விடக்கூடாது.

11. **குறிப்பிடத்தக்க துஷ்பிரயோகங்கள் மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்கள்** தெளிவானதாக இருக்கும்பட்சத்தில் மாத்திரமே சேகரிக்கப்படல் வேண்டும். தேவையான விளக்கங்களும் பயன்பாட்டின் அடிப்படையில் விளக்கப்படல் வேண்டும். அவ்வாறான பாதுகாப்பு தகவல்கள் நிறுவனங்களினால், பாதுகாப்பு கட்டளைக்கு அமைய அல்லது தேவையான இயலுமை, தகைமைகள், முறைமைகள் மற்றும் நெறிமுறைகள் சரியா-னதாக உள்ள நிறுவனங்களினால் சேகரிக்கப்படல் வேண்டும். இந்த தகவல் சேகரிப்பானது அறிவிக்கப்பட்ட உடன்பாட்டுக்கு அமைவானதாக இருக்க வேண்டும். அனைத்து சம்பவங்களிலும் தனிநபர்களின் உடன்பாடு மூன்றாம் தரப்புடன் தகவல்களை பகிர்வதற்கு அவசியமாகும்.

12. துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் **அரசாங்கம் அல்லது வேறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சாத்தியமான பிரதிபலிப்புக்கள்** மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். செயற்பாடுகளை தொடர்வதற்கான தேவையானது, தகவலை பயன்படுத்துவதற்கான தேவைக்கு எதிரானதாக இருத்தல் வேண்டும். இது தொடர்பில் வேறுபட்ட மனிதநேய நிறுவனங்கள், வேறுபட்ட தெரிவுகளை முன்னெடுக்க முடியும்.

பாதுகாப்பு கோட்பாடு 2: பக்கச்சார்பற்ற உதவிக்கு மக்களின் பிரவேசத்தை உறுதி செய்தல். பாரபட்சமின்றி தேவைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தல்.

தேவையின் அடிப்படையில் மற்றும் மோசமான பாரபட்சமின்றி மக்கள் மனிதநேய உதவியை பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும். தேவையுள்ள மக்கள் நிராகரிக்கப்படாது உதவி வழங்கப்படல் வேண்டும். மனிதநேய நிறுவனங்களுக்கான பிரவேசம் தேவையான சந்தர்ப்பங்களில் ஸ்பியர் தரங்களுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்..

பின்வரும் அம்சங்களை இந்த கோட்பாடு உள்ளடக்கியிருக்கும்:

- பாதிக்கப்பட்ட மக்களின் அனைத்து பகுதிக்கு மனிதநேய உதவி கிடைப்பதனை உறுதி செய்தல்.

- வாழ்வதற்கு அத்தியாவசியமான பொருட்கள் தொடர்பில் மக்கள் தொகையின் பகுதிகளுக்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட எந்தவொரு நட்டமும், சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் மனிதநேய சாசனத்தில் குறிப்பிடப்பட்ட பொதுவான மனிதநேய கோட்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் சவாலுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

- தேவையின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கிடைக்கும். வேறு பின்புலங்களின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படக் கூடாது.

வழிகாட்டல் குறிப்புக்கள்

பிரவேசத்தை பேணல்

1. **பாதிக்கப்பட்ட மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை எட்ட முடியாத போது**, மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான உதவிகளை வழங்க முடியாத போது, பக்கச்சார்பற்ற மனிதநேய நிறுவனங்களுக்கான அனுமதி வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு மறுக்கப்படுவது சர்வதேச சட்ட மீறலாகும். விசேடமாக ஆயுத முரண்பாடுகளின் போதே இந்த நிலை பொருந்தும்..

2. **பிரவேசத்தை கண்காணித்தல்:** பாதிக்கப்பட்ட மக்களின் மனிதநேய உதவிக்கான பிரவேசத்தை மிகவும் அவதானமாக கண்காணித்தல். விசேடமாக மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கானது.

3. **மனிதநேய உதவிக்கான பிரவேசம் மற்றும் சுதந்திர நடமாட்டம்** என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகும் (பாதுகாப்பு கோட்பாடு 3ஐப் பார்க்கவும்,

வழிகாட்டல் குறிப்புக்கள் 7-9, **பக்கம் 39**). சோதனைச் சாவடிகள், வீதித் தடைகள் அல்லது நிலக்கண்ணி வெடிகள் உள்ள பகுதி போன்ற தடைகள் தொடர்பில் பிரவேசம் கண்காணிக்கப்படல் வேண்டும். ஆயுத முரண்பாட்டு சூழ்நிலைகளில், ஈடுபட்டுள்ள தரப்புக்களால் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும். ஆனால், இந்த தடைகள் பாதிக்கப்பட்ட மக்கள் அல்லது சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்ட மக்களின் பிரவேசம் என்பவற்றுக்கு இடையில் மனிதநேய உதவியில் பாரபட்சம் காட்டப்படக் கூடாது. பின்தங்கிய அல்லது பிரவேசம் அற்ற பகுதிகளில் பிரவேசத்துக்கான சமத்துவத்தினை உறுதி செய்வதற்கு விசேட செயலேற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

4. **பலவீனமான மக்களின் பிரவேசத்திற்கு வசதியளிப்பதற்கான விசேட செயலேற்பாடுகள்,** சூழ்நிலை, சமூகம் மற்றும் கலாசார நிலைமைகள் மற்றும் சமுதாயத்தின் நடத்தைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தி முன்னெடுக்கப்படல் வேண்டும். பாலியல் பலாத்காரம் அல்லது வேறு இடங்களுக்கு பால்வினைத் தொழிலுக்காக ஆட்கள் கடத்தப்படல் போன்ற துஷ்பிரயோகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான இடத்தை கட்டியெழுப்பக் கூடியதாக இந்த செயலேற்பாடுகள் இருத்தல் வேண்டும். அத்துடன், அவை மாற்றுத் திறனுடையவர்களுக்கு பிரவேசத்தை தருவதாக இருத்தல் வேண்டும். இந்த குழுக்கள் களங்கப்படுத்தப்படுவதனை இந்த செயலேற்பாடுகள் தவிர்த்தல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 3, வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6, **பக்கம் 63**).

உதவி அல்லது வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களிற்கான பிரவேசம் மறுக்கப்படலை அடையாளப்படுத்தல்

5. **மனிதநேய உதவியைப் பெறுவதற்கான உரிமை:** மனிதநேய சாசனத்தில் விளக்கப்பட்டதைப் போன்று மனிதநேய உதவிகளை பெறுவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்டு. சர்வதேச சட்டத்தின் ஒரு பகுதியாக பல சட்ட விழுமியங்கள் மற்றும் விதிகளில் இருந்து இந்த உரிமை உருவாக்கப்பட்டுள்ளது. மிக முக்கியமாக, உதவிக்கான பிரவேசம் மற்றும் “பொதுமக்களின் உயிர் வாழ்தலுக்கான இன்றியமையாத பொருட்களின் பாதுகாப்பு” (1949ஆம் ஆண்டு ஜெனீவா சாசனத்திற்கு அமைவான 1977ஆம் ஆண்டு மேலதிக நெறிமுறைகள் I மற்றும் II) தொடர்பில் சர்வதேச மனிதநேய சட்டம் பல சம்பந்தப்பட்ட உறுப்புரைகளை உள்ளடக்கியுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு மதிப்பினை உயர்த்துவது தொடர்பில் மனிதநேய நிறுவனங்கள் கவனஞ் செலுத்தலாம் (பாதுகாப்பு கோட்பாடு 3ஐப் பார்க்கவும், வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4, **பக்கங்கள் 38-39**)

பாரபட்சமின்மையை உறுதி செய்தல்

6. **பக்கச்சார்பின்மை:** தேவை என்பதன் அடிப்படையில் மாத்திரம் தாம் உதவுவதற்கு விருப்பம் கொண்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களினை மனிதநேய நிறுவனங்கள் முன்னுரிமைப்படுத்தல் வேண்டும். அத்துடன், தேவையின் அடிப்படையில் உதவி

வழங்கப்படல் வேண்டும். சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அனர்த்த நிவாரணம் தொடர்பில் அமுல்படுத்தப்பட்ட ஒழுக்கக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பக்கச்சார்பின்மை கோட்பாடாகும் (368ஆம் பக்கத்தில் உள்ள பிற்சேர்க்கை 2ஐப் பார்க்கவும், அத்துடன், **பக்கம் 19**இல் உள்ள மனிதநேய சாசனம்). குறிப்பிட்ட குழு ஒன்று தொடர்பில் மாத்திரம் மனிதநேய நிறுவனங்கள் கவனஞ் செலுத்தக் கூடாது (உ-ம்: முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள்).

7. மனிதநேய உதவியைப் பெறுவதற்கு மற்றும் பாதுகாப்பு பெறுவதற்கு **பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேடமான சட்ட அந்தஸ்து தேவையில்லை.**

பாதுகாப்பு கோட்பாடு 3: வன்முறை மற்றும் பலாத்காரத்தால் ஏற்படும் உடலியல் மற்றும் உளவியல் தீங்கில் இருந்து மக்களை பாதுகாத்தல்.

தமது விருப்பத்திற்கு மாறாக வற்புறுத்தப்படல் அல்லது தூண்டப்படல் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகத்தின் அச்சுறுத்தல் என்பவற்றுக்கு எதிராக வன்முறையில் இருந்து மக்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்..

இந்த கோட்பாடு பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது:

- அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஆதாரத்துடன் தொடர்பு கொண்டு அல்லது அச்சுறுத்தலை தவிர்ப்பதற்கு மக்களுக்கு உதவுதல் ஊடாக பாதிக்கப்பட்ட மக்கள் வன்முறையான தாக்குதலுக்கு இலக்காகாத வண்ணம் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

- பாதிக்கப்பட்ட மக்கள் பலாத்காரத்துக்கு இலக்காகாது இருப்பதனை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல். எடுத்துக் காட்டாக, பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களிற்கு தீங்கு அல்லது உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய (உதாரணமாக, சுதந்திர நடமாட்டம்) பலாத்காரமாக அல்லது தூண்டப்பட்ட நடவடிக்கை.

- சமுதாய சுய உதவி பொறியமைப்பு உள்ளடங்கலாக பாதுகாப்பாக இருப்பதற்கான, பாதுகாப்பை கண்டறிவதற்கான மற்றும் கண்ணியத்தை மீளமைப்பு செய்வதற்கான பாதிக்கப்பட்ட மக்களின் சுய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கல்

வழிகாட்டல் குறிப்புக்கள்

வன்முறை மற்றும் பலாத்காரத்தில் இருந்து பாதுகாப்பு

1. தமது வாழ்க்கைக்கான அச்சுறுத்தலில் இருந்து **மக்களை பாதுகாத்தலே பிரதான பொறுப்பாகும்**. அத்துடன், பாதுகாப்பினை வழங்குவது என்பது

அரசாங்கம் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உள்ளது (மனிதநேய சாசனம் **பக்கம் 19**ஐப் பார்க்கவும்). ஆயுத முரண்பாட்டின் போது, முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர் பொதுமக்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அத்துடன், ஆயுதங்களை கீழே வைத்தவர்களையும் பாதுகாக்க வேண்டும். மக்களுக்கான சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் சூழ்நிலையைப் பகுப்பாய்வு செய்யும் போது, மனிதநேய நிறுவனங்கள் யாருக்கு சட்ட பொறுப்பு உள்ளது மற்றும்/அல்லது பாதுகாப்பு வழங்குவதற்கான உண்மையான இயலுமை என்பவற்றை கட்டமைக்க வேண்டும்.

2. **வேறு அச்சுறுத்தல்களை குறைப்பதற்கு உதவுதல்:** மக்களை மேலும் பாதுகாக்கப்பட்டவர்களாக வைத்திருப்பதற்கு, பாதுகாப்பாக இருப்பதற்கான மக்களின் சுய முயற்சிகளுக்கு வசதியளித்தல் அல்லது மக்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகுவதற்கான சந்தர்ப்பத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் (பரிந்து பேசல் அல்லது வேறு) என்பன உள்ளடங்குகின்றன.

3. **கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்:** உரிமை மீறல்கள் தொடர்பில் கண்காணித்தலுக்கும், அறிக்கையிடலுக்குமான தமது பொறுப்புக்கள் தொடர்பில் மனிதநேய நிறுவனங்கள் கவனஞ் செலுத்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் அவர்களது பொறுப்புக்களை நினைவுபடுத்தி பரிந்து பேசல் தொடர்பிலும் அவர்கள் கவனஞ் செலுத்தல் வேண்டும். அரசியல் தந்திரம், ஆதரவு தேடுதல் மற்றும் பொது மக்கள் பரிந்து பேசல், கூருணர்வு மிக்க தகவல்களை முகாமை செய்வதில் வழிகாட்டல்களை நினைவில் வைத்திருத்தல் போன்ற வேறுபட்ட நடவடிக்கை முறைகளை அவர்கள் பயன்படுத்தலாம் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும், **பக்கம் 33**).

4. **ஆயுத முரண்பாட்டின் போது,** பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற நிறுவனங்கள் சர்வதேச மனிதநேய சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றதா என்பதனை கண்காணிப்பது தொடர்பில் மனிதநேய நிறுவனங்கள் கவனஞ் செலுத்தல் வேண்டும். அத்துடன், அவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படும் போது அறிக்கையிடல் வேண்டும். கடத்தல்கள் அல்லது பலவந்தமாக ஆட்சேர்த்தல் போன்ற சம்பவங்கள் தொடர்பிலான சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களை குறைப்பதற்கு நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

5. **பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெடிக்கக் கூடிய பொருட்களினால் அச்சுறுத்தல் காணப்படும் சந்தர்ப்பங்களில்,** மனிதநேய நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன் மற்றும் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து நிலக்கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத குண்டுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆயுத முரண்பாட்டைத் தொடர்ந்து தமது வீடுகளுக்கு திரும்பும் போதே இவ்வாறான நிலையை மக்கள் எதிர்நோக்குவர்.

6. துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளில் இருந்து மக்களை பாதுகாப்பதில் **அரசியல், சட்டவாக்க மற்றும் இராணுவ செயற்பாட்டாளர்கள்** முக்கியப் பாத்திரத்தினை வகிக்கின்றனர். பாதுகாப்பின் முக்கியமான பகுதியாக கருதப்படும் உள்ளுறைந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணக் கூடிய அரசியல் யதார்த்தமே பிரதானமானது. பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள், உதாரணமாக அமைதி காக்கும் படையினர் உள்ளடங்கலாக, பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் மக்களின் சவால் தொடர்பில் பௌதீக பாதுகாப்பை உறுதி செய்வதில் பிரதான பாத்திரத்தினை வகிக்க முடியும். வன்முறைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு நிறுவனங்கள் தெரியப்படுத்தலாம். இராணுவப் பிரிவுகள், அவர்களது கட்டளை அதிகாரி அல்லது அந்த பிரிவினர் செயற்படும் அதிகாரிகளுடன் இணைந்ததாக இடையீடுகளை மேற்கொள்வது இராணுவத் தரப்பினரின் வன்முறைகளை தடுப்பதற்கு அத்தியாவசியமான படிநிலையாகும்.

சுதந்திரமான நடமாட்டம்

7. தமது தெரிவு அல்லாத பகுதிக்கு (முகாம் போன்ற) செல்லவோ அல்லது தங்கியிருக்கவோ **மக்கள் நிர்ப்பந்திக்கப்படக் கூடாது.** அல்லாவிடில், அவர்களது நடமாட்டத்திற்கு எதுவிதமான கட்டுப்பாடும் விதிக்கப்படக் கூடாது. தீவிரமான பாதுகாப்பு அல்லது சுகாதார பிரச்சினைகள் காணப்பட்டால் மாத்திரமே சுதந்திரமான நடமாட்டத்திற்கு கட்டுப்பாடு மற்றும் வதிவதற்கான தெரிவு என்பன முன்னெடுக்கப்படல் வேண்டும். அனைத்து சந்தர்ப்பங்களிலும், மோதல் அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதிலி அந்தஸ்து கோருவதற்கான உரிமை உள்ளது.

8. **வெளியேற்றங்கள்:** மிகவும் மோசமான சூழ்நிலையில் தவிர்க்க முடியாத செயலேற்பாடாக இருந்தால் மாத்திரமே, உடனடி உதவியை அல்லது பாதுகாப்பினை வழங்குவதற்கு வேறு வழிகள் இல்லாத போது தீவிரமான உயிர், பாதுகாப்பு மற்றும் சுகாதார அச்சுறுத்தல் காணப்படும் போது வெளியேற்றத்தில் மனிதநேய நிறுவனங்கள் ஈடுபட வேண்டும்.

9. பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு **அபாயகரமான பிரதேசத்தில் தங்கியிருப்பதற்கு மானியங்கள் வழங்கப்படக் கூடாது.** அத்துடன், குறித்தப் பகுதிகளின் நிலைமை தொடர்பில் அனைத்து தகவல்களுக்குமான முழு பிரவேசம் இல்லாத பட்சத்தில் மீளச் சென்று அல்லது மீள்குடியேறுவது பிரசாரப்படுத்தப்படக் கூடாது.

வன்முறை மற்றும் பலாத்காரத்திற்கான குறிப்பிடத்தக்க பலவீனங்கள்

10. **பலவீனமான மக்கள்:** தனிநபர்கள், சமூக மற்றும் சூழ்நிலை சார்ந்த விடயங்கள் தொடர்பில், குறிப்பிட்ட சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களில் அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்களை அடையாளங் காண்பதற்கு கவனஞ் செலுத்தப்படல்

வேண்டும். பெண்கள், சிறுவர்கள், பலவந்தமாக இடம்பெயர்ந்தவர்கள், வயதானவர்கள், மாற்றுத் திறன் உடையவர்கள் மற்றும் மத அல்லது இன சிறுபான்மை குழுக்கள் என்பன உள்ளடங்கலாக குறிப்பிட்ட சவால்களை எதிர்நோக்குபவர்கள் தொடர்பில் விசேட செயலேற்பாடுகள் எடுக்கப்படல் வேண்டும்.

11. **சிறுவர்களுக்கு பாதுகாப்பான சுற்றுச் சூழல்:** சிறுவர்களுக்கு பாதுகாப்பான சுற்று சூழலுக்கு பிரவேசம் கிடைப்பதனை நிறுவனங்கள் உறுதி செய்தல் வேண்டும். சிறுவர்களை பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் வைத்துக் கொள்ளும் தமது முயற்சிகளுக்கு குடும்பங்கள் மற்றும் சமுதாயங்கள் உதவிகளைப் பெற வேண்டும்.

12. **தமது குடும்பத்திடமிருந்து பிரிக்கப்பட்ட சிறுவர்கள்** அல்லது வயதானவரின் பராமரிப்பில் இல்லாத சிறுவர்கள் அனர்த்தம்/மோதலின் போது இலகுவாக துஷ்பிரயோகத்திற்கு அல்லது சுரண்டலுக்கு உள்ளாகலாம். சிறுவர்கள் ஆயுத குழுக்களில் இணைக்கப்படுவதனை தடுப்பதற்கு நிறுவனங்கள் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். சிறுவர்கள் ஆயுத குழுக்களுடன் தொடர்பு கொண்டிருக்கும்பட்சத்தில், அவர்களை அங்கிருந்து வெளியேற்றல் மற்றும் சமூகத்துடன் மீள் ஒருங்கிணைப்பு செய்தல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை நிறுவனங்கள் முன்னெடுத்தல் வேண்டும்.

13. **பெண்கள் மற்றும் சிறுமிகள் விசேடமாக** பால்நிலை சார்ந்த துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகலாம். இந்த குழுக்களுக்கான பாதுகாப்பினை வழங்க முன்வரும் சந்தர்ப்பங்களில், பால்வினைத் தொழிலுக்காக வேறு இடங்களுக்கு கடத்தப்படல், பலவந்தமாக பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்படல், பாலியல் பலாத்காரம் அல்லது உள்ளக வன்முறை என்பன உள்ளடங்கலாக சாத்தியமான சவால்களை குறைப்பது தொடர்பில் மனிதநேய நிறுவனங்கள் விசேடமான கவனஞ் செலுத்தி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடை செய்யும், இல்லாது ஒழிக்கும் தரங்கள் மற்றும் கருவிகளை அவர்கள் நடைமுறைப்படுத்தவும் வேண்டும். இந்த ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிடத்தக்க பலவீனங்களில் ஈடுபடுவதற்கு, முக்கியமாக புறக்கணிக்கப்பட்ட அல்லது மாற்றுத் திறனுடைய பெண்கள் பலவந்தமாக மனிதநேய உதவியைப் பெறும் பொருட்டு பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்படலாம்.

சமுதாயஞ் சார்ந்த சமூக உதவி மற்றும் சுய உதவி

14. குடும்பங்களை ஒன்றிணைத்தல், சிறுவர்கள் தமது குடும்பங்களில் இருந்து பிரிந்து செல்வதனை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து மக்களுக்கு கற்பித்தல், குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பொருத்தமான பராமரிப்புக்களை மேம்படுத்தல் மற்றும் பிரிக்கப்பட்ட சிறுவர்களுக்கும், வேறு குடும்ப உறுப்பினர்களுக்கும் குடும்பங்களை தேடுவதற்கான மற்றும் குடும்பத்துடன் இணைவதற்கான முறையை ஒழுங்கமைத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக **பாதுகாப்பு மற்றும் உளச்சமூக உதவியின் குடும்ப மற்றும் சமுதாய**

பொறியமைப்புக்கள் இருத்தல் வேண்டும். இயலுமான சந்தர்ப்பங்களில், குடும்பங்களை ஒன்றாக தக்க வைத்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட கிராமம் அல்லது ஆதரவு வலையமைப்பைச் சேர்ந்த மக்கள் அதே பகுதியில் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

15. பால்நிலை சார்ந்த வன்முறைகளை அடையாளங் காண்பதற்கு மகளிர் குழுக்கள், வாழ்வாதார உதவி செயற்றிட்டங்களில் இளைஞர் குழுக்களின் ஒத்துழைப்பு, சிறுவர்களுடனான சாதகமான தொடர்பாடல் மற்றும் இளம் சிறுவர்களின் பராமரிப்பு தொடர்பில் பெற்றோர்களுக்கு பெற்றோர் குழுக்கள், விசேட தேவையுடைய சிறுவர்கள், நிலக்கண்ணி வெடிகள் தொடர்பான எச்சரிக்கை குறித்து பாதுகாப்பு தகவல்களை இளைஞர் குழுக்களுக்கு பரவச் செய்தல், தமது வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள் மற்றும் ஆண்கள், வயதான நபர்கள் மற்றும் மாற்றுத் திறனுடைய நபர்களை அடையும் சமுதாய குழுக்கள், போன்ற நடவடிக்கைகள் உள்ளடங்கலாக **சமுதாயஞ் சார்ந்த சுய உதவி நடவடிக்கைகளுக்கு உதவுதல்**

பாதுகாப்பு கோட்பாடு 4: தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, கிடைக்கக் கூடியதாக உள்ள நிவாரணங்களுக்கான பிரவேசம் மற்றும் துஷ்பிரயோகத்தின் தாக்கங்களில் இருந்து மீள்வதற்கு மக்களுக்கு உதவி செய்தல்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகவல்கள் ஊடாக தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவணப்படுத்தல் மற்றும் ஆதரவு வழங்குவதற்கும் உதவி புரிய வேண்டும். வன்முறை மற்றும் வேறு துஷ்பிரயோகங்களின் உடலியல், உளவியல் மற்றும் சமூகத் தாக்கங்களில் இருந்து மீட்சி பெறுவதற்கு மக்களுக்கு பொருத்தமான உதவிகள் வழங்கப்படல்

இந்த கோட்பாடு பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது:

- பாதிக்கப்பட்ட மக்கள் தமது உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கும், அரசாங்கம் அல்லது வேறு உதவி நிறுவனங்களால் வழங்கப்படும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவுதல். அத்துடன், அவர்களுக்கான உரிமைகள் மற்றும் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய நிவாரணங்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல்.
- தமது உரிமைகளை வெளிப்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் வைத்திருக்க வேண்டிய ஆவணங்களை பாதுகாப்பதற்கு உதவுதல்.
- சமுதாயஞ் சார்ந்த மற்றும் வேறு உளச்சமூக உதவிகளை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்சி பெறுவதற்கு உதவுதல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

பாதிக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல்

1. பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மதிக்கப்படுவதுடன், பூர்த்தி செய்யப்படுவதனை உறுதி செய்ய வேண்டியது **அரசாங்கம் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும்.** சட்ட முறைமையின் ஊடாக அல்லது வேறு முறைமைகளின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்கள் தமது உரிமை-களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி வழங்குவது தொடர்பில் மனிதநேய நிறுவனங்கள் கவனஞ் செலுத்தல் வேண்டும். .

2. **உரிமைத் தகுதிகள்:** பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைத் தகுதிகள் தொடர்பில் தமது உதவி நிகழ்ச்சிகள் மற்றும் சட்டங்கள், ஒழுங்குகளின் கீழ் காணப்படும் உரிமைகளை அவர்களுக்கு நிறுவனங்கள் அறியத் தரல் வேண்டும். வீடமைத்தல், காணி மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட மக்களின் உரிமைகளை கட்டமைத்தல் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

3. **தகவல் மற்றும் ஆலோசனை:** பாதிக்கப்பட்ட மக்கள் புரிந்து கொள்ளும் வகையில், புரிந்து கொள்ளும் மொழியில் மனிதநேய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் தகவல் மற்றும் ஆலோசனை என்பவற்றை அவர்களுக்கு அறியத் தரல் வேண்டும். தமது வாழ்க்கையில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய தீர்மானங்கள் தொடர்பில் மேலும் அபாயத்தை ஏற்படுத்தாதவாறு அவர்கள் அர்த்தமுள்ள கலந்துரையாடல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும், **பக்கம் 55**). தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வழி முறைகளில் ஒன்றாக இது உள்ளது.

ஆவணப்படுத்தல்

4. **இழந்த ஆவணங்களை காத்தல் அல்லது மாற்றல்:** தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாதிக்கப்பட்ட மக்களின் இழக்கப்பட்ட ஆவணங்களை காப்பதற்கு அல்லது மாற்றீடு செய்து கொள்வதற்கு நிறுவனங்கள் உதவி புரியல் வேண்டும். குறிப்பிடத்தக்க ஆவணங்கள் இல்லாதபட்சத்தில், மக்களின் உரிமைகளை தக்க வைத்துக் கொள்வது இயலாது. ஆனால், முழுமையான உரிமைத் தகுதியை பெற்றுக் கொள்வதற்கு ஆவணங்கள் அல்லது பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ், கடவுச் சீட்டு, காணிப் பத்திரம் போன்ற அடையாளப்படுத்தும் ஆவணங்கள் அவசியமாகும். அனர்த்த காலங்களின் பின்னர் சொத்து சம்பந்தமான ஆவணங்களை வைத்திருத்தல் மிகவும் முக்கியமானதாக உள்ளது. ஆனால், சில நாடுகளில் சட்ட பத்திரங்களின் ஊடாக உரிமைத்துவம் என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதில்லை. இது சிக்கல் ஏற்படுவதற்கான மிகவும் முக்கியமான விடயமாக இருக்கும். உறவினர்களுக்கு தேவையற்ற நிதி மற்றும் சட்ட பிரச்சினைகள் ஏற்படாது இருப்பதற்கு இறப்புச் சான்றிதழ்

பெறப்பட்டிருத்தல் வேண்டும். அனர்த்தங்களில் இறந்த உடல்களை முறைசாராத வகையில் அகற்றப்படும் போது இறப்புச் சான்றிதழ் பெறப்பட முடியாது. எனவே, அவ்வாறான செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

5. அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும் **சட்ட ஆவணப்படுத்தலானது** மனிதநேய நிறுவனங்களால் வழங்கப்படும் பதிவு ஆவணங்கள், உணவு அட்டைகள் அல்லது போக்குவரத்துச் சான்றுச் சீட்டுக்கள், போன்ற ஆவணங்களுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு குழப்பமடையக் கூடாது. அதிகா-ரிகளால் விநியோகிக்கப்படும் உத்தியோகப்பூர்வ ஆவணங்கள், மனிதநேய நிறுவனங்களின் உதவியைப் பெறுவதற்கு தகுதியானவர்கள் யார் என்பதனை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படக் கூடாது.

நிவாரணங்களுக்கான பிரவேசம்

6. தமது உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து **சட்ட மற்றும் வேறு நிவாரணங்களைப் பெறுவதற்கான உரிமைத் தகுதி மக்களுக்கு உள்ளது.** சொத்து இழப்பு அல்லது பாதிப்பு தொடர்பான நட்டஈடும் இதில் உள்ளடங்கும். அத்துடன், குறித்த வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் உரிமைத் தகுதியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்டு. பாதிக்கப்பட்ட சமூகத்தின் மத்தியில் நம்பிக்கை மற்றும் மனவுறுதியை மீளமைப்பதற்கு இது பாரிய பாத்திரத்தை வகிக்கும். பாதிக்கப்பட்ட மக்கள் நீதியை நாடுவதற்கு அல்லது குறித்த உதவியை வழங்கும் நிறுவனங்களிடம் விடயத்தை கொண்டு செல்வதற்கு மனிதநேய நிறுவனங்கள் உதவி வழங்க முடியும்.

7. **சுகாதார பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு உதவி:** தாக்குதல், பால்நிலை சார்ந்த வன்முறை மற்றும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து பொருத்தமான சுகாதார பராமரிப்பு மற்றும் வேறு புனர்வாழ்வு உதவிகளைப் பெறுவதற்கு மக்களுக்கு உதவி வழங்கப்படல் வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - தொற்று நோய்களின் கட்டுப்பாடு தரம் 3ஐப் பார்க்கவும், **பக்கம் 316**, மற்றும் அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் சுகாதார தரங்கள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் 321 - 323**).

8. அரச சார்பற்ற நிறுவனங்களினால் **நிவாரண உதவிகள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில்,** பொருத்தமான வேளைகளில் அவ்வாறான உதவிகளை அடையாளங் கண்டு பெறுவதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

சமுதாயஞ் சார்ந்த மற்றும் வேறு உளச்சமூக உதவி

9. **சாதகமான சமுதாயம் எதிர்கொள்ளும் பொறியமைப்புக்களான** கலாசார ரீதியான பொருத்தமான இறுதிச் சடங்குகள், மத நிகழ்வுகளும், செயற்பாடுகளும்

மற்றும் தீங்கு விளைவிக்காத கலாசார மற்றும் சமூக செயற்பாடுகள் என்பவற்றுக்கு ஆதரவு வழங்கப்படல் வேண்டும்.

10. **சிறுவர்களுக்கான நடவடிக்கைகள்:** பொருத்தமான சந்தர்ப்பங்களில், முறைசாரா மற்றும் சிறுவர் நட்புறவு வழிகளில் சிறுவர்களுக்கான கட்டமைக்கப்பட்ட, உதவிகரமான கல்வி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்கு சமுதாயங்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். உளச்சமூக நலனை மேம்படுத்தும் சுய உதவி நடவடிக்கைகளும் சமுதாயப் பாதுகாப்பு பொறியமைப்பில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

11. வன்முறைகளிலிருந்து தப்பியவர்களுக்கு **பொருத்தமான உளச்சமூக ஆதரவுகளை ஒழுங்கமைப்பதற்கு உதவி புரிதல்.** அனர்த்தத்தில் இருந்து தப்பியவர்களுக்கு, சமுதாய சமூக வலையமைப்புக்கள் மற்றும் சுய உதவி நடவடிக்கைகளுக்கு பிரவேசம் இருப்பதனை உறுதி செய்தல். சமுதாயஞ் சார்ந்த சமூக ஆதரவுக்கான பிரவேசமானது, மனநல பராமரிப்புக்கான பிரவேசத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

12. **ஒருங்கிணைக்கப்பட்ட ஆதரவு முறைமை:** பல்வேறு துறைகளில் உளச்சமூக உதவி மற்றும் மன நலம் தொடர்பில் பணியாற்றும் நிறுவனங்கள் மக்களுக்கு ஆதரவு வழங்குவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட முறைமையை ஸ்தாபிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - மன நலம் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் 333**).

13. **மருத்துவ ஆதரவு:** மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்கான பொறியமைப்பை ஸ்தாபித்தல்.

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை:

பொது பாதுகாப்பு: பின்புலம் மற்றும் கருவிகள்

Caritas Australia, CARE Australia, Oxfam Australia and World Vision Australia (2008), Minimum Agency Standards for Incorporating Protection into Humanitarian Response – Field Testing Version.

www.icva.ch/doc00002448.pdf

Giossi Caverzasio, S (2001), Strengthening Protection in War – A Search for Professional Standards. Ref 0783. International Committee of the Red Cross (ICRC). Geneva.

Inter-Agency Standing Committee (IASC) (2002), Growing the Sheltering Tree – Protecting Rights through Humanitarian Action – Programmes & practices gathered from the field. Geneva. www.icva.ch/gstree.pdf

IASC (2010), Operational Guidelines and Manual for the Protection of Persons Affected by Natural Disasters.

ICRC (2008), Enhancing protection for civilians in armed conflict and other situations of violence. Geneva.

www.icrc.org/eng/resources/documents/publication/p0956.htm

ICRC (2009), Professional standards for protection work carried out by humanitarian and human rights actors in armed conflict and other situations of violence. Geneva. www.icrc.org/web/eng/siteeng0.nsf/htmlall/p0999 or www.unhcr.org/refworld/type,THEMGUIDE,,,4b39cba52,0.html

O'Callaghan, S and Pantuliano, S (2007), Incorporating Civilian Protection into Humanitarian Response. HPG Report 26. Overseas Development Insitute (ODI). London.

Slim, H and Bonwick, A (2005), Protection – an ALNAP guide for humanitarian agencies. ODI. London. www.alnap.org/initiatives/protection.aspx

United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA) (2009), Aide Mémoire: For the Consideration of Issues Pertaining for the Protection of Civilians. New York.

www.humansecuritygateway.com/showRecord.php?RecordId=33206

பாதுகாப்புக்கான விசேட தரங்கள்

சிறுவர்கள்

ICRC, International Rescue Committee, Save the Children, UNICEF, UNHCR and World Vision (2004), Interagency Guiding Principles on Unaccompanied and Separated Children. Geneva. www.icrc.org/eng/assets/files/other/icrc_002_1011.pdf

UNICEF (2007), Paris Principles and Commitments to Protect Children from Unlawful recruitment or Use by Armed Forces or Groups. Paris.

www.un.org/children/conflict/english/parisprinciples.html

UN Disarmament, Demobilization and Reintegration (UN-DDR) (2006), Integrated Disarmament, Demobilisation, and Reintegration Standards. New York. www.unddr.org/iddrs/05/20.php and www.unddr.org/iddrs/05/30.php

மாற்றுத் திறன்கள்

Handicap International (2006), Protection – Issues for People with Disabilities and Injuries.

Handicap International (2008), Toolkit on Protection of Persons with Disabilities.

பால்நிலை சார்ந்த வன்முறை

IASC (2005), Guidelines for Gender-Based Violence Interventions in Humanitarian Settings – Focusing on the Prevention of and Response to Sexual Violence in Emergencies. Geneva. www.humanitarianinfo.org/iasc/pageloader.aspx?page=content-products-products&productcatid=3

World Health Organization (WHO) (2007), Ethical and safety recommendations for researching, documenting and monitoring sexual violence in emergencies. Geneva. www.who.int/gender/documents/violence/9789241595681/en/index.html

வீடமைப்பு, நிலம் மற்றும் சொத்து உரிமைகள்

Principles on Housing and Property Restitution for Refugees and Displaced Persons. E/CN.4/SUB.2/RES/2005/21. “Pinheiro Principles”.

http://ap.ohchr.org/documents/alldocs.aspx?doc_id=11644

Global Land Tool Network and Early Recovery Cluster (2010), Land and natural disasters – Guidance for Practitioners. UN Human Settlements Programme (UN-Habitat) and Food and Agriculture Organization (FAO). Nairobi. www.unhabitat.org/pmss/listItemDetails.aspx?publicationID=2973

Global Protection Cluster, Housing, Land And Property Area of Responsibility (2009), Checklist of Housing, Land and Property Rights and Broader Land Issues Throughout the Displacement Timeline from Emergency to Recovery. www.internal-displacement.org/8025708F004BE3B1/(httpInfoFiles)/430298C3C285133DC12576E7005D360D/$file/HC%20Checklist%20on%20HLP%20and%20Land%20Issues_Final2.pdf

Internal Displacement Monitoring Centre, FAO, OCHA, Office of the UN High Commissioner for Human Rights, UN-Habitat and UNHCR (2007), Handbook on Housing and Property Restitution for Refugees and Displaced Persons. Implementing the 'Pinheiro Principles', IASC. Geneva.

www.unhcr.org/refworld/docid/4693432c2.html

உள்ளக இடம்பெயர்ந்த மக்கள்

Bagshaw, S and Paul, D (2004), Protect or Neglect? Towards a More Effective United Nations Approach to the Protection of Internally Displaced Persons – An Evaluation. Brookings-SAIS Project on Internal Displacement and UNOCHA, Interagency Internal Displacement Division. Washington DC.

www.brookings.edu/papers/2004/1123humanrights_bagshaw.aspx

Brookings Institution – University of Bern Project of Internal Displacement (2005), Addressing Internal Displacement: A Framework for National Responsibility. Washington DC. www.brookings.edu/projects/idp/20050401_nrframework.aspx

Global Protection Cluster (2010), Handbook for the Protection of Internally Displaced Persons. www.unhcr.org/refworld/docid/4790cbc02.html

IASC (2004), Implementing the Collaborative Approach to Situations of Internal Displacement – Guidance for UN Humanitarian and/or Resident Coordinators. www.humanitarianinfo.org/iasc/pageloader.aspx?page=content-products-products&productcatid=10

IASC (2010), Framework on Durable Solutions for Internally Displaced Persons. www.brookings.edu/reports/2010/0305_internal_displacement.aspx

UN Economic and Social Council (1998), UN Guiding Principles on Internal Displacement. E/CN.4/1998/53/Add.2. www.idpguidingprinciples.org/ or

www.unhchr.ch/Huridocda/Huridoca.nsf/TestFrame/d2e008c61b70263ec125661e0036f36e?Opendocument

மன நலம் மற்றும் உளச்சமூக உதவி

IASC (2007), IASC Guidelines on Mental Health and Psychosocial Support. www.humanitarianinfo.org/iasc/pageloader.aspx?page=content-products-default

IASC Reference Group on Mental Health and Psychosocial Support (2010), Mental Health and Psychosocial Support (MHPSS) In Humanitarian Emergencies: What Should Protection Programme Managers Know.

www.psychosocialnetwork.net/explore/tags/mhpss/

நிலக்கண்ணி வெடி அகற்றல் நடவடிக்கை

The International Mine Action Standards:

www.mineactionstandards.org/imas.htm#english

வயதானவர்கள்

IASC (2008), Humanitarian Action and Older Persons – An essential brief for humanitarian actors. WHO–HelpAge International. www.humanitarianinfo.org/iasc/pageloader.aspx?page=content-products-products&productcatid=24

மிக முக்கியமான தரங்கள்

இந்த அத்தியாயத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

மிக முக்கியமான தரங்கள் என்பவை அனைத்து துறைகளாலும் பகிரப்பட்ட செயற்பாட்டுக்கு அத்தியாவசியமான தரங்களாகும். இந்த கையேட்டில் உள்ள தரங்கள் அனைத்தையும் புரிந்துகொள்ளும், அணுகுமுறைகளுக்கான தனியான குறிப்புதவி புள்ளியாக இவை உள்ளன. எனவே, ஒவ்வொரு அத்தியாயமும், தமது சுய தரங்களை எட்டுவதற்கு மிக முக்கியமான தரங்கள் உதவி செய்கின்றன.

ஆறு முக்கியமான தரங்கள் உள்ளன: :

- மக்களை பிரதானமாகக் கொண்ட மனிநேய மறுசீரமைப்பு
- ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைத்தல்
- மதிப்பாய்வு
- வடிவமைப்பு மற்றும் மறுசீரமைப்பு
- செயற்பாடு, வெளிபாட்டுத் தன்மை மற்றும் கற்றல்
- உதவிப் பணியாளர் செயற்பாடு

ஒவ்வொரு முக்கியமான தரமும் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது::

- **மிக முக்கியமான தரம்:** தன்மையில் அது தர அடிப்படையிலானது. அத்துடன், மனிதநேய மறுசீரமைப்பில் எட்ட வேண்டிய மட்டத்தை குறிப்பிடுகின்றது..

- **பிரதான நடவடிக்கைகள்:** தரங்களை எட்டுவதற்கு உதவக் கூடிய நடவடிக்கைகள் மற்றும் உள்ளீடுகளை இவை ஆலோசிக்கின்றன.

- **பிரதான குறிகாட்டிகள்:** தரமானது எட்டப்பட வேண்டுமா என்பது தொடர்பில் வெளிப்படுத்தும் “அடையாளங்கள்”. பிரதான நடவடிக்கைகளின் செயற்பாட்டையும் பெறுபேற்றையும் அளவிடும் மற்றும் தொடர்பாடல் மேற்கொள்ளும் வழியை அவை வழங்குகின்றன. அடிப்படைத் தரங்களுடன் சம்பந்தப்பட்டதா என்பதனையும் அவை அளவிடும்.

- **வழிகாட்டல் குறிப்புக்கள்:** வேறுபட்ட சூழ்நிலைகளில் முக்கியமான தரம், பிரதான நடவடிக்கைகள் மற்றும் பிரதான குறிகாட்டிகளை பிரயோகிக்கும் போது கவனஞ் செலுத்த வேண்டிய முக்கியமான குறிப்புக்களை இவை உள்ளடக்கியுள்ளன. பிரயோக ரீதியான பிரச்சினைகள், பின்புலங்கள் அல்லது முன்னுரிமை வழங்க வேண்டிய விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளை எதிர்கொள்ளல் போன்றவற்றுக்கான வழிகாட்டலை இவை வழங்கும். அவற்றில் தரங்கள், நடவடிக்கைகள் அல்லது குறிகாட்டிகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கலான விடயங்களும் உள்ளடங்கலாம். அத்துடன், அவை தற்போதைய அறிவில் உள்ள தடுமாற்றம், சர்ச்சை அல்லது இடைவெளிகளையும் விளக்கலாம்.

முக்கியமான தரங்களின் பிரதான குறிகாட்டிகள் பயனர்களின் பிரயோகம் மற்றும் சூழ்நிலையில் பரந்த வேறுபாடுகளை உள்ளடக்குகின்றன. ஒவ்வொரு குறிகாட்டிக்கும் அளவிடக் கூடிய மற்றும் கால அவகாசம் நிறைந்த குறிப்புக்கள் சூழ்நிலை சார்ந்ததாக மற்றும் துறை சார்ந்ததாக இருக்கும். எனவே, பொருத்தமான வகையில் தமது குறிப்பிடத்தக்க சூழ்நிலைக்கு பிரதான குறிகாட்டிகளை பயனர்கள் உள்வாங்கல் வேண்டும். குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கான விடயங்கள் இந்த அத்தியாயத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

அறிமுகம் 53

மிக முக்கியமான தரங்கள் 55

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை. 74


மனிதநேய சாசனம்
பாதுகாப்பு கோட்பாடுகள்
மிக முக்கியமான தரங்கள்
தரம் 1
மனிதர்களை பிரதானமாகக் கொண்ட மனிதநேய மறுசீரமைப்பு
தரம் 2
ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு
தரம் 3
மதிப்பாய்வு
தரம் 4
வடிவமைப்பு மற்றும் மறுசீரமைப்பு
தரம் 5
செயற்பாடு, வெளிபாட்டுத் தன்மை மற்றும் கற்றல்
தரம் 6
உதவிப் பணியாளர் செயற்பாடு
குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

அறிமுகம்

அனைத்து ஸ்பியர் அடிப்படைத் தரங்களையும் எட்டுவதற்கு அத்தியாவசியமான நடைமுறைகளை முக்கியமான தரங்கள் விளக்குகின்றன. ஸ்பியர் மனிதநேய சாசன கோட்பாடுகளின் பிரயோக வெளிப்பாடாக மற்றும் அனர்த்தம் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணியமான வாழ்க்கைக்கு உதவும் உரிமைகளின் அடிப்படையாகவும் அவை உள்ளன. சமுதாயஞ் சார்ந்த, உள்ளூர், தேசிய அல்லது சர்வதேச மனிதநேய நிறுவனங்களினால் எட்டப்பட வேண்டிய (பிரதான குறிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) ஆகக் குறைந்த மட்ட மறுசீரமைப்பை முக்கியமான தரங்கள் விளக்குகின்றன.

ஏனைய பிரதான பொறுப்புடைமை முயற்சிகளுடன் இணைக்கப்பட்டுள்ள முக்கியமான தரங்கள், ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதுடன், பொறுப்புடைமைக்கு பகிரப்பட்ட அர்ப்பணிப்பை மீளுறுதி செய்கின்றன. உதாரணமாக, பொறுப்புடைமை மற்றும் தர முகாமைத்துவ மட்டக்குறியில் உள்ள மனிதநேய பொறுப்புடைமை பங்காளித்துவம் (HAP) 2010 தரம் மற்றும் முக்கியமான தரங்கள் குறைநிரப்பு தேவைகளை உள்ளடக்கியுள்ளன. People In Aidஇன் நன்னடத்தை கோவையுடன் ஒத்திசைவானதாக உதவிப் பணியாளர் செயற்பாட்டு தரம் அமைந்துள்ளது. அவசரகால இயலுமை கட்டியெழுப்பல் (ECB) செயற்றிட்டத்தின் Good Enough வழிகாட்டி, Groupe URDஇன் Quality Compas மற்றும் மனிதநேய நடவடிக்கையில் பொறுப்புடைமை மற்றும் செயற்றிறனுக்கான செயற்றிறன் மிக்க கற்றல் வலையமைப்பு (ALNAP) என்பன முக்கியமான தரங்களின் 1 மற்றும் 5 விசேடமாக தெரிவிக்கின்றன. INEEஇன் (Inter-Agency Network for Education in Emergencies - அவசர காலத்தில் கல்விக்கான நிறுவனங்களுக்கு இடையிலான வலையமைப்பு) கல்விக்கான (முன்னாயத்தம், மறுசீரமைப்பு மற்றும் மீட்சி) அடிப்படை தரங்களின் அஸ்திவாரமான தரங்களின் சகாவாக மிக முக்கியமான தரங்கள் உள்ளன.

அனைத்து துறைகளுக்குமான முக்கியமான தரங்களின் முக்கியத்துவம்

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களான அனைத்துப் வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் பங்குபற்றல் மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான அவர்களது இயலுமைகளும், மூலோபாயங்களும் மனிதநேய மறுசீரமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டதாக உள்ளமையை முதலாவது முக்கியமான தரம் அங்கீகரிக்கின்றது. பக்கச்சார்பற்ற மனிதநேய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வேறு நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுடன் வினைத்திறன்

மிக்க மறுசீரமைப்பானது ஒழுங்கமைக்கப்பட வேண்டிய மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவையை இரண்டாவது முக்கிய தரம் அடையாளப்படுத்துகின்றது.

அனர்த்தத்தின் தன்மையை புரிந்து கொள்வதற்கும், யார் பாதிக்கப்பட்டுள்ளார்கள் மற்றும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை அடையாளங் காண்பதற்கும், மக்களின் பலவீனம் மற்றும் இயலுமைகளை மதிப்பீடு செய்வதற்கும் முறையான மதிப்பாய்வுகளின் தேவையை மிக முக்கியமான தரம் 3 விளக்குகின்றது. அரசியல், சமூக பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் சூழ்நிலை சார்ந்த மற்றும் பரந்த சனத்தொகையின் தேவைகளை புரிந்து கொள்வதற்கான சிக்கலான முக்கியத்துவத்தை அது வலியுறுத்துகின்றது. தேவைகளின் பக்கச்சார்பற்ற மதிப்பீடு, சூழ்நிலைக்கு அமைய எட்டப்படாத தேவைகளை அடையாளப்படுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அரசாங்கத்தினால் எட்டப்பட வேண்டிய சுய தேவைகளின் இயலுமை என்பவற்றின் அடிப்படையில் நிறுவனங்கள் தமது பிரதிபலிப்பினை வடிவமைக்க வேண்டியதனை மி முக்கியமான தரம் 4 வலியுறுத்துகின்றது.

தமது மறுசீரமைப்பின் வினைத்திறன், தரம் மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றை தொடர்ச்சியாக பரிசோதனை செய்யும் நிறுவனங்கள் நிறைவேற்ற வேண்டிய விடயங்களை மிக முக்கியமான தரம் 5 வலியுறுத்துகின்றது. தகவல்களை கண்காணித்தல் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பின்னூட்டத்தை பெறல் என்பவற்றின் அடிப்படையிலேயே நிறுவனங்கள் தமக்கான மூலோபாயங்களை வகுக்கும். அதன் அடிப்படையில் தமது செயற்பாடு தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்கின்றன. ஒருதலைப்பட்சமற்ற மீளாய்வுகள் மற்றும் மதிப்பீடுகளில் அவை கவனஞ் செலுத்துகின்றன. அதன் மூலம் பெறப்படும் முடிவுகளை தமது கொள்கை மற்றும் பயிற்சியை மேம்படுத்துவதற்கு அவை பயன்படுத்துகின்றன.

வினைத்திறன் மிக்க மனிதநேய மறுசீரமைப்பினை வழங்குவதற்கு பொருத்தமான அறிவு, திறமைகள், நடத்தை மற்றும் உளப்பாங்கு உள்ள உதவி பணியாளர்களை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமர்த்த வேண்டியது மனிதநேய நிறுவனங்களின் கடமை என்பதனை மிக முக்கியமான தரம் 6 அடையாளப்படுத்துகின்றது. அதேவேளை, பயனுறுதி மிக்க முகாமைத்துவம் மற்றும் உணர்வு ரீதியான, உடலியல் ரீதியான நலனுக்கான ஆதரவு என்பவற்றின் ஊடாக திருப்திகரமான சேவையை உதவிப் பணியாளர்கள் வழங்குவதனை உறுதி செய்ய வேண்டியது நிறுவனங்களினது பொறுப்பாகும்.

பலவீனம்

அனர்த்தம் அல்லது மோதலால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி வாழ்வாதார தேவைகளை நிறைவேற்றுவதே ஸ்பியரின் நோக்கமாகும். எவ்வாறாயினும், முக்கியமான தரங்களும் எதிர்கால அபாயம் மற்றும் பலவீனத்தை குறைக்கக் கூடிய, இயலுமையை பரவலாக்கும், துரித மீளமைப்புக்கு உதவும் அனர்த்த முன்னாயத்தம் மற்றும் அணுகுமுறைகளுக்கு உதவி புரிய முடியும். அவ்வாறான அணுகுமுறைகள் இயற்கை சுற்றுச் சூழல் மற்றும் பரந்த சூழ்நிலையின் மறுசீரமைப்பின் தாக்கத்தினை கவனத்திற்

கொள்ளும். அத்துடன், அவை குறித்த பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் பரந்த சனத்தொகையின் தேவைகளுடன் மிகவும் முக்கியமாக சம்பந்தப்பட்டவையாகும்.

கையேடு முழுவதிலும், "பலவீனமானவர்கள்" என்ற பதமானது இயற்கையான அல்லது செயற்கையான அல்லது மோதலினால் பாதிக்கப்படுவதற்கான அபாயமுள்ள மக்களை குறிக்கின்றன. உடலியல், சமூக, சுற்றுச் சூழல் மற்றும் அரசியல் அம்சங்களின் கலப்பு காரணமாக அனர்த்தங்களின் போது மக்கள் மிகவும் பலவீனமானவர்களாக மாறுகின்றனர். அவர்களுடைய இனம், வயது, பால், மாற்றுத் திறன், வகுப்பு அல்லது சாதி, அரசியல் நம்பிக்கைகள் அல்லது மதம் என்வற்றின் காரணமாக சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கலாம். பலவீனங்களின் இணைப்பு மற்றும் வழமையான நிலையற்ற சூழ்நிலையின் தாக்கம் என்பன காரணமாக மக்கள் வேறுபட்ட காரணங்களுக்காக, வேறுபட்ட வழிகளில் பலவீனமானவர்களாக மாறுவதற்கு வழி சமைக்கின்றன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய அனைவரையும் போன்று, பலவீனமான மக்களும் அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்கும், அதனை முகாமைத்துவம் செய்வதற்கும் வேறுபட்ட இயலுமைகளை கொண்டுள்ளனர். பலவீனமான மக்களின் இயலுமைகள் தொடர்பான முழுமையான புரிந்துணர்வு மற்றும் மனிதநேய உதவிகளை நாடும் போது அவர்கள் எதிர்நோக்கும் தடைகள் என்பன மறுசீரமைப்பின் போது மிகவும் அத்தியாவசியமானவை. ஏனெனில், அது மிகவும் அவசியமாக தேவை உள்ளவர்களை தேவைகள் சென்றடைவதனை உறுதி செய்கின்றது.

மிக முக்கியமான தரங்கள்

மிக முக்கியமான தரம் 1: மக்களை பிரதானமாகக் கொண்ட மனிதநேய மறுசீரமைப்பு

கண்ணியத்துடன் வாழ்வதற்கான மக்களின் இயலுமை மற்றும் மூலோபாயங்கள் மனிதநேய மறுசீரமைப்பின் வடிவமைப்பு மற்றும் அணுகுமுறையின் போது ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஆரம்ப சந்தர்ப்பத்தில் சமுதாய குழுக்கள் மற்றும் சமூக வலையமைப்புக்களை அடையாளங் காண்பதன் மூலம் உள்ளூர் இயலுமைகளுக்கு ஆதரவு அளித்தல். அத்துடன், சமுதாயஞ் சார்ந்த மற்றும் சுய உதவி முயற்சிகளை கட்டியெழுப்பல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- மக்கள் பாதிக்கப்பட்ட அனர்த்தம் அல்லது மோதலின் ஊடாக முறைசார்ந்த மற்றும் வெளிப்படையான பொறியமைப்பினை ஸ்தாபித்தலானது தொடர்ச்சியான பின்னூட்ட மற்றும் செல்வாக்கு நிகழ்ச்சிகளை வழங்கும் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடனான கலந்துரையாடலின் போது பலவீனமான மக்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- மனிதநேய நிறுவனம், அதன் செயற்றிட்டம்(கள்) மற்றும் மக்களின் உரிமைத் தகுதி என்பன தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு எளிமையான வடிவத்தில் சரளமான மொழியில் தகவல் வழங்குதல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- துரித சந்தர்ப்பமாக சமுதாய கூட்டங்கள் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கு பாதுகாப்பான மற்றும் பொருத்தமான வசதியை பெற்றுக் கொள்வதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரவேசத்தை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- இலகுவாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் நிகழ்ச்சி தொடர்பான முறைப்பாட்டை மக்கள் சமர்ப்பிப்பதற்கு இயலுமானதாக்கல். அத்துடன், மறுசீரமைப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு வெளிப்படைத் தன்மையான, நேரத்திற்கான நடைமுறைகளை நிறுவல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

- இயலுமான சந்தர்ப்பங்களில் உள்ளூர் பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் வகையில் மற்றும் மீளமைப்பை மேம்படுத்தும் வகையில் உள்ளூர் தொழிலாளர்கள், சுற்றுச் சூழல் ரீதியான நிலைத்திருக்கக் கூடிய மூலப்பொருட்கள் மற்றும் சமூக மட்டத்தில் பொறுப்பான வர்த்தகங்கள் என்பவற்றை பயன்படுத்தவும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் உள்ளூர் மக்களுக்கு முக்கியம் வாய்ந்த உதவிகரமான கலாசாரத்தை, ஆன்மீகத்தை மற்றும் பண்பாட்டு பழக்கங்களை மதிக்கக் கூடிய மற்றும் உள்வாங்கக் கூடிய செயற்றிட்டங்களை வடிவமைக்கவும் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- மறுசீரமைப்பின் போது தேர்ச்சியின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் தீர்மானம் எடுத்தல் அதிகாரம் மற்றும் நிகழ்ச்சிகளின் உரிமைத்துவம் என்பவற்றை அதிகரித்தல்.

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- செயற்றிட்ட மூலோபாயங்கள் சமுதாய அடிப்படையிலான இயலுமைகள் மற்றும் முயற்சிகளுடன் தெளிவாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- மறுசீரமைப்பை எவ்வாறு ஒழுங்கமைப்பது மற்றும் நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒழுங்குபடுத்தும் அல்லது செயற்றிறனுடன் பங்குபற்றும் வழமையான கூட்டங்கள் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- மறுசீரமைப்பு காலத்தின் போது பாதிக்கப்பட்ட சமுதாயம் மற்றும் உள்ளூர் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்படும் சுய உதவி முயற்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- வழங்கப்படும் உதவிகள் மற்றும் பெறப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் நிறுவனங்கள் விசாரணை புரிவதுடன், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவை தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **உள்ளூர் இயலுமை:** அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கும், அதற்கு பிரதிபலிப்பதற்கும் மற்றும் மீட்சி பெறுவதற்கும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் திறன், அறிவு மற்றும் இயலுமைகள் என்பன உள்ளன. அனர்த்த நிவாரணத்தின் போதான சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் சர்வதேச செம்பிறைச் சங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவன்ங்களின் நன்னடத்தை கோவையின் கோட்பாடுகள் 6 மற்றும் 7 என்பவற்றில் குறிப்பிட்டுள்ளவாறு மனிதநேய மறுசீரமைப்பில் செயற்றிறன் மிக்க பங்களிப்பே மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையின் அத்தியாவசிய அஸ்திவாரமாக உள்ளது (**பக்கம் 368இல்** உள்ள பிற்சேர்க்கை 2ஐப் பார்க்கவும்). சுய உதவி மற்றும் சமுதாயத்தின் தலைமையிலான முயற்சிகள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கண்ணியம் மற்றும் கட்டுப்பாட்டுக்கான அளவு என்பவற்றை மீள வழங்குவதன்

மூலம் உளவியல் மற்றும் சமூக நலனுக்கு பங்களிக்கும். பரவலாக்கப்பட்ட குடும்ப, மத வலையமைப்புக்கள் மற்றும் சடங்குகள், நண்பர்கள், பாடசாலைகள் மற்றும் சமுதாய நடவடிக்கைகள் ஊடான சமூக, நிதி, கலாசார மற்றும் உணர்வு ரீதியான உதவிகளுக்கான பிரவேசமானது தனிநபர் மற்றும் சமுதாய சுயமதிப்பு மற்றும் அடையாளத்தை மீளக் கட்டமைப்பதற்கும், பலவீனத்தை குறைப்பதற்கும் நெகிழ்ச்சியை விஸ்தரிப்பதற்கும் உதவும். ஆதரவளிக்கும் வலையமைப்புக்கள் மற்றும் சுய உதவி குழுக்களை அடையாளங் காண்பதற்கு உதவுவதற்கும், பொருத்தமாயின் மீள்செயற்படுத்தல் அல்லது கட்டமைப்பதற்கும் உதவி வழங்கும். எப்போது அனர்த்தம் இடம்பெற்றது மற்றும் பௌதீக, சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகளுக்கு அமைய, எந்த மக்கள் பங்குபற்றல் வேண்டும் மற்றும் எவ்வாறு அவர்கள் அதனை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். எனவே, பங்குபற்றுதலை அடையாளப்படுத்தும் குறிகாட்டிகள் சூழ்நிலை மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தெரிவு செய்யப்படல் வேண்டும். அனர்த்தத்தின் போது முதலில் பிரதி நடவடிக்கை எடுப்பவர்களாக உள்ளூர் மக்கள் உள்ளனர். எனவே, துரித மீளமைப்பில் அவர்களுடைய பங்களிப்பு என்பது இலகுவானதாக இருக்கும். ஆரம்ப நிலையில் மக்களுக்கு செவிமடுத்தல், அவர்களிடம் ஆலோசனை பெறல் மற்றும் அவர்களை இணைத்துக் கொள்வதற்கான தெளிவான முயற்சிகள் நிகழ்ச்சியின் பிற்பகுதியில் தரம் மற்றும் சமுதாய முகாமைத்துவத்தினை அதிகரிக்கும்.

2. நிகழ்ச்சி திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலில் செல்வாக்கு செலுத்துவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைவருக்குமான அர்த்தங்களை **பின்னூட்ட பொறியமைப்புக்கள்** வழங்கும் (***HAP***இன் “பங்குபற்றல்” மட்டக்குறியைப் பார்க்கவும்). அவற்றில் பாதிக்கப்பட்ட மக்களின் அனைத்து பிரதிநிதித்துவத்துடன் “கற்ற பாடங்கள்” தொடர்பில் இலக்குக் குழு கலந்துரையாடல், ஆய்வுகள், நேர்காணல்கள் மற்றும் கூட்டங்கள் ஆகியன உள்ளடங்கும் (ECB,d; Good Enough Guide for tools மற்றும் வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐப் பார்க்கவும்). முடிவுகளும், பின்னூட்டத்திற்கான பிரதிபலிப்பாக நிறுவனத்தின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்ட மக்களுடன் முறையாக பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும்.

3. **பிரதிநிதிகள் பங்குபற்றல்:** வேறுபட்ட மக்கள் எதிர்நோக்கிய தடைகளை புரிந்து கொள்ளல் மற்றும் அடையாளங் காணல் என்பது சமநிலையான பங்குபற்றலில் சிக்கலானது. பாதிக்கப்பட்ட மக்களின் இளைஞர்கள் மற்றும் முதியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் என அனைத்து குழுவினரும் பங்குபற்றுவதனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். நன்கு பிரதிநிதித்துவம் செய்யாதவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் (உ-ம் இனம் அல்லது மதத்தின் பெயரால்) அல்லது வெளியில் தெரியாதவர்கள் (உ-ம். வீட்டிற்குள்ளேயே இருப்பவர்கள் அல்லது நிறுவனத்திற்குள் இருப்பவர்கள்) என்பவர்களை உள்ளடக்குவதற்கான விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் பங்குபற்றல் மேம்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், அவர்கள் துஷ்பிரயோகம் அல்லது தீங்குக்கு இலக்காகாது இருப்பதனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

4. **தகவல் பகிரல்:** தமது சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் நேர்த்தியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. தகவல்கள் மனக்கலக்கம் ஏற்படுவதனை குறைக்கின்றது. அத்துடன், தகவல்கள் சமுதாய பொறுப்புடைமை மற்றும் உரிமைத்துவத்தின் அத்தியாவசிய அஸ்திவாரமாகவும் உள்ளன. ஆகக் குறைந்தது, நிறுவனத்தின் கட்டளைகள் மற்றும் செயற்றிட்டங்கள், மக்களின் உரிமைத் தகுதி மற்றும் உரிமைகள் மற்றும் எப்போது, எங்கே உதவியைப் பெற முடியும் (HAPஇன் "தகவல் பரிமாறல்" மட்டக்குறியைப் பார்க்கவும்) என்பது குறித்த சுருக்கமான விளக்கத்தை நிறுவனங்கள் வழங்க வேண்டும். செய்திப் பலகைகள், பொதுக் கூட்டங்கள், பாடசாலைகள், செய்தித்தாள்கள் மற்றும் வானொலி அறிவிப்புக்கள் என்பன தகவல் பகிர்வதற்கான பொதுவான வழிகளாகும். மக்களின் சூழ்நிலைகள் தொடர்பில் அக்கறையுள்ள புரிந்துணர்வினை தகவல்கள் கொண்டிருக்க வேண்டும். அத்துடன், பல வகையான ஊடகங்களை பயன்படுத்தி எளிமையான மொழியில் சொல்லப்படல் வேண்டும். எனவே, அக்கறையுள்ள அனைவரையும் அந்த தகவல் சென்றடையும். உதாரணமாக, வாசிக்க முடியாத சிறுவர்கள் மற்றும் வயதானவர்களுக்காக பேச்சு மூலமான தொடர்பாடல் அல்லது சித்திரங்களை பயன்படுத்தலாம். சிக்கலற்ற மொழியைப் பயன்படுத்தவும் (எடுத்துக்காட்டாக, 12வயதானவர்களுக்கு புரிந்து கொள்ளக் கூடிய). அத்துடன், அச்சில் வெளிவரும் தகவல்கள் பார்வை குறைபாடுகள் உள்ளவர்களும் வாசித்து அறியக் கூடிய வகையில் போதிய இடைவெளியுடனான தட்டச்சுடன் வெளிவர வேண்டும். கூட்டங்களை ஒழுங்கு செய்வதன் ஊடாக வயதானவர்கள் அல்லது வாசிக்கும் திறன் அற்றவர்கள் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

5. **பாதுகாப்பான மற்றும் பிரவேசிக்கக் கூடிய இடங்கள்:** பொதுக் கூட்டங்களை பாதுகாப்பான இடங்களில் ஒழுங்கமைக்கவும். பண்பாட்டு காரணங்களினால் பொதுக் கூட்டங்களில் குறைந்த எண்ணிக்கையில் காணப்படும் பெண்களின் பங்குபற்றதல் உள்ளடங்கலாக மக்கள் அணுகக் கூடிய இடங்களில் கூட்டம் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். சிறுவர்கள் விளையாடுவதற்கு, கற்பதற்கு, சமூகத்துடன் பழகுவதற்கு சிறுவர் நட்புறவான இடத்தை வழங்கவும்.

6. **முறைப்பாடுகள்:** நிறுவனம் ஒன்றிற்கு முறைப்பாடு செய்வதற்கும், அதற்கான பிரதிபலிப்பை எதிர்பார்ப்பதற்குமான உரிமை மக்களுக்கு உண்டு (*HAP*இன் "முறைப்பாடுகளை கையாளல்" மட்டக்குறியைப் பார்க்கவும்). முறைப்பாடுகள் மற்றும் நட்டஈட்டுக்கான முறையான பொறியமைப்புக்கள் மக்களுடைய வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான நிறுவனத்தின் நம்பகத்தன்மைக்கான அத்தியாவசியமான அம்சமாகும்.

7. **கலாசார ரீதியான பொருத்தமான பழக்கங்கள்:** இறுதிச் சடங்குகள் மற்றும் மதச் சடங்குகள் மற்றும் பழக்கங்கள் என்பன அனர்த்தத்தில் இருந்து மீள வருவதற்கான மக்களின் அடையாளம், கண்ணியம் மற்றும் இயலுமைக்கான அத்தியாவசியமான மூலகங்கள் ஆகும். கலாசார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில பழக்கங்கள் மக்களின் மனித உரிமைகளை மீறுவதாக இருக்கும் (உ-ம்: பெண்களுக்கான கல்வி மறுக்கப்படல் மற்றும் பெண் இனப்பெருக்க உறுப்பு விரசெயலிழத்தல்). அவற்றுக்கு ஆதரவு வழங்கப்படக் கூடாது.

மிக முக்கியமான தரம் 2: ஒருங்கிணைத்தல் மற்றும் ஒத்துழைத்தல்

அதி கூடிய வினைத்திறனுக்காக பணியாற்றல், பயனுறுதி என்பவற்றுக்காக பக்கச்சார்பற்ற மனிதநேய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மனிதநேய நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புடன் மனிதநேய மறுசீரமைப்பு திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஆரம்பத்தில் இருந்து பொதுவான மற்றும் ஏதாவது ஒரு பிரயோகிக்கக் கூடிய துறை சார்ந்த ஒருங்கிணைப்பு பொறியமைப்புக்குள் பங்குபற்றல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- தற்போது செயற்பட்டு வரும் அரச மற்றும் வேறு ஒருங்கிணைப்பு குழுக்களின் பொறுப்புக்கள், குறிக்கோள்கள் மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பில் அறிந்து வைத்திருத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- நிறுவனத்தின் கட்டளை, குறிக்கோள்கள் மற்றும் நிகழ்ச்சியுடன் சார்ந்த தகவல்களுடன் ஒருங்கிணைப்பு குழுக்களை வழங்கல்.
- தக்க நேரத்தில் மற்றும் வேறு மனிதநேய நிறுவனங்கள் உடனடியாக பயன்படுத்தக் கூடிய வடிவத்தில் சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்பு குழுக்களுக்கு மதிப்பாய்வு தகவல்களை பகிரல். (பக்கம் 61இல் உள்ள முக்கியமான தரம் 03இனைப் பார்க்கவும்).
- பகுப்பாய்வு, புவியியல் பகுதிகளின் தெரிவு மற்றும் மறுசீரமைப்பு திட்டங்களை அறிவிப்பதற்கு மனிதநேய நிறுவனங்களின் நிகழ்ச்சி தகவல்களை பயன்படுத்தவும்.
- ஒருங்கிணைப்பு குழுக்களின் தேர்ச்சி, மிகவும் தாமதமாக அறிக்கையிடல், நிறுவன பற்றாக்குறைகள் அல்லது பற்றாக்குறையான இயலுமை என்பன தொடர்பில் வழமையாக தகவல் அறிதல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- சிக்கலான பகிரப்பட்ட மனிதநேய அக்கறைகள் தொடர்பில் பரிந்து பேசலை வலுப்படுத்துவதற்கு ஏனைய மனிதநேய நிறுவனங்களுடன் ஒத்துழைக்கவும்.
- மனிதநேய கோட்பாடுகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் மனிதநேயமற்ற செயற்பாட்டாளர்களின் ஈடுபாடு தொடர்பில் தெளிவான கொள்கைகள் மற்றும் பயிற்சிகளை கட்டமைக்கவும் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் தேர்ச்சி தொடர்பான தகவல்கள் வழமையாக சம்பந்தப்பட்ட ஒத்துழைத்தல் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

- ஒரே புவியியல் அல்லது துறை சார்ந்த பகுதிக்கான வேறு மனிதநேய நிறுவனங்களின் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படக் கூடாது.
- ஒருங்கிணைப்பு கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதுடன், தக்க நேரத்தில் அறிக்கையிடப்படல் வேண்டும்.
- ஏனைய மனிதநேய நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் இயலுமை மற்றும் மூலோபாயங்களை நிறுவனத்தின் பொறுப்பு கவனத்திற் கொள்ளும்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **ஒருங்கிணைக்கப்பட்ட மறுசீரமைப்புக்கள்:** போதிய நிகழ்ச்சித் திட்டமிடல், கால அட்டவணைகள் மற்றும் தரம் என்பவற்றிற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கை அவசியமாகும். ஒருங்கிணைத்தல் முயற்சிகளில் செயற்றிறன் மிக்க பங்குபற்றலானது, ஒருங்கிணைத்தல் தலைவர்கள் நேரத்திற்கான, தெளிவான தொழிலாளர் மற்றும் பொறுப்பு தொடர்பான பிரிவை நிறுவுவதற்கும், எந்த தேவைகள் ஒருங்கிணைந்ததாக எட்டப்பட்டுள்ளன என்பதனை அளவிடுவதற்கும், போலிகளை குறைப்பதற்கும் மற்றும் தரம் மற்றும் திட்டமிடலில் உள்ள இடைவெளிகளை அடையாளங் காண்பதற்கும் வழியேற்படுத்தும். ஒருங்கிணைக்கப்பட்ட பிரதிபலிப்புக்கள், நேரத்திற்கான நிறுவனங்களுக்கு இடையிலான மதிப்பீடுகள் மற்றும் தகவல் பரிமாற்றம் என்பன பாதிக்கப்பட்ட மக்கள் மீதான இன்னல்களை குறைக்கும். அவர்கள், தொடர்ச்சியாக மதிப்பீட்டு குழுக்களின் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் நிர்ப்பந்திக்கப்பட முடியும். ஒத்துழைத்தல் மற்றும், இயலுமான சந்தர்ப்பங்களில் வளங்கள் மற்றும் கருவிகளை பகிர்தல் என்பது சமுதாயங்களின், அவர்களது அயலவர்களின், அரசாங்கங்களின், நிதியுதவியாளர்களின் மற்றும் மனிதநேய நிறுவனங்களின் இயலுமையை வேறுபட்ட கட்டளைகள் மற்றும் நிபுணத்துவத்துடன் உகப்பானதாக்கும். அனர்த்தத்திற்கு முன்பு ஒருங்கிணைத்தல் பொறியமைப்புக்களில் பங்குபற்றலானது மறுசீரமைப்பின் போது உறவினை கட்டியெழுப்புவதுடன், ஒருங்கிணைப்பையும் பரவலாக்கும். ஒருங்கிணைத்தல் பொறியமைப்புக்கள் சர்வதேச நிறுவனங்களுக்கு மாத்திரம் பொருத்தமானதாக இருப்பின் உள்ளூர் சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் பங்குபற்றுவதனை தவிர்க்க நேரிடும். பொதுக் கூட்டங்களிலும் மற்றும் வேறு தொடர்பாடல் முறைகளின் போதும் உள்ளூர் மொழிகளை பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்கவும். மறுசீரமைப்பில் ஈடுபட்டுள்ள உள்ளூர் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் வலையமைப்புக்களை அடையாளங் கண்டு, அவர்களை ஊக்குவிக்கவும். அத்துடன், ஏனைய உள்ளூர் மற்றும் சர்வதேச மனிதநேய நிறுவனங்களையும் பங்குபற்றுவதற்கு ஊக்குவிக்கவும். ஒருங்கிணைத்தல் கூட்டங்களில் நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்து கலந்து கொள்ளும் ஊழியர்கள் திட்டமிடல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் பங்களிக்கக் கூடிய பொருத்தமான தகவல்கள், திறன்கள் மற்றும் அதிகாரத்தை கொண்டிருக்க வேண்டும்.

2. **பொதுவான ஒருங்கிணைத்தல் பொறியமைப்புக்களில்** பொதுவான (அனைத்து நிகழ்ச்சிகளுக்கும்), துறை சார்ந்த (சுகாதாரம் போன்ற) மற்றும்

துறைகள் கலந்த (பால்நிலை போன்ற) கூட்டங்கள் மற்றும் தகவல் பரிமாற்ற பொறியமைப்புக்கள் (மதிப்பீடு மற்றும் சூழ்நிலை சார்ந்த தகவல்களின் தரவுத் தளம் போன்ற) என்பன உள்ளடங்குகின்றன. வேறுபட்ட துறைகளை ஒன்றிணைக்கும் கூட்டங்கள் மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுவதற்கு பதிலாக, மேலும் முழுமையாக அடையாளப்படுத்தப்படுவதற்கு வழி கோலும் (உ-ம். மக்களின் உறைவிடம், நீர், தேகாரோக்கியம், போஷாக்கு மற்றும் உளச்சமூக தேவைகள் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை). அனைத்து நிகழ்ச்சிகள் மத்தியிலும் ஒருங்கிணைப்பு ஒன்றிணைத்தலை உறுதி செய்வதற்கு வேறுபட்ட ஒருங்கிணைத்தல் பொறியமைப்புக்களுக்கு மத்தியில் சம்பந்தப்பட்ட தகவல்கள் பரிமாறப்படல் வேண்டும். அனைத்து ஒருங்கிணைத்தல் சூழ்நிலைகளிலும், பங்குபற்றுவதற்கான நிறுவனங்களின் அர்ப்பணிப்பானது ஒருங்கிணைத்தல் பொறியமைப்புக்களின் தரத்தினால் பாதிக்கப்படலாம்: அந்த கூட்டங்கள் மற்றும் தகவல்கள் நன்கு முகாமை செய்யப்படுவதனை, வினைத்திறன் மிக்கதாக இருப்பதனை மற்றும் பெறுபேறுகள் சார்ந்ததாக இருப்பதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு ஒருங்கிணைத்தல் தலைவர்களைச் சாரும். இல்லையெனின், பங்குபற்றல் நிறுவனங்கள் மேம்படுத்தப்பட்ட பொறியமைப்புக்களுக்காக ஆதரவு தேடுவதுடன், பரிந்து பேசல் வேண்டும்.

3. **ஒருங்கிணைத்தல் பாத்திரங்கள்:** உதவி புரியும் நிறுவனங்களின் மனிதநேய மறுசீரமைப்பை ஒருங்கிணைக்க வேண்டியது பாதிக்கப்பட்ட அரசின் பாத்திரமாகும். அரசின் ஒருங்கிணைத்தல் செயற்பாட்டிற்கு ஆதரவு வழங்குவதன் மூலம் அத்தியாவசியமான பாத்திரத்தை மனிதநேய நிறுவனங்கள் வகிக்கின்றன. எவ்வாறாயினும், சில சூழ்நிலைகளில், மாற்று ஒருங்கிணைத்தல் பொறியமைப்புக்கள் பொருத்தமானதாக இருக்கும். உதாரணமாக, துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைகளிற்கு அரசே பொறுப்பானவர்களாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அல்லது அவர்களுடைய உதவிகள் பக்கச்சார்பற்றதாக இல்லாத போது அல்லது அரசு ஒருங்கிணைத்தல் பாத்திரத்தை வகிப்பதற்கு விருப்பு கொண்டுள்ள போது ஆனால் அதற்கான இயலுமை இல்லாத போது ஆகிய சந்தர்ப்பங்களை குறிப்பிடலாம். இதனைப் போன்ற சூழ்நிலைகளில் ஒருங்கிணைத்தல் கூட்டங்கள் தனியானதாக அல்லது இணைந்ததாக ஐக்கிய நாடுகள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுடன் உள்ளூர் அதிகாரிகளின் தலைமையில் நடைபெறும். பல பரந்த அளவிலான மனிதநேய அவசர நிலைகள் தற்போது வழமையாக தலைமை நிறுவனத்தின் கீழ் அதே துறையில் பணிபுரியும் நிறுவனங்களை குழுவாக்கலுடன் "கொத்தணி அணுகுமுறை" ஊடாகவே ஒருங்கிணைக்கப்படுகின்றன.

4. தகவலானது பயன்படுத்துவதற்கு இலகுவானதாக இருப்பின் (தெளிவாக, சம்பந்தப்பட்டதாக, சுருக்கமாக) மற்றும் ஏனைய நிறுவனங்களின் தரவுகளுடன் தொழில் நுணுக்க ரீதியாக பொருத்தமான உலகளாவிய மனிதநேய நெறி-முறைகளை (**பக்கம் 61**இல் மிக முக்கியமான தரங்கள் 3ஐப் பார்க்கவும்) பின்பற்றுமாயின் **வினைத்திறன் மிக்க தரவு பகிரல்** செழுமையடையும். தரவு பகிரலின் சரியான அலைவரிசை நிறுவனம் மற்றும் சூழ்நிலை முக்கியத்துவமானதாக இருத்தல் வேண்டும். ஆனால், சம்பந்தப்பட்ட விடயங்களை விளக்குவதாகவும் அவை இருத்தல் வேண்டும். கூருணர்வு மிக்க தகவல்கள்

அந்தரங்கத் தன்மையானதாக இருத்தல் வேண்டும் (**பக்கம் 61-65**இல் மிக முக்கியமான தரங்கள் 3-4ஐப் பார்க்கவும்).

5. **இராணுவ மற்றும் தனியார் துறை:** தனியார் துறையும் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு இராணுவமும் நிவாரண முயற்சிகளில் பிரதான இடத்தினை வகிப்பது அதிகரித்து வருகின்றமையினால், ஒருங்கிணைத்தல் முயற்சிகளிலும் தாக்கம் ஏற்படுகின்றது. பாதுகாப்பு, அனைத்து ஒழுங்கு வசதிகள், போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் உள்ளிட்ட முக்கியமான நிபுணத்துவம் மற்றும் வளங்களை இராணுவம் கொண்டு வருகின்றது. எவ்வாறாயினும், அவர்களுடைய நடவடிக்கைகள் மனிதநேய குறிக்கோள்கள் மற்றும் இராணுவ அல்லது அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு இடையிலான முக்கியமான தனித்துவத்தை மங்கச் செய்துவிடும். அத்துடன், எதிர்கால பாதுகாப்பு அபாயங்களை உருவாக்கும். மனிதநேய நிறுவனங்களின் சேவைகளுக்கான மற்றும் தலைமையிலான இராணுவத்துடனான இணைப்பானது கையெழுத்திட்ட வழிகாட்டிகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். செயற்பாட்டின் வினைத்திறனை உறுதி செய்வதற்கு சில நிறுவனங்கள் ஆகக் குறைந்த கலந்துரையாடலை முன்னெடுக்கும் (உ-ம். அடிப்படை நிகழ்ச்சி தகவல் பகிரல்). அதேவேளை, ஏனைய நிறுவனங்கள் உறுதியான தொடர்புகளை நிறுவும் (உ-ம். இராணுவச் சொத்துக்களை பயன்படுத்தல்). அனைத்து சம்பவங்களிலும், நிறுவனத்தின் சுதந்திரம், நம்பகத் தன்மை, பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் பிரவேசிப்பதற்கான இராணுவத்தின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் அரசியல்/இராணுவ நிகழ்ச்சி நிரலுடன் சம்பந்தப்பட்ட இணைப்பில் மனிதநேய நிறுவனங்கள் தெளிவான தனித்துவத்தை கடைபிடிக்க வேண்டும். தனியார் துறையானது வர்த்தக பயனுறுதி, குறை நிரப்பு நிபுணத்துவம் மற்றும் வளங்கள் என்பவற்றை மனிதநேய நிறுவனங்களுக்கு கொண்டு வர முடியும். போலியைத் தவிர்ப்பதற்கும், நல்ல பயிற்சியை மேம்படுத்துவதற்கும் தகவல் பகிர்வு அவசியமாகும். தனியார் மனிதநேய நிறுவனங்களின் பங்காளித்துவமானது மனிதநேய குறிக்கோள்களுக்கு பலன் அளிப்பதில் தீவிரமானதாக இருக்க வேண்டும்.

மிக முக்கியமான தரம் 3: மதிப்பீடு

சூழ்நிலை, கண்ணியத்துடன் வாழ்வதற்கான அபாயங்கள் மற்றும் மறுசீரமைப்பதற்கான பாதிக்கப்பட்ட மக்களின் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் இயலுமை என்பன முறை சார்ந்த மதிப்பீட்டின் ஊடாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னுரிமை தேவைகள் அடையாளங் காணப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனர்த்தத்திற்கான மக்களின் ஏற்கும் திறனை அதிகரிக்கக் கூடிய உள்ளூர் மனிதநேய இயலுமை, பாதிக்கப்பட்ட மற்றும் பரந்த சனத்தொகை, சூழ்நிலை மற்றும் வேறு நடைமுறையில் உள்ள காரணிகள் போன்றன தொடர்பில்

அனர்த்தத்திற்கு முந்தைய தகவல்களை கண்டறிந்து, அவற்றை பயன்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- ஆரம்ப மதிப்பீட்டை உடனடியாக முன்னெடுத்தல், அனர்த்தத்தினால் ஏற்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலை மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு அனர்த்தத்திற்கு முந்தைய தகவல்களை கட்டியெழுப்பல், பலவீனத்தை உருவாக்கும் அல்லது அதிகரிக்கும் புதிய காரணிகளை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- இயலுமான விரைவில் துரித மதிப்பீட்டினை முன்னெடுத்தல். அதன் தொடர்ச்சியாக நேரம் மற்றும் சூழ்நிலை வாய்ப்பளிக்குமாயின் ஆழமான மதிப்பீட்டை பின் தொடரல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- சனத்தொகை தரவுகளை ஆகக் குறைந்த பால் மற்றும் வயது அடிப்படையில் சிதறச் செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- மதிப்பீட்டில் அனைத்து வகையான மக்களினதும் கருத்துக்களுக்கு செவிமடுத்தல்: அனைத்து வயதுப் பிரிவையும் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வேறு பலவீனமான மக்கள் அத்துடன் பரந்த சனத்தொகை (பக்கம் 55இல் முக்கியமான தரம் 1ஐயும், வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐயும் பார்க்கவும்).
- இயலுமான சந்தர்ப்பங்களில் பல்துறை சார்ந்த, இணைந்த அல்லது நிறுவனங்களுக்கு இடையிலான மதிப்பீடுகளில் பங்குபற்றல்.
- வேறுபட்ட முறைமைகளை பயன்படுத்தி முறையாக தகவல்களை சேகரித்தல். பல வளங்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து சேகரித்த தகவல்களுடன் ஒன்றிணைத்தல். அத்துடன், சேகரிக்கப்பட்ட வகையில் தரவுகளை ஆவணப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கொள்ளும் இயலுமை, திறன்கள், வளங்கள் மற்றும் மீட்சி உபாயங்களை மதிப்பீடு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).
- அரசின் மறுசீரமைப்பு திட்டங்கள் மற்றும் இயலுமையை மதிப்பீடு செய்தல்.
- தனிநபர்கள் மற்றும் சமுதாயத்தின் உளச்சமூக நலன் மீதான, அனர்த்தத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்.
- மோதலை பெரிதாக்குவதற்கு அல்லது பதட்டத்தை உருவாக்குவதற்கு பாதிக்கப்பட்ட மற்றும் குறித்த பகுதியின் மக்களுக்கு இடையில் பிரதிபலனாக ஏற்படக் கூடியன உள்ளடங்கலாக அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உதவிப் பணியாளர்களுக்கான நடப்பு மற்றும் சாத்தியமான பாதுகாப்பு அக்கறைகளை மதிப்பீடு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்).
- நேர அடிப்படையில் மற்றும் ஏனைய மனிதநேய நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய வடிவத்தில் மதிப்பீட்டுத் தரவுகளை பகிரல் (பக்கம் 58இல் மிக முக்கியமான தரம் 2ஐயும், வழிகாட்டல் குறிப்பு 10ஐயும் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள்; (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பிரதிபலிப்பதற்கான பாதிக்கப்பட்ட மக்களின் மற்றும் அரசின் இயலுமையுடன் மதிப்பீடு செய்யப்பட்ட தேவைகள் தெளிவாக ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.
- பலவீனமான குழுக்கள் மற்றும் சுற்றுப் புற மக்கள் உள்ளடங்கலாக, அனைத்து பாதிக்கப்பட்ட மக்களினதும் பிரதிநிதிகளினது கருத்துக்களை, துரித மற்றும் ஆழமான மதிப்பீட்டு அறிக்கைகள் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்த பால்நிலை மற்றும் வயது மட்டத்தில் சிதறவிடப்பட்ட தரவுகளை மதிப்பீட்டு அறிக்கைகள் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
- பலவீனம், சூழ்நிலை மற்றும் இயலுமை தொடர்பான தகவல் மற்றும் பகுப்பாய்வினை ஆழமான மதிப்பீட்டு அறிக்கைகள் உள்ளடக்கியிருக்கும்.
- மதிப்பீட்டு வடிவங்கள் பயன்படுத்தப்படும் போது அவை ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், பரந்த அளவில் ஆதரவுக்கும் உட்படுத்தப்படும்.
- இடையீட்டுக்கு தெரிவு செய்யப்பட்ட சனத்தொகையின் ஆழமான மதிப்பீட்டினைத் தொடர்ந்து துரித மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **அனர்த்தத்திற்கு முன்னரான தகவல்:** நடைமுறையில் உள்ள தகவல்களை ஒத்துழைப்புடன் இணைப்பது என்பது ஆரம்ப மற்றும் துரித மதிப்பீடுகளுக்கு முக்கியமானது அல்ல. சூழ்நிலை (உ-ம். அரசியல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு, மோதல் மற்றும் இயற்கை சூழல்) மற்றும் மக்கள் தொடர்பான (அவர்களது பால், வயது, சுகாதாரம், கலாசாரம், ஆன்மீகம் மற்றும் கல்வி போன்ற) குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தகவல் எப்போதும் கிடைக்கக் கூடியதாக இருக்கும். இந்த தகவலின் வளங்கள் அனர்த்தத்திற்கு முன்னரான சம்பந்தப்பட்ட அரச அமைச்சுக்களை (உ-ம். சுகாதார மற்றும் புள்ளியியல் தரவு), கல்வியியல் அல்லது ஆய்வு நிறுவனங்களை, சமுதாயஞ் சார்ந்த நிறுவனங்களை மற்றும் உள்ளூர், சர்வதேச மனிதநேய நிறுவனங்களை உள்ளடக்கியிருக்கும். அனர்த்த முன்னாயத்தம் மற்றும் முன்னெச்சரிக்கை முயற்சிகள், புதிய அபிவிருத்திகள் என்பன பகிரப்பட்ட வலை சார்ந்த வரைபடமாக்கல், சனத்தொகை வளங்கள் மற்றும் நடமாடும் தளம் என்பன சம்பந்தப்பட்ட தகவல் தொடர்பான தரவுத் தளங்களை உருவாக்கும்.
2. அனர்த்தத்தை தொடர்ந்து ஆரம்ப மணித்தியாலங்களில் வழமையாக **ஆரம்ப மதிப்பீடுகள்** முன்னெடுக்கப்படும். இவை பெரும்பாலும் இரண்டாம் நிலை தரவுகள் மற்றும் முன்னர் இருந்த தரவுகளின் அடிப்படையிலானதாக இருக்கலாம். உடனடி அவசரத் தேவைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை அவை வலியுறுத்தும்.
3. **படிநிலையான மதிப்பீடுகள்:** மதிப்பீடு என்பது தொடர்ச்சியான நடவடிக்கை. தனியான ஒரு நிகழ்வு அல்ல. முந்தைய மதிப்பீட்டு முடிவுகளை ஆழமாக்கும் (ஆனால் மீண்டும் சொல்லாத) தொடர்ச்சியான ஆழமான மதிப்பீடுகளின்

அடிப்படையில் ஆரம்ப மற்றும் துரித மதிப்பீடுகள் வழங்கப்படுகின்றன. கூருணர்வு பாதுகாப்பு தொடர்பில் மீளச் செய்யப்படும் மதிப்பீடுகள் சமுதயாத்திற்கு பலனைவிட, தீங்கை விளைவிக்கக் கூடிய பால்நிலை சார்ந்த வன்முறைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் அக்கறை செலுத்துவது குறித்து கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

4. **தரவு சிதறச் செய்தல்:** ஆரம்பத்தில் தெளிவான தரவு சிதறச் செய்தல் என்பது அரிதாகவே சாத்தியமாகும். ஆனால், அனைத்து வயதுப் பிரிவையும் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் பெரியவர்களின் வேறுபட்ட தேவைகளையும் மற்றும் உரிமை-களையும் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமானது. ஆரம்ப சந்தர்ப்பத்தில் பால்நிலை மற்றும் வயது அடிப்படையில் மேலும் சிதறடிக்கப்பட்ட, சிறுவர்கள் 0-5 ஆண்/பெண், 6-12 ஆண்/பெண் மற்றும் 13-17 ஆண்/பெண், மற்றும் 10 வயது பிரிவுக்குள், உ-ம். 50-59 ஆண்/பெண், 60-69, ஆண்/பெண் 70-79, ஆண்/பெண் 80+, ஆண்/பெண். உடலியல் சார்ந்த வயது குழுக்களைப் போன்றல்லாது சுகாதார அத்தியாயத்தில், இந்த வகைப்படுத்தல் பல வகையான உரிமைகள், சமூக மற்றும் கலாசார பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட வயது சார்ந்த வேறுபாடுகளை போன்றதாக இல்லை.

5. **பிரதிநிதிகள் மதிப்பீடுகள்:** தேவைகள் அடிப்படையிலான மதிப்பீடுகள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் உள்ளடக்குகின்றது. இடங்களை அடைவதற்கு சிரமத்தை எதிர்நோக்கும் மக்கள் தொடர்பில், (உ-ம்: முகாமில் இல்லாதவர்கள், குறைந்த பிரவேசம் உடைய புவியியல் பகுதியில் உள்ளவர்கள் அல்லது அதே பகுதியைச் சேர்ந்த சமுதாயங்கள்) மதிப்பீடு செய்வதற்கு விசேட முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இது பிரவேசம் குறைவாக உள்ள, ஆனால் அபாயத்தில் உள்ள மாற்றுத் திறன் உடையவர்கள், வயதானவர்கள், வீட்டிற்குள்ளே அடைந்து கிடக்கும் நபர்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள், சிறுவர் போராளிகள் அல்லது பால்நிலை துஷ்பிரயோகத்திற்கு இலக்கானவர்கள் போன்றோருக்கும் பொருந்தும். இயலுமாயின் பரந்த வகையிலான மக்கள் மற்றும் குழுக்கள் உள்ளடங்கலாக (உ-ம்: உள்ளூர் அதிகாரிகள், ஆண் மற்றும் பெண் சமுதாயத் தலைவர்கள், வயதான ஆண்கள் மற்றும் பெண்கள், சுகாதார ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் வேறு கல்வி நிபுணர்கள், வர்த்தகர்கள் மற்றும் வேறு மனிதநேய நிறுவனங்கள்) நேரடி கண்காணிப்பு, இலக்குக் குழு கலந்துரையாடல்கள், ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பன பிரதான தகவல்களுக்கான மூலங்களாக உள்ளன. பகிரங்கமாக பேசுவது என்பது சிலருக்கு சிக்கலானதாக அல்லது அபாயகரமானதாக இருக்கலாம். சிறுவர்களுடன் தனியாகச் சென்று உரையாடுங்கள். பெரியவர்கள் முன்னிலையில் பகிரங்கமாக கதைப்பதற்கு அவர்கள் முன்வர மாட்டார்கள். அவ்வாறு முன்வரும் பட்சத்தில் அது அவர்களுக்கு சவாலாக அமையலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பெண்கள் மற்றும் சிறுமிகள் வேறுபட்ட வகையில் கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும். துஷ்பிரயோகத்திற்கு இலக்கான அல்லது வன்முறைக்கு இலக்கான மக்களிடமிருந்து முறை சார்ந்த தகவல்களை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள உதவிப் பணியாளர்கள், பாதுகாப்பாகவும், பொருத்தமான வகையிலும் அதனை முன்னெடுப்பதற்கு தேவையான திறன்கள் மற்றும் முறைமைகளை அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும். மோதல் பகுதிகளில் தகவல்கள் தவறாக

பயன்படுத்தப்படலாம். அத்துடன், மக்களை மேலும் அபாயத்துக்கு உள்ளாக்கலாம். அல்லது செயற்படுவதற்கான நிறுவனத்தின் இயலுமை தொடர்பில் சிக்கல் ஏற்படலாம். தனிநபர் ஒருவரின் உடன்பாட்டின் அடிப்படையில் மாத்திரமே, அவர் தொடர்பான தகவல் மனிதநேய நிறுவனங்கள் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பகிரப்பட முடியும் (**பக்கம் 3**இல் பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும்). பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் உடனடியாக மதிப்பீடு செய்வது என்பது இயலுமானது அல்ல. புறக்கணிக்கப்பட்ட பகுதிகள் அல்லது குழுக்கள் என்பன தெளிவாக மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன், இயலுமான விரைவில் திருப்பி அனுப்பப்படல் வேண்டும்.

6. **பலவீனத் தன்மையை மதிப்பீடு செய்தல்:** அனர்த்தத்தினை தொடர்ந்து மக்கள் எதிர்நோக்கிய சவால்கள் வேறுபட்ட குழுக்களுக்கும் மற்றும் தனிநபர்களுக்கும் அமைய வித்தியாசப்படும். தமது வயது (மிகவும் முக்கியமாக மிகவும் இளைய மற்றும் மிகவும் வயோதிக) மற்றும் சுகவீனம் (விசேடமாக எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸுடன் வாழும் மக்கள்) போன்ற காரணிகளினால் சில மக்கள் பலவீனத்திற்கு உள்ளாகலாம். ஆனால், தனிப்பட்ட காரணிகள் மாத்திரம் சவால் தன்னிச்சையாக அதிகரிப்பதற்கான காரணமாக அமையாது. பாரபட்சம் மற்றும் புறக்கணித்தல் (உ-ம்: பெண்கள் மற்றும் சிறுமிகளின் குறைந்த தரம் மற்றும் அதிகாரம்): சுற்றுச் சூழல் தரம் குதைல்: காலநிலை வேறுபாடு: வறுமை: நில உரிமைத்துவம் குறைவு: மோசமான ஆட்சி முறை: இனக் குழு: வகுப்பு அல்லது சாதி: மற்றும் மத அல்லது அரசியல் நம்பிக்கைகள் போன்ற சமூக மற்றும் சூழ்நிலை சார்ந்த காரணிகளை மதிப்பீடு செய்தலானது பலவீனத் தன்மைக்கு பங்களிக்கும். தொடர்ச்சியான ஆழமான மதிப்பீடுகள் சுற்றுச் சூழல் தரங் குறைவின் காரணமாக சவால் முறைகள் மாற்றமடைதல் (உ-ம்: மண்ணரிப்பு அல்லது காடழித்தல்) மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் நிலவியல் (உ-ம்: சூறாவளிகள், வெள்ளப் பெருக்கு, வரட்சி, நிலச்சரிவு மற்றும் கடல் மட்டம் அதிகரித்தல்) போன்ற எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அனர்த்தங்களை அடையாளங் காணக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

7. **தரவு சேகரித்தல் மற்றும் சரிபார்ப்புப் பட்டியல்:** சனத்தொகை நடமாட்டம் மற்றும் எண்ணிக்கை தொடர்பிலான மதிப்பீட்டு தகவல்கள் மீண்டும் பரிசோதிக்கப்பட்டு, உறுதிசெய்யப்பட்டு, இயலுமான வரையில் பல மூலங்களுக்கு குறிப்புதவியாக வழங்கப்படல் வேண்டும். பல்துறை மதிப்பீடுகள் சாத்தியமாக இல்லையெனின், ஏனைய தனிப்பட்ட துறைகள், பாதுகாப்பு மற்றும் எழுந்தமான மதிப்பீடுகளுடனான தொடர்புகள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும். தர மூலங்கள் மற்றும் தரவு பகிர்வின் மட்டங்கள் குறிக்கப்படுவதுடன், ஐந்து வயதுக்கு குறைவான சிறுவர்களின் இறப்பு வீதம் மற்றும் சுகவீனமடையும் வீதம் ஆரம்பத்திலிருந்து ஆவணப்படுத்தப்படல் வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட மனிதநேய தரங்களின் அடிப்படையில் பல மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளன (சில தொழில்நுணுக்க அத்தியாயங்களில் அனுபந்தத்தில் சரிபார்ப்புப் பட்டியலைப் பார்க்கலாம்). சரிபார்ப்புப் பட்டியல் ஏனைய நிறுவனங்கள் தரவைப் பெற்றுக் கொள்வதற்கான மற்றும் பொருத்தமான சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றன. நிறுவன அல்லது தனிப்பட்ட சார்பு இன்றி பிரதான பகுதிகள் பரிசோதனை செய்யப்படுவதனை உறுதி செய்யவும்.

பொதுவான நிறுவனங்களுக்கு இடையிலான மதிப்பீட்டு வடிவம், அனர்த்தத்தின் போது வடிவமைக்கப்படலாம் அல்லது மறுசீரமைப்பின் போது ஏற்றுக் கொள்ளப்படலாம். அனைத்து சந்தர்ப்பங்களிலும், பயன்படுத்தப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும் முறையியலை மதிப்பீடுகள் தெளிவுப்படுத்தல் வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்டவர்கள் மீதான பிரச்சினை தொடர்பான தாக்கம் குறித்த பக்கச்சார்பற்ற தகவல்களையும் வழங்க வேண்டும். சூழ்நிலைக்குப் பொருத்தமான எண்ணிக்கை அடிப்படையிலான மற்றும் தர அடிப்படையிலான முறைகளின் கலப்பு பயன்படுத்தப்படல் வேண்டும். மதிப்பீட்டு அணிகள் இயலுமான வரையில் பால்நிலை கூருணர்வு மிக்க தரவுகளை சேகரிப்பதில் மற்றும் சிறுவர்களுடன் தொடர்பாடலில் திறனுள்ளவர்கள் உள்ளடங்கலாக பெண்கள் மற்றும் ஆண்கள், நிபுணர்கள் என்போரை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். மக்களுக்கு பழக்கமான மொழிகள் மற்றும் இடத்தினை அணிகள் உள்ளடக்க வேண்டும். அத்துடன், கலாசார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகளில் மக்களுடன் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

8. **இயலுமைகளை மதிப்பீடு செய்தல்:** எதிர்கொள்வதற்கும் மற்றும் மீட்சி பெறுவதற்குமான இயலுமைகளை சமுதாயங்கள் கொண்டுள்ளன (**பக்கம் 55**இல் மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும்). எதிர்கொள்ளும் பொறியமைப்புக்கள் பல நிலைத்திருக்கக் கூடியவையாகவும், உதவிகரமானவையாகவும் உள்ளன. அதேவேளை, ஏனையவை சொத்துக்களை விற்றல் அல்லது தீவிரமாக மதுவுக்கு அடிமையாதல் போன்ற நீண்ட காலம் தீங்கு விளைவிக்கக் கூடிய காரணிகளை கொண்ட பாதகமானவையாக இருக்கலாம். நெகிழ்ச்சித் தன்மையை அதிகரிக்கும், அதேவேளை பாதகமான மூலோபாயங்களுக்கான காரணங்களை அதிகரிக்கும் சாத்தியமான மூலோபாயங்களை மதிப்பீடுகள் அடையாளங் காண வேண்டும்.

9. **பாதுகாப்பை மதிப்பீடு செய்தல்:** அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் காவல் தொடர்பிலான மதிப்பீடானது வன்முறையின் அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டாயப்படுத்தல் மற்றும் வாழ்வாதார உதவிகள் அல்லது அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படும் எந்தவொரு வடிவத்தினையும் அடையாளங் காணும் அனைத்து ஆரம்ப மற்றும் தொடர்ச்சியான மதிப்பீட்டாய்வுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும் (**பக்கம் 38**இல் பாதுகாப்பு கோட்பாடு 3ஐப் பார்க்கவும்).

10. **மதிப்பீடுகளை பகிரல்:** மதிப்பீட்டு அறிக்கைகள் பெறுமதியான தகவல்களை ஏனைய மனிதநேய நிறுவனங்களுக்கு வழங்குகின்றன. மேலும், மறுசீரமைப்பு தீர்மானங்களின் அடிப்படை தரவினை உருவாக்குவதுடன், வெளிப்படைத் தன்மையையும் அதிகரிக்கின்றது. தனிப்பட்ட நிறுவன வடிவமைப்பில் வேறுபாடுகளை கவனத்திற் கொள்ளாது, மதிப்பீட்டு அறிக்கைகள் தெளிவாகவும், சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும். நடவடிக்கைக்கான முன்னுரிமைகளை பயன்படுத்துபவர்கள் அடையாளங் காணக் கூடியதாக இருத்தல் வேண்டும். தரவின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவதற்கான முறையியலை விளக்க வேண்டும்.

மிக முக்கியமான தரம் 4: வடிவமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல்

சூழ்நிலை, எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் எதிர்கொள்வதற்கான, மீள்வதற்கான பாதிக்கப்பட்ட மக்களினதும், அரசினதும் இயலுமை என்பவற்றின் அடிப்படையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சனத்தொகையின் மதிப்பிடப்பட்ட தேவைகளை மனிதநேய மறுசீரமைப்பு எட்டுகின்றது.

பிரதான நடவடிக்கைகள (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- தேவைகள், சூழ்நிலை, எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சனத்தொகையின் இயலுமை என்பன தொடர்பான பக்கச்சார்பற்ற மதிப்பீட்டின் அடிப்படையில் நிகழ்ச்சியை வடிவமைத்தல் (பக்கம் 61இல் மிக முக்கியமான தரம் 3இல் பார்க்கவும்).
- அரசு அல்லது பாதிக்கப்பட்ட மக்களால் சந்திக்க முடியாத தேவைகளை எட்டக் கூடியதாக நிகழ்ச்சிகளை திட்டமிடல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அனர்த்தம் இடம்பெற்றவுடன் அடிப்படையான, உடனடியான வாழ்வதற்கான தேவைகளை அடையாளப்படுத்தும், வாழ்க்கையை காப்பாற்றும் நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தல்.
- சிதறச் செய்யப்பட்ட மதிப்பீட்டு தரவுகளைப் பயன்படுத்தி, வேறுபட்ட தனிநபர்கள் மற்றும் மக்களை அனர்த்தமானது எந்த வகையில் பாதிக்கின்றது என்பது தொடர்பில் பகுப்பாய்வு செய்தல். அத்துடன், அவர்களுடைய குறிப்பிடத்தக்க தேவைகளை எட்டுவதற்கான நிகழ்ச்சியை வடிவமைத்தல்.
- பலவீனமான மக்கள் உதவி மற்றும் பாதுகாப்பு சேவைகளை முழுமையாக பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மறுசீரமைப்பை வடிவமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் மக்களின் கண்ணியத்தின் அனைத்து அம்சங்களையும், நிகழ்ச்சி வடிவமைப்பதனையும், அணுகுவதனையும் உறுதி செய்தல் (பக்கம் 55இல் மிக முக்கியமான தரம் 1ஐயும், வழிகாட்டல் குறிப்பு 3ஐயும் பார்க்கவும்).
- மக்களின் பலவீனத் தன்மையை அதிகரிக்கும் சூழ்நிலை சார்ந்த காரணிகள் அனைத்தையும் பகுப்பாய்வு செய்தல். அவர்களுடைய பலவீனத் தன்மையை தொடர்ச்சியாக குறைப்பதற்கான நிகழ்ச்சிகளை வடிவமைத்தல் (பக்கம் 61இல் மிக முக்கியமான தரம் 3ஐயும், வழிகாட்டல் குறிப்பு 4ஐயும் பார்க்கவும்).
- மக்களுக்கு இடர் ஏற்படுத்தும் அபாயங்களை, மோதலின் தாக்கத்தை மோசமாக்கும் அல்லது பாதுகாப்பு இன்மையை உருவாக்கும் அல்லது சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகளை குறைப்பதற்கான

நிகழ்ச்சிகளை வடிவமைத்தல். (வழிகாட்டல் குறிப்பு 5ஐயும், பக்கம் 33இல் பாதுகாப்பு கோட்பாடு 1ஐயும் பார்க்கவும்).

- மதிப்பிடப்பட்ட நிலைமைகள் மற்றும் ஸ்பியர் அடிப்படைத் தரங்கள், எட்டப்படும்/ மீறப்படும் ஸ்பியர் குறிகாட்டிகள் என்பவற்றுக்கு இடையிலான இடைவெளியை சிறிது சிறிதாக குறைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- துரித மீளமைப்பு, அபாய குறைப்பு மற்றும் எதிர்கால அனர்த்தங்களின் தாக்கத்தை தடுப்பதற்கு, குறைப்பதற்கு அல்லது சிறந்த வகையில் எதிர்கொள்வதற்கு பாதிக்கப்பட்ட மக்களின் இயலுமையை அதிகரிக்கும் நிகழ்ச்சிகளை வடிவமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- சம்பந்தப்பாடு மற்றும் பொருத்தப்பாட்டினை பேணுவதற்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சியை தொடர்ந்து உள்வாங்கல் (பக்கம் 68இல் மிக முக்கியமான தரம் 5ஐப் பார்க்கவும்).
- நிகழ்ச்சி திட்டமிடலில் ஆரம்ப நிலைகளின் போது பாதிக்கப்பட்ட சமூகத்துடன் நடைமுறையில் உள்ள மூலோபாயங்களுக்கு திட்டமிடல் மற்றும் தொடர்பாடல் மூலம் நிலைத்திருக்கக் கூடிய மீட்சியை பரவலாக்கல்.

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- வேறுபட்ட குழுக்களைச் சேர்ந்த மக்களால் எதிர்நோக்கப்படும் விசேட தேவைகள் மற்றும் சவால்களின் பகுப்பாய்வின் அடிப்படையில் நிகழ்ச்சி வடிவமைக்கப்படுகின்றது.
- மக்களின் தேவைகள் மற்றும் அவற்றை எட்டுவதற்கான அரசின் இயலுமை ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியை நிகழ்ச்சி வடிவமைப்பு அடையாளப் படுத்துகின்றது.
- சூழ்நிலைகள், சவால்கள் மற்றும் மக்களின் தேவைகள் மற்றும் இயலுமைகளின் போது மாற்றங்களை பிரதிபலிப்பதற்காக நிகழ்ச்சி வடிவமைப்புக்கள் திருத்தப்பட்டுள்ளன.
- எதிர்கால அனர்த்தங்களுக்கு மக்களின் பலவீனத் தன்மையை குறைப்பதற்கும் மற்றும் அவற்றை எதிர்கொள்வதற்கும், முகாமை செய்வதற்குமான இயலுமையை அதிகரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை நிகழ்ச்சி வடிவமைப்பு உள்ளடக்குகின்றது.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **ஆதரவளிக்கும் நடைமுறையில் உள்ள இயலுமை:** பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க நேரத்தில் உதவி மற்றும் பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பிரதானமான பாத்திரம் மற்றும் பொறுப்பாகும் **(பக்கம் 20**இல் மனிதநேய சாசனம் பந்தி 2ஐப் பார்க்கவும்). பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும்/அல்லது அரசிடம்

பிரதிபலிப்பதற்கான போதிய இயலுமை இல்லையெனின் (மிக முக்கியமாக மறுசீரமைப்பின் ஆரம்ப கட்டத்தில்) அல்லது அரசு/கட்டுப்படுத்தும் அதிகாரிகள் செயற்றிறன் மிக்க வகையில் குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த மற்றும்/ அல்லது பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக பாரபட்சத்தை வெளிப்படுத்தும் போது தலையீடு புரிதல். அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களை நோக்கிய அரசாங்கத்தின் இயலுமை மற்றும் முயற்சிகள் மனிதநேய மறுசீரமைப்பின் வீச்சு மற்றும் வகையை விளக்கும்.

2. **பிரவேசம்:** பாரபட்சமின்றி தேவையுள்ளவர்களுக்கு உதவி வழங்கப்படல் (**பக்கம் 36**இல் பாதுகாப்பு கோட்பாடு 2ஐப் பார்க்கவும்). நிதிக்கான மக்களின் பிரவேசம் மற்றும் உதவியினை பயன்படுத்தல் மற்றும் அதில் இருந்து பயன் பெறுவதற்கான இயலுமை என்பன தக்க நேரத்திலான தகவல் ஊடாக மற்றும் குறிப்பிட்ட தேவைகளுடன் பொருத்தமாக அவற்றை வடிவமைத்தல் மற்றும் கலாசார மற்றும் பாதுகாப்பு அக்கறைகள் ஊடாக (உதாரணமாக, உணவு விநியோகத்தின் போது வயதானவர்கள் அல்லது சிறுவர்களுடன் உள்ள பெண்களுக்கு தனியான வரிசை) அதிகரிக்கும். வடிவமைப்பில் பெண்கள், ஆண்கள், சிறுமிகள் மற்றும் சிறுவர்கள் என அனைத்து வயதுப் பிரிவினரதும் பங்குபற்றலுடன் அது பரவலாகும். அவதானமாக வடிவமைக்கப்பட்ட இலக்கு அளவுகோல் மற்றும் பரவலாக தொடர்பாடப்பட்ட செயற்பாடுகள் சமூகத்தினால் புரிந்துகொள்ளப்பட வேண்டியதுடன், முறையாக கண்காணிக்கப்படல் வேண்டும். தமது பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள வசதிகள் பாதுகாப்பனவை போன்ற குறிப்பிட்ட வடிவமைப்பின் மூலம் சமத்துவமான பிரவேசத்தை வசதியளிப்பதற்கான நடவடிக்கைகளை தொழில் நுணுக்க அத்தியாயங்கள் விளக்குகின்றன.

3. **கண்ணியத்துடன் வாழ்வதற்கான அடிப்படை** என்பது அடிப்படை சேவைகள், பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பு ஆகியவற்றை பெறுவதற்கான உறுதியாகும் (**பக்கம் 19**இல் மனிதநேய சாசனத்தைப் பார்க்கவும்). அதே சந்தர்ப்பத்தில், மனிதநேய மறுசீரமைப்பானது நடைமுறைப்படுத்தப்படும் வழியானது, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணியம் மற்றும் நலனில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு தனிநபரினதும் உள்ளார்ந்த பெறுமதியை மதிக்கும் நிகழ்ச்சி அணுகுமுறைகள், அவர்களது மத மற்றும் கலாசார அடையாளத்துக்கு ஆதரவு வழங்குகின்றன, சமுதாயஞ் சார்ந்த சுய உதவியை மேம்படுத்துகின்றன. அத்துடன், சாதகமான சமூக உதவி வலையமைப்புக்களை ஊக்குவிக்கின்றன. இவை அனைத்தும் உளச்சமூக நலனுக்கு துணை புரிகின்றன. மேற்கூறப்பட்டவை அனைத்தும், மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான அத்தியாவசியமான அம்சங்களாகும்.

4. **சூழ்நிலை மற்றும் பலவீனத் தன்மை:** அனர்த்தங்களுக்கு மக்கள் இலக்காகுவதற்கான சந்தர்ப்பத்தை சமூக, அரசியல், கலாசார, பொருளாதார, மோதல் மற்றும் இயற்கை சுற்றுச் சூழல் காரணிகள் அதிகரிக்கின்றன. சூழ்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதானது, புதிததாக பலவீனமான மக்களை உருவாக்கும் (பக்கம் 61இல் மிக முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும்). பலவீனமான மக்கள் ஒரே சந்தர்ப்பத்தில் பல காரணிகளை எதிர்நோக்குவர் (உதாரணமாக, ஒதுக்கப்பட்ட

இனக் குழுக்களின் உறுப்பினர்களாக இருக்கும் வயதான மக்கள்). சவாலை அதிகப்பட்சமாக்கியுள்ள தனிப்பட்ட மற்றும் சூழ்நிலை சார்ந்த காரணிகளுக்கு இடையிலான பாத்திரமானது பகுப்பாய்வு செய்யப்பட்டு, அந்த சவால்களை அடையாளங் காண்பதற்கான மற்றும் தணிப்பதற்கான, பலவீனமான மக்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படல் வேண்டும்.

5. **முரண்பாட்டு கூருணர்வு:** மனிதநேய உதவிகளில் எதிர்பாராத பாதகமான விளைவுகள் இருக்கும். பெறுமதி மிக்க உதவி வளங்கள் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்தை அதிகரிக்கும். அத்துடன், போட்டி, தவறான பிரயோகம் அல்லது பொருத்தமற்ற உதவி என்பதற்கு அவை காரணமாக அமையும். பஞ்சம் என்பது யுத்தத்தின் கருவி ஆகும் (உ-ம்: வேண்டும் என்றே குறிப்பிட்ட பகுதியில் மக்களை இல்லாது செய்தல் அல்லது சொத்து பரிமாற்றத்துக்கு நிர்ப்பந்தித்தல்). உதவியானது பரந்த மக்கள் தொகையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன், ஆண்கள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக வேறுபட்ட குழுக்களுக்கு இடையில் சமத்துவமற்ற அதிகார உறவுகளை தூண்டும். மோதல் மற்றும் பாதுகாப்பின்மை அதிகரிப்பதற்கான உதவி வழங்கப்படும் சாத்தியத்தை குறைப்பதற்கு அவதானமான பகுப்பாய்வு மற்றும் வடிவமைப்பு முன்னெடுக்கப்படல் வேண்டும் (இயற்கை அனர்த்தத்தின் போதான நிலைமைகள் உள்ளடங்கலாக). சமத்துவமான விநியோகம் மற்றும் பக்கச்சார்பற்ற இலக்கு வைத்தல் என்பவற்றை உதவியில் உறுதி செய்யும் வகையில் வடிவமைத்தல். தனிப்பட்ட தகவல்களின் அந்தரங்கத் தன்மையை மதிப்பதன் ஊடாக மக்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை காப்பாற்றல். உதாரணமாக, எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸுடன் வாழும் மக்கள் களங்கத்துக்கு உள்ளாக்கப்படலாம். மனித உரிமை மீறல்களில் இருந்து தப்பியவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத் தன்மை தொடர்பான உதவி உத்தரவாதமளிக்கப்படல் வேண்டும் (**பக்கம் 61**இல் மிக முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும்).

6. **ஸ்பியர் அடிப்படைத் தரங்களை எட்டுதல்:** அடிப்படைத் தரங்களை எட்டுவதற்கான கால அவகாசமானது சூழ்நிலையின் அடிப்படையில் தங்கியுள்ளது. அது வளங்கள், பிரவேசம், பாதுகாப்பின்மை மற்றும் அனர்த்தத்திற்கு முன்னரான பகுதியின் வாழ்வதற்கான தரங்கள் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே சமூகத்தில் இருக்கும் மற்றும்/அல்லது பரந்த சமூகத்திற்கு வழங்கப்படும் தரங்களை மேவியதாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுவது பதட்டத்தை தோற்றுவிக்கும். அத்துடன், அவர்களது நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும். வேறுபாடுகளை குறைப்பதற்கான மூலோபாயங்களை வடிவமைத்தல். உதாரணமாக, தங்க இடம் அளிக்கும் மக்களின் தரங்களை அதிகரிப்பதற்கு பரந்த இயற்கை சுற்றுச் சூழலில் மற்றும் பொருளாதாரத்தில் மறுசீரமைப்பின் பாதகமான தாக்கங்களை தணித்தல். இயலுமாயின் மற்றும் இயலுமான சந்தர்ப்பத்தில், மறுசீரமைப்பில் தங்க இடம் அளிக்கும் மக்களை உள்ளடக்குவதற்கான வீச்சளவை அதிகரித்தல். .

7. **துரித மீளமைப்பு மற்றும் சவால் குறைப்பு:** ஆரம்ப சந்தர்ப்பத்தில் உள்ளூர் வளங்களுடன் உள்ளூர் இயலுமைப் பணியை வலுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சேவைகள், கல்வி, சந்தைகள் மற்றும்

வாழ்வாதார சந்தர்ப்பங்களை மீளமைத்தல் என்பன துரித பொருளாதார மீளமைப்பை மேம்படுத்துவதுடன், புற உதவிகள் நிறைவடைந்தவுடன் சவாலை எதிர்கொள்வதற்கான மக்களின் இயலுமையை மேம்படுத்துவதற்கு உதவி புரியும் (**பக்கம் 55** இல் மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும்). மனிதநேய மறுசீரமைப்பானது எதிர்கால தலைமுறையின் வாழ்க்கையின் தரத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடாது. அத்துடன், எதிர்கால அனர்த்தங்களுக்கு வழி கோலவும் கூடாது (உதாரணமாக, காடழித்தல் மற்றும் இயற்கை வளங்களின் நிலையற்ற பயன்பாடு). வாழ்க்கைக்கான உடனடி அச்சுறுத்தல்கள் உருவானவுடன், தற்போதைய மற்றும் (பல்வகை) சாத்தியமான எதிர்கால அச்சுறுத்தல்களை (காலநிலை மாற்றத்தால் உருவாகுவதனைப் போன்ற) பகுப்பாய்வு செய்யவும். எதிர்கால அச்சுறுத்தல்களை குறைப்பதற்கு ஏற்ற நிகழ்ச்சிகளை வடிவமைக்கவும். உதாரணமாக, மறுசீரமைப்பின் போது அனர்த்தக் குறைப்பு மற்றும் பாதுகாப்பான பகுதியை கட்டியெழுப்பல் போன்றவற்றிற்கு முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளவும். நில அதிர்வு மற்றும் சூறாவளிக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய வீடுகளை அமைத்தல், காற்று அலையினை உள்ளிழுக்கக் கூடிய நீர் நிலங்களை பாதுகாத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை மற்றும் அனர்த்த முன்னாயத்தம் என்பவற்றில் கொள்கை அபிவிருத்தி மற்றும் சமுதாய அடிப்படையிலான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கல் போன்றன உதாரணங்களில் உள்ளடங்கும்.

மிக முக்கியமான தரம் 5: செயற்றிறன், வெளிப்படைத் தன்மை மற்றும் கற்றல்.

மனிதநேய நிறுவனங்களின் செயற்றிறன் தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், பங்குதாரர்களுக்கும் தொடர்பாடல் செய்யப்பட்டு வருகின்றது. செயற்றிறனின் அடிப்படையிலேயே செயற்றிட்டங்கள் உள்வாங்கப்படுகின்றன.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனைத்து சம்பந்தப்பட்ட ஸ்பியர் தரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் உள்ள கோட்பாடுகள், வெளியீடுகள் மற்றும் நடவடிக்கைகளை நோக்கிய தேர்ச்சியின் கண்காணிப்புக்கு முறையான மற்றும் எளிமையான, நேரத்திற்கு ஏற்ற மற்றும் பங்குபற்றல் பொறியமைப்புக்களை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் தர கட்டுப்பாட்டு முறைமைகளுக்கு அமைவானதாக நிறுவனத்தின் முழுமையான செயற்றிறனை கண்காணிப்பதற்கு அடிப்படை பொறியமைப்புக்களை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).

- விளைவுகளை கண்காணிக்கவும். இயலுமாயின், பாதிக்கப்பட்ட மற்றும் பரந்த மக்கள் தொகையில் மனிதநேய மறுசீரமைப்பின் துரித தாக்கத்தை கண்காணிக்கவும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

- தரவுகளை கண்காணித்தல், தேவைகளை மாற்றல் மற்றும் உள்ளடங்கும் சூழ்நிலை என்பவற்றுக்குப் பதிலாக நிகழ்ச்சி மூலோபாயங்களை உள்வாங்குவதற்கு முறையான பொறியமைப்புக்களை உருவாக்கல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

- மறுசீரமைப்பின் நடைமுறைப்படுத்தல் முழுவதிலும் பருவகால பிரதிபலிப்பு மற்றும் கற்றல் பயிற்சிகளை முன்னெடுக்கவும்.

- நிகழ்ச்சியின் குறிக்கோள்கள், கோட்பாடுகள் மற்றும் இணங்கப்பட்ட அடிப்படைத் தரங்கள் என்பவற்றின் அடிப்படையில் இறுதி மதிப்பீட்டாய்வை அல்லது நிகழ்ச்சியின் வேறு வடிவிலான குறிக்கோள் கற்றல் மீளாய்வினை முன்னெடுக்கவும் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

- இயலுமாயின், இணைந்த, நிறுவனங்களுக்கு இடையிலான மற்றும் வேறு ஒத்துழைப்புடனான கற்றல் முயற்சிகளில் பங்குபற்றவும்.

- பிரதான கண்காணித்தல் முடிவுகளை பகிர்ந்து கொள்ளவும். பொருத்தமான சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்ட சமூகத்துடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் மற்றும் ஒருங்கிணைத்தல் குழுக்களுடன் உரிய நேரத்தில் மதிப்பீட்டாய்வின் முடிவுகள் மற்றும் வேறு பிரதான கற்றல் செயற்பாடுகளை பகிர்ந்து கொள்ளவும் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- கண்காணித்தல் மற்றும் கற்றல் தகவலின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் உள்வாங்கப்படல் வேண்டும்.

- மறுசீரமைப்பில் இலக்கு வைக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை, அதேபோன்று, வேறுபட்டதாக இருப்பின் தங்க இடம் அளித்த சமுதாயம் என்பவற்றின் கருத்துக்கள் உள்ளடங்கலாக மூலங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வு செய்தல்.

- நேர்த்தியான, புதுப்பிக்கப்பட்ட, அந்தரங்கத் தன்மையற்ற தேர்ச்சி தகவல்கள் மறுசீரமைப்பில் இலக்கு வைக்கப்பட்ட மக்களுடன் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகள் மற்றும் வேறு மனிதநேய நிறுவனங்களுடன் தொடர்ச்சியான அடிப்படையில் பகிரப்படும்.

- ஸ்பியரின் முக்கியமான மற்றும் சம்பந்தப்பட்ட தொழில் நுணுக்க அடிப்படை தரங்களின் (சம்பந்தப்பட்ட உலக அல்லது நிறுவன தேர்ச்சி தரங்களின்) அடிப்படையில் தேர்ச்சியானது தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும். அத்துடன், பிரதான பங்குதாரர்களுடன் முக்கியமான பெறுபேறுகள் பகிரப்படும் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

- மதிப்பீட்டாய்வு நடவடிக்கையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களின் அடிப்படையில் பிரதான மனிதநேய மறுசீரமைப்பின் குறிக்கோள் மதிப்பீட்டாய்வு அல்லது கற்றல் மீளாய்வு என்பவற்றை நிறுவனங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்)..

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **கண்காணிப்பானது** எதிர்பார்ப்புக்களை, பெறுபேறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும். செயற்றிட்ட குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகளுக்கு எதிரான செயற்பாட்டை இதன் மூலம் கண்டறியலாம். அத்துடன், பலவீனத் தன்மையையும், சூழ்நிலையில் அதன் தாக்கத்தையும் அளவெடுக்கும். கண்காணித்தல் தகவல்கள் செயற்றிட்ட மீட்டல்களுக்கு வழிகாட்டும். இலக்கு வைக்கப்படும் பிரமாணங்களை உறுதி செய்யும். அத்துடன், எதிர்பார்க்கப்பட்ட மக்களுக்கு உதவி செல்கின்றதா என்பதனையும் உறுதி செய்யும். சமுதாய பின்னூட்டத்திற்கு தீர்மானம் எடுப்பவர்களுக்கு பிரதிபலிக்கக் கூடிய இயலுமையை அது ஏற்படுத்தும். அத்துடன், வெளிக்கிளம்பும் பிரச்சினைகளையும் மற்றும் வடிவத்தையும் அடையாளங் காண அது உதவும். தகவல்களை வழங்கவும், அது போன்று சேகரிக்கவும் நிறுவனங்களுக்கு இது சிறந்த சந்தர்ப்பமாக உள்ளது. எண்ணிக்கை அடிப்படையிலான மற்றும் தர அடிப்படையிலான தரவுகளை பொருத்தமான வகையில் ஒன்றாக சேர்ப்பதன் மூலம் மற்றும் தொடர்ச்சியான அறிக்கையிடலை பேணுவதன் மூலம் குறிப்பிட்ட நிகழ்ச்சி மற்றும் சூழ்நிலைக்கு பொருத்தமான முறைகளை தெரிவு செய்வதற்கு பயனுள்ள கண்காணிப்பு உதவி புரியும். தகவல்களை கண்காணித்தல் தொடர்பான பகிரங்கத் தன்மை மற்றும் தொடர்பாடல் (வெளிப்படைத் தன்மை) பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நம்பகத் தன்மையை அதிகரிக்கின்றன. மக்களால் முன்னெடுக்கப்படும் கண்காணிப்பானது, தகவல் தொடர்பான வெளிப்படைத் தன்மையை விஸ்தரிப்பதுடன், தரம் மற்றும் மக்களின் உரிமைத்துவத்தையும் பரவலாக்குகின்றது. தரவின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு மற்றும் பயனர்கள் தொடர்பில் தெளிவுத் தன்மையானது, எது சேகரிக்கப்படல் வேண்டும் மற்றும் எவ்வாறு அவை சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதனை தீர்மானிக்கின்றன. பகிரல் மற்றும் தீர்மானம் எடுத்தலுக்கு உதவி புரியக் கூடிய சுருக்கமான பிரவேசிக்கக் கூடிய வடிவத்தில் தரவுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. **நிறுவன செயற்றிறன்** அதன் நிகழ்ச்சி வெற்றிகளின் எல்லையை அளவிடுவதில் மாத்திரம் தங்கியதாக இல்லை. நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடு, ஏனைய நிறுவனங்களுடனான உறவு, மனிதநேய நடவடிக்கைகளில் சிறந்த பயிற்சி, நடத்தைகள் மற்றும் கோட்பாடுகளை பின்பற்றல் மற்றும் அதன் முகாமைத்துவ முறையின் பயனுறுதி, வினைத்திறன் போன்ற அம்சங்களின் அடிப்படையில் அதன் தேர்ச்சியை அது உள்ளடக்குகின்றது. நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு Groupe URD's Quality Compas போன்ற தர உறுதி அணுகுமுறைகள் பயன்படுத்தப்படலாம்.

3. **தாக்கத்தை கண்காணித்தல்:** அதிகரித்த அளவில், தாக்க மதிப்பீடானது (குறுகிய மற்றும் நடுத்தர கால, சாதகமான அல்லது பாதகமான, எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத இடையீடுகளின் பரந்த தாக்கங்கள்) மனிதநேய மறுசீரமைப்புக்கு

சாத்தியமான மற்றும் அத்தியாவசியமானதாக பார்க்கப்படுகின்றது. தாக்க மதிப்பீடு என்பது மிகவும் முக்கியமான வெளிக்கிளம்பி வரும் பகுதியாகும். வேறுபட்ட மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு அற்ற மக்கள் மற்றும் சூழ்நிலையில் மாற்றத்தை கொண்டு வரும் குறிப்பிட்ட மனிதநேய பங்களிப்புக்களை அது இணைக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களே தமது வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வருவதற்கான சிறந்த நீதிபதிகளாக இருக்கின்றனர். இருப்பினும், விளைவுகள் மற்றும் தாக்க மதிப்பீடு என்பனவற்றில் மக்களின் பின்னூட்டங்கள், திறந்த செவிமடுத்தல் மற்றும் வேறு பங்குபற்றல் தர அணுகுமுறைகள் மாத்திரமின்றி, எண்ணிக்கை அடிப்படையிலான அணுகுமுறைகளையும் உள்ளடக்கல் வேண்டும்.

4. **பொருத்தப்பாட்டை பேணல்:** நிகழ்ச்சியானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியான வகையில் சம்பந்தப்பட்டுள்ளதா என்பதனை பருவகால அடிப்படையில் பரிசோதிக்கும் கண்காணித்தல் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதன் முடிவுகளின் அடிப்படையில் பொருத்தமாயின் நிகழ்ச்சியில் திருத்தங்களை கொண்டு வர முடியும்.

5. **செயற்றிறனை பரிசோதிப்பதற்கான முறைகள்:** வேறுபட்ட அணுகுமுறைகள் வேறுபட்ட செயற்றிறன், கற்றல் மற்றும் பொறுப்புடைமை நோக்கங்கள் என்பவற்றுக்கு பொருந்தும். கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வு, பங்குபற்றல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் செவிமடுத்தல் பயிற்சிகள், தர உத்தரவாத கருவிகள், கணக்காய்வுகள் மற்றும் உள்ளக கற்றல் மற்றும் பிரதிபலித்தல் பயிற்சிகள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட வித்தியாசமான முறைகள் பயன்படுத்தப்படலாம். நிறுவன கொள்கைகள் மற்றும் எதிர்கால நிகழ்ச்சிகளுக்கான மாற்றங்களை பரிந்துரை செய்யக் கூடியதாக வழமையாக மறுசீரமைப்பின் இறுதியிலேயே நிகழ்ச்சி மதிப்பீட்டாய்வுகள் முன்னெடுக்கப்படும். செயற்றிறன் கண்காணித்தல் மற்றும் உண்மையான நேரம் மதிப்பீட்டாய்வு என்பன மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே நடத்தப்படும். அது கொள்கை மற்றும் பயிற்சியில் உடனடியான மாற்றத்திற்கு வழி வகுக்கும். மதிப்பீட்டாய்வுகள் பொதுவாக சுயாதீன, புற மதிப்பீட்டாய்வாளர்களினால் முன்னெடுக்கப்படும். ஆனால், உள்ளக ஊழியர் உறுப்பினர்களும் நிகழ்ச்சியின் மதிப்பீட்டாய்வினை முன்னெடுக்க முடியும். ஆனால், அவர்கள் குறிக்கோள் அணுகுமுறையை கவனத்திற் கொண்டிருக்க வேண்டும். இதன் மூலம் புரிந்து கொள்ளக் கூடிய விடயமாக இருப்பது, மறுசீரமைப்பில் ஈடுபட்டுள்ள நிறுவன ஊழியர்களால் மதிப்பீட்டாய்வு முன்னெடுக்கப்படக் கூடாது என்பதாகும். DAC (அபிவிருத்தி உதவி குழு - Development Assistance Committee) என அறியப்பட்ட பிரமாணம், பொருத்தப்பாடு, சம்பந்தப்பாடு, இணைப்பு, தொடர்ச்சி, உள்ளடக்கம், வினைத்திறன், பயனுறுதி மற்றும் தாக்கம் ஆகிய எட்டு பரிமாணங்களின் தொகுதியை மனிதநேய மதிப்பீட்டாய்வு பொதுவாக பயன்படுத்துகின்றது.

6. **துறைசார் செயற்றிறன்:** ஒவ்வொரு நிறுவனத்தினதும் தேர்ச்சி தொடர்பில் ஸ்பியர் அடிப்படைத் தரங்களை நோக்கியதாக, ஒருங்கிணைப்பு குழுக்களின் உதவியுடன், பரந்த கண்காணித்தலுக்கு பிரதிபலிக்கக் கூடியதாக தகவல்களை பரிமாறல். அத்துடன், துறை சார்ந்த செயற்றிறன் தரவுக்கு பெறுமதியான மூலத்தை உருவாக்கல்.

மிக முக்கியமான தரம் 6: உதவிப் பணியாளர் செயற்றிறன்

பொருத்தமான முகாமைத்துவம், மேற்பார்வை மற்றும் உளச்சமூக உதவி, உதவிப் பணியாளர்களுக்கு தேவையான மனிதநேயம் மற்றும் மதிப்புடன் மனிதநேய மறுசீரமைப்பை திட்டமிடுவதற்கும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குமான அறிவு, திறன்கள், உளப்பாங்குகள் மற்றும் நடத்தைகள் என்பவற்றை மனிதநேய நிறுவனங்கள் வழங்குகின்றன

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பயனுறுதி மிக்க வகையில் பிரதான கொள்கைகள் மற்றும் மூலங்களுடன் முகாமை செய்வதற்கு பொருத்தமான தலைமைத்துவ பயிற்சி, பரிச்சயம் என்பவற்றை முகாமையாளர்களுக்கு வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- பொருத்தமான வேட்பாளர்களின் அதிகூடிய எண்ணிக்கையை கவர்வதற்கு முறையான, நீதியான மற்றும் வெளிப்படையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளை ஸ்தாபித்தல்.
- பெண்கள் மற்றும் ஆண்கள், இனக்குழு, வயது மற்றும் சமூக பின்புலங்கள் என்பவற்றின் சமத்துவத்தின் அடிப்படையில் அணிகளை இணைத்தல். எனவே, குழுவின் பல்வகைத் தன்மை உள்ளூர் கலாசாரம் மற்றும் சூழ்நிலைக்கு அவை பொருத்தமானதாக இருக்கும்.
- தமது பொறுப்புக்கள், பணி குறிக்கோள்கள், நிறுவன விழுமியங்கள், பிரதான கொள்கைகள் மற்றும் உள்ளூர் சூழ்நிலை தொடர்பில் போதிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கு போதிய மற்றும் தக்க நேரத்திற்கான அறிமுகம், விளக்கங்கள், தெளிவான அறிக்கையிடல் மட்டங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட வேலைப் பொறுப்புக்கள் என்பவற்றை உதவிப் பணியாளர்களுக்கு (ஊழியர்கள், தன்னார்வ தொண்டர்கள் மற்றும் ஆலோசகர்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இரண்டினையும் சார்ந்த) வழங்கல்.
- பாதுகாப்பு மற்றும் அப்புறப்படுத்தல் வழிகாட்டிகளை, சுகாதார மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை ஸ்தாபித்தல். நிறுவனத்துடன் உதவிப் பணியாளர்கள் தமது பணியினை ஆரம்பிப்பதற்கு முன்னர், அவற்றை பயன்படுத்துவது தொடர்பில் அவர்களுக்கு போதிய விளக்கத்தினை வழங்கல்.
- மருத்துவ பராமரிப்பு மற்றும் உளச்சமூக ஆதரவுக்கு உதவிப் பணியாளருக்கு போதிய பிரவேச சந்தர்ப்பம் இருப்பதனை உறுதி செய்தல்.
- உதவிப் பணியாளர்களின் தனிப்பட்ட நடத்தைக்கான ஒழுக்கக் கோவையை அமைத்தல். அது அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பாலியல் துஷ்பிரயோகம், ஊழல், சுரண்டல் மற்றும் மனித உரிமைகள் சார்ந்த வேறு வன்முறைகளில் இருந்து பாதுகாப்பதற்கு துணை புரியும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

- அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மதிப்பதற்கான கலாசாரத்தை உதவிப் பணியாளர்கள் மத்தியில் உருவாக்கல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- முறைப்பாடு தெரிவிப்பதற்கான நடைமுறைகளை நிறுவுதல். அத்துடன், நிறுவனத்தின் நன்னடத்தைக் கோவை மீறல் புரிந்தமை உறுதி செய்யப்படுமிடத்து, உதவிப் பணியாளருக்கு எதிராக பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.
- ஊழியர் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் தொடர்பில் தொடர்ச்சியான மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல். பணி குறிக்கோள்கள், அறிவு, திறன்கள், நடத்தைகள் மற்றும் உளப்பாங்கு தொடர்பில் செயற்றிறன் பின்னூட்டத்தை வழங்கல்.
- தமது வேலைப் பளுவை முகாமை செய்வதற்கும், அழுத்தத்தை குறைப்பதற்கும் உதவிப் பணியாளர்களுக்கு உதவி வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்.
- ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்கள் தொடர்ச்சியான கற்றல் மற்றும் அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த சந்தர்ப்பங்களை அடையாளங் காண்பதற்கு உதவுதல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- மிகவும் மோசமான துயரத்தை அனுபவித்த உதவிப் பணியாளர்களுக்கு பொருத்தமான உதவிகளை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஊழியர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களின் செயற்றிறன் மீளாய்வானது போதிய திறன் மட்டங்களுடன் சம்பந்தப்பட்ட அவர்களது அறிவு, திறன்கள், நடத்தைகள், உளப்பாங்குகள் மற்றும் வேலைப் பொறுப்புக்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் என்பவற்றை குறிப்பிடுகின்றது.
- நன்னடத்தை கோவையை மீறும், ஊழல் மற்றும் துஷ்பிரயோக நடத்தையை வெளிப்படுத்தும் உதவிப் பணியாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
- கோட்பாடுகள் அல்லது அதனைப் போன்ற People In Aid Code of Good Practice என்பன நிறுவனத்தின் கொள்கை மற்றும் பயிற்சியில் பிரதிபலிக்கப்படல் வேண்டும்.
- உதவிப் பணியாளர்களின் சுகவீனம், காயமடைதல் மற்றும் மன அழுத்தம் சம்பந்தப்பட்ட சுகாதார விடயங்கள் சார்ந்த சம்பவங்கள் அனர்த்த மறுசீரமைப்பின் போது மாற்றமடையாது அல்லது குறைவடையாது காணப்படல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **முகாமைத்துவ நல் பயிற்சி:** மக்கள் முகாமைத்துவ முறையானது நிறுவனம் மற்றும் சூழ்நிலையில் தங்கியுள்ளது. ஆனால் முகாமையாளர்கள் மற்றும்

மேற்பார்வையாளர்கள் அது தொடர்பில் பழக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இதில் திட்டமிடல், ஆட்சேர்ப்பு, முகாமைத்துவம், கற்றல் மற்றும் அபிவிருத்தி, ஒப்பந்த காலத்தின் நிறைவில் நிலைமாற்றம் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பரவலமர்த்தல் என்பவற்றுக்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் உள்ளடங்குகின்றன.

2. **ஆட்சேர்ப்பு நடைமுறைகள்** அனைத்து ஊழியர்கள் மற்றும் விண்ணப்பதாரிகளுக்கும் பகிரங்கமானதாக மற்றும் புரிந்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். அந்த வெளிப்படைத் தன்மையில் ஒவ்வொரு பதவி நிலைக்குமான புதுப்பிக்கப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பணி விளக்கங்களின் அபிவிருத்தி மற்றும் பகிரல் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும். அத்துடன், பல்வகைத் தன்மை மற்றும் திறன் மிக்க அணியினை கட்டியெழுப்ப வேண்டியதும் அத்தியாவசியமாகும். தேவையான வகையில் புதிய ஆட்சேர்ப்பின் மூலம் பொருத்தப்பாடு மற்றும் பல்வகைத் தன்மை என்பவற்றை தற்போதுள்ள குழு அதிகரிக்க முடியும். துரித ஊழியர் பரவலாக்கல் என்பது அனுபவமற்ற அணி உறுப்பினர்களை ஆட்சேர்ப்பதற்கு வழி வகுக்கும். அந்த சந்தர்ப்பங்களில் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு அனுபவமிக்க ஊழியர்கள் உதவி வழங்க வேண்டும்

3. பெறுமதி மிக்க உதவி வளங்கள் மீதான முகாமைத்துவம் மற்றும் ஒதுக்கீடு தொடர்பான **உதவிப் பணியாளர்களின் கட்டுப்பாடானது** அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீதான அவர்களது அதிகாரத்தின் நிலையை வெளிப்படுத்தும். உதவி வழங்கலின் போது மக்கள் மீதான அவ்வாறான அதிகாரங்கள் மற்றும் அவர்களது பாதுகாப்புத் திறன் மிக்க சமூக வலையமைப்புக்கள் பாதிக்கப்படும் போது அல்லது அழிக்கப்படும் போது ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் இடம்பெற வாய்ப்பு ஏற்படும். பெண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத் திறன் உடையவர்கள் என்போர் வழமையாக பலாத்காரமான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். மனிதநேய உதவி அல்லது பாதுகாப்பின் போது பரிமாற்றமாக ஒருபோதும் பாலியல் நடவடிக்கையானது நிர்ப்பந்திக்கப்படக் கூடாது. மனிதநேய மறுசீரமைப்பில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தனிநபரும் (உதவிப் பணியாளர்கள் மற்றும் இராணுவம், அரச அல்லது தனியார் துறை நிபுணர்) துஷ்பிரயோகம், ஊழல் அல்லது பாலியல் சுரண்டலில் ஈடுபட முடியாது. இளைஞர்கள் அல்லது சிறுவர்களை பலவந்தமாக தொழிலில் அமர்த்தல், சட்டவிரோத போதைப் பொருள் பாவனை மற்றும் மனிதநேய உதவிப் பொருட்களை மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் என்பனவும் தவிர்க்கப்படல் வேண்டும்.

4. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் விழுமியங்கள் மற்றும் கண்ணியத்தினை **உதவிப் பணியாளர்கள் மதிக்க வேண்டும்.** அத்துடன், அவர்களுக்கு கலாசார ரீதியாக ஒத்து வராத நடத்தைகளை (பொருத்தமற்ற உடையலங்காரம் போன்ற) உதவிப் பணியாளர்கள் தவிர்த்தல் வேண்டும்.

5. சவால் மிக்க மற்றும் அழுத்தம் மிக்க சூழ்நிலைகளில் **உதவிப் பணியாளர்கள் நீண்ட நேரம் பணியாற்றுவர்.** நலனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் நீண்ட கால உடல் செயலிழப்பு, காயம் அல்லது

சுகவீனம் என்பன உள்ளடங்கலாக பணியாளர்கள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டியது நிறுவனத்தின் கடமையாகும். சவால்கள் தொடர்பில் உதவிப் பணியாளர்களுக்கு முகாமையாளர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உதவிப் பணியாளர்களின் பௌதீக மற்றும் உணர்வு நலனுக்கு கேடு விளைவிக்கக் கூடிய தேவையற்ற அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் இருந்து பாதுகாப்பதும் முகாமையாளர்களின் பொறுப்பு. உதாரணமாக, பயனுறுதி மிக்க பாதுகாப்பு முகாமைத்துவம், போதிய ஓய்வு மற்றும் மீள்வலுவூட்டல், நியாயமான பணி நேரத்திற்கான செயற்றிறன் மிக்க உதவி மற்றும் உளவியல் உதவிக்கான பிரவேசம் போன்ற உதவிகளைக் குறிப்பிட முடியும். சிறந்த பயிற்சிகளை வடிவமைத்தல் மற்றும் தனிப்பட்ட ரீதியில் கொள்கையுடன் ஒன்றி நடத்தல் என்பவற்றின் ஊடாக பராமரிப்பு பொறுப்பினை முகாமையாளர்கள் மேம்படுத்த முடியும். அத்துடன், அவர்களுடைய நலனை முகாமை செய்வதில் தனிப்பட்ட பொறுப்பினையும் உதவிப் பணியாளர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **அனர்த்தத்தின் ஆரம்ப நிலையின் போது,** ஊழியர் இயலுமை அபிவிருத்தி என்பது கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். ஊழியர்களின் செயற்றிறன் மீளாய்வு மற்றும் பின்னூட்டத்தின் ஊடாக, கற்றல் மற்றும் அபிவிருத்திக்கான பகுதிகளை அடையாளங் கண்டு, அவற்றை மேம்படுத்துவதற்கு முகாமையாளர்கள் உதவி புரிய வேண்டும். அனர்த்த முன்னாயத்தம் என்பதும் மனிதநேயம் சார்ந்த திறன்களை அடையாளங் கண்டு, அபிவிருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

7. மிகவும் மோசமான மன அழுத்த நிகழ்வுகளை அனுபவித்த அல்லது சந்தித்த உதவிப் பணியாளர்களுக்கு உடனடியாக **உளவியல் முதலுதவி வழங்கப்படல் வேண்டும்** (**பக்கம் 333**இல் அத்தியாவசிய சுகாதார சேவைகள் - மனநல தரம் 1ஐயும், குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கான பகுதியையும் பார்க்கவும்). உளவியல் விளக்கம் என்பது பயனற்றது என்பதுடன், அது வழங்கப்படக் கூடாது.

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை:

மூலங்கள்

மக்களை பிரதானமாகக் கொண்ட மனிதநேய மறுசீரமைப்பு

Emergency Capacity Building (ECB) Project (2007), Impact Measurement and Accountability in Emergencies: The Good Enough Guide. Oxfam Publishing. Oxford. www.oxfam.org.uk/publications

Human Accountability Partnership (HAP) International (forthcoming), Standard in Accountability and Quality Management. Geneva.

www.hapinternational.org/projects/standard/hap_2010_standard.aspx

Inter-Agency Standing Committee (IASC) (2007), IASC Guidelines on Mental Health and Psychosocial Support in Emergency Settings. Geneva.

ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு

Global Humanitarian Platform (2007), Global Humanitarian Principles of Partnership. A Statement of Commitment Endorsed by the Global Humanitarian Platform. Geneva. www.globalhumanitarianplatform.org/pop.html

IASC (2008), Guidance Note on using the Cluster Approach to Strengthen Humanitarian Response. Geneva.

IASC, Global Cluster Approach:

http://oneresponse.info/GlobalClusters/Pages/default.aspx

IASC and United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA) (2008), Civil-Military Guidelines and Reference for Complex Emergencies. New York. http://ochaonline.un.org/cmcs/guidelines

OCHA (2007), Guidelines on the Use of Foreign Military and Civil Defence Assets In Disaster Relief – "Oslo Guidelines". Rev. 1.1. Geneva.

http://ochaonline.un.org/cmcs

மதிப்பீடு

IASC (2003), Initial Rapid Assessment (IRA) Guidance Notes for Country Level. Geneva. www.humanitarianreform.org/humanitarianreform/Portals/1/cluster%20approach%20page ?/clusters%20page ?s ?/health%20cluster/RT/IRA_Guidance_Country%20Level_field_test.doc

IASC (forthcoming), Needs Assessment Task Force (NATF) Operational Guidance for Needs Assessments.

Ushahidi mobile phone-based information gathering and sharing: www.ushahidi.com

வடிவமைப்பு மற்றும் மறுசீரமைப்பு

Conflict Sensitivity Consortium: www.conflictsensitivity.org/

Early Recovery Tools and Guidance: http://oneresponse.info/GlobalClusters/Early%20Recovery/Pages/Tools%20and%20Guidance.aspx

IASC (2006), Women, Girls, Boys and Men: Different Needs – Equal Opportunities (The Gender Handbook in Humanitarian Action). Geneva.

http://oneresponse.info/crosscutting/gender/Pages/Gender.aspx

Provention Consortium (2007), Vulnerability and Capacity Analysis Guidance Note 9. Geneva. www.proventionconsortium.org/themes/default/pdfs/tools_for_mainstreaming_GN9.pdf

United Nations International Strategy for Disaster Reduction (UNISDR) (2005), Hyogo Framework for Action 2005–2015: Building the resilience of nations and communities to disasters. Geneva.

www.unisdr.org/eng/hfa/docs/Hyogo-framework-for-action-english.pdf

செயற்றிறன், வெளிப்படைத் தன்மை மற்றும் கற்றல்

Active Learning Network for Accountability and Performance in Humanitarian Action (ALNAP) (2009), 8th Review of Humanitarian Action. Overseas Development Institute (ODI). London. www.alnap.org/initiatives/current/rha/8.aspx

Collaborative Learning Projects (2007), The Listening Project (LISTEN). Cambridge, Mass.

www.cdainc.com/cdawww/pdf/other/cda_listening_project_description_Pdf.pdf

Groupe URD (2009), Quality Compas.

www.compasqualite.org/en/index/index.php

Organisation for Economic Co-operation and Development (OECD) (1999), Guidance for Evaluation of Humanitarian Assistance in Complex Emergencies. Paris. www.oecd.org/dac

உதவிப் பணியாளர் செயற்றிறன்

People In Aid (2003), The People In Aid Code of Good Practice in the Management and Support of Aid Personnel. London. http://peopleinaid.org

World Health Organization, World Vision International and War Trauma Foundation (forthcoming), Psychological First Aid Guide. Geneva.

www.who.int/mental_health/emergencies/en/

மேலதிக வாசிப்புக்கானவை

மதிப்பீடு மற்றும் மறுசீரமைப்பு

Office of the United Nations High Commissioner for Refugees (UNHCR) and World Food Programme (WFP) (2008), Joint Assessment Mission Guidelines. 2nd Edition. Rome. www.unhcr.org/45f81d2f2.html

சிறுவர்கள்

Action for the rights of children (ARC) (2009),

www.arc-online.org/using/index.html

Inter-Agency Network for Education in Emergencies (INEE) and The Sphere Project (2009), Integrating Quality Education within Emergency Response for Humanitarian Accountability: The Sphere–INEE Companionship. Geneva.

மாற்றுத் திறனுடையவர்கள்

Handicap International, Disability Checklist for Emergency Response.

www.handicap-international.de/fileadmin/redaktion/pdf/disability_checklist_booklet_01.pdf

Women's Commission for Refugee Women and Children (2008), Disabilities among Refugees and Conflict-affected Populations: A Resource Kit for Fieldworkers. New York. www.womensrefugeecommission.org/docs/disab_res_kit.pdf

சுற்றுச் சூழல்

Joint United Nations Environment Programme and OCHA Environment Unit: www.reliefweb.int/ochaunep

Kelly, C (2005), Guidelines for Rapid Environmental Impact Assessment in Disasters. Benfield Hazard Research Centre, University College London and CARE International. London.

UNHCR and CARE International (2005), Framework for Assessing, Monitoring and Evaluating the Environment in Refugee-related Operations: Toolkit for practitioners and managers to help assess, monitor and evaluate environmental circumstances, using mainly participatory approaches. Geneva.

www.unhcr.org/4a97d1039.html

UNHCR and International Union for the Conservation of Nature (2005), UNHCR Environmental Guidelines. Geneva. www.unhcr.org/3b03b2a04.html

பால்நிலை

Gender and Disaster Network: http://gdnonline.org

WFP (2009), WFP Gender Policy. www.wfp.org/content/wfp-gender-policy

எச்.ஐ.வி/எய்ட்ஸ்

IASC (2010), Guidelines for Addressing HIV in Humanitarian Settings. Geneva. www.humanitarianinfo.org/iasc/page ?loader.aspx?page ?=content-products-products&sel=9

வயதானவர்கள்

HelpAge International: www.helpage.org

IASC (2008), Humanitarian Action and Older Persons – an essential brief for humanitarian actors. Geneva. www.humanitarianinfo.org/iasc/pageloader.aspx?page=content-products-products&sel=24

ODI (2005), Network paper 53: Assisting and protecting older people in emergencies. London. www.odi.org.uk/resources/details.asp?id=357&title=protecting-assisting-older-people-emergencies

செயற்றிறன், கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வு

ALNAP Annual Review (2003), Humanitarian Action: Improving Monitoring to Enhance Accountability and Learning. London. www.alnap.org

ALNAP (2009), Real Time Evaluations of Humanitarian Action (Pilot Version). London. www.alnap.org

Catley, A et al (2008), Participatory Impact Assessment. Feinstein International Center, Tufts University.

https://wikis.uit.tufts.edu/confluence/display/FIC/Participatory+Impact+Assessment

Groupe URD (2009), Quality COMPAS Companion Book.

www.compasqualite.org/en/index/index.php

OECD (1999), Guidance for the Evaluation of Humanitarian Assistance in Complex Emergencies. Paris. www.oecd.org/dac

Further information on evaluation (including training modules) and approaches to learning can be found on ALNAP: www.alnap.org

இலக்கு வைத்தல்

International Federation of Red Cross and Red Crescent Societies (2003), World Disasters Report 2003 – Chapter 1: Humanitarian ethics in disaster and war. www.ifrc.org/publicat/wdr2003/chapter1.asp

UNISDR (2001), Countering Disasters, Targeting Vulnerability. Geneva.

www.unisdr.org/eng/public_aware/world_camp/2001/pdf/Kit_1_Countering_Disasters_Targeting_Vulnerability.pdf

நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு என்பவற்றில் அடிப்படைத் தரங்கள்

இந்த அத்தியாயத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

இந்த அத்தியாயம் ஏழு பிரதான பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது:

நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு

சுகாதார மேம்பாடு

நீர் விநியோகம்

கழிவுப்பொருள் வெளியேற்றல்

நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு

திண்ம கழிவு முகாமைத்துவம்

சாக்கடை வடிகால்

பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள் இந்த அத்தியாயத்துடன் கொள்கை மாறாத வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். அனர்த்தத்தின் போதான மனிதநேய மறுசீரமைப்பு தொடர்பில் தகவல் வழங்குவதனை பிரதான எண்ணமாக கொண்டுள்ள போதிலும், அனர்த்த முன்னாயத்தம் மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளை நோக்கிய நிலைமாற்றம் என்பவற்றின் போது அடிப்படைத் தரங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்

ஒவ்வொரு தரமும் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது

- **அடிப்படைத் தரங்கள்:** இவை தன்மையில் தர அடிப்படையிலானதாக இருக்கின்ற போதிலும், நீர், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு என்பன தொடர்பிலான மனிதநேய மறுசீரமைப்பின் போது எட்டப்பட்ட வேண்டிய ஆகக் குறைந்த மட்டங்களையும் குறிப்பிடுகின்றது
- **பிரதான நடவடிக்கைகள்:** இவை தரங்களை எட்டுவதற்கு குறிப்பிட்டுச் சொல்லப்படும் நடவடிக்கைகள் மற்றும் உள்ளீடுகள் ஆகும்.
- **பிரதான குறிகாட்டிகள்:** இவை தரம் எட்டப்பட்டுள்ளதா என்பதனை சுட்டிக் காட்டும் "அடையாளங்கள்" ஆகும். இவை பிரதான நடவடிக்கைகளின் செயற்பாடு மற்றும் பெறு பேறுகளை அளவிடுவதற்கு மற்றும் அறிவிப்பதற்கான வழி வகைகளை வழங்குகின்றன. இவை பிரதான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டது அல்லது. அடிப்படைத் தரங்களுடன் சம்பந்தப்பட்டவை.
- **வழிகாட்டல் குறிப்புக்கள்:** அடிப்படைத் தரங்கள், பிரதான நடவடிக்கைகள் மற்றும் பிரதான குறிகாட்டிகளை பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பிரயோகிக்கும் போது கவனஞ் செலுத்த வேண்டிய முக்கியமான விடயங்களை இவை உள்ளடக்கியுள்ளன. பிரயோக ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளல், மட்டக்குறிகள் அல்லது முன்னுரிமை செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பான அறிவுரை என்பன தொடர்பிலான வழிகாட்டல்களை வழங்குகின்றன. இவை தரங்கள், நடவடிக்கைகள் அல்லது குறிகாட்டிகள் சம்பந்தப்பட்ட சிக்கலான விடயங்களையும் உள்ளடக்கியிருக்கலாம். அத்துடன், தற்போதைய அறிவுமட்டத்தில் உள்ள குழப்பங்கள், சிக்கல்கள் அல்லது இடைவெளிகளையும் இவை விளக்குகின்றன.

தேவையான பிரதான குறிகாட்டிகள் மற்றும் நடவடிக்கைகள் எட்டப்படவில்லையாயின், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, பொருத்தமான தணித்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். பிற்சேர்க்கை 1ஐப் போல் தேவைகள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல் உள்ளடக்கப்படல் வேண்டும்: பிற்சேர்க்கை 2-6இல் வழிகாட்டல் குறிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த அத்தியாயத்தில் முக்கியமான மற்றும் பொதுவான விடயங்கள் ஆகிய இரண்டும் சார்ந்த தகவல் பெறப்பட்ட மூலம் சம்பந்தமான குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கான பட்டியலும் அத்தியாயத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

அறிமுகம் 83

1. நீர், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு (WASH) 88

2. சுகாதார மேம்பாடு 91

3. நீர் விநியோகம் 97

4. மலக்கழிவு வெளியேற்றல் 105

5. நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு 111

6. திண்ம கழிவு முகாமைத்துவம் 117

7. சாக்கடை வடிகால் 121

பிற்சேர்க்கை 1: நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டுக்கான ஆரம்ப தேவைகள் மதிப்பீடு சரிபார்ப்பு பட்டியல் 124

பிற்சேர்க்கை 2: நிறுவன மற்றும் வேறு பயன்பாட்டிற்கான ஆகக் குறைந்த நீர் அளவு 129

பிற்சேர்க்கை 3: அனர்த்த சூழ்நிலைகளில் பொது இடங்கள் மற்றும் நிறுவனங்களில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மலசல கூடங்களின் எண்ணிக்கை. 130

பிற்சேர்க்கை 4: நீர் மற்றும் கழிவுப் பொருள் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் பரவும் முறை பொறியமைப்புக்கள் 131

பிற்சேர்க்கை 5: கொலரா சிகிச்சை நிலையங்களில் (CTC) இருக்க வேண்டிய ஆகக் குறைந்த சுகாதார, தேகாரோக்கிய மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் 132

பிற்சேர்க்கை 6: குடும்பங்களின் நீர் பராமரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் தீர்மான மரம் 133

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை 134

மனிதநேய சாசனம் | பாதுகாப்பு கோட்பாடுகள் | மிக முக்கியமான தரங்கள்

நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு (WASH)

WASH	சுகாதார மேம்பாடு	நீர் விநியோகம்	கழிவுப் பொருள்	நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு	திண்ம கழிவு	சாக்கடை வடிகால்
தரம் 1 WASH நிகழ்ச்சி வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல்	தரம் 1 சுகாதார மேம்பாடு நடைமுறைப்படுத்தல்	தரம் 1 பிரவேசம் மற்றும் நீரின் அளவு	தரம் 1 மனிதக் கழிவுகள் அற்ற சுற்றுச் சூழல்	தரம் 1 தனிப்பட்ட மற்றும் குடும்ப பாதுகாப்பு	தரம் 1 சேகரித்தல் மற்றும் வெளியேற்றல்	தரம் 1 சாக்கடை வடிகால் பணி
	தரம் 2 சுகாதாரப் பொருட்களை அடையாளங் காணல் மற்றும் பயன்படுத்தல்	தரம் 2 நீரின் தரம்	தரம் 2 பொருத்தமான மற்றும் போதிய மலசல கூட வசதிகள்	தரம் 2 பௌதீக, சுற்றுச் சூழல் மற்றும் இரசாயன பாதுகாப்பு பொறி முறைகள்		
		தரம்3 நீர் வசதிகள்		தரம் 3 இரசாயன கட்டுப்பாட்டு பாதுகாப்பு		

பிற்சேர்க்கை 1: நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டுக்கான ஆரம்ப தேவைகள் மதிப்பீடு சரிபார்ப்பு பட்டியல்
பிற்சேர்க்கை 2: நிறுவன மற்றும் வேறு பயன்பாட்டிற்கான ஆகக் குறைந்த நீர் அளவு
பிற்சேர்க்கை 3: அனர்த்த சூழ்நிலைகளில் பொது இடங்கள் மற்றும் நிறுவனங்களில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மலசல கூடங்களின் எண்ணிக்கை
பிற்சேர்க்கை 4: நீர் மற்றும் கழிவுப் பொருள் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் பரவும் முறை பொறியமைப்புக்கள்
பிற்சேர்க்கை 5: கொலரா சிகிச்சை நிலையங்களில் (CTC) இருக்க வேண்டிய ஆகக் குறைந்த சுகாதார, தேகாரோக்கிய மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள்
பிற்சேர்க்கை 6: குடும்பங்களின் நீர் பராமரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் தீர்மான மரம்

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

அறிமுகம்

மனிதநேய சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்திற்கான தொடர்புகள்

நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு என்பவற்றில் அடிப்படைத் தரங்கள் என்பது மனிதநேய நிறுவனங்களின் பகிரப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பற்றுறுதிகளின் பிரயோக வெளிப்பாடாக உள்ளது. மனிதநேய நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொதுவான கோட்பாடுகள் மனிதநேய சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதநேய கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் சர்வதேச சட்டத்தில் பிரதிபலிக்கின்ற வகையில் இந்த கோட்பாடுகள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பு மற்றும் காவலுக்கான உரிமை மற்றும் மனிதநேய உதவிகளை அடிப்படை தேவையின் பிரகாரம் பெறுவதற்கான உரிமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மனிதநேய சாசனத்தை குறிப்பிடும் பிரதான சட்ட மற்றும் கொள்கை ஆவணங்களின் பட்டியல் பிற்சேர்க்கை 1 இல் (**பக்கம்**) மனிதநேய பணியாளர்களுக்கான மேலதிக வர்ணனைகளுடன் தரப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட உரிமைகள் தொடர்பில் பிரதான பொறுப்புக்களை உடையவர்களாக அரசுகள் இருக்கின்ற போதிலும், மனிதநேய நிறுவனங்களுக்கும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இந்த உரிமைகளை தொடர்ச்சியாக கிடைக்க வேண்டியதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது. இந்த பொதுவான உரிமைகள் மேலும் முக்கியமான உரிமைத் தகுதிகளை குறிப்பிடுகின்றன. மிக முக்கியமான தரங்களின் அடிப்படையை உருவாக்கும் பங்குபற்றல், தகவல் தெரிவித்தல் மற்றும் பாரபட்சமின்மை தொடர்பிலான உரிமைகளை இது உள்ளடக்கியுள்ளது.

அத்துடன், இவற்றையும், இந்த கையேட்டில் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தரங்களையும் சுட்டிக்காட்டும் நீர், தேகாரோக்கியம், உணவு, உறைவிடம் மற்றும் சுகாதாரம் என்பன சார்ந்த உரிமைகளும் உள்ளடங்கியுள்ளன. நீர் மற்றும் தேகாரோக்கியத்திற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. இந்த உரிமையானது சர்வதேச சட்ட அமுலாக்கல் அங்கங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், தனிப்பட்ட மற்றும் வீட்டுத் தேவைகளுக்கான போதிய, பாதுகாப்பான, பௌதீக பிரவேசம் மிக்க மற்றும் நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளையும், தேகாரோக்கிய வசதிகளுக்கான பிரவேசத்தையும் வழங்குகின்றது. தாகத்தினால் ஏற்படக் கூடிய உயிரிழப்பை இல்லாது ஒழிப்பதற்கு, நீர் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவதனை தடுப்பதற்கு மற்றும் நுகர்வுக்கு, சமையலுக்கு, தனிப்பட்ட மற்றும் வீட்டு தேவைகளுக்கு வழங்குவதற்கு போதிய அளவிலான பாதுகாப்பான குடிநீர் அவசியமாகும்.

நீர் மற்றும் தேகாரோக்கியத்திற்கான உரிமையானது சுகாதாரத்திற்கான உரிமை, வீடமைப்புக்கான உரிமை மற்றும் போதிய உணவுக்கான உரிமை என்பன உள்ளடங்கிய வேறு மனித உரிமைகளுடன் பிரிக்க முடியாத அளவு சம்பந்தப்பட்டது. இதன் அடிப்படையில் மனிதன் உயிர் வாழ்வதற்கான அத்தியாவசியமான உத்தரவாதமாக இது காணப்படுகின்றது. நீர் மற்றும் தேகாரோக்கியத்திற்கான உரிமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசுகள் மற்றும் அரசு சாராத செயற்பாட்டாளர்களுடையது. உதாரணமாக, ஆயுத முரண்பாடுகளின் போது குடிநீர் பகுதிகள் அல்லது நீர்ப்பாசனப் பகுதிகளை தாக்குதல், அழித்தல் அல்லது அகற்றுதல் அல்லது பயன்பாட்டுக்கு உகந்தது அல்லாததாக மாற்றல் என்பன தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயத்தில் உள்ள அடிப்படைத் தரங்கள் நீர் மற்றும் தேகாரோக்கியத்திற்கான முழுமையான வெளிப்பாட்டையும் தரவில்லை.

எவ்வாறாயினும், நீர் மற்றும் தேகாரோக்கியத்திற்கான பிரதான உள்ளடக்கங்களை பிரதிபலிக்கும் ஸ்பியர் தரங்கள், உலகளாவிய ரீதியில் இந்த உரிமைகள் யதார்த்தமாகுவதற்கு பங்களிப்பு புரிகின்றன.

அனர்த்த காலங்களின் போது WASH இன் முக்கியத்துவம்

அனர்த்தத்தின் பின்னரான ஆரம்ப காலத்தில் வாழ்வதற்கான சவாலை ஏற்படுத்தக் கூடிய மிகவும் முக்கியமான தேவைகளாக நீர் மற்றும் தேகாரோக்கியம் என்பன காணப்படும். அனர்த்த்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் பொதுவாக நோயினால் இறப்பதற்கு மற்றும் உடல் நிலை மோசமடைவதற்கு ஏற்ற பலவீனமான நிலையில் காணப்படுவர். போதிய தேகாரோக்கியம் இன்மை, போதிய நீர் விநியோகம் இன்மை மற்றும் சிறந்த போஷாக்கினைப் பேண இயலாமை என்பனவே இதற்கான பிரதான காரணங்களாகும்.

இவ்வாறு ஏற்படும் நோய்களில் மிகவும் முக்கியமானவைகளாக வாய் மற்றும் மலம் மூலமாக பரவக் கூடிய வயிற்றுப் போக்கு மற்றும் தொற்று நோய்கள் என்பன இருக்கின்றன (பிற்சேர்க்கை 4ஐப் பார்க்கவும்: நீர் மற்றும் கழிவுப் பொருள் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் பரவும் முறை பொறியமைப்புக்கள்). வேறு நீர் மற்றும் தேகாரோக்கியம் சம்பந்தப்பட்ட நோய்களில் திண்மக் கழிவு மற்றும் நீர் சம்பந்தப்பட்ட நோய் நுண்மப் பரப்பிகளினால் பரவக் கூடிய நோய்களும் உள்ளடங்குகின்றன.

அனர்த்த காலங்களில் நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சிகளின் முக்கியமான குறிக்கோளாக இருப்பது, வாய் மற்றும் மலம் மூலம் பரவக் கூடிய நோய்கள் மற்றும் நோய் நுண்மப் பரப்பிகள் பெருகுதல் என்பவற்றை தடுத்தல் ஆகும். இதன் பொருட்டு பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்:

- சிறந்த போஷாக்கு நடைமுறைகள்
- பாதுகாப்பான குடிநீர்
- சுற்றுச் சூழல் சார்ந்த சுகாதார சவால்களை குறைத்தல்

- சிறந்த ஆரோக்கியம், கண்ணியம், சௌகரியம் மற்றும் பாதுகாப்பு நிறைந்த சூழ்நிலையில் மக்கள் வாழ்வதற்கு வசதியளித்தல்

தனித்து போதிய நீர் மற்றும் தேகாரோக்கிய வசதிகளை வழங்குவதால் மாத்திரம், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் சாதகமான பயன்பாட்டையோ அல்லது பொது மக்களின் சுகாதாரத்தில் தாக்கத்தையோ உறுதி செய்ய முடியாது. மறுசீரமைப்பின் ஊடாக அதியுச்ச பயனை எட்டுவதற்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர் மற்றும் தேகாரோக்கியம் சார்ந்த நோய்களில் தேவையான அளவில் தகவல், அறிவு மற்றும் புரிந்துணர்வு இருத்தல் மற்றும் குறித்த வசதிகளை வடிவமைப்பதிலும், பேணுவதிலும் அவர்களுடைய பங்குபற்றலை ஒன்று திரட்டல் என்பன தவிர்க்க முடியாதவை ஆகும். உதாரணமாக, ஏதிலிகள் அல்லது இடம்பெயர்ந்த சூழ்நிலைகளில், பொது நீர் வசதி மற்றும் தேகாரோக்கிய வசதிகள் என்பன, பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாலியல் மற்றும் வேறு வடிவிலான பால் நிலை சார்ந்த வன்முறைகள் என்பவற்றின் மீதான தாக்கத்தின் அளவினை அதிகரிக்கும். இந்த அபாயத்தை குறைப்பதற்கு மற்றும் சிறந்த தரமான மறுசீரமைப்பை வழங்குவதற்கு நீர் விநியோகம் மற்றும் தேகாரோக்கிய நிகழ்ச்சிகளில் பெண்களின் பங்குபற்றலை உறுதி செய்ய வேண்டியது அத்தியாவசியமாகும். திட்டமிடல், தீர்மானம் எடுத்தல் மற்றும் உள்ளூர் முகாமைத்துவம் என்பவற்றில் பெண்கள் மற்றும் ஆண்களின் சமமான பங்குபற்றலானது பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த மக்களும் நீர் விநியோகம் மற்றும் தேகாரோக்கிய சேவைகளுக்கு பாதுகாப்பான மற்றும் இலகுவான பிரவேசத்தைப் பெற்றுக் கொள்வதனை மற்றும் குறித்த சேவைகள் பொருத்தமானவையாக இருப்பதனை உறுதி செய்வதற்கு உதவி புரியும்.

பொது சுகாதாரத்தில் சிறந்த அனர்த்த மறுசீரமைப்பானது சிறந்த முன்னாயத்தம் மூலமே எட்டப்படக் கூடியது ஆகும். இந்த முன்னாயத்தம் என்பது, நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் உள்ள மற்றும் உடனடியாக நிகழக் கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் பயனுறுதி மிக்க வகையில் பிரதிபலிப்பதற்கு மற்றும் எதிர்கொள்வதற்கு அரசாங்கங்கள், மனிதநேய நிறுவனங்கள், உள்ளூர் சிவில் சமூக நிறுவனங்கள், சமுதாயங்கள் மற்றும் தனிநபர்களினால் வடிவமைக்கப்பட்ட இயலுமைகள், உறவுகள் மற்றும் அறிவு என்பவற்றின் பெறுபேறு ஆகும். அது சவால்களின் பகுப்பாய்வின் அடிப்படையிலானதாகும். அத்துடன், முன்னெச்சரிக்கை முறைமைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். முன்னாயத்தத்தில் எதிர்பாராத நிகழ்ச்சிகளை திட்டமிடல், உபகரணங்கள் மற்றும் விநியோகப் பொருட்களை களஞ்சியப்படுத்தல், அவசர கால சேவைகள் மற்றும் தற்காலிக நடவடிக்கைகள், தனிப்பட்ட பயிற்சிகள் மற்றும் சமுதாய அளவிலான திட்டமிடல் பயிற்சிகள் மற்றும் பரீட்சார்த்த நடவடிக்கைகள் என்பன உள்ளடங்கும்.

ஏனைய அத்தியாயங்களுக்கான இணைப்புக்கள்

ஏனைய அத்தியாயங்களில் உள்ள பெரும்பாலான தரங்கள் இந்த அத்தியாத்துடன் தொடர்புடையதாகும். ஒரு பகுதியில் தரங்களை எட்டுவதற்கான தேர்ச்சியானது பொதுவாக செல்வாக்கு செலுத்துவதுடன், வேறு பகுதிகளின் தேர்ச்சியினையும் தீர்மானிப்பதாக உள்ளது. மறுசீரமைப்பானது மிகவும் பயனுறுதி கொண்டதாக இருப்பதற்கு, ஏனைய துறைகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு

என்பன முக்கியமானது ஆகும். தேவைகள் நிறைவேற்றப்படுதல், முயற்சிகள் போலியாக இல்லாது இருத்தல் மற்றும் நீர், தேகாரோக்கிய இடையீடுகளின் தரம் எட்டப்படுதல் என்பவற்றை உறுதி செய்வதற்கு உள்ளூர் அதிகாரிகள் மற்றும் வேறு பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பும் அவசியமாகும்.

உதாரணமாக, போஷாக்கு சார்ந்த தரங்கள் எட்டப்படாத சந்தர்ப்பங்களில், நீர் மற்றும் தேகாரோக்கியம் என்பவற்றின் தரம் மேம்படுத்தப்படுவதற்கான அவசியமானது அதிகமானதாக உள்ளதைப் போன்றே, நோய் ஏற்படுவதற்கான மக்களின் பலவீனத் தன்மையும் அதிகரித்து காணப்படும். எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் நோய் பரவும் அளவானது அதிகமாக இருக்கின்ற சனத்தொகை அல்லது அதிக எண்ணிக்கையிலான வயதானவர்கள் அல்லது மாற்றுத் திறன் உடைய மக்கள் இருக்கின்ற சூழ்நிலைக்கும் இது பொருந்தும். சூழ்நிலை சார்ந்ததாக துறைகளுக்கு மத்தியில் பகிரப்படும் தகவல்கள் சார்ந்ததாகவே இந்த முன்னுரிமைகள் தீர்மானிக்கப்படும். பொருத்தமான வகையில், சக மற்றும் உதவி வழங்கக் கூடிய தரங்கள் குறிப்புதவிகளாக தரப்பட்டுள்ளன.

பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்களுடனான இணைப்புக்கள்

இந்த கையேட்டின் தரங்களை எட்டுவதற்காக, அனைத்து மனிதநேய நிறுவனங்களும், அவற்றிற்கு தீர்மான பாதுகாப்பு கட்டளை அல்லது பாதுகாப்பில் விசேட நிபுணத்துவ இயலுமை இல்லாத போதிலும் அவை பாதுகாப்பு கோட்பாடுகளால் வழிகாட்டப்படல் வேண்டும். கோட்பாடுகள் என்பது “முழுமையானவை” அல்ல. அவற்றை எந்த நிறுவனங்களால் பூர்த்தி செய்ய முடியும் என்பது சூழ்நிலைகளுக்கு அமைவானதாகவே இருக்கும். இருப்பினும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் உலகளாவிய மனிதநேய அக்கறைகளை பிரதிபலிக்கும் கோட்பாடுகள் அவசியமாகும்.

மிக முக்கியமான தரங்கள் அத்தியாவசியமான நடைமுறையாகும். அத்துடன், தனிப்பட்ட தரங்கள் அனைத்து துறைகளாலும் பகிரப்படுகின்றன. ஆறு முக்கியமான அடிப்படை தரங்கள் பங்குபற்றல், ஆரம்ப மதிப்பீடு, மறுசீரமைப்பு, இலக்குப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீட்டாய்வு, நிதி பணியாளர் செயற்பாடு மற்றும் மேற்பார்வை மற்றும் நபர்களுக்கான உதவி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து தரங்களையும் சுட்டிக்காட்டும் அணுகுமுறைகளுக்கான தனிப்பட்ட குறிப்புதவி மையத்தினை அவை வழங்குகின்றன. எனவே, ஒவ்வொரு தொழில் நுணுக்க அத்தியாயத்திற்கும், சுய தரங்களை எட்டுவதற்கு உதவிப் புரிவதற்கான முக்கியமான தரங்களின் பயன்பாடு அவசியமாக இருக்கின்றது. மிகவும் முக்கியமாக, எந்தவொரு மறுசீரமைப்பினதும் பொருத்தப்பாடு மற்றும் தரத்தினை உறுதி செய்வதற்கு வழமையாக அனர்த்தத்தினால் பாதிக்கப்படக் கூடிய அபாயம் நிறைந்த குழுக்கள் மற்றும் தனி நபர்கள் உள்ளடங்கலாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பங்குபற்றல் அதிகரிக்கப்படல் வேண்டும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பலவீனங்கள் மற்றும் இயலுமைகள்

இந்த பிரிவானது முக்கியமான அடிப்படை தரங்களை மீள் அமுலாக்குவதற்கும், அதனுடன் இணைந்து வாசிப்பதற்கும் ஏற்றதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இளையவராக இருத்தல் அல்லது முதியவராக இருத்தல், பெண்ணாக இருத்தல் அல்லது மாற்றுத் திறன் அல்லது எச். ஐ. வி தாக்கத்துக்கு உள்ளானவராக இருத்தல் என்பவற்றின் காரணமாக, அவர் பலவீனமானவராக கருதப்படவோ அல்லது அதிகரித்த அபாயத்துக்கு உள்ளாகவோ கூடாது. ஆனால், காரணிகளுக்கு இடையிலான செயற்பாடே இதனை தீர்மானிக்கின்றது. உதாரணமாக, 70 வயதுடைய நபரொருவர், தனியாக வறுமையில் வசித்து வருகின்றார். அதே வயது மற்றும் சுகாதார நிலையை உடைய, ஆனால் கூட்டுக் குடும்பத்துடன் மற்றும் போதிய வருமானத்துடன் வசிக்கும் ஒருவரிலும் பார்க்க பலவீனமானவராக இருப்பார். அதேவேளை, 3 வயது சிறுமியெ-ாருவர், தமக்குப் பொறுப்பான பெற்றோரின் பராமரிப்பில் இல்லாது இருக்கும் போது அதிக பலவீனம் உடையவராக இருப்பார்.

நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் தரங்கள் மற்றும் பிரதான நடவடிக்கைகள் என்பன நடைமுறைப்படுத்தப்படும் போது, பலவீனம் மற்றும் இயலுமை தொடர்பான பகுப்பாய்வானது உதவிக்கான உரிமையுள்ளவர்களுக்கு, பாரபட்சமின்றி மற்றும் அதிக உதவி தேவையாக உள்ளவர்களுக்கு அனர்த்த மறுசீரமைப்பு முயற்சிகள் சென்றடைவதனை உறுதி செய்கின்றது. இதற்கு உள்ளூர் சூழ்நிலை தொடர்பில் மற்றும் வேறுபட்ட மக்களின் வேறுபட்ட குழுக்களின் மீது அவர்களிடம் ஏற்கனவே காணப்படும் பலவீனம் காரணமாக (உ-ம்: மிகவும் வறியவராக இருத்தல் அல்லது பாரபட்சம் காட்டப்பட்டவராக இருத்தல்), வேறுபட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான அவர்களது வெளிப்பாடு (உ-ம்: பாலியல் சுரண்டல் உள்ளடங்கலாக பால்நிலை சார்ந்த வன்முறைகள்), நோய் தாக்கம் அல்லது பரவல் (எச்.ஐ.வி அல்லது காச நோய்), மற்றும் தொற்று நோய்க்கான சாத்தியங்கள் (உ-ம்: சின்னம்மை அல்லது கொலரா) போன்றன எவ்வாறு தாக்கத்தை புரிகின்றன என்பன தொடர்பில் முழுமையான புரிந்துணர்வு அவசியமாக உள்ளது. ஏற்கனவே உள்ள சமத்துவமின்மையை அனர்த்தங்கள் மேலும் மோசமானதாக மாற்றும். எவ்வாறாயினும், மக்களின் எதிர்கொள்ளும் மூலோபாயங்கள், நெகிழ்ச்சித் தன்மை மற்றும் மீளெழல் இயலுமைகள் என்பனவற்றுக்கான ஆதரவானது மிகவும் அத்தியாவசியமானது.

அவர்களுடைய அறிவு, திறன்கள் மற்றும் மூலோபாயாங்கள், சமூக, சட்ட, நிதி மற்றும் உளச் சமூக உதவிக்கான அவர்களுடைய பிரவேசம் என்பவற்றிக்கான உதவி மற்றும் இந்த சேவைகளை சமமான வகையில் பெறும் போது எதிர்நோக்கக் கூடிய பல்வேறுபட்ட பௌதீக, கலாசார, பொருளாதார மற்றும் சமூக தடைகள் என்பன தொட-ர்பிலும் பரிந்து பேசல் முன்னெடுக்கப்படுவதுடன், உதவி வழங்கப்படலும் வேண்டும். பலவீனமான அனைத்து மக்களினதும் உரிமைகள் மற்றும் இயலுமைகள் உறுதி செய்யப்படுவதனை குறிப்பிடும் பிரதான பகுதிகள் பின்வருமாறு:

- பிரதிநிதித்துவக் குழுக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்து மக்களின், விசேடமாக அதிக சந்தர்ப்பங்கள் அற்றவர்களின் பங்குபற்றலை நம்பிக்கையுடையதாக்கல். (உ-ம்: தொடர்பாடல் மற்றும் ஒன்றிணைதல் சிக்கல் உள்ளவர்கள், நிறுவனங்களில் வசிப்பவர்கள், களங்கப்படுத்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் வேறு கீழ்ப்படுத்தப்பட்ட அல்லது பிரதிநிதித்துவம் புரியாத குழுக்கள்).
- மதிப்பீட்டின் போது பால் மற்றும் வயது (0-80+ வருடங்கள்) என்பதன் அடிப்படையில் தரவுகளை பிரிக்கவும். நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் துறையானது போதிய அளவில் மக்களின் பல்வகைத் தன்மை தொடர்பில் கவனஞ் செலுத்துவதனை உறுதி செய்வதற்கான முக்கியமான அம்சமாக இது உள்ளது.
- உரிமைத் தகுதிக்கான தகவல் உரிமை உறுதி செய்யப்படலானது, சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளடக்கமான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வழங்கப்படுதல்.

அடிப்படைத் தரங்கள்

1. நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு (WASH)

கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சுகாதாரத்தை பாதுகாப்பதற்கு சிறந்த தனிப்பட்ட மற்றும் சுற்றுச் சூழல் போஷாக்கினை மேம்படுத்துவதே எந்தவொரு நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சியினதும் இலக்காக இருக்கின்றது. பிரதான போஷாக்கு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் கலாசார ரீதியாக பொருத்தமான தீர்வுகள் என்பவற்றை அடையாளங் காண்பதற்கு நிறுவனம் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலான தகவல் பரிமாற்றத்திலேயே நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சியின் பயனுறுதி தங்கியுள்ளது. அனைத்து நீர் விநியோகம் மற்றும் தேகாரோக்கிய வசதிகளின் நற்பயனுக்கான பயன்பாடு மற்றும் பாதுகாப்பான போஷாக்கினை பயிற்சித்தல் என்பவற்றை உறுதி செய்வதன் மூலம் பொது சுகாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

வெற்றிகரமான நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டு இடையீட்டுக்கு, சுகாதார மேம்பாடு என்பது அத்தியாவசியமானது ஆகும். சுகாதார மேம்பாடு தொடர்பான இலக்கு பொதுவானதாகவும், விசேடமானதாகவும் உள்ளது. பொதுவான பதங்களில் குறிப்பிடுவதாயின், சுகாதார மேம்பாடு என்பது அனைத்து பிரிவுகளுடனும் தொடர்புடையது. அத்துடன், நீர் விநியோகம், கழிவு அகற்றல், நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு, திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் சாக்கடை வடிகால் என்பவற்றின் குறிகாட்டிகளில் பிரதிபலிப்பது. மிகவும் முக்கியமாக, இந்த அத்தியாயத்தின் இரண்டு சுகாதார மேம்பாட்டு தரங்களை நோக்கியதாக மற்றும் குறிப்பிட்ட சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டதாக இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

WASH நோய்த் தடுப்பு



WASH தரம் 1: WASH நிகழ்ச்சி வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

பாதிக்கப்பட்ட மக்களின் WASH தேவைகள் எட்டப்படல் வேண்டும். அத்துடன், பயன்படுத்துபவர்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வசதிகளின் வடிவமைப்பு, முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு என்பவற்றில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். .

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பாதிக்கப்பட்ட சமூகத்துடனான ஆலோசனையின் பிரகாரம் பொது மக்கள் சுகாதாரத்தில் எதிர்நோக்கும், முக்கியத்துவம் மிக்க பிரதான சவால்களை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 1 மற்றும் மிக முக்கியமான தரங்கள் 1,3-4ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட சமூகத்தின் முன்னுரிமைத் தேவைகளுக்கு அமைய பொது சுகாதார சேவைகளை வழங்குதல் மற்றும் அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அனைத்து WASH நிகழ்ச்சி நடவடிக்கைகளிலும், அனைத்து வேறுபட்ட குழுக்களிடம் இருந்தும் இரண்டு வசதிகள் மற்றும் மேம்படுத்தல் முறைகள் தொடர்பிலான வடிவமைப்பு மற்றும் ஏற்றுக் கொள்ளும் தன்மை தொடர்பில் முறை சார்ந்து பின்னூட்டங்களை பெறல் (மிக முக்கியமான தரங்கள் 1, 3-4ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- WASH வளங்கள் மற்றும் வசதிகளுக்கு சனத்தொகையில் உள்ள அனைத்து குழுக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் சமமான பிரவேசம், வழங்கப்பட்ட வசதிகளை பயன்படுத்தல் மற்றும் பொது சுகாதார சவால்களை குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் (சுகாதார மேம்பாட்டு தரம் 2ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட சமூகத்துடன் WASH ஊழியர்கள் அனைவரும் தெளிவாகவும் மற்றும் மதிப்புடனும் தொடர்பு கொள்ளல். அத்துடன், செயற்றிட்ட தகவல்களை பகிரங்கமாக அவர்களுடன் பகிர்ந்து கொள்ளல். செயற்றிட்டம் தொடர்பில் சமூக உறுப்பினர்கள் எழுப்பும் வினாக்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்து அறிந்து வைத்திருத்தல்.
- வசதிகளின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு தொடர்பில் முறைமையொன்று இருத்தல். அத்துடன், வேறுபட்ட குழுக்கள் சமமான வகையில் பங்களித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- நிகழ்ச்சியின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலானது பாதுகாப்பு அதிகரிப்பதற்கும், கண்ணியம் மீளமுலாக்கப்படுவதற்கும் துணை புரிந்துள்ளதாக அனைத்து பயனர்களும் திருப்தியடைதல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **தேவைகளை மதிப்பீடு செய்தல்:** பலவீனத்தை அதிகரிக்கக் கூடிய அபாயகரமான நடவடிக்கைகளை அடையாளங் காணக் கூடிய மற்றும் வசதிகள் மற்றும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகிய இரண்டினதும் வெற்றிகளை எதிர்வுகூறுவதற்கான மதிப்பீடு அவசியமாகும். ஒதுக்கப்பட்ட குழுக்கள் மீதான பாரபட்சமின்மையானது பிரவேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். மலசல கூடங்களை பயன்படுத்தல் மற்றும் பராமரித்தல், சவர்க்காரம் அல்லது வேறு மாற்று வழிகளைப் பயன்படுத்துவது, போஷாக்கற்ற சேகரிப்பு மற்றும் நீர் சேமிப்பு, மற்றும் போஷாக்காற்ற உணவு சேமிப்பு மற்றும் தயார்படுத்தல் போன்றன காரணமாக வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பௌதீக பாதுகாப்பு என்பதே பிரதான சவாலாக உள்ளது. மதிப்பீடானது மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்கள், அத்துடன், உள்ளூர் அறிவு மற்றும் பயிற்சிகள் என்பன தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். எனவே, மேம்படுத்தல் நடவடிக்கைகள் பயனுறுதி மிக்கதாகவும், பொருத்தமானதாகவும் மற்றும் பிரயோகமானதாகவும் இருக்கும். முன்னெடுக்கப்படும் மற்றும் ஆரம்ப மதிப்பீட்டின் ஒரு அங்கமாக பாதுகாப்பான போஷாக்கு பயிற்சிகளை பின்பற்ற வலியுறுத்தும் மற்றும்/அல்லது வசதியளிக்கும் சமூக மற்றும் கலாசார விழுமியங்கள் அடையாளங் காணப்படல் வேண்டும். மதிப்பீடானது பலவீனமான மக்களின் தேவைகள் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்த வேண்டும். பலவீனமான மக்கள் பிரிவைச் சேர்ந்த எந்தவொரு குழுவுடனும் கலந்தாய்வு சாத்தியமாகாதபட்சத்தில், மதிப்பீட்டு அறிக்கையில் அது தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன், இயலுமான வரையில் விரைவாக அவை அடையாளப்படுத்தப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும்)

2. சுகாதார மேம்பாடு

நீர், தேகாரோக்கியம் மற்றும் போஷாக்கு சார்ந்த நோய்களை தடுப்பதற்கு மற்றும்/அல்லது தணிப்பதற்கு மக்கள் நடவடிக்கை எடுப்பதனை இயலுமானதாக்கும் திட்டமிடப்பட்ட, முறையான அணுகுமுறையே சுகாதார மேம்பாடு எனப்படும். WASH நிகழ்ச்சிகளில் சமுதாய பங்களிப்பு, பொறுப்புடைமை மற்றும் கண்காணித்தலை வசதியளிப்பதற்கு பிரயோக ரீதியான வழியினை அது வழங்கும். பாதிக்கப்பட்ட மக்களின் அறிவு, பயிற்சிகள் மற்றும் வளங்களில் இருந்தும், அத்துடன், நடப்பு WASH ஆதாரம் அடிப்படையிலும் சுகாதார மேம்பாட்டுக்கான இலக்கு அமைய வேண்டும். இதன் மூலம், பொது மக்களின் சுகாதாரமானது எவ்வாறு சிறந்த முறையில் பாதுகாக்கப்படலாம் என்பதனை தீர்மானிக்க முடியும்

சிறந்த வகையில் நீர், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டை இயலுமானதாக்குவதற்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகளை உறுதி செய்வதில் சுகாதார மேம்பாடு ஈடுபட்டுள்ளது. அத்துடன், வசதிகளின் பயனுறுதி மிக்க செயற்பாடு மற்றும் பராமரிப்பினையும் அது உள்ளடக்கியுள்ளது. பிரதான மூன்று அம்சங்கள் பின்வருமாறு

1.அறிவு மற்றும் தகவலின் பரஸ்பர பரிமாற்றம்

2.பாதிக்கப்பட்ட சமூகங்களை ஒன்று திரட்டல்

3.அத்தியாவசிய பொருட்கள் மற்றும் வசதிகளின் பிரிவு

அனர்த்த காலங்களின் போது சமுதாயங்களை ஒன்று திரட்டல் என்பது மிகவும் பொருத்தமானது. இந்த ஒன்றிணைவானது, தமது சுகாதாரத்தை பாதுகாப்பதற்கு மக்கள் நடவடிக்கை எடுப்பதற்கு ஊக்குவிக்கும். மேம்படுத்தல் நடவடிக்கைகளில் இயலுமான சந்தர்ப்பங்களில் பரந்த அளவில் செய்திகளை நேரடியாக பரவச் செய்வதற்கு பதிலாக அளவளாவும் முறைகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

சுகாதார மேம்பாட்டு தரம் 1: சுகாதார மேம்பாடு நடைமுறைப்படுத்தல்

அனைத்து வயதுப் பிரிவினையும் சேர்ந்த பாதிக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரதான பொது சுகாதார அபாயங்கள் குறித்து அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அத்துடன், போஷாக்கு நிலைமைகள் மோசமடைந்து செல்வதனை தடுப்பதற்கான பொறியமைப்புக்களை உள்வாங்கல் மற்றும் வழங்கப்பட்ட வசதிகளை பயன்படுத்தல் மற்றும் பேணுதல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- போஷாக்கு சம்பந்தப்பட்ட சவால்கள் மற்றும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை பொருத்தமான வெகுசன தொலைத் தொடர்பு அலைவரிசைகள் ஊடாக முறையாக வழங்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- சமுதாயத்தில் வேறுபட்ட சமூக குழுக்களை ஊக்குவிக்கும் விசேடமான சமூக, கலாசார அல்லது மத காரணிகளை அடையாளங் காணவும். போஷாக்கு மேம்படுத்தல் தொலைத்தொடர்பு மூலோபாயத்தின் அடிப்படையாக அவற்றை பயன்படுத்தவும் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- இயலுமான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்களை உறுதி செய்வதற்கு அளவளாவும் போஷாக்கு தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தவும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட சமுதாயத்துடனான பங்காளித்துவத்துடன், தொடர்ச்சியாக பிரதான சுகாதார பயிற்சிகள் மற்றும் வழங்கப்பட்ட வசதிகள் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் கண்காணித்தலை முன்னெடுக்கவும் (வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் மிகவும் முக்கியமான தரம் 5, வழிகாட்டல் குறிப்புக்கள் 1,3-5ஐப் பார்க்கவும்).
- சமுதாய செயற்பாட்டாளர்களுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை நிர்ணயிப்பதற்கு மக்கள் மற்றும் பிரதான பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- போஷாக்கு நிலைமைகள் மோசமடைந்து வருவதனை தடுப்பதற்கு தாம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் அனைத்து பயனர் குழுக்களுக்கும் விளக்கமளித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- வழங்கப்பட்ட வசதிகள் அனைத்தும் பொருத்தமான வகையில் பயன்படுத்தப்படல் மற்றும் தொடர்ச்சியாக பேணப்படல்.
- தூய்மையாக்கலின் பின்னர், சிறுவர்களினை கழுவியதன் பின்னர், உணவு உட்கொள்வதற்கு முன்னர் மற்றும் உணவு தயாரிப்பதற்கு முன்னர் கைகளை கழுவுதல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- அனைத்து சுகாதார மேம்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் செய்திகள் பிரதான நடத்தைகளையும், தவறான எண்ணக்கருக்களையும் அடையாளப்படுத்துகின்றன. அத்துடன், அவை அனைத்து பயனர் குழுக்களையும் இலக்கு வைக்கின்றன (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- அனைத்து பயனர் குழுக்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் சுகாதார மேம்பாட்டு பணியின் திட்டமிடல், பயிற்சிகள், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும்

மதிப்பீடு செய்தலில் ஈடுபடுத்தப்படல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-6 மற்றும் மிக முக்கியமான தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 1-5ஐப் பார்க்கவும்).

- இளஞ் சிறார்கள் மற்றும் குழந்தைகளின் பராமரிப்பாளர்களுக்கு சிறுவர்களின் கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்கான வசதிகள் வழங்கப்படல் (கழிவுப் பொருள் அகற்றல் தரம் 1 மற்றும் வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **முன்னுரிமை சார்ந்த போஷாக்கு சவால்கள் மற்றும் நடத்தைகளை இலக்கு வைத்தல்:** வேறுபட்ட குழுக்களின் போஷாக்கு சவால்கள், நடவடிக்கைகள் மற்றும் பொறுப்புக்களை மதிப்பீடு செய்ததன் மூலம் கிடைத்த புரிந்துணர்வானது உதவிகளை திட்டமிடுவதற்கு மற்றும் முன்னுரிமைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். எனவே, மனிதநேய செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு இடையிலான தகவல் பரிமாற்றமானது பொருத்தமான வகையில் இலக்கு வைக்கப்பட்டிருக்கும். அத்துடன், இடைக்கிடை எழுப்பப்படும் தவறான எண்ணக்கருக்களும் அடையாளங் காணப்படும்

2. **மக்கள் தொகையின் அனைத்து பிரிவுகளையும் எட்டுதல்:** அனர்த்தத்தின் ஆரம்ப நிலையில், சுகாதார அபாயங்களை குறைப்பது தொடர்பிலான தகவல்களை இயலுமான வரையில் பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு கொண்டு செல்வதனை உறுதி செய்வதற்கு வெகுசன ஊடகங்களில் தங்கியிருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. சம்பந்தப்பட்ட தொலைத் தொடர்பு அலைவரிசைகள் ஊடாக பல்வேறுபட்ட தகவல்கள், கல்வி மற்றும் தொடர்பாடல் மூலப்பொருட்களினால் பல்வேறுபட்ட குழுக்கள் இலக்கு வைக்கப்படல் வேண்டும். எனவே, மக்கள் தொகையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் சென்றடையும். கல்வியறிவு அற்றவர்கள், தொடர்பாடலில் சிக்கல் உள்ளவர்கள் மற்றும்/அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சி இல்லாதவர்கள் போன்றோருக்கு இது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் பிரபலமான ஊடக முறைகளைப் (நாடகம், பாடல்கள், வீதி நாடகம், நடனம், இன்னபிற) பயன்படுத்தலும் பயனுள்ளதாக இருக்கும். கல்வி அமைப்புக்களுடனான ஒருங்கிணைப்பும், போஷாக்கு சார்ந்த நடவடிக்கைகளை பாடசாலைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பங்களை தீர்மானிப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும்.

3. **அளவளாவும் முறைகள்:** கலாசார ரீதியாக பொருத்தமான பங்குபற்றல் மூலப்பொருட்கள் மற்றும் முறைகள் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சுய போஷாக்கு முன்னேற்றங்களை திட்டமிடுவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு பயனுள்ள சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. தேவையான சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சி தொடர்பான ஆலோசனைகள் அல்லது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு அது சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. சுகாதார மேம்பாட்டை திட்டமிடுதலானது கலாசார ரீதியாக பொருத்தமாக இருத்தல் வேண்டும். சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் குழுக்களுடன் பணியாற்றுவதற்கான சிறப்பியல்புகள் மற்றும் தம்மிலும் வேறுபட்ட நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளை பகிரும் திறமைகள்

உடைய வசதியளிப்பவர்களால் முன்னெடுக்கப்படல் வேண்டும் (உதாரணமாக, சில கலாசாரங்களில் தெரியாத ஆண்களுடன் பெண்கள் உரையாடுவது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல).

4. **பெருஞ்சுமை:** போஷாக்கினை மேம்படுத்தும் நடவடிக்கைகளின் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் அல்லது முகாமைத்துவத்தின் பொறுப்புக்களினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஏதாவது ஒரு குழு (உ-ம்: பெண்கள்) மீது பெருஞ்சுமை சுமத்தப்படாது இருப்பதனை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் போன்ற பயன்கள் பெண்கள், ஆண்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

5. **சமுதாய ஒன்று திரட்டிகளுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள்**: வெளிக்களப் பணிபாயர்களைப் பயன்படுத்தல் பெரும் எண்ணிக்கையிலான மக்களை அடைவதற்கான மேலும் அளவளாவும் வழிக்கான சாத்தியத்தை வழங்குகின்றது. ஆனால், இந்த பணியாளர்களுக்கு வசதிப்படுத்தல் திறன்களை மேம்படுத்துவதற்கு உதவி தேவையாகும். முகாமிற்குள் மிகவும் கடுமையான சூழ்நிலை காணப்படுகின்றமையால், பாதிக்கப்பட்ட மக்களின் 1,000பேருக்கு போஷாக்கு மேம்படுத்துநர்கள் அல்லது சமுதாய ஒன்று திரட்டுபவர்கள் இருவர் நியமிக்கப்படல் வேண்டும். சமுதாய ஒன்று திரட்டுபவர்கள் நாளாந்த அடிப்படையில் பணி புரிபவர்களாக, ஒப்பந்த அடிப்படையில் அல்லது தன்னார்வ அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படலாம். அவர்கள் தேசிய சட்டத்திற்கு இசைவானதாக நியமிக்கப்படல் வேண்டும். பணியாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா அல்லது தன்னார்வ நிலையில் உள்ளார்களா என்பது தொடர்பில் பாதிக்கப்பட்ட சமூகம், நடைமுறைப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் குழுக்களுடன் கலந்துரையாடப்படல் வேண்டும். இதன் மூலம் ஏற்கனவே நடைமுறையில் உள்ள முறைமைகளின் நீண்ட கால நிலைத்திருத்தல் தன்மை பாதிக்கப்படல் மற்றும் பதட்டம் ஏற்படல் என்பன தவிர்க்கப்படும்.

6. **நடவடிக்கை எடுப்பதற்கு பல்வேறு குழுக்களுக்கு ஊக்கம் வழங்கல்:** நடத்தையில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு உடல் நலன் மாத்திரம் முக்கியமான ஊக்குவிப்பு கருவியல்ல என்பதனை அறிந்து கொள்வது அவசியமாகும். தனிமை, பாதுகாப்பு, வசதி, மத மற்றும் கலாசார விழுமியங்களை பின்பற்றல், சமூக அந்தஸ்து மற்றும் மதிப்பு என்பவற்றிற்கான தேவையானது சிறந்த உடல் நலனுக்கான வாக்குறுதியிலும் வலுவான வழிநடத்தல் சக்தியாக இருக்கும். மேம்படுத்தல் நடவடிக்கைகளை வடிவமைக்கும் போது இந்த தூண்டும் காரணிகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், பயனுறுதி மிக்க வகையில் வடிவமைப்பு சார்ந்து ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். அழுத்தமானது தனித்து தனிநபர் நடத்தை மாற்றமாக இருக்கக் கூடாது. ஆனால், சமூக ஒருங்கிணைத்தல் மற்றும் பணிபுரியும் குழுக்களின் நடத்தை மாற்றமாக இருத்தல் வேண்டும்

சுகாதார மேம்பாடு தரம் 2:போஷாக்கான பொருட்களை அடையாளங் காணல் மற்றும் பயன்படுத்தல்

தனிப்பட்ட போஷாக்கு, உடல் நலன், கண்ணியம் மற்றும் நலனை உறுதி செய்யும் போஷாக்கான பொருட்களை அடையாளங் காணல் மற்றும் பயன்படுத்துவதனை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை ஈடுபடுவதற்கான பிரவேசம் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- தமக்குத் தேவையான முன்னுரிமையான போஷாக்கு பொருட்கள் தொடர்பில் அனைத்து வயதுப் பிரிவினரையும் சேர்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை கலந்தாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1,3-4ஐப் பார்க்கவும்).
- சமுதாயத்தின் உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்கு போஷாக்குப் பொருட்களின் தக்க நேரத்திற்கான விநியோகத்தை பொறுப்பெடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2-3ஐப் பார்க்கவும்).
- விநியோகிக்கப்பட்ட போஷாக்கு பொருட்கள் தொடர்பில் பயன்பாடு மற்றும் பயனாளிகளின் திருப்தியை மதிப்பீடு செய்வதற்கு விநியோகத்திற்கு பின்னரான கண்காணிப்பை முன்னெடுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3 மற்றும் 5ஐப் பார்க்கவும்).
- போஷாக்குப் பொருட்களின் விநியோகத்திற்கான மாற்றுப் பொருட்களின் பயன்பாட்டை விசாரணை செய்து, மதிப்பீடு செய்தல். உ-ம்: பண உதவி, உணவு சாராத விடயங்கள் (உணவுப் பாதுகாப்பு பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்ற தரம் 1ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு போஷாக்குப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான பிரவேசம் உள்ளது. சுகாதாரம், கண்ணியம் மற்றும் நலனை பயனுறுதி மிக்க வகையில் பேணுவதற்கு அவை பயன்படுத்தப்படுகின்றன (வழிகாட்டல் குறிப்புக்கள் 1, 7 மற்றும் 9ஐப் பார்க்கவும்).
- மாத விலக்கு காலப் பகுதியில் உள்ள அனைத்து பெண்களுக்கும், மாத விலக்கு காலப் பகுதிக்கான போஷாக்குப் பொருட்கள், பாதிக்கப்பட்ட சமூகத்தின் கலந்தாய்வுடன் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5 மற்றும் 8ஐப் பார்க்கவும்).
- தமக்கு பழக்கமற்ற போஷாக்குப் பொருட்களின் பாதுகாப்பான பயன்பாடு தொடர்பிலான தகவல்கள் மற்றும் பயிற்சிகளுக்கான பிரவேசம் அனைத்து பெண்கள்,

ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

- உணவு சாரா பொருட்களின் விநியோகம் தொடர்பிலான நேரம், இடம், உள்ளடக்கம் மற்றும் இலக்குக் குழுக்கள் சார்ந்த தகவல்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-5ஐப் பார்க்கவும்).
- உணவு சாராப் பொருட்களின் விநியோகம் ஒழுங்கு செய்யப்படும் போது பாதிக்கப்பட்ட மக்களின் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடுகள், வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **அடிப்படை போஷாக்குப் பொருட்கள்:** அடிப்படையான ஆகக் குறைந்த போஷாக்குப் பொருட்கள் பொதியில், நீர்ப் போத்தல்கள், குளிப்பதற்கான மற்றும் சலவைக்கான சவர்க்காரங்கள் மற்றும் மாத விலக்குக்கான போஷாக்குப் பொருட்கள் உள்ளடங்கும்.

அடிப்படை போஷாக்குப் பொருட்களின் பட்டியல்

போக்குவரத்துக்கு 10-20 லீற்றர் கொள்ளளவு நீர்	வீட்டிற்கு ஒன்று
சேமித்தலுக்கு 10-20 லீற்றர் கொள்ளளவு நீர்	வீட்டிற்கு ஒன்று
250 கிராம் குளிப்பதற்கான சவர்க்காரம்	மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ஒன்று
200 கிராம் சலவைக்கான சவர்க்காரம்	மாதத்திற்கு நபர் ஒருவருக்கு ஒன்று
மாத விலக்கு போஷாக்குக்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருள், உ-ம்: கழுவக் கூடிய கொட்டன் துணி	நபர் ஒருவருக்கு ஒன்று

2. **ஒருங்கிணைத்தல்:** அடிப்படை போஷாக்குப் பொருட்களில் உள்ளடக்கப்படாத போர்வைகள் போன்ற மேலதிக உணவு சாரா விடயங்கள் தேவையா என்பது தொடர்பில் குடியிருப்புக்களில் தங்கியுள்ளவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடல் (உணவு சாரா பொருட்களின் தரம் 1ஐப் பார்க்கவும்).
3. **போஷாக்குப் பொருட்கள் விநியோகிப்பதற்கான நேர அட்டவணைகள்:** போஷாக்குப் பொருட்களை உரிய நேரத்தில் விநியோகிப்பதனை உறுதி செய்வதற்கு, பாதிக்கப்பட்ட மக்களின் அனுமதி பெறப்படமால், பிரதான பொருட்களை (சவர்க்காரம், இன்னபிற) விநியோகிப்பது அவசியமாகும். அதன் அடிப்படையில் எதிர்கால விநியோகம் தொடர்பிலான உடன்பாடு குறித்து அறிந்து கொள்ள முடியும்.

4. **முன்னுரிமை தேவைகள்:** தமது முன்னுரிமைத் தேவைகள் பொருத்தமான வகையில் எட்டப்படாத சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பொருட்களை விற்பதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் முன்வரலாம். எனவே, விநியோகத்தினை திட்டமிடும் போது மக்களின் வாழ்வாதார தேவைகள் குறித்து கவனஞ் செலுத்துவது அவசியமாகும்.

5. **பொருத்தப்பாடு:** பழக்கமின்மை காரணமாக பயன்படுத்த முடியாத அல்லது தவறாக பயன்படுத்தப்படக் கூடிய பொருட்கள் வழங்கப்படுவது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் (உ-ம்: உணவு என்று கருதப்படக் கூடிய பொருட்கள்). கலாசார ரீதியாக பொருத்தமான அல்லது கோரப்படும், சவர்க்காரத்திற்குப் பதிலாக சலவைத் தூள் வழங்கப்படலாம்.

6. **மாற்றீடு செய்தல்:** தேவையான சந்தர்ப்பங்களில் நுகர்வுப் பொருட்களை மாற்றீடு செய்வது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

7. **விசேட தேவைகள்:** விசேட தேவை உடைய சில மக்களுக்கு (உ-ம்: தீவிரமாக வயிற்றுப் போக்கால் பாதிக்கப்பட்டவர்கள்) சவர்க்காரம் போன்ற போஷாக்குப் பொருட்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படலாம். மாற்றுத் திறனுடைய நபர்கள் அல்லது படுக்கையிலேயே இருப்பவர்களுக்கு மேலதிக பொருட்கள் தேவையாக இருக்கலாம். வாழ்க்கை நலனுக்குரிய சுத்தம் சார்ந்த பயன்பாட்டுக்கு சில மேலதிக பொருட்கள் தேவையாக இருக்கலாம்.

8. **மாதவிலக்கு சுகாதாரம்:** மாதவிலக்கு காலத்தில் பயன்படுத்தக் கூடிய சுகாதாரம் சார்ந்த பொருட்கள் வழங்கப்படல்.

9. **மேலதிகப் பொருட்கள்:** நடைமுறையில் உள்ள சமூக மற்றும் கலாசார பயிற்சிகள் சார்ந்த மேலதிக தனிப்பட்ட போஷாக்கு விடயங்களின் தேவை அவசியமாக உள்ளது. பின்வரும் பொருட்கள் அவற்றில் முக்கியத்துவம் வகிக்கின்றன:

   - 75மி.லீ/100கிராம் பற்பசை
   - ஒரு பல் துலக்கி
   - 250 மி.லீ ஷாம்பூ
   - 2 வயது வரை குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பயன்படுத்தக் கூடிய 250 மி.லீ லோஷன்
   - அகற்றக் கூடிய முகச்சவரக் கத்தி
   - மாத விலக்கு வயதில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான உள்ளாடைகள்
   - தலை வாரும் சீப்பு
   - நகம் சீவி
   - nappies (diapers) மற்றும் potties (வீட்டின் தேவைகளுக்கு ஏற்றவாறு).

3. நீர் விநியோகம்

வாழ்வதற்கு, சுகாதாரத்திற்கு மற்றும் மனித கண்ணியத்திற்கு நீர் என்பது அத்தியாவசியமானது ஆகும். மிகவும் மோசமான சந்தர்ப்பங்களில், அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதிய அளவு நீர் அவசியமாகும். அத்துடன், இவ்வாறான சூழ்நிலைகளில் வாழ்வதற்கு தேவையான அளவு தூய குடி நீரை வழங்க வேண்டியதும் மிகவும் முக்கியமானது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், போதிய நீர் இன்மையால் பலவீனமான சுகாதார நிலையின் காரணமாகவும் மற்றும் அசுத்தமடைந்த நீரை உட்கொள்வதன் காரணமாகவுமே பிரதான சுகாதார பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நீர் விநியோகம் தரம் 1: பிரவேசம் மற்றும் நீர் கொள்ளளவு

குடிப்பதற்கு, சமையலுக்கு மற்றும் தனிப்பட்ட, வீட்டுத் தேவைகளுக்கு போதிய அளவு நீர் கிடைப்பதற்கு பாதுகாப்பான மற்றும் சமமான பிரவேசத்தை அனைத்து மக்களும் கொண்டிருத்தல் வேண்டும். பொது மக்கள் நீர் பகுதிகள் வீடுகளுக்கு அண்மையில் அமைந்திருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- மூலங்களின் கொள்ளளவு மற்றும் சுற்றுச் சூழல் தாக்கங்கள் என்பவற்றை கவனத்தில் எடுத்துக் கொண்டு சூழ்நிலைக்கு பொருத்தமான நீர் மூலத்தை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 1).
- பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை எட்டுவதற்கு நீரினை முன்னுரிமை மிக்கதாக்குவதுடன், விநியோகம் செய்யவும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2 மற்றும் 4ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- எந்தவொரு குடும்பத்தினதும் பருகுதல், சமைத்தல் மற்றும் தனிப்பட்ட போஷாக்குத் தேவைகளுக்கான நீரின் நாளாந்த சராசரி கொள்ளளவு 15லீற்றர்களாகும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-8ஐப் பார்க்கவும்).
- எந்தவொரு வீட்டிலிருந்தும் நீர் பெறச் செல்வதற்கான அருகில் உள்ள தூரம் 500மீற்றர்களாகும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1, 2, 5 மற்றும் 8ஐப் பார்க்கவும்).
- நீர் இருக்கும் இடத்தில் வரிசையில் இருக்க வேண்டிய நேரம் 30 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **நீர் மூலங்களை தெரிவு செய்தல்:** நீர் மூலத்தை தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும்: போதிய நீரின் கொள்ளளவு கிடைக்கக் கூடிய தன்மை, அருகாமை மற்றும் நிலைத்திருக்கும் தன்மை: சிகிச்சை தேவையாக இருக்குமா: மற்றும் மூலம் தொடர்பில் நடைமுறையில் உள்ள எந்தவொரு சமூக, அரசியல் அல்லது சட்ட காரணிகள் உள்ளடங்கலாக அது இயலுமானதா. பொதுவாக நிலக் கீழ் நீர் வளங்கள் மற்றும்/அல்லது வசந்த காலத்தில் நில ஈர்ப்பு விநியோகங்கள் என்பன ஏற்றுக் கொள்ளக் கூடியன. இவை இயற்கையாகவே கிடைக்கக் கூடியனவாக இருக்கின்றன. அனர்த்த காலங்களில், ஆரம்ப கட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறைகள் மற்றும் வளங்கள் வழமையாக தேவையாக உள்ளன. அதிகம் பயன்படுத்தப்படுவதனை தவிர்ப்பதற்கு அனைத்து மூலங்களும் நன்றாக கண்காணிப்புக்கு உள்ளக்கப்படல் வேண்டும்.

2. **தேவைகள்:** வீட்டுத் தேவைக்கு அவசியமான நீரின் அளவு சூழ்நிலை சார்ந்தது ஆகும். காலநிலை மற்றும் கிடைக்கக் கூடியதாக உள்ள தேகாரோக்கிய வசதிகள், பொது மக்களின் பழக்கங்கள், அவர்களது மத மற்றும் கலாசார நம்பிக்கைகள், அவர்கள் சமையல் செய்யும் உணவு, அவர்கள் அணியும் உடை மற்றும் வேறு விடயங்களின் அடிப்படையில் அது மாறுபடலாம். நீர் மூலம் அருகில் அமைந்திருக்கும் போது, நீரின் பயன்பாடு அதிகமாக இருக்கும். நபரொருவருக்கு நாளாந்தம் 15லீற்றர்கள் நீர் அவசியமாக இருக்கும்.

அடிப்படை வாழ்க்கைக்கு தேவையான நீர் சம்பந்தப்பட்ட அட்டவணை

வாழ்வதற்கான தேவைகள்: உட்கொள்ளும் நீர் (பருகுதல் மற்றும் உணவு)	நாளொன்றுக்கு 2.5-3 லீற்றர்கள்	காலநிலை மற்றும் தனிநபரின் உடலியலில் தங்கியுள்ளது.
அடிப்படை சுகாதார பழக்கங்கள்	நாளொன்றுக்கு 2-6 லீற்றர்கள்	சமூக மற்றும் கலாசார விழுமியங்களில் தங்கியுள்ளது
அடிப்படை சமையல் தேவைகள்	நாளொன்றுக்கு 3-6 லீற்றர்கள்	உணவு வகை மற்றும் சமூக, கலாசார விழுமியங்களில் தங்கியுள்ளது
மொத்த அடிப்படை நீர் தேவைகள்	நாளொன்றுக்கு 7.5-15 லீற்றர்கள்	

நிறுவனங்கள் மற்றும் வேறு தேவைகளுக்கு தேவையான ஆகக் குறைந்த நீரின் கொள்ளளவு தொடர்பான வழிகாட்டலுக்கு பிற்சேர்க்கை 2இல் உள்ள நிறுவனங்கள் மற்றும் வேறு பயன்பாடுகளுக்கான ஆகக் குறைந்த நீர் கொள்ளளவுகளைப் பார்க்கவும். கால்நடைகளின் அவசர நீர் தேவைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கு கால்நடை அவசர வழிகாட்டிகள் மற்றும் தரங்களைப் பார்க்கவும் (குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவையைப் பார்க்கவும்).

3. **அளவீடுகள்:** குழாய் வலையமைப்பு அல்லது நீர்க் குழாய்களில் செலுத்தப்படும் நீரின் கொள்ளளவை அளவீடு செய்வதிலும் பார்க்க குடும்பம் சம்பந்தமான ஆய்வுகள், மேற்பார்வைகள் மற்றும் சமுதாய கலந்துரையாடல் குழுக்கள் என்பன நீர் பயன்பாடு மற்றும் நுகர்வு தொடர்பில் தரவு சேகரிப்பதற்கான மிகவும் பயனுள்ள முறைகளாகும்.

4. **கொள்ளளவு:** அனர்த்த காலங்களின் போது, நீரின் கொள்ளளவு மற்றும் தரத்தில் ஆகக் குறைந்த தரங்களை எட்டும் வரை, இடைநிலையானதாக இருந்த போதிலும் போதிய கொள்ளளவு நீரைப் பெற்றுக் கொள்வதற்கான சமமான பிரவேசம் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் உடனடியாக நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகக் கூடியவர்கள். எனவே, பாதிக்கப்பட்ட அல்லது அப்பகுதியில் வாழும் மக்களின் விழுமியங்களிலும் அதிகமானதாக இருக்கின்ற போதிலும் நீரிற்கான பிரவேசம் மற்றும் கொள்ளளவு குறிகாட்டிகள் என்பன எட்டப்படல் வேண்டும். எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் போன்ற விசேட சுகாதார நிலைமைகளை எதிர்நோக்கியுள்ள நபர்களுக்கு மேலதிக நீர் வழங்கப்படுவதனை உறுதி செய்வது குறித்து முக்கியமான கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், வரட்சியான சந்தர்ப்பங்களில் கால்நடைகள் மற்றும் பயிர்களுக்கான நீர் தேவைகள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், எதிர்ப்பு நிலையைத் தவிர்ப்பதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அந்தப் பகுதியிலேயே வாழும் மக்கள் என இரண்டு தரப்பினருக்கும் சமமான வகையில் கிடைக்குமாறு நீர் மற்றும் தேகாரோக்கிய வசதிகள் வழங்கப்படல் வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது (பிற்சேர்க்கை 2: நிறுவனங்கள் மற்றும் வேறு பயன்பாடுகளுக்கான ஆகக் குறைந்த நீர் கொள்ளளவுகளைப் பார்க்கவும்).

5. **நீர் வளங்களை பயன்படுத்தக் கூடிய ஆகக் கூடிய மக்களின் எண்ணிக்கை:** ஒவ்வொரு நீர் வளத்திலும் கிடைக்கக் கூடியதாக உள்ள நீரின் அளவு சார்ந்ததாகவே அதனைப் பயன்படுத்துவதற்கான மக்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை காணப்படும். அண்ணளவான வழிகாட்டிகள் பின்வருமாறு:

நீர்க்குழாய் ஒன்றுக்கு 250 மக்கள்	7.5லீற்றர்கள்/நிமிடத்திற்கு பெருக்கெடுப்பதன் அடிப்படையில்
கைப்பம்பி ஒன்றுக்கு 500 மக்கள்	17லீற்றர்கள்/நிமிடத்திற்கு பெருக்கெடுப்பதன் அடிப்படையில்
ஒருவர் பயன்படுத்தும் திறந்த கிணறு ஒன்றுக்கு 400 மக்கள்	12.5லீற்றர்கள்/நிமிடத்திற்கு பெருக்கெடுப்பதன் அடிப்படையில்

நீர் பெறும் வளங்கள் அண்ணளவாக நாளாந்தம் 8 மணித்தியாலங்களுக்கு பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்ற வகையில் இந்த வழிகாட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. குறித்த நேரத்தில் நீர் விநியோகம் இருத்தல் வேண்டும். இதனை விட அதிகமானதாக பிரவேசம் இருக்கும் பட்சத்தில் ஆகக் குறைந்த தேவையான நாளாந்தம் 15லீற்றர்கள் நீரை மக்கள் சேகரிக்க முடியும். மிகுந்த

எச்சரிக்கையுடன் இந்த இலக்குகள் பயன்படுத்தப்படல் வேண்டும். அவற்றை பெறுவதினால் மாத்திரம் ஆகக் குறைந்த கொள்ளளவு நீர் அல்லது சமமான பிரவேசம் என்பதனை உத்தரவாதப்படுத்த முடியாது.

6. **வரிசையிலிருக்கும் நேரம்:** போதிய நீர் கிடைக்காமைக்கான காரணங்களில் ஒன்றாக நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நேரம் உள்ளது. போதிய எண்ணிக்கையில் நீர் பெற்றுக் கொள்வதற்கான மூலம் இல்லாமையே இந்த நிலைக்கு ஏதுவாகின்றது. நீண்ட நேரம் நீருக்காக வரிசையில் காத்திருக்கும் நிலையானது நபர் ஒருவருக்கான நீரின் அளவு குறைவதற்கும் காரணமாகின்றது. வேறு இடங்களில் பெறும் நீரின் பயன்பாட்டை அதிகரித்து, வேறு அத்தியாவசிய வாழ்க்கைத் தேவைக்கு இந்த நீரை பயன்படுத்த முடியும்.

7. **பிரவேசம் மற்றும் ஒப்புரவு:** ஆகக் குறைந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதிய அளவு நீர் கிடைக்கக் கூடியதாக இருந்த போதிலும், அனைத்து குழுக்களுக்குமான ஒப்புரவான பிரவேசத்தினை உறுதி செய்வதற்கான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். பால் அல்லது இன வேறுபாடுகள் அற்ற வகையில் அனைவரும் செல்லக் கூடிய பொதுவான இடங்களில் நீர் மூலங்கள் அமைந்திருத்தல் வேண்டும். சில கைப்பம்பிகளும், நீர் கொண்டு செல்லும் கொள்கலன்களும் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், வயதான மக்கள், வலுவிழந்த நபர்கள் மற்றும் சிறுவர்கள் போன்றோர் பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நீரானது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மாத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில், பெண் பயனாளிகள் உள்ளடங்கலாக, பயன்படுத்துபவர்களின் ஆலோசனையுடன் குறித்த நேரம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

நீர் விநியோகம் தரம் 2: நீர் தரம்

நீரானது நாவிற்கினியதாக மற்றும் குடிப்பதற்கு போதிய தரமுடையதாக இருத்தல் வேண்டும். அத்துடன், சுகாதாரத்திற்கு சவால் ஏற்படாத வகையில் சமையல் மற்றும் தனிப்பட்ட, உள்ளக போஷாக்கு தேவைகளுக்கு பயன்படுத்தப்படலாம்.

பிரதான நடவடிக்கைகள்: (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- கழிவுகள் தொடர்பான துரித ஆய்வுகளை முன்னெடுத்தல் மற்றும் நேரமும், சூழ்நிலையும் ஒத்துழைக்கும் போது, நீர் மூலத்திற்கான நீர் பாதுகாப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- நீர் விநியோகத்திற்குப் பின்னர் அசுத்தமடைவதற்கான சாத்தியங்களை குறைப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐயும், போஷாக்கு மேம்பாட்டு தரம் 1ஐயும் பார்க்கவும்).

- குழாய் மூலமான நீர் விநியோகத்திற்கு அல்லது வயிற்றுப் போக்கு தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களில் நீர் விநியோகம், தொற்று அற்ற நீர் விநியோகம் என்பவற்றுக்கு, ஒரு லீற்றருக்கு 0.5மி.கிராம் குளோரின் கலக்கப்படும். அத்துடன், கலங்கல் தன்மையானது 5 NTU க்கு குறைவாக இருக்கும். விசேட வயிற்றுப் போக்கு நோய் ஏற்படும் சந்தர்ப்பங்களில், லீற்றர் ஒன்றுக்கு 1மில்லி கிராம் குளோரின் கலக்கப்படுவதனை உறுதி செய்யவும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-8ஐப் பார்க்கவும்).
- குடும்ப மட்டத்திலான நீர் வழங்கல் பிரேரிக்கப்படும் போது, பொருத்தமான மேம்படுத்தல், பயிற்சிகள் மற்றும் கண்காணித்தலுடன் வழங்கப்படுவதனை உறுதி செய்யவும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3 மற்றும் 6ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள்: (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- விநியோகத்தின் போது 100மி.லீ நீரில் எதுவிதமான மலம் சார்ந்த நுண்ணங்கி இருக்கக் கூடாது (வழிகாட்டல் குறிப்பு 2, 4-7ஐப் பார்க்கவும்).
- வீடு மட்டத்தில் பயன்படுத்தும் எந்தவொரு நீர் மூலமும், நுண்ணுயிரியல் நீர் தரத்தினை மேம்படுத்துவதில் பயனுறுதி மிக்கதாகவும், பொருத்தமான பயிற்சி, மேம்படுத்தல் மற்றும் கண்காணித்தல் இணைந்ததாகவும் இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-6ஐப் பார்க்கவும்).
- குறுகிய காலம் பயன்படுத்தப்படும் நீரில் இரசாயனங்கள் அல்லது கதிரியக்கவியல் சார் மூலங்கள் கலக்கப்படுவதனால் எதுவிதமான பாதகமான தாக்கங்களும் உடல் நலனுக்கு இல்லை. அத்துடன், அவ்வாறான தாக்கத்திற்கான குறிப்பிட்டளவு சாத்தியமும் இல்லையென மதிப்பீடு வெளிப்படுத்தல் வேண்டும். (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஏற்கனவே இடைக்கிடை உள்ள நீர் மூலங்களிலும் பாதுகாக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட மூலத்திலிருந்தே நீரினைப் பெறுகின்றனர் என்பதனை உறுதி செய்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3 மற்றும் 6ஐப் பார்க்கவும்).
- நீர் மூலம் ஏற்படும் அல்லது நீர் சம்பந்தப்பட்ட நோய்கள் எதுவும் இல்லை என்பதனை உறுதி செய்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-9ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சுத்தம் சம்பந்தமான ஆய்வு மற்றும் நீர் பாதுகாப்பு திட்டம்:** பொது மக்களின் உடல் நலனில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் மற்றும் பயிற்சிகள் என்பன தொடர்பிலான மதிப்பீடே சுத்தம் சம்பந்தமான ஆய்வு ஆகும். போக்குவரத்துக்கான மற்றும் வீட்டில், தூய்மையாக்கல் பயிற்சிகளில், சாக்கடை வடிகாலில் மற்றும் திண்ம கழிவு முகாமைத்துவத்தில் நீர் மூலத்தில் அசுத்தமாக்கும் சாதகமான காரணிகளை அது உள்ளடக்குகின்றது. பொது மக்கள்

சுகாதாரத்திற்கான சவால்கள் எங்கு இருந்து வருகின்றன என்பதனை அடையாளங் கண்டு கொள்வதற்கான மற்றும் இந்த சவால்களை குறைப்பதற்கான வழிகளை கண்டறிவதில் சமுதாயத்தை ஈடுபடுத்தல் என்பவற்றுக்கான பயனுறுதி மிக்க வழியாக சமுதாய வரைபடமாக்கல் என்பது காணப்படுகின்றது. மனித மலங்களைப் போல், விலங்கு கழிவுகள் தீங்கு விளைவிப்பதாக இல்லை. ஏனெனில், மனித மலங்களில் cryptosporidium, giardia, salmonella, campylobacter, caliciviruses மற்றும் மனித வயிற்றுப் போக்கினால் ஏற்படும் பொதுவான காரணிகள் என நுண்ணுயிரினங்கள் உள்ளடங்கியுள்ளன. எனவே, உடல் நலத்திற்கு அவை தீங்கு விளைவிக்கக் கூடியதாக உள்ளன. அனர்த்தத்தை அடையாளங் காணல் மற்றும் சவால் மதிப்பீடு, மேம்படுத்தல்/புதுப்பித்தல் திட்டம், கட்டுப்பாட்டு அளவீடுகளை கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள், அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகளை உள்ளடக்கல் என்பன சார்ந்த தெளிவான அணுகுமுறை யான தமது நீர் பாதுகாப்பு திட்டத்தை (WSP) WHO பரிந்துரை செய்கின்றது (குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவையைப் பார்க்கவும்)

2. **நுண்ணுயிரியல் நீர் தரம்:** நீரில் மனித மற்றும்/அல்லது விலங்கு கழிவுகள் கலப்பதற்கான குறிகாட்டியின் மட்டமாக கழிவு நுண்ணுயிர் பக்ரீரியா (>99 வீதமானவை E. coli) காணப்படுகின்றது. அத்துடன் தீங்கு விளைவிக்கக் கூடிய நோய்க் கிருமிகள் காணப்படுவதற்கும் சாத்தியங்கள் உள்ளன. கழிவு நுண்ணுயிர் ஏதும் இருப்பின் நீர் உடனடியாக சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படல் வேண்டும்.

3. **பாதுகாக்கப்பட்ட வளங்களை மேம்படுத்தல்:** பாதுகாக்கப்பட்ட வளங்கள் அல்லது சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதன் மூலம் சிறிதளவிலான பயனை மாத்திரமே பெற முடியும். அத்துடன், மக்களுக்கு இந்த நீர் மற்றும் அதனைப் பயன்படுத்துவதனால் ஏற்படக் கூடிய சுகாதாரப் பலன்களை புரிந்து கொள்ளச் செய்யவும் வேண்டும். பாதுகாப்பற்ற நீர் வளங்களை பயன்படுத்துவதற்கு மக்கள் முயற்சிக்கலாம். உதாரணமாக, சுவை, அருகில் உள்ளமை மற்றும் சமூக வசதி என்பன காரணமாக ஆறுகள், அருவிகள் மற்றும் பாதுகாப்பற்ற கிணறுகள் என்பவற்றை மக்கள் நாடிச் செல்லலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில், முன்னுரிமைக்கான தேவையைப் புரிந்து கொள்வதற்கு தொழில் நுட்பவியலாளர்கள், சுகாதார மேம்பாட்டாளர்கள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பாளர்களுடைய கருத்துக்கள் மேம்படுத்தல் செய்திகள் மற்றும் கலந்துரையாடல்களில் உள்ளடக்கப்படலாம்.

4. **விநியோகத்திற்குப் பின்னரான சுத்திகரிப்பு:** சேமிப்பு, களஞ்சியப்படுத்தல் மற்றும் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பானதாக இருக்கின்ற நிலையில் நீரினால் எதுவிதமான சுகாதார சீர்கேடுகளும் ஏற்படாது. மேம்படுத்தப்பட்ட சேமிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் தூய மற்றும் பொருத்தமான சேமிப்பை விநியோகித்தல் மற்றும் கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தல் என்பவற்றின் மூலம் நீர் விநியோகத்தினால் ஏற்படக் கூடிய சவால்களை குறைக்க முடியும் (நீர் விநியோகம் தரம் 3ஐப் பார்க்கவும்). ஒவ்வொரு முறையும் நீர் விநியோகத்திற்கு முன்னர் விநியோகிக்கப்படவுள்ள நீரின் மாதிரி பரிசோதிக்கப்படல் வேண்டும்.

5. **நீர் தொற்றுநீக்கல்:** விநியோகத்திற்கு பின்னர் நீர் அசுத்தமடைவதற்கான சந்தர்ப்பங்கள் அல்லது அபாயங்கள் இருப்பின், குளோரின் போன்ற தொற்று நீக்கிகள் பயன்படுத்தப்பட்டு, நீர் நன்கு சுத்திகரிக்கப்படல் வேண்டும். சனத்தொகை அடர்த்தி, கழிவு வெளியேற்றல் நடைமுறைகள், போஷாக்கு சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற நோய்களின் கட்டுப்பாடு போன்ற குடியிருப்பின் சூழ்நிலைகளின் அடிப்படையில் இந்த அபாயமானது தீர்மானிக்கப்படும். அச்சுறுத்தல் அல்லது வயிற்றுப் போக்கு நோய் தொற்றுவதற்கான சந்தர்ப்பம் காணப்படும் நிலையில், விநியோகிக்கப்படும் குடி நீர் எல்லா வேளைகளிலும் சுத்திகரிக்கப்படல் வேண்டும். நீரானது முறையாக தொற்று நீக்கப்படுவதற்கு, கலங்கல் தன்மையானது 5 NTUக்கு குறைவா-னதாக இருத்தல் வேண்டும். அத்துடன், குறுகிய கால அவசர பயன்பாட்டுக்கு அதிக கலங்கல் தன்மை வாய்ந்த நீரானது வடிகட்டலின் பின்னர் கலங்கல் தன்மை இல்லாது போகும் வரை போதிய அளவில் இரண்டு மடங்கு குளோரின் கலக்கப்பட்டு தொற்று நீக்கப்படல் வேண்டும் (பிற்சேர்க்கை 6: வீடுகளில் நீர் சுத்திகரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் தீர்மான மரம்).

6. **வீடுகளில் நீர் சுத்திகரிப்பு:** மத்திய அளவில் தொற்று நீக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு முறையை பயன்படுத்துவது சாத்தியமாக இல்லாத சந்தர்ப்பங்களில், Point-of-use water treatment (PoUWT) என்ற முறையானது ஒரு தெரிவாக பயன்படுத்தப்படலாம். வீட்டில் சேமித்து வைக்கப்பட்டுள்ள நீரில் வயிற்றுப் போக்கு ஏற்படுவதற்கான சாத்தியங்களை குறைப்பதற்கும் மற்றும் நுண்ணுயிர் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏற்ற படிநிலைகள் point-of-use water treatment (PoUWT)இன் வேறுபட்ட வகையிலான தெரிவுகளில் கொதிக்க வைத்தல், குளோரின் கலத்தல், சூரிய ஒளியில் தொற்று நீக்கல், வெண்களி வடிகட்டல், மெதுவான மணல் வடிகட்டல் மற்றும் தொற்று நீக்கல் போன்றன உள்ளடங்கும். நடைமுறையில் உள்ள நீர் மற்றும் தேகாரோக்கிய நிலைமைகள், நீரின் தரம், கலாசார ரீதியிலான ஏற்றுக் கொள்ளும் தன்மை மற்றும் எந்தவொரு தெரிவினையும் நடைமுறைப்படுத்தல் இயலுமை என்பதன் அடிப்படையிலேயே மிகவும் பொருத்தமான PoUWT தெரிவு தங்கியுள்ளது. வெற்றிகரமான PoUWTஇல் போதிய மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திகளும், பயனாளிகளுக்கான போதிய பயிற்சிகளும் உள்ளடக்கப்படல் வேண்டும். அனர்த்த சூழ்நிலைகளில் பரிசோதிக்கப்படாத நீர் சுத்திகரிப்பு தெரிவானது தவிர்க்கப்படல் வேண்டும். சவால் எதிர்நோக்கப்படும், PoUWT உற்பத்திகள் முன்னரே வைக்கப்படல் என்பன துரித மறுசீரமைப்பினை வசதிப்படுத்துவதற்கான வழிகளாக கருதப்படுகின்றன. அனர்த்தத்திற்கு பின்னரான காலப் பகுதியில் பயன்படுத்தப்படுவது தொடர வேண்டுமாயின், உள்ளூர் மட்டத்தில் கிடைக்கக் கூடியதாக உள்ள பொருட்களின் பயன்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். இன் பயனுறுதி மிக்கத் தேவைக்கு தொடர்ச்சியான கண்காணிப்பு, ஆதரவு மற்றும் கண்காணித்தல் என்பன அவசியமாகும். மாற்று வழியான நீர் அணுகுமுறையை தெரிவு செய்வதில் இதுவே பிரதானமான முன் நிபந்தனையாக இருக்க வேண்டும்.

7. **குளோரினைப் பயன்படுத்தும்** PoUWT: இரண்டு மடங்கு குளோரினைப் பயன்படுத்தலானது ஏனைய நீர் மூலம் இல்லாத சந்தர்ப்பத்தில் அதிக கலங்கல் தன்மையை நீக்குவதற்கு பயன்படுத்தப்படும் முறையாகும். இது மிகவும் குறுகிய

காலப் பகுதிக்கு மாத்திரமே முயற்சிக்கப்படல் வேண்டும். அத்துடன், வடிகட்டல் ஊடாக கலங்கல் தன்மையை நீக்கியதன் பின்னர், சுத்திகரிப்புக்கு முன்னர் தயார் செய்தல் தொடர்பில் பயனாளிகளுக்கு கற்பித்தலானது அவசியமாகும் (பிற்சேர்க்கை 6: வீடுகளில் நீர் சுத்திகரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் தீர்மான மரம்)

8. **இரசாயன மற்றும் கதிரியக்க சுத்திகரிப்பு:** நீர் விநியோகமானது இரசாயன அல்லது கதிரியக்கவியல் சுகாதார அபாயங்களை சுமந்து செல்வதாக இருக்கலாம் என நீர் சம்பந்தப்பட்ட ஆய்வறிக்கைகள் அல்லது கைத்தொழில் சார் அல்லது இராணுவ செயற்பாடுகள் தெரிவிக்கின்றன. இரசாயன பகுப்பாய்வின் ஊடாக இந்த சவாலானது தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. குறுகிய கால பொது சுகாதார அபாயங்கள் மற்றும் பயன்களை தீர்மானம் உறுதி செய்கின்றது. மேலதிகமாக, சுத்திகரிக்கப்பட்ட நீரை நீண்ட காலத்திற்கு பயன்படுத்துவதற்கான தீர்மானமானது சுகாதார விளைவுகள் தொடர்பான மேலும் உறுதியான மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றது

9. **சுவைத் தன்மை:** சுவை என்பது நேரடியான சுகாதார பிரச்சினை அல்ல (உ-ம்: ஓரளவு உப்புத் தன்மை கொண்ட நீர் பாரிய உடல் நலப் பிரச்சினையை ஏற்படுத்தாது). ஆனால், பாதுகாப்பான நீர் விநியோகத்தின் சுவை சிறப்பாக இல்லையெனின், பயன்படுத்துபவர்கள் பாதுகாப்பற்ற மூலங்களில் இருந்து நீரை பெற்று பருகுவதற்கு முயற்சிப்பர். அது, அவர்களுடைய உடல்நிலைக்கு தீங்கினை ஏற்படுத்தும். இதனை தவிர்ப்பதற்கு, பாதுகாப்பான நீர் மாத்திரம் பயன்படுத்துவதனை உறுதி செய்வதற்கு போஷாக்கு மேம்படுத்தல் நடவடிக்கைகள் அவசியமாகும்.

10. **சுகாதார நிலையங்களுக்கான நீரின் தரம்:** வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் உணவூட்டல் நிலையங்களிற்கான நீர் விநி-யோகமானது, குளோரின் அல்லது வேறு தொற்று நீக்கிகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் வழங்கப்படல் வேண்டும். நீர் விநியோகத்திற்கு தடை ஏற்படலாம் என்ற சாத்தியங்கள் காணப்படும் போது, தடையற்ற விநியோகத்தின் சாமான்ய பயன்பாட்டுக்கு நீர் சேமிப்பு என்பது நிலையங்களில் இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும் (பிற்சேர்க்கை 2: நிறுவனங்கள் மற்றும் வேறு பயன்பாட்டுக்கான ஆகக் குறைந்த கொள்ளளவுகள் மற்றும் 5: கொலரா சிகிச்சை நிலையங்களுக்கான ஆகக் குறைந்த போஷாக்கு, தேகாரோக்கிய மற்றும் தனித்திருத்தல் நடவடிக்கைகள் என்பவற்றைப் பார்க்கவும்).

நீர் விநியோக தரம் 3: நீர் வசதிகள்

பருகுவதற்கு, சமையலுக்கு மற்றும் தனிப்பட்ட போஷாக்கு தேவைகளுக்கு போதியளவு நீரின் கொள்ளளவை சேமிப்பதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு மற்றும் பயன்படுத்துவதற்கு மக்களுக்கு போதியளவு வசதிகள் இருத்தல் வேண்டும். அத்துடன், குடிநீர் நுகர்வுக்கு உட்கொள்ளப்படும் வரை பாதுகாப்பாக இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- போதிய நீர் சேமிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குதல் (வழிகாட்டல் குறிப்பு 1 மற்றும் சுகாதார மேம்பாட்டு தரம் 2 என்பவற்றை பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட அனைத்து தனிநபர்களினதும் மற்றும் பலவீனமான மக்களினதும் பங்குபற்றலை செயற்றிறன் மிக்கதாக ஊக்குவிக்கவும். நீர் பெறும் மூலங்களை வடிவமைத்தல் மற்றும் சலவைக்கான மற்றும் குளிப்பதற்கான வசதிகளை அமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- நீர் விநியோகப் பகுதிகளில், சமுதாயங்களில் சலவை செய்யும் வசதிகள், தனியார் சலவை குவளைகள் மற்றும் பெண்கள் தமது உள்ளாடைகளை சலவை செய்து, உலர வைப்பதற்கான சலவை பகுதிகள் என்பவற்றை உள்ளடக்கல் (வழிகாட்டல் குறிப்பு 2 மற்றும் சுகாதார மேம்பாட்டு தரம் 2 என்பவற்றைப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சேமிப்புக்கு ஒன்றும், வெளியிடங்களுக்குச் சென்று சேமித்து வருவதற்கும் என ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு சுத்தமான நீர் சேமிக்கும் 10-20லீற்றர்கள் கொள்கலன் இருத்தல் வேண்டும். (வழிகாட்டல் குறிப்பு 1 மற்றும் சுகாதார மேம்பாட்டு தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- நீர் சேமிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தும் கொள்கலன்கள் குறுகிய கழுத்துப் பகுதியை உடையதாக இருக்கும். இது பாதுகாப்பான சேமிப்புக்கும், களஞ்சியப்படுத்தலுக்கமானதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- 100 பேருக்கு ஆகக் குறைந்த 1 சலவை பேசின் (Basin) வழங்கப்பட்டிருக்கும். அத்துடன், பெண்களுக்கான தனியான குளிப்பதற்கான மற்றும் சலவை செய்வதற்கான இட வசதி வழங்கப்பட்டிருக்கும். குளித்தல் மற்றும் சலவைக்காக போதியளவு நீர் விநியோகம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- வீடுகளுக்கு வழங்கப்படும் நீர் எப்போதும் சுத்திரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- நீர் சேமிப்பு, களஞ்சியப்படுத்தல், குளித்தல், கை கழுவுதல் மற்றும் சலவைக்கான போதியளவு வசதிகள் தொடர்பில் அனைத்து மக்களும் திருப்தியடைதல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- பொருத்தப்பட்ட முறைகள் தொடர்ச்சியாக பராமரிப்புக்கு உள்ளாக்கப்படுவதுடன், வசதிகள் உறுதி செய்யப்படல் வேண்டும். இயலுமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துபவர்களும் ஈடுபடுத்தப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

1. **நீர் சேமிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல்:** நீர் சேமித்தலுக்கும், களஞ்சியப்படுத்துவதற்கும், பருகுதல், சமைத்தல், கழுவல் மற்றும் குளித்தலுக்குப் போன்ற பயன்பாட்டிற்கும் மக்களுக்கு பாத்திரங்கள் தேவைப்படுகின்றன. பாத்திரங்கள் தூய்மையாக, சுகாதாரமானதாக, இலகுவாக கொண்டு செல்லக் கூடியதாகவும், அளவு, உருவம் மற்றும் வடிவத்தில் உள்ளூர் தேவைகளுக்கு பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். சிறுவர்கள், வலுவிழந்த நபர்கள், வயதானவர்கள் மற்றும் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் தொற்றுக்குள்ளானவர்கள் போன்றோருக்கு, சிறிய அல்லது விசேடமாக வடிவமைக்கப்பட்ட நீர் கொண்டு செல்லும் கொள்கலன் வழங்கப்படல் வேண்டும். களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான கொள்ளளவு குடும்பத்தின் அளவு மற்றும் நீர் கிடைக்கக் கூடிய தன்மை என்பவற்றில் தங்கியுள்ளது. உ-ம்: தொடர்ச்சியாக நாளாந்த விநியோகத்தினை வழங்கக் கூடிய நிலைமையில், அண்ணளவாக நபர் ஒருவருக்கு 4 லீற்றர்கள் நீர் போதுமானதாக இருக்கும். பாதுகாப்பான சேமிப்பு, களஞ்சியப்படுத்தலை மேம்படுத்தல் மற்றும் கண்காணித்தலானது என்பது நீர் சுத்திகரிப்பு விடயங்களை பலவீனமான மக்கள், விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பமாக உள்ளது.

2. **சமுதாய ரீதியில் சலவை மற்றும் குளித்தல் வசதிகள்:** தனிமையாக மற்றும் கண்ணியத்துடன் குளிப்பதற்கான இடத்தை மக்கள் விரும்புகின்றனர். வீடுகளில் இது சாத்தியமாக இல்லாது இருப்பின், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். சவர்க்காரம் கிடைக்காத பட்சத்தில், பொதுவாக பயன்படுத்தப்படும் சாம்பல், மணல், சோடா மற்றும் பல்வேறு தாவரங்கள் போன்ற கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஆடைகளை சலவை செய்தல் என்பது, விசேடமாக சிறுவர்களின் ஆடைகளை சலவை செய்தலானது அத்தியாவசியமான சுகாதார நடவடிக்கையாகும். சமையல் புரியும் மற்றும் உணவு உட்கொள்ளும் பாத்திரங்களும் சுத்தமாக்கப்படல் வேண்டும். எண்ணிக்கை, இடம், வடிவம், பாதுகாப்பு, பொருத்தப்பாடு மற்றும் வசதி என்பன பயன்படுத்துநர்களுடனான கலந்தாய்வின் அடிப்படையில், விசேடமாக பெண்கள், பருவமான பெண்கள் மற்றும் வலுவிழந்த நபர்களுடனான கலந்தாய்வின் அடிப்படையில் தீர்மானிக்கப்படல் வேண்டும். வசதிகள் கிடைக்கக் கூடியதாக உள்ள இடம் அணுகக் கூடியதாகவும், பயன்படுத்துநர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யக் கூடியதாகவும் இருத்தல் அவசியம்.

3. **நீர் முறைகளின் பராமரிப்பு:** வழங்கப்படும் முறைகளைப் பேணுவதற்கும் மற்றும் நிலைத்திருக்கச் செய்வதற்கும் அனைத்து தேவையான நடவடிக்கைகளும் எடுக்க வேண்டியது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

4. மலக்கழிவு வெளியேற்றல்

மலக்கழிவுப் பொருள் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவதனை தடுப்பதற்கான மற்றும் நேரடியாகவும், மறைமுகமாகவும் நோய்கள் பரவுவதனை குறைப்பதற்கான முதலாவது வழியாக மனித மலக்கழிவுப் பொருட்களை பாதுகாப்பாக அகற்றல் காணப்படுகின்றது. எனவே, பாதுகாப்பான மலக்கழிவுப் பொருள் வெளியேற்றலானது பிரதான முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது. பாரிய அனர்த்த சூழ்நிலைகளின் போது, பாதுகாப்பான நீர் விநியோகத்தினைப் போன்று துரிதமாக அடையாளங் காணப்பட வேண்டிய விடயமாகவும் இது உள்ளது. மக்களின் கண்ணியம், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனுக்கு அத்தியாவசியமான அவசர கால மறுசீரமைப்பில் ஒரு முக்கியமான நடவடிக்கையாக தொற்று நீக்கல் செயற்பாடு காணப்படுகின்றது.

மலக்கழிவு வெளியேற்றல் தரம் 1: மனித மலக்கழிவுகள் அற்ற சுற்றாடல்

பொதுவாக வாழ்வதற்கான சுற்றுச் சூழல் மற்றும் விசேடமாக இருப்பிடம், உணவு உற்பத்தி பகுதிகள், பொது இடங்கள் மற்றும் குடிநீர் வளங்களைச் சூழவுள்ள பகுதிகள் என்பன மனித மலக்கழிவுகள் அற்ற இடமாக இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பொருத்தமான மலக்கழிவுப் பொருள் அகற்றல் நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- பாதுகாப்பான மலக்கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுடன் துரிதமான கலந்தாய்வை முன்னெடுத்தல் (சுகாதார மேம்பாடு தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 1-6 என்பவற்றைப் பார்க்கவும்).
- பாதுகாப்பான மலக்கழிவுப் பொருள் வெளியேற்றல் மற்றும் பொருத்தமான வசதிகளை பயன்படுத்தல் என்பன தொடர்பில் சுகாதார பிரசார நடவடிக்கையை முன்னெடுத்தல் (சுகாதார மேம்பாடு தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 1-6 என்பவற்றைப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் சுற்றுச் சூழல் மனித மலக்கழிவுகள் அற்றதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

- அனைத்து கழிவுப் பொருள் அகற்றல் முறைகளும், எடுத்துக் காட்டாக மலசல கூட குழிகள், நிலக்கீழ் நீர் வளங்கள் அமைந்திருக்கும் இடத்திலிருந்து 30மீற்றர்கள் தூரத்தில் அமைய வேண்டும். நீர் மேடைக்கு ஆகக் குறைந்தது 1.5மீற்றர்கள் மேற்புறத்தில் மலசல கூட மேற்பகுதி அமைந்திருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- நிலக்கீழ் வளங்களில் எச்சங்கள் கலந்திருப்பதனால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு வெள்ளப்பெருக்கின் போது அல்லது உயர் நீர்மேடை சூழ்நிலைகளின் போது, பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- தொற்று நீக்கல் முறையிலிருந்து சாக்கடை வடிகால் மேற்தள நீர் அல்லது நிலக்கீழ் நீரை உள்ளடக்காது இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- சிறந்த சுகாதாரமான வழியில் மலசல கூடங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். சிறுவர்களின் மலக்கழிவுகள் உடனடியாக மற்றும் சுகாதாரமான வகையில் அகற்றப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **பாதுகாப்பான மலக்கழிவு வெளியேற்றல்:** கட்டுப்படுத்த முடியாத மற்றும் மனித மலங்களில் இருந்து சுற்றுச் சூழலை பாதுகாப்பாக வைத்திருப்பதே பாதுகாப்பான கழிவுப் பொருள் அகற்றலின் நோக்கமாக இருக்கின்றது. அனர்த்தம் ஏற்பட்டதும், கழிவுப் பொருள் வெளியேற்றல் முகாமைத்துவத் திட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும். ஆரம்ப சுத்திகரித்தல் பிரசாரம், வரையறை செய்தல் மற்றும் தொற்று நீக்கல் பகுதிகளை அடையாளங் காணல், மற்றும் சமுதாய மலசல கூடங்களை பார்வையிடலும், கட்டியெழுப்பலும் அத்தியாவசியமாகும். சூழ்நிலையின் அடிப்படையில், தேகாரோக்கிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான படிநிலையான அணுகுமுறை என்பது பயனுள்ளதாகும். பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் அனைத்து குழுக்களையும் பாதுகாப்பான மலக்கழிவுப் பொருள் வெளியேற்றல் நடவடிக்கையில் ஈடுபடுத்தல். பாதிக்கப்பட்ட மக்கள் பாரம்பரியமாக மலசல கூடங்களை பயன்படுத்தாத சந்தர்ப்பங்களில், பாதுகாப்பான மலக்கழிவுப் பொருள் வெளியேற்றல் தொடர்பில் மற்றும் மேலும் மலசல கூடங்களை உருவாக்குவதற்கான நிர்ப்பந்தத்தை உருவாக்கும் உறுதியான சுகாதார பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். நகரப் பகுதிகளில் இடம்பெறும் அனர்த்தங்களின் போது நடைமுறையில் உள்ள கழிவு வடிகால் முறையில் பாதிப்பு ஏற்படலாம். இதன் போது சூழ்நிலையை மதிப்பீடு செய்து, மலசல கூடங்களை பொருத்துவது தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும்.
2. **தொற்று நீக்கல் பகுதிகள்:** ஆரம்ப கட்டத்தில் மற்றும் நிலம் கிடைக்கக் கூடியதாக உள்ள இடங்களில் தொற்று நீக்கல் பகுதியை அடையாளமிடவும் மற்றும்/அல்லது மலசல கூட குழிகளை நிர்மாணிக்கவும். தளமானது நன்கு முகாமை செய்யப்பட்டு மற்றும் பராமரிக்கப்பட்டு இருந்தாலும், வழங்கப்படும் வசதிகளை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் எங்கு இந்த வசதிகள் அமையப் பெற்றுள்ளன என்பன தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் புரிந்து கொண்டால் மாத்திரமே இந்த நடவடிக்கை பயனுள்ளதாக இருக்கும்.

3. **நீர் வளங்களில் இருந்து தொற்று நீக்கல் முறைமைகள் அமைய வேண்டிய தூரம்:** நீர் வளங்களில் இருந்து மலசல கூட குழிகளின் தூரம் ஆகக் குறைந்தது 30 மீற்றர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன், குழிகளின் மேற்பகுதி நிலக்கீழ் நீர் மேடைக்கு ஆகக் குறைந்தது 1.5மீற்றர்கள் உயரத்தில் இருத்தல் வேண்டும். இந்த அளவானது சுண்ணாம்புக்கல் காணப்படும் பகுதிகளில் அதிகரிக்கப்படல் வேண்டும். சில அனர்த்த மறுசீரமைப்பின் போது, நேரடியாக குடிநீராக பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் நிலக்கீழ் நீர் மாசடைதலானது, உடனடி அக்கறை செலுத்தப்படும் விடயமாக இருக்காது. அதற்குப் பதிலாக, வீடுகளுக்கான நீர் சுத்திகரிப்பு மட்டங்கள் அல்லது வேறு தெரிவுகள் உள்வாங்கப்படும் (நீர் விநியோகம் தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்). வெள்ளப்பெருக்கு காணப்படும் அல்லது உயர்ந்த மட்டத்தில் நீர் காணப்படும் சூழலில், கழிவுப் பொருட்களை உள்ளடக்க மற்றும் சுற்றுச் சூழலில் அவை கலக்காமல் இருப்பதற்கு உயரமான இடத்தில் மலசல கூடங்களை அமைத்தல் அல்லது அழுகச் செய்வதற்கான தாங்கிகள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். சாக்கடை வடிகாலில் இருந்து அல்லது இந்த தாங்கிகளில் மேற்தள மற்றும்/ அல்லது நிலக்கீழ் நீர் வளங்களில் கலக்காது இருக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

4. **சிறுவர்களின் மலக்கழிவுகளை அகற்றல்:** சிறுவர்களின் மலக்கழிவுகளை அகற்றுவது தொடர்பில் விசேட கவனஞ் செலுத்துங்கள். ஏனெனில், வயதா-னவர்களின் கழிவுகளிலும் விட, இவை ஆபத்து நிறைந்தவை (சிறுவர்கள் மத்தியில் மலக்கழிவு சம்பந்தப்பட்ட தொற்றுக்கள் அதிக அளவில் இருப்பதுடன், தொற்றுக்களிற்கு எதிரான எதிர்ப்புச் சக்தி சிறுவர்களில் குறைவாக இருக்கின்றது). குழந்தைகளின் கழிவுளை பாதுகாப்பாக அகற்றல் தொடர்பில் பெற்றோருக்கும், பாதுகாவலருக்கும் விழிப்புணர்ச்சி வழங்கப்படல் வேண்டும்.

மலக்கழிவு வெளியேற்றல் தரம் 2: பொருத்தமான மற்றும் போதிய மலசல கூட வசதிகள்

போதிய, பொருத்தமான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மலசல கூட வசதிகள் மக்களுக்கு இருத்தல் வேண்டும். தமது குடியிருப்புக்களிற்கு அருகில் அவை இருத்தல் வேண்டும். துரிதமான, பாதுகாப்பான மற்றும் அந்தரங்கமான பிரவேசத்தை பகல், இரவு பொழுதுகளில் தரக் கூடியதாக அவை இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- எந்த இடத்தில் அமைத்தல், வடிவம் மற்றும் பொருத்தப்பாடு என்பன தொடர்பில் பயன்படுத்துபவர்கள் அனைவரிடமும் (விசேடமாக பெண்களும், நடமாடுவதற்கு இயலாதவர்களும்) கலந்தாய்வு செய்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-4 மற்றும் பாதுகாப்பு கோட்பாடுகள் 1-2ஐப் பார்க்கவும் பக்கம் ???).

- தமது மலசல கூட வசதிகளை நிர்மாணிப்பதற்கும், பராமரிப்பதற்கும் மற்றும் தூய்மைப்படுத்துவதற்கும் தேவையான கருவிகள் மற்றும் மூலப்பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 6-7ஐப் பார்க்கவும்).

- கைகளை சுத்தப்படுத்துவதற்கும் மற்றும் மலசல கூடத்திற்கும், போதிய நீர் விநியோகத்தினை வழங்கல். அத்துடன், பொருத்தமான சுத்தம் செய்வதற்கான பொருட்களையும் வழங்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பின்வரும் தேவைகளை நிறைவு செய்வதற்கு பொருத்தமான வகையில் மலசல கூடங்கள் வடிவமைக்கப்பட்டு, நிர்மாணிக்கப்படல் வேண்டும்

  - சிறுவர்கள், வயதான மக்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வலுவிழந்த நபர்கள் உள்ளடங்கலாக மக்களின் அனைத்து பிரிவினராலும் பாதுகாப்பாக பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

  - பகல் மற்றும் இரவு பொழுதுகளில் பயன்படுத்துபவர்கள், விசேடமாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களை குறைக்கும் வகையில் அவை அமைக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 1-6ஐப் பார்க்கவும்).

  - பயன்படுத்துபவர்களின் ' அடிப்படையில் அந்தரங்கத் தன்மையான உத்தரவாதத்தினை அவை வழங்கல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 1, வழிகாட்டல் குறிப்புகள் 1-6ஐப் பார்க்கவும்).

  - பயன்படுத்துவதற்கும் மற்றும் சுத்தமாக வைத்திருப்பதற்கும் இலகுவானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், சுற்றுச் சூழலுக்கு அனர்த்தத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது. சூழ்நிலையின் அடிப்படையில், கைகளை சுத்தம் செய்தல் மற்றும் வேறு தேவைகளுக்கு போதியளவு நீர் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8ஐப் பார்க்கவும்).

  - பெண்களின் மாதவிலக்கு காலங்களில் பயன்படுத்தும் பொருட்களை அப்புறப்படுத்தலுக்கும் மற்றும் மாதவிலக்கு காலங்களில் பயன்படுத்தும் பொருட்களினை சலவை செய்து, உலர வைப்பதற்கு அந்தரங்கத் தன்மையையும் வழங்க வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்).

  - ஈக்கள் மற்றும் நுளம்பு பெருக்கத்தினை குறைப்பதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).

  - மலசல கூடங்கள் மூடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அல்லது நீண்ட கால பயன்பாட்டின் காரணமாக மலக்குழி வெறுமையாக்குவதற்கு தேவையான, வேறிடங்களுக்கு கொண்டு சென்று அகற்றுவதற்கான அமைப்புக்களை கொண்டிருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 11ஐப் பார்க்கவும்).

- உயரமான நீர் மேடை அல்லது வெள்ளப்பெருக்கு சந்தர்ப்பங்களில், மலக்கழிவுக்கான குழிகள் அல்லது பள்ளங்கள், நிலக்கீழ் நீருடன் மற்றும் சுற்றுச் சூழலில் கலந்துவிடாதவாறு அமைக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 11ஐப் பார்க்கவும்).

- ஒவ்வொரு மலசல கூடத்தையும் ஆகக் குறைந்தது 10 பேர் பயன்படுத்தலாம் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-4 மற்றும் பிற்சேர்க்கை 3: அனர்த்த சூழ்நிலைகளில் பொது இடங்கள் மற்றும் நிறுவனங்களில் இருக்க வேண்டிய மலசல கூடங்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை என்பவற்றைப் பார்க்கவும்).
- ஆண்களும், பெண்களும் தனித்தனியாக, உள்தாளிடக் கூடிய கதவுகளைக் கொண்ட மலசல கூடங்கள் (சந்தைகள், விநியோக நிலையங்கள், சுகாதார நிலையங்கள், பாடசாலைகள்) இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 2 மற்றும் பாதுகாப்பு கோட்பாடுகள் 1-2ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- குடியிருப்பில் இருந்து 50 மீற்றருக்கு மேற்படாத தொலைவில் மலசல கூடங்கள் அமைந்திருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- குடும்பங்கள் மற்றும்/அல்லது பால்நிலை அடிப்படையில் மலசல கூடங்களின் பயன்பாடு ஒழுங்கு செய்யப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-5ஐப் பார்க்கவும்).
- வழங்கப்பட்ட மலசல கூட வசதிகள் மற்றும் அவற்றை பொருத்தமான வகையில் பயன்படுத்தல் என்பன சம்பந்தப்பட்ட கலந்தாய்வு தொடர்பில் அனைத்து மக்களும் திருப்தி அடைந்திருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-10ஐப் பார்க்கவும்).
- மலசல கூடங்களை பயன்படுத்திய பின்னரும், உணவு உட்கொள்ளல், தயாரித்தல் என்பவற்றிற்கு முன்னரும் மக்கள் கைகளை நன்கு சுத்தம் செய்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **ஏற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள்:** மக்களின் வேறுபட்ட தேவைகள் மற்றும் பங்குபற்றல் சார்ந்த புரிந்துணர்வு என்பவற்றின் அடிப்படையில் மலக்கழிவுப் பொருள் வெளியேற்றல் நிகழ்ச்சிகளின் வெற்றி தங்கியுள்ளது. அனைத்து மலசல கூடங்களும், அனைத்து குழுக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைப்பது சாத்தியமானது அல்ல. சிறுவர்கள், வயதானவர்கள் மற்றும் வலுவிழந்தவர்களுக்காக விசேட மலசல கூடங்கள் அமைக்கப்படல் வேண்டும். உதாரணமாக, இருக்கையுடனான, கைப்பிடியுடனான விசேட மலசல கூடங்களை குறிப்பிடலாம். தேகாரோக்கிய வசதி தெரிவு செய்யப்படும் முறையானது இடையீட்டின் நேரம், பயன்படுத்தவுள்ளோரின் தேவைகள் மற்றும் கலாசார பழக்கங்கள், நீர் கிடைக்கக் கூடியத் தன்மை, மண்ணின் அமைப்பு மற்றும் நிர்மாணிப்பதற்கான மூலப்பொருட்கள் கிடைக்கக் கூடியத் தன்மை என்பவற்றின் அடிப்படையில் தங்கியுள்ளது. அனர்த்த மறுசீரமைப்பின் வேறுபட்ட படிநிலை

களில், வேறுபட்ட வகையிலான மலக்கழிவுப் பொருள் வெளியேற்றல் முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை: பாதுகாப்பான கழிவுப் பொருள் வெளியேற்றலுக்கு சாத்தியமான மாற்று வழிகள்:

	பாதுகாப்பான மலக்கழிவுப் பொருள் அகற்றல் முறை	விண்ணப்ப குறிப்புக்கள்
1	வரையறுக்கப்பட்ட தொற்று நீக்கல் பகுதி	முதல் படி: ஆரம்பத்தில் இரண்டிலிருந்து மூன்று நாட்களுக்கு பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு உடனடி வசதிகள் தேவையாக இருக்கும்.
2	(உ-ம்: நன்கு மூடப்பட்ட தொகுதிகள்)	முதல் படி: இரண்டு மாதங்கள் வரை
3	அகழி மலசல கூடங்கள்	ஆரம்பத்திலிருந்து நீண்ட கால பயன்பாட்டிற்கான திட்டம்
4	சாதாரணமான குழி மலசல கூடங்கள்	நடுத்தர மற்றும் நீண்ட கால மறுசீரமைப்புக்கு சூழ்நிலை அடிப்படையில்
5	காற்று வசதி மேம்படுத்தப்பட்ட குழி மலசல கூடங்கள்	சூழ்நிலை அடிப்படையிலானது: உயர்ந்த நீர் மேடை மற்றும் வெள்ளப்பெருக்கு சந்தர்ப்பங்களின் போது, ஆரம்பம் முதல் அல்லது நீண்ட காலம் வரை
6	சிறுநீருடன், மலக்கழிவை வேறு வழிக்குத் திருப்பல்	நடுத்தரம் முதல் நீண்டகாலம் வரை
	அழுகல் தாங்கிகள்	

2. **பொது மலசல கூடங்கள்:** பொது இடங்களில், முறையான மற்றும் தொடர்ச்சியான சுத்தப்படுத்தல் மற்றும் பராமரிப்புக்கு உகந்ததாக ஸ்தாபிக்கப்பட்ட முறையில் மலசல கூடங்கள் அமைக்கப்படல் வேண்டும். பெண்கள் மற்றும் ஆண்களுக்கான மலசல கூடங்களின் எண்ணிக்கையை திட்டமிடுவதற்கு திரட்டப்படாத மக்கள் தொகை தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. அண்ணளவான அளவீடாக 3க்கு 1 என்பது காணப்படுகின்றது. இயலுமான சந்தர்ப்பங்களில், சிறுநீர் கழிப்பதற்கான வசதிகள் செய்யப்படல் வேண்டும் (பிற்சேர்க்கை 3: அனர்த்த சூழ்நிலைகளில் பொது இடங்கள் மற்றும் நிறுவனங்களில் அமைக்கப்பட வேண்டிய மலசல கூடங்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை **பக்கம் ???**).

3. **குடும்ப மலசல கூடங்கள்**: இயலுமான சந்தர்ப்பங்களில் பரிந்துரைக்கப்படும் தெரிவாக குடும்ப மலசல கூடங்கள் காணப்படுகின்றன. ஆகக் கூடியது 20 பேருக்கு 1 மலசல கூடம் என்ற வகையில் இந்த திட்டமிடல் இலக்கு வைக்கப்படல் வேண்டும். ஏற்கனவே மலசல கூடங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் 50 பேருக்கு

ஒரு மலசல கூடம் என்ற வகையில் ஆரம்பிப்பது சாத்தியமானது. செயற்பாட்டின் தொடர்ச்சியில் 20 பேருக்கு ஒரு மலசல கூடம் என எண்ணிக்கையை குறைக்கலாம். சில சந்தர்ப்பங்களில், போதிய இடவசதியின்மை இந்த அளவுகளை எட்டுவதில் சிக்கலை ஏற்படுத்துகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மேலதிக இடவசதிக்காக ஆதரவு கோருங்கள். எவ்வாறாயினும், மனிதக் கழிவுகள் அற்ற சுற்றுச் சூழலை உருவாக்குவதே பிரதான குறிக்கோள் என்பதனை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

4. **பகிரப்பட்ட வசதிகள்:** மலசல கூடம் அமைப்பது மற்றும் வடிவமைப்பதிலும், சுத்தப்படுத்தல் மற்றும் பராமரிப்பு பொறுப்பு என்பன தொடர்பிலும் குடும்பங்களின் ஆலோசனைகள் பெறப்படல் வேண்டும். பொதுவாக, மலசல கூடம் பயன்படுத்தப்படும் போதே, அவை சுத்தப்படுத்தப்படல் வேண்டும். எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் போன்ற நோய் தொற்றுக்கு உள்ளானவர்கள் வழமையாக வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டவர்களாகவும், நடமாட முடியாதவர்களாகவும் இருப்பதனால் அவர்கள் இலகுவாக அணுகக் கூடிய வகையில் மலசல கூடங்கள் அமையப் பெறல் வேண்டும்.

5. **பாதுகாப்பான வசதிகள்:** பொருத்தமற்ற இடங்களில் மலசல கூடங்களை அமைப்பதன் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகள் தாக்குதலுக்கு பலவீனமாகக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது. விசேடமாக இரவு நேரங்களில் இந்த அச்சுறுத்தல் அதிகமாகும். வழங்கப்பட்டுள்ள மலசல கூடங்களை பயன்படுத்தும் போது பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதுகாப்பினை உணர்வதனை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். இயலுமான சந்தர்ப்பங்களில், பொது மலசல கூடங்களுக்கு மின்விளக்கு வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும் அல்லது குடும்பங்களுக்கு ஒளிப்பந்த வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும். பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு தேவையான வழிகள் தொடர்பில் பயனாளி சமுதாயத்துடன் கலந்துரையாடப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடுகள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

6. **உள்ளூர் கட்டடப் பொருட்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தல்:** மலசல கூடங்களை நிறுவுவதற்கு, உள்ளூரில் கிடைக்கக் கூடிய பொருட்களைப் பயன்படுத்துவது முதலாவது தெரிவாக பரிந்துரைக்கப்படுகின்றது. இதன் மூலம் பாதிக்கப்பட்ட சமூகம் தமது வசதிகளை பயன்படுத்துவதற்கும் மற்றும் பேணுவதற்குமான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. நிர்மாணத்திற்குத் தேவையான கருவிகளை பயன்பெறவுள்ள சமுதாயத்திற்கு வழங்குவதும் இந்த நோக்கத்திற்கு துணை புரியும்.

7. **நீர் மற்றும் மலவாயை சுத்தம் செய்யும் பொருள் :** மலசல கூடங்களுக்கு வழங்கப்படும் நீரானது அலசுவதற்கு மற்றும்/அல்லது ஆரோக்கியமான பொறிமுறை களை கொண்டதாக இருத்தல் வேண்டும். பாரம்பரிய குழி மலசல கூடங்களுக்கு, கழிப்பறைத் தாள்கள் அல்லது வேறு பொருட்கள் மலவாயை சுத்தம் செய்வதற்கு வழங்கப்படல் வேண்டும். பயன்படுத்துபவர்களின் கலாசாரத்திற்கு ஏற்ப சுத்தம் செய்யும் பொருட்களும் அவற்றை பாதுகாப்பாக அகற்றுவதும் அவர்களிடம் கலந்தாலோசித்த பின்னர் முடிவு செய்யப்படல் வேண்டும்.

8. **கைகளைக் கழுவுதல்:** மலம் கழித்த பின்னரும், உணவு உண்பதற்கு முன்னரும், உணவு தயாரிப்பதற்கு முன்னரும் சிறுவர்கள் மலம் கழித்த போது சுத்தம் செய்த பின்னரும் சவர்க்காரங்களை பயன்படுத்தி கைகளை நன்றாக கழுவுதல் வேண்டும். மலசல கூடங்களுக்கு அருகில் தொடர்ச்சியாக நீர் கிடைக்கக் கூடிய வசதிகள் இருத்தல் வேண்டும்.

9. **மாதவிலக்கு:** பாடசாலை மாணவிகள் உள்ளடங்கலாக பெண்களும் மற்றும் சிறுமிகளும் மாதவிலக்கு உறிஞ்சுக் கொள்வதற்கு ஏற்ப தகுந்த நாப்கின்கள் அல்லது சுத்தமான துணிகள் பெறுவதற்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும். பெண்கள் மற்றும் சிறுமிகளுடன் கலாசார ரீதியாக ஏற்ற முறை தொடர்பில் கலந்துரையாடி அறிந்து வைத்திருத்தல் வேண்டும். பொருத்தமான வகையில் மாதவிலக்கின் போது பயன்படுத்திய துணிகளை அகற்றுவதற்கான வசதிகள் மலசல கூடங்களில் இருத்தல் வேண்டும் (சுகாதார மேம்பாடு தரம் 2, வழிகாட்டல் குறிப்புக்கள் 2 மற்றும் 8ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

10. **கழிவுப் பொருட்களை அகற்றும் செயற்பாடு:** பொருத்தமான சந்தர்ப்பங்களில் மற்றும் தேவையின் அடிப்படையில், மலசல கூடங்கள், சாக்கடை தாங்கிகள் மற்றும் கழிவுப் பொருள் கொள்கலன்களின் கழிவுப் பொருட்கள் அகற்றப்படல் வேண்டும். சாக்கடை அகற்றல் என்பது ஆரம்பம் முதல் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

11. **சிக்கலான சந்தர்ப்பங்களில் மலசல கூடங்கள்:** வெள்ளப் பெருக்கு அல்லது நகர்ப்புற அனர்த்தங்களின் போது, பொருத்தமான கழிவுப் பொருள் அகற்றல் வசதிகளின் பகுதியானது, எப்போதும் சிக்கல் நிறைந்ததாக இருக்கும். அவ்வாறான சூழ்நிலைகளில், பல்வேறு மனித மலக்கழிவு அகற்றல் முறைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். இந்த வேறுபட்ட அணுகுமுறைகளுக்கு சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளின் ஊடாக உதவி அளிக்கப்படல் வேண்டும்.

5. நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு

நோய் நுண்மப் பரப்பிகள் நோய்களை உருவாக்கும் முகவராக இருக்கின்றன. அத்துடன், நோய் நுண்மப் பரப்பியினால் உருவாகும் நோய்களே அனர்த்த சூழ்நிலைகளில் சுகவீனங்கள் மற்றும் மரணங்கள் சம்பவிக்க பிரதானமான காரணமாக உள்ளன. மலேரியா நோய் ஏற்படுவதற்கு பொறுப்பான நோய் நுண்மப் பரப்பியாக நுளம்புகள் உள்ளன. அவை நோய்த் தாக்கம் மற்றும் மரணம் ஏற்படுவதனை தூண்டும் காரணியாக உள்ளன. மஞ்சள் காய்ச்சல், டெங்கு மற்றும் இரத்தப் போக்கு நோய் போன்ற வேறு நோய்களையும் நுளம்புகள் பரப்புகின்றன. கடிக்காத அல்லது சியான்த்ரோபிக் (synanthropic) வகை ஈக்கள் அதாவது வீட்டில் காணப்படும் ஈக்கள், மாட்டு ஈக்கள் மற்றும் மற்ற வகை ஈக்கள் வயிற்றுப் போக்கு நோயைப் பரப்புவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. கடிக்கும் பூச்சிகள், படுக்கையில் காணப்படும் சிறு பூச்சிகள் மற்றும் மற்றும் ஃப்ளிஸ் (fleas) வகை பூச்சிகள் கடிப்பதனால் வலி ஏற்படுவதுடன், காய்ச்சலும் ஏற்படுகின்றது. அவை சில சந்தர்ப்பங்களின் பிளேக் மற்றும் டைபாயிட் காய்ச்சல் என்பன ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன. மூட்டைப் பூச்சிகள் போன்ற இரத்தம் உறிஞ்சும் பூச்சிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும், மீண்டும் ஏற்படக் கூடிய காய்ச்சலையும், மனித உடலில் மயிர்க்கால்களின் உண்ணிகள் டைபாயிட் காய்ச்சலையும் இதே வகைக் காய்ச்சலையும் உருவாக்க காரணமாக அமைகின்றன. பெருச்சாளிகளும், சுண்டெலிகளும் எலிக் காய்ச்சல் மற்றும் சல்மானெல்லோசிஸ் (salmonellosis) நோய்களையும் மற்றும் ஃப்ளிஸ் போன்ற நோய் நுண்மப் பரப்பிகளை காவுபவையாகவும் இருக்கின்றன. ஃப்ளிஸ் போன்ற நோய் நுண்மப் பரப்பிகள் லசா (Lassa) காய்ச்சல், பிளேக் மற்றும் வேறு நோய்த் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

நோய் நுண்மப் பரப்பிகளின் மூலமாக பரவும் நோய்களை வெவ்வேறு முன்முயற்சிகளின் மூலம், அதாவது சரியான இடத்தினை தெரிவு செய்தல், வீடுகளை வழங்கல், போதிய அளவு நீர் வழங்கல், கழிவுப் பொருட்களை அகற்றல், திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் சாக்கடை வடிகால் சேவைகளை அளித்தல் (சமூக ஒன்று திரட்டல் மற்றும் சுகாதார மேம்பாடு உள்ளடங்கலாக) இரசாயனக் கட்டுப்பாடுகளை பயன்படுத்தல், குடும்பம் மற்றும் தனிநபர் பாதுகாப்பு மற்றும் உணவு களஞ்சியச் சாலைகளை நன்றாக பாதுகாத்தல் போன்றவற்றின் ஊடாக கட்டுப்படுத்த முடியும். நோய் நுண்மப் பரப்பிகளினால் ஏற்படும் நோய்களின் தன்மையானது எப்போதும் சிக்கல் மிக்கதாக இருப்பதுடன், நோய் நுண்மப் பரப்பிகள் சம்பந்தபட்ட பிரச்சினைகள் எப்போதும் நிபுணத்துவ அக்கறை செலுத்தப்பட வேண்டிய விடயமாகவும் உள்ளது. எவ்வாறாயினும், நோய், அந்த நோயை ஏற்படுத்தியுள்ள நோய் நுண்மப் பரப்பி மற்றும் மக்கள் தொகையில் அதன் அளவு என்பவற்றை அடையாளங் காண்பதன் மூலம் எளிமையான மற்றும் பயனுறுதி மிக்க செயற்பாடுகளின் ஊடாக இவ்வாறான நோய்கள் பரவாது தடுப்பதற்கு உதவி செய்வதற்கான வழிகள் பல உள்ளன

நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு தரம் 1: தனிநபர் மற்றும் குடும்ப பாதுகாப்பு

அனர்த்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நோய்களிலிருந்தும், இடையூறு விளைவிக்கும் நோய் நுண்மப் பரப்பிகளில் இருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான அறிவு மற்றும் வழிமுறைகள் வழங்கப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்கு இந்த நோய் நுண்மப் பரப்பிகள் இடையூறை விளைவிக்கின்றன.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நோய் நுண்மப் பரப்பிகள் சம்பந்தப்பட்ட நோய்கள், பரவும் முறைகள் மற்றும் தடுப்பதற்கு சாதகமான வழிகள் என்பன தொடர்பில் நோய் நுண்மப் பரப்பிகளினால் நோய் ஏற்படுவதற்கான சாத்தியமுள்ள பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-5ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள தீங்கு விளைவிக்காத வழி வகைகளை (நுளம்பு வலைகள், நுளம்பு மருந்து இன்னபிற) பயன்படுத்தி நுளம்புகள் அதிகமாக கடிக்கக் கூடிய நேரத்தில் நுளம்பு வராது தவிர்ப்பதன் ஊடாக அவர்களுக்கு உதவுதல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார், சிறு குழந்தைகள், வளர்ந்த குழந்தைகள், வயதானவர்கள், நடமாட இயலாதவர்கள் மற்றும் சுகவீனமுற்றவர்கள் போன்ற அதிக அச்சுறுத்தல்கள் உள்ள குழுக்கள் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- மனித உடலிலுள்ள உண்ணிகள், டைபாய்ட் காய்ச்சல் ஏற்படுவதற்கான அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில், மீண்டும் மீண்டும் ஏற்படும் காய்ச்சல் உருவாகுவதற்கான அச்சுறுத்தல்களை கொண்டிருப்பதனால் அதற்கான கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்படல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- படுக்கை விரிப்புக்கள் மற்றும் ஆடைகள் முறையாக உலர வைக்கப்படுவதுடன், முறையாக சலவை செய்யப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நோய் நுண்மப் பரப்பிகள் வளர்வதனை தூண்டாத/ஊக்குவிக்காத மற்றும் பொருத்தமான நோய் நுண்மப் பரப்பி பொறியமைப்புக்களினால் பாதுகாக்கப்பட்ட உறைவிடங்களுக்கான பிரவேசம் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-5ஐப் பார்க்கவும்).

- நோய் நுண்மப் பரப்பிகளினால் ஏற்படும் நோய்களுக்கான அச்சுறுத்தல் உள்ள அனைவரும் நோய்கள் பரவும் முறைகள் மற்றும் அவற்றை தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்து வைத்திருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-5ஐப் பார்க்கவும்).
- அனைத்து மக்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு, அவற்றை பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- வீடுகளில் வைக்கப்பட்டுள்ள அனைத்து உணவுகளும் ஈக்கள், பூச்சிகள் மற்றும் எலிகள் போன்ற நோய் நுண்மப் பரப்பிகளினால் அசுத்தமாக்கப்படாத வகையில் பாதுகாக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **நோய் நுண்மப் பரப்பிகளினால் ஏற்படும் நோய்களினை வரையறுத்தல்:** தீவிரமான நோய் அச்சுறுத்தல் உள்ளமை தொடர்பிலான மதிப்பீட்டின் அடிப்படையில் நோய் நுண்மப் பரப்பிகளை கட்டுப்படுத்துவதற்கான இடையீடுகளை முன்னெடுப்பதற்கான முடிவுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இந்த அச்சுறுத்தலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளில் பின்வரும் விடயங்களும் உள்ளடங்குகின்றன:

   - ஏற்கனவே உள்ள அசைவ உயிர்ச்சத்து உணவு தொடர்பான அழுத்தங்கள், ஏனைய அழுத்தங்கள் உட்பட மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியின் தன்மையானது தொற்று நோய் பரவாத ஒரு பகுதியிலிருந்து, தொற்று நோய் பரவும் வேறொரு பகுதிக்கு மக்கள் இடம்பெயர்வது தொற்று நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணமாக உள்ளது.
   - நோய் நுண்மப் பரப்பிகள் மற்றும் மனிதர்கள் ஆகிய இரண்டிலும் நோயினை பரப்பும் நுண்ணுயிர்கள் மற்றும் தவிர்க்கும் முறைகள்
   - நோய் நுண்மப் பரப்பி பூச்சிகள், நடத்தைகள் மற்றும் சூழலியல்
   - நோய் நுண்மப் பரப்பி எண்ணிக்கைகள் (பருவம், பரவும் இடங்கள், இன்னபிற)
   - நோய் நுண்மப் பரப்பிகளுக்கு அதிகரித்துள்ள தோற்றப்பாடு: அருகாமை, குடியிருப்பு முறை, உறைவிட வகை, நடைமுறையில் உள்ள தனிநபர் பாதுகாப்பு மற்றும் தவிர்த்தல் பொறியமைப்புக்கள்

2. **நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்கான குறிகாட்டிகள்:** நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் தாக்கத்தை அளவிடுவதற்கு பொதுவாக பயன்படுத்தப்படும் குறிகாட்டிகளாக நோய் நுண்மப் பரப்பிகளால் ஏற்பட்ட நோய்களின் சம்பவ எண்ணிக்கை (நோயியல் தரவுகளில் இருந்து, சமுதாய அடிப்படையிலான தரவு மற்றும் உரிமை குறிகாட்டிகள் என்பன மறுசீரமைப்பின் அடிப்படையில் தங்கியுள்ளது) மற்றும் ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கை (துரித

நோயியல்பு தொகுதிகள் அல்லது நுண்ணோக்கியைப் பயன்படுத்தி) என்பன காணப்படுகின்றது.

3. **தனிப்பட்ட மலேரியா கட்டுப்பாட்டு பொறியமைப்புக்கள்:** மலேரியா பரவுவதற்கான அச்சுறுத்தல் அதிகமாக இருக்கும் போது, சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் (உ-ம்: கூடாரங்கள், திரைச் சீலைகள் மற்றும் நுளம்பு வலைகள்) போன்ற முறையான மற்றும் உரிய நேரத்திலான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது. செறிவூட்டப்பட்ட நுளம்பு வலைகள் மேலதிக சாதகத் தன்மையை கொண்டுள்ளன. இவை, உடல் மற்றும் தலைப் பேன்கள், ஃபிளிஸ், ஒட்டுண்ணிகள், கரப்பான்கள் மற்றும் படுக்கைப் பூச்சிகள் என்பவற்றில் இருந்து பாதுகாப்பினை தருகின்றன. நீண்ட கையுடைய சட்டைகள், வீடுகளில் புகையிடல், நுளம்புவர்த்திகளை பயன்படுத்தல், வளிமக் கரைசல் மற்றும் விரட்டிகள் என்பன நுளம்புகளுக்கு எதிராக பயன்படுத்தக் கூடிய ஏனைய பாதுகாப்பு முறைகளாக உள்ளன. பாதுகாப்பின் முக்கியத்துவத்தினையும், இந்த கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் பயன்படுத்துபவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டியதனை உறுதி செய்வது அவசியம். அப்போது தான், பாதுகாப்பு நடவடிக்கைகள் பயனுறுதி மிக்கதாக இருக்கும். வளங்கள் அரிதாக கிடைக்கும் சந்தர்ப்பங்களில், 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் போன்ற அச்சுறுத்தல் அதிகமாக உள்ள தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு அவை வழங்கப்படல் வேண்டும்.

4. **ஏனைய நோய் நுண்மப் பரப்பிகளுக்கான தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்:** தனிப்பட்ட வகைளில் படுக்கை விரிப்புக்கள் மற்றும் ஆடைகளை முறையாக சலவை செய்து பயன்படுத்துவதே, மனித உடலில் ஒட்டுண்ணிகள் தாக்காது பாதுகாக்கும் பயனுள்ள வழியாகும். நோய் பீடித்தலானது தனிப்பட்ட சிகிச்சை, துணிகளை நன்கு சலவை செய்தல் மற்றும் தலைப்பேன் நீக்கல் நடவடிக்கைகளின் மூலம் கட்டுப்படுத்தப்படலாம். அத்துடன், புதிதாக இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்பு ஒன்றிற்கு வரும் போது சிகிச்சை முறைகளை பயன்படுத்தலாம். தூய குடும்ப சுற்றுச் சூழல், சிறந்த கழிவு அகற்றல் மற்றும் சிறந்த உணவு களஞ்சியப்படுத்தல் (சமைத்த மற்றும் சமைக்கப்படாத) என்பன எலிகள், வேறு பூச்சிகள் (கரப்பான்கள் போன்ற) வீடுகள் அல்லது குடியிருப்புக்கு வருவதனை தடுக்கும்.

5. **நீரினால் ஏற்படும் நோய்கள்:** சித்தோசோமியம், நரம்புச் சிலந்தி அல்லது எலிக் காய்ச்சல் (எலிகள் போன்ற முலையூட்டிகளின் சிறுநீர், பிற்சேர்க்கை 4: நீர் மற்றும் கழிவுப் பொருள் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் பரவும் வழி வகைகள், **பக்கம் ???**) போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான அச்சுறுத்தல்கள் இருப்பதாக அறியப்பட்ட நீர் நிலைகளிற்கு மக்கள் செல்வதனை தவிர்க்க வேண்டும். அத்துடன், சுகாதார அச்சுறுத்தல்கள் தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்காக பணியாற்றும் நிறுவனங்கள், நீருக்கான மாற்று வழி வளங்களை கண்டறிவதற்கு முயற்சிக்க வேண்டும். அல்லது அவர்கள் பயன்படுத்தும் நீர் சுத்திகரிக்கப்பட்டுள்ளதனை உறுதி செய்தல் வேண்டும்.

நோய் நுண்மப் பரப்பி தரம் 2: பௌதீக, சுற்றுச் சூழல் மற்றும் இரசாயன பாதுகாப்பு நடவடிக்கைகள்

மக்களின் உடல் நலனிற்கும், நல்வாழ்விற்கும் அச்சுறுத்தலாக விளங்கும் நோய் பரப்பும் மற்றும் இடையூறு விளைவிக்கும் நுண்ணுயிர்களும் மற்றும் நோய் நுண்மப் பரப்பிகளும் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் கட்டுப்படுத்தி வைக்கப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நோய் நுண்மப் பரப்பிகளுக்கு, விசேடமாக நுளம்புகளின் தாக்கம் இல்லாத பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- நோய் நுண்மப் பரப்பிகள் உருவாகும் மற்றும் தங்கும் இடங்களை கண்டறிந்து அவற்றை சுத்தப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-4ஐப் பார்க்கவும்).
- மக்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் குடியிருப்புக்களில் ஈக்களை கட்டுப்படுத்தும் முறைகளை முன்னெடுத்தல். ஏனெனில், அவ்வாறான இடங்களில் வயிற்றுப் போக்கு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு துரித நோயியல்பு மற்றும் சிகிச்சையை வழங்குவதற்கான பொறியமைப்பு ஒன்றினை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நோய் பரவல் அளவு மற்றும் தாக்கத்தினை குறைப்பதற்கு நுளம்பு பெருக்கத்தின் அளவு கட்டுப்படுத்தப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- நோய் நுண்மப் பரப்பிகள் சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கையை குறைத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-5ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. நோய் நுண்மப் பரப்பிகளால் உருவாகும் நோய் அச்சுறுத்தலினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கக் கூடிய தாக்கத்தின் அளவினை குறைப்பதற்கு **இடத் தெரிவு** என்பது மிகவும் முக்கியமானது ஆகும். சாத்தியமான இடங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தும் போது அவதானிக்க வேண்டிய பிரதான விடயமாக இது உள்ளது. மலேரியா கட்டுப்பாடு தொடர்பில் பார்க்கும் போது, உதாரணமாக, நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களான ஏரிகள் அல்லது குளங்கள் போன்றவற்றிலிருந்து 1-2 கிலோமீற்றர்கள் தொலைவில், தேவையான

சந்தர்ப்பங்களில் தூய நீர் வழங்கப்படக் கூடிய பகுதிகளில் முகாம்கள் அமைக்கப்படல் வேண்டும் (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 2, வழிகாட்டல் குறிப்புக்கள் 5-9ஆகியவற்றை பார்க்கவும் **பக்கம் ???**).

2. **சுற்றுச் சூழல் மற்றும் இரசாயன நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு:** நோய் நுண்மப் பரப்பிகள் பெருகுவதனை தடுப்பதற்கு எடுக்கக் கூடிய பல அடிப்படையான சுற்றுச் சூழல் சார்ந்த நடவடிக்கைகள் உள்ளன. மனித மலக்கழிவுகள் மற்றும் விலங்கு எச்சங்கள் முறையாக அகற்றல் (மலக்கழிவு வெளியேற்றல் பகுதியைப் பார்க்கவும் **பக்கம் ???**), ஈக்கள் மற்றும் எலிகளை கட்டுப்படுத்துவதற்கு குப்பைகளை முறையாக அகற்றல் (திண்மக் கழிவு முகாமைத்துவம் பகுதியைப் பார்க்கவும் **பக்கம் ???**), அசையாத நீரின் சாக்கடை வடிகால் மற்றும் குளங்கள் மற்றும் கால்வாய்களில் தேங்கி நிற்கும் தேவையற்ற மரக்கறி கழிவுகளை துப்புரவாக்கல் என்பன மூலம் நுளம்புகளை கட்டுப்படுத்த முடியும் (சாக்கடை வடிகால் பகுதியைப் பார்க்கவும் **பக்கம் ???**). இவ்வாறான முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய சுற்றுச் சூழல் சார்ந்த சுகாதார நடவடிக்கைகள் ஒருசில நோய் நுண்மப் பரப்பிகளின் பெருக்கத்திற்கு காரணமாக அமைகின்றன. குடியிருப்புக்குள் அல்லது அயலில் உள்ள நோய் நுண்மப் பரப்பிகள் பெருகும், உற்பத்தியாகும் மற்றும் தங்கும் பகுதிகள் அனைத்தையும் ஒழிப்பது என்பது சாத்தியமற்றதாக இருக்கலாம். நீண்ட கால நடவடிக்கையில் கூட இது சாத்தியமற்று இருக்கலாம். ஆனால், இரசாயான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகள் இதற்கு அவசியப்படலாம். உதாரணமாக, தாக்கத்துக்கு உள்ளான பகுதிகளின் மீது மருந்து தெளித்தலின் மூலம் தாக்கத்தின் அளவை குறைக்க முடியும். அல்லது நோயின் அளவை குறைப்பதற்கு அது உதவியாக இருக்கும்.

3. **மறுசீரமைப்பை வடிவமைத்தல்:** நோய் நுண்மப் பரப்பிகளை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சிகள் தவறான நோய் நுண்மப் பரப்பிகளை இலக்கு வைக்கும் பட்சத்தில், பயனுறுதியற்ற முறைகளை பயன்படுத்தும் பட்சத்தில் அல்லது சரியான நோய் நுண்மப் பரப்பியை தவறான இடத்தில் அல்லது தவறான நேரத்தில் இலக்கு வைக்கும் பட்சத்தில் நோயினை குறைப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தாது இருக்கலாம். கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பத்தில் பின்வரும் குறிக்கோள்களை அடையாளப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்: நோய் நுண்மப் பரப்பிகள் பெருகும் அளவை குறைத்தல்: மனித-நோய் நுண்மப் பரப்பி தொடர்பை குறைத்தல்: மற்றும் நோய் நுண்மப் பரப்பி பெருகும் இடங்களை குறைத்தல். மோசமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் பயனற்றதாகும். விளக்கமான கற்கை மற்றும், வழமையான நிபுணர்களின் ஆலோசனை என்பன அவசியமாகும். அத்துடன், அவை தேசிய மற்றும் சர்வதேச சுகாதார நிறுவனங்களிடமிருந்து பெறப்படல் வேண்டும். மேலதிகமாக, நோய் நுண்மப் பரப்பிகள் தொடர்பான உள்ளூர் ஆலோசனை, உள்ளூர் நோய் முறைகள், பெருகும் இடங்கள், பருவகால மாற்றங்கள் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.

9. **சுற்றுச் சூழல் நுளம்பு கட்டுப்பாடு:** சுற்றுச் சூழல் கட்டுப்பாடு என்பது முதலில் நுளம்புகள் பெருகும் இடங்களை ஒழிப்பது தொடர்பில் கவனஞ் செலுத்துகின்றன. நோய்களை பரவச் செய்வதில் முக்கியமாக விளங்கும் மூன்று பிரதான நுளம்பு

வகைகளாக கியுலெக்ஸ் (யானைக்கால் நோய்), எனோபெலிஸ் (மலேரியா மற்றும் யானைக்கால் நோய்) மற்றும் எயிடெஸ் (மஞ்சள் காய்ச்சல் மற்றும் டெங்கு) என்பன காணப்படுகின்றன. கியுலெக்ஸ் நுளம்புகள் மலசல கூடங்கள் போன்றன நிறைந்த தேங்கிய நீரில் பெருகுகின்றன. எனோபெலிஸ் நுளம்புகள் மெதுவாக செல்லும் நீரோடைகள் மற்றும் கிணறுகள் போன்ற சுத்தமற்ற மேற் தளங்களில் பெருகுகின்றன. எயிடெஸ் நுளம்புகள் போத்தல்கள், வாளிகள், டயர்கள் போன்றவற்றில் தேங்கியிருக்கும் நீரில் உருவாகுகின்றன. சிறந்த சாக்கடை வடிகால், முறையாக செயற்படும் காற்று வழியுள்ள மேம்படுத்தப்பட்ட குழி மலசல கூடங்கள், நீர் தேங்காது பாதுகாத்தல் என்பன சுற்றுச் சூழல் ரீதியாக நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்கான முக்கியமான நடவடிக்கைகளுக்கு உதாரணங்களாகும்.

5. **மலேரியா சிகிச்சை:** நுளம்பு பெருகுதலை கட்டுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் மலேரியா கட்டுப்பாட்டு உபாயங்கள், துரித நோயியல்பு என்பன சிகிச்சைக்கு சமாந்தரமாக முன்னெடுக்கப்படல் வேண்டும். அந்த உபாயங்களில் நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல், நுளம்புகள் நாளாந்தம் பெருகும் அளவை குறைத்தல் மற்றும் மனிதரை கடிக்கும் அளவை குறைத்தல் போன்றன உள்ளடங்குகின்றன. துரித நோயியல்பு மற்றும் சிகிச்சை என்பன சார்ந்த பிரசாரங்கள் முன்னெடுக்கப்படல் ஊக்குவிக்கப்பட்டுவதுடன், அவை நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். பயிற்றப்பட்ட பணியாளர்க-ளினால் சம்பவங்களை கண்டறிதல் மற்றும் பயனுறுதி மிக்க மலேரியாவுக்கு எதிரான சிகிச்சைகளை ஒன்றிணைப்பதன் மூலம் மலேரியா தாக்கத்தை குறைக்க முடியும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் சமூக நோய்களின் கட்டுப்பாடு தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 3 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**)

நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு தரம் 3: இரசாயன கட்டுப்பாடு பாதுகாப்பு

இரசாயனங்களின் மூலம் நோய் நுண்மப் பரப்பிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது ஊழியர்கள், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உள்ளூர் சுற்றுச் சூழல் போதிய அளவில் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன், பயன்படுத்தப்பட்ட பொருட்களினால் சூழலில் இரசாயனத் தாக்கம் ஏற்படுவதனை தவிர்க்க வேண்டும்.

•

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பயிற்சிகள், பாதுகாப்பு உடைகள், குளிப்பதற்கான வசதிகள் மற்றும் இரசாயனத்தை கையாளும் மணித்தியாலங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் என்பவற்றின் மூலம் இரசாயனத்தின் கையாளும் நபர்களை பாதுகாத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- இரசாயன நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டின் போது பயன்படுத்தப்படும் பொருட்களினால் ஏற்படக் கூடிய சாத்தியமான ஆபத்துக்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை எப்போது பயன்படுத்த வேண்டும் என்பன தொடர்பில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவித்தல். நச்சுப் பொருட்கள் அல்லது களைநாசி-னிகளை பயன்படுத்தும் போதும், அதற்கு பின்னரும், சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய மக்களுக்கு பாதுகாப்பினை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போதான இரசாயனப் பொருட்களின் தரம், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து என்பவற்றை தெரிவு செய்வதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச தரங்கள் மற்றும் விழுமியங்கள் பின்பற்றப்படல் வேண்டும். நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு இரசாயனங்களால் எதுவிதமான மோசமான விளைவுகளும் ஏற்படவில்லை என்பதனை உறுதி செய்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அனைத்து நோய் நுண்மப் பரப்பி இரசாயனங்களும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **தேசிய மற்றும் சர்வதேச நெறிமுறைகள்:** அனைத்து சந்தர்ப்பங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய தெளிவான சர்வதேச நெறிமுறைகளும் மற்றும் விழுமியங்களும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. இவை, தனிநபர்களின் பாதுகாப்பு மற்றும் பயிற்சி தேவைகள் உள்ளடங்கலாக நோய் நுண்மப் பரப்பிக்கான இரசாயனப் பொருட்களை தெரிவு செய்தல் மற்றும் பயன்படுத்தல் ஆகியவற்றுக்கான நெறிமுறைகளாகும். நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் திறன் மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டு பிரதான அக்கறைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். இரசாயனப் பொருட்களை தெரிவு செய்தலின் போது தேசிய விழுமியங்கள் சர்வதேச தரங்களிலும் பார்க்க குறைவானதாக இருக்கும் போது, சிறிய தாக்கத்தை அல்லது தாக்கம் இன்றி அல்லது சுகாதாரத்துக்கு மற்றும் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிப்பதாக இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிறுவனமானது சம்பந்தப்பட்ட தேசிய அதிகார சபையிடம் சர்வதேச தரங்களை பின்பற்றுவதற்கான அனுமதியைப் பெறுவது தொடர்பில் ஆலோசனை புரிவதுடன், ஆதரவு தேடி பிரசாரம் செய்தல் வேண்டும்.

6. திண்மக் கழிவு முகாமைத்துவம்

உறுப்புக்களுடன் கூடிய மற்றும் ஆபத்து விளைவிக்கக் கூடிய திண்மக் கழிவுகளை கையாளுதல் மற்றும் அப்புறப்படுத்தல் செயற்பாடே திண்மக் கழிவு முகாமைத்துவம் எனப்படும். இந்த விடயம் முறையாக கையாளப்படவில்லையெனின், பாதிக்கப்பட்ட பொது மக்களின் சுகாதாரத்திற்கு உடல் நலன் சார்ந்த சிக்கல்கள் ஏற்படலாம். அத்துடன், சுற்றுச் சூழலிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம். இவ்வாறான ஆபத்துக்கள் திண்மக் கழிவுகளில் இருந்து பெருகும் ஈக்கள் மற்றும் எலிகள் போன்றவற்றினால் தோன்றலாம் (நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு பகுதியைப் பார்க்கவும் **பக்கம் ???**). அத்துடன், வீடுகள் மற்றும் மருத்துவ அல்லது தொழிற்சாலை கழிவுகள் என்பன கலப்பதால் மேற்தளம் மற்றும் நிலக்கீழ் நீர் வளங்கள் மாசடைதல் என்பனவும் ஈக்கள் மற்றும் எலிகள் பெருகக் காரணமாகின்றன. சேகரிக்கப்படாத மற்றும் சிறுக சிறுக சேகரிக்கப்பட்ட திண்மக் கழிவுகளும், இயற்கை அனர்த்தத்தின் பின்னர் எஞ்சிய சிதைக் கூளங்களும் கோரமான மற்றும் அவலட்சமான சுற்றுச் சூழலை உருவாக்கலாம். இதன் காரணமாக சுற்றுச் சூழல் சுகாதாரத்தின் ஏனைய அம்சங்களை மேம்படுத்துவதில் தடை ஏற்படும். திண்மக் கழிவுகள் வழமையாக சாக்கடை வடிகாலில் தேக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன், வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கும் காரணமாக மாறும். இது அசுத்தமான நீர் தேங்கி இருத்தல் மற்றும் மாசடைந்த மேற்தள நீர் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட சுற்றுச் சூழல் சார்ந்த உடல் நலன் குறைபாடுகள் ஏற்படுவதற்கு துணை புரியும். குப்பைக் கூளங்களில் இருந்து மீள்சுழற்சி செய்யக் கூடிய பொருட்களை சேகரிப்பதன் மூலம் சிறிய அளவிலான வருமானத்தை பெறுபவர்களும், வைத்தியசாலையின் கழிவுகள் மற்றும் வீடுகளில் வீசப்படும் கழிவுகளின் காரணமாக நோய் தொற்றுக்கு உள்ளாகலாம்.

திண்மக் கழிவு முகாமைத்துவ தரம் 1: சேகரித்தல் மற்றும் அப்புறப்படுத்தல்

மருத்துவக் கழிவுகள் உள்ளடங்கலாக திண்மக் கழிவுகளினால் அசுத்தமாக்கப்படாத ஏற்றுக் கொள்ளக் கூடிய சூழலில் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளனர். அத்துடன், வீட்டுக் குப்பைகளை வசதியாகவும் மற்றும் பயனுறுதி மிக்க வகையிலும் அப்புறப்படுத்துவதற்கான வழிகளை அவர்கள் கொண்டுள்ளனர்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- திண்மக் கழிவு அகற்றல் நிகழ்ச்சியின் வடிவமைப்பில் மற்றும் நடைமுறைப்படுத்தலில் பாதிக்கப்பட்ட மக்களையும் உள்ளடக்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- பருவகால திண்மக் கழிவு சுத்திகரிப்பு பிரசாரங்களை ஒழுங்கமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- குப்பைகளை மீள் சுழற்சி செய்வதில் சிறிய அளவிலான வர்த்தக சந்தர்ப்பங்கள் அல்லது உப வருமான வழிகளுக்கான சாத்தியங்கள் குறித்து கவனஞ் செலுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து, வீட்டுக் குப்பைகள் கொள்கலனில் இடப்பட்டு தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்டு, எரிக்கப்படுவதனை அல்லது குழிகளில் புதைக்கப்படுவதனை ஒழுங்கு செய்தல். அதேவேளை, மருத்துவ மற்றும் வேறு ஆபத்து விளைவிக்கக் கூடிய குப்பைகள் தனியான அப்புறப்படுத்தல் சங்கிலிக்கு அனுப்பி வைக்கப்படல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- உடல் நலனுக்கு ஆபத்து அல்லது இடையூறை விளைவிப்பதற்கு முன்னர் குடியிருப்புக்களில் இருந்து தேவையற்ற பொருட்களை அகற்றல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-6ஐப் பார்க்கவும்).
- குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு மேலதிக குப்பைகளை களஞ்சியப்படுத்தும் மற்றும் சேகரிக்கும் வசதிகளை வழங்கல். அனர்த்த சூழ்நிலைகளில் மேலதிக குப்பைகள் சிறுக சிறுக சேகரிப்படுவதற்கு முறையான அப்புறப்படுத்தல் வசதிகளை வழங்குதல்.
- தெளிவாக குறிப்பிடப்பட்ட மற்றும் பொருத்தமான இடங்களில் குப்பை நீக்கல் தொட்டிகள், கூடைகள் அல்லது குறிப்பிட்ட பகுதிகள் மற்றும் சந்தைகள், மீன் பதப்படுத்தும் இடங்கள் போன்ற பொது இடங்களுக்கான குப்பை தொட்டிகளை வழங்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-6ஐப் பார்க்கவும்).
- வழமையான அப்புறப்படுத்தலுக்கான சேகரிப்பு முறை இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-6ஐப் பார்க்கவும்).
- அவ்வாறே, இறுதியான திண்மக் கழிவு அகற்றலை உள்வாங்கல். அத்துடன், அப்பகுதியில் வாழும் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடல் நலன் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படாதவாறு அகற்றல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 6-7ஐப் பார்க்கவும்).
- திண்மக் கழிவுப் பொருட்களை சேகரிக்கும், அப்புறப்படுத்தும் மற்றும் மீள்சுழற்சிக்காக பொருட்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, பொருத்தமான பாதுகாப்பு ஆடைகள் மற்றும் ஏற்பு வலி மற்றும் ஈரல் அழற்சிக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- இறந்த உடல்கள் பொருத்தமான மற்றும் கண்ணியமான வகையில் அப்புறப்படுத்தப்படும் போது, அது தொடர்பில் செயற்படும் பொறுப்புள்ள

நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனைத்து வீடுகளுக்கும் குப்பைத் தொட்டிகள் வழங்கப்படல் வேண்டும். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை அதில் சேரும் குப்பைகள் சேகரிக்கப்படல் வேண்டும். (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- குடியிருப்புக்களில் வசிப்பவர்களின் குப்பைகள் அனைத்தும் உடனடியாக வாழும் சூழலில் இருந்து நாளாந்த அடிப்படையில் அகற்றப்படல் வேண்டும். அத்துடன், குடியிருப்பு சூழலில் இருந்து இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை அகற்றப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).
- வீட்டில் பயன்படுத்தப்படும் குப்பைகளை இடுவதற்காக ஆகக் குறைந்தது 10 குடும்பங்களுக்கு 100லீற்றர் கொள்ளளவு கொள்கலன் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- திண்மக் கழிவுகளின் உரிய நேரத்திற்கான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்பான அப்புறப்படுத்தல். சுற்றுச் சூழலுக்கு திண்மக் கழிவினால் ஆபத்து ஏற்படாத வண்ணம் அகற்றப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 4-6ஐப் பார்க்கவும்).
- மருத்துவ கழிவுகள் (கண்ணாடிகள், ஊசிகள் மற்றும் மருந்துகள் போன்ற ஆபத்தான கழிவுகள் உள்ளடங்கலாக) அனைத்தும் தனியாக பிரிக்கப்பட்டு, உரிய வகையில் வடிவமைக்கப்பட்ட, நிர்மாணிக்கப்பட்ட மற்றும் செயற்படுத்தப்பட்ட குழியில் அல்லது ஆழமான குழியில் சுகாதார வசதிகள் வழங்கப்படும் பகுதிக்குள் தனியாக அப்புறப்படுத்தப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 4-7ஐப் பாாக்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்:** திண்மக் கழிவு அகற்றல் என்பது பாதிக்கப்பட்ட சமூகம், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளினால் நெருக்கமான கலந்தாய்வு மற்றும் ஒருங்கிணைப்புடன் திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு திண்மக் கழிவு பிரச்சினை என்பது பாரிய சவாலாக உருவெடுப்பதற்கு முன்னர் இடையீட்டினை இது ஆரம்பிக்க வேண்டும். சூழ்நிலையின் அடிப்படையில், பருவகால சுத்தமாக்கல் பிரசாரங்கள் மக்கள் மற்றும் பொறுப்புள்ள உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையுடன் தேவையாக இருக்கின்றன.
2. **கழிவுகளை புதைத்தல்:** வீட்டு வளாகம் அல்லது பொதுக் குழிகளில் கழிவுகள் புதைக்கப்பட வேண்டுமாயின், தடித்த அளவில் மண் இட்டு நிரப்பப்பட்டு மூடப்படல் வேண்டும். இல்லையெனில், ஈக்கள் மற்றும் எலிகளுக்கு அது பெருகும் இடங்களாக மாறிவிடும். சிறுவர்களின் கழிவுகள் அல்லது ஆடைகள்

புதைக்கப்பட்டால், உடனடியாக மண் இடப்பட்டு அவை மூடப்படல் வேண்டும். சிறுவர்கள் மற்றும் விலங்குகள் நுழைவதினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை தடுப்பதற்கு, குப்பைகள் புதைக்கப்படும் பகுதி வேலி இட்டு மறைக்கப்படல் வேண்டும். நிலக்கீழ் நீருடன் இந்த கழிவுகள் கலப்பதற்கான சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டு தடுக்கப்படல் வேண்டும்.

3. **குப்பையின் வகை மற்றும் அளவு:** குடியிருப்புக்களில் உள்ள குப்பைகள் அவற்றின் நடவடிக்கைகளிற்கு ஏற்ற வகையிலும், மற்றும் நுகரப்படும் பொதி செய்யப்பட்ட உணவுகளின் மறு உற்பத்தி அல்லது கழிவு அகற்றுதலுக்கான உள்ளூர் நடைமுறைகளிற்கு ஏற்ற வகையிலும் வேறுபடும். திண்மக் கழிவுகள் மக்களின் உடல் நலனில் எவ்வளவு தூரம் தாக்கம் விளைவிக்கின்றன என்பது மதிப்பீடு செய்யப்பட்டு, தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வீட்டுக் கழிவுகள் முறையாக குப்பை தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு முறையாக புதைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு குப்பைத் தொட்டி வழங்கப்பட முடியாத சந்தர்ப்பங்களில், சமுதாயத்திற்கான குப்பைத் தொட்டிகள் வழங்கப்படல் வேண்டும். திண்மக் கழிவுகளை மீள் சுழற்சிக்கு உள்ளாக்கல் என்பது ஊக்குவிக்கப்படல் வேண்டும். அத்துடன், அது உடல் நலன் சார்ந்த ஆபத்துக்களை விளைவிக்காது இருப்பது தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பொதியிடல் அல்லது பதனிடப்படலின் போது பெரும-ளவிலான திண்மக் கழிவுகளை உருவாக்கும் பொருட்கள் விநியோகிக்கப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

4. **மருத்துவக் கழிவுகள்:** சுகாதார பராமரிப்பு கழிவுகளின் மோசமான முகாமைத்துவமானது மக்கள், சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் மற்றும் குப்பைகளை கையாள்பவர்களுக்கு நோய்கள் மற்றும் தீங்கு ஏற்படுவதற்கு வழி வகுக்கும். அனர்த்த சூழ்நிலைகளின் போது, மிகவும் அபாயகரமான வகைக-ளிலான தொற்று ஏற்படுத்தக் கூடிய கூரான மற்றும் கூரற்ற பொருட்கள் (காயத் துணிகள், இரத்த கறை படிந்த ஆடை மற்றும் உடல் பாகங்கள், இன்னபிற) நோய்த்தாக்கத்திற்கு காரணமாக அமையும். வேறுபட்ட கழிவுகள் தனித் தனியாக பிரித்தெடுக்கப்படல் வேண்டும். தொற்று ஏற்படுத்தாத கழிவுகள் (காகிதம், பிளாஸ்டிக் பொதிகள், உணவுக் கழிவுகள், இன்னபிற) என்பன திண்மக் கழிவுகளாக அப்புறப்படுத்தப்படல் வேண்டும். கறை படிந்த கூரான பொருட்கள், விசேடமாக ஊசிகள் என்பன பயன்படுத்தப்பட்ட பின்னர் பாதுகாப்பாக பெட்டிகளில் இடப்படல் வேண்டும். பாதுகாப்பு பெட்டிகள் மற்றும் வேறு தொற்று ஏற்படக் கூடிய கழிவுகள் புதைக்கப்படல் வேண்டும். அல்லது பாதுகாப்பான முறைகளின் மூலம் அகற்றப்படல் வேண்டும் (சுகாதார முறைமைகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 11 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

5. **சந்தைக் கழிவுகள்:** வீட்டுப் பாவனை கழிவுப் பொருட்களை அகற்றுவது போன்றே பெரும்பாலான சந்தைக் கழிவுகளையும் அகற்ற முடியும். இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் சந்தைக் கழிவுகள் விசேட வழிகளில் அகற்றப்படல் வேண்டும். அதேவேளை திரவக் கழிவுகளை கையாள்வதற்கான வசதிகளும் வழங்கப்படல் வேண்டும். இறைச்சிகளை அறுத்தல் என்பது உள்ளூர் சட்டங்களுக்கு அமைவான ஆரோக்கியமான சுற்றாடலில் முன்னெடுக்கப்படுவதனை உறுதி

செய்தல் வேண்டும். இறைச்சிக் கடைகளின் கழிவுகள், இறைச்சி வெட்டும் அல்லது மீன் பதப்படுத்தும் இடங்களின் கழிவுகள் என்பன பொதுவாக நன்கு மூடப்பட்ட பெரிய பைகளின் மூலம் அகற்றப்படலாம். இரத்தம், இன்னபிற போன்ற இறைச்சிகளை வெட்டும் இடங்களில் இருக்கும் கழிவுகள் அல்லது மீன் பதப்படுத்தும் இடத்தில் இருக்கும் கழிவுகள் நன்கு மூடப்பட்ட பைகளின் மூலம் அப்புறப்படுத்தப்படல் வேண்டும் (இதன் மூலம் குப்பைத் தொட்டிகளில் ஈக்கள் உருவாகுவதனை தடுக்க முடியும்). துப்புரவாக்கல் தேவைகளுக்கு நீர் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

6. **கட்டுப்படுத்தப்பட்ட கொட்டும் முறை மற்றும்/அல்லது சுகாதாரமான முறையில் நிலத்தில் கொட்டுதல்:** பரந்த அளவிலான குப்பை அப்புறப்படுத்தலானது குடியிருப்பு இடங்களுக்கு வெளியே கட்டுப்படுத்தப்பட்ட கொட்டும் முறை அல்லது சுகாதாரமான முறையில் நிலத்தில் கொட்டுதல் முறையை பயன்படுத்தி முன்னெடுக்கப்படலாம். போதிய இடவசதியிலேயே இந்த முறை நடைமுறைப்படுத்தல் தங்கியுள்ளது. அதேவேளை, நோய் நுண்மப் பரப்பிகள் பெருகுவதனை தடுப்பதற்காக நிலத்தில் கொட்டப்படும் கழிவுகள் ஒவ்வொரு நாளும் மண் இட்டு மூடப்படல் வேண்டும்.

7. **ஊழியர் நலன்:** திண்மக் கழிவுகளை சேகரித்தல், போக்குவரத்து செய்தல், அகற்றல் மற்றும் மீள் சுழற்சி செய்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஆகக் குறைந்தது கையுறைகள், காலணிகள் மற்றும் முகக் கவசம் என்பன உள்ளடங்கலாக பாதுகாப்பு உடைகள் வழங்கப்படல் வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் ஏற்பு வலி மற்றும் ஈரல் அழற்சிக்கு எதிரான தடுப்பூசிகள் வழங்கப்படல் வேண்டும். கைகள் மற்றும் முகங்களை கழுவுவதற்கு நீர் மற்றும் சவர்க்காரம் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். மருத்துவக் கழிவுகளை கையாள்பவர்கள், அவற்றை சரியான முறையில் களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து செய்தல் மற்றும் அப்புறப்படுத்தல் என்பன தொடர்பிலும், முறையற்ற கழிவுப் பொருள் முகாமைத்துவத்தினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பிலும் அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

8. **இறந்த உடல்களை கையாளல்:** இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் உடல்களை கையாளுதல் மற்றும்/அல்லது புதைத்தல் என்பது, பொருத்தமான மற்றும் கண்ணியமான முறையில் முன்னெடுக்கப்படல் வேண்டும். தேடல் மற்றும் மீட்புக் குழுவினால் பொருத்தமான அதிகாரிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை பொதுவாக முன்னெடுக்கப்படும். தொற்று நோய்களினால் உயிரிழந்தவர்களின் உடல்களும் பொருத்தமான வகையில் கையாளப்படுவதுடன், சுகாதார அதிகாரிகளின் கலந்தாய்வு மற்றும் ஒத்துழைப்பு பெறப்படல் வேண்டும் (சுகாதார முறைகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 12 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**). இறந்த உடல்களை புதைப்பது தொடர்பிலான மேலதிக தகவல்களை குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

7. சாக்கடை வடிகால்

மேற்தள நீர் அல்லது வீட்டிலிருந்து வரும் நீர் குடியிருப்புக்களுக்கு வருவது, நீர் நிலைகளில் இருந்து விரயமாகும் நீர், மலசல கூடங்கள் மற்றும் தொட்டிகளில் இருந்து விரயமாகும் நீர், மழை நீர் அல்லது வெள்ளப்பெருக்கு நீர் என்பன கழிவு நீராக கருதப்படக் கூடியன. மேற்தள நீருடன் சம்பந்தப்பட்ட பிரதான சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளாக நீர் விநியோகங்கள் மற்றும் வாழும் சுற்றாடல் அசுத்தமடைதல், மலசல கூடங்கள் மற்றும் குடியிருப்புக்கள் சேதமடைதல், நோய் நுண்மப் பரப்பிகள் பெருகுதல் என்பவற்றை குறிப்பிடலாம். மழை நீர் மற்றும் வெள்ளப்பெருக்கின் காரணமாக அதிகரிக்கும் நீர் குடியிருப்புக்களின் சாக்கடை வடிகால் நிலைமையை மேலும் மோசமாக்கும். அத்துடன், அசுத்தமடைவதற்கான ஆபத்தினை மேலும் அதிகரிக்கச் செய்யும். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்டக் கூடிய சாத்தியமான சுகாதார பிரச்சினைகளை குறைப்பதற்கான சிறிய அளவிலான, அதே இடத்திலான சாக்கடை வடிகால் என்பவற்றை பயன்படுத்தி தள திட்டமிடல் மற்றும் கழிவு நீர் அகற்றல் என்பவற்றின் ஊடாக சுழல் நீரை அடையாளப்படுத்தும் முறையான சாக்கடை வடிகால் திட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இந்த பகுதியில் சிறிய அளவிலான சாக்கடை வடிகால் பிரச்சினைகள் மற்றும் நடவடிக்கைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பாரிய அளவிலான சாக்கடை வடிகாலானது பொதுவாக இடத்தெரிவு மற்றும் அபிவிருத்தியினால் தீர்மானிக்கப்படுகின்றது (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 5 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

சாக்கடை வடிகால் தரம் 1: சாக்கடை வடிகால் பணி

புயல் நீர், வெள்ள நீர், வீட்டில் பயன்படுத்தும் நீரின் கழிவு மற்றும் மருத்துவ வசதிகளின் போதான கழிவு நீர் உள்ளடங்கலாக விரயமாகும் நீர் மற்றும் தேங்கி நிற்கும் நீர் என்பன ஏற்படுத்தக் கூடிய சுகாதார பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் குறைக்கப்பட்டுள்ளன.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பொருத்தமான சாக்கடை வடிகால் வசதிகளை வழங்கல். இதன் மூலம், குடியிருப்பு பகுதிகள் மற்றும் நீர் வழங்கல் நிலைகள் என்பன கழிவு நீர் தேங்காது இருப்பதுடன் புயல் நீரானது தூய்மையாக இருக்கும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2, 4-5ஐப் பார்க்கவும்).

- சாக்கடை வடிகால் பிரச்சினைகள் தொடர்பில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்து பாதிக்கப்பட்ட மக்களுடன் உடன்பாட்டுக்கு வரல். அத்துடன், தேவையான சந்தர்ப்பங்களில் சிறிய அளவிலான சாக்கடை வடிகால் பணிகளுக்கும் மற்றும் பராமரிப்புக்கும் தேவையான பொருத்தமான கருவிகள் சிலவற்றை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- சேற்று நிலையை தவிர்ப்பதற்கு அனைத்து நீர் நிலைகள் மற்றும் கை கழுவும் வசதிகளுக்கும் பயனுறுதி மிக்க சாக்கடை வடிகால் வசதிகள் உள்ளமையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நீர் நிலைக்கான சாக்கடை வடிகால் நன்கு திட்டமிடப்பட்டதாக, நிர்மாணிக்கப்பட்டதாக மற்றும் பராமரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இதில் கழுவுதல் மற்றும் குளித்தல் பகுதிகளின் வடிகால் உள்ளடங்கும். அத்துடன், நீர் சேகரித்தல் நிலைகள் மற்றும் கை கழுவுதல் வசதிகளும் உள்ளடங்கும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2 மற்றும் 4ஐப் பார்க்கவும்).
- சாக்கடை வடிகால் நீரினால் மேற்தள நீர் மற்றும்/அல்லது நிலக்கீழ் நீர் வளங்களுக்கு எதுவிதமான மாசும் ஏற்படக் கூடாது (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- உறைவிடயங்கள், வழிப்பாதைகள், நீர் மற்றும் தேகாரோக்கிய வசதிகள் என்பன நீரினால் நிரப்பப்பட்டதாக இருக்கக் கூடாது (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-4ஐப் பார்க்கவும்).
- சாக்கடை வடிகாலினால் நீர் விரயம் ஏற்படக் கூடாது (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **இடத்தெரிவு மற்றும் திட்டமிடல்:** சாக்கடை வடிகால் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்கான மிகவும் பயனுள்ள வழிமுறையாக இடங்களை தெரிவு செய்தல் மற்றும் குடியிருப்புக்களை வடிவமைத்தல் அமைந்துள்ளது (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரங்கள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**)
2. **கழிவு நீர்:** கழுவு நீர் அல்லது வீட்டு பயன்பாட்டின் பின்னரான கழிவு நீர் என்பன மனித எச்சங்களுடன் கலக்கும் போது கழிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த குடியிருப்பில் சாக்கடை வடிகால் அமைப்பு இருந்தால் வீட்டுக் கழிவு நீரானது மனித மலத்துடன் கலப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாது இருந்தால் மாத்திரம் அவை கழிவாக கருதப்பட மாட்டாது. நீர் நிலைகளிலும், சலவை செய்கின்ற மற்றும் குளிக்கின்ற பகுதிகளிலும் விரயமாகும் நீரைப் பயன்படுத்தி சிறிய தோட்டங்கள் அமைப்பது ஊக்குவிக்கப்படும் நடைமுறையாகும். சலவை செய்வது மற்றும் குளிக்கும் பகுதிகளில் இருந்து விரயமாகும் நீரானது நீர் நிலைகளை அசுத்தமாக்காது பார்த்துக் கொள்வது தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்
3. **சாக்கடை வடிகால் மற்றும் மலம் அகற்றல்:** மலசல கூடங்களையும் மற்றும் சாக்கடை வடிகால்களையும் சேதமடையாது மற்றும் கசிவடையாது தவிர்த்துக்

கொள்வதற்கு அவை வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்படாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

4. **மேம்படுத்தல்:** சிறிய அளவிலான சாக்கடை வடிகால் அமைக்கும் பணிகளில் பாதிக்கப்பட்ட மக்களை ஈடுபடுத்தலாம். ஏனெனில், இயற்கையான சாக்கடை வடிகால் ஒடுவது தொடர்பிலும், கால்வாய்கள் எந்த இடங்களில் அமைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் அவர்களிடம் சிறந்த அறிவு இருக்கும். இதன் மூலம் கிடைக்கக் கூடிய பலன் மற்றும் உடல் ரீதியான ஆபத்துக்கள் தொடர்பிலும் அவர்கள் நன்கு அறிந்து வைத்திருப்பர். அவர்கள் சாக்கடை வடிகால்களை நிர்மாணிப்பதிலும், அவற்றை பராமரிப்பதிலும் உதவி புரிவர் (நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு பகுதியைப் பார்க்கவும்). அவர்களுக்கு தொழில் நுட்ப உதவியும் மற்றும் கருவிகளும் வழங்கப்படல் வேண்டும்.

5. **அந்த இடத்திலேயே அகற்றுவது:** மண்ணின் தன்மை சாதகமானதாக இருக்கும் பட்சத்தில், நீர் நிலைகளில் இருந்தும், குளிக்கின்ற பகுதிகளில் இருந்தும் வரும் சாக்கடை வடிகால் மண்ணிற்கு அருகில் அமைக்கப்படல் வேண்டும். திறந்த கால்வாய்களை அமைப்பது பராமரிப்பில் சிக்கலை ஏற்படுத்தலாம். அவை அடிக்கடி தேங்கி சுற்றுச் சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தும். எனவே, எளிமையான மற்றும் விலை குறைந்த தொழில் நுட்பங்களும், கழிவு நீரை அகற்றுவதற்கு அமைக்கப்படல் வேண்டும். அந்த இடத்திற்கு அப்பால், கழிவு அகற்றுவதற்கான சந்தர்ப்பம் இருப்பின் கழிவு அகற்றுவதற்கு குழாய்களுக்குப் பதிலாக வாய்க்கால்களைப் பயன்படுத்த முடியும். இவை வரட்சியான காலநிலையிலும் நீரோட்டம் நிறைந்ததாக இருக்கும். அடைப்புக்களின்றி நீரோட்டம் உள்ளதாக இவை அமைக்கப்படல் வேண்டும். சரிவானது 5%க்கும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில், மேலதிக கசிவினைத் தடுப்பதற்கு பொறியியல் தொழில் நுட்பங்கள் பிரயோகிக்கப்படல் வேண்டும். சுத்திகரிக்கப்பட்ட இடங்களில் இருந்து நீரில் எஞ்சியுள்ள கழிவுகள் மிகுந்த அவதானத்துடன் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். அப்போதுதான், மக்கள் அவ்வாறான நீரை பயன்படுத்த மாட்டார்கள். அத்துடன், அது மேற்தள நீர் அல்லது நிலக்கீழ் நீர் வளங்களை அசுத்தமடையச் செய்யாது.

பிற்சேர்க்கை 1:

நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாட்டுக்கான ஆரம்ப தேவைகள் மதிப்பீடு சரிபார்ப்பு பட்டியல்

இப்பட்டியலில் தரப்பட்டுள்ள கேள்விகள் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும், உள்ளூர் வளங்களை அடையாளங் காண்பதற்கும் மற்றும் உள்ளூர் சூழ்நிலைகளை விளக்குவதற்கும் முதன்மையானதாக பயன்படுத்தப்படுகின்றது. உடனடியாக மற்றும் உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்களுக்கு மேலதிகமாக தேவையாக உள்ள, புற வளங்களை தீர்மானிக்கும் கேள்விகள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

1. பொதுவானவை

- எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் அவர்கள் எங்கு உள்ளனர்? பால், வயது, மாற்றுத் திறன் என்பதன் அடிப்படையில் தரவுகளைப் பிரிக்கவும்?
- மக்கள் விரும்பும் இடப்பெயர்வு என்ன? பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு அம்சங்கள் எவை மற்றும் சாத்தியமான நிவாரண மறுசீரமைப்புக்கள் எவை?
- தற்போதைய, ஏற்படக் கூடிய அல்லது சாத்தியமான நீர் மற்றும் தேகாரோக்கியம் சம்பந்தமான நோய்கள் எவை? பிரச்சினைகளின் பரவக் கூடிய அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் படிப்படியான வளர்ச்சிகள் எவை?
- கலந்தாய்வு செய்ய வேண்டிய அல்லது தொடர்பு கொள்ள வேண்டிய பிரதான மக்கள் யாவர்?
- மக்கள் தொகையில் பலவீனமானவர்கள் யார் மற்றும் ஏன்?
- பொது இடங்கள், சுகாதார நிலையங்கள் மற்றும் பாடசாலைகளில் கிடைக்கக் கூடியதாக உள்ள வசதிகளுக்கு அனைவருக்கும் சமமான பிரவேசம் உள்ளதா?
- பெண்கள், சிறுமிகள் மற்றும் பலவீனமான மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பாதுகாப்பு பிரச்சினைகள் எவை?
- அனர்த்தத்திற்கு முன்னர் பாதிக்கப்பட்ட மக்கள் பின்பற்றிய நீர் மற்றும் தேகாரோக்கிய பயிற்சிகள் எவை?

- முறை சார் மற்றும் முறை சாரா அதிகார கட்டமைப்புக்கள் எவை (உ-ம்: சமுதாயத் தலைவர்கள், பெரியவர்கள், மகளிர் குழுக்கள்)?
- குடும்பங்களிலும் மற்றும் சமுதாயத்திலும் எவ்வாறு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன?

2. சுகாதார மேம்பாடு

- அனர்த்தத்திற்கு முன்னர் மக்களால் பின்பற்றப்பட்ட நீர் மற்றும் தேகாரோக்கிய நடவடிக்கைகள் எவை?
- உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகள் எவை, யார் அதனை முன்னெடுக்கின்றனர் மற்றும் ஏன்?
- சாதகமான சுகாதார நடத்தைகளை தற்போதும் பின்பற்றுபவர்கள் யார் மற்றும் அதனை முன்னெடுப்பதற்கு தூண்டும் விடயம் எது?
- நடவடிக்கைகளில் பிரேரிக்கப்படும் மாற்றங்களின் சாதக மற்றும் பாதகத் தன்மைகள் எவை?
- தொடர்பாடல் மற்றும் வெளியீடுக்கான நடைமுறையில் உள்ள முறை சார் மற்றும் முறை சாரா அலைவரிசைகள் எவை (சமுதாய சுகாதார பணியாளர்கள், பாரம்பரிய பிறப்பு தாதி, பாரம்பரிய குணமாக்குனர்கள், கழகங்கள், கூட்டுறவு சங்கங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாயில்கள், இன்னபிற)?
- அந்தப் பகுதியில் வெகுசன ஊடகங்களுக்கு (வானொலி, தொலைக்காட்சி, ஒளிப்பதிவு, பத்திரிகைகள், இன்னபிற) உள்ள பிரவேசம் என்ன?
- அங்குள்ள உள்ளூர் ஊடக நிறுவனங்கள் மற்றும்/அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் எவை?
- மக்களில் எந்த தொகுதியினர் இலக்கு வைக்கப்பட வேண்டும் (தாய்மார், சிறுவர்கள், சமுதாயத் தலைவர்கள், பொது சமையல் பணியாளர்கள், இன்னபிற)?
- உடனடி மற்றும் குறுகிய கால அணி திரட்டலுக்கு இந்த சூழ்நிலையில் செல்லுபடியாகக் கூடிய வெளியீட்டு முறைகள் எவை (தன்னார்வ பணியாளர்கள், சுகாதார கழகங்கள், குழுக்கள், இன்னபிற)?
- சுகாதார மேம்பாட்டு ஊழியர்கள் மற்றும் தன்னார்வ பணியாளர்களின் கற்றல் தேவைகள் எவை?
- கிடைக்கக் கூடியதாக உள்ள உணவு சாராத விடயங்கள் எவை மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் மிகவும் அவசரமாக தேவையானவை எவை?
- சுகாதார வசதிகளில் சுகாதார நடவடிக்கைகள் எவ்வளவு பயனுள்ளவை (விசேடமாக நோய்த் தொற்றும் சந்தர்ப்பங்களில்)?

3. நீர் விநியோகம்

- தற்போதைய நீர் விநியோக வளம் என்ன மற்றும் அதனை தற்போது பயன்படுத்துபவர்கள் யார்?
- நபர் ஒருவருக்கு நாளாந்தம் எவ்வளவு நீர் கிடைக்கக் கூடியதாக உள்ளது?
- நீர் விநியோகத்தின் நாளாந்த அல்லது வாராந்த அளவு என்ன?
- மக்களின் அனைத்து குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் குறுகிய கால மற்றும் நீண்ட காலத் தேவைகளுக்கு நீர் வளத்தில் உள்ள நீர் போதுமானதா?
- மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகில் நீர் சேமிப்பு நிலைகள் உள்ளனவா? அவை பாதுகாப்பானவையா?
- தற்போதைய நீர் விநியோகம் நிலையானதா? எவ்வளவு காலத்துக்கு கிடைக்கும்?
- பொருத்தமான அளவு மற்றும் போதிய அளவு நீர் கொள்கலன்களை மக்கள் கொண்டுள்ளனரா?
- நீர் வளமானது அசுத்தமடைந்துள்ளதா அல்லது அசுத்தமடைவதற்கான சாத்தியங்கள் உள்ளதா (நுண்ணுயிரியல் அல்லது இரசாயன அல்லது கதிரியக்க)?
- நீர் சுத்திகரிப்பு முறையேதும் நடைமுறையில் உள்ளதா? நீர் சுத்திகரிப்பு அவசியமானதா? நீர் சுத்திகரிப்பு சாத்தியமானதா? எவ்வாறான நீர் சுத்திகரிப்பு அவசியமானது?
- நீர் விநியோகம் அசுத்தமடைந்து இல்லாத போதிலும், தொற்று நீக்கல் என்பது அவசியமானதா?
- அயலில் நீருக்கான மாற்று வளங்கள் ஏதேனும் உள்ளதா?
- நீர் சேமித்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் காணப்படும் பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் பயிற்சிகள் எவை?
- கிடைக்கக் கூடியதாக உள்ள நீர் விநியோக வளங்களை பயன்படுத்துவதில் ஏதேனும் தடைகள் உள்ளனவா?
- நீர் வளங்கள் போதியதாக இல்லாத போது மக்களை வேறு இடங்களுக்கு நகரச் செய்வது சாத்தியமானதா?
- நீர் வளங்கள் போதியதாக இல்லாத சந்தர்ப்பங்களில் நீர்த் தாங்கிகள் சாத்தியமானதா?
- நீர் விநியோகம் தொடர்பில் காணப்படும் பிரதான சுகாதார சார்ந்த விடயங்கள் எவை?

- நீரை சுகாதாரமான வகையில் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை மக்கள் கொண்டுள்ளனரா?
- கிராமப் புற இடப்பெயர்வின் போது, கால்நடைகளுக்கான பொதுவான நீர் வளம் என்ன?
- சாத்தியமான நீர் விநியோக இடையீடு, தலையீடு மற்றும் நீர் வளங்களின் பயன்பாடு என்பவற்றின் காரணமாக சுற்றுச் சூழல் தாக்கங்கள் ஏற்படுமா?
- ஏனைய பயனாளிகள் தற்போது பயன்படுத்தும் நீர் வளங்கள் எவை? புதிய மக்கள் வளங்களை பயன்படுத்துவதினால் முரண்பாடு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் உள்ளதா?

4. மலக்கழிவு வெளியேற்றல்

- தற்போதைய தொற்று நீக்கல் நடவடிக்கை என்ன? அது பகிரங்க தொற்று நீக்கலாயின், நியமிக்கப்பட்ட பகுதி ஏதேனும் உள்ளதா? அந்த பகுதி பாதுகாப்பானதா?
- மலக்கழிவு வெளியேற்றல் தொடர்பில் பால்நிலை சார்ந்த நடவடிக்கைகள் உள்ளடங்கலாக தற்போதைய நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் எவை?
- ஏதேனும் வசதிகள் தற்போது உள்ளனவா? ஆம் எனின், அவை பயன்படுத்தப்பட்டுள்ளனவா, அவை போதுமானவையா மற்றும் அவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? அவை பரவலாக்கப்பட முடியுமா அல்லது உள்வாங்கப்பட முடியுமா?
- தற்போதைய தொற்று நீக்கல் நடவடிக்கையானது நீர் வளங்கள் (மேற்தளம் அல்லது நிலக்கீழ் நீர்) அல்லது வாழ்விடங்கள் மற்றும் பொதுவில் சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலானதா?
- தொற்று நீக்கலின் பின்னர் மற்றும் உணவு தயாரித்தலுக்கு முன்னரும், பின்னரும் மக்கள் தமது கைகளை கழுவுகின்றனரா? சவர்க்காரம் அல்லது வேறு சுத்தமாக்கும் பொருட்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளனவா?
- மலசல கூடங்களின் நிர்மாணம் மற்றும் பயன்பாடு தொடர்பில் மக்கள் அறிந்து வைத்துள்ளனரா?
- மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கு உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக உள்ள மூலப்பொருட்கள் எவை?
- குழி மலசல கூடங்கள், தொற்று நீக்கல் பகுதிகள், அகழிகள் என்பவற்றை பயன்படுத்துவதற்கு மக்கள் தயாராக உள்ளனரா?
- தொற்று நீக்கல் பகுதிகள், குழி மலசல கூடங்கள், இன்னபிற என்பவற்றுக்கு போதியளவு இடம் உள்ளதா?

- நிலப்பகுதியின் சரிவு என்ன?
- நிலக்கீழ் நீர் மேடையின் மட்டம் என்ன?
- அதே இடத்தில் மலக்கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு ஏற்றதாக மண்ணின் தன்மை உள்ளதா?
- தற்போதைய மலக்கழிவுப் பொருள் அகற்றல் நடவடிக்கைகள் நோய் நுண்மப் பரப்பிகள் பெருகுவதற்கு வழி வகுக்கின்றதா?
- மலவாய் சுத்தம் செய்வதற்கு மூலப்பொருட்கள் அல்லது நீர் கிடைக்கக் கூடியதாக உள்ளதா? இந்த பொருட்களை மக்கள் பொதுவாக எவ்வாறு அகற்றுவர்?
- மாதவிலக்குடன் சம்பந்தப்பட்ட விடயங்களை பெண்கள் எவ்வாறு கையாளுவர்? இதற்கு பொருத்தமான பொருட்கள் அல்லது வசதிகள் கிடைக்கக் கூடியனவாக உள்ளனவா?
- மாற்றுத் திறனுடைய மக்கள் அல்லது மருத்துவ வசதிகளுக்காக நடமாட முடியாத மக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் தேகாரோக்கிய வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விசேட வசதிகள் அல்லது கருவிகள் உள்ளனவா?
- மதிப்பீடு செய்யப்பட வேண்டிய சுற்றுச் சூழல் சார்ந்த அக்கறைகள் எவை?

5. நோய் நுண்மப் பரப்பிகளால் ஏற்படும் நோய்கள்

- நோய் நுண்மப் பரப்பிகளால் ஏற்படும் நோய் ஆபத்துக்கள் எவை மற்றும் அவை எத்தனை தூரம் ஆபத்தானவை?
- நோய் நுண்மப் பரப்பிகள் மற்றும் நோய் நுண்மப் பரப்பிகளால் ஏற்படும் நோய்கள் சார்ந்த பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் (உதாரணமாக, மலேரியா அசுத்தமான நீரினால் ஏற்படுகின்றது என்ற நம்பிக்கை) ஏதேனும் உள்ளனவா? இந்த நம்பிக்கைகள் அல்லது நடவடிக்கைகள் எவையேனும் பயனுள்ளதாக அல்லது தீங்கு விளைவிக்கக் கூடியதா?
- நோய் நுண்மப் பரப்பிகளால் ஏற்படும் நோயின் ஆபத்துக்கள் அதிகமாயின், ஆபத்தில் உள்ள மக்கள் தனிப்பட்ட பாதுகாப்புக்கான பிரவேசம் உள்ளதா?
- நோய் நுண்மப் பரப்பி பெருகுவதனை தடுப்பதற்கு உள்ளக சுற்றுச் சூழலில் மாற்றங்களை (சாக்கடை வடிகால், அழுத்தித் தேய்த்து சுத்தமாக்கல், கழிவுப் பொருள் அகற்றல், குப்பை அகற்றல், இன்னபிற) உருவாக்குவது சாத்தியமானதா?
- இரசாயன வழிகளின் ஊடாக நோய் நுண்மப் பரப்பிகளை கட்டுப்படுத்துவது அவசியமானதா? நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு மற்றும் இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள நிகழ்ச்சிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் வளங்கள் எவை?

- வீடுகளுக்கு எவ்வாறான தகவல்கள் மற்றும் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்?

6. திண்மக் கழிவு முகாமைத்துவம்

- சிறுகச், சிறுக சேரும் திண்மக் கழிவுகள் பிரச்சினையை தோற்றுவிக்குமா?
- தமது கழிவுகளை மக்கள் எவ்வாறு அப்புறப்படுத்துவர்? எந்த வகையான மற்றும் எந்த அளவு திண்மக் கழிவு உற்பத்தி செய்யப்படுகின்றது?
- உற்பத்தி செய்யப்படும் பகுதியிலேயே திண்மக் கழிவினை அப்புறப்படுத்த முடியுமா அல்லது அவற்றை சேகரித்து வேறிடத்தில் அப்புறப்படுத்தல் வேண்டுமா?
- பாதிக்கப்பட்ட சமூகத்திற்கான பொதுவான திண்மக் கழிவு அப்புறப்படுத்தல் பயிற்சி என்ன (கழிவுக் கிடங்குகள் மற்றும்/அல்லது குழிகள், சேகரிப்பு முறை, குப்பைத் தொட்டிகள், இன்னபிற)?
- மருத்துவ வசதிகள் மற்றும் நடவடிக்கைகளினால் கழிவுகள் உருவாகின்றதா? இதனை எவ்வாறு அப்புறப்படுத்துவது? இதற்கு பொறுப்பானவர் யார்?
- மாதவிலக்கு காலத்தில் பயன்படுத்தும் பொருட்கள் எங்கு அப்புறப்படுத்தப்படுகின்றன?
- தற்போதைய திண்மக் கழிவு அகற்றலானது சுற்றுச் சூழலுக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?

7. சாக்கடை வடிகால்

- சாக்கடை வடிகால் பிரச்சினை ஏதேனும் உள்ளதா, உதாரணம்: குடியிருப்புக்கள் அல்லது மலசல கூடங்களில் வெள்ளப் பெருக்கு, நோய் நுண்மப் பரப்பி பெருகும் இடங்கள், வாழ்விடங்கள் மற்றும் நீர் விநியோகத்தில் கலக்கும் அசுத்தமான நீர்?
- அப்பகுதியில் உள்ள மண்ணின் தன்மை நீர் தேங்குவதற்கு ஏற்றதாக உள்ளதா?
- உள்ளக வெள்ளப் பெருக்கிலிருந்து தமது குடியிருப்புக்கள் மற்றும் மலசல கூடங்களை பாதுகாப்பதற்கான வழிகளை மக்கள் அறிந்துள்ளனரா?
- நீர் நிலைகள் மற்றும் குளிக்கும் பகுதிகளில் நன்றாக வடிகால் அமைப்பு செய்யப்பட்டுள்ளதா?

பிற்சேர்க்கை 2:

நிறுவன மற்றும் வேறு பயன்பாட்டிற்கான ஆகக் குறைந்த நீர் அளவு

மருத்துவ நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள்	வெளிநோயாளர் ஒருவருக்கு 5 லீற்றர்கள் உள்நோயாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40-60 லீற்றர்கள் சலவை தேவை, மலசல கூட பயன்பாடு, இன்னபிறவற்றிற்கு மேலதிக அளவு தேவை
கொலரா நிலையங்கள்	நோயாளி ஒருவருக்கு நாளாந்தம் 60 லீற்றர்கள் பராமரிப்பவர் ஒருவருக்கு நாளாந்தம் 15 லீற்றர்கள்
சிகிச்சை சார் உணவூட்டும் நிலையங்கள்	உள்நோயாளி ஒருவருக்கு நாளாந்தம் 30 லீற்றர்கள் பராமரிப்பவருக்கு நாளாந்தம் 15 லீற்றர்கள்
வரவேற்பறை அல்லது இடைத்தங்கல் நிலையங்கள்	ஒரு நாளுக்கு மேல் தங்கியிருப்பின் நபர் ஒருவருக்கு நாளாந்தம் 15 லீற்றர்கள் நாளில் குறிப்பிட்ட நேரம் மாத்திரம் தங்கியிருப்பின் நபரொருவருக்கு 3 லீற்றர்கள்
பாடசாலைகள்	பருகுவதற்கு மற்றும் கை கழுவுதலுக்கு மாணவர் ஒருவருக்கு நாளாந்தம் 3 லீற்றர்கள் (மலசல கூட பாவனை உள்ளடக்கப்படவில்லை: பொது மலசல கூடங்கள் பகுதியை பார்க்கவும்).
பள்ளி வாசல்கள்	கழுவுதல் மற்றும் பருகுதலுக்கு நபர் ஒருவருக்கு நாளாந்தம் 2-5 லீற்றர்கள்
பொது மலசல கூடங்கள்	கை கழுவுதலுக்கு நபரொருவருக்கு நாளாந்தம் 1-2 லீற்றர்கள் மலசல கூடம் சுத்தமாக்கலுக்கு ஒரு தொகுதிக்கு நாளாந்தம் 2-8 லீற்றர்கள்
பிரஸ் செய்யும் மலசல கூடங்கள் அனைத்திற்கும்	பாரம்பரிய மலசல கூடங்களுக்கு (conventional flushing toilets connected to a sewer) பயன்படுத்துபவர் ஒருவருக்கு நாளாந்தம் 20-40 லீற்றர்கள்
மலவாய் கழுவுதல்	நபரொருவருக்கு நாளாந்தம் 1-2 லீற்றர்கள்
கால்நடைகள்	பெரிய அல்லது மத்திய அளவு விலங்குக்கு நாளாந்தம் 20-30 லீற்றர்கள் சிறிய அளவு விலங்கு ஒன்றுக்கு நாளாந்தம் 5 லீற்றர்கள்

பிற்சேர்க்கை 3:

அனர்த்த சூழ்நிலைகளில் பொது இடங்கள் மற்றும் நிறுவனங்களில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மலசல கூடங்களின் எண்ணிக்கை

நிறுவனம்	குறுகிய காலம்	நீண்ட காலம்
சந்தைப் பகுதிகள்	50 கடைகளுக்கு 1 மலசல கூடம்	20 கடைகளுக்கு 1 மலசல கூடம்
வைத்தியசாலைகள் அல்லது மருத்துவ நிலையங்கள்	20 படுக்கைகள் அல்லது 50 வெளிநோயாளர்களுக்கு 1 மலசல கூடம்	10 படுக்கைகள் அல்லது 20 வெளிநோயாளர்களுக்கு 1 மலசல கூடம்
உணவூட்டும் நிலையங்கள்	50 வயதானவர்களுக்கு 1 மலசல கூடம . 20 சிறுவர்களுக்கு 1 மலசல கூடம்	20 வயதானவர்களுக்கு 1 மலசல கூடம் 10 சிறுவர்களுக்கு 1 மலசல கூடம்
வரவேற்பறை அல்லது இடைத்தங்கல் நிலையங்கள்	50 நபருக்கு 1 மலசல கூடம்: 3:1 பெண்களுக்கு ஆண்	
பாடசாலைகள்	30 மாணவிகளுக்கு 1 மலசல கூடம் 60 மாணவர்களுக்கு 1 மலசல கூடம்	30 மாணவிகளுக்கு 1 மலசல கூடம் 60 மாணவர்களுக்கு 1 மலசல கூடம்
அலுவலகங்கள்		20 ஊழியர்களுக்கு 1 மலசல கூடம்

மூலம்: Harvey, Baghri மற்றும் Reedஇலிருந்து உள்வாங்கப்பட்டது (2002).

பிற்சேர்க்கை 4:

நீர் மற்றும் கழிவுப் பொருள் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் பரவும் முறை பொறியமைப்புக்கள்

நீரில் மூலம் உருவாகும் அல்லது நீரில் உருவாகும்	கொலரா, ஷிகெல்லோசிஸ், வயிற்றுப்போக்கு, சால்மானெல்லோசிஸ், இன்னபிற குடற் காய்ச்சல், இணை குடற் காய்ச்சல், இன்னபிற அமீபிய வயிற்றுக் கடுப்பு, ஜியார்டியா நோய் ஈரல் அழற்சி, இளம்பிள்ளைவாதம், இளம் குழந்தைகளில் கழிச்சல், வயிற்றுப் போக்கு	கழிவு - வாய்சார்ந்த நுண்ணுயிர் கழிவு- வாய் சாராத நுண்ணுயிர்	நீர் மாசடைதல் மோசமான தேகாரோக்கியம் மோசமான தனிப்பட்ட போஷாக்கு பயிர் மாசடைதல்
நீரில் உருவாகும் அல்லது நீர்த் தட்டுப்பாடு	தோல் மற்றும் கண் பாதிப்பு பேன் மூலம் உருவாகும் டை∴ பாசு பேன் மூலம் உருவாகும் அவ்வப்போது ஏற்படும் காய்ச்சல்		நீர்ப் பற்றாக்குறை மோசமான தனிப்பட்ட போஷாக்கு
மலத்தில் காணப்படும் ஹெல்மின்தஸ் கிருமிகள்	வட்டப்புழு, கொழுக்கிப் புழு, வாற்புழு முதலியவை	நிலத்தில் காணப்படும் ஹெல்மின்தஸ் கிருமிகள்	திறந்த வெளியில் மலம் கழித்தல் நிலம் மாசடைதல்
மாட்டிறைச்சி மற்றும் பன்றியிறைச்சி ஆகியவற்றில் காணப்படும் நாடாப் புழுக்கள்	டெனியாசிஸ்	விலங்கிலிருந்து மனிதனுக்கு நோய் கடத்தப்படல்	முழுமையாக சமைக்கப்படாத இறைச்சி நிலம் மாசடைதல்
நீரில் பரவும் கிருமிகள்	கிஸ்டோசோமியாசிஸ், கினியாப் புழு குளோனோர் கியாசிஸ்	தொற்றுக்குள்ளான நீரில் நீண்ட காலம் தங்கியிருத்தல்	நீர் மாசடைதல்
நீரில் பரவும் நோய் நுண்மப் பரப்பிகள்	மலேரியா, டெங்கு, உறக்கப் பிரச்சினை, பிலாரியாசிஸ், இன்னபிற	நுளம்புகளினாலும், பூச்சிகளினாலும் கடிக்கப்படல்	நீருக்கு அண்மித்த பகுதிகளில் கடித்தல்
மலம் சம்பந்தப்பட்ட நோய் நுண்மப் பரப்பிகள்	வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு	ஈக்கள் மற்றும் கரப்பான் பூச்சிகளினால் பரவுதல்	அசுத்தமான சுற்றுச் சூழல்

பிற்சேர்க்கை 5

கொலரா சிகிச்சை நிலையங்களில் (CTC) இருக்க வேண்டிய ஆகக் குறைந்த சுகாதார, தேகாரோக்கிய மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள்

அனைத்து சுகாதார வசதிகள் மற்றும் CTC என்பன பின்பற்ற வேண்டிய அத்தியாவசியமான கோட்பாடுகள்:

1. தீவிரமான சம்பவங்களை தனித்து வைத்தல்
2. கழிவுப் பொருட்கள் அனைத்தையும் உள்ளடக்கல் (எச்சங்கள் மற்றும் வாந்தி)
3. ஒரு நோயாளிக்கு ஒரு கொள்கலனை வைத்திருக்கவும்
4. குளோரின் உள்ளடக்கப்பட்ட நீரினால் கைகளை கழுவுதல்
5. அனைத்து தரைகளும் கழுவப்படக் கூடியனவாக இருத்தல் வேண்டும்.
6. நிலையத்தை விட்டு வெளியேறும் போது பாதங்களை தொற்று நீக்கவும்
7. நிலையத்தை விட்டுச் செல்லும் போது தொற்றுக்கு உள்ளான மக்களின் ஆடைகளில் தொற்று நீக்கவும் (அவித்தல் அல்லது தொற்று நீக்கல் மூலம்)
8. தரைகள் மற்றும் நிலையத்தின் அனைத்துப் பகுதிகளையும் தொடர்ச்சியாக சுத்தம் செய்தல்
9. நோயாளிகள் மற்றும் பராமரிப்பவர்களுக்கு தனியான மலசல கூடங்கள் மற்றும் குளிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படல்
10. நிலையத்திற்குள் உணவு தயாரிக்கவும். வெளியில் இருந்து கொண்டு வரப்பட்டிருந்தால், கொள்கலனிலிருந்து உணவு வேறு பாத்திரத்துக்கு நுழைவாயிலில் வைத்து மாற்றப்படல் வேண்டும். இதன் மூலம் நிலையத்திற்கு வெளியே கொலராவை பரப்பக் கூடிய நுண்ணுயிர்கள் செல்வதனை தடுக்க முடியும்.
11. நோயாளிகளின் குடும்பங்கள் மற்றும் உறவினர் சார்ந்த தொடர் கவனிப்பை முன்னெடுக்கவும். அவர்களுக்கு தொற்று ஏற்படவில்லை என்பதனை உறுதி செய்யவும். வீட்டில் தொற்று நீக்கம் செய்து, சுகாதாரம் சார்ந்த தகவல்களை வழங்கவும்.
12. பொது போக்குவரத்தின் மூலம் மக்கள் வந்திருப்பின், வாகனத்தில் தொற்று நீக்கவும்
13. தனிமைப்படுத்தப்பட்ட முகாம் பகுதியில் மழை மற்றும் கழிவு நீர் தேங்குவதனை தவிர்த்தல்
14. தனிமைப்படுத்தப்பட்ட முகாமில் இருந்து கழிவுகளை தனியாக அப்புறப்படுத்தல்

CTCஇற்கான குளோரின் கரைசல்

வேறுபட்ட தேவைகளுக்கு குளோரின் %	2% கரைசல்	0.2% கரைசல்	0.05% கரைசல்
	குப்பைகள் மற்றும் இறந்த உடல்களின் கழிவுகள்	தரைப் பொருட்கள் அல்லது படுக்கைகள், நடைபாதைகள் உடைகள்	கைகள் தோல்

குறிப்பு: ஒளி மற்றும் வெப்பம் காரணமாக கரைசலின் வீரியம் குறையும் என்பதனால், நாளாந்தம் கரைசல் தயாரிக்கப்படல் வேண்டும்.

பிற்சேர்க்கை 6

குடும்பங்களின் நீர் பராமரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் தீர்மான மரம்

வளமானது அசுத்தமாக்கப்பட்டுள்ளதா?

- **ஆம்** → மனிதநேய மறுசீரமைப்பில் நீங்கள் வர்த்தக நீர் சுத்திகரிப்பு பொருட்களை பயன்படுத்துகின்றீர்களா?
- **இல்லை** → பாதுகாப்பான நீர் களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளல்

மனிதநேய மறுசீரமைப்பில் நீங்கள் வர்த்தக நீர் சுத்திகரிப்பு பொருட்களை பயன்படுத்துகின்றீர்களா?

- **இல்லை** → முன் சுத்திகரிப்பு: நீர் கலங்கலாக அல்லது மூட்டமாக உள்ளதா?
- **ஆம்** → நீர் கலங்கலாக உள்ளதா?

முன் சுத்திகரிப்பு: நீர் கலங்கலாக அல்லது மூட்டமாக உள்ளதா?

- **இல்லை** → தொற்று நீக்கல்: விறகு அல்லது வேறு சூடாக்கும் வளம் தயாராக உள்ளதா?
- **ஆம்** → வடிகட்டல், படிவிப்பு மற்றும் இறுத்தல், மூன்று பானை முறை அல்லது தொடர்ச்சியான சுத்தமாக்கலுடன் எளிமையான வடிகட்டல் முறையை மேம்படுத்தல் → தொற்று நீக்கல்: விறகு அல்லது வேறு சூடாக்கும் வளம் தயாராக உள்ளதா?

நீர் கலங்கலாக உள்ளதா?

- **ஆம்** → திரட்சியாக்கல் அல்லது தொற்று நீக்கலை மேம்படுத்தல்: அல்லது எளிமையான வடிகட்டல், படிவிப்பு மற்றும் இறுத்தல் அல்லது மூன்று பானைகள் முறையை மேம்படுத்தல் இரண்டு மடங்கு குளோரினைத் தொடர்ந்து.பாதுகாப்பான நீர் களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளுதலை மேம்படுத்தல்
- **இல்லை** → நீர் மூட்டமாக உள்ளதா?

தொற்று நீக்கல்: விறகு அல்லது வேறு சூடாக்கும் வளம் தயாராக உள்ளதா?

- **இல்லை** → சூரிய ஒளி தொற்று நீக்கலை மேம்படுத்தல். அத்துடன், பாதுகாப்பான நீர் களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளுதலை மேம்படுத்தல்
- **ஆம்** → கொதிக்க வைத்தல் பாதுகாப்பான நீர் களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளுதலை மேம்படுத்தல். அத்துடன், பொறுப்பான விறகு சேமித்தல் மற்றும் மீண்டும் காடாக்கலை மேம்படுத்தல்

நீர் மூட்டமாக உள்ளதா?

- **ஆம்** → வடிகட்டலை மேம்படுத்தல் (biosand, colloidal silver ceramic filters) அல்லது இரண்டு மடங்கு குளோரின் பயன்படுத்தல். அத்துடன் பாதுகாப்பான நீர் களஞ்சியப்படுத்தல் மற்றும்
- **இல்லை** → வடிகட்டலை மேம்படுத்தல் (biosand, colloidal silver ceramic filters) அல்லது சாதாரண அளவு குளோரின் பயன்படுத்தல். அத்துடன் பாதுகாப்பான நீர் களஞ்சியப்படுத்தல்

IFRCஇன் அவசர காலங்களில் குடும்பங்களின் நீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான களஞ்சியப்படுத்தல் தொடர்பான கையேடு 2008 இல் இருந்து பெறப்பட்டது.

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

குறிப்புதவிகள்

சர்வதேச சட்ட கருவிகள்

The Right to Water (articles 11 and 12 of the International Covenant on Economic, Social and Cultural Rights), CESCR, General Comment 15, 26 November 2002. UN Doc. E/C.12/2002/11. Committee on Economic, Social and Cultural Rights.

பொதுவானவை

Davis, J and Lambert, R (2002), Engineering in Emergencies: A Practical Guide for Relief Workers. Second Edition. RedR/IT Publications. London.

Inter-Agency Network for Education in Emergencies (INEE) (2010), Minimum Standards for Education in Emergencies, Chronic Crises and Early Reconstruction. New York. www.ineesite.org

Médecins sans Frontières (1994), Public Health Engineering in Emergency Situations. First Edition. Paris.

Walden, VM, O'Reilly, M and Yetter, M (2007), Humanitarian Programmes and HIV and AIDS; A practical approach to mainstreaming. Oxfam GB. Oxford.

www.oxfam.org.uk/what_we_do/emergencies/how_we_work/resources/health.htm

துப்பரவு சார்ந்த ஆய்வுகள்

British Geological Survey (2001), ARGOSS manual. London. www.bgs.ac.uk

பால்நிலை

Inter-Agency Standing Committee (IASC) (no date), Gender and Water, Sanitation and Hygiene in Emergencies. IASC Gender Handbook. Geneva.

www.humanitarianreform.org/humanitarianreform/Portals/1/cluster%20approach%20page/clusters%20pages/WASH/Gender%20Handbook_Wash.pdf

சுகாதார மேம்பாடு

Almedom, A, Blumenthal, U and Manderson, L (1997), Hygiene Evaluation Procedures: Approaches and Methods for Assessing Water- and Sanitation-Related Hygiene Practices. The International Foundation for Developing Countries. Practical Action Publishing. UK.

Ferron, S, Morgan, J and O'Reilly, M (2007), Hygiene Promotion: A Practical Manual for Relief and Development. Practical Action Publishing. UK.

Humanitarian Reform Support Unit. WASH Cluster Hygiene Promotion Project. www.humanitarianreform.org/humanitarianreform/Default.aspx?tabid=160

நீரின் விநியோகம்

Action against Hunger (2006), Water, Sanitation and Hygiene for Populations at Risk. Paris. www.actioncontrelafaim.org/english/

House, S and Reed, R (1997), Emergency Water Sources: Guidelines for Selection and Treatment. Water, Engineering and Development Centre (WEDC), Loughborough University. UK.

உணவுப் பாதுகாப்புக்கான நீர் தேவைகள்

Food and Agriculture Organization of the United Nations. FAO Water: www.fao.org/nr/water/index.html

கால்நடைகளின் நீர் தேவைகள்

LEGS (2009), Livestock Emergency Guidelines and Standards (LEGS). Practical Action Publishing. UK. www.livestock-emergency.net/userfiles/file/legs.pdf

நீரின் தரம்

World Health Organization (WHO) (2003), Guidelines for Drinking-Water Quality. Third Edition. Geneva.

www.who.int/water_sanitation_health/dwq/guidelines2/en/

நீர் பாதுகாப்பு திட்டம்

WHO (2005), Water safety plans: managing drinking-water quality from catchment to consumer.

www.who.int/water_sanitation_health/dwq/wsp0506/en/

மலக்கழிவு வெளியேற்றல்

Harvey, P (2007), Excreta Disposal in Emergency, An inter-agency manual.

WEDC, Loughborough University, UK. http://wedc.lboro.ac.uk/

நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு

Hunter, P (1997), Waterborne Disease: Epidemiology and Ecology. John Wiley & Sons Ltd. Chichester, UK.

Lacarin, CJ and Reed, RA (1999), Emergency Vector Control Using Chemicals. WEDC, Loughborough University, UK.

Thomson, M (1995), Disease Prevention Through Vector Control: Guidelines for Relief Organisations. Oxfam GB.

திண்மக் கழிவு

Centre for appropriate technology (2003), Design of landfill sites. www.lifewater.org

International Solid Waste Association: www.iswa.org

இறந்த உடல்களை முகாமை செய்தல்

WHO (2009), Disposal of dead bodies in emergency conditions. Technical Note for Emergencies No. 8. Geneva. http://wedc.lboro.ac.uk/resources/who_notes/WHO_TN_08_Disposal_of_dead_bodies.pdf

மருத்துவக் கழிவு

Prüss, A, Giroult, E and Rushbrook, P (eds) (1999), Safe Management of Health-Care Wastes. (Currently under review.) WHO. Geneva.

சாக்கடை வடிகால்

Environmental Protection Agency (EPA) (1980), Design Manual: On-Site Wastewater Treatment and Disposal Systems, Report EPA-600/2-78-173. Cincinnati, USA.

மேலதிக வாசிப்புக்கானவை

பொதுவானவை

WHO and Pan American Health Organization (PAHO), Health Library for Disasters: www.helid.desastres.net/en

WHO (2002), Environmental health in emergencies and disasters. Geneva.

மலக்கழிவு வெளியேற்றல்

Harvey, PA, Baghri, S and Reed, RA (2002), Emergency Sanitation, Assessment and Programme Design. WEDC, Loughborough University, UK.

நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு

UNHCR (1997), Vector and Pest Control in Refugee Situations. Geneva.

Warrell, D and Gilles, H (eds) (2002), Essential Malariology. Fourth Edition. Arnold. London.

WHO, Chemical methods for the control of vectors and pests of public health importance. www.who.int.

இறந்த உடல்களை முகாமை செய்தல்

PAHO and WHO (2004), Management of Dead Bodies in Disaster Situations.Disaster Manuals and Guidelines Series, No 5. Washington DC.

www.paho.org/English/DD/PED/ManejoCadaveres.htm

மருத்துவக் கழிவு

WHO (2000), Aide-Memoire: Safe Health-Care Waste Management. Geneva.

WHO, Healthcare waste management: www.healthcarewaste.org

WHO, Injection safety: www.injectionsafety.org

மாற்றுத் திறன்

Jones, H and Reed, R (2005), Water and sanitation for disabled people and other vulnerable groups: designing services to improve accessibility. WEDC, Loughborough University, UK. http://wedc.lboro.ac.uk/wsdp

Oxfam GB (2007), Excreta disposal for physically vulnerable people in emergencies. Technical Briefing Note 1. Oxfam, UK. www.oxfam.org.uk/resources/learning/humanitarian/downloads/TBN1_disability.pdf

Oxfam GB (2007), Vulnerability and socio-cultural considerations for PHE in emergencies Technical Briefing Note 2. Oxfam, UK. www.oxfam.org.uk/resources/learning/humanitarian/downloads/TBN2_watsan_sociocultural.pdf

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு என்பவற்றில் அடிப்படை தரங்கள்

இந்த அத்தியாயத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

இந்த அத்தியாயமானது அடிப்படைத் தரங்களின் நான்கு தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு

குழந்தை மற்றும் இளம் சிறார்களுக்கு உணவூட்டல்

தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு முகாமைத்துவம்

உணவுப் பாதுகாப்பு

நான்காவது பிரிவான உணவுப் பாதுகாப்பு என்பது மேலும் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது: உணவுப் பாதுகாப்பு-உணவுப் பரிமாற்றங்கள், உணவுப் பாதுகாப்பு-பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள், மற்றும் உணவுப் பாதுகாப்பு-வாழ்வாதாரம். பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள் இந்த அத்தியாயத்துடன் கொள்கை மாறாத வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.அனர்த்தத்தின் பின்னரான மனிதநேய பணிகள் தொடர்பில் தகவல் வழங்குவதனை பிரதான எண்ணமாக கொண்டுள்ள போதிலும், அனர்த்த முன்னாயத்தம் மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளை நோக்கிய நிலைமாற்றம் என்பவற்றின் போது அடிப்படைத் தரங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பிரிவும் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது:

- **அடிப்படைத் தரங்கள்:** இவை தன்மை சார்ந்த தரம் அடிப்படையிலானவை. அத்துடன், உணவு மற்றும் போஷாக்கு தொடர்பிலான மனிதநேய மறுசீரமைப்பின் போது எட்டப்பட வேண்டிய அடிப்படை மட்டங்களை குறிக்கின்றன
- **பிரதான நடவடிக்கைகள்:** தரங்களை எட்டுவதற்காக ஆலோசிக்கப்பட்ட நடவடிக்கைகளும் மற்றும் உள்ளீடுகளும் இதில் அடங்குகின்றன.
- **பிரதான குறிகாட்டிகள்:** தரங்கள் எட்டப்பட்டுள்ளனவா என்பதனை வெளிப்படுத்தும் அடையாளங்களாக இவை இருக்கும். பிரதான நடவடிக்கைகளின் செயற்பாடுகள் மற்றும் பெறுபே-றுகளை அளப்பதற்கான மற்றும் தொடர்பு கொள்வதற்கான வழி வகைகளை இவை வழங்கும். இவை அடிப்படை தரங்களுடன் தொடர்புபட்டவை. பிரதான நடவடிக்கையுடன் தொடர்புடையவை அல்ல.
- **வழிகாட்டல் குறிப்புக்கள்::** வேறுபட்ட சூழ்நிலைகளில் அடிப்படை தரங்கள், பிரதான நடவடிக்கைகள் மற்றும் பிரதான குறிகாட்டிகளை பிரயோகிக்கும் போது அவதானிக்க வேண்டிய முக்கியமான குறிப்புக்களை இது உள்ளடக்கியுள்ளது. முன்னுரிமை வழங்க வேண்டிய விடயங்களில் பிரயோக ரீதியான சிக்கல்கள், மட்டக்குறிகள் அல்லது ஆலோசனைகள் என்பவற்றை எதிர்கொள்வதற்கான வழிகாட்டல்களை இவை வழங்குகின்றன. தரங்கள், நடவடிக்கைகள் அல்லது குறிகாட்டிகளுடன் தொடர்புடைய சிக்கலான பிரச்சினைகள் என்பனவும் இதில் உள்ளடங்குகின்றன. அத்துடன், தற்போதைய அறிவில் தடுமாற்றம், சிக்கல்கள் அல்லது இடைவெளிகளையும் இவை விளக்குகின்றன.

தேவையான குறிகாட்டிகள் மற்றும் நடவடிக்கைகள் எட்டப்படவில்லை எனின், பாதிக்கப்பட்ட மக்கள் மீது ஏற்படும் மோசமான வெளியீடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு மற்றும் பொருத்தமான தணித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். மதிப்பீடுகளுக்கான சரிபார்த்தல் பட்டியல், தீவிரமான போஷாக்கின்மையை அளவீடு செய்வதற்கான வழிகாட்டல்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு மற்றும் போஷாக்கு தேவைகள் தொடர்பில் பொது மக்கள் உடல்நலனில் ஏற்படும் தாக்கம் என்பனவற்றை தீர்மானித்தல் ஆகியன பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன. பொதுவான விடயங்கள் மற்றும் விசேடமான தொழில்நுட்ப விடயங்கள் ஆகிய இரண்டும் சார்ந்த தகவல்களுக்கான மூலங்களை குறிப்பிடும் தெரிவு செய்யப்பட்ட குறிப்புதவிகள் பட்டியலும், மூலாதாரம் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை என பிரிக்கப்பட்ட தகவல்களும் இணைக்கப்பட்டுள்ளன

.

உள்ளடக்கம்

அறிமுகம் 143

1. உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு 150

2. குழந்தை மற்றும் இளம் சிறார்களுக்கு உணவூட்டல் 158

3. தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு முகாமைத்துவம் 164

4. உணவுப் பாதுகாப்பு 175

4.1. உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் 179

4.2. உணவுப் பாதுகாப்பு - பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் 199

4.3. உணவுப் பாதுகாப்பு – வாழ்வாதாரம் 203

பிற்சேர்க்கை 1: உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள் 214

பிற்சேர்க்கை 2: விதைப் பாதுகாப்பு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள் 216

பிற்சேர்க்கை 3: போஷாக்கு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள் 218

பிற்சேர்க்கை 4: தீவிரமான போஷாக்கின்மையை அளவிடுதல் . . . 220

பிற்சேர்க்கை 5: :நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் 224

பிற்சேர்க்கை 6: போஷாக்குத் தேவைகள் 227

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை 231



பிற்சேர்க்கை 1: உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள்
பிற்சேர்க்கை 2: விதைப் பாதுகாப்பு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள்
பிற்சேர்க்கை 3: போஷாக்கு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள்
பிற்சேர்க்கை 4: தீவிரமான போஷாக்கின்மையை அளவிடுதல்
பிற்சேர்க்கை 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல்
பிற்சேர்க்கை 6: போஷாக்குத் தேவைகள்

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

அறிமுகம்

மனிதநேய சாசனம் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கான தொடர்புகள்

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு என்பவற்றிற்கான அடிப்படைத் தரங்கள் என்பவற்றில் அடிப்படைத் தரங்கள் என்பது மனிதநேய நிறுவனங்களின் பகிரப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பற்றுறுதிகளின் பிரயோக வெளிப்பாடாக உள்ளது. மனிதநேய நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொதுவான கோட்பாடுகள் மனிதநேய சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதநேய கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் சர்வதேச சட்டத்தில் பிரதிபலிக்கின்ற வகையில் இந்த கோட்பாடுகள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பு மற்றும் காவலுக்கான உரிமை மற்றும் மனிதநேய உதவிகளை அடிப்படை தேவையின் பிரகாரம் பெறுவதற்கான உரிமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மனிதநேய சாசனத்தை குறிப்பிடும் பிரதான சட்ட மற்றும் கொள்கை ஆவணங்களின் பட்டியல் பிற்சேர்க்கை 1 இல் **(பக்கம்**) மனிதநேய பணியாளர்களுக்கான மேலதிக வர்ணனைகளுடன் தரப்பட்டுள்ளது.மேலே குறிப்பிடப்பட்ட உரிமைகள் தொடர்பில் பிரதான பொறுப்புக்களை உடையவர்களாக அரசுகள் இருக்கின்ற போதிலும், மனிதநேய நிறுவனங்களுக்கும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இந்த உரிமைகளை தொடர்ச்சியாக கிடைக்க வேண்டியதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது. இந்த பொதுவான உரிமைகள் மேலும் முக்கியமான உரிமைத் தகுதிகளை குறிப்பிடுகின்றன. மிக முக்கியமான தரங்களின் அடிப்படையை உருவாக்கும் பங்குபற்றல், தகவல் தெரிவித்தல் மற்றும் பாரபட்சமின்மை தொடர்பிலான உரிமைகளை இது உள்ளடக்கியுள்ளது. அத்துடன், இவற்றையும், இந்த கையேட்டில் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தரங்களையும் சுட்டிக்காட்டும் நீர், உணவு, உறைவிடம் மற்றும் சுகாதாரம் என்பன சார்ந்த உரிமைகளும் உள்ளடங்கியுள்ளன.

போதிய உணவுக்கான உரிமை அனைவருக்கும் உண்டு. இந்த உரிமையானது சர்வதேச சட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதில் பட்டினியற்று இருப்பதற்கான உரிமையும் உள்ளடங்குகின்றது. தனிநபர்கள் அல்லது குழுக்கள் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள காரணங்களினால், போதிய உணவுக்கான உரிமையை அனுபவிப்பதற்கு இயலாது போகும் சந்தர்ப்பத்தில், அந்த உரிமை அவர்களை சென்றடைவதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. உணவுக்கான உரிமை பின்வருவம் பொறுப்புக்களை அரசின் மீது சுமத்துகின்றது:

- போதிய உணவுக்காக தற்போதுள்ள பிரவேசத்தை மதித்தல் என்பதன் மூலம், இவ்வாறான பிரவேசத்தினை தடை செய்யக் கூடிய விளைவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அரச தரப்புக்கள் முன்னெடுக்கக் கூடாது என்பதனை குறிப்பிடுகின்றது.
- “பாதுகாப்பதற்கு” என்பதன் மூலம், தனிநபர்களின் போதிய உணவுக்கான பிரவேசத்திற்கு வர்த்தகங்கள் அல்லது தனிநபர்கள் தடையாக இல்லாது

இருப்பதனை அரசாங்கம் உறுதி செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை குறிப்பிடுகின்றது.

- ”பூர்த்தி செய்வதற்கு” (வசதியளித்தல்) என்பதன் மூலம், உணவுப் பாதுகாப்பு உள்ளடங்கலாக மக்களின் வாழ்வாதாரங்களை உறுதி செய்வதற்கான வளங்கள் மற்றும் வழி வகைகளை பெற்றுக் கொள்வதற்கான மற்றும் பயன்படுத்துவதற்கான அவர்களின் திறனை வலுப்படுத்தல் சார்ந்த நடவடிக்கைகளில் செயற்றிறனுடன் அரசாங்கம் ஈடுபட வேண்டியது அவசியம் என குறிப்பிடுகின்றது.

அனர்த்தங்கள் எனும் போது, தேவையுள்ளவர்களுக்கு அரசு உணவு வழங்க வேண்டும் அல்லது தம்மிடம் உள்ள வளங்கள் போதியதாக இல்லாத சந்தர்ப்பங்களில் சர்வதேசத்திடமிருந்து உதவி கோரலாம். அத்துடன், சர்வதேச உதவிக்கான பாதுகாப்பான மற்றும் தடையற்ற பிரவேசத்திற்கும் அவர்கள் வசதியளிக்க வேண்டும். ஆயுத முரண்பாடு மற்றும் தொழில் போன்ற சூழ்நிலைகளில் உணவு பிரவேசத்திற்கான உரிமை ஜெனீவா பிரகடனம் மற்றும் மேலதிக நெறிமுறைகளில் உள்ளடங்கியுள்ளது. யுத்த முறையாகவும் மற்றும் விவசாயப் பகுதிகளின் உணவு உற்பத்தியின் மீது, பயிர்களின் மீது கால்நடைகளின் மீது, குடிநீர் நிலைகளில் மற்றும் விநியோகங்களில் மற்றும் நீர்ப்பாசன குளங்களின் மீது தாக்குதல் நடத்தல், அழித்தல், அப்புறப்படுத்தல் அல்லது உணவுப் பயன்பாட்டுக்கு ஏற்றதல்லாத பொருட்களை விநியோகித்தல் போன்றவற்றின் மூலம் பொது மக்களை பட்டினிக்கு உள்ளாக்கல் தவிர்க்கப்படல் வேண்டும். ஒரு அரசு இன்னொரு அரசினை பலவந்தமாக அபகரிக்கும் போது, பொது மக்களுக்கு போதிய உணவினை உறுதி செய்தல் மற்றும் கைப்பற்றப்பட்ட பகுதியில் போதிய வளங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் வேறிடங்களில் இருந்து கொண்டு வருவதனை உறுதி செய்தல் ஆகிய நடவடிக்கைகள் ஊடாக கைப்பற்றும் அதிகாரத்தின் கடமைகளை சர்வதேச மனிதநேய சட்டம் வலியுறுத்துகின்றது. அகதிகளும் மற்றும் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்த மக்களும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் போதிய உணவுக்கான பிரவேசத்தினை கொண்டுள்ளமையை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு முன்னெடுக்க வேண்டும். இந்த அத்தியாயத்தில் உள்ள அடிப்படைத் தரங்கள் உணவுக்கான உரிமையின் மிகவும் முக்கியமான உள்ளடக்கத்தினை பிரதிபலிப்பதுடன், இந்த உரிமையை உலகளாவிய ரீதியில் யதார்த்தமாக்குவதற்கான நடவடிக்கைக்கும் பங்களிக்கின்றன.

அனர்த்த சந்தர்ப்பங்களில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு என்பவற்றிற்கான முக்கியத்துவம்

உணவுக்கான பிரவேசமும் மற்றும் போதிய போஷாக்கு நிலையினை பேணுதலும் அனர்த்த காலங்களில் மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் சிக்கலான அம்சங்களாக உள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் வழமையாகவே அனர்த்தம் ஏற்பட்டவுடன் ஏற்கனவே நீண்ட கால ரீதியில் போஷாக்கு அற்றவர்களாக இருந்திருப்பர். போஷாக்கு குறைபாடு என்பது மிகவும் மோசமான பொது மக்கள் உடல் நலன் சார்ந்த பிரச்சினையாக இருப்பதுடன், நேரடியாக அல்லது மறைமுகமாக மரணத்தை விளைவிக்கக் கூடிய முன்னணி காரணமாகவும் உள்ளது. போஷாக்கு குறைப்பாட்டுக்கான காரணங்களைப் பார்க்கும் போது, அவை சிக்கல் நிறைந்தவை. கீழே தரப்பட்டுள்ள கருத்துரு சட்டகமானது, போஷாக்கு குறைபாட்டுக்கு பங்களிக்கும் காரணிகளுக்கு இடையிலான தொடர்புகளை வெளிப்படுத்தும் பகுப்பாய்வு கருவியாகும். போஷாக்கு குறைபாட்டிற்கான உடனடியான காரணியாக இருக்கக் கூடியது நோய் மற்றும்/அல்லது

போதிய உணவினை உட்கொள்ளாமையாகும். வறுமை, குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பின்மை, குடும்பம் அல்லது சமுதாய மட்டத்தில் போதிய பராமரிப்பு பழக்கங்கள் இன்மை, மோசமான நீர், சுகாதாரம் மற்றும் தேகாரோக்கியம் மற்றும் சுகாதார பராமரிப்புக்கு போதிய பிரவேசமின்மை என்பவற்றின் காரணமாகவே இது ஏற்படும். சூறாவளிகள், நில அதிர்வுகள், வெள்ளப்பெருக்குகள், முரண்பாடு மற்றும் வரட்சி போன்ற அனர்த்தங்கள் என்பன போஷாக்கு குறைப்பாட்டிற்கு அடிப்படையான காரணங்களில் நேரடியாக தாக்கம் செலுத்தும். குடும்பம் ஒன்றின் அல்லது சமுதாயத்தின் பலவீனம் என்பது இவ்வாறான அதிர்ச்சிகளை எதிர்கொள்வதற்கான அதன் இயலுமையை தீர்மானிக்கும். இணைந்துள்ள சவால்களை சமாளிப்பதற்கான இயலுமையானது, குடும்பம் அல்லது சமுதாயத்தின் சிறப்பியல்புகளின் அடிப்படையிலேயே, விசேடமாக அதன் சொத்துக்கள் மற்றும் அது பின்பற்றும் எதிர்கொள்ளல் மற்றும் வாழ்வாதார மூலோபாயங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

இந்த அத்தியாயத்தில் பின்வரும் வரைவிலக்கணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன:

- அனைத்து மக்களும், எல்லா சந்தர்ப்பங்களிலும், போதிய பௌதீக, சமூக மற்றும் பொருளாதார பிரவேசம், தமது சீரான உணவுப் பழக்கத் தேவைகளை எட்டக் கூடிய பாதுகாப்பான மற்றும் போஷாக்கான உணவு மற்றும் செயற்றிறன் மிக்க மற்றும் ஆராக்கியமான வாழ்க்கைக்கான உணவு முன்னுரிமைகள் கிடைக்கக் கூடியதாக இருப்பதனை *உணவுப் பாதுகாப்பு* என்பது விளக்குகின்றது
  - ***கிடைக்கக் கூடிய தன்மை*** என்பது அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் உணவு விநியோகத்தின் எண்ணிக்கை, தரம் மற்றும் பருவம் என்பவற்றை விளக்குகின்றது. அதில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் வளங்கள் (விவசாயம், கால்நடை, மீன்பிடி, காட்டு உணவுகள்) மற்றும் வர்த்தகர்களால் இறக்குமதி செய்யப்படும் உணவுகள் (அரசாங்கம் மற்றும் நிறுவனங்களின் இடையீடுகள் கிடைக்கக் கூடிய தன்மையில் தாக்கத்தை ஏற்படும்) என்பன இதில் உள்ளடங்குகின்றன. உள்ளூர் சந்தைகள் மக்களுக்கு தேவையான உணவினை விநியோகம் செய்யக் கூடியதாக இருப்பது கிடைக்கக் கூடியத் தன்மையை நிர்ணயிக்கும் பிரதான அம்சமாகும்.
  - ***பிரவேசம்*** என்பது குடும்பம் ஒன்று தமது குடும்ப உறுப்பினர்கள் அனைவரதும் போஷாக்குத் தேவைகளை திருப்தி செய்வதற்கு பாதுகாப்பான வகையில் போதிய உணவை பெறுவதற்கான இயலுமையை குறிக்கின்றது. வீட்டு உற்பத்திகள் மற்றும் சேமிப்புக்கள், கொள்வனவுகள், பண்டமாற்று, அன்பளிப்புக்கள், கடன் வாங்கல் அல்லது உணவு, பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் என்பவற்றின் ஊடாக கிடைக்கக் கூடியதாக உள்ள உணவினைப் பெற்றுக் கொள்வதற்கான குடும்பத்தின் இயலுமையை அது அளவிடுகின்றது.
  - ***பயன்படுத்தல்*** என்பது, சேமித்தல், பதனிடல் மற்றும் தயாரித்தல் என்பன உள்ளடங்கலாக குடும்பம் ஒன்று தமக்கு கிடைக்கும் உணவினைப் பயன்படுத்துதல் மற்றும் குடும்பத்திற்குள் விநியோகித்தல் என்பவற்றை விளக்குகின்றது. அது நோய் மற்றும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட போஷாக்கின்மையை உள்ளெடுப்பதற்கான தனிநபரின் இயலுமையையும் குறிக்கின்றது.
- வாழ்வதற்காகவும் மற்றும் எதிர்கால நலனுக்காகவும் குடும்பத்தினால் பயன்படுத்தப்படும் இயலுமைகள், சொத்துக்கள் (இயற்கை, மூலப்பொருட்கள் மற்றும் சமூக வளங்கள் உள்ளடங்கலாக) மற்றும் நடவடிக்கைகளை வாழ்வாதாரங்கள் உள்ளடக்கியுள்ளது. வாழ்வாதார மூலோபாயங்கள் என்பது வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் வேறு *வாழ்வாதார* இலக்குகளை

போஷாக்கின்மையின் விளைவுகளின் கருத்தாக்க சட்டகம்



அடைவதற்கும் மக்கள் பயன்படுத்தும் பிரயோக ரீதியான வழி வகைகள் அல்லது நடவடிக்கைகள் ஆகும். உணவுப் பாதுகாப்பின்மையினால் நிர்ப்பந்திக்கப்படும் தற்காலிக பிரதிபலிப்புக்களாக எதிர்கொள்ளும் மூலோபாயங்கள் விளக்கப்படும். அதிர்ச்சிகளை எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கும் போது, அதில் மீளக் கூடியதாக இருக்கும் போது, மற்றும் தமது இயலுமைகள் மற்றும் உற்பத்தித் திறன் மிக்க சொத்துக்களை விஸ்தரிக்கக் கூடியதாக இருக்கும் போது குடும்பம் ஒன்றிணைக்கப்பட்டு வாழ்வாதாரம் பாதுகாப்பானதாக மாறும்.

- வளர்ச்சி மற்றும் விருத்தி, இனப்பெருக்கம், பௌதீக நடவடிக்கை மற்றும் உடல் நலனை பேணுதல் போன்றவற்றிற்காக உணவு உட்கொள்ளல், சமிபாடு அடைதல் மற்றும் உடலின் உணவுப் பயன்பாடு போன்ற செயற்பாடுகளை குறிப்பிடுவதாக *போஷாக்கு* என்ற பதம் பரந்துப்பட்ட விளக்கத்தை தருகின்றது. "போஷாக்கின்மை" என்பது தொழில் நுணுக்க ரீதியாக போஷாக்கு குறைபாடு மற்றும் அதிக போஷாக்கு என்பதனை உள்ளடக்கியுள்ளது. தீவிரமான போஷாக்கின்மை, நீண்ட கால போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு என்பன போஷாக்கு குறைபாடு என்பதில் உள்ளடங்கும். தீவிரமான போஷாக்கு குறைபாடு என்பது விரயமாக்கல் (மெல்லிய) மற்றும்/அல்லது போஷாக்கு பெருக்கம் என்பதனை குறிப்பிடுகின்றது. நீண்ட கால போஷாக்கின்மை என்பது வளர்ச்சிக் குறைவை (குள்ளமான) குறிப்பிடுகின்றது. வளர்ச்சிக் குறைவு மற்றும் விரயமாக்கல் ஆகிய இரண்டு வடிவங்களும் வளர்ச்சியில் ஏற்படும் தடையாகும். இந்த அத்தியாத்தில் நாம், தீவிரமான போஷாக்கின்மைக்கு போஷாக்கு குறைபாடு மற்றும் முன்னைய நிலைக்கு மாற்றும் தீவிர போஷாக்கின்மை என்பவற்றை நாம் குறிப்பிட்டுள்ளோம்.

இயற்கையான மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் அதிர்ச்சிகளின் அளவு மற்றும் தீவிரத்திலும், மற்றும் அவற்றின் சமூக பொருளாதார மற்றும் புவியியல் வீச்சளவிலுமே சவாலுக்கான தோற்றம் நிர்ணயிக்கப்படுவதாக இந்த சட்டகம் விளக்குகின்றது. எதிர்கொள்ளும் இயலுமையின் நிர்ணயத் தன்மையானது குடும்பங்களின் நிதி, மனித, பௌதீக, சமூக, இயற்கை மற்றும் அரசியல் சொத்துக்களின் மட்டங்கள், அவற்றின் உற்பத்தி வருமானம் மற்றும் நுகர்வின் மட்டங்கள், மற்றும் அவற்றின் தமது வருமான வளங்களை மாற்றும் மற்றும் சவால்களின் தாக்கங்களை தணிப்பதற்கான நுகர்வுக்கான இயலுமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களின் பலவீனத் தன்மை என்பதன் அர்த்தம், அவர்களுடைய போஷாக்கு தன்மை தொடர்பிலான விடயங்களை அடையாளப்படுத்தப்படல் வேண்டும் என்பதாகும். தீவிரமான போஷாக்கின்மைக்கு சிகிச்சை வழங்குவதனைப் போன்றே போஷாக்கு குறைப்பாட்டினை தடுப்பது குறித்து கவனஞ் செலுத்த வேண்டியதும் முக்கியமானது ஆகும். குறுகிய கால அடிப்படையில் மற்றும் அவர்களின் வாழ்க்கை மற்றும் நலனை நீண்ட கால அடிப்படையிலும் உணவுப் பாதுகாப்பு இடையீடுகள் போஷாக்கு மற்றும் சுகாதாரத்தினை தீர்மானிக்கலாம்.

தமது குடும்பங்களுக்கு உணவினை திட்டமிடல் மற்றும் தயார்ப்படுத்தலில் பெண்கள் மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றனர். அனர்த்தத்தினைத் தொடர்ந்து, குடும்ப வாழ்வாதார மூலோபாயங்கள் மாற்றமடையலாம். குடும்ப போஷாக்கு தொடர்பில் முக்கியமான பாத்திரத்தை அடையாளங் காண்பதே, குடும்ப மட்டத்தில் உணவுப் பாதுகாப்பை முன்னேற்றுவதற்கு சிறந்த வழியாகும். பொருத்தமான உணவு மறுசீரமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள்,

இளம் சிறுவர்கள், வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனுடையவர்களின் சிறப்பான போஷாக்குத் தேவைகளை புரிந்து கொள்வதும் மிகவும் முக்கியமாகும்.

சிறந்த உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு அனர்த்த மறுசீரமைப்பு என்பன சிறந்த முன்னாயத்தம் ஊடாக எட்டப்படக் கூடியவை. அவை, ஏற்படக் கூடிய, ஏற்பட்டுள்ள அல்லது தற்போதைய அனர்த்தங்களின் தாக்கங்களை பயனுறுதி மிக்க வகையில் எதிர்கொள்வதற்கும் மற்றும் பிரதிபலிப்பதற்கும் அரசாங்கம், மனிதநேய நிறுவனங்கள், உள்ளூர் சிவில் சமூக நிறுவனங்கள், சமுதாயங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகிய செயற்பாட்டாளர்களினால் வடிவமைக்கப்படும் இயலுமைகள், உறவுகள் மற்றும் அறிவு ஆகும். சவால்களின் பகுப்பாய்வின் அடிப்படையிலானதே முன்னாயத்தம். அத்துடன், அது முன்னெச்சரிக்கை முறைகளுடன் தொடர்பு உடையது. அதில் எதிர்பாராத நிகழ்ச்சிகளை எதிர்கொள்வதற்கு திட்டமிடல், உபகரணங்கள் மற்றும் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்தல், அவசர கால சேவைகள் மற்றும் அருகமைந்த ஏற்பாடுகள், தொடர்பாடல், தகவல் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைத்தல் ஏற்பாடுகள், நிபுணர்கள் பயற்சி மற்றும் சமுதாய மட்ட திட்டமிடல், உடற் பயிற்சிகள் மற்றும் அப்பியாசங்கள் என்பன உள்ளடங்குகின்றன. இந்த கையேட்டில் உள்ள அனர்த்தங்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான இடையீடுகளின் பிரதான பகுதிகளாக குழந்தை மற்றும் இளஞ் சிறுவர்களுக்கான உணவூட்டல்:, தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் தொடர்பான முகாமைத்துவம்:, பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள்:, மற்றும் வாழ்வாதாரங்கள் என்பன அமைந்துள்ளன.

ஏனைய அத்தியாயங்களுடனான தொடர்புகள்

ஏனைய அத்தியாயங்களில் உள்ள பெரும்பாலான தரங்கள் இந்த அத்தியாத்துடன் தொடர்புடையதாகும். ஒரு பகுதியில் தரங்களை எட்டுவதற்கான தேர்ச்சியானது பொதுவாக செல்வாக்கு செலுத்துவதுடன், வேறு பகுதிகளின் தேர்ச்சியினையும் தீர்மானிப்பதாக உள்ளது. மறுசீரமைப்பானது மிகவும் பயனுறுதி கொண்டதாக இருப்பதற்கு, ஏனைய துறைகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பன முக்கியமானது ஆகும். தேவைகள் நிறைவேற்றப்படுதல், முயற்சிகள் போலியாக இல்லாது இருத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு இடையீடுகளின் தரம் எட்டப்படுதல் என்பவற்றை உறுதி செய்வதற்கு உள்ளூர் அதிகாரிகள் மற்றும் வேறு பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பும் அவசியமாகும்.

போஷாக்கு குறைபாடு தொடர்பான கருத்துரு சார்ந்த சட்டகமானது, போஷாக்கின்மைக்கான மறைந்துள்ள காரணங்களுக்குள் மோசமான குடும்ப சுற்றுச் சூழல் மற்றும் போதியது அல்லாத சுகாதார சேவைகளை அடையாளங் கண்டுள்ளது. போஷாக்கின்மையை தடுப்பதற்கும் மற்றும் திருத்துவதற்குமான பிரதிபலிப்புக்கள் எட்டப்படுவதற்கு இந்த அத்தியாயத்திலும் மற்றும் WASH, உறைவிடம் மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாங்களிலும் உள்ள அடிப்படைத் தரங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவற்றுக்கு மிக முக்கியமான தரங்கள் எட்டப்படுவதும் மற்றும் பாதுகாப்பு கோட்பாடுகள் அடையாளப்படுத்தப்படுவதும் அவசியமாகும். அனைத்து குழுக்களினதும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கினை உறுதி செய்வதற்கு, அவர்களின் வாழ்க்கை மற்றும் கண்ணியத்தை பேணல் என்பன உறுதி செய்யப்படல் வேண்டும். கையேட்டில் உள்ள இந்த அத்தியாயத்தின் தரங்களை மாத்திரம் எட்டுவது போதியது அல்ல.

சம்பந்தப்பட்ட இடங்களில் ஏனைய அத்தியாயங்களின் விசேடமான தரங்கள் அல்லது வழிகாட்டல் குறிப்புக்களுக்கும் மற்றும் சக மற்றும் துணை வழங்கும் தரங்களிற்கும் குறிப்புதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்களுக்கான இணைப்புக்கள்

இந்த கையேட்டின் தரங்களை எட்டுவதற்காக, அனைத்து மனிதநேய நிறுவனங்களும், அவற்றிற்கு தீர்மான பாதுகாப்பு கட்டளை அல்லது பாதுகாப்பில் விசேட நிபுணத்துவ இயலுமை இல்லாத போதிலும் அவை பாதுகாப்பு கோட்பாடுகளால் வழிகாட்டப்படல் வேண்டும். கோட்பாடுகள் என்பது “முழுமையானவை” அல்ல. அவற்றை எந்த நிறுவனங்களால் பூர்த்தி செய்ய முடியும் என்பது சூழ்நிலைகளுக்கு அமைவானதாகவே இருக்கும். இருப்பினும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் உலகளாவிய மனிதநேய அக்கறைகளை பிரதிபலிக்கும் கோட்பாடுகள் அவசியமாகும். மிக முக்கியமான தரங்கள் அத்தியாவசியமான நடைமுறையாகும். அத்துடன், தனிப்பட்ட தரங்கள் அனைத்து துறைகளாலும் பகிரப்படுகின்றன. ஆறு முக்கியமான அடிப்படை தரங்கள் பங்குபற்றல், ஆரம்ப மதிப்பீடு, மறுசீரமைப்பு, இலக்குப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடாய்வு, நிதி பணியாளர் செயற்பாடு மற்றும் மேற்பார்வை மற்றும் நபர்களுக்கான உதவி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஏனைய தரங்களையும் சுட்டிக்காட்டும் அணுகுமுறைகளுக்கான தனிப்பட்ட குறிப்புதவி மையத்தினை அவை வழங்குகின்றன. எனவே, ஒவ்வொரு தொழில் நுணுக்க அத்தியாயத்திற்கும், சுய தரங்களை எட்டுவதற்கு உதவிப் புரிவதற்கான முக்கியமான தரங்களின் பயன்பாடு அவசியமாக இருக்கின்றது. மிகவும் முக்கியமாக, எந்தவொரு மறுசீரமைப்பினதும் பொருத்தப்பாடு மற்றும் தரத்தினை உறுதி செய்வதற்கு வழமையாக அனர்த்தத்தினால் பாதிக்கப்படக் கூடிய அபாயம் நிறைந்த குழுக்கள் மற்றும் தனி நபர்கள் உள்ளடங்கலாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பங்குபற்றல் அதிகரிக்கப்படல் வேண்டும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பலவீனங்கள் மற்றும் இயலுமைகள்

இந்த பிரிவானது முக்கியமான அடிப்படை தரங்களை மீள் அமுலாக்குவதற்கும், அதனுடன் இணைந்து வாசிப்பதற்கும் ஏற்றதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இளையவராக இருத்தல் அல்லது முதியவராக இருத்தல், பெண்ணாக இருத்தல் அல்லது மாற்றுத் திறன் அல்லது எச். ஐ. வி தாக்கத்துக்கு உள்ளானவராக இருத்தல் என்பவற்றின் காரணமாக, அவர் பலவீனமானவராக கருதப்படவோ அல்லது அதிகரித்த அபாயத்துக்கு உள்ளாகவோ கூடாது. ஆனால், காரணிகளுக்கு இடையிலான செயற்பாடே இதனை தீர்மானிக்கின்றது. உதாரணமாக, 70 வயதுடைய நபரொருவர், தனியாக வறுமையில் வசித்து வருகின்றார். அதே வயது மற்றும் சுகாதார நிலையை உடைய, ஆனால் கூட்டுக் குடும்பத்துடன் மற்றும் போதிய வருமானத்துடன் வசிக்கும் ஒருவரிலும் பார்க்க பலவீனமானவராக இருப்பார். அதேவேளை, 3 வயது சிறுமியொருவர், தமக்குப் பொறுப்பான பெற்றோரின் பராமரிப்பில் இல்லாது இருக்கும் போது அதிக பலவீனம் உடையவராக இருப்பார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தரங்களும் மற்றும் பிரதான நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படும் போது, பலவீனம் மற்றும் இயலுமை தொடர்பான பகுப்பாய்வானது உதவிக்கான உரிமையுள்ளவர்களுக்கு, பாரபட்சமின்றி மற்றும் அதிக உதவி தேவையாக உள்ளவர்களுக்கு அனர்த்த மறுசீரமைப்பு முயற்சிகள் சென்றடைவதனை உறுதி செய்கின்றது. இதற்கு உள்ளூர் சூழ்நிலை தொடர்பில் மற்றும் வேறுபட்ட மக்களின் வேறுபட்ட குழுக்களின் மீது அவர்களிடம் ஏற்கனவே காணப்படும் பலவீனம் காரணமாக (உ-ம்: மிகவும் வறியவராக இருத்தல் அல்லது பாரபட்சம் காட்டப்பட்டவராக இருத்தல்), வேறுபட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான அவர்களது வெளிப்பாடு (உ-ம்: பாலியல் சுரண்டல் உள்ளடங்கலாக பால்நிலை சார்ந்த வன்முறைகள்), நோய் தாக்கம் அல்லது பரவல் (எச்.ஐ.வி அல்லது காச நோய்), மற்றும் தொற்று நோய்க்கான சாத்தியங்கள் (உ-ம்: சின்னம்மை அல்லது கொலரா) போன்றன எவ்வாறு தாக்கத்தை புரிகின்றன என்பன தொடர்பில் முழுமையான புரிந்துணர்வு அவசியமாக உள்ளது. ஏற்கனவே உள்ள சமத்துவமின்மையை அனர்த்தங்கள் மேலும் மோசமானதாக மாற்றும். எவ்வாறாயினும், மக்களின் எதிர்கொள்ளும் மூலோபாயங்கள், நெகிழ்ச்சித் தன்மை மற்றும் மீளெழல் இயலுமைகள் என்பனவற்றுக்கான ஆதரவானது மிகவும் அத்தியாவசியமானது. அவர்களுடைய அறிவு, திறன்கள் மற்றும் மூலோபாயாங்கள், சமூக, சட்ட, நிதி மற்றும் உளச் சமூக உதவிக்கான அவர்களுடைய பிரவேசம் என்பவற்றிக்கான உதவி மற்றும் இந்த சேவைகளை சமமான வகையில் பெறும் போது எதிர்நோக்கக் கூடிய பல்வேறுபட்ட பௌதீக, கலாசார, பொருளாதார மற்றும் சமூகத் தடைகள் என்பன தொடர்பிலும் பரிந்து பேசல் முன்னெடுக்கப்படுவதுடன், உதவி வழங்கப்படலும் வேண்டும்.

பலவீனமான அனைத்து மக்களினதும் உரிமைகள் மற்றும் இயலுமைகள் உறுதி செய்யப்படுவதனை குறிப்பிடும் பிரதான பகுதிகள் பின்வருமாறு:

- அனைத்து பிரதிநிதித்துவக் குழுக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்து மக்களின், விசேடமாக அதிக சந்தர்ப்பங்கள் அற்றவர்களின் பங்குபற்றலை நம்பிக்கையுடைதாக்கல். (உ-ம்: தொடர்பாடல் மற்றும் ஒன்றிணைதல் சிக்கல் உள்ளவர்கள், நிறுவனங்களில் வசிப்பவர்கள், களங்கப்படுத்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் வேறு கீழ்ப்படுத்தப்பட்ட அல்லது பிரதிநிதித்துவம் புரியாத குழுக்கள்).
- மதிப்பீட்டின் போது பால்நிலை மற்றும் வயது (0-80+ வருடங்கள்) என்பவற்றின் அடிப்படையில் தரவுகளை பிரிக்கவும். உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு துறையானது போதிய அளவில் மக்களின் பல்வகைத் தன்மை தொடர்பில் கவனஞ் செலுத்துவதனை உறுதி செய்வதற்கான முக்கியமான அம்சமாக இது உள்ளது.
- உரிமைத் தகுதிக்கான தகவல் உரிமை உறுதி செய்யப்படலானது, சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளடக்கமான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தொடர்பாடப்படுதல்.

அடிப்படைத் தரங்கள்

1. உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு

மிகவும் தீவிரமான சிக்கலின் போது மற்றும் உடனடி மறுசீரமைப்புக்காக, உடனடி உதவிகள் அவசியமானதா அல்லது அவசியமற்றதா என்பதனை தீர்மானிப்பதாக பல்துறை சார்ந்த ஆரம்ப துரித மதிப்பீடுகள் அமையலாம். குறிப்பிட்ட சூழ்நிலை தொடர்பில் உரிய நேரத்தில் வேகமான மற்றும் தெளிவான தோற்றப்பாட்டை பெற்றுக் கொள்வதற்காகவே ஆரம்ப துரித மதிப்பீடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலதிக உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அவை குறிப்பிட்ட நேரத்தில், வளங்கள் முறையாக வழங்கப்பட்டுள்ளனவா என்பதனை அவதானிக்க வேண்டும். மதிப்பீடு என்பது தொடர்ச்சியான செயற்பாடு ஆகும். விசேடமாக காலங் கடந்த மோதல்களின் போது இதனை உணர முடியும். அத்துடன், இலக்கு வைத்தல் மற்றும் தீர்மானம் எடுத்தலை மறுசீரமைப்பு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக உள்வாங்க வேண்டும். அதேவேளை, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடுகள் போதிய போஷாக்கினை அடையாளங் காண்பதற்கான தடைகளை உடைப்பதாக இருக்க வேண்டும். அத்துடன், உணவு உட்கொள்வதற்கு கிடைக்கக் கூடியத் தன்மை, பிரவேசம் மற்றும் பொருத்தமான பயன்பாடு என்பவற்றினை மேம்படுத்தக் கூடிய இடையீடுகளையும் வழங்க வேண்டும். பிற்சேர்க்கை 1: உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள், 2: விதைப் பாதுகாப்பு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள் மற்றும் 3: போஷாக்கு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள் போன்றன பிற்சேர்க்கைகளாக மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரங்கள் இரண்டும் மிக முக்கியமான தரம் 3இனை பின்பற்றுகின்றன. அத்துடன், அவை இரண்டும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு இடையீடுகள் திட்டமிடப்படும் அல்லது பரிந்து பேசப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பிரயோகிக்கப்படுகின்றன.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 1: உணவுப் பாதுகாப்பு

உணவுப் பாதுகாப்பின்மைக்கான சவால்கள் மக்களுக்கு அதிகமாக உள்ள நிலையில், அதிகமாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காண்பதற்கும் மற்றும் அவர்களுக்கு பொருத்தமான மறுசீரமைப்பினை தீர்மானிப்பதற்கும் உணவுப் பாதுகாப்பின்மையின் வகை, அளவு மற்றும் வீச்சினை புரிந்து கொள்வதற்கும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளை பயன்படுத்தி மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படும்.

.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளை பின்பற்றும் முறையியலை பயன்படுத்தல். அத்துடன், அதனை முழுமையாக மதிப்பீட்டு அறிக்கையில் விளக்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- மதிப்பீட்டின் ஆரம்ப நிலையில் தகவல்களை சேகரித்து, அவற்றை பகுப்பாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- மக்களின் போஷாக்கு நிலையில் உணவுப் பாதுகாப்பின்மையின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- இயலுமான சந்தர்ப்பங்களில் முறைசார் மற்றும் முறைசாரா நிறுவனங்களின் உள்ளூர் இயலுமைகளின் அடிப்படையில் மதிப்பீட்டினை கட்டியெழுப்பல் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- இடையீடுகளை வழிப்படுத்துவதற்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமுதாயங்களின் வாழ்வாதாரங்கள் என்பன விசாரிக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3-9ஐப் பார்க்கவும்).
- மிகவும் பலவீனமான தனிநபர்கள் மற்றும் குழுக்களை இலக்கு வைக்கும் நடவடிக்கைகளின் தெளிவான பரிந்துரைகளுடன் மதிப்பீட்டு முடிவுகள் பகுப்பாய்வு அறிக்கையில் கூட்டிணைக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1-10ஐப் பார்க்கவும்).
- மக்களின் உடனடி உணவு தேவைகளின் அடிப்படையிலேயே மறுசீரமைப்பு அமைய வேண்டும். ஆனால், வாழ்வாதார மூலோபாயங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டினை அவை அவதானிக்க வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 10ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **முறையியல்:** முறை சாராத விடயமாக இருப்பினும் மதிப்பீடுகளின் வீச்சளவு மற்றும் மாதிரிகளைத் தெரிவு செய்யும் நடைமுறைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. உணவுப் பாதுகாப்பு மதிப்பீடுகளுக்கு தெளிவான குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும். அத்துடன், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளை பயன்படுத்தல் வேண்டும். முரணற்ற முடிவினைப் பெறுவதற்கு தகவலுக்கான பல்வேறுபட்ட மூலங்கள் (உ-ம்: பயிர் மதிப்பீடுகள், செய்மதி படங்கள் மற்றும் குடும்ப மதிப்பீடுகள்) ஊடாக அவற்றை உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும் (மிக முக்கியமான தரம் 3ஐயும், குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவையையும் பார்க்கவும்). .
2. **தகவல் மூலங்கள்:** அனர்த்தத்திற்கு முந்தைய சூழ்நிலை தொடர்பில் இரண்டாம் நிலை தகவல்கள் கிடைக்கலாம். குடும்பத்தின் போஷாக்கு சார்ந்த நலனை பாதுகாப்பதில் பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் வேறுபட்ட மற்றும் போட்டித் தன்மையான பாத்திரங்கள் இருக்கின்ற நிலையில், இந்த

தகவல்கள் இயலுமான வரையில் பால்நிலை அடிப்படையில் பிரிக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் பிற்சேர்க்கை 1: உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் மதிப்பீடு சரிபார்ப்பு பட்டியல்கள் என்பவற்றைப் பார்க்கவும்).

3. **உணவு கிடைக்கக் கூடியத் தன்மை, பிரவேசம், நுகர்வு மற்றும் பயன்பாடு:** (உணவு கிடைக்கக் கூடியத் தன்மை, பிரவேசம் மற்றும் பயன்பாட்டுக்கான வரைவிலக்கணங்களை பார்க்கவும்). குடும்பங்களில் உள்ள தனிநபர்களின் சக்தி மற்றும் போஷாக்கு உட்கொள்ளலில் உணவு நுகர்வு என்பது பிரதிபலிக்கும். இந்த மதிப்பீடுகளின் போது உண்மையான சக்தி உள்ளடக்கம் மற்றும் போஷாக்கு விபரங்களை அளவிடுவது என்பது சாத்தியம் அல்ல. அனர்த்தத்திற்கு முன்னரும், பின்னரும் உட்கொள்ளும் உணவுகளின் எண்ணிக்கை மாற்றமடையும் என்பது யதார்த்தம். உணவுப் பாதுகாப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் குறிகாட்டியாக இது உள்ளது. குறிப்புதவி காலத்தில் தரப்பட்டுள்ள தனிநபர்/குடும்பத்தினால் நுகரப்பட்ட உணவு வகைகளின் எண்ணிக்கை மற்றும் நுகர்வின் அலைவரிசை என்பன சீரான உணவுப் பழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். விசேடமாக குடும்பத்தின் சமூக-பொருளாதார நிலைமை மற்றும் மொத்த உணவு சக்தி உட்கொள்ளல் மற்றும் சீரான உணவுப் பழக்க தரம் என்பவற்றுடன் இணைத்துப் பார்க்கும் போது இது சிறந்த குறிகாட்டியாகும். திடமான உணவு நுகர்வு முறைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அளவுகளை தரும் கருவிகளில் பருவகால நாட்காட்டிகள், குடும்ப சீரான உணவுப் பழக்க வேறுபாடு புள்ளி, குடும்ப உணவு பாதுகாப்பின்மை பிரவேச அளவு அல்லது உணவு நுகர்வு புள்ளி என்பன உள்ளடங்குகின்றன.

4. **உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் போஷாக்கு நிலை:** போஷாக்கு குறைப்பாட்டுக்கான மறைமுக காரணங்கள் மூன்றில் ஒன்றாக உணவுப் பாதுகாப்பின்மை காணப்படுகின்றது. எவ்வாறாயினும், போஷாக்கு குறைபாட்டுக்கு இது மாத்திரமே தனியான காரணம் என கருதப்படக் கூடாது.

5. **சூழ்நிலை:** உணவுப் பாதுகாப்பின்மை என்பது பரந்த பாரிய பொருளாதாரம் மற்றும் கட்டமைப்பு சார் சமூக-அரசியல் காரணிகளின் விளைவாக இருக்கலாம். போதியளவு போஷாக்கு கொண்ட உணவு மற்றும் உள்ளூர் சுற்றுச் சூழலின் மதிப்பிறக்கம் என்பவற்றிற்கு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரவேசத்தில் தாக்கம் ஏற்படுத்தும் தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகளும், செயற்பாடுகளும்/நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன. இது பொதுவாக நீண்ட கால உணவுப் பாதுகாப்பின்மையாக விளக்கப்படுகின்றது. கட்டமைப்பு பலவீனங்களால் ஏற்படும் நீண்ட கால சூழ்நிலைகள் அனர்த்தத்தின் தாக்கத்தால் ஒன்றிணையலாம். பஞ்சம் தொடர்பில் முன்னெச்சரிக்கை முறைகள் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு வகைப்படுத்தல் உள்ளடங்கலாக உள்ளூர் மற்றும் பிராந்திய உணவுப் பாதுகாப்பு தகவல் முறைகள் என்பன தகவலை பகுப்பாய்வு செய்வதற்கு முக்கியமான பொறியமைப்புக்களாகும்.

6. **மறுசீரமைப்பு பகுப்பாய்வு:** மக்களின் வாழ்வாதாரங்கள், அவர்களது இடம், சந்தை முறைகள், பகுதி சந்தைகளுக்கான அவர்களது பிரவேசம், அவர்களது சமூக நிலை (பால்நிலை மற்றும் வயது உள்ளடங்கலாக), வருடத்தின் நேரம்,

அனர்த்தத்தின் தன்மை மற்றும் சம்பந்தப்பட்ட மறுசீரமைப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் உணவுப் பாதுகாப்பு என்பது வேறுபடலாம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்தத்திற்கு முன்னர் எவ்வாறு உணவு மற்றும் வருமானம் கிடைத்தது என்பது பற்றியும், தற்போது அவர்கள் எவ்வாறு அதனை பெற்றுக் கொள்கின்றனர் என்பது பற்றியும் மதிப்பீட்டின் நோக்கம் அடையாளப்படுத்த வேண்டும். மக்கள் இடம்பெயரும் இடங்களில் அப்பகுதியில் வசிக்கும் மக்களின் உணவுப் பாதுகாப்பு என்பதும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். பண பரிமாற்றங்கள் மற்றும் உணவு விநியோக சங்கிலிகள் என்பதன் அடிப்படையில், அவர்கள் சம்பந்தப்பட்ட சவால்கள் உள்ளடங்கலாக சந்தைகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் அல்லது வேறு உள்ளூர் பரிமாற்ற பொறியமைப்புக்கள் என்பவற்றை மதிப்பீடு பகுப்பாய்வு செய்ய வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும்). பணம் அல்லது உணவு பரிமாற்ற இடையீடுகளின் இயலுமான தன்மையை மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பான மற்றும் பயனுள்ள விநியோக பொறியமைப்புக்களை வடிவமைப்பதற்கும் இது உதவி புரியும்.

7. **சந்தைப் பகுப்பாய்வு:** ஆரம்ப மற்றும் பின் தொடருகின்ற மதிப்பீடுகளின் ஒரு பகுதியாக சந்தைப் பகுப்பாய்வு இருத்தல் வேண்டும். சந்தைகள் தொடர்பான பகுப்பாய்வானது விலை மாற்றங்கள், அடிப்படைப் பொருட்கள் மற்றும் சேவைகளின் கிடைக்கக் கூடியத் தன்மை, சந்தை கட்டமைப்பில் அனர்த்தத்தின் தாக்கம் மற்றும் எதிர்பார்க்கப்படும் மீளமைப்பு காலம் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும். அனர்த்தத்தின் பின்னர் வேலைவாய்ப்பு, உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான சந்தைகளின் இயலுமையை புரிந்து கொள்வது, உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நேரத்திற்கான, செலவு குறைந்த மற்றும் பொருத்தமான மறுசீரமைப்புக்களை வடிவமைப்பதற்கு உதவி புரியும். உற்பத்தித் திறன் மிக்க பொருட்களை விநியோகிப்பதன் மூலம் (விதைகள், கருவிகள், இன்னபிற) மற்றும் வேலைவாய்ப்புக்கான கேள்வியை பேணுவதன் மூலம் அனர்த்தத்தின் பின்னர் குறுகிய கால தேவைகளுக்கு அப்பால் சந்தை முறைகள் செல்ல வேண்டும். இயலுமான சந்தர்ப்பங்களில் உள்ளூர் கொள்வனவுக்கு உதவி புரியும் வகையில் நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு, உணவு பரிமாற்றங்கள் தரம் 4, வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3, உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதாரங்கள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 7 மற்றும் உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதாரங்கள் தரம் 3, வழிகாட்டல் குறிப்பு 2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ????**).

8. **எதிர்கொள்ளும் மூலோபாயங்கள்:** எதிர்கொள்ளும் மூலோபாயங்களின் வேறுபட்ட வகைகளான, யார் அதனைப் பயன்படுத்துகின்றார்கள் மற்றும் எப்போது பயன்படுத்துகின்றார்கள், எத்தனை சிறப்பாக அவர்கள் பணியாற்றுவார்கள் மற்றும் மோசமான தாக்கத்தின் தன்மை (ஏதேனும்) என்பன குறித்து மதிப்பீடும், பகுப்பாய்வும் கவனஞ் செலுத்தல் வேண்டும். எதிர்கொள்ளல் மூலோபாயங்கள் சுட்டெண் போன்ற கருவிகள் இதற்காக பரிந்துரைக்கப்படுகின்றன. மூலோபாயங்கள் வேறுபட்ட வகையில் காணப்படுகின்ற நிலையில், அவற்றை எதிர்கொள்வதில் தனிப்பட்ட படிநிலைகள் இருக்கின்றன. சில எதிர்கொள்ளும் மூலோபாயங்கள் சாதாரணமானவை. சாதகமானவை மற்றும் உதவி வழங்கக் கூடியவை. ஏனைய மூலோபாயங்கள், சில சந்தர்ப்பங்களில் சிக்கலான

மூலோபாயங்கள் என அழைக்கப்படும். அத்துடன், சில சந்தர்ப்பங்களில் எதிர்கால உணவுப் பாதுகாப்பினை குறைத்து மதிப்பிடக் கூடியதாகலாம் (நில விற்பனை, அனைத்து குடும்பங்களினதும் அழுத்தம் காரணமான புலம்பெயர்வு அல்லது காடழிப்பு). பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது செலுத்தப்படும் அல்லது பலவந்தமாக திணிக்கப்படும் சில எதிர்கொள்ளும் மூலோபாயங்கள், அவர்களது உடல் நலன், உளச் சமூக நலன் மற்றும் சமூக ஒருங்கிணைப்பில் மிகவும் மோசமான மற்றும் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தலாம். எதிர்கொள்ளும் மூலோபாயங்கள் பொதுவான இயற்கை வளங்கள் மேலதிக சுரண்டலுக்கு உள்ளாக்கப்படல் போன்ற சுற்றுச் சூழல் மீதான தாக்கத்தை ஏற்படுத்தலாம். வாழ்வாதார தொடக்க நிலையை நிர்ணயிப்பதற்கான, உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன், பாதிப்பை ஏற்படுத்தாத தெரிவுகள் அனைத்தும் அழிவதற்கு முன்னர் மிகவும் பொருத்தமான பிரதிபலிப்புக்களின் கூட்டினை அடையாளங் காண்பதற்கு பகுப்பாய்வு உதவி புரியும் (பாதுகாப்பு கோட்பாடுகள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ????**).

9. **பலவீனத் தன்மையின் பங்குபற்றல் பகுப்பாய்வு:** மதிப்பீட்டின் அனைத்து நிலைகளிலும் வேறுபட்ட குழுக்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் ஆண்கள் மற்றும் பொருத்தமான உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் ஸ்தானங்களின் அர்த்தமுள்ள பங்குபற்றல் என்பது மிகவும் முக்கியமானது ஆகும். தேவை சார்ந்தாக மற்றும் உள்ளூர் சூழ்நிலைகளுக்கு பொருத்தமானதாக உள்ளூர் அறிவின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படல் வேண்டும். மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள் அல்லது நீண்ட காலமாக இடம்பெற்று வரும் முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்ளூர் முன்னெச்சரிக்கை மற்றும் அவசரகால மறுசீரமைப்பு முறைகள் அல்லது வலையமைப்புக்கள் மற்றும் எதிர்பாராத நிகழ்ச்சிகளை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் என்பவற்றை கொண்டிருக்கலாம். இவையும், எந்தவொரு மதிப்பீட்டிலும் உள்வாங்கப்படல் வேண்டும். செயற்றிட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலில் பெண்களை இணைத்துக் கொள்வது என்பது சிக்கலானது (பாதுகாப்பு கோட்பாடுகள் 2-4ஐப் பார்க்கவும் **பக்கம் ????**).

10. **உடனடித் தேவைகள் மற்றும் நீண்ட கால திட்டமிடல்:** உடனடி உணவுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக முன்னெடுக்கப்படும் இடையீடுகள், உணவுப் பரிமாற்றங்கள் மற்றும் பண, சான்றுச் சீட்டு பரிமாற்றங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இது தனியானதாக முன்னெடுக்கப்படலாம் அல்லது ஏனைய வாழ்வாதார இடையீடுகளுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படலாம். உடனடித் தேவைகளை நிறைவேற்றும் அதேவேளை, உற்பத்தித் திறன் மிக்க சொத்துக்களை பாதுகாத்தல் என்பது, நெருக்கடி சந்தர்ப்பங்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதாகும். மறுசீரமைப்புக்கள் எப்போதும் நீண்டகாலம் என்பதனை மனதில் கொண்டதாக திட்டமிடப்படல் வேண்டும். இதில், பாதிக்கப்பட்ட சுற்றுச் சூழல் மீளமைப்பில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தலும் உள்ளடங்கும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 2: போஷாக்கு

போஷாக்கு குறைபாடு என்ற சவாலினை மக்கள் அதிகமாக எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பங்களில், அதிகமாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காண்பதற்கும் மற்றும் அவர்களுக்கு பொருத்தமான மறுசீரமைப்பினை தீர்மானிப்பதற்கும் போஷாக்கு குறைபாட்டின் வகை, அளவு மற்றும் வீச்சினை புரிந்து கொள்வதற்கும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளை பயன்படுத்தி மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படும்.

•

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- போஷாக்கு நிலைமையின் தன்மையையும், தீவிரத்தையும் சுட்டிக்காட்டுவதற்கு அனர்த்தத்திற்கு முன்னரான மற்றும் ஆரம்ப மதிப்பீடுகளில் இருந்து கிடைக்கக் கூடிய தகவல்களை கோப்பாக்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-6ஐப் பார்க்கவும்).
- சிறந்த போஷாக்கு உதவி தேவைகள் மற்றும் போஷாக்கு நிலைமையில் சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்தும் மறைந்துள்ள காரணிகளுடன் குழுக்களை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- மக்கள் மட்டத்திலான தர/எண்ணிக்கை அடிப்படையிலான மதிப்பீடுகள் போஷாக்கு குறைபாடுள்ளவர்களின் மனிதவர்க்க நிலை, நுண்ணூட்டச் சத்து நிலை, குழந்தை மற்றும் இளம் சிறுவர்களுக்கான உணவூட்டல், தாய் வழி பராமரிப்பு பயிற்சிகள் மற்றும் இணைந்த சாத்தியமான நிர்ணயங்கள் போன்றன சிறந்த வகையில் அளவிடப்பட வேண்டிய மற்றும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- போஷாக்கு குறைபாட்டினை தீர்மானிக்கும் காரணிகளின் உள்ளூர் சமுதாயம் மற்றும் வேறு உள்ளூர் பங்குதாரர்களின் கருத்துக்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- மறுசீரமைப்பை தலைமையேற்று நடத்தவும் மற்றும்/அல்லது உதவி வழங்கவும் தேசிய மற்றும் உள்ளூர் இயலுமை மதிப்பீட்டை உள்ளடக்கவும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1 மற்றும் 8ஐப் பார்க்கவும்).
- சூழ்நிலையானது ஸ்திரமானதாக அல்லது வீழ்ச்சியடைவதாக உள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்கு போஷாக்கு மதிப்பீட்டு தகவல்களை பயன்படுத்தவும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளை பின்பற்றும் தரப்படுத்தப்பட்ட குறிகாட்டிகள் உள்ளடங்கலாக மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு முறைமையியல்கள்

மனிதவர்க்க மற்றும் மனிதவர்க்கமாற்ற மதிப்பீடுகள் என இரண்டிற்கும் உள்வாங்கப்படுகின்றன (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-6ஐப் பார்க்கவும்).

- மிகவும் பலவீனமான தனிநபர்கள் மற்றும் குழுக்களை இலக்கு வைக்கும் நடவடிக்கைகளின் தெளிவான பரிந்துரைகள் உள்ளடங்கலாக மதிப்பீட்டு முடிவுகள் பகுப்பாய்வு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-6ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சூழ்நிலை சார்ந்த தகவல்கள்:** நடைமுறையில் உள்ள சுகாதார மற்றும் போஷாக்கு விபரங்கள், ஆய்வு அறிக்கைகள், முன்னெச்சரிக்கை தகவல்கள், சுகாதார நிலைய அறிக்கைகள், உணவுப் பாதுகாப்பு அறிக்கைகள் மற்றும் சமுதாய குழுக்கள் உள்ளடங்கலாக போஷாக்கு குறைபாட்டுக்கான காரணங்கள் தொடர்பான தகவல்களை முதல் நிலை அல்லது இரண்டாம் நிலை வளங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். மதிப்பீட்டின் குறிப்பிட்ட பகுதிகள் அல்லது சாத்தியமான இடையீடுகள் தொடர்பான தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில், புள்ளிவிபர சுகாதார ஆய்வுகள், பல்வேறு கொத்தான குறிகாட்டிகள் ஆய்வுகள், வேறு தேசிய சுகாதார மற்றும் போஷாக்கு ஆய்வுகள், WHO போஷாக்கு தோற்ற தகவல் முறைகள், WHO உயிர்ச்சத்து மற்றும் ஊட்ட போஷாக்கு தகவல் முறை, சிக்கலான அவசரகால தரவுத் தளம் (CE-DAT), நெருக்கடி காலத்தில் போஷாக்கு தகவல் முறை (NICS), தேசிய போஷாக்கு மேற்பார்வை முறைகள் மற்றும் நடைமுறையில் உள்ள போஷாக்கின்மையை முகாமைத்துவம் செய்வதற்கான அனுமதி அளவுகள் மற்றும் மட்டங்கள் போன்ற வேறு வளங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பிரதிநிதித்துவ தரவுகள் கிடைக்கக் கூடியதாக உள்ள நிலையில், ஒரே சந்தர்ப்பத்தில் போஷாக்கின்மையை ஒழிப்பது குறித்து கவனஞ் செலுத்துவதிலும், போஷாக்கு நிலையின் முறைகள் தொடர்பில் கவனஞ் செலுத்துவது பொருத்தமாக இருக்கும் (பிற்சேர்க்கை 3: போஷாக்கு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியலைப் பார்க்கவும் **பக்கம் ????**). போஷாக்கு மதிப்பீடுகள் பரந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். விசேடமாக, பொது சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்துபவர்கள் தொடர்பிலானதாக இருத்தல் வேண்டும். நடைமுறையில் உள்ள போஷாக்கு முனைப்புக்கள் தொடர்பான தகவல்கள், அவர்களது செயற்பாட்டு இயலுமை மற்றும் உள்ளூர் மற்றும் தேசிய மறுசீரமைப்பு இயலுமை என்பன இடைவெளிகளை அடையாளங் காண்பதற்கு மற்றும் மறுசீரமைப்பை வழிகாட்டுவதற்காக சேகரிக்கப்படல் வேண்டும்.

2. **பகுப்பாய்வின் வீச்சு:** தகவல் இடைவெளிகள் அடையாளங் காணப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் நிகழ்ச்சி திட்டமிடலை அறிவிப்பதற்கு, நிகழ்ச்சி வெளியீடுகளை அல்லது பரிந்து பேசல் நோக்கங்களை அளிவிடுவதற்கு மேலதிக தகவல் தேவையாக இருக்கின்ற நிலையில் ஆரம்ப மதிப்பீட்டினைத் தொடர்ந்து ஆழமான மதிப்பீடு முன்னெடுக்கப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும் **பக்கம் ????**). ஆழமான போஷாக்கு மதிப்பீடானது, மனித வர்க்க ஆய்வுகள், குழந்தை மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல் மதிப்பீடுகள், நுண்ணூட்டச்

சத்து ஆய்வுகள் மற்றும் நோயக் காரணங்கள் பகுப்பாய்வுகள் உள்ளடங்கலாக சாத்தியமான பல மதிப்பீட்டு அணுகுமுறைகளை குறிக்கின்றது. போஷாக்கு மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு முறைகளும் பயன்படுத்தப்படலாம்.

3. **முறையியல்:** எந்த ஒரு வகைக்குமான போஷாக்கு மதிப்பீடுகள் தெளிவான குறிக்கோள்களை கொண்டிருக்க வேண்டும், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளை பயன்படுத்தல் வேண்டும், போஷாக்கு ரீதியாக பலவீனமான தனிநபர்களை அடையாளங் காணல் வேண்டும். அத்துடன், போஷாக்கு குறைபாட்டுக்கு பங்களிக்கக் கூடிய காரணிகளை புரிந்து கொள்ளக் கூடிய தன்மையை உருவாக்க வேண்டும். மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு செயற்பாடானது தர்க்க ரீதியான மற்றும் வெளிப்படையான வகையில் உரிய நேரத்திற்கான அறிக்கையாக தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மதிப்பீட்டு அணுகுமுறைகள் நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் மத்தியில் பக்கச்சார்பற்றதாக, பிரதிநிதித்துவம் மிக்கதாக மற்றும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். எனவே, தகவலானது முழுமையா-னதாக, தொடர்ச்சியானதாக மற்றும் ஒப்பிடக் கூடியதாக இருக்கும். பல்-நிறுவன மதிப்பீடுகள் பாரிய அளவிலான பல்-தொழில் நுணுக்க மற்றும் பரந்த புவியியல் பகுதிகளை அடைவதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

4. **மனிதர் அளவையியல் ஆய்வுகள்:** இந்த ஆய்வுகள் ஆங்காங்கு மாதிரிகள் அல்லது விளக்கமான திரையிடல் அடிப்படையிலான இடைக் குழு ஆய்வுகளின் பிரதிகளாகும். போஷாக்கின்மையை தடுத்தல் தொடர்பான (நீண்ட கால மற்றும் தீவிரமான) கணிப்பீட்டினை மனிதர் அளவையியல் ஆய்வுகள் வழங்குகின்றன. தரங்களுக்கு அமைய Z புள்ளியில் Weight-for-Height என்பவற்றை அறிக்கைப்படுத்தல் வேண்டும் (பிற்சேர்க்கை: தீவிரமான போஷாக்கின்மையை அளவிடலைப் பார்க்கவும் **பக்கம் ????**). சுகாதார புள்ளியியலுக்கான தேசிய நிலையத்திற்கு (NCHS) அமைய Z புள்ளியில் Weight-for-Height கடந்தகால ஆய்வுகளுக்கு ஏற்றதாக ஒப்பீடுகள் உள்வாங்கப்பட்டதாக அறிக்கை அமைய வேண்டும். mid-upper-arm conference (MUAC)இனால் அளவிடப்பட்ட விரயம் செய்தல் மற்றும் மோசமாக விரயம் செய்தல் என்பன மனிதர் அளவையியல் ஆய்வுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். போஷாக்கு இடீமா என்பது தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு, அறிக்கையிடப்படல் வேண்டும். போஷாக்கின்மையை கட்டுப்படுத்துவதற்கான உறுதியான இடைவேளைகள் அறிக்கையிடப்படல் வேண்டும். அத்துடன், ஆய்வு தர காப்புறுதி உறுதி செய்யப்படல் வேண்டும். நடைமுறையில் இருக்கக் கூடிய கருவிகளைப் பயன்படுத்தி இதனை முன்னெடுக்க முடியும் (உ-ம்: நிவாரணம் மற்றும் இடைத்தங்கலினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலை தரப்படுத்தல் (SMART) முறையியல் கையேடு மற்றும் கருவிகள், ENA அல்லது (அவசர கால போஷாக்கு மதிப்பீடு) மென்பொருள் மற்றும் EpiInfo மென்பொருள்). சனத்தொகை முழுவதிற்குமான உரிமை பெற்ற பிரதிநிதியாக 6-59 மாதங்கள் வரையான வயதுடைய சிறுவர்களின் போஷாக்கின்மை மட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு மிகவும் பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சி முன்னெடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஏனைய குழுக்கள் பரந்த அளவிற்கு பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அல்லது பாரிய

போஷாக்கு சவால்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் மதிப்பீடு தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் (பிற்சேர்க்கை 4: தீவிரமான போஷாக்கின்மையை அளவிடலைப் பார்க்கவும் **பக்கம் ????**).

5. **மனிதர் அளவையியல் அற்ற குறிகாட்டிகள்:** மனிதர் அளவையியலுக்கான மேலதிக தகவல்கள் அத்தியாவசியமானவை. அவை அவதானமாக கவனஞ் செலுத்தப்பட்டு, மனிதர் அளவையியல் ஆய்வுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக எஞ்சியிருக்க வேண்டும். எனவே, ஆய்வின் தரமானது குறைத்து மதிப்பிடப்பட மாட்டாது. இந்த குறிகாட்டிகளில் நோய் எதிர்ப்பு திறனூட்டல் அளவுகள் (விசேடமாக சின்னமம்மைக்கானது), உயிர்ச் சத்து ஏ விநியோகம், நுண்ணூட்டச் சத்து குறைபாடு மற்றும் WHO குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல் குறிகாட்டிகள் (IYCF)என்பன உள்ளடங்குகின்றன. பக்குவமற்ற, குழந்தை மற்றும் ஐந்து வயதுக்கு குறைந்தவர்களின் இறப்பு வீதங்கள் பொருத்தமான வகையில் அளவிடப்படல் வேண்டும்.

6. **நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள்:** மக்கள் உயிர்ச்சத்து ஏ குறைபாட்டில் உள்ளமை அறியப்பட்டால், அயடீன் அல்லது துத்தநாகம் அல்லது இரும்புச் சத்து குறைப்பாட்டினால் குருதிச் சோகையினால் அனர்த்தத்திற்கு முன்னர் பாதிக்கப்பட்டிருந்தால், அனர்த்தத்தின் பின்னர் இந்த நிலை மேலும் மோசமடையும். மூளைக் கோளாறு, உயிர்ச் சத்து பீ குறைபாடு, சரும நோய் அல்லது வேறு நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் பரவுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. எனவே, மதிப்பீடுகளை திட்டமிடலின் போதும் மற்றும் பகுப்பாய்வு செய்தலின் போதும் இவை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். இந்த குறைபாடுகளின் ஏதேனும் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்கள் சுகாதார நிலையங்களுக்கு வருகை தருவர். போதிய சீரான உணவுப் பழக்கத்தை முன்னெடுப்பதற்கான பிரவேசம் குறைவாக உள்ளமையே இதற்கு காரணமாக இருக்கும். அத்துடன், மக்கள் அதிகரிப்பதனால் ஏற்படும் பிரச்சினையாகவும் இது உள்ளது. நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை அளவிடுதல் என்பது நேரடியானதாக அல்லது மறைமுகமா-னதாக இருக்கலாம். மறைமுகமான மதிப்பீடுகளில் மக்கள் மட்டத்தில் போஷாக்கு உட்கொள்ளலை கணிப்பிடல் மற்றும் உணவுப் பிரவேசத்திற்கான, கிடைக்கக் கூடிய மற்றும் பயன்படுத்துவதற்கு கிடைக்கக் கூடியதாக உள்ள தரவுகளை மீளாய்வு செய்வதன் மூலம் குறைபாட்டுச் சவாலை மேலதிக கவனத்திற்கு உட்படுத்தல் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 1இனைப் பார்க்கவும் **பக்கம் ????**). அத்துடன், உணவு வழங்கல் போதிய அளவை மதிப்பீடு செய்தல் (உணவுப் பாதுகாப்பு - உணவுப் பரிமாற்றங்கள் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ????**). நேரடி மதிப்பீடுகள், இயலுமான சந்தர்ப்பங்களில், நோயாளியை தனித்து அல்லது மக்கள் தொகையில் இருந்து மருத்துவ அல்லது துணை மருத்துவ குறைப்பாடுகளை அளவிடுவதில் ஈடுபட்டுள்ளன. உ-ம், இரும்புச் சத்து குறைபாட்டின் உரிமை தகுதி அளவீட்டில் பயன்படுத்தப்பட்ட குருதிச் சோகை கட்டுப்படுத்தல் ஆய்வின் போதான ஹீமோகுளோபின் தொடர்பான அளவீடு முன்னெடுக்கப்படும்.

7. **போஷாக்கு குறைபாட்டின் மட்டங்களை விளக்கல்:** போஷாக்கு குறைபாடு சம்பந்தப்பட்ட தேவையான இடையீடுகளுக்குத் தேவையான மட்டங்களை

தீர்மானிப்பதற்கு மக்களின் அளவு மற்றும் அடர்த்தி மற்றும் நோய் பாதித்த அளவு மற்றும் இறப்பு என்பவற்றின் அடிப்படையில் சூழ்நிலையின் விளக்கமான பகுப்பாய்வு தேவையாகும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும் **பக்கம் ????**). சுகாதார குறிகாட்டிகள், பருவகால வீழ்ச்சி, IYCF குறிகாட்டிகள், போஷாக்கு குறைபாட்டின் அனர்த்தத்திற்கு முந்தைய மட்டங்கள், நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளின் மட்டங்கள் (பிற்சேர்க்கை 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் பகுதியைப் பார்க்கவும் **பக்கம் ????**), உலகளாவிய தீவிரமான போஷாக்கின்மை சம்பந்தப்பட்டதாக மிகவும் தீவிரமான போஷாக்கின்மையின் விகிதம் மற்றும் போஷாக்கு குறைபாட்டிற்கான மறைந்துள்ள காரணங்களில் தாக்கம் செலுத்தும் வேறு காரணிகள் என்பவற்றுக்கான குறிப்புதவிகளும் அதற்குத் தேவையாகும். முறைகளை கண்காணிப்பதற்கு மிகவும் செலவு குறைந்த வழியாக முழுமையான தகவல் முறைகள் கூட்டிணைக்கப்படலாம். இயலுமான சந்தர்ப்பங்களில், உள்ளூர் ஸ்தாபனங்கள் மற்றும் மக்கள் கண்காணித்தல் நடவடிக்கைகள், முடிவுகளை விளக்கல் மற்றும் எந்தவொரு மறுசீரமைப்புக்களையும் திட்டமிடலில் பங்குபற்றல் வேண்டும். தீர்மானம் எடுத்தல் மாதிரிகள் மற்றும் அணுகுமுறைகளின் பிரயோகமானது, உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள் மற்றும் சுகாதாரமும், போஷாக்கும் என்பவற்றை பொருத்தமான வகையில் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் உள்ளடக்குகின்றன. (உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும் **பக்கம் ????**).

8. **தீர்மானம் எடுத்தல்:** போஷாக்கின்மையை முகாமைத்துவம் செய்தலை இலக்காகக் கொண்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பான தீர்மானங்களை வழங்கக் கூடியதாக மதிப்பீட்டு முடிவுகள் இருத்தல் வேண்டும். அனர்த்தத்தின் மிகவும் தீவிரமான நிலையின் போது பொதுவான உணவு விநியோகம் அல்லது வேறு தடுப்பு அல்லது உடனடி சிகிச்சை இடையீடுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் ஆழமான மதிப்பீடுகளின் பெறுபேறுகளுக்காக காத்திருக்க வேண்டும். மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில், பெறுபேறுகள் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். கருத்துசார் சட்டகம், போஷாக்கு மதிப்பீடுகளின் பெறுபேறுகள் மற்றும் பிரதிபலிப்பதற்கான நடைமுறையில் உள்ள இயலுமையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போஷாக்கு குறைபாட்டின் புரிந்துணர்வின் அடிப்படையிலானதாக தீர்மானம் எடுத்தல் அமைதல் வேண்டும்

2. குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல்

உகந்ததல்லாத குழந்தை மற்றும் இளம் சிறுவர்களிற்கான உணவூட்டல் பயிற்சியானது போஷாக்கு குறைபாடு, நோய் மற்றும் மரணம் ஆகிய பலவீனத்தினை அதிகரிக்கின்றது. அனர்த்த காலங்களின் போது இந்த சவால்கள் அதிகரிக்கின்றன. அத்துடன், வயது குறைந்தவர்களே இதில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். முதல் ஆறு மாதங்களுக்கு நேரடியான தாய்ப் பாலூட்டல், தொடர்ந்து 24 மாதங்களுக்கு தாய்ப் பாலூட்டல் அல்லது அதற்கு பின்னரும் மற்றும் போதிய, பொருத்தமான மற்றும் பாதுகாப்பான ஊட்டச்சத்து உணவுகளை ஆறு மாதங்களுக்கு வழங்கல் என்பன போன்ற உகந்த உணவூட்டல் பயிற்சிகள் வாழ்வதனை உறுதி செய்வதுடன், 24மாதங்களுக்கு குறைந்த வயதுடைய சிறுவர்களுக்கு நோய் தாக்கும் அளவும் குறைக்கப்படுகின்றது.

குழந்தை மற்றும் இளம் சிறுவர்களுக்கு உணவூட்டல் என்பது தாய்ப் பாலூட்டப்படும் மற்றும் தாய்ப் பாலூட்டப்படாத குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களின் போஷாக்குத் தேவைகளை பாதுகாக்கும் மற்றும் அவற்றுக்கு உதவி செய்யும் இடையீடுகள் மீதான அக்கறையாகும். முன்னுரிமை செலுத்த வேண்டிய இடையீடுகளில் தாய்ப் பாலூட்டல் பாதுகாப்பு மற்றும் உதவி, செயற்கையான பாலூட்டலின் சவால்களை குறைத்தல் மற்றும் பொருத்தமான மற்றும் பாதுகாப்பான ஊட்டச் சத்து வழங்கலை இயலுமானதாக்கல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எச்.ஐ.வி தாக்கத்துக்கு உள்ளான மக்கள், அகதிகள், பிறப்பின் போது குறைந்த எடையுடைய குழந்தைகள் மற்றும் மோசமாக போஷாக்கின்மைக்கு உள்ளானவர்கள் போன்ற விதி விலக்கான மிகவும் சிக்கலான சூழ்நிலைகளில் குழந்தை மற்றும் இளம் சிறுவர்கள் தொடர்பில் விசேடமான கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். தாய் மற்றும் சிறுவர்களின் நலனுக்கு கர்ப்பிணிகள் மற்றும் தாய்ப் பாலூட்டுபவர்கள் என இரு தரப்பினரதும் போஷாக்கு, பௌதீக மற்றும் மனநலனுக்கு பாதுகாப்பும், உதவியும் வழங்கப்பட வேண்டியதும் மிகவும் முக்கியமானது ஆகும். பெற்றோரின் பெற்றோர், தனியான தந்தைகள் அல்லது சகோதரர்கள் போன்ற பாதுகாவலர்களின் விசேட தேவைகளும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். வேறுபட்ட துறைகளை ஈடுபடுத்துவது என்பது உரிய நேரத்தில் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் மற்றும் அவர்களது தாய்மாரின் பரந்த போஷாக்குத் தேவைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் பொருத்தமான வகையில் எட்டுவதற்கும் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். இந்த அத்தியாயத்தில் உள்ள பல தரங்களுக்கும் மற்றும் ஏனைய அத்தியாயங்களில் உள்ள மேலதிகமானவைக்கும் IYCF என்பது தொடர்புடையது ஆகும்.

குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களுக்கு உணவூட்டல் தரம் 1: கொள்கை வழிகாட்டி மற்றும் ஒருங்கிணைப்பு

மக்களில் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவருக்கான உணவூட்டலில் பாதுகாப்பு மற்றும் பொருத்தப்பாடு என்பது பிரதான கொள்கை வழிகாட்டல் மற்றும் உறுதியான ஒருங்கிணைப்பின் ஊடாக பாதுகாக்கப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அவசர காலங்களில் குழந்தைகளுக்கு உணவூட்டல் (IFE) தொடர்பிலான செயற்பாட்டு வழிகாட்டிகளின் உறுப்புரைகள் மற்றும் தாய்ப் பாலூக்கான மாற்றீடை சந்தைப்படுத்தலில் சர்வதேச ஒழுக்க விதி மற்றும் தொடர்ச்சியான சம்பந்தப்பட்ட உலக சுகாதார மாநாடு (WHA) தீர்வுகள் (ஒழுக்கக் கோவை என அறியப்பட்டது) என்பன மேம்படுத்தப்படல் (வழிகாட்டல் குறிப்பு 1-2ஐப் பார்க்கவும்).
- தாய்ப் பாலூக்கான மாற்றீடு (BMS), வேறு பால் உற்பத்திகள், போத்தல்கள் மற்றும் என்பவற்றை உதவியாக பெறுவதனை அல்லது கோருவதனை தவிர்க்கவும் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- தேசிய மற்றும்/அல்லது நிறுவன கொள்கை என்பது IYCFஐ அடையாளங் காண்பதாக மற்றும் IFE தொடர்பான செயற்பாட்டு வழிகாட்டிகளை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- IYCF தொடர்பான பிரதான ஒருங்கிணைத்தல் அங்கமானது ஒவ்வொரு அவசர கால நிலையிலும் நியமிக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- தாய்ப் பாலுக்கான மாற்றீடு, பால் உற்பத்திகள், போத்தல்கள் மற்றும் உறிஞைகள் சம்பந்தப்பட்ட அங்கங்கள் நியமிக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- ஒழுக்கக் கோவைகள் மீறப்படல் கண்காணிக்கப்படுவதுடன், அறிக்கைப்படுத்தப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **கொள்கை வழிகாட்டல், ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல்:** அவசரகால நிலையின் போதான நிகழ்ச்சிகளின் பிரதான கொள்கை வழிகாட்டல் ஆவணங்களுக்கு IFE மற்றும் நடத்தையின் செயற்படுத்தல் வழிகாட்டலை உள்ளடக்கவும். மேலதிக வழிகாட்டல்களை குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில் பெறுறுக் கொள்ளலாம். தேசிய மற்றும் சர்வதேச முன்னெச்சரிக்கை திட்டங்கள் மற்றும் அவசரகால நிலை மறுசீரமைப்புக்கள் IFE தொடர்பான செயற்படுத்தல் வழிகாட்டலை பின்பற்றுவதனை உறுப்பு நாடுகள் உறுதி செய்ய வேண்டும் என WHA Resolution 63.23 (2010)

வலியுறுத்துகின்றது. அனர்த்த முன்னெச்சரிக்கையானது IFE தொடர்பான கொள்கை அபிவிருத்தி, ஆற்றுப்படுத்தல் பயிற்சி மற்றும் BMSக்கு முழுமையான நன்னடத்தை கோவைகளை அடையாளங் காணல் மற்றும் குறை நிரப்பு உணவு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. IYCF தொடர்பான முன்னணி ஒருங்கிணைத்தல் அங்கமானது அனைத்து அவசர கால நிலைகளின் போதும் நியமிக்கப்படல் வேண்டும். நடத்தை மீறல்கள் தொடர்பில் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பன உதவியின் நம்பகத் தன்மைக்கு முக்கியமான பங்களிப்பினை வழங்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான தெளிவான, தொடர்ச்சியான தொடர்பாடல் மற்றும் ஊடக அறிக்கைகள் மறுசீரமைப்பில் முக்கியமான செல்வாக்கினை செலுத்தும்.

2. **பால் மற்றும் பால் உற்பத்தி உணவுகளை கையாளல்:** பால் மற்றும் பால் உற்பத்தி உணவுகள் என்பன இலக்கு வைக்கப்படாத விநியோகத்தில் உள்ளடக்கப்படக் கூடாது (உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும் **பக்கம் ????**). செயற்கையான உணவூட்டல் தொடர்பிலான குறிகாட்டல்கள் IFE மற்றும் கோவை சம்பந்தப்பட்ட செயற்படுத்தல் வழிகாட்டல்களுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். அதேவேளை, நியமிக்கப்பட்ட IFE ஒருங்கிணைத்தல் அங்கத்தின் வழிகாட்டலின் கீழ் செயற்பட வேண்டும். BMS, பால் உற்பத்தி உணவுகள், போத்தல்கள் மற்றும் உறிஞைகள் என்பன அவசர கால நிலைமைகளில் எதிர்பார்க்கப்படக் கூடாது அல்லது ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. இவ்வாறான உதவிகளை வழங்கக் கூடிய நன்கொடைகளும் நியமிக்கப்பட்ட அங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படல் வேண்டும். அத்துடன், உதவிகளின் முகாமைத்துவமானது IFE ஒருங்கிணைத்தல் அங்கத்தினால் தீர்மானிக்கப்படும்.

குழந்தைகள் மற்றும் இளஞ் சிறுவர்கள் உணவூட்டல் தரம் 2: அடிப்படை மற்றும் திறன் உதவி

குழந்தைகள் மற்றும் இளஞ் சிறுவர்களின் தாய்மார் மற்றும் பராமரிப்பவர்களுக்கு போஷாக்கு, உடல் நலன் மற்றும் வாழ்வாதார வெளியீடுகள் மீதான சவால்களை குறைக்கும் மற்றும் ஒழிப்பதற்கு உதவும் வகையில் தக்க நேரத்தில் மற்றும் பொருத்தமான உணவூட்டல் உதவிகளை பெறுவதற்கான பிரவேசம் இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பாதுகாப்பான மற்றும் பொருத்தமான IYCF பாதுகாப்பதற்கும் மற்றும் உதவி வழங்குவதற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட பல்துறை இடையீடுகளை முன்னெடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- உணவு, பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் மற்றும் வேறு ஆதரவளிக்கும் இடையீடுகளுக்கான பிரவேசத்தில் கர்ப்பிணிகள் மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- கர்ப்பிணிகள் மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்கள் மற்றும் 0-24 மாதங்களுடைய சிறுவர்கள் போன்றோரை இலக்கு வைத்த இடையீடுகளில் திறன் சார்ந்த தாய்ப் பாலூட்டும் உளவள ஆலோசனைகளை ஒன்றிணைத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-7ஐப் பார்க்கவும்).
- புதிதாக குழந்தை பிறந்த தாய்மாரை இலக்கு வைத்து, நேரடியான தாய்ப் பாலூட்டலுக்கான உதவிகளை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- தக்க நேரத்திற்கான, பாதுகாப்பான, போதிய மற்றும் பொருத்தமான குறை நிரப்பு உணவூட்டலுக்கு உதவி வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- செயற்கை உணவூட்டல் அவசியமாக உள்ள குழந்தைகளின் தாய்மார் மற்றும் பாதுகாவலர்களுக்கு பொருத்தமான மற்றும் இணைந்த உதவிக்கான போதியளவு பிரவேசத்தினை இயலுமாக்கல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- விதி விலக்கான நெருக்கடி மிகுந்த சூழ்நிலைகளில் (நிர்க்கதியானவர்கள், தீவிரமாக போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், LBW குழந்தைகள் மற்றும் எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்டவர்கள்) குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களின் உணவூட்டல் உதவிகள் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 4-7ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- <6 மாதங்களுடைய சிறுவர்களின் தாய்ப் பாலூட்டலை துரிதமாக ஆரம்பித்தல், நேரடியான தாய்ப் பாலூட்டல் வீதமும், 1 மற்றும் 2 வருடங்களில் தொடரும் தாய்ப் பாலூட்டல் வீதம் தொடர்பான தரமான WHO குறிகாட்டிகளினை அளவிடல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3, 5-6ஐப் பார்க்கவும்).
- தக்க நேரத்தில், பொருத்தமான, போதியளவு போஷாக்கான மற்றும் பாதுகாப்பான குறைநிரப்பு உணவுகளை 6இலிருந்து 24மாதங்களை கொண்ட சிறுவர்களுக்கு வழங்குவதற்கு பராமரிப்பவர்களுக்கு பிரவேசம் இருத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐப் பார்க்கவும்).
- திறனான தாய்ப் பாலூட்டல் உதவிகளுக்கான பிரவேசம் தாய்ப் பாலூட்டும் தாய்மாருக்கு இருத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).
- பொருத்தமான மற்றும் செயற்கையான உணவூட்டல் அவசியமாக உள்ள குழந்தைகளுக்கான உதவிகளின் விநியோகம் தொடர்பில் கோவையுடன் இணைந்த பிரவேசம் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **எளிமையான செயற்பாடுகள் மற்றும் அடிப்படை இடையீடுகள்** IYCFக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சுற்றுச் சூழலை உருவாக்க வேண்டும். அவதானமாக இருப்பதுடன் தாய்ப் பாலூட்டலில் உள்ள சிக்கல்கள், குறை நிரப்பு உணவூட்டல் மற்றும்/அல்லது 0-24 மாதங்களை உடைய குழந்தைகளுக்கான செயற்கை உணவூட்டல் தொடர்பான பயிற்சிகள் தொடர்பில் எச்சரிக்கையாக இருப்பதுடன், விசாரணை அறிக்கைகளை தயாரிக்கவும். தாய்ப் பாலூட்டப்படாத குழந்தைகளுக்கு உடனடி உதவி தேவையாக இருக்கும். உடனடி அத்தியாவசியத்

தேவைகளை நிறைவேற்றுவதற்கு தாய்மார்கள், பாதுகாவலர்கள் மற்றும் கர்ப்பிணி மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்களுக்கான உதவியில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். 24 மாதங்களுக்கு குறைவான வயதுடைய சிறுவர்களின் குடும்பங்கள் மற்றும் புதிதாக பிறந்த அனைத்து குழந்தைகளினதும் தாய்மார்கள் குறித்து பதிவு செய்யப்படுவதுடன், போதியளவு உணவு கிடைப்பதற்கான பிரவேசத்தினை உறுதி செய்வதற்கு உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சிகளில் இணைக்கப்படல் வேண்டும். தாய்மார்களுக்கும், பாதுகாவலர்களுக்கும் வழங்கப்பட்ட உறைவிடங்கள் சமநிலையான மற்றும் அடிப்படையான IYCF உதவிகளை வழங்குவதற்கான பிரவேசத்தை பெற்றுத் தரும். ஆரம்பம் முதல் இனப்பெருக்கச் சுகாதாரம், முதனிலை சுகாதார பராமரிப்பு, உளச்சமூக சேவைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உணவூட்டல் நிகழ்ச்சிகள் போன்ற பிரதான சேவைகளுடன் தாய்ப் பாலூட்டல் உதவிகளும் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். .

2. **கர்ப்பிணி மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்கள்:** கர்ப்பிணி மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்கள் போதிய போஷாக்கு உணவுகளை உட்கொள்ளவில்லையெனின், மகப்பேற்றில் சிக்கல்கள், மகப்பேற்றின் போது மரணம், LBW குழந்தைகள் மற்றும் தாய்ப் பாலில் உள்ள உயிர்ச்சத்துக்களின் அளவு குறைவதன் காரணமாக மகப்பேற்று போஷாக்கு நிலையில் வீழ்ச்சி போன்ற நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். கருக்கொள்ளலின் போது குறைந்த மகப்பேற்று உடல் எடையானது தீவிரமாக குழந்தை LBWயுடன் ஒன்றிணைந்தது. அத்துடன், பருவ வயதில் கர்ப்பந்தரிப்பதன் அம்சமாகவும் அது உள்ளது. கர்ப்பணி மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்கள் செறிவூட்டிய பங்கீட்டு முறையை பெற்றாலும் அல்லது பெறாவிட்டாலும் மகப்பேற்று காலம் மற்றும் தாய்ப் பாலின் அளவு என்பவற்றை பாதுகாக்கும் பல நுண்ணூட்டச் சத்துக்கள் நிறைந்த ஒரு நாளாந்த தேவையை வழங்கும் நாளாந்த விநியோகத்தினைப் பெற வேண்டும். ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த இரும்பு மற்றும் துத்தநாகம் போன்றனவும் தொடர்ந்து வழங்கப்படல் வேண்டும். குழந்தை பேறுக்கு ஆறு தொடக்கம் எட்டு வாரங்களுக்கு முன்னர் பெண்கள் உயிர்ச்சத்து ஏஇனை உட்கொள்ள வேண்டும். மருந்து உட்கொள்ளும் அளவு, நேரம் தொடர்பிலான சர்வதேச பரிந்துரைகளுக்கு அமைய நுண்ணூட்டச் சத்துக்கள் வழங்கப்படல் வேண்டும். உளச்சமூக சேவைகளுக்கான குறிப்புதவிகளும் வழங்கப்படல் வேண்டும். விசேடமாக, மன அதிர்ச்சிக்கு உள்ளான மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும். பருவமான வயது தாயின் போஷாக்கு என்பது முக்கியமாக இருப்பினும், பருவமான வயதில் கர்ப்பந் தரித்தலை தடுப்பதற்கான நிகழ்ச்சிகள் LBW சம்பவங்கள் குறைவதற்கு ஏதுவாக அமையும்.

3. தாய் மற்றும் குழந்தையின் உடல்நலனை பாதுகாப்பதற்கான முன்னுரிமை வழங்க வேண்டிய இடையீடாக **நேரடியான தாய்ப் பாலூட்டலை துரிதமாக ஆரம்பித்தல்** (குழந்தை பிறந்து ஒரு மணித்தியாலத்திற்குள்) உள்ளது. LBW குழந்தைகள் மற்றும் அவர்களது தாய்மார், பிறப்பில் தொடரும் தோலுடன், தோல் உறவு மற்றும் நேரடியான தாய்ப் பாலூட்டலை துரிதமாக ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் பயன் பெறுவர் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் சுகாதார தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ????**).

4. **தாய்ப் பாலூட்டல்:** நேரடியான தாய்ப் பாலூட்டலின் மூலம் குழந்தைக்கு தாய்ப் பால் மாத்திரம் புகட்டப்படுகின்றது. நீர், வேறு நீர்ச் சத்து அல்லது

உணவு வழங்கப்பட மாட்டாது. தேவையான நுண்ணூட்டச் சத்துக்கள் வழங்கப்படுவது விதி விலக்காகும். முதல் ஆறு மாதங்களுக்கு குழந்தையின் உணவு மற்றும் திரவ பாதுகாப்பை அது உறுதி செய்கின்றது. அத்துடன், நோய் எதிர்ப்பு சக்தியையும் வழங்குகின்றது. நீர், தேகாரோக்கியம் மற்றும் போஷாக்கு நிலைமைகள் குறைவாக உள்ள விசேடமான சந்தர்ப்பங்களில் வளர்ந்த குழந்தைகள் மற்றும் சிறுவர்களையும் தாய்ப் பாலூட்டல் பாதுகாக்கின்றது. 24 மாதங்கள் அல்லது அதற்குப் பின்னரும் தாய்ப் பாலூட்டல் என்பது முக்கியமானதாக உள்ளது. தாய்ப் பாலூட்டல் இயலுமான அளவு நீண்ட காலங்களுக்கு குழந்தைக்கு வழங்கப்படுவதனை தாய்மார், குடும்பங்கள், சமுதாயங்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் மீள் உறுதி செய்தல் வேண்டும். தீவிரமான அவசர கால சூழ்நிலைகளில் மனவுறுதியானது வீழ்ச்சியடையலாம். மேலும் சிக்கலான சூழ்நிலைகளை கையாள்வதற்கு அழுத்தமான மக்கள் மற்றும் தீவிரமாக போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 6 மாதங்களுக்கு குறைவான குழந்தைகள் (தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் தரம் 2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ????**), கலந்த உணவூட்டல் வழமையானதாக இருக்கும் மக்கள் தொகை மற்றும் எச்.ஐ.வி தொற்று சூழ்நிலையில் குழந்தைகளுக்கு உணவூட்டல் உள்ளடங்கலாக திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீடு என்பன வேலைத் திறனுள்ள தாய்ப் பாலூட்டல் உதவிக்கு வழியேற்படுத்த வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).

5. **குறை நிரப்பு உணவூட்டல்** என்பது ஆறு மாதங்களிற்கு பின்னர் தாய்ப் பாலுக்கு மேலதிகமாக வேறு உணவு வழங்கப்படும் செயற்பாடாகும் (அல்லது தாய்ப் பாலூட்டப்படாத குழந்தைகளுக்கு பொருத்தமான தாய்ப் பால் மாற்றீடை வழங்குதல்). குறை நிரப்பு உணவூட்டலின் போது தாய்ப் பாலூட்டல் தொடர்வதுடன், முக்கியமாக உணவு மற்றும் நீர்ச் சத்து பாதுகாப்புக்கு பங்களிக்க வேண்டும். தாய்ப் பாலூட்டப்படாத குழந்தைகளுக்கு போஷாக்கு குறைபாடு ஏற்வடுதனை தடுப்பதற்கான உதவி வழங்கப்படல் வேண்டும். உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சிகளுடன் இணைப்பது, குறை நிரப்பு உணவூட்டலுக்கு உதவி வழங்குவதற்கு அத்தியாவசியமாகும். மக்கள் தொகையானது உணவு உதவியில் தங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில், பொருத்தமான நுண்ணூட்ச் சத்து செறிவூட்டப்பட்ட உணவு என்பன பொது பங்கீட்டு முறையில் உள்ளடக்கப்படல் வேண்டும். குறை நிரப்பு உணவின் பகுதியான தேவையாக இருக்கலாம். குறை நிரப்பு உணவூட்டல் காலத்தில் கொழுப்பு அடிப்படையிலான போஷாக்கு உணவுப் பொருட்களை உள்ளடக்கல், பயன்பாடு மற்றும் கால அவகாசத்திற்கான தெளிவான பிரமாணங்கள், வேறுபட்ட அவசரகால சூழ்நிலைகளில் அவசியமாகும். பயன்படுத்துவதற்கு தயாராக உள்ள நோய் தீர்க்கும் இயல்புடைய உணவுகள் குறை நிரப்பு உணவு அல்ல. குறை நிரப்பு உணவு விநியோகமானது பிரயோக ரீதியான வழிகாட்டல் மற்றும் அவற்றை தயாரிப்பதற்கான செயல் விளக்கத்துடன் கூடியதாக இருத்தல் வேண்டும். உயிர்ச்சத்து ஏ உள்ளடங்கலாக நுண்ணூட்டச் சத்து விநியோகத்தின் பயன்பாடு நவீன பரிந்துரைகளின் அடிப்படையிலானதாக இருத்தல் வேண்டும். LBW குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் இரும்புச் சத்து வழங்கப்படுவதன் மூலம் பயனடைவர். மலேரியா பரவக் கூடிய இடத்தில் மக்கள் இருப்பின், இரும்புச் சத்து வழங்கலானது நோய் தொற்றும் வாய்ப்புள்ள சிறுவர்கள் மற்றும் இரும்புச் சத்து குறைபாடுள்ளவர்களை பொருத்தமான மலோரியா கட்டுப்படுத்தல் செயற்பாடுகளுடன் இலக்கு வைக்க வேண்டும்.

6. **செயற்கை முறை உணவூட்டல்:** தாய்ப் பாலூட்டப்படாதவர்கள் துரிதமாக அடையாளங் காணப்படல் வேண்டும். அத்துடன், உணவூட்டல் தெரிவுகளை கண்டறிவதற்காக வேலைத் திறனுள்ள நிபுணர்களினால் மதிப்பீடு முன்னெடுக்கப்படல் வேண்டும். மகப்பேற்று தாய்ப் பாலூட்டல் கிடைக்காத சந்தர்ப்பங்களில், தாய்ப் பாலூட்டும் கொடையாளி, விசேடமாக செவிலித் தாய்மார் முக்கியமான பங்கினை வகிப்பர். விசேடமாக இளம் மற்றும் LBW குழந்தைகளுக்கு உணவூட்டலில் அவர்களுடைய பங்கு முக்கியமானதாக இருக்கும். செயற்கையான உணவூட்டல் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில், போதிய அளவான பொருத்தமான BMSஇற்கு இயலுமான வரையில் (குழந்தைகள் ஆகக் குறைந்தது 6மாதங்களாகும் வரை) தாய்மார்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு உறுதி செய்யப்பட்ட பிரவேசம் அவசியமாகும். அத்துடன், அத்தியாவசிய உதவி-களையும் அதனுடன் இணைக்க வேண்டும் (நீர், எரிபொருள், களஞ்சியப்படுத்தல் வசதிகள், வளர்ச்சி கண்காணிப்பு, மருத்துவ பராமரிப்பு, நேரம்). கலந்த அளவில் உணவூட்டப்படும் ஆறு மாதங்களுக்கு குறைவான குழந்தைகள் நேரடியான தாய்ப் பாலூட்டலை பெறுவதற்கு உதவி வழங்கப்படல் வேண்டும். சுத்தமாக்குவதில் சிக்கல்கள் உள்ளமையினால் பாலூட்டும் போத்தல்கள் பயன்படுத்தப்படக் கூடாது. செயற்கை உணவூட்டலுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சிகள் தாய்ப் பாலூட்டலானது குறைத்து மதிப்பிடப்படவில்லை என்பதனை உறுதி செய்வதற்கு சமுதாயத்தின் IYCF பயிற்சிகளை தர குறிகாட்டிகளைப் பயன்படுத்தி கண்காணித்தல் வேண்டும். விசேடமாக வயிற்றுப் போக்கு தொடர்பான கவனத்துடன் தனிப்பட்ட மற்றும் மக்கள் மட்டங்களில் நோய் தாக்கும் அளவு தொடர்பான மேற்பார்வை முன்னெடுக்கப்படல் வேண்டும். குறைந்த அளவான உயிர்ச்சத்து ஏ என்பது, தாய்ப் பாலூட்டப்படாத 6 மாதங்களுக்கு குறைந்த குழந்தைகளுக்கு வழங்கப்படுவது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

7. **எச்.ஐ.வி மற்றும் குழந்தைகளுக்கு உணவூட்டல்:** எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான தாய்மாருக்கு பிறந்த குழந்தைகளுக்கு உணவூட்டல் தெரிவு குறித்து தீர்மானிக்கும் போது எச்.ஐ.வி அற்ற சிறுவர்கள் வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல் என்பது முக்கியமான அவதானமாக இருத்தல் வேண்டும். தெரியாத அல்லது எச்.ஐ.வி நிலை அற்ற தாய்மார்கள் தாய்ப் பாலூட்டுவதற்கு மக்கள் தொகை சம்பந்தமான பொதுவான IYCF பரிந்துரைகளின் அடிப்படையில் உதவி வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-5ஐப் பார்க்கவும்). எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான மக்களுக்கு, ரெட்ரோவைரசுக்கு எதிரான (ARV) இடையீடுகளை தாய்ப் பாலூட்டலுடன் இணைத்தல் என்பது பிறந்த பின்னரான எச்.ஐ.வி பரிமாற்றத்தை குறைப்பதற்கான வழியாகும். ரெட்ரோவைரசுக்கு எதிரான சிகிச்சைகளுக்கான பிரவேசத்திற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதார தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ????**). மாற்றுவழி தாய்ப் பாலூட்டலினால் குழந்தைகளுக்கு ஏற்படும் சவால்கள் அவசரகால நிலையில் மிகவும் அதிகமாக இருக்கும். ரெட்ரோவைரசுக்கு எதிரான சிகிச்சைகள் கிடைக்கக் கூடியதாக இல்லாத சந்தர்ப்பங்கள் உள்ளடங்கலாக எச்.ஐ.வி தாக்கத்துக்கு உள்ளான தாய்மாருக்கு பிறக்கும் குழந்தைகளின் வாழ்தலுக்கும் மற்றும் எச்.ஐ.வி தாக்கத்துக்கு உள்ளான குழந்தைகளின் வாழ்தலுக்கும் தாய்ப் பாலூட்டல் என்பது முக்கியமான பங்கினை வகிக்கின்றது என்பதே இதன் அர்த்தமாகும். ஏற்கனவே மாற்றுவழி உணவூட்டலை பெற்று வரும் குழந்தைகளுக்கு உடனடியான செயற்கை உணவூட்டல் உதவிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்)

3. தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு தொடர்பான முகாமைத்துவம்

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நோய் பாதிக்கும் அளவு மற்றும் மரணம் சம்பவிப்பதற்கு அதிகரித்த சவாலை ஏற்படுத்தும் விடயமாக தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு என்பன காணப்படுகின்றன. எனவே, இவ்வாறான ஆபத்து அல்லது அச்சுறுத்தல் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில், போஷாக்கு குறைபாட்டை சரி செய்யும் மற்றும் தடுக்கும் சேவைகளுக்கான பிரவேசத்தை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். போஷாக்கு குறைப்பாட்டுக்கான மறைந்திருக்கும் காரணிகள் அடையாளங் காணப்படாவிட்டால் இந்த சேவைகளின் தாக்கம் குறிப்பிடத்தக்களவு குறைவடையும். அதேவேளை, சுகாதாரம், WASH, உணவு பரிமாற்றங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றுக்கு உதவி புரியும் ஏனைய இடையீடுகளினது தாக்கமும் குறைவடையும். மிதமான தீவிரமான போஷாக்கின்மையானது பல்வேறு வழிகளில் அடையாளப்படுத்தப்படலாம். அனர்த்தங்களின் போது மிதமான தீவிர போஷாக்கின்மையை தடுப்பதற்காக மற்றும் சிகிச்சை அளிப்பதற்கான மற்றும் மோசமான தீவிரமான போஷாக்கின்மையை தடுப்பதற்கான முதன்மை மூலோபாயமாக மிகை நிரப்பு உணவூட்டல் காணப்படுகின்றது. தீவிரமான போஷாக்கின்மை, பலவீனமான மக்கள் குழுக்கள் மற்றும் தீவிரமான போஷாக்கின்மை அதிகரிப்பதற்கான ஆபத்து போன்ற மட்டங்களின் அடிப்படையில் இது இலக்கு வைக்கப்படலாம். தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் தொடர்பான முகாமைத்துவ தரம் 1இன் குறிகாட்டிகள் இலக்கு வைக்கப்பட்ட மிகை நிரப்பு உணவூட்டலையே பிரதானமாக குறிப்பிடுகின்றன. அதேவேளை, மிகை நிரப்பு உணவூட்டலுக்கு வரையறுக்கப்பட்ட தாக்க குறிகாட்டிகள் இல்லாத நிலையில், உள்ளடக்கத்தை கண்காணித்தல், ஏற்றுக் கொள்ளும் தன்மை மற்றும் வழங்கப்படும் பங்கீட்டு முறை என்பன முக்கியமானதாகும்.

மோசமான தீவிரமான போஷாக்கின்மையானது வேறுபட்ட அணுகுமுறைகள் ஊடாக வெளிப்படக் கூடிய நோய் தீர்க்கும் இயல்புடைய பராமரிப்பின் ஊடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. நிலைமைகள் உகந்ததாக இருக்கும் போது தெரிவு செய்யப்பட வேண்டிய அணுகுமுறையாக தீவிரமான போஷாக்கின்மை தொடர்பிலான சமுதாயஞ் சார்ந்த முகாமைத்துவம் உள்ளது. மோசமான தீவிரமான போஷாக்கின்மையை அடையாளப்படுத்தும் நிகழ்ச்சிகள், சமுதாய ஒன்று திரட்டல் (பயனுள்ள தொடர்பாடல், செயற்றிறன் மிக்க சம்பவ முடிவுகள், குறிப்புதவிகள் மற்றும் பின்தொடரல்கள் உள்ளடங்கலாக), மருத்துவ வேறுபாடுகள் இன்றி

மோசமான தீவிரமான போஷாக்கின்மைக்கு வெளி நோயாளர் சிகிச்சை மற்றும் மருத்துவ குறைபாடுகள் அல்லது இளம் சிறுவர்களுக்கு உள்ளக சிகிச்சை முகாமைத்துவம் போன்றன ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை பெரும்பாலான சூழ்நிலைகளில் அடையாளங் காண்பது சிக்கலானது. அதேவேளை, மோசமான குறைபாடுகள் தொடர்பான மருத்துவஞ் சார் அடையாளங்கள் நோய் அறுதியீட்டுக்கு இலகுவாக இருக்கலாம். உடல் மீதான மற்றும் மக்களின் வாழ்தலுக்கான சிக்கலான தடையாக உப மருத்துவ குறைபாடுகள் உள்ளன. மக்கள் மத்தியில் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் தடுக்கப்படும் சந்தர்ப்பங்களில், அனர்த்தத்தினால் அது மீண்டும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த குறைபாடுகளை மக்கள் அடிப்படையிலான இடையீடுகள் மற்றும் தனிப்பட்ட சிகிச்சைகளின் மூலம் தடுக்க முடியும்

தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு தொடர்பான முகாமைத்துவ தரம் 1: மிதமான தீவிரமான போஷாக்கின்மை

மிதமான தீவிரமான போஷாக்கின்மையை அடையாளங் காணல்.

.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- இடையீடுகளை நிர்ணயிக்கவும் மற்றும் நிறைவு செய்யவும் தெளிவாக வரையறுக்கப்பட்ட மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலோபாயங்கள், குறிக்கோள்கள் மற்றும் பிரமாணங்களின் தொடக்கத்தில் இருந்து ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1).
- ஆரம்பம் முதல் மக்களின் ஈடுபாட்டுடன் பிரவேசம் மற்றும் சேவை சென்றடையும் அளவினை அதிகரித்தல் (வழிகாட்டல் குறிப்பு 2 மற்றும் மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும்).
- தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரமாணத்திற்கு எதிரான மதிப்பீட்டின் அடிப்படையில் தனிநபர்களை அனுமதித்தலை மற்றும் வெளியேற்றலை தீர்மானித்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4 மற்றும் பிற்சேர்க்கைகள் 4: தீவிர போஷாக்கின்மையை அளவிடல் மற்றும் 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ????).
- மிதமான தீவிர போஷாக்கின்மையின் முகாமைத்துவத்தினை, மோசமான தீவிர போஷாக்கின்மையுடன் ஒன்றிணைக்கவும். அத்துடன், இயலுமாயின் நடைமுறையில் சுகாதார சேவைகளுடனும் ஒன்றிணைத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐப் பார்க்கவும்).
- தளத்தில் உணவூட்டலுக்கான தெளிவான பங்கீட்டு முறை இல்லையெனின், உலர் அல்லது பொருத்தமான உடனடியாக பயன்படுத்தக் கூடிய மிகை நிரப்பு உணவுப் பங்கீடுகளை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

- எல்லோருக்கும் பொதுவான மற்றும் மோசமான மறுசீரமைப்புக்களுக்கான காரணங்களை விசாரணை செய்து, அதன் அடிப்படையில் செயற்படல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐப் பார்க்கவும்).
- தாய்ப் பாலூட்டலை பாதுகாத்தல், ஆதரித்தல் மற்றும் மேம்படுத்தல் குறித்த விசேடமான நோக்குடன் IYCF அடையாளப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

இந்த குறிகாட்டிகள் பிரதானமாக, 6-59வயதுப் பிரிவினருக்கு பிரயோகிக்கக் கூடியது. இருப்பினும், ஏனையோரும் இந்த நிகழ்ச்சியின் ஒரு பங்காக இருக்க முடியும்.

- இலக்கு வைக்கப்பட்ட மக்கள் தொகையின் 90வீதத்திற்கும் அதிகமானோர், ஒருநாளில் வந்து திரும்பும் அளவில் (மருத்துவ சிகிச்சைகள் உட்பட) நடந்து வரும் தூரம் - விநியோகிக்கும் இடங்களில் இருந்து அல்லது ஒரு மணி நேரமாக நடை தூரம் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- கிராமப் பகுதிகளில் ,50 வீதமாகவும், நகர்ப் புறங்களில் ,70 வீதமாகவும், முகாம் சூழ்நிலைகளில் ,90 வீதமாகவும் கொண்டு வரல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- இலக்கு வைக்கப்பட்ட மிகை நிரப்பு உணவூட்டல் நிகழ்ச்சிகளில் இருந்து வெளியேற்றப்படும் அளவில் உயிரிழந்தவர்கள் >3 வீதமாகவும், மீட்சி பெற்றவர்கள் >75 வீதமாகவும், இயல்பு நிலைக்குத் திரும்பியவர்கள் >15 வீதமாகவும் இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. போஷாக்கு சூழ்நிலையின் வேறுபாடு மற்றும் பரிமாணங்களை புரிந்து கொள்ளக் கூடியதன் அடிப்படையில் **நிகழ்ச்சி வடிவமைப்பு** அமைதல் வேண்டும். மிகை நிரப்பு உணவூட்டல் நடைமுறையானது இலக்கு வைத்தல் அணுகுமுறையை பின்பற்றலாம். தீவிர போஷாக்கின்மை மற்றும் அதிக சம்பவங்கள், தீவிர போஷாக்கின்மையில் அதிகரிப்பு ஏற்படுவதனால் உண்டாகும் ஆபத்து, அதிக சம்பவங்கள் நோய் தாக்கும் அளவு பிரமாணங்களினை பார்வையிடல் மற்றும் கண்காணித்தலுக்கான இயலுமை, கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்கள் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பிரவேசம் போன்றவற்றின் மட்டங்களின் அடிப்படையிலேயே எவ்வாறான அணுகுமுறைகள் எடுக்கப்படல் வேண்டும் என்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். தீவிர போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்களை கண்டறிவதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் இலக்கு வைக்கப்பட்ட மிகை நிரப்பு உணவூட்டலுக்கு பொதுவாக அதிக நேரம் மற்றும் முயற்சி தேவையாக இருக்கும். ஆனால், அதற்கு சிறிதளவு உணவு வளங்கள் தேவையாக இருக்கும். ஒட்டுமொத்தமான அணுகுமுறைக்கு பொதுவாக குறைந்த அளவு ஊழியர் நிபுணத்துவம் அவசியமாக இருக்கும். ஆனால், அதிக உணவு வளங்கள் அவசியமாகும். பயனுறுதி மிக்க சமுதாய ஒன்று திரட்டலானது நிகழ்ச்சி தொடர்பான மக்களின் புரிந்துணர்வு மற்றும் பயனுறுதித் தன்மைக்கு உதவி புரியும். உணவு, பணம் அல்லது

சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக நோய் தீர்க்கும் இயல்புடைய பராமரிப்பு. சுகாதார முறைமைகள், எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் மற்றும் காசநோய் வலையமைப்புக்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சிகள் என்பவற்றை ஒன்றிணைத்தல் மிகவும் முக்கியமாகும். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், நிகழ்ச்சித் தளங்களை எங்கு நியமிப்பது என்பதனை தீர்மானிப்பதில் ஈடுபடுத்திக் கொள்ளப்படல் வேண்டும். தளங்களை சென்றடைவதில் சிக்கலை எதிர்நோக்கும் பலவீனமான மக்கள் தொடர்பில் முக்கியமாக கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். நீண்ட கால உதவிக்கான வெளியேறும் மூலோபாயங்கள் அல்லது திட்டங்கள் என்பன தொடர்பில் ஆரம்பத்தில் இருந்தே கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

2. **செயல் எல்லை** என்பது உண்மையாக சிகிச்சைகளை பெறுபவர்களுக்கு எதிராக சிகிச்சை தேவையாக உள்ள தனிநபர்களை குறிக்கின்றது. செயல் எல்லையானது நிகழ்ச்சியின் ஏற்றுக் கொள்ளும் தன்மை, இடம் மற்றும் நிகழ்ச்சித் தளங்களுக்கு பிரவேசிக்கும் தன்மை, பாதுகாப்பு சூழ்நிலை, விநியோகத்தின் அலைவரிசை, காத்திருக்கும் நேரம், சேவையின் தரம், ஒன்று திரட்டல் அளவு, வீடுகளுக்கு விஜயம் செய்தல் கண்டறிதலின் அளவு மற்றும் அனுமதி பிரமாண ஒதுக்கீடு என்பன தாக்கத்தை ஏற்படுத்தலாம். சிறுவர்களுடன் நீண்ட தூரம் பயணிப்பதுடன் சம்பந்தப்பட்ட சவால்கள் மற்றும் செலவுகளை குறைப்பதற்கும் மற்றும் மக்கள் தம்மை விட்டு இடம்பெயர்வதற்கான சவாலை குறைப்பதற்கும் நிகழ்ச்சித் தளங்கள் இலக்கு வைக்கப்பட்ட மக்கள் வதியும் இடங்களுக்கு அருகில் இருத்தல் வேண்டும். நம்பகத் தன்மை மற்றும் உருவாக்கப்பட்ட தகவல்களின் வகை என்பவற்றின் மட்டங்களின் அடிப்படையில் செயல் எல்லையை அளவிடுவதற்கான முறையியல்கள் வேறுபடும். அறிக்கையிடும் போது பயன்படுத்திய முறைமை குறிப்பிடப்படல் வேண்டும். வழங்கப்பட்ட சூழ்நிலையில் பொருத்தமான முறை எது என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கு நடப்பு வழிகாட்டல்கள் குறித்து கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும். செயல் எல்லை மதிப்பீடு முகாமைத்துவ கருவியாக கருதப்படல் வேண்டும். எனவே, அவசர கால உதவியின் இறுதி நிலை வரை செல்லாது.
3. **அனுமதி பிரமாணம்:** தனிநபர்களைத் தவிர தீவிர போஷாக்கின்மையை வரையறுக்கும் மனிதர் அளவையியலை எட்டும் ஏனைய நபர்களும், மிகை நிரப்பு உணவூட்டலினால் பயன் பெறலாம். உ-ம்: எச்.ஐ.வி அல்லது காசநோயுடன் வாழும் மக்கள், பின்னடைவை தவிர்ப்பதற்கு நோய் நீக்கும் இயல்புடைய பராமரிப்பில் இருந்து விலக்கப்பட்டவர்கள், வேறு நீண்ட கால நோயுடைய தனிநபர்கள் அல்லது மாற்றுத் திறனுடைய நபர்கள் என்போரைக் குறிப்பிடலாம். மனிதர் அளவையியல் பிரமாணத்திற்கு வெளியே உள்ள தனிநபர்களும் உள்ளடக்கப்படும் போது கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் முறைகள் சரிசெய்யப்பட வேண்டிய தேவையுள்ளது.
4. தேசிய வழிகாட்டிகள் அல்லது தேசிய வழிகாட்டிகள் கிடைக்கக் கூடியதாக இல்லாத சந்தர்ப்பங்களில் சர்வதேச வழிகாட்டிகளின் அடிப்படையில் **வெளியேற்றல் பிரமாணம்** அமைந்திருக்க வேண்டும். அத்துடன், செயற்பாட்டு குறிகாட்டிகளை அறிக்கையிடும் போது பயன்படுத்த வழிகாட்டிகள் தொடர்பில் குறிப்பிடப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

5. சிகிச்சை நிறைவடைந்து வெளியேறிய தனிநபர்களுடன் சம்பந்தப்பட்டதாக **செயற்பாட்டு குறிகாட்டிகள்** காணப்படும். மீட்சியடைந்தவர்கள், இறந்தவர்கள், பழைய நிலையிலேயே உள்ளவர்கள் அல்லது மீட்சியடையாதவர்கள் என அனைவரினது எண்ணிக்கையின் அடிப்படையிலும் வெளியேற்றப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை உருவாக்கப்படும். சிகிச்சையை நிறைவு செய்யாது உள்ள மற்றும் எதிர்காலத்தில் தொடரவுள்ளவர்கள் அல்லது காலந் தாழ்த்தி சிகிச்சையை தொடர வந்துள்ளவர்கள் போன்றோர் குறை நிரப்பு சேவைகளுக்கு (சுகாதார சேவைகள் போன்றன) குறிப்பிடப்பட்ட தனிநபர்கள் ஆகும். சிகிச்சையை நிறைவு செய்யாத ஏனைய தளங்களுக்கு மாற்றப்பட்ட தனிநபர்கள் மற்றும் செயற்பாட்டு குறிகாட்டிகளுக்குள் இணைக்கப்படக் கூடாது. செயற்பாடுகள் சார்ந்த குறிகாட்டிகள் பின்வருமாறு:

சுகமடைந்து வெளியோரின் வீதம்=

சுகமடைந்த தனிநபர்களின் எண்ணிக்கை
———————————————— ஒ 100 **வீதம்**
வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை

உயிரிழந்த வெளியேறியோரின் வீதம் =

உயிரிழப்புக்களின் எண்ணிக்கை
———————————————— ஒ 100 **வீதம்**
வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை

பழைய நிலைக்கு திரும்பியதால் வெளியோரின் வீதம் =

பழைய நிலைக்கு திரும்பியோரின் எண்ணிக்கை
———————————————— ஒ 100 **வீதம்**
வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை

சுகமடையாது வெளியோரின் வீதம் =

சுகமடையாது வெளியேறிய தனிநபரின் எண்ணிக்கை
———————————————— ஒ 100 **வீதம்**
வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை

சுகமடைவதற்கு சிறந்த நிலை தொடர்பில் பக்கச்சார்பற்ற பெறுபேறுகளைப் பெறுவதற்கு நோய் நீக்கும் இயல்புடைய பராமரிப்பில் இருந்து வெளியேறிய பின்னர் அனுமதிக்கப்பட்ட தனிநபர்கள் தனியான வகையாக குறிப்பிடப்படல் வேண்டும். மாற்றுத் திறன், மரபு வழிக் குறைபாடு அல்லது அறுவைச் சிகிச்சை பிரச்சினைகள் என்பவற்றுக்கு இரண்டாம் நிலையில் உள்ள தீவிரமான போஷாக்கின்மையுடன் உள்ள சிறுவர்கள் நிகழ்ச்சி அறிக்கையிடலில் புறக்கணிக்கப்படக் கூடாது. அறிக்கையிடலின் போது 6-59 மாதங்களுடையவர்கள் முக்கியமான குழுவாக இருத்தல் வேண்டும். மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறிகாட்டிகளுக்கு மேலதிகமாக, செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்யும் போது, பங்குபற்றல், நிகழ்ச்சியின் ஏற்றுக் கொள்ளல் தன்மை (ஏற்கனவே இருந்த மற்றும் செயல் வல்லமை அளவே இதற்கான சிறந்த அளவீடாக இருக்கும்), வழங்கப்பட்ட உணவின் அளவு மற்றும் தரம், செயல் வல்லமை, ஏனைய நிகழ்ச்சிகளுக்கு மாற்றல் செய்தமைக்கான

காரணங்கள் (விசேடமாக மோசமான தீவிர போஷாக்கின்மைக்கு வழிநடத்தும் போஷாக்கு நிலையுடைய சிறுவர்கள்) மற்றும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட மற்றும் சிகிச்சை பெறும் நபர்களின் எண்ணிக்கை என்பன சார்ந்த முறைமைகள் கண்காணிக்கப்படல் வேண்டும். நோய் தாக்கும் வகை, மக்கள் தொகையில் உள்ள போஷாக்கு குறைப்பாட்டின் மட்டங்கள், குடும்பங்களில் மற்றும் மக்கள் தொகையில் உணவுப் பாதுகாப்பின்மையின் மட்டங்கள், மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள குறை நிரப்பு இடையீடுகள் (பொது உணவு விநியோகங்கள் அல்லது அதற்கு இணையான நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக) மற்றும் சேவை விநியோகத்திற்கான நடைமுறையில் உள்ள முறைமைகளின் இயலுமை போன்ற புறக் காரணிகளும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். சிகிச்சையின் எல்லாவற்றிற்கும் பொதுவான மற்றும் போதியளவு மறுசீரமைப்பின் தோல்விக்கான காரணங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

6. **சுகாதார உள்ளீடுகள் மற்றும் அக்கறைகள்:** சுகவீனம் ஏற்படுவதற்கு மிகவும் முக்கியமான தொடர்பு புள்ளியாக இலக்கு வைக்கப்பட்ட மிகை நிரப்பு உணவூட்டல் நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. நடைமுறையில் உள்ள சுகாதார சேவைகளினை நிகழ்ச்சிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன், குடற்புழு நீக்கல், உயிர்ச்சத்து ஏ வழங்கல், இரும்புச் சத்து மற்றும் போலிக் அமிலம் இணைந்த மலேரியா கண்டறிதல் மற்றும் சிகிச்சை, வயிற்றுப் போக்கு மற்றும் தொற்றுநோய் நீக்கலுக்கான துத்தநாகம் என்பன பயனுறுதி மிக்க வகையில் வழங்கப்படுவதனை உறுதி செய்தல் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - தொற்று நோய்களை கட்டுப்படுத்தல் தரம் 2 மற்றும் அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர்கள் சுகாதார தரம் 1-2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ????**). அதிகம் எச்.ஐ.வி பரவும் ஆபத்துள்ள பகுதிகளில், எச்.ஐ.வி பரிசோதனை மற்றும் முற்காப்பி சிகிச்சை என்பன கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அத்துடன், குறை நிரப்பு உணவு பங்கீட்டின் தரம் மற்றும் அளவு தொடர்பில் விசேட கவனமும் செலுத்தப்படல் வேண்டும்.

7. தீவிர போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 6 மாதங்களுக்கு குறைவான குழந்தைகளின் **தாய்ப் பாலூட்டும் தாய்மார்கள்** குறை நிரப்பு உணவூட்டலுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். மிதமாக போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் வெற்றிகரமாக தாய்ப் பாலூட்ட முடியும். அத்துடன், தமது சுய போஷாக்கு நிலையை பேணுவதற்கு அவர்களுக்கு போதிய போஷாக்கு உதவி வழங்கப்படல் வேண்டும். மிகை நிரப்பு உணவூட்டல் பங்கீடுகள், நேரடியான தாய்ப் பாலூட்டல் தொடர்பான வேலைத் திறனுள்ள தாய்ப் பாலூட்டல் உதவிகள் மற்றும் பாதுகாப்பான, போஷாக்கான மற்றும் பிரதிபலிக்கக் கூடிய குறை நிரப்பு உணவூட்டல் தொடர்பான அறிவுறுத்தல்கள் தாய்மார்களுக்கு வழங்கப்படல் வேண்டும். தீவிரமாக போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 6 மாதங்களுக்கு குறைவான குழந்தைகள், தேவையான சந்தர்ப்பங்களில் வேலைத் திறனுள்ள தாய்ப் பாலூட்டல் உதவி மற்றும் உள்ளக நோயாளர் பராமரிப்பு என்பவற்றுக்கு பொருத்தமான வகையில் பரிந்துரைக்கப்படல் வேண்டும்.

8. **பங்கீட்டு முறைகள்:** உலர் உணவுகள் அல்லது பயன்படுத்துவதற்கு தயாரான உணவுகள் வார அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை என்பதன்

அடிப்படையில் வழங்கப்படல் தளத்திலிருந்தான உணவூட்டலுக்கு சிறந்தது. ஆனால், அதன் உள்ளடக்கம் மற்றும் அளவு என்பது குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் அவர்கள் பகிரும் அளவு என்பவற்றை கருத்திற் கொண்டதாக அமைய வேண்டும். மிகை நிரப்பு உணவுகளை எவ்வாறு போஷாக்கான முறையில் தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பது தொடர்பிலும், எவ்வாறு மற்றும் எப்போது அது நுகர்வுக்கு எடுக்கப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 6, வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ????**) மற்றும் 24மாதங்களுக்கு குறைவான வயதுடைய சிறுவர்களுக்கு தொடர்ச்சியாக தாய்ப் பாலூட்டல் என்பன தொடர்பில் தெளிவான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். நடமாட்டச் சிக்கல்கள் உள்ளவர்கள் போன்ற பலவீனமான மக்கள், தமது விசேட தேவைகளை எட்டக் கூடிய நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கலாம்

தீவிரமான போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு தொடர்பான முகாமைத்துவ தரம் 2: மோசமான தீவிரமான போஷாக்கின்மை

மோசமான தீவிரமான போஷாக்கின்மையை அடையாளங் காணல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஸ்தாபிப்பதற்கு அல்லது நடைமுறையில் உள்ள சேவைகளுக்கு அதிக ஆதரவை வழங்குவதற்கு மற்றும் நிறுத்துவதற்கு அல்லது நிறைவு செய்வதற்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரமாணங்களை ஆரம்பத்திலேயே நிர்ணயித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- மோசமான தீவிர போஷாக்கின்மையை முகாமை செய்வதற்கு உள் நோயாளர் பராமரிப்பு, வெளி நோயாளர் பராமரிப்பு, பரிந்துரை மற்றும் மக்கள் தொகையை ஒன்று திரட்டல் அம்சங்களுடன் இடையீடுகளை உள்ளடக்கல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- ஆரம்பம் முதலே மக்கள் தொகையின் ஈடுபாட்டுடன் பிரவேசம் மற்றும் செயல் வல்லமையை அதிகரித்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3 மற்றும் மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும்).
- மோசமான தீவிர போஷாக்கின்மையை முகாமைத்துவம் செய்வதற்கு தேசிய ரீதியில் மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகளின் அடிப்படையில் போஷாக்கு மற்றும் மருத்துவ பராமரிப்புக்களை வழங்குதல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 4-8ஐப் பார்க்கவும்).
- வெளியேறல் பிரமாணத்தில் மனிதர் அளவையியல் மற்றும் மனிதர் அளவையியல் அற்ற சுட்டெண்கள் உள்ளடக்கப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

- எல்லாவற்றுக்கும் பொதுவான மற்றும் பிரதிபலிப்பு அற்ற அல்லது மரணத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமைக்கான காரணிகளை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் செயற்படுதல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 6-7ஐப் பார்க்கவும்).
- பாதுகாத்தல், ஆதரவளித்தல் மற்றும் தாய்ப் பாலூட்டலை முக்கியமாக எண்ணக்கருக்களுடன் IYCF அடையாளப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 9-10ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

இந்த குறிகாட்டிகள் பிரதானமாக, 6-59வயதுப் பிரிவினருக்கு பிரயோகிக்கக் கூடியது. இருப்பினும், ஏனையோரும் இந்த நிகழ்ச்சியின் ஒரு பங்காக இருக்க முடியும்.

- இலக்கு வைக்கப்பட்ட மக்கள் தொகையின் 90வீதத்திற்கும் அதிகமானோர், ஒருநாளில் வந்து திரும்பும் அளவில் (மருத்துவ சிகிச்சைகள் உட்பட) நடந்து வரும் தூரம் - விநியோகிக்கும் இடங்களில் இருந்து அல்லது ஒரு மணி நேரமாக நடை தூரம்.
- கிராமப் பகுதிகளில் >50 வீதமாகவும், நகர்ப் புறங்களில் >70 வீதமாகவும், முகாம் சூழ்நிலைகளில் >90 வீதமாகவும் கொண்டு வரல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- இலக்கு வைக்கப்பட்ட மிகை நிரப்பு உணவூட்டல் நிகழ்ச்சிகளில் இருந்து வெளியேற்றப்படும் அளவில் உயிரிழந்தவர்கள் >3 வீதமாகவும், மீட்சி பெற்றவர்கள் >75 வீதமாகவும், இயல்பு நிலைக்குத் திரும்பியவர்கள் >15 வீதமாகவும் உள்ளது (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **நிகழ்ச்சி வடிவமைப்பு:** இயலுமான வரையில் நடைமுறையில் உள்ள சுகாதார முறையின் இயலுமையின் அடிப்படையில், அதற்கு உதவி வழங்கக் கூடியவாறு நிகழ்ச்சி வடிவமைக்கப்படல் வேண்டும். மோசமான தீவிர போஷாக்கின்மையை பயனுள்ள வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான மேலதிக உதவிகளின் மட்டமானது, சுகாதார வசதி மற்றும் சமுதாய மட்டங்களில் நடைமுறையில் உள்ள இயலுமை, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் புவியியல் பரம்பல் மற்றும் பாதுகாப்பு சூழ்நிலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஆரம்பம் முதல், நிகழ்ச்சிகள் வெளியேறல் மூலோபாயங்கள் அல்லது திட்டங்களை அவசர கால நிலைக்கு அப்பால் நீண்ட கால ஆதரவு தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். நிகழ்ச்சிகளை நிறைவு செய்தல் அல்லது மாற்றல் தொடர்பான பிரமாணங்கள் நடைமுறையில் உள்ள இயலுமைகள் மற்றும் நடைமுறையில் உள்ள முறைமைகளுடன் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் போன்றன குறித்து கவனஞ் செலுத்தல் வேண்டும

2. **நிகழ்ச்சி அம்சங்கள்:** மோசமான தீவிர போஷாக்கின்மையின் முகாமைத்துவத்தை அடையாளப்படுத்தும் நிகழ்ச்சிகள் மருத்துவ குறைபாடுகள் உள்ள தனிநபர்களுக்கு மற்றும் தீவிர போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட <6 மாதங்கள் வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் மற்றும் எதுவிதமான மருத்துவ குறைபாடுகளும் அற்ற சிறுவர்களுக்கான பரவலாக்கப்பட்ட வெளிநோயாளர் பராமரிப்பு உள்ளக பராமரிப்பினை உள்ளடக்க வேண்டும். உள்ளக நோயாளர் பராமரிப்பு என்பது நேரடியான நடைமுறைப்படுத்தல் அல்லது பரிந்துரையின் ஊடாக முன்னெடுக்கப்படல் வேண்டும். மிகை நிரப்பு உணவூட்டல், எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் மற்றும் காசநோய் வலையமைப்புக்கள், முதன்மை சுகாதார சேவைகள் மற்றும் உணவு, பணம் அல்லது சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சிகள் போஷாக்கு குறைபாடு தொடர்பான உடனடியான மற்றும் மறைந்திருக்கக் கூடிய காரணங்களை அடையாளப்படுத்தும் வேறு சேவைகளுடனும் நிகழ்ச்சிகள் இணைக்கப்படல் வேண்டும். நிகழ்ச்சி ஏற்றுக் கொள்ளல், பிரவேசத் தன்மை மற்றும் செயல் வல்லமையை எட்டுவதற்கு பயனுறுதி மிக்க சமுதாய ஒன்றுதிரட்டல் உதவி புரியும். சிறுவர்களுடன் நீண்ட தூரம் பயணிப்பதுடன் சம்பந்தப்பட்ட சவால்கள் மற்றும் செலவுகளை குறைப்பதற்கும் மற்றும் மக்கள் தம்மை விட்டு இடம்பெயர்வதற்கான சவாலை குறைப்பதற்கும் வெளிநோயாளர் நிகழ்ச்சி தளங்கள் இலக்கு வைக்கப்பட்ட மக்களுக்கு அருகில் இருத்தல் வேண்டும்.

3. **செயல் வல்லமை:** மிதமான தீவிர போஷாக்கின்மையைப் போல், செயல் வல்லமை என்பது செயல் எல்லையானது நிகழ்ச்சியின் ஏற்றுக் கொள்ளும் தன்மை, இடம் மற்றும் நிகழ்ச்சித் தளங்களுக்கு பிரவேசிக்கும் தன்மை, பாதுகாப்பு சூழ்நிலை, விநியோகத்தின் அலைவரிசை, காத்திருக்கும் நேரம், சேவையின் தரம், ஒன்று திரட்டல் அளவு, வீடுகளுக்கு விஜயம் செய்தல் கண்டறிதலின் அளவு மற்றும் அனுமதி பிரமாண ஒதுக்கீடு என்பனவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். நம்பகத் தன்மை மற்றும் உருவாக்கப்பட்ட தகவல்களின் வகை என்பவற்றின் மட்டங்களின் அடிப்படையில் செயல் எல்லையை அளவிடுவதற்கான முறையியல்கள் வேறுபடும். அறிக்கையிடும் போது பயன்படுத்திய முறைமை குறிப்பிடப்படல் வேண்டும். வழங்கப்பட்ட சூழ்நிலையில் பொருத்தமான முறை எது என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கு நடப்பு வழிகாட்டல்கள் குறித்து கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும் (தீவிர போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **வழிகாட்டிகள்:** தேசிய வழிகாட்டிகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அவை பின்பற்றப்படல் வேண்டும். தேசிய வழிகாட்டிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அல்லது அவை சர்வதேச தரங்களை எட்டுவனவாக இல்லாத சந்தர்ப்பங்களில், சர்வதேச வழிகாட்டிகள் உள்வாங்கப்படல் வேண்டும். குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டிகளை காண முடியும்.

5. தேசிய மற்றும் சர்வதேச வழிகாட்டியுடன் ஒத்திசைவதாக **அனுமதி பிரமாணம்** இருத்தல் வேண்டும் (பிற்சேர்க்கை 4: தீவிர போஷாக்கின்மையை அளவிடல் மற்றும் குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவையைப் பார்க்கவும் **பக்கம்**

???). <6 மாதங்கள் வயதுடைய குழந்தைகள் மற்றும் மனிதர் அளவையியல் நிலையை தீர்மானிப்பதற்கு சிக்கலாக உள்ள குழுக்கள் என்பவற்றுக்கான அனுமதி பிரமாணம் மருத்துவ மற்றும் தாய்ப் பாலூட்டல் நிலை தொடர்பான அக்கறைகளை உள்ளடக்கல் வேண்டும். எச்.ஐ.வி தொற்று உள்ளமை நிரூபிக்கப்பட்ட அல்லது தொற்றுக்கு உள்ளான சந்தேகம் காணப்படுகின்ற தனிநபர்கள் மற்றும் காசநோய் அல்லது நீண்ட கால நோய் உள்ளவர்களுக்கு அனுமதிக்கான பிரமாணத்தை எட்டுவதற்கு பராமரிப்புக்கான சமமான சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். அனுமதி பிரமாணத்தை எட்டாத எச்.ஐ.வியுடன் வாழ்பவர்களுக்கு வழமையாக போஷாக்கு உதவி தேவையாக இருக்கும். அனர்த்தங்களின் போது மோசமான தீவிர போஷாக்கின்மைக்கான சிகிச்சை சார்ந்த சூழ்நிலைகளில் இது சிறந்த தெரிவாக இருக்காது. இந்த தனிநபர்களுக்கு மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு சமுதாய வீட்டு அடிப்படையிலான பராமரிப்பு, காச நோய் சிகிச்சை நிலையங்கள் மற்றும் தாய் மற்றும் பிள்ளைகளுக்கான தொற்றை இலக்கு வைத்த தடுப்பு நிகழ்ச்சிகள் போன்ற சேவைகள் உள்ளடங்கலாக பல்வேறு சேவைகள் மூலம் உதவி வழங்கப்படல் வேண்டும்.

6. **வெளியேறல் பிரமாணம் மற்றும் சுகமடைதல்:** வெளியேற்றப்பட்ட தனிநபர்கள் மருத்துவ குறைபாடுகள் அற்றவர்களாக தமது உணவருந்தும் விருப்பத்தினை மீளப் பெற்றவர்களாக, போஷாக்கு சார்ந்த இடீமா அற்றவர்களாக பொருத்தமான உடல் எடையினை அடைந்து, அதனை பேணுபவர்களாக இருத்தல் வேண்டும் (உ-ம்: இரண்டு தொடர்ச்சியான எடையிடலுக்கு). தாய்ப் பாலூட்டல் நிலையானது விசேடமாக 6 மாதங்களுக்கு குறைவான குழந்தைகளுக்கும், 24மாதங்கள் வரையான குழந்தைகளுக்கும் மிகவும் முக்கியமானது. தாய்ப் பாலூட்டப்படாத குழந்தைகள் நெருக்கமாக கண்காணிக்கப்படல் வேண்டும். முழு முதிர்வற்ற வெளியேறல் சம்பந்தப்பட்ட ஆபத்துக்களை தவிர்ப்பதன் அடிப்படையில் வெளியேறல் பிரமாணம் பின்பற்றப்படல் வேண்டும். சிகிச்சைக்காக தங்கியிருக்கும் காலத்தின் அளவினை வழிகாட்டல்கள் வரையறுக்கின்றன. அத்துடன், நீண்டகாலம் சுகமடைதலுக்கு எடுப்பதனை தவிர்ப்பதும் இதன் நோக்கமாகும். பயன்பாட்டின் போது வழிகாட்டிகளின் அடிப்படையில் தங்கியிருப்பதற்கான கால அளவு வேறுபடும். எனவே, தேசிய சூழ்நிலைக்கும் மற்றும் வழிகாட்டிகளுக்கும் ஏற்றதாக அவை சரிசெய்யப்படல் வேண்டும். போஷாக்கு இடீமாவுடன் மற்றும் போஷாக்கு இடீமா அற்றதாக தனிநபர்களின் எடை அதிகரிப்பானது கணக்கெடுக்கப்படல் வேண்டும். எச்.ஐ.வி, எய்ட்ஸ் மற்றும் காசநோய் என்பன சில போஷாக்கின்மையான நபர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். நீண்ட கால சிகிச்சைக்கான தெரிவுகள் அல்லது பராமரிப்பு சுகாதார சேவைகள் மற்றும் வேறு சமூக மற்றும் சமுதாய உதவி சேவைகளுடன் இணைந்ததாக அவதானிக்கப்படல் வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதார தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

7. **செயற்பாட்டு குறிகாட்டிகள்** மோசமான தீவிர போஷாக்கின்மையை முகாமைத்துவம் செய்வதற்கான உள் நோயாளர் மற்றும் வெளி நோயாளர் பராமரிப்பு வெளியீடுகளை இரண்டு முறை கணிப்பிடாது ஒன்றிணைக்க வேண்டும் (எ.கா. இரண்டு அம்சங்களுக்கு இடையிலான மாற்றல்களை நீக்கல்). இது சாத்தியமாக இல்லாத சந்தர்ப்பங்களில், அதற்கு ஏற்ற வகையில் வெளியீட்டு

வீதங்களின் விளக்கப்படுத்தல் என்பது சரி செய்யப்படல் வேண்டும். உதாரணமாக, வெளி நோயாளர் பராமரிப்பினை மாத்திரம் தனித்து நடைமுறைப்படுத்தும் போது சிறந்த குறிகாட்டிகளை எதிர்பார்க்கும் நிகழ்ச்சிகள் மற்றும் உள் நோயாளர் பராமரிப்பை நடைமுறைப்படுத்தும் போது ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான குறிகாட்டிகள் வெளிப்படுத்தப்படல். மோசமான தீவிர போஷாக்கின்மையினால் வெளியேற்றப்பட்ட தனிநபர்களின் மக்கள் தொகையானது சுகமடைந்தவர்கள், இறந்தவர்கள், முன்னைய நிலைக்கு திரும்பியவர்கள் அல்லது சுகமடையாதவர்கள் என்போரை உள்ளடக்கியதாகும் (தீவிர போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). ஏனைய சேவைகளுக்கு (உ-ம். மருத்துவ சேவைகள்) பரிந்துரைக்கப்பட்ட தனிநபர்கள் சிகிச்சையை நிறுத்தக் கூடாது. வெளி நோயாளர் சிகிச்சைக்கு மாத்திரமானதாக நிகழ்ச்சிகள் இருக்கின்ற போது, உள்ளக நோயாளர் சிகிச்சைக்கு மாற்றல் என்பது செயற்பாட்டை மதிப்பிடும் போது அறிக்கையிடப்படல் வேண்டும். எச்.ஐ.வி மருத்துவ ரீதியான சிக்கல் சம்பந்தப்பட்ட காரணிகள் எச்.ஐ.வி பாதிக்கப்பட்டுள்ளமை சார்ந்த அனுமதிகள் அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் உயிரிழப்பு அதிகமாக இருக்கும். இந்த சூழ்நிலைகளுக்கு செயற்பாட்டு குறிகாட்டிகள் சரிசெய்யப்படாத போதிலும், அவர்களுடைய அக்கறையானது விளக்கப்படுத்தலின் போது அத்தியாவசியமாகும். மேலதிகமாக, வெளியேற்றல் குறிகாட்டிகள், புதிய அனுமதிகள், சிகிச்சை மற்றும் உள்ளடக்கலில் உள்ள சிறுவர்களின் வீதம் என்பன செயற்பாட்டை கண்காணிக்கும் போது மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். மீள் அனுமதி, மருத்துவ நிலை சீர்குலைதல், எல்லாவற்றுக்கும் பொதுவான நிலை மற்றும் பிரதிபலிப்பதில் தோல்வி என்பன ஆய்வு செய்யப்பட்டு தொடர்ச்சியான அடிப்படையில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். பயன்பாட்டில் உள்ள வழிகாட்டிகளின் அடிப்படையில் இவற்றுக்கான வரைவிலக்கணம் உள்வாங்கப்படல் வேண்டும்.

8. **சுகாதார உள்ளீடுகள்:** மோசமான தீவிர போஷாக்கின்மை தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகளும் முறை சார்ந்த சிகிச்சைகளை தேசிய அல்லது சர்வதேச வழிகாட்டல்களுக்கு அமைய உள்ளடக்கல் வேண்டும். அத்துடன், காசநோய் மற்றும் எச்.ஐ.வி போன்ற மறைந்துள்ள காரணிகளை முகாமைத்துவம் செய்வதற்கான பரிந்துரைகளும் கட்டமைக்கப்படல் வேண்டும். அதிகளவிலான எச்.ஐ.வி பரவல் காணப்படும் பகுதிகளில் போஷாக்கின்மைக்கு சிகிச்சை அளிக்கும் மூலோபாயங்கள் எச்.ஐ.வி பரவலை தடுப்பதனை இலக்காகக் கொண்ட இடையீடுகள் மற்றும் மகப்பேறு மற்றும் சிறுவர்களின் வாழ்க்கைக்கு உதவும் இரண்டு நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தல் வேண்டும். காசநோய் மற்றும் எச்.ஐ.வி பரீட்சித்தல் மற்றும் பராமரிப்புக்கான பயனுறுதிமிக்க பரிந்துரை முறைமைகள் அத்தியாவசியமானவை.

9. **தாய்ப் பாலூட்டல் உதவி:** உள்ளக நோயாளர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குழந்தைகளே மிகவும் சுகவீனமுற்றவர்களாக இருப்பர். போஷாக்கு புனர்வாழ்வு மற்றும் மீளமைப்பு என்பவற்றின் ஒரு பகுதியாக வேலைத் திறனுள்ள தாய்ப் பாலூட்டல் உதவி அமைய வேண்டும். முக்கியமாக <6 மாதங்களுக்கு குறைவான வயதுடைய குழந்தைகளுக்கானது. இதன் பொருட்டு போதிய நேரம் மற்றும் வளங்கள் வழங்கப்படல் வேண்டும். திறன் சார்ந்த உதவியை இலக்கு வைத்த மற்றும் சக உதவியை இயலுமானதாக்கும் நிர்ணயிக்கப்பட்ட பகுதி

(தாய்ப் பாலூட்டல்) உதவி புரியலாம். 6 மாதங்களுக்கு குறைவான தீவிரமாக போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்ப் பாலூட்டும் தாய்மார், சிகிச்சைக்கு அனுமதிக்கப்படக் கூடிய மோசமான தீவிர போஷாக்கின்மையினால் மனிதர் அளவையியல் பிரமாணத்தை எட்டாவிடில் அவர்களுடைய போஷாக்கு நிலை குறித்த அக்கறை அற்று மிகை நிரப்பு பங்கீட்டினை பெற வேண்டும்.

10. **சமூக மற்றும் உளச்சமூக உதவி:** புனர்வாழ்வு பகுதியின் போது மோசமான தீவிர போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டின் ஊடாக உணர்வு சார்ந்த மற்றும் பௌதீக ஊக்கத்தினை வழங்க வேண்டியது முக்கியமாகும். இவ்வாறான சிறுவர்களின் பாதுகாவலர்களுக்கு தமது சிறுவர்களை சிகிச்சைக்கு உள்ளாக்குவதற்கு சமூக மற்றும் உளச்சமூக உதவி தேவையாக இருக்கும். இது ஒன்றுதிரட்டல் நிகழ்ச்சிகளின் ஊடாக எட்டப்படலாம். அவை, எதிர்காலத்தில் அங்கவீனமடைதல் மற்றும் புலன் உணர்வு சார்ந்த வலுக்குறைவு ஏற்பாடு தடுப்பதற்கான வழி மற்றும் சிகிச்சைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடுகள் 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). மோசமான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அனைத்து பாதுகாவலர்களும் சிகிச்சையின் போது, அறிவுறுத்தல்கள், முன்விளக்கம் செய்து காட்டல் மற்றும் சுகாதார மற்றும் போஷாக்கு தகவல்களின் ஊடாக தமது பிள்ளைகளுக்கு உணவூட்டுவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்

தீவிர போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள்
தரம் 3: நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள்

அவசரகால நிலைமைகளுடன் சம்பந்தப்பட்ட பொதுவான நோய்களை குறைத்தல் மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை அடையாளங்காண்பதற்கான நுண்ணூட்டச் சத்து இடையீடுகள் பொது சுகாதாரம் மற்றும் வேறு போஷாக்கு இடையீடுகளை ஒன்றிணைக்க வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை எவ்வாறு அடையாளங்காண்பது மற்றும் சிகிச்சை அளிப்பது என்பது தொடர்பில் சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- மக்களுக்கு சவாலினை ஏற்படுத்தக் கூடிய நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளின் வகைகள் தொடர்பில் பயனுறுதி மிக்க வகையில் பிரதிபலிப்பதற்கு நடைமுறை களை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- தற்போதைய சிறந்த சிகிச்சை சார்ந்த பயிற்சிகளுக்கு அமைவாக நுண்ணூட்ச் சத்து குறைபாடுகள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் கையாளப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

- சின்னம்மை (உயிர்ச்சத்து ஏ) மற்றும் வயிற்றுப் போக்கு (துத்தநாகம்) போன்ற அவசர கால நிலைகளில் ஏற்படக் கூடிய பொதுவான நோய்களை குறைப்பதற்கு நுண்ணூட்டச் சத்து இடையீடுகள் பொது சுகாதார இடையீடுகளுடன் இணைக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **நோய் அறுதியிடல் மற்றும் மருத்துவஞ் சார்ந்த நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளுக்கான சிகிச்சை:** சாதாரணமான பரிசோதனைகள் ஊடாக சில மருத்துவஞ் சார் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை அறுதியீடு செய்வது சாத்தியமானது. இந்த குறைபாடுகளின் மருத்துவஞ் சார் குறிகாட்டிகள் சுகாதார அல்லது போஷாக்கு பரிசோதனை முறைகளுடன் ஒன்றிணைக்கப்படலாம். இருப்பினும், ஊழியர்களுக்கு கவனமாக பயிற்சி வழங்கப்படல் மதிப்பீடு என்பது நேர்த்தியானது என்பதனை உறுதி செய்தல் வேண்டும். அவசர கால நிலைமைகளில் சிக்கலான சம்பவ வரைவிலக்கணங்கள் பெதுவாக மறுசீரமைப்புக்கான மிகை நிரப்பின் ஊடாக மாத்திரமே சுகாதார ஊழியர்களிடம் செல்லும் தனிநபர்களின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. நுண்ணூட்டச் சத்துக்கள் குறைபாடுகளுக்கான சிகிச்சைகள் செயற்றிறன் மிக்க சம்பவ கண்டுபிடிப்புக்களையும் மற்றும் சிகிச்சைக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவ வரைவிலக்கணங்கள் மற்றும் வழிகாட்டிகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். சம்பவ கண்டுபிடிப்புக்கள் மற்றும் சிகிச்சைகள் சுகாதார முறைமையிலும் மற்றும் உணவூட்டல் நிகழ்ச்சிகள் என இரண்டு சந்தர்ப்பங்களிலும் முன்னெடுக்கப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). பொதுச் சுகாதாரத்தின் ஆரம்ப நிலையில் (பிற்சேர்க்கை 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் **பக்கம் ???**), நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் பரவுதல் என்பது மீறிச் செல்கின்றது. நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளின் பரவலானது பொது சுகாதார ஆரம்ப நிலையில் அதிகரிக்கும் போது (பிற்சேர்க்கை 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல்), பொது மக்களுக்கு மிகை நிரப்பு உணவூட்டலுடன் ஒட்டு மொத்தமான சிகிச்சையானது பொருத்தமானதாக இருக்கும். உயிர்ச்சத்து சி பற்றாக்குறை, தோல் வறட்சி (நையாசின் உயிர்ச்சத்து), பெரிபெரி (தயமீன்) மற்றும் ரிபோ.ஃ.பிளேவின் இன்மை என்பன பொதுமக்கள் தங்கியிருக்கும் உணவு உதவியில் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டினால் ஏற்படும் அதிகமாக அவதானிக்கப்படும் நோய்களாக உள்ளன. இதனை மனதிற் கொண்டு குறைபாடுகள் பொது மக்கள் சார்ந்த இடையீடுகள் மற்றும் தனிப்பட்ட சிகிச்சைகளின் ஊடாக தடுக்கப்படல் வேண்டும்

2. **துணை மருத்துவ நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை நோய் அறுதீயீடு செய்தல் மற்றும் சிகிச்சை:** துணை மருத்துவ நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் மோசமான சுகாதார வெளியீடுகளை ஏற்படுத்த முடியும். ஆனால், உயிரியல் இராசாயன பரிசோதனை செய்யப்படாது இதனை நேரடியாக அடையாளங் காண முடியாது. இதற்கு விதிவிலக்காக இரத்தச் சோகை உள்ளது. இதற்கான உயிரியல் இரசாயன பரிசோதனை கிடைக்கக் கூடியதாக உள்ளதோடு, இதனை மிகவும் இலகுவாக களத்தில் முன்னெடுக்க முடியும் (உணவுப் பாதுகாப்பு

மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 6 மற்றும் பிற்சேர்க்கை 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**). பாதிக்கப்பட்ட சமூகம் மீது குறைபாடுகள் ஏற்படுத்தும் ஆபத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு மற்றும் உணவு உட்கொள்ளும் பழக்கம் அல்லது மிகை நிரப்பு பொருட்கள் தேவையாக உள்ள சந்தர்ப்பத்தில் எப்போது பயன்படுத்துவது என்பதனை அறிந்து கொள்வதற்கு மறைமுகமான குறிகாட்டிகளை பயன்படுத்தலாம் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 6 மற்றும் பிற்சேர்க்கை 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

3. **தடுத்தல்:** நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை தடுப்பதற்கான மூலோபாயங்கள் உணவுப் பாதுகாப்பு உணவு பரிமாற்றங்கள் பகுதியில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன (உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). நுண்ணூட்டச் சத்துக்களை இல்லாது செய்யும் தீவிர சுவாச கோளாறு, சின்னம்மை மற்றும் மலேரியா, வயிற்றுப் போக்கு போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதாக தடுத்தல் முறைகள் அமைய வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் சுகாதார தரங்கள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). சிகிச்சைக்காக முன்னாயத்தம் செய்தல் என்பதில், சிகிச்சைக்கான சம்பவ வரைவிலக்கணங்கள் மற்றும் வழிகாட்டிகளின் அபிவிருத்தி மற்றும் செயற்றிறன் மிக்க சம்பவ கண்டுபிடிப்பு போன்றன உள்ளடங்கியுள்ளன.

4. **பொதுவான நோய்களுக்கான சிகிச்சையில் நுண்ணூட்டச் சத்துக்களின் பயன்பாடு:** குறிப்பிட்ட நோய்களினை தடுப்பதற்கு மற்றும் சிகிச்சை வழங்குவதற்கு நுண்ணூட்டச் சத்துக்கள் வழங்கப்படுவது ஒன்றிணைக்கப்படல் வேண்டும். சின்னம்மை தொற்றுாசியுடன், உயிர்ச்சத்து ஏ வழங்குதல் மற்றும் வயிற்றுப் போக்கு சிகிச்சைக்காக வாய் வழி கனிமக் உப்புக் கரைசலுடன் துத்தநாகத்தை ஒன்றிணைத்தல் என்பன இதில் உள்ளடங்குகின்றன (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் சுகாதார தரங்கள் 1-2 மற்றும் குழந்தை மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல் தரம் 2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. உணவுப் பாதுகாப்பு

குறுகிய காலத் தேவைகள், பாதகம் செய்யாமை, எதிர்கொள்ளும் மூலோபாயங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியம் உள்ள விடயங்களை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் குறைத்தல் மற்றும் நீண்ட கால உணவுப் பாதுகாப்பினை நிலைத்திருக்கச் செய்ய உதவுதல் என்பவற்றை இலக்கு வைத்ததாக உணவு பாதுகாப்பு மறுசீரமைப்புக்கள் அமைய வேண்டும்.

பூர்த்தியான மதிப்பீடானது சாத்தியமான மறுசீரமைப்பு தெரிவுகள் தொடர்பான பொருத்தப்பாடு மற்றும் செயல் வழி சாத்தியத்தினை ஆராய வேண்டும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). இந்தப் பகுதியில் உள்ள உணவுப் பாதுகாப்பு மறுசீரமைப்புக்கள் பொது உணவுப் பாதுகாப்பு, உணவு பரிமாற்றங்கள், பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்புக்கள் என்ற பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. உணவுத் தேவையாக இருப்பின், பொருத்தமான வடிவத்திலான பரிமாற்றம் குறித்து கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், உணவுப் பொதியானது பண்டச் செலுத்துதல் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் என இரண்டு விடயங்கள் தொடர்பிலும் அவதானமாக தெரிவு செய்யப்படல் வேண்டும். வாழ்வாதார மறுசீரமைப்புக்களில் முதன்மை உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் சந்தைப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பிரவேசம் ஆகியன உள்ளடங்குகின்றன.

பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் என்பன உணவுப் பாதுகாப்பில் மற்றும் வேறு துறைகளில் பல்வேறு வகையான பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பயன்படுத்தப்படலாம். விநியோகத்திற்கான சந்தை இயலுமை மற்றும் பொருத்தமான வடிவம் என்பவற்றை புரிந்து கொள்ளல் என்பது உணவுப் பாதுகாப்பு இடையீடுகளை வடிவமைப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும். பொது மக்கள் மற்றும் விசேடமாக பாதிக்கப்பட்ட அதிகளவிலான போஷாக்கு சார்ந்த ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ள பலவீன மக்களின் உணவுத் தேவைகளை எட்டுவதற்கான வளங்கள் தொடர்பில் உணவுப் பாதுகாப்பு தரங்கள் கவனஞ் செலுத்துகின்றன. இந்த தேவைகள் எட்டப்படும் வரை, போஷாக்கின்மைக்கான சிகிச்சையை இலக்கு வைத்த எந்தவொரு மறுசீரமைப்பும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தையே கொண்டிருக்கும். ஏனெனில், போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டு மீட்சி பெற்றவர், போதிய உணவு உட்கொள்ள இயலாமை மற்றும் அதன் போஷாக்கு நிலை குறைவாக இருத்தல் போன்ற சூழ்நிலைக்கு மீண்டும் தள்ளப்படலாம். இலக்கு வைத்தல், விநியோகம் மற்றும் வழங்கல் முறைகள் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு தவறுகள் அற்றதாக இருத்தல் வேண்டும். இதில், உணவு, பணம் அல்லது வேறு உதவிகள் போராளிகளால் தவறாக பயன்படுத்தப்படலுக்கான ஆபத்தும் உள்ளடங்கும். உணவுப் பாதுகாப்பு இடையீடுகள் முரண்பாடுகள் மேலும் தீவிரமடைவதற்கு வழிகோலக் கூடாது என்பது முக்கியமானதாகும்.

உணவுப் பாதுகாப்பு தரம் 1: பொது உணவுப் பாதுகாப்பு

தாம் வாழ்ந்திருத்தலை உறுதி செய்யும் மற்றும் தமது கண்ணியத்தை மேம்படுத்தும் மற்றும் தமது சொத்துக்கள் மற்றும் கட்டடங்கள் அழிவதனை இயலுமான வரையில் பாதுகாக்கும் மனிதநேய உணவு உதவியை பெற்றுக் கொள்வதற்கான உரிமை மக்களுக்கு உண்டு.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உடனடித் தேவைகளை எட்டக் கூடிய வகையில் ஆரம்ப மறுசீரமைப்புக்களை வடிவமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- உணவுப் பாதுகாப்புக்கு ஆதரவு வழங்கல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான செயலேற்பாடுகளை முன்னெடுப்பது குறித்து கவனஞ் செலுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- ஓலிப் பகுப்பாய்வு, தமது பயன்கள், சம்பந்தப்பட்ட சவால்கள் மற்றும் செலவுகள், மற்றும் மக்களின் எதிர்கொள்ளும் மூலோபாயங்கள் என்பதன் அடிப்படையில் மறுசீரமைப்புக்கள் இருத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- அனர்த்தத்திற்கான அனைத்து மறுசீரமைப்புக்களுக்கும் இடைத்தங்கல் மற்றும் வெளியேற்றல் மூலோபாயங்களை வடிவமைத்தல். அவற்றின் விழிப்புணர்ச்சியை அதிகரித்தல். பொருத்தமான வகையில் அவற்றை பிரயோகித்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- தேவையான உதவிகள், திறன்கள் மற்றும் சேவைகளை வழங்கல் உள்ளடங்கலாக பொருத்தமான உதவிக்கான பிரவேசம் பயனாளிகளுக்கு கிடைப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- அனைத்து மறுசீரமைப்புக்களிலும் மேலதிக தரமிறக்கலின் ஊடாக இயற்கை சுற்றுச் சூழலை பாதுகாத்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- வேறுபட்ட குழுக்கள் மற்றும் தனிநபர்களின் இடையீடுகளுக்கான ஏற்றுக் கொள்ளும் தன்மை மற்றும் பிரவேசத்தின் மட்டத்தை தீர்மானிப்பதற்கு கண்காணித்தல். அத்துடன், பாரபட்சமின்றி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் உள்ளடக்கப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- உள்ளூர் பொருளாதாரம், சமூக வலையமைப்புக்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் இயற்கை சுற்றுச் சூழல் சார்ந்த மறுசீரமைப்புக்களின் தாக்கங்களின் அளவை மதிப்பீடு செய்தல். அத்துடன், அதன் முடிவுகள் பயனுள்ள வகையில் பகிரப்படல் மற்றும் மேலதிக இடையீடுகளை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உணவுப் பாதுகாப்பு தேவையாக உள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் தமது முதன்மை தேவைகளை எட்டும் உதவியினை பெறல், தமது சொத்துக்கள் அழிக்கப்படுவதனை தடுத்தல், அவர்களுக்கு தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கல். அவர்களது கண்ணியத்தை மேம்படுத்தல்.

- குடும்பங்கள் எதிர்மறையான எதிர்கொள்ளல் மூலோபாயங்களை பயன்படுத்தாது இருத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- பணம், சான்றுச் சீட்டுக்கள் அல்லது அவை கலந்த தெரிவுகள் முழுமையான மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வின் அடிப்படையில் அமைதல் (உணவுப் பாதுகாப்பு - பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் தரம் 1ஐப் பார்க்கவும் பக்கம் ???).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **வாழ்க்கையை காப்பாற்றும் மறுசீரமைப்புக்களை முன்னுரிமைப்படுத்தல்:** உணவு, பணம் அல்லது சான்றுச் சீட்டுக்கள் அல்லது அவை கலந்த விநியோகம் என்பன தீவிர உணவு பாதுகாப்பின்மையில் பொதுவான ஆரம்ப மறுசீரமைப்பு நிலையாக உள்ளது. உணவு மானியங்கள், தற்காலிக கட்டண அமைப்புக்கள், வேலைவாய்ப்பு நிகழ்ச்சிகள், வாழ்வாதாரத்திற்கான உற்பத்தி திறன் மிக்க உதவி, விற்பனையை குறைத்தல், தீவனப் பகுதி மற்றும் சந்தைகளுக்கான உதவி என்பன உள்ளடங்கலாக வேறு வகையான மறுசீரமைப்பு வகைகளும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். சந்தைகள் செயற்படும் போது மற்றும் அவற்றை அடையக் கூடியதாக இருக்கும் போது, பணவீக்கத்திற்கான தீவிரமான ஆபத்துக்கள் இல்லை. சாதாரண சந்தை ஒழுங்குகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். அத்துடன், வேலைவாய்ப்பினை வழங்கும் பொருளாதார நடவடிக்கைகளையும் மீளக் கட்டியெழுப்பல் வேண்டும் (குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில் சந்தைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு இடையீடுகள் பகுதியினைப் பார்க்கவும்). வாழ்வாதாரங்களுக்கு உதவி செய்தல், எதிர்கால பலவீனத் தன்மையை குறைத்தல் மற்றும் கண்ணியத்தை மேம்படுத்தல் என்பவற்றுக்கான சாதகத் தன்மைகளை வழங்குமாயின், உணவு விநியோகத்தினை விட இவ்வாறான மூலோபாயங்கள் அதிகம் பொருத்தமானவை. முழுமையான உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்கும் இந்த ஒருங்கிணைந்த மறுசீரமைப்புக்களை உறுதி செய்வதற்கு ஏனையோர் எவ்வாறு நடவடிக்கை எடுக்கின்றனர் என்பது தொடர்பில் நிறுவனங்கள் கவனஞ் செலுத்தல் வேண்டும்.
2. **உணவுப் பாதுகாப்பு ஆதரவு வழங்கல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்**: இதில் பரந்த வகையிலான மறுசீரமைப்புக்கள் மற்றும் பரிந்து பேசல் என்பன உள்ளடங்குகின்றன. உடனடித் தேவைகளை எட்டுதல் மற்றும் உற்பத்தித் திறன் மிக்க சொத்துக்களை பெறல் என்பன அனர்த்த காலங்களின் ஆரம்ப சந்தர்ப்பங்களில் முன்னுரிமை வழங்கப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். நீண்ட கால கருத்துருவாக்கத்தின் அடிப்படையில் மறுசீரமைப்புக்கள் திட்டமிடப்படல் வேண்டும். அத்துடன், ஏனைய துறைகளின் மறுசீரமைப்புக்களும் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். குறுகிய காலத்தில், மக்களின் சுயமான வாழ்வாதார மூலோபாயங்களில் இருந்து உணவுப் பாதுகாப்பினை எட்டுவது என்பது இயலுமானது அல்ல. எவ்வாறாயினும், உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிக்கக் கூடிய மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கும் நடைமுறையில் உள்ள மூலோபாயங்களுக்கு ஆதரவு வழங்கப்படல் வேண்டும். உணவுப் பாதுகாப்பு மறுசீரமைப்புக்கள் அனர்த்தம் காரணமாக மீட்கப்பட்ட சொத்துக்கள் அழிவதற்கு வழிகோலும் சொத்துக்களின் மேலதிக அழிவினை தடுக்க வேண்டும். அத்துடன்,

எதிர்கால அனர்த்தங்களுக்கான நெகிழ்ச்சித் தன்மையையும் அதிகரிக்க வேண்டும்.

3. **எதிர்கொள்ளும் மூலோபாயங்களுடன் தொடர்புடைய ஆபத்துக்கள்:** உணவுப் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்கு பங்களிக்கும் எதிர்கொள்ளும் மூலோபாயங்களுக்கு ஆதரவு வழங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கொள்ளும் மூலோபாயங்கள் பலவீனத் தன்மையை அதிகரிக்கும் செலவுகள் அல்லது ஏற்படக் கூடிய ஆபத்துக்களை உள்ளடக்கல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). இயலுமான வரையில் விரைவாக ஆபத்துக்கள் கண்டறியப்படல் வேண்டும். அத்துடன், இவ்வாறான மூலோபாயங்கள் மீளமைக்கப்படுவதனை மக்கள் தவிர்ப்பதற்கான உதவிகளை உள்ளடக்கிய துரித இடையீடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். உதாரணமாக, பலகை விநியோகம் மற்றும்/அல்லது வினைத்திறன் மிக்க எரிபொருள் என்பன இயற்கை வளங்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதனை தவிர்க்கும். அத்துடன், பாதுகாப்பற்ற பகுதிகளுக்கு பயணிப்பதனையும் தவிர்க்கும். பண உதவிகள் சொத்துக்கள் மற்றும் நிலம் என்பன விற்கப்படுவதனால் ஏற்படும் மன விரக்தியை தவிர்க்கவும் உதவும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **வெளியேறல் மற்றும் நிலைமாற்ற மூலோபாயங்கள்** என்பன தொடர்பில் ஆரம்பம் முதல் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். மிக முக்கியமாக, நீண்ட கால ஊகக் குறிப்புக்களை கொண்டிருக்கக் கூடிய மறுசீரமைப்புக்களுக்கு இது பொருந்தும். உ-ம்: கால்நடை மருத்துவம் போன்ற வழமையாக கட்டணம் செலுத்தப்படும் சேவைகள் இலவசமாக வழங்கப்படுதல் என்பது கட்டண சேவைகளை மீள ஆரம்பிப்பதில் சிக்கலை ஏற்படுத்தும். நிகழ்ச்சியை நிறைவு செய்வதற்கு முன்னர் அல்லது புதிய நிலைக்கு நிலைமாற்றுவதற்கு முன்னர் முன்னேற்றத்திற்கான ஆதாரம் அல்லது வேறு நன்கு நியமிக்கப்பட்ட செயற்பாட்டாளர்கள் பொறுப்புக்களை உள்வாங்குவது என்பது உறுதி செய்யப்படல் வேண்டும். உணவு, பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டு பரிமாற்றங்களின் போது, நடைமுறையில் உள்ள சமூக பாதுகாப்பு அல்லது நீண்ட கால பாதுகாப்பு வலையமைப்பு முறைகள் அல்லது அரசாங்கத்திடம் ஆதரவு தேடுதல் என்பவற்றை ஒன்றிணைப்பதாக இருக்கலாம். அத்துடன், மோசமான உணவுப் பாதுகாப்பின்மையை அடையாளப்படுத்தும் முறைகளை நிதியுதவியாளர்கள் ஸ்தாபிப்பதாகவும் இருக்கலாம்.

5. **அறிவு, திறன்கள் மற்றும் சேவைகளுக்கான பிரவேசம்:** நிறுவன கட்டமைப்புக்கள் என்பது பயன்படுத்துபவர்களுடன் இணைந்து வடிவமைக்கப்படுவதுடன், திட்டமிடப்படல் வேண்டும். எனவே, இடையீட்டின் வாழ்க்கைக்கு அப்பால் இயலுமாயின் அவை பொருத்தமானதாக மற்றும் போதியளவு பேணப்பட்டதாக இருக்கும். சில தனி நபர்களின் தேவைகள் விசேடமானதாக இருக்கும். உதாரணமாக, எய்ட்ஸ் காரணமாக நிர்க்கதிக்குள்ளான சிறுவர்களுக்கு குடும்பத்திற்குள் இடம்பெறும் தகவல் மற்றும் திறன்களின் பரிமாற்றங்கள் கிடைக்காது இருக்கும். பொருத்தமான சேவைகளின் ஊடாக இந்த தகவல் மற்றும் திறன்களின் பரிமாற்றங்கள் வழங்கப்படல் வேண்டும்.

6. **சுற்றுச் சூழல் தாக்கம்:** அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் (அதே பகுதியில் வசிக்கும் மக்கள்) உற்பத்தி மற்றும் வாழ்வாதாரங்கள் இயற்கை வளங்களின் அடிப்படையிலானதாக இருத்தல் உறுதி செய்யப்படல் வேண்டும்.

எந்தவொரு மறுசீரமைப்பினையும் மதிப்பீடு செய்யும் போது மற்றும் திட்டமிடும் போது சுற்றுச் சூழல் மீதான தாக்கம் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். உதாரணமாக, உள்ளூர் காடழித்தலை தடுப்பதற்கு முகாம்களில் வாழும் மக்களுக்கு சமையல் எரிபொருள் வழங்கப்படல் வேண்டும். நீண்ட நேரம் சமைத்து முகாமிற்குள் உணவு விநியோகம் செய்வதற்கு எரிபொருள் மிகவும் அவசியமானது. இது சுற்றுச் சூழலில் தாக்கத்தினை ஏற்படுத்தும் (உணவுப் பாதுகாப்பு உணவுப் பரிமாற்றங்கள் தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). மாசடைதலில் இருந்து சுற்றுச் சூழல் மீட்சியடைவதற்கும் மறுசீரமைப்புக்கள் உதவி புரியும். உதாரணமாக, வரட்சியான காலங்களில் மேய்த்தலில் அழுத்தத்தை குறைக்கும், கால்நடையின் வாழ்க்கையை பாதுகாக்கும். இயலுமாயின், விசேடமாக உள்ளீடுகளை வழங்கும் போது இயற்கை வளங்களை மக்கள் கையாளுவதற்கான இயலுமையை மறுசீரமைப்புக்கள் கட்டியெழுப்பல் வேண்டும். இயற்கை வளங்களின் மீது பதட்டங்களை ஏற்படுத்தும் அல்லது உருவாக்கும் மறுசீரமைப்பு சார்ந்த ஆபத்துக்கள் மற்றும் முரண்பாட்டை தூண்டும் காரணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, தணிக்கப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

7. **உள்ளடக்கல், பிரவேசம் மற்றும் ஏற்றுக் கொள்ளும் தன்மை:** பயனாளிகள் மற்றும் அவர்களது காட்சிப் புலங்கள் என்பன மதிப்பீடு செய்யப்படுவதுடன், பல்வேறு குழுக்களின் பங்குபற்றல் மட்டங்களை தீர்மானிப்பதற்கு முன்னர் அவர்களுடைய எண்ணிக்கையானது பால் மற்றும் வயது அடிப்படையில் பிரிக்கப்படல் வேண்டும் (பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தல்). பங்குபற்றல் என்பது பங்குபற்றுநர்களின் நடவடிக்கைகளுக்கான பிரவேசத்தின் இலகுத் தன்மை மற்றும் ஏற்றுக் கொள்ளும் தன்மை என்பவற்றினால் தீர்மானிக்கப்படுகின்றது. சில உணவுப் பாதுகாப்பு மறுசீரமைப்புக்கள் பொருளாதார ரீதியான செயற்றிறன் மிக்க வகையில் இலக்கு வைக்கப்பட்ட போதிலும், அவர்கள் நியாயமற்ற வகையில் பாரபட்சம் காட்டப்படாது மற்றும் பலவீனமான மக்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட தங்கியிருப்பவர்களை பாதுகாப்பதற்கு இயலுமானதாக இருத்தல் வேண்டும். பணிபுரிவதற்கு குறைவான இயலுமை, வீட்டில் அதிகப் பணி, கர்ப்பம், சிறுவர்களுக்கு உணவூட்டல் மற்றும் பராமரித்தல், சுகவீனம் மற்றும் மாற்றுத் திறன் உள்ளடங்கலாக தடைகள் பங்குபற்றலை மட்டுப்படுத்தக் கூடும். தடைகளை கடத்தல் என்பதில், குழுக்களின் இயலுமைக்கு உட்பட்ட நடவடிக்கைகளை அடையாளங்காணல் அல்லது பொருத்தமான உதவி கட்டமைப்புக்களை நியமித்தல் என்பன உள்ளடங்குகின்றன. சுய தெரிவு அடிப்படையிலான இலக்கு வைத்தல் பொறியமைப்புக்கள் மக்கள் தொகையின் அனைத்து குழுக்களுடனான முழுமையான ஆலோசனையின் பின்னர் ஸ்தாபிக்கப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

8. **கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வு:** இடையீட்டின் தொடர்ச்சியான பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கு, எங்களுடைய விசேடமான நடவடிக்கைகளை எப்போது முன்னெடுப்பது என தீர்மானித்தல், நவீன முறைகளை அல்லது நவீன செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் பரிந்து பேசலுக்கான எந்தவொரு தேவையையும் அடையாளங்காணல் என்பவற்றிற்கான பரந்த உணவுப் பாதுகாப்பு சூழ்நிலையை கண்காணிப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். மதிப்பீட்டாய்வு என்பது OECDஇனால் அறிக்கையிடப்பட்ட, பொருத்தப்பாடு,

இணக்கப்பாடு, ஓரியல்பு, பயனுறுதி, வினைத்திறன் மற்றும் தாக்கம் என்பவற்றை அளவிடக் கூடியதாக் ஸ்தாபிக்கப்பட்ட அபிவிருத்தி உதவி குழு பிரமாணத்தின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

4.1. உணவுப் பாதுகாப்பு - உணவுப் பரிமாற்றங்கள்.

போதிய தரத்திலும், போதிய எண்ணிக்கையிலும் உணவினைப் பெற்றுக் கொள்வதற்கு மக்களுக்கு பாதுகாப்பான பிரவேசம் இருப்பதனை உறுதி செய்வதும் மற்றும் அதனை பாதுகாப்பான வகையில் தயாரிப்பதற்கும், நுகர்வதற்குமான வழி வகைகளை வழங்குவதும் உணவுப் பரிமாற்றங்களின் இலக்காக உள்ளது.

உணவின் பொதுவான (இலவச) விநியோகங்கள் தேவை என மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் யாருக்கும் உணவு அதிகமாக தேவையாக உள்ளது என இலக்கு வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அத்துடன், வேறு வகைகளின் மூலம் பயனாளிகள் தமக்குத் தேவையான உணவினை உற்பத்தி செய்யக் கூடிய அல்லது பிரவேசிக்கக் கூடிய வழியை கண்டறிந்தவுடன் பொது உணவு விநியோகங்கள் நிறுத்தப்படுகின்றன. வேறு வகையான உதவிகளுக்கும் பயனாளிகளுக்கு நிலைமாற்றம் அவசியமாக இருக்கலாம். நிபந்தனை ரீதியான பரிமாற்றங்கள் அல்லது வாழ்வாதார மறுசீரமைப்புக்களை முக்கியமாக குறிப்பிடலாம். மிகை நிரப்பு உணவூட்டல் என்பது ஆபத்தில் உள்ள தனிநபருக்கு வழங்கப்படும் பொதுவான பங்கீட்டு முறையை தவிர்த்து வழங்கப்படுவதாகும் (உ-ம்: 6-59 மாதங்கள் வயதுடைய சிறுவர்கள், கர்ப்பிணிகள் அல்லது தாய்ப் பாலூட்டும் பெண்கள்). சூழ்நிலையின் அடிப்படையில் இது ஒட்டு மொத்தமான அல்லது இலக்கு வைக்கப்பட்டதாக அமையும் (தீவிர போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளின் முகாமைத்துவம் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

பொதுவான உணவு விநியோகங்கள் மற்றும் மிகை நிரப்பு உணவூட்டல் ஆகிய இரண்டுக்கும் இயலுமான சந்தர்ப்பங்களில் வீடுகளுக்கு கொண்டு செல்லக் கூடிய பங்கீட்டு முறை வழங்கப்படல் வேண்டும். தளத்திலேயே உணவூட்டல் என்பது தாமாக சமைக்கக் கூடிய வசதிகள் அற்ற மக்களுக்கு (அனர்த்தம் இடம்பெற்றவுடன் அல்லது மக்கள் இடம்பெயரும் போது) மாத்திரம் வழங்கப்படும். பங்கீட்டு முறைகளை பெறுபவர்கள் பாதுகாப்பாக வீடுகளுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை அல்லது அவசர கால நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு உணவூட்டல் போன்ற சந்தர்ப்பங்களிலும் தளத்திலேயே உணவூட்டல் (வீடுகளுக்கு கொண்டு செல்வதற்காக விநியோகிக்கப்படும் பங்கீட்டு முறைப் பொருட்கள் பாடசாலைகள் மூலமாக விநியோகிக்கப்பட்ட போதிலும்) வழங்கப்படும்.

விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் (SCM) என்பது நம்பகத் தன்மை மிக்கதாக இருத்தல் வேண்டும். இல்லையெனின், உயிர்களுக்கான அச்சுறுத்தல் அதிகரிக்கலாம். உணவுப் பரிமாற்றங்கள் என்பதே அனர்த்த மறுசீரமைப்பில் மிகவும் முக்கியமான அம்சமாக விளங்குகின்றன. விநியோகம் மற்றும் வழங்கல் முறைகள் சமுதாய மட்டம் உள்ளடங்கலாக அனைத்து மட்டங்களிலும் கண்காணிக்கப்படல் வேண்டும். அத்துடன், பயனுள்ள தொடர்பாடல் ஊடான வெளிப்படைத் தன்மையும் பிரதான பாத்திரத்தை வகிக்க முடியும். பருவகால மதிப்பீட்டாய்வுகள் முடிவுகளை வெளியிடல் வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்கள் தொகை மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் உள்ளடங்கலாக பங்குதாரர்களுடன் கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும்.

உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 1: பொதுவான போஷாக்குத் தேவைகள்

அதிக ஆபத்து நிறைந்த சந்தர்ப்பத்தில் உள்ளவர்கள் உள்ளடங்கலாக, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் போஷாக்குத் தேவைகள் எட்டப்படுவதனை உறுதி செய்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சூழ்நிலை ஸ்திரமான நிலையில் உள்ளதா அல்லது வீழ்ச்சியடைந்து செல்கின்றதா என்பதனை தீர்மானிப்பதற்கு உணவின் போதிய அளவு மற்றும் தரத்திற்கான பிரவேசத்தின் அளவுகளை பயன்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1, 4-5ஐப் பார்க்கவும்).
- சக்தி, உயிர்ச்சத்து, கொழுப்பு மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் போன்றவற்றுக்கான தரமான ஆரம்ப திட்டமிடல் தேவைகளின் அடிப்படையில் உணவுப் பரிமாற்றங்களை வடிவமைத்தல். உள்ளூர் சூழ்நிலைக்கு அமைவாக அவை சரி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் (பிரதான குறிகாட்டிகள், வழிகாட்டல் குறிப்பு 2 மற்றும் பிற்சேர்க்கை 6: போஷாக்கு தேவைகள் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).
- பொருத்தமான போஷாக்கு உணவுகளுக்கான பிரவேசம் மற்றும் போஷாக்கு உதவி பாதுகாக்கப்படுதல், மேம்படுத்தப்படல் மற்றும் உதவி வழங்கப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-8ஐப் பார்க்கவும்).
- 6-24 மாதங்கள் வயதுடைய குழந்தைகளுக்கு போஷாக்கான, சக்தி மிக்க மிகை நிரப்பு உணவுகளுக்கான பிரவேசம் உள்ளமையையும், கர்ப்பிணிகள் மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்களுக்கு மேலதிக போஷாக்கு உதவிகளுக்கு பிரவேசம் இருப்பதனையும் உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள் உள்ளடங்கலாக மோசமாக சுகவீனமுற்றுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் விசேட குறைபாடுகள் அல்லது பலவீனங்கள் உள்ளவர்களுக்கு பொருத்தமான போஷாக்கு உணவு மற்றும் போதியளவு போஷாக்கு உதவிக்கு பிரவேசம் இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 6-8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பல்வேறு வகையான உணவுகள், தானியங்கள் அல்லது கிழங்குகள், பருப்பு வகைகள் (அல்லது விலங்கு உற்பத்திகள்) மற்றும் புரத உணவுகள் உள்ளடங்கலாக போஷாக்குத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய உணவுகளுக்கு போதிய பிரவேசம் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3, 5ஐப் பார்க்கவும்).
- பெரும்பாலான (>90%) குடும்பங்களுக்கு அயடீன் உப்புக்கான போதியளவு பிரவேசம் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-4 மற்றும் பிற்சேர்க்கை 6: போஷாக்குத் தேவைகள் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).
- நையோசினின் மேலதிக வளங்களுக்கு போதிய பிரவேசம் (உ-ம்: பருப்பு வகைகள், உலர் மீன்). தானியங்கள் சோளமாக இருப்பின் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3

மற்றும் பிற்சேர்க்கைகள் 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல், 6: போஷாக்குத் தேவைகள் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).

- தானியமானது சீவப்பட்ட அரிசியாக இருக்கும் போது, தயமீனின் (உ-ம், பருப்புக்கள், முட்டைகள்) மேலதிக வளங்களுக்கான போதிய பிரவேசம் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3ஐப் பார்க்கவும்).
- மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட உணவு பழக்கத்தில் தங்கியுள்ள மக்களுக்கு ரிபோ.்.பிளேவின் (riboflavin) போதிய வளங்களுக்கான போதிய பிரவேசம் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3ஐப் பார்க்கவும்).
- உயிர்ச்சத்து சி குறைபாடு, தோல் வறட்சி, பெரிபெரி அல்லது ரிபோ.்.பிளேவின் குறைபாடு போன்ற சம்பவங்கள் எதுவும் இல்லை என்பதனை உறுதி செய்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 5 மற்றும் பிற்சேர்க்கை 4: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).
- உயிர்ச்சத்து ஏ குறைபாடு, இரும்புச் சத்து குறைபாடு மற்றும் அயடீன் குறைபாடு போன்றன பரவும் அளவுகள் பொது சுகாதார நலனில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதனை உறுதி செய்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 5 மற்றும் பிற்சேர்க்கை 5: நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **உணவுக்கான பிரவேசத்தை விளக்கல்:** உணவு நுகர்வு புள்ளி அல்லது உணவுப் பழக்க வேறுபாடு கருவிகள் போன்ற பகுப்பாய்வு கருவிகளைப் பயன்படுத்தி உணவுக்கான பிரவேசம் அளக்கப்படலாம். உணவுப் பாதுகாப்பு, சந்தைகளுக்கான பிரவேசம், வாழ்வாதாரங்கள், சுகாதாரம் மற்றும் போஷாக்கு என்பன உள்ளடங்கலாக பல்வேறுபட்ட விடயங்கள் சார்ந்த அணுகுமுறைகள் சூழ்நிலையானது ஸ்திரமானதாக உள்ளதா அல்லது வீழ்ச்சியடைகின்றதா என்பதனை தீர்மானிக்கும். அத்துடன், உணவு இடையீடுகள் அவசியமா என்பதனையும் தீர்மானிக்கும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு தரம் 1 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).
2. **போஷாக்குத் தேவைகள் மற்றும் பங்கீட்டு முறை திட்டமிடல்:** மக்களின் ஆகக் குறைந்த தேவைகள் தொடர்பான பின்வரும் கணிப்பீடுகள், பொது பங்கீட்டு முறைகளை திட்டமிடும் போது பிற்சேர்க்கை 6: போஷாக்குத் தேவைகள் என்ற பகுதியில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு மக்களுக்குமான ஆகக் குறைந்த அளவுகளின் அடிப்படையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

   - 2,100 kcals/நபர்/நாள்
   - உயிர்ச்சத்து மூலம் வழங்கப்படும் மொத்த சக்தியின் 10%
   - புரதச்சத்தினால் வழங்கப்படும் மொத்த சக்தியின் 17%
   - போதியளவு நுண்ணூட்டச் சத்து உள்ளெடுப்பு

   பங்கீட்டு முறை திட்டமிடல் கருவிகளை பயன்படுத்தி பொதுவான உணவு பங்கீட்டு முறைகளை வடிவமைக்கலாம் (உ-ம்: NutVal). மக்களுக்கு உணவுக்கான பிரவேசம் இல்லாத சந்தர்ப்பங்களில், விநியோகிக்கப்பட்ட பங்கீட்டு முறை உணவுகள் அனைத்தும் அவர்களுடைய மொத்த போஷாக்குத் தேவையை எட்டக் கூடியனவாக இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் சராசரியான உணவுத் தேவையினை

பூர்த்தி செய்யக் கூடியதாக கணிக்கப்பட்ட தரவுகள் இருத்தல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டுத் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). அதன் பின்னர், போஷாக்குத் தேவை மற்றும் மக்கள் தமக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய உணவுகள் என்பவற்றின் வேறுபாட்டின் அடிப்படையில் பங்கீட்டு முறையானது திட்டமிடப்படல் வேண்டும். இருப்பினும், தேவையின் தரமானது 2100 kcals/நபர்/நாளாக இருப்பின், தமது சுய முயற்சி அல்லது வளங்களின் மூலம் சராசரியாக 500 kcals/நபர்/நாளாக என்பதனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளமையை மதிப்பீடுகள் கண்டறிந்திருப்பின், 2,100 – 500 = 1,600 kcals/நபர்/நாளாக என்ற அளவினை வழங்கக் கூடியதாக பங்கீட்டு முறை திட்டமிடப்படல் வேண்டும். உணவுப் பழக்கத்தின் சக்தி உள்ளடக்கத்திற்கு அப்பால், உணவு திட்டமிடலில் புரதச்சத்து, கொழுப்புச்சத்து மற்றும் உயிர்ச்சத்துக்களும், தாதுப் பொருட்களும் மிகவும் அத்தியாவசியமானவை.

உணவுப் பழக்கத்தின் அனைத்து சக்தி உள்ளடக்கங்களையும் வழங்கக் கூடியதாக பங்கீட்டு முறை வடிவமைக்கப்படுமாயின், அது அனைத்து போஷாக்குகளினையும் போதிய அளவில் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். உணவுப் பழக்கத்தின் சக்தி தேவையின் ஒரு பகுதியை மாத்திரம் வழங்குவதற்கு பங்கீட்டு முறை முயற்சிக்குமாயின், அது இரண்டு அணுகுமுறைகளில் ஒன்றினைப் பயன்படுத்தி வடிவமைக்கப்படல் வேண்டும். மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள ஏனைய உணவுகளின் போஷாக்கு உள்ளடக்கம் **தெரியாத போது**, பங்கீட்டு முறையின் சக்தி உள்ளடக்கத்தின் விகிதமாக, சமமான போஷாக்கு உள்ளடக்கத்தை வழங்கக் கூடியதான பங்கீட்டு முறை வடிவமைக்கப்படல் வேண்டும். மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள ஏனைய உணவுகளின் போஷாக்கு உள்ளடக்கம் **தெரியுமாயின்,** போஷாக்கு இடைவெளிகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக பங்கீட்டு முறை வடிவமைக்கப்படல் வேண்டும். பங்கீட்டு முறைக்கான சராசரியான திட்டமிடல் அளவுகள் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்களின் மேலதிக தேவைகளை கவனத்திற் கொள்ளல் வேண்டும். செறிவூட்டப்பட்ட கலக்கப்பட்ட உணவுகள் போன்ற இளம் சிறுவர்களுக்கான போதிய மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உணவுகள் போன்றன உள்ளடக்கப்படல் வேண்டும் (குழந்தை மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல் தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). ஒப்புரவு என்பது உறுதி செய்யப்பட வேண்டும். எனவே, அதேபோன்ற உணவு பங்கீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மற்றும் மக்களின் துணைக் குழுக்களுக்கும் சென்றடையும். அருகில் உள்ள சமுதாயங்களில் பல்வேறுபட்ட பங்கீட்டு முறைகள் பதட்டத்தை ஏற்படுத்தலாம் என்பது தொடர்பில் திட்டமிடுபவர்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். அதிகளவிலான நுண்ணூட்டச் சத்துக்களை உட்கொள்ளல் என்பதும் தீங்கு விளைவிக்கக் கூடியது. அத்துடன், பல்வேறுபட்ட செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்களை உள்ளடக்க வேண்டுமாயின் இது தொடர்பில் பங்கீட்டு முறை திட்டமிடல் விசேட கவனஞ் செலுத்தல் வேண்டும்.

3. **தீவிர போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை தடுத்தல்**: பிரதான உணவு குறிகாட்டிகள் எட்டப்படுமாயின், பொது மக்களின் போஷாக்கு நிலையின் அழிவு என்பது தடுக்கப்படல் வேண்டும். சின்னம்மை, மலேரியா மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் ஏற்படாதவாறு வழங்கப்படுவதாக, போதிய பொது உடல் நலன் செயலேற்பாடுகளும் அமைய வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களின் கட்டுப்பாடு தரங்கள் 1-2 ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). உணவு உதவி பங்கீடுகளின் போதியளவு போஷாக்கு உள்ளடக்கங்களை உறுதி செய்வதன்

மூலம், மட்டுப்படுத்தப்பட்ட உணவு வகைகள் உள்ள சந்தர்ப்பங்களில் சூழ்நிலைக்கு சிக்கலை ஏற்படுத்தும். பங்கீட்டு முறை உணவில் போஷாக்கின் தரத்தை மேம்படுத்துவதற்கான தெரிவுகளாக செறிவூட்டப்பட்ட தானிய வகைகளை உள்ளடக்கல், செறிவூட்டப்பட்ட கிழங்கு உணவுகளை உள்ளடக்கல், தவறவிடப்பட்ட போஷாக்குக்காக உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட உணவு வகைகள் மற்றும்/அல்லது கொழுப்பு அடிப்படையிலான, போஷாக்கு அடிப்படையிலான, பயன்படுத்துவதற்கான தயாரான உணவுகள் அல்லது பல நுண்ணூட்டச் சத்து வில்லைகள் அல்லது தூள்கள் போன்ற மிகை நிரப்பு உணவுகளை பயன்படுத்தல் என்பன அமையும். இந்த உற்பத்திகள் 6-24 அல்லது 6-59 மாதங்கள் வயதுடைய சிறுவர்கள் அல்லது கர்ப்பிணிகள் மற்றும் தாய்ப் பாலூட்டும் பெண்கள் போன்ற பலவீனமான தனிநபர்களை இலக்கு வைத்ததாக இருத்தல் வேண்டும். விதிவிலக்காக, போஷாக்கு நிறைந்த உணவுகள் உள்ளூரில் கிடைக்கும் சந்தர்ப்பங்களில், பொது பங்கீட்டு முறையின் ஊடாக வழங்கப்படும் உணவின் அளவை அதிகரித்தல். மேலும் பல உணவு பரிமாற்றங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படலாம். ஆனால், செலவு பயனுறுதித் தன்மை மற்றும் சந்தையில் தாக்கங்கள் என்பன கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாடுகளை தடுப்பது தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டிய வேறு தெரிவுகளில், போஷாக்கு உணவுகளுக்கான பிரவேசத்தை மேம்படுத்தலுக்கான உணவு பாதுகாப்பு செயலேற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 1 மற்றும் உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதாரத் தரங்கள் 1-2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**). போக்குவரத்தின் போதும், களஞ்சியப்படுத்தலின் போதும், செயற்படுதல் மற்றும் சமைத்தலின் போதும் இடம்பெறும் நுண்ணூட்டச் சத்து இழப்புக்கு, உயிரியல் நிறைந்த வேறுபட்ட இரசாயன வடிவத்திலான உயிர்ச்சத்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

4. **உணவுப் பங்கீடுகளை பயன்படுத்துவதனை கண்காணித்தல்:** பிரதான குறிகாட்டிகள் உணவுக்கான பிரவேசத்தை குறிப்பிடுகின்றன. இருப்பினும், உணவுப் பயன்பாடு அல்லது போஷாக்கு இருப்பு என்பவற்றை அவை அளவிடவில்லை. போஷாக்கு உட்கொள்ளலின் நேரடியான அளவீடு யதார்த்தமற்ற தேவைகளை தகவல் சேகரிப்புக்கு வழங்கும். எவ்வாறாயினும், பயன்பாடு என்பது மறைமுகமாக வெவ்வேறு மூலங்களின் தகவல்களில் இருந்து கணிக்கப்படலாம். இந்த வளங்கள் குடும்ப மட்டங்களில் உணவு கிடைக்கக் கூடிய தன்மையையும், பயன்படுத்தலையும் கண்காணித்தல், உள்ளூர் சந்தைகளில் உணவு விலைகள் மற்றும் உணவு கிடைக்கக் கூடிய தன்மையை மதிப்பீடு செய்தல், உணவு உதவி விநியோக திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை பரிசோதித்தல், காட்டு உணவுகளின் பங்களிப்பை மதிப்பீடு செய்தல் மற்றும் உணவு பாதுகாப்பு மதிப்பீடுகளை முன்னெடுத்தல் என்பவற்றையும் உள்ளடக்கலாம். குடும்பங்களுக்குள் உணவு ஒதுக்கீடு என்பது எல்லா சந்தர்ப்பங்களிலும் சமமானதாக இருக்காது. அத்துடன், பலவீனமான மக்கள் அதிகம் பாதிக்கப்படலாம். இருப்பினும், இந்த அம்சங்களை பொதுவாக அளவிடுவது என்பது இயலுமானது அல்ல. பொருத்தமான விநியோக பொறியமைப்புக்கள் (உணவுப் பாதுகாப்பு உணவு பரிமாற்றங்கள் தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**), உணவின் தெரிவு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுடனான கலந்துரையாடல் என்பன குடும்பங்களில் உணவு ஒதுக்கீட்டை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதற்கு உதவும் (மிக முக்கியமான தரங்கள் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

5. **வயதானவர்கள்** அனர்த்தத்தினால் முக்கியமாக பாதிக்கப்படலாம். ஆபத்தான அம்சங்கள் உணவுக்கான பிரவேசத்தை குறைக்கும். அத்துடன், இது போஷாக்கிற்கான தேவையை அதிகரிப்பதுடன், நோய் மற்றும் குறைபாடு ஏற்படக் கூடும். வயதானவர்கள் உணவு வளங்களை (உணவுப் பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக) எளிதாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். தயாரிப்பதற்கும், நுகர்வதற்கும் இலகுவானதாகவும் மற்றும் வயதானவர்களுக்கு அவசியமான மேலதிக உயிர்ச்சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்து தேவைகளை நிறைவேற்றுவதாகவும் உணவு இருத்தல் வேண்டும்.

6. **எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள்** பல்வேறு காரணங்களினால் போஷாக்கின்மையின் பரந்த ஆபத்துக்களை எதிர்நோக்குவர். உடல் எடை குறைவு அல்லது உணவு உண்பதில் சிக்கல்கள், வயிற்றுப் போக்கு காரணமாக உணவு உட்கொள்ளல் மோசமாதல், ஒட்டுண்ணிகள் அல்லது குடல் அணுக்கள் பாதிக்கப்படல், வளர்சிதை மாற்றங்கள் மற்றும் மோசமான தொற்றுக்கள் மற்றும் சுகவீனம் என்பவற்றின் காரணமாக உணவு உட்கொள்ளல் குறைந்தமையினால் இது ஏற்படலாம். எச்.ஐ.வியுடன் வாழும் மக்களின் சக்தி தேவைகள் தொற்றின் நிலையின் அடிப்படையில் அதிகரிக்கும். எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள் அதன் தாக்கத்தின் அளவை குறைப்பதற்கு இயன்றளவு போஷாக்கு நிறைந்தவர்களாக மற்றும் ஆரோக்கியமானவர்களாக இருப்பதனை உறுதி செய்ய வேண்டும். உணவு துருவல் மற்றும் செறிவூட்டல் அல்லது ஒரு பகுதியை செறிவூட்டல், கலக்கப்பட்ட அல்லது விசேடமான உணவு வகைகள் என்பன போதிய உணவு பழக்கத்தினை மேம்படுத்துவதற்கான சாத்தியமான மூலோபாயங்களாக அமையும். சில சூழ்நிலைகளில் எந்தவொரு உணவு பங்கீட்டினதும் அளவினை அதிகரிப்பது பொருத்தமாக இருக்கும். ரெட்ரோவைரசுக்கு எதிரான சிகிச்சை தொடர்பில் அவதானஞ் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், இந்த சிகிச்சையை சகித்துக் கொள்வதற்கு மற்றும் பெற்றுக் கொள்வதற்கான துணை பாத்திரத்தினையும் போஷாக்கு வழங்கும்.

7. **மாற்றுத் திறனுடையவர்கள்:** அனர்த்த காலங்களின் போது மாற்றுத் திறனுடையவர்கள் தமது குடும்பங்கள் அல்லது வழமையான பராமரிப்பவர்களிடமிருந்து பிரிந்து செல்லக் கூடிய சாத்தியம் உள்ளது. உணவு பிரவேசத்தில் அவர்கள் தொடர்பில் பாரபட்சம் காட்டப்படலாம். உணவுக்கான பௌதீக பிரவேசம், உணவூட்டல் உதவிக்கு பொறியமைப்புக்களை வடிவமைத்தல் (உ-ம்: கரண்டிகள் மற்றும் உறிஞ்சு குழாய்கள், வீடுகளுக்கான விஜயம் என்பவற்றுக்கான முறைகள்), மற்றும் சக்தி நிறைந்த மற்றும் போஷாக்கு நிறைந்த உணவுகளுக்கான பிரவேசம் என்பவற்றை உறுதி செய்வதன் மூலம் இந்த சவால்களை அடையாளங்கண்டு, குறைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். முக்கியமான போஷாக்கு சார்ந்த பிரச்சினைகளில் மெல்லுதல் மற்றும் விழுங்குதல் (உணவு உட்கொள்ளும் அளவு குறைவதற்கு வழிவகுக்கும்), உணவூட்டலின் போது பொருத்தமற்ற நிலையில் இருத்தல், உணவு மற்றும் சூரிய ஒளியில் தாக்கத்தை ஏற்படுத்தும் குறைந்தளவிலான நடமாட்டம் (உயிர்ச்சத்து டீயில் தாக்கத்தை ஏற்படுத்தும்) மற்றும் மலச்சிக்கல் என்பன உள்ளடங்கியுள்ளன. உதாரணமாக மேற்கூறிய விடயங்கள் தனிநபர்களில் மூளை வாதம் ஏற்படுவதற்கு காரணமாக அமையும்.

8. **பராமரிப்பவர்களும், அவர்களால் பராமரிக்கப்படுபவர்களும்** விசேடமான போஷாக்கு தடைகளினால் பாதிக்கப்படலாம். உதாரணமாக, அவர்கள் சுகவீனமுற்றவர்களை பராமரிப்பதனால் அல்லது சுகவீனமுற்று

இருக்கின்றமையினால் உணவுக்கான பிரவேசத்திற்கான நேரம் குறைவாக இருக்கும். சுகாதார பயிற்சிகளை பேணுவதற்கான அதிகளவிலான தேவை அவர்களுக்கு இருக்கலாம். சிகிச்சைகள் அல்லது மரணச் சடங்குகள் என வேறு செலவுகள் அதிகமாக இருப்பதனால் உணவுக்காக செலவு செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு வளமே அவர்களுக்கு இருக்கலாம். அத்துடன், சமூக இழுக்கும் மிகக் குறைந்த அளவிலான பிரவேசத்தை சமுதாய ஆதரவு பொறியமைப்புக்களுக்கு கொண்டிருக்கலாம். பராமரிப்பவர்களுக்கு போதியளவு ஆதரவு வழங்கப்படுவதுடன், பலவீனமான தனிநபர்கள் என்ற வகையில் கீழ் நிலைப்படுத்தக் கூடாது என்பது மிகவும் முக்கியமாகும். வழங்கப்படும் உதவியானது உணவூட்டல், போஷாக்கு, சுகாதாரம் மற்றும் உளச் சமூக உதவி மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை அடையாளப்படுத்தல் வேண்டும். நடைமுறையில் உள்ள சமூக வலையமைப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிட்ட பகுதிகளில் பொறுப்புடன் செயற்படுவதற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்படலாம் (பாதுகாப்பு கோட்பாடு 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???).**

உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 2: பொருத்தப்பாடு மற்றும் ஏற்புடைமை

வழங்கப்பட்ட உணவு விடயங்கள் பொருத்தமானவையாக மற்றும் ஏற்புடைமையாக இருத்தல் வேண்டும். அப்போதுதான், இவற்றை குடும்ப மட்டங்களில் பயனுள்ள வகையில், வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்த முடியும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உணவுப் பொருட்களின் ஏற்புடைமை, பரிச்சயம் மற்றும் பொருத்தப்பாடு தொடர்பில் மதிப்பீடு செய்தல் மற்றும் நிகழ்ச்சி வடிவமைப்பின் போது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் கலந்தாய்வு செய்தல். அத்துடன், உணவுத் தெரிவுகள் தொடர்பான தீர்மானங்களை பெறுபேறுகள் வெளிக்கொணருவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- உணவை சேமிப்பதற்கான மக்களின் இயலுமை, நீர் மற்றும் எரிபொருளுக்கான அவர்களின் பிரவேசம் மற்றும் சமைக்கும் நேரம் மற்றும் உணவு வகைகளை தெரிவு செய்தலின் போது ஊறவைத்தலுக்கான தேவைகள் என்பவற்றை மதிப்பீடு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- பரிச்சயமற்ற உணவு விநியோகிக்கப்படும் போது, உணவுத் தயாரிப்பவர்களுக்கு உள்ளூர் மொழியில் பொருத்தமான உணவு தயாரித்தல் முறை தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்குதல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அனைத்து தானிய வகைகளும் விநியோகிக்கப்படுமாயின், அரைப்பதற்கான அல்லது பதப்படுத்துவதற்கான வீடுகளில் அல்லது போதிய அரைத்தல் அல்லது பதப்படுத்தல் வசதிகளுக்கான பிரவேசம் போன்ற வழிவகைகள், உதவியைப் பெறுகின்ற மக்களுக்கு கிடைக்கின்றமையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3ஐப் பார்க்கவும்).
- சுவையூட்டும் பொருட்கள் உள்ளடங்கலாக கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களுக்கான பிரவேசம் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உணவுப் பொருட்களைத் தெரிவு செய்வதில் இலக்கு வைக்கப்பட்ட அனைத்து மக்களினதும் முழு பங்குப்பற்றலுடன் நிகழ்ச்சி தீர்மானங்கள் அமைய வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1 மற்றும் 4ஐப் பார்க்கவும்).
- நீருக்கான பிரவேசம், சமையல் எரிபொருள் மற்றும் உணவு பதப்படுத்தல் கருவிகள் என்பன தொடர்பில் நிகழ்ச்சி வடிவமைப்பு கவனஞ் செலுத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3ஐப் பார்க்கவும்).
- தனியான சரக்கு சார்ந்ததாக தூள் அல்லது திரவப் பால் அல்லது பால் உற்பத்திகள் தொடர்பிலான பொதுவான விநியோகங்கள் எதுவும் இல்லை (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **பரிச்சயத் தன்மை மற்றும் ஏற்புடைமை:** உணவுப் பொதியை தெரிவு செய்வதில் போஷாக்கு பெறுமதி என்பது பிரதான அவதானமாக இருக்கின்ற போது, சரக்குப் பொருட்கள் பெறுபவர்களுக்கு பரிச்சயமானதாகவும், மத மற்றும் கலாசார பாரம்பரியங்களுக்கு பொருத்தமானதாகவும், கர்ப்பிணிகள் அல்லது தாய்ப் பாலூட்டும் பெண்களுக்கு தேவையான உணவுகளை உள்ளடக்கியதாகவும் இருத்தல் வேண்டும். உணவுத் தெரிவு தொடர்பிலான கலந்தாய்வில் பலவீனமான மக்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். பரிச்சயமற்ற உணவு பயன்படுத்தப்படுமாயின், அது நாவிற்கினியதாக இருத்தல் வேண்டும். மதிப்பீட்டு அறிக்கைகளிலும் மற்றும் நிதியுதவியாளர்களுக்கான கோரிக்கைகளின் போதும், உணவுகளுக்கான தெரிவுகள் (உள்ளடக்கல் மற்றும் வெளியேற்றல்) விளக்கப்படல் வேண்டும். சமைத்தல் வசதிகளுக்கான பிரவேசத்தினை தடுக்கும் போது, பயன்படுத்துவதற்கு தயாரான உணவுகள் வழங்கப்படல் வேண்டும் (குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களுக்கான உணவூட்டல் தரம் 2ஐயும் பார்க்கவும் **பக்கம் ???**). சமையல் வசதிகள் இல்லையெனின், பரிச்சயமற்ற உணவு வகைகளைத் தவிர வழங்குவதற்கு வேறு மாற்றுவழி இல்லை. அத்துடன், இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசர கால பங்கீட்டுப் பொருட்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தலாம்.
2. **உணவு சேமிப்பு மற்றும் தயாரித்தல்:** உணவு வகைகளை சேமிப்பதற்கான மக்களின் இயலுமையானது சரக்குப் பொருட்களை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை தெரிவிக்க வேண்டும். நீர் தேவைகளுக்கு நீர் விநியோகத் தரம் 1ஐப் பார்க்கவும். உணவுத் தெரிவுகளை தெரிவிப்பதற்கு, சுகாதார ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு போதியளவு உணவினை பயனாளியினால் தயாரிக்க முடியும் என்பதனை உறுதி செய்வதற்கு மற்றும் சுற்றுச் சூழல் மாசடைவதனை தடுப்பதற்கும் எரிபொருள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன், அதிகளவிலான மரங்கள் எரிபொருள் தேவைக்காக வெட்டப்படுவதனை தவிர்ப்பதற்கும் இந்த மதிப்பீடு தேவையாக உள்ளது (பாதுகாப்பு கோட்பாடு 1இனைப் பார்க்கவும் **பக்கம் ???**). பொதுவாக, வழங்கப்பட்ட உணவானது அதிகளவு சமையல் நேரம் அல்லது அதிகளவிலான நீர் கொள்ளளவை கொண்டிருக்காது. அரைக்கப்பட்ட பருப்பு வகைகள் வழமையாக சமைக்கும் நேரம் மற்றும் எரிபொருளின் அளவை குறைக்கும் (சமைத்தல் உபகரணங்களுக்கு,

உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 6 மற்றும் உணவு சாரா பொருட்கள் தரங்கள் 3-4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

3. **உணவு பதனிடல்:** அனைத்து பருப்பு வகை தானியங்களும் நீண்ட கால வாழ்க்கைக்கான சாத்தியத்தை தரும். அத்துடன், பெறுபவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். குடும்ப மட்ட அரைத்தல் என்பது பாரம்பரியமானதாக இருக்கின்ற நிலையில் அல்லது உள்ளூர் அரைத்தல் ஆலைகளுக்கான பிரவேசம் உள்ள நிலையில், அனைத்து பருப்பு தானியங்களும் வழங்கப்படலாம். குறைந்த பிரித்தெடுத்தல் வர்த்தக ஆலைகளுக்கான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். இது கிருமிகள், எண்ணெய் மற்றும் நொதியங்கள் (எண்ணெய் சிக்கடித்தலுக்கு காரணமானது) என்பவற்றை அகற்றுவதாக இருத்தல் வேண்டும். அத்துடன், வாழ்க்கை மட்டத்தை அதிகரிப்பதாகவும் இருத்தல் வேண்டும். இருப்பினும், அது உயிர்ச்சத்து அளவையும் குறைக்கின்றது. சோளம் போன்ற தானியங்களுக்கு ஆலைகள் முக்கியமானவை. அரைக்கப்பட்ட முழுமையான சோளத்திற்கு ஆறு தொடக்கம் எட்டு வாரங்கள் வரையான அடுக்கு வாழ்க்கை உள்ளது. எனவே, நுகர்வுக்கு சிறிது நேரத்திற்கு முன்னரே சோளம் அரைக்கப்படல் வேண்டும். ஒட்டு மொத்த தானியங்களுக்குமான இறக்குமதி மற்றும் விநியோகத்திற்கான தேசிய சட்டங்கள் மதிக்கப்படல் வேண்டும். பெற்றுக் கொள்பவர்களின் அரைத்தலுக்கான செலவு, பணம் அல்லது சான்றுச் சீட்டுக்கள் மூலம் வழங்கப்படல் வேண்டும். மேலதிக தானியம் அல்லது அரைத்தல் உபகரணத்திற்கான பகுதி குறைந்தளவில் பரிந்துரைக்கப்படும் அணுகுமுறையாகும்.

4. **கலாசார ரீதியாக முக்கியமான விடயங்கள்:** கலாசார ரீதியாக முக்கியத்துவம் மிக்க சுவையூட்டும் உணவுப் பொருட்கள் மற்றும் நாளாந்த உணவுப் பழக்கத்திற்கு மிகவும் அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் (உ-ம்: தேநீர், மசாலாப் பொருட்கள்) என்பவற்றை மதிப்பீடுகள் அடையாளங் காண வேண்டும். அத்துடன், இந்த பொருட்களுக்கு மக்களுக்கு பிரவேசம் உள்ளதனை உறுதி செய்யவும். அதற்கு ஏற்றவாறு உணவுப் பொதி வடிவமைக்கப்படல் வேண்டும். விசேடமாக, நீண்ட காலத்திற்கு இந்த மக்கள் உணவுப் பங்கீடுகளில் தங்கியிருப்பர்.

5. **பால்:** குழந்தைகள் உணவு, பால்மா, பால்/பால் உற்பத்திகள் தனியான சரக்குப் பொருட்களாக பொதுவான உணவு விநியோகத்தின் போது அல்லது வீடுகளுக்குக் கொண்டுச் செல்லும் மிகை நிரப்பு உணவூட்டல் நிகழ்ச்சியின் கீழ் இலக்கு வைக்கப்படாத இலவசமான அல்லது அரசின் நிதியுதவி பெறப்பட்ட வகையில் வழங்கப்படக் கூடாது. ஏனெனில், இந்த பாரபட்சமான பயன்பாடு தீவிரமான சுகாதார அனர்த்தங்களை உருவாக்கும். பால் சார்ந்த எந்தவொரு இடையீடுகளும் IFE தொடர்பான செயற்பாட்டு வழிகாட்டல், BMSஐ சந்தைப்படுத்தல் தொடர்பான சர்வதேச குறியீடு மற்றும் தொடர்ச்சியான சம்பந்தப்பட்ட WHA தீர்வுகள் என்பவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் (குழந்தை மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல் தரங்கள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**)

உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 3: உணவு தரம் மற்றும் பாதுகாப்பு

விநியோகிக்கப்பட்ட உணவு மனித நுகர்வுக்கு உகந்ததாக இருப்பதுடன், தரத்தில் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உதவி பெறுபவர்களின் நாட்டின் தேசிய தரங்கள் மற்றும் வேறு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களை பூர்த்தி செய்வதாக உணவு தெரிவு செய்யப்படல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- காலாவதியாகும் தினத்திற்கு முன்னர் உணவினை விநியோகிக்கவும் அல்லது பயன்படுத்துவதற்கு சிறந்த காலப்பகுதிக்குள் விநியோகித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- விநியோகிக்கப்பட்ட உணவின் தரம் தொடர்பில் உதவி பெறுபவர்களிடம் கலந்துரையாடல். அத்துடன், அதன்போது எழுப்பப்படும் விடயங்களுக்கு ஏற்றதாக செயற்படல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- திண்மையான, கையாளுவதற்கு இலகுவான, சேமிக்கக் கூடிய மற்றும் விநியோகிக்கக் கூடிய பொருத்தமான உணவு பொதியிடலை தெரிவு செய்தல். அத்துடன், சுற்றுச் சூழலுக்கு ஆபத்து விளைவிக்காததாகவும் இருத்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- உணவுப் பொதிகளுக்கு ஏற்றப் பெயர்களை இடல். உணவுப் பொதிகளில் உற்பத்தி திகதி, தயாரிக்கப்பட்ட இடம், காலாவதியாகும் திகதி என்பவற்றை குறிப்பிடல். அத்துடன், உணவில் உள்ள போஷாக்கு குறித்த விபரங்களையும் குறிப்பிடல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- பொருத்தமான சூழ்நிலைகளில் உணவை எடுத்துச் சென்று, சேமிக்கவும். முறையான உணவு பரிசோதனையுடன் சேமித்தல் முகாமைத்துவத்தில் சிறந்த பயிற்சிகளை பயன்படுத்தவும் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நோக்கத்திற்கு பொருத்தமான உணவுகளை பெறுவதனையே பயனாளிகள் விரும்புவர் பாதுகாப்புக்காக உடலுக்கு கேடு விளைவிக்காததாக உணவு இருத்தல் வேண்டும். தர குறிப்புக்கள் மற்றும் போஷாக்குத் தன்மையுடன் பொருந்துவதாக உணவு இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2, 4ஐப் பார்க்கவும்).
- அனைத்து பயனாளிகளினதும் முறைப்பாடுகள் பெறப்பட்டு, தீர்க்கப்படுவதில், நம்பகத் தன்மையான கண்காணிப்பு பின்பற்றப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **உணவு தரம்:** தரம், பொதியிடல், பெயரிடல் மற்றும் சக்திக்கான நோக்கம் என்பன தொடர்பில் உதவி பெறுபவர்களின் அரசாங்கத்தின் உணவு தொடர்பான

தரங்கள் மற்றும்/அல்லது Codex Alimentarius தரங்களை பூர்த்தி செய்வதாக உணவு விநியோகம் இருத்தல் வேண்டும். உணவு எப்போதும் மனித நுகர்வுக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும். அதேவேளை, நோக்கத்திற்கு பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். எதிர்பார்க்கப்படும் வகையில் பயன்படுத்தக் கூடியதாக உணவின் தரம் இல்லாது இருப்பின், அது மனித நுகர்வுக்கு ஏற்றதாக இருந்த போதிலும், நோக்கத்திற்கு பொருத்தமானதாக இருக்காது (உதாரணமாக, மனித நுகர்வுக்கு ஏற்ற மாவின் தரமானது இல்லத்தில் வெதுப்பாக்கம் செய்வதற்கு பொருத்தமானது இல்லையாயின்). தரமான பரிசோதனைக்கு, மாதிரிகள் திட்டமிடல் மற்றும் கொள்வனவு செய்யும் நிறுவனங்களின் தரம் பொருத்தமானது என உறுதி செய்வதற்கான முறையான பரிசோதனை என்பவற்றின் மூலம் மாதிரிகள் வழங்கப்படல் வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில், உள்ளூரில் அல்லது இறக்குமதி செய்யப்படும் உணவுகளுக்கு தாவர நல சான்றிதழ்கள் அல்லது வேறு மேற்பார்வை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். சேமிப்புக்கள் தொடர்பில் அவ்வப்போதான மாதிரி சோதனைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். புகையூட்டல் பொருத்தமான உற்பத்திகளை பயன்படுத்தல் வேண்டும். அத்துடன், உறுதியான நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும். பாரிய எண்ணிக்கைகள் சம்பந்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அல்லது சந்தேகங்கள் உள்ள நிலையில் அல்லது தரம் தொடர்பில் நம்பிக்கையில்லாத நிலையில் சுயாதீன தர ஆய்வாளர்களால் அனுப்பப்படும் பொருட்கள் தொடர்பில் மேற்பார்வை புரிய வேண்டும். உணவுப் பொருட்கள் தொடர்பிலான வயது மற்றும் தரம் குறித்த தகவல்களை விநியோகஸ்தர்கள் சான்றிதழ்கள், தரக் கட்டுப்பாட்டு மேற்பார்வை அறிக்கைகள், பொதி பட்டியல்கள் மற்றும் களஞ்சியசாலை அறிக்கைகளின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். நோக்கத்திற்கு பொருத்தமல்லாத உணவு எச்சரிக்கையுடன் அப்புறப்படுத்தப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 4, வழிகாட்டல் குறிப்பு 10ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

2. **மரபு ரீதியாக புதுப்பிக்கப்பட்ட உணவுகள்:** மரபு ரீதியாக புதுப்பிக்கப்பட்ட உணவுகள் தொடர்பான பற்றுச்சீட்டு மற்றும் பயன்பாடு சார்ந்த தேசிய விதி-முறைகள் புரிந்து கொள்ளப்பட்டு, மதிக்கப்படல் வேண்டும். இறக்குமதிகள் சம்பந்தப்பட்ட உணவு பரிமாற்றங்களை திட்டமிடும் போது இந்த விதிமுறைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

3. **முறைப்பாடுகள் மற்றும் மறுசீரமைப்பு பொறியமைப்பு:** உதவி பெறுபவர்களுக்கான பொறுப்புடைமைக்காக உணவின் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் போதிய முறைப்பாடுகள் மற்றும் மறுசீரமைப்பு பொறியமைப்புக்கள் இருப்பதனை நிறுவனங்கள் உறுதி செய்தல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **பொதியிடல்:** இயலுமாயின், மீள் அளவிடல் (உதாரணமாக, குடைந்தெடுத்தல்) அல்லது மீள் பொதியிடல் இன்றி நேரடியான விநியோகத்தினை அனுமதிக்க வேண்டும். பங்கீட்டு முறை தரங்கள் எட்டப்படுவதனை உறுதி செய்வதற்கு பொருத்தமான பொதியிடல் அளவுகள் உதவி புரியும். அரசியல் ரீதியாக அல்லது மத ரீதியாக தூண்டக் கூடிய அல்லது தன்மையில் முரண்பாட்டினை ஏற்படுத்தக் கூடிய செய்திகளை தாங்கியதாக உணவு பொதியிடல் அமையக் கூடாது. பொதியிடல் தெரிவுகள் மற்றும் வெற்றுப் பொதிகளின் (சாக்குகள் மற்றும் தகரப் பேணிகள் போன்றன) முகாமைத்துவம் என்பனவற்றினால் சுற்றுச் சூழல்

சாவல்கள் குறைக்கப்படலாம். பயன்படுத்துவதற்கு தயாராக உள்ள உணவுப் பொதியிடலானது பாதுகாப்பான அப்புறப்படுத்தலுக்கு முக்கியமான கட்டுப்பாடுகள் உள்ளடக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5. **சேமித்தல் பகுதிகள்** வரட்சியானதாக மற்றும் போஷாக்கானதாக இருத்தல் வேண்டும். போதியளவில் வானிலை சூழ்நிலைகள் மற்றும் இரசாயனம் அல்லது வேறு எச்சங்களினால் அசுத்தமடையாத வகையில் பாதுகாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். சிறு பூச்சிகள் மற்றும் எலிகள் போன்ற தீங்கு விளைவிக்கக் கூடியவற்றில் இருந்து பாதுகாக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு – உணவு பரிமாற்றங்கள் தரம் 4 மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 4: விநியோக சங்கிலி முகாமைத்துவம் (SCM)

சரக்குப் பொருட்கள் மற்றும் தொடர்பான செலவுகள் பாரபட்சமற்ற, வெளிப்படைத் தன்மையுடன் மற்றும் பொறுப்பான வகையில் பயன்படுத்தப்படுவது முகாமை செய்யப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- இயலுமான வகையில் உள்ளூர் இயலுமையைப் பயன்படுத்தி ஒருங்கிணைக்கப்பட்ட, பயனுள்ள முறையை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).
- ஒப்பந்தங்களை வழங்கும் போது வெளிப்படையான, நீதியான மற்றும் பகிரங்க நடைமுறையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புகள் 1-2, 4ஐப் பார்க்கவும்).
- விநியோகம் செய்பவர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுடன் சிறந்த உறவை கட்டியெழுப்பல். மற்றும் ஒழுங்கு ரீதியான பயிற்சிகளை அமுல்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2, 4-5ஐப் பார்க்கவும்).
- உணவு தரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை கண்காணிப்பதற்கு முறையின் அனைத்து மட்டங்களிலும் ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கி, மேற்பார்வை செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- இருப்புக் கணக்கு, அறிக்கையிடல் மற்றும் நிதி முறைமைகள் உள்ளடங்கலாக பொருத்தமான நம்பகத்தன்மை நடைமுறைகளை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 6-8ஐப் பார்க்கவும்).
- களவு உள்ளடங்கலாக இழப்புக்களை குறைக்கவும். அனைத்து இழப்புக்கள் தொடர்பிலும் கணக்கிடல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 9-11ஐப் பார்க்கவும்).
- உணவு விநியோக முறையை கண்காணித்து, முகாமை செய்தல். இதன்மூலம், சட்டவிரோத வழிமாற்றங்கள் மற்றும் விநியோகத்தில் தடைகள் என்பவற்றை தடுப்பதற்கு எடுக்கப்பட்ட சாத்தியமான நடவடிக்கைகள் தொடர்பில் விநியோக சங்கிலியின் செயற்பாடுகள் குறித்து அனைத்து பங்குதாரர்களுக்கும் முறையாக அறிவிக்கப்படும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 12-13ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- எதிர்பார்க்கப்பட்ட விநியோக புள்ளிகளை உணவு அடைதல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1 மற்றும் 7ஐப் பார்க்கவும்).
- சரக்குப் பொருட்கள் பின்பற்றல் முறைகள், இருப்புக் கணக்குகளை பதிதல் மற்றும் அறிக்கையிடல் முறைகள் என்பன இடையீட்டின் ஆரம்பத்தில் இருந்து சரியாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8, 11-13ஐப் பார்க்கவும்).
- மதிப்பீட்டின் ஆதாரங்கள் மற்றும் உள்ளூர் SCM இயலுமைகளின் இருப்புக் கணக்கு என்பவற்றை SCM மதிப்பீட்டு அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. உள்ளூர் உணவு கிடைக்கக் கூடிய தன்மை மற்றும் உள்ளூரில் அனைத்து வசதிகளுக்குமான உட்கட்டமைப்பு (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3ஐப் பார்க்கவும்).
- SCM அறிக்கைகள் பின்வருவனவற்றை பின்பற்றுகின்றன:
  - விருதுகளை வழங்குவதற்கு வெளிப்படையான, நீதியான மற்றும் பகிரங்கமான முறைகளின் ஆதாரம்
  - விநியோகஸ்தர் அல்லது சேவை வழங்குநரின் செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் ஆதாரம்
  - பயிற்றப்பட்ட ளுஊஆ ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அளவு
  - ஆவணங்களின் பூரணத்துவம் மற்றும் நேர்த்தி
  - உணவு தொடர்பில் பார்க்கும் போது 2வீதத்திற்கும் குறைவாக இழப்புக்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன், பேணப்பட்டுள்ளமை.
  - வழமையான பகுப்பாய்வு மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு உணவு விநியோகம் மற்றும் விநியோக சங்கிலித் தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளமை.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **விநியோக சங்கிலி முகாமைத்துவம் என்பது** அனைத்து ஒழுங்கு ஏற்பாடுகளுக்குமான ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையாகும். பயன்படுத்தும் பொருளை தெரிவு செய்வதில் ஆரம்பித்து, வளம் வழங்கல், கொள்முதல், தர காப்புறுதி, பொதியிடல், ஏற்றுமதி செய்தல், போக்குவரத்து செய்தல், களஞ்சியப்படுத்தல், இருப்புக் கணக்கு முகாமைத்துவம் மற்றும் காப்புறுதி ஆகிய நடவடிக்கைகள் உள்ளடங்குகின்றன. SCMஇல் பல்வேறுபட்ட பங்காளர்கள் உள்ளடங்குகின்றனர். அத்துடன், நடவடிக்கைகள் அதனுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டியது அவசியமாகும் (மிக முக்கியமான தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). பயன்படுத்தும் பொருட்கள் பாதுகாப்பாக விநியோகிக்கும் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதனை முகாமைத்துவம் மற்றும் கண்காணித்தல் பயிற்சிகள் உறுதி செய்தல் வேண்டும். எவ்வாறாயினும், இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகளுக்கு உணவுப் பொருட்கள் சென்றடைவதனை உறுதி செய்ய வேண்டியது மனிதநேய நிறுவனங்களினது கடமையாகும் (உணவுப் பாதுகாப்பு - உணவுப் பரிமாற்றங்கள் தரம் 5 மற்றும் 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).
2. **உள்ளூர் சேவைகளைப் பயன்படுத்தல்:** உதவி புரியும் பகுதிக்கு வெளியில் இருந்து வளங்களைப் பெறுவதற்கு முன்னர், உள்ளூரில் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் பொருத்தப்பாடு தொடர்பில் உள்ளூர் இயலுமையை

கணிப்பதற்கான மதிப்பீடு முன்னெடுக்கப்படல் வேண்டும். உள்ளூரில் இருந்து வளங்களைப் பெறும் போது எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு காரணமாகவோ அல்லது தூண்டக் கூடியதாகவோ மற்றும் சமுதாயத்தில் மேலும் தீங்கு விளைவிப்பதாகவோ இல்லாதிருப்பதனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். உள்ளூர் விதிமுறைகள், நடைமுறைகள் மற்றும் வசதிகள் தொடர்பில் உள்ளூர் அல்லது பிராந்தியத்தில் மதிப்பு மிக்க போக்குவரத்து சேவை வழங்குநர்கள் மற்றும் பொதி ஏற்றும் சேவை வழங்குநர்கள் சிறந்த அறிவினை கொண்டிருப்பர். அத்துடன், உதவியினைப் பெறும் நாட்டின் சட்டங்களை ஒழுகி நடப்பதனை உறுதி செய்வதற்கும் அவர்கள் உதவி செய்வர். முரண்பாட்டுச் சூழலில், சேவை வழங்குநர்களை தெரிவு செய்தல் மிகவும் அவதானமாக முன்னெடுக்கப்படல் வேண்டும்.

3. **உள்ளூர் வளங்கள் எதிர் இறக்குமதி செய்தல்:** உள்ளூரில் பொருட்களின் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் உள்ளூரிலிருந்து/இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சந்தை முறைமைகளின் ஊகக்குறிப்புக்கள் என்பன சுற்றுச் சூழல் ஸ்திரத்தன்மை உள்ளடங்கலாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு தரம் 1 மற்றும் உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதார தரங்கள் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). உள்ளூரில் அல்லது பிராந்திய ரீதியில் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு சந்தைகள் ஊக்குவிக்கப்படுவதுடன், உதவி வழங்கப்படல் வேண்டும். இதன் மூலம் விவசாயிகள் தமது உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்பு வழங்கப்படுவதுடன், உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கவும் முடியும். பல்வேறு நிறுவனங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில், உள்ளூர் வளங்கள் இயலுமான வரையில் விரைவாக ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். பயன்படுத்தும் பொருட்கள் தொடர்பில் நாட்டில் உள்ள வேறு வளங்கள் கடன்கள் அல்லது மீள் ஒதுக்கீடுகள் உள்ளடங்கலாக நடைமுறையில் உள்ள உணவு நிகழ்ச்சிகளில் (நிதியுதவியாளர் உடன்படிக்கை என்பன அவசியமாகும்) அல்லது தேசிய தானிய சேமிப்பகங்கள், அல்லது கடன்கள் படிவம், அல்லது வர்த்தக விநியோகம் சார்ந்த விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

4. **பக்கச்சார்பின்மை:** ஊழல் அல்லது ஒரு தலைப்பட்ச ஆதரவு சார்ந்த சந்தேகத்தை தவிர்ப்பதற்கு நியாயமான மற்றும் வெளிப்படையான ஒப்பந்த நடைமுறைகள் அத்தியாவசியமாகும். சேவை வழங்குநரின் செயற்பாடு என்பது மதிப்பீடு செய்யப்படுவதுடன், தெரிவு செய்யப்படுவன பதிவு செய்யப்படலும் வேண்டும்.

5. **திறன்கள் மற்றும் பயிற்சிகள்:** அனுபவம் வாய்ந்த SCM நிபுணர்கள் மற்றும் நிகழ்ச்சி முகாமையாளர்கள் SCMஐ நிறுவுவதற்கும் மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் ஒன்று திரட்டப்படல் வேண்டும். ஒப்பந்தங்கள் முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் களஞ்சியசாலை முகாமைத்துவம், இருப்புக் கணக்கு முகாமைத்துவம், வரிசையான பகுப்பாய்வு மற்றும் தகவல் முகாமைத்துவம், கப்பல் ஏற்றுமதி பின்தொடரல் மற்றும் இறக்குமதி முகாமைத்துவம் என்பன உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட நிபுணத்துவம் தொடர்பான குறிப்பிட்ட வகைகள் உள்ளடக்கப்படல் வேண்டும். பயிற்சி வழங்கப்படும் போது, பங்காளர் நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை அது உள்ளடக்கல் வேண்டும். அத்துடன், உள்ளூர் மொழிகளில் பயிற்சி வழங்கப்படல் வேண்டும்.

6. **கட்டணத்திற்கு உணவு வழங்கப்படக் கூடாது:** களஞ்சியசாலையில் மற்றும் விநியோகிக்கும் பகுதிகளில் இறக்குதல் போன்ற சந்தர்ப்பங்களில் அனைத்து ஒழுங்கு ஏற்பாடுகளுக்குமான செயற்பாடுகளுக்கான கொடுப்பனவுக்கு உணவைப் பயன்படுத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும். பண ரீதியான கொடுப்பனவுகள் சாத்தியமாக இல்லாத சந்தர்ப்பங்களில் உணவு பயன்படுத்தப்படுமாயின், விநியோகிக்கும் பகுதிக்கு அனுப்பப்படும் உணவின் அளவில் மாற்றம் செய்யப்படல் வேண்டும். இல்லையெனில், ஏற்கனவே திட்டமிடப்பட்ட அளவிலான இலக்கு வைக்கப்பட்ட குழுக்களுக்கு போதிய அளவு உணவு வழங்கப்படுவது தவிர்க்கப்படும்.

7. **அறிக்கையிடல் (அனைத்து ஒழுங்குகளுக்குமான தொகுதி மற்றும் பல நிறுவனங்கள்):** பெரும்பாலான உணவு உதவி வழங்குபவர்கள் விசேடமான அறிக்கையிடல் தேவைகளை கொண்டிருப்பர். அத்துடன், விநியோக சங்கிலி முகாமையாளர்கள் இந்த தேவைகள் தொடர்பில் அறிந்திருக்க வேண்டும். அதன் அடிப்படையில் அவற்றை எட்டுவதற்கான முறையை நிர்மாணிக்க வேண்டும். விநியோகச் சங்கிலியில் நாளாந்த முகாமைத்துவ தேவைகள் எந்தவொரு தாமதங்கள் அல்லது மாற்றங்கள் தொடர்பிலும் முறையாக அறிக்கையிடப்படல் வேண்டும். தொடர்ச்சியான தகவல் மற்றும் வேறு SCM அறிக்கைகள் வெளிப்படையான வகையில் பகிரப்படல் வேண்டும்.

8. **ஆவணப்படுத்தல்:** பரிமாற்றங்கள் தொடர்பில் கணக்காய்வு ஆவணப்படுத்தலுக்காக எங்கே பொருட்களை பெற முடியும், எங்கே சேமித்து வைக்கப்பட்டுள்ளது மற்றும்∴ அல்லது கொண்டு செல்லப்படுவது என்பன தொடர்பில் போதிய ஆவணப்படுத்தல் மற்றும் படிவங்கள் (வழிப் பட்டியல், களஞ்சியப் புத்தகம், அறிக்கை படிவங்கள், இன்னபிற) உள்ளூர் மொழியில் அனைத்து இடங்களிலும் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

9. **களஞ்சியப்படுத்தல்:** உணவுக்கான களஞ்சியசாலைகள் பகிரப்பட்ட வசதிகளை கொண்டிருப்பது சிறந்தது. ஆனால், சிறந்த முகாமைத்துவம் என்பது எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சவால்களை குறைக்கும். களஞ்சிய சாலையை தெரிவு செய்யும் போது, ஆபத்து விளைவிக்கக் கூடிய எந்தவொரு பொட்களும் முன்னர் இங்கு சேமித்து வைக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் மாசடைவதற்கான ஆபத்து எதுவும் இல்லை என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். பாதுகாப்பு, இயலுமை, பிரவேசத்திற்கான இலகுத் தன்மை, கட்டமைப்பு உறுதி (கூரை, சுவர்கள், கதவுகள் மற்றும் தரை) மற்றும் வெள்ளப் பெருக்கு தொடர்பான அச்சுறுத்தல் உள்ளடங்கிய விடயங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

10. **மனித நுகர்வுக்கு உகந்தது அல்லாத பொருட்களை அப்புறப்படுத்தல்:** சேதமடைந்த பொருட்கள் தரமான மேற்பார்வையாளர்களால் (உணவு பாதுகாப்பு நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்கள் போன்ற) மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு, அவை மனித நுகர்வுக்கு உகந்ததா அல்லது உகந்தது அல்லாததா என்பதனை தீர்மானிக்க வேண்டும். உணவு சுகாதார சீர்கேட்டை விளைவிப்பதற்கு முன்னர் உடனடியாக அப்புறப்படுத்தப்படல் வேண்டும். விலங்குகளுக்கு உணவூட்டலுக்கு விற்பனை செய்யக் கூடியவை மற்றும் இறுதிச் சடங்கு∴சாம்பல் போன்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை உள்ளடங்கலாக நுகர்வுக்கு உகந்தது அல்லாத பொருட்கள் அப்புறுப்படுத்த முறைகள் உருவாக்கப்படல் வேண்டும். விலங்குகளுக்கான

உணவுகளாக அப்புறுப்படுத்துவதற்கு, இந்த நோக்கத்திற்கான தகுதி சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அனைத்து சம்பவங்களிலும், உகந்தது அற்ற பொருட்கள் மனித அல்லது விலங்கு உணவு விநியோகச் சங்கிலிக்குள் உள்ளடக்கப்படக் கூடாது. அப்புறப்படுத்தல் நடவடிக்கைகள் சுற்றுச் சூழல் அல்லது மாசடைந்த நீர் வளங்கள் என்பவற்றுக்கு தீங்கு விளைவிக்காததாக இருக்க வேண்டும்.

11. **விநியோகச் சங்கிலிக்கான அச்சுறுத்தல்:** ஆயுத முரண்பாடு அல்லது பொது பாதுகாப்பின்மை போன்ற சூழ்நிலைகளின் போது உணவு சூறையாடப்படுவதற்கான அல்லது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் கோரப்படுவதற்கான ஆபத்து உள்ளது. போக்குவரத்து பாதைகளுக்கான மற்றும் களஞ்சியசாலைகளுக்கான பாதுகாப்பு தொடர்பான சவால்களும் முகாமை செய்யப்படல் வேண்டும். விநியோகச் சங்கிலியின் அனைத்து மட்டங்களிலும் பொருட்கள் களவாடப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. அனைத்து மட்டங்களிலும் மேற்பார்வை செய்வதற்கான, கையளிப்பதற்கான மற்றும் விநியோகிக்கும் பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்கான ஆபத்தை குறைப்பதற்கான மேற்பார்வை முறை உருவாக்கப்படல் வேண்டும். வஞ்சகக் கூட்டின் ஆபத்தை குறைப்பதற்கு பொறுப்புக்களின் பிரிவினை உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் உறுதி செய்தல் வேண்டும். சட்டவிரோதமான முறையில் உணவு வழிமாற்றப்படுவதனை தவிர்ப்பதற்கு சேமிப்புக்கள் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வரல் வேண்டும். விநியோகச் சங்கிலியின் ஒருமைப்பாட்டினை உறுதி செய்வதற்கு மாத்திரம் அளவீடுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. ஆயுத முரண்பாட்டுக்கு சாதகமான வகையில் சேமிப்புக்கள் வழிமாற்றப்படுவதற்கான சாத்தியங்கள் போன்ற பரந்த அரசியல் மற்றும் பாதுகாப்பு ஊகக்குறிப்புக்களை பகுப்பாய்வு செய்வதாகவும், அடையாளப்படுத்துவதாகவும் அவை இருத்தல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும்).

12. **வரிசையான பகுப்பாய்வுகள்** தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படல் வேண்டும். அத்துடன், சேமிப்பு மட்டங்கள், எதிர்பார்க்கப்படுவன மற்றும் விநியோகிக்கப்பட்டவை தொடர்பான சம்பந்தப்பட்ட தகவல்கள் விநியோகச் சங்கலியில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கு மத்தியில் பகிரப்படல் வேண்டும். சேமிப்பு மட்டங்களை சரிபார்த்தல் மற்றும் முன் எதிர்வுகூறல் என்பன எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறைகள் மற்றும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவதுடன், அதற்கான சரியான தீர்வுகளும் பெறப்படல் வேண்டும். வரிசைக்கிரமத்தில் ஏற்படும் தடையினை தடுப்பதற்கான கடன்களை பங்காளர்களுக்கு மத்தியில் தகவல்கள் பரிமாற்றல் வழங்கும். வளங்கள் போதியதாக இல்லாது இருப்பின் இது தவிர்க்க முடியாததாகி விடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், உணவுப் பொதியில் உள்ள பொருட்களை முன்னுரிமைப்படுத்தல் என்பது கிடைக்கக் கூடியதாக உள்ள நிதியில் நிகழ்ச்சியிடல் வளங்களில் (எடுத்துக்காட்டாக, எதனை வாங்குவது என தெரிவு செய்தல்) மிகவும் முக்கியமானது. பங்குதாரர்கள் கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும். அத்துடன், ஒட்டு மொத்த பங்கீட்டு அளவு அல்லது பயனாளிகளுக்கு அதிகளவான பிரவேசம் உள்ள (பௌதீக ரீதியாக அல்லது பொருளாதார ரீதியாக) உணவு வகைளினை குறைத்தல் அல்லது வெளியேற்றல் என்பன உள்ளடங்கலாக தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும்.

13. **தகவல்களை வழங்கல்:** தவறான புரிந்துணர்வுகளை தவிர்ப்பதற்கு அனைத்து பங்குதாரர்களுக்கும் தகவல்கள் வழங்கப்படாது, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு

மாத்திரம் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். விநியோகங்கள் மற்றும் வெளிப்படைத் தன்மையை மீள் நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூர் அதிகா-ரிகள் மற்றும் உதவியைப் பெறுபவர்களுக்கு தகவல் தெரிவிப்பதற்கான வழியாக உள்ளூர் ஊடகங்கள், பாரம்பரிய முறையான செய்தி பரிமாற்றம் மற்றும் தற்போதைய தொழில்நுட்பங்கள் (கையடக்கத் தொலைபேசி குறுஞ் செய்தி, மின்னஞ்சல்) பயன்படுத்தப்படலாம்.

உணவுப் பாதுகாப்பு - உணவுப் பரிமாற்றங்கள் தரம் 5: இலக்கு வைத்தல் மற்றும் விநியோகித்தல்

இலக்கு வைக்கப்பட்ட உணவு விநியோக முறையானது பொறுப்பானதாக, உரிய நேரத்திற்கானதாக, வெளிப்படையானதாக மற்றும் பாதுகாப்பானதாக, கண்ணியம் மற்றும் அதற்கு பொருத்தமான உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஆதரவு வழங்குவதாக இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பொருத்தமான பங்குதாரர்களுடன் கலந்தாய்வதன் மூலம் தேவையின் அடிப்படையில் உணவு உதவி பெறுபவர்களினை அடையாளங் கண்டு, இலக்கு வைத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- பங்காளர் நிறுவனங்கள், உள்ளூர் குழுக்கள் மற்றும் உதவி பெறுபவர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் கண்ணியத்திற்கு ஆதரவளிக்கும் பயனுள்ள மற்றும் சமமான உணவு விநியோக முறைகளை வடிவமைத்தல். இந்தச் செயற்பாட்டில் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனுடைய நபர்களின் பிரதிநிதிகள், வயதானவர்கள் மற்றும் நடமாட முடியாத தனிநபர்களின் செயற்றிறன் மிக்க பங்களிப்பு பெறப்படல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-4ஐப் பார்க்கவும்).
- உதவி பெறுபவர்களுக்கு இலகுவான பிரவேசம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருத்தமான விடயங்கள் தொடர்பில் உள்ளூர் பங்குதாரர்களுடன் கலந்தாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐப் பார்க்கவும்).
- விநியோகத் திட்டம் மற்றும் உணவு பங்கீட்டின் தரம் மற்றும் அளவு தொடர்பில் முற்கூட்டியே உதவிப் பெறுபவர்களுக்கு அறிவித்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8ஐப் பார்க்கவும்).
- இலக்கு வைக்கப்பட்ட உணவு விநியோகத்தின் செயற்பாட்டினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பலவீனத் தன்மையின் முழுமையான பகுப்பாய்வின் அடிப்படையில் இலக்கு வைத்தல் பிரமாணம் அமைதல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- இலக்கு வைத்தல் பொறியமைப்புக்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

- நடமாட்டம் குறைந்த மக்களுக்கான சம்பந்தப்பட்ட மாற்று வழி விநியோக வடிவங்கள் உள்ளமை உறுதி செய்யப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐப் பார்க்கவும்).
- உதவி பெறுபவர்களுக்கான விநியோகத் தளம் 10 கிலோமீற்றர்களுக்கு உட்பட்ட நடைபயணத்தில் அடையக் கூடியதாக இருத்தல் வேண்டும்.. எடுத்துக்காட்டாக, நான்கு மணித்தியால நடைக்கு அதிகமாக இருக்கக் கூடாது (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- விநியோகத்தின் போது உணவு பங்கீட்டினை குறிக்கும் பங்கீட்டு அட்டை, பதாகைகள் மற்றும்∴அல்லது அடையாள குறிகள் வைக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8ஐப் பார்க்கவும்).
- கண்காணித்தல் மற்றும்∴அல்லது பயனாளி நம்பகத்தன்மை பொறியமைப்புக்கள் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்).
  - விநியோக முறைகள் தொடர்பில் பங்குதாரர்களின் முன்னுரிமைகள்
  - விநியோகம் தொடர்பில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தகவல்கள்
  - பயனாளிகள்∴உணவு பெறுபவர்கள்: உண்மையான எதிர் திட்டமிடப்பட்ட (கால அவகாசம், தரம், அளவு).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **இலக்கு வைத்தல்:** அதிக தேவையுள்ளவர்கள் என மதிப்பீடு செய்யப்பட்ட மக்களை இலக்கு வைத்ததாக உணவு இருத்தல் வேண்டும். மிகவும் முக்கியமாக தீவிரமான உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் போஷாக்கின்மையுள்ள தனிநபர்கள் (அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பலவீனங்கள் மற்றம் இயலுமைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரங்கள் 1 மற்றும் 2ஐப் பார்க்கவும்). ஆரம்ப நிலையில் மாத்திரமின்றி இடையீடு முழுவதிலும் வீச்சளவினை இலக்கு வைத்தல். வெளியேற்றல் தவறுகள் (வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியது) மற்றும் உள்ளடக்கல் தவறுகளுக்கு (அழிவினை ஏற்படுத்தக் கூடிய அல்லது பயனற்ற) இடையிலான சரியான சமத்தன்மையை கண்டறிதல் என்பது சிக்கலானது. இருப்பினும், தவறுகளை குறைப்பது என்பது வழமையாக செலவீனத்தை அதிகரிக்கும். தீவிரமான அவசர கால நிலைகளில் உள்ளடக்கல் தவறுகள், வெளியேற்றல் தவறுகளிலும் பார்க்க ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். உடனடியாக ஏற்படும் அனர்த்தங்களின் போது, அனைத்து குடும்பங்களும் ஒரே வகையான பாதிப்பினை எதிர்நோக்கியிருப்பதனால் அல்லது போதிய பிரவேசம் இன்மையால் விளக்கமான இலக்கு வைத்தல் மதிப்பீடு என்பது கிடைக்காது உள்ள நிலையில் எல்லாவற்றுக்கும் பொதுவான விநியோகங்கள் பொருத்தமானது. இலக்கு வைத்தலில் ஈடுபட்டுள்ள முகவர்களை தெரிவு செய்வது என்பது, அவர்களுடைய பக்கச்சார்பின்மை, இயலுமை மற்றும் நம்பகத் தன்மை சார்ந்தது. முகவர்களை இலக்கு வைத்தல் என்பதில் உள்ளூர் பெரியவர்கள், உள்ளூரில் தெரிவு செய்யப்பட்ட நிவாரண குழுக்கள், சிவில் சமூக நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள் அல்லது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன உள்ளடங்கும். பெண்களை இலக்கு வைக்கும் முகவர்களின் தெரிவு அதிகளவில் வரவேற்கப்படுகின்றது. இலக்கு வைத்தல்

அணுகுமுறைகள் தெளிவானதாகவும், பதட்டம் உருவாகுவதனை தவிர்ப்பதற்கு மற்றும் தீங்கு ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு உதவி பெறுபவர்கள் மற்றும் உதவி பெறாத சமூகத்தினரால் என இரண்டு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

2. **பதிவு செய்தல்:** இயலுமான வரையில் உணவு உதவிகளை பெறும் குடும்பங்களின் முறைசார் பதிவுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். அத்துடன், தேவையான சந்தர்ப்பங்களில் அந்த தரவுகள் புதுப்பிக்கப்படல் வேண்டும். பயனாளிகளின் பட்டியல், சரிபார்ப்பு பட்டியல் மற்றும் பங்கீட்டு அட்டைகளைப் (விநியோகிக்கப்பட்டிருப்பின்) பெறுவதற்கு மற்றும் விசேட தேவையுடன் உள்ள மக்களை அடையாளங் காண்பதற்கு பயனுள்ள விநியோக முறையை வடிவமைப்பதற்கு (விநியோகம் செய்யும் நிறுவனத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் மக்களின் அளவு மற்றும் புள்ளிவிபரம்) பயனாளிகள் தொடர்பான தகவல்கள் அத்தியாவசியமாகும். முகாம்களில் பதிவு செய்தல் என்பது எப்போதுமே சவாலானது. விசேடமாக இடம்பெயர்ந்த மக்களிடம் அடையாளப்படுத்துவதற்கான ஆவணங்கள் இல்லாத சந்தர்ப்பங்களை குறிப்பிடலாம் (பாதுகாப்பு கோட்பாடு 4, வழிகாட்டல் குறிப்புக்கள் 4-5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). உள்ளூர் அதிகாரிகள் மற்றும் சமுதாயங்களினால் சேகரிக்கப்பட்ட குடும்பங்கள் சம்பந்தபட்ட பட்டியல்கள் பயனுள்ளதாக இருக்கலாம். சுயாதீனமான மதிப்பீடு என்பது அவை பூரணமானது மற்றும் பக்கச்சார்பற்றது என்பதனை நிரூபிக்க வேண்டும். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையில், பதிவு செய்தல் நடைமுறைக்கு உதவி செய்வதற்கு பெண்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். விநியோகப் பட்டியலில் இருந்து பலவீனமான தனிநபர்கள், விசேடமாக வீட்டுக்குள் முடங்கியிருப்பவர்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்பதனை நிறுவனங்கள் உறுதி செய்தல் வேண்டும். குடும்பத்தின் தலைவர்கள் வழமையாக பதிவு செய்யப்படும் போது, தமது சொந்தப் பெயர்களில் பதிவு செய்வதற்கான உரிமை பெண்களுக்கு உண்டு. குடும்ப மட்டங்களில், மிகவும் பொருத்தமான வகையில் பரிமாற்றங்களை பெண்கள் பயன்படுத்துவர். அனர்த்தத்தின் ஆரம்ப நிலைகளில் பதிவு செய்தல் என்பது சாத்தியமற்றதாக இருப்பின், சூழ்நிலையானது ஸ்திரத் தன்மையை அடைந்தவுடன் அது பூர்த்தி செய்யப்படல் வேண்டும். நீண்ட காலத்திற்கு உணவு பரிமாற்றங்கள் அவசியமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் இது மிகவும் முக்கியமானது. பதிவு செய்தல் நடைமுறைக்கு முறைப்பாடுகள் மற்றும் மறுசீரமைப்பு பொறியமைப்பு நிறுவப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 1, வழிகாட்டல் குறிப்புகள் 2 மற்றும் 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

3. **உலர் உணவுக்கான விநியோக முறைகள்:** பெரும்பாலான விநியோக முறைகளுக்கு அதிக நேரம் தேவைப்படும். பொது உணவு விநியோகம் என்பது வழமையாக பயனாளிகள் தமது வீடுகளில் சமைத்துக் கொள்ளக் கூடிய வகையில் உலர் உணவு வடிவிலேயே அமைந்திருக்கும். உதவியைப் பெறுபவர் தனிநபராக அல்லது குடும்பத்தின் பங்கீட்டு அட்டை உரிமையாளராக, குடும்பங்களின் தொகுதியின் பிரதிநிதியாக, பாரம்பரியத் தலைவர்கள்/சமுதாயஞ் சார்ந்த தலைவர்களாக இருக்கலாம். கள நிபந்தனைகள் தெரிவு செய்வதற்கான சிறந்த உதவி பெறுபவரை தீர்மானிக்கின்றன. சூழ்நிலையின் மாற்றமானது, உதவி பெறுபவரிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம். பிரதிநிதிகள் அல்லது தலைவர்கள் ஊடான விநியோகம் சம்பந்தப்பட்ட சவால்கள் மிகுந்த அவதானத்துடன் மதிப்பீடு

செய்யப்படல் வேண்டும். உதவி பெறுபவர்களின் தெரிவானது பணிச்சுமை மற்றும் உள்ளக துஷ்பிரயோகம் உள்ளடங்கலாக வன்முறைக்கு சாத்தியமான சவால்களின் தாக்கம் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடுகள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). விநியோகத்தின் அலைவரிசை யானது உணவு பங்கீட்டின் நிறை மற்றும் அதனை வீடு வரை பயனாளியினால் சுமந்து செல்ல முடியுமா என்பது தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனுடையவர்கள் தமக்கு உரியவற்றை சேகரிப்பதனை உறுதி செய்வதற்கான முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். ஏனைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உதவி புரியலாம். ஆனால், மாதாந்த பங்கீடுகளிலும் பார்க்க, வாராந்த அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை பங்கீடுகளை வழங்குவது சிறந்தது. பலவீனமான மக்களை இலக்கு வைக்கும் செயற்பாடு, ஏற்கனவே அவர்கள் எதிர்கொள்ளும் களங்கத்தை மேலும் அதிகரிப்பதாக இருக்கக் கூடாது. எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் மக்கள் தொகையில் இது மிகவும் முக்கியமான விடயமாக இருக்கலாம் (பாதுகாப்பு கோட்பாடு 4, வழிகாட்டல் குறிப்புக்கள் 1, 9-11ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **சமைத்த உணவுகளின் விநியோக முறை:** விதிவிலக்காக, தீவிரமான அவசர கால நிலையின் போது ஆரம்ப கட்டத்தில் பொதுவான உணவு விநி-யோகம் என்பது சமைத்த உணவாக அல்லது உண்பதற்கு தயாரனதாக இருக்கலாம். மக்கள் வேறிடங்களுக்கு நகரும் போதும், மோசமான பாதுகாப்பின்மையின் போதும், உணவை வீட்டுக் கொண்டு செல்லும் போதும் பயனாளிகளுக்கு களவு அல்லது வன்முறை போன்ற ஆபத்து ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில், அதிக அளவிலான துஷ்பிரயோகம் அல்லது வரிவிதிப்பிலான விலக்கப்பட்ட பலவீனமான மக்கள், பாரிய இடப்பெயர்வினால் மக்கள் தமது சொத்துக்களை (சமையல் உபகரணங்கள் மற்றும்/அல்லது எரிபொருள்) இழக்கும் போது அல்லது தாமாக சமைத்து உண்ண முடியாத அளவு பலவீனம் அடையும் போது, உள்ளூர் தலைவர்கள் உணவுப் பொருட்களை வேறிடத்துக்கு வழிமாற்றும் போது அல்லது சுற்றுச் சூழல் சிக்கல்கள் இருக்கும் போது (உ-ம் விறகுகள் சேகரிக்கப்படுவதனை தவிர்ப்பதற்கு உயிர்ச் சூழல் அமைப்பினை பாதுகாக்கும் வகையில்) சமைத்த உணவுகள் பொருத்தமானதாக இருக்கும். கல்வி கற்பவர்களுக்கான பாடசாலை உணவுகள் மற்றும் உணவு ஊக்குவிப்புக்கள் என்பன அவசர கால நிலையில் விநியோக பொறியமைப்பாக இருத்தல் வேண்டும் (கல்விக்கான INEE அடிப்படைத் தரங்களைப் பார்க்கவும்).

5. **விநியோக நிலைகள் மற்றும் போக்குவரத்து:** உதவியைப் பெறுபவர்களுக்கு பாதுகாப்பானதாக மற்றும் அணுகுவதற்கு இயலுமானதாக இருத்தல் வேண்டும். நிறுவனத்தின் ஒழுங்கு ஏற்பாடுகளுக்கு அடிப்படையானதாக இருத்தல் கூடாது (பாதுகாப்பு கோட்பாடு 3, வழிகாட்டல் குறிப்புக்கள் 6-9ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). இவை, ஏனைய வளங்களுக்கான மேற்பரப்பு மற்றும் அருகாமை என்பன தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும் (பருகக் கூடிய நீர், மலசல கூடங்கள், மருத்துவ சேவைகள், நிழல், உறைவிடம், பெண்களுக்கு பாதுகாப்பான இடம்). இராணுவ அல்லது ஆயுதந் தரித்த சோதனைச் சாவடிகளை கடந்து கொள்ளக் கூடிய இடங்களில் விநியோகித்தல் நிலைகள் அமைந்திருக்கக் கூடாது. விநியோகத்தின் அலைவரிசை மற்றும் விநியோக நிலைகளின் எண்ணிக்கை என்பன விநியோக நிலைகளுக்கு பயணிப்பதற்கு உதவி பெறுபவர்களுக்கு

எடுக்கின்ற நேரம் மற்றும் உதவிப் பொருட்களை கொண்டு செல்வதில் ஏற்படும் பிரயோக ரீதியான சிக்கல்கள் மற்றும் போக்குவரத்துக்கான செலவு என்பனவும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். உதவிப் பெறுபவர்கள் விநியோக நிலையில் இருந்தும், விநியோக நிலைக்கும் பயணிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். விநியோகத்திற்கான மாற்றுவழிகள் இயலாதவர்களால் எட்டக் கூடிய வகையில் வடிவமைக்கப்படல் வேண்டும். அத்துடன், தனிமைப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் (உ-ம்: நடமாடும் சிக்கல் உடைய தனிநபர்கள்). நடப்பதற்கான வேக சராசரி 5கிலோமீற்றர்/மணித்தியாலத்திற்கு என்பதாக அமைய வேண்டும். ஆனால், மோசமான மேற்பரப்பு மற்றும் தளங்கள் மெதுவானதாக இருத்தல் வேண்டும். வயது மற்றும் நடமாடுவதற்கான அளவு என்பதன் அடிப்படையில் நேரம் வேறுபடும். அனர்த்த சூழ்நிலையில் விநியோகத்திற்கான பிரவேசம் என்பது ஒதுக்கப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களின் அச்சத்திற்கான பொதுவான வளமாக உள்ளது. நாளாந்த நடவடிக்கைகளுக்கு ஏற்படும் இடையூறுகளை குறைக்கக் கூடியதாக விநியோகம் வடிவமைக்கப்படல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில், உதவி பெறுபவர்களின் பாதுகாப்புக்காக பகல் நேரங்களில் விநியோக நிலைக்கு பயணிக்க வேண்டிய தேவையுள்ளது. பயனாளிகள் இரவில் தங்குவதனை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இது மேலதிக சிக்கலைத் தோற்றுவிக்கும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

6. **பாதுகாப்பு சவால்களை குறைத்தல்**: வேறு வழிகளுக்கு மாற்றுதல் மற்றும் வன்முறை என்பன உள்ளடங்கலாக உணவு விநியோகங்கள் பாதுகாப்பு சவால்களை உருவாக்கலாம். விநியோகங்களின் போது பதட்டங்கள் அதிகரித்து காணப்படலாம். பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனுடையவர்கள் என்போர் தமது உரிமைத் தகுதி தொடர்பிலான சிக்கல்களை எதிர்நோக்குவர். சவால் தொடர்பில் முன்கூட்டியே மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். அத்துடன், அவற்றை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதில் பயிற்றப்பட்ட ஊழியர்களால் விநியோகங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் ஊடாக விநியோக நிலைகளை பாதுகாத்தல் என்பன உள்ளடங்கும். தேவையாயின், உள்ளூர் பொலிஸாரின் உதவி பெற்றுக் கொள்ளப்படலாம். ஆனால், உணவு பரிமாற்றங்கள் தொடர்பான குறிக்கோள்கள் சம்பந்தப்பட்டதாக அவர்கள் கூருணர்வுடன் செயற்படல் வேண்டும். விநியோக நிலைகளில் தள அமைப்பினை மிகவும் அவதானமாக திட்டமிடுதல் என்பது சன நெருக்கடி மற்றும் குறைந்த பாதுகாப்பு சவால்களை வசதியளிப்பதற்கு உதவி புரியும். உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட பாலியல் சுரண்டல்கள் உள்ளடங்கலாக பால்நிலை சார்ந்த வன்முறைகளை தடுப்பதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் மறுசீரமைப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். ஆண்கள் மற்றும் பெண்களை தனித்தனியாக பிரித்தெடுத்தலும் இதில் உள்ளடங்கும். உதாரணமாக, பௌதீக தடைகளின் ஊடாக அல்லது தனித் தனியான விநியோக நேரங்களை வழங்குவதன் ஊடாக, உணவு விநியோக அணிகள் அனைத்துக்கும் பொருத்தமான நன்னடத்தை மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிரான தண்டனைகள் தொடர்பில் அறிவுறுத்தல், மற்றும் பொருட்களை இறக்குதல், பதிவு செய்தல், விநியோகம் மற்றும் விநியோகத்திற்கு பின்னரான உணவு என்பவற்றை மேற்பார்வை செய்வதற்கான பெண் "பாதுகாவலர்கள்" என்பன உள்ளடங்கலான விடயங்களை குறிப்பிடலாம் (வழிகாட்டல் குறிப்பு 5 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

7. **.தகவல் விநியோகம்:** பின்வரும் விடயங்கள் தொடர்பில் உதவி பெறுபவர்களுக்கு தகவல்களை வழங்கவும்:

- விநியோகிக்கப்பட வேண்டிய பங்கீட்டு உணவின் அளவு மற்றும் வகை மற்றும் திட்டத்தில் ஏற்படும் வேறுபாடுகளுக்கான காரணிகள்: விநியோகத் தளங்களில் முறையாக பங்கீட்டு தகவல்கள் தொடர்பில் காட்சிப்படுத்தல் வேண்டும். வாசிப்பதற்கான அல்லது தொடர்பாடல் சிக்கல்கள் உள்ளவர்களும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இந்த காட்சிப்படுத்தல் அமைதல் வேண்டும் (உ-ம். உள்ளூர் மொழியில் எழுதப்பட்ட மற்றும்/அல்லது படங்களில் வரையப்பட்ட மற்றும்/அல்லது வாய் மூலத் தகவல்கள்) எனவே, தமது உரிமைத் தகுதிகள் தொடர்பில் மக்கள் விழிப்புணர்வு பெறுவர்.
- விநியோகத் திட்டம் (நாள், நேரம், இடம், அலைவரிசை) மற்றும் வேறு மாற்றங்கள்.
- உணவின் போஷாக்குத் தரம் மற்றும், தேவையாயின் உதவி பெறுபவர்கள் அதன் போஷாக்கு பெறுமதியை பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தல் வேண்டும்.
- உணவுகளை பாதுகாப்பாக கையாளுதல் மற்றும் பயன்படுத்துவதற்கான தேவைகள்
- சிறுவர்களுக்கான உணவின் ஏற்ற பயன்பாடு தொடர்பிலான விசேடத் தகவல்கள் (குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களுக்கு உணவூட்டல் தரங்கள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).
- உதவி பெறுபவர்கள் நிகழ்ச்சி தொடர்பில் மற்றும் முறைப்பாடுகள் தெரிவிப்பதற்கான நடைமுறை தொடர்பில் மேலதிக தகவல்களை பெறுவதற்கான மிகவும் பொருத்தமான வழிகள் (மிக முக்கியமான தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 4-6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**)

8. **நிகழ்ச்சியின் மாற்றங்கள்:** உணவு போதாமையின் காரணமாக உணவுப் பொதி அல்லது பங்கீட்டு அளவில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் விநியோக குழுக்கள், சமுதாயத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் ஊடாக உதவி பெறுபவர்களுடன் கலந்துரையாடப்படல் வேண்டும். விநியோகங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு முன்னர் நடவடிக்கைக்கான காரணம் ஒருங்கிணைந்து வடிவமைக்கப்படல் வேண்டும். மாற்றங்கள், அதற்கான காரணங்கள் மற்றும் எப்போது வழமையான விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கும் என்பன தொடர்பில் மக்களுக்கு விநியோக குழு அறிவிக்க வேண்டும். பின்வரும் தெரிவுகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்:

- அனைத்து உதவி பெறுபவர்களுக்குமான பங்கீட்டு அளவினை குறைத்தல் (கிடைக்கக் கூடியதாக உள்ள பொருட்களின் சமமான பங்கு அல்லது குறைக்கப்பட்ட உணவுப் பொதி)
- பலவீனமான தனிநபர்களுக்கு “முழு” பங்கீட்டு உணவும், ஏனைய பொது மக்களுக்கு “குறைக்கப்பட்ட” பங்கீட்டு உணவும் வழங்குதல்
- கடைசித் தெரிவாக உணவு விநியோகத்தை ஒத்திவைத்தல்

திட்டமிடப்பட்ட பங்கீட்டின் விநியோகமானது சாத்தியமற்றதாயின், பின்வரும் விடயங்கள் தொடர்பில் குறைத்தல் என்பது அவசியமல்ல (எடுத்துக்காட்டாக, எதிர்செயல் நடவடிக்கைகள் பொருத்தமானது அல்ல).

9. **கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்** என்பது விநியோகச் சங்கிலியின் அனைத்து மட்டங்களிலும் மற்றும் நுகர்வு வரையான நிலை வரையும் முன்னெடுக்கப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). விநியோக நிலைகளில், விநியோகம் முன்னெடுக்கப்படுவதற்கு முன்னர் விநியோகத்திற்கான ஒழுங்குகள் முறையாக செய்யப்பட்டுள்ளமையை பரிசோதிக்கவும் (உ-ம், பதிவு செய்வதற்கான, பாதுகாப்பு, தகவல் விநி-யோகம்). விநியோக முகாமைத்துவத்தின் பூரணத் தன்மை மற்றும் ஒப்புரவினை அளவிடுவதற்காக குடும்பங்களால் சேகரிக்கப்படும் பங்கீட்டுப் பொருட்கள் ஆங்காங்கு நிறை பார்க்கப்படல் வேண்டும். அத்துடன், உதவி பெறுபவர்கள் நேர்காணப்படல் வேண்டும். பங்கீட்டுப் பொருட்களின் பயன்பாட்டுத் தன்மை மற்றும் ஏற்றுக் கொள்ளல் தன்மை தொடர்பில் அறிந்து கொள்வதற்கு, ஆங்காங்குள்ள குடும்பங்களுக்கு விஜயம் செய்வது பொருத்தமாக இருக்கும். அத்துடன், தெரிவு பிரமாணத்தை எட்டியுள்ள, ஆனால் உணவு உதவி பெறாத மக்களை அடையாளங் காண்பதற்கும் இது உதவி புரியும். இவ்வாறான விஜயங்களின் மூலம் மேலதிகமாக உணவு விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பதனையும், அவை எங்கிருந்து வருகின்றன, அவை எவற்றுக்காக பயன்படுகின்றன, யாரால் பயன்படுத்தப்படுகின்றன என்பவற்றை அறிந்து கொள்ளவும் உதவி புரிகின்றன (உ-ம்: கைப்பற்றுதல், ஆட்சேர்த்தல் அல்லது சுரண்டல், பாலியல் அல்லது வேறு வகையானவை என்பவற்றின் காரணமாக). பயனாளிகளின் பாதுகாப்பில் உணவு விநியோகத்தின் தாக்கத்தை கண்காணித்தல் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். விவசாய சக்கரத்தின் ஊகக் குறிப்புக்கள், விவசாய நடவடிக்கைகள், சந்தை நிலைகள் மற்றும் விவசாய உள்ளீடுகளின் கிடைக்கக் கூடியத் தன்மை என்பன போன்ற உணவு விநியோகத்தின் பரந்தளவு தாக்கமும் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

உணவு பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 6: உணவு பயன்பாடு

பாதுகாப்பான மற்றும் பொருத்தமான வகையில் குடும்பங்களினால் மற்றும் சமுதாயங்களினால் உணவு களஞ்சியப்படுத்தப்படல், தயாரிக்கப்படல் மற்றும் நுகரப்படல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பொருத்தமான உணவு கையாளுதல் அல்லது தயாரித்தல் மூலம் பயனாளிகளை பாதுகாத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- உணவு உதவியைப் பெறுபவர்களுக்கு உணவின் சுகாதாரத் தன்மையின் முக்கியத்துவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்கல் மற்றும் உணவு கையாளுதலில் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

- சமைக்கப்பட்ட உணவு விநியோகிக்கப்படும் சந்தர்ப்பங்களில், பாதுகாப்பான களஞ்சியப்படுத்தல் மற்றும் உணவு கையாளுதல், உணவினை தயாரித்தல் மற்றும் முறையற்ற பயிற்சியினால் ஏற்படக் கூடிய சுகாதார அனர்த்தங்கள் தொடர்பான சாத்தியத் தன்மைகள் என்பன குறித்து ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- விநியோகிக்கப்படும் உணவு களஞ்சியப்படுத்தல், தயாரித்தல், சமைத்தல் மற்றும் நுகர்வு தொடர்பில் பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்கல் (தேவையான சந்தர்ப்பங்களில் அறிவுரை வழங்கல்). மற்றும் பலவீனமான மக்களின் இலக்கு வைக்கப்பட்ட பகுதியின் ஊகக் குறிப்புக்கள் மற்றும் புதிதாக உருவாகும் விடயங்கள் தொடர்பில் பிரதிபலித்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- பொருத்தமான சமைத்தல் உபகரணங்கள், எரிபொருள், போதிய நீர் மற்றும் போஷாக்கு விடயங்கள் தொடர்பில் குடும்பங்களுக்கு பிரவேசம் உள்ளமையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-4ஐப் பார்க்கவும்).
- உணவு தயாரிக்க முடியாத தனிநபர்கள் அல்லது உணவூட்ட முடியாதவர்களுக்கு பொருத்தமான உணவு தயாரிக்கப்பட்ட பொதிகள் மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில் உணவூட்டலுக்கான பிரவேசம் உள்ளமையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உணவு விநியோகத்தின் பின்னர் சுகாதார அனர்த்தங்கள் சம்பந்தமான சம்பவங்கள் எதுவும் இடம்பெறாமையை உறுதி செய்தல் வேண்டும்.
- சிறந்த உணவு போஷாக்கு தொடர்பில் பயனாளிகளின் விழிப்புணர்வு அதிகரிக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- உணவினை கையாளுதல் மற்றும் முறையற்ற பயிற்சிகளின் அனர்த்தங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அனைவருக்கும் பயிற்சி வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- போதிய மற்றும் பாதுகாப்பான உணவு தயாரித்தல் பொருட்கள் மற்றும் கருவிகளுக்கு குடும்பங்களில் முழுமையான பிரவேசம் இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐப் பார்க்கவும்).
- விசேட உதவி தேவையாக உள்ளவர்களுக்கு உணவு பொதி வசதிகள் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **உணவு சுகாதாரம்:** அனர்த்தங்களின் காரணமாக மக்களின் வழமையான போஷாக்கு பயிற்சிகளில் இடையூறு ஏற்படலாம். உணவு போஷாக்கினை மேம்படுத்த வேண்டியது மற்றும் உள்ளூர் சூழ்நிலைகள் மற்றும் நோய் வகைகள் தொடர்பில் ஒத்துழைக்கக் கூடிய உதவி நடவடிக்கைகளை எடுத்தல் (உ-ம்: உணவினை கையாளுவதற்கு முன்னர் கைகளை சுத்தம் செய்வதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தல், உணவு மாசடைதலை தவிர்த்தல் மற்றும் நோய் நுண்மப் பரப்பி கட்டுபாட்டு நடவடிக்கைகளை எடுத்தல்) என்பன மிகவும் அவசியமானதாக இருக்கலாம். உணவு உதவி பெறுபவர்களுக்கு வீடுகளில்

உணவினை எவ்வாறு பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவது என்பது தொடர்பில் அறிவுறுத்தப்படல் வேண்டும். சிறுவர்களுக்கு உணவூட்டுவதற்கு வீட்டில் உள்ள வளங்களின் முறையான பயன்பாடு மற்றும் உணவு தயாரிப்புக்கான பாதுகாப்பான முறைகள் என்பன தொடர்பில் பராமரிப்பவர்களுக்கு போதிய தகவல்கள் வழங்கப்படல் வேண்டும் (போஷாக்கு மேம்படுத்தல் தரங்கள் 1 மற்றும் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). சமுதாய சமையலறைகள் அமைக்கப்படும் சந்தர்ப்பங்களில், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சூடான உணவுகளை வழங்கல். சமையலறைக்கான இடத்தை தெரிவு செய்வதில் அணுகும் தன்மை, பாதுகாப்பு மற்றும் தளத்தின் சுகாதார நிலைமைகள், சமைத்தல் மற்றும் குடிநீர் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் உண்பதற்கான இடம் என்பன தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

2. **தகவல் மூலங்கள்:** தகவல்களை பரிமாறுதல் மற்றும் பயனாளிகளிடமிருந்து, முக்கியமாக பெண்களிடமிருந்து பின்னூட்டங்களை பெறுதல் என்பன தொடர்பில் பொறியமைப்புக்கள் அவசியமாகும் (மிக முக்கியமான தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 2 மற்றும் 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). உணவு தொடர்பான அறிவுறுத்தல்களை விநியோகிப்பதற்கு, பாடசாலைகள் மற்றும் பாதுகாப்பான கற்றல் வசதிகள் என்பன தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். தொட-ர்பாடல் சம்பந்தப்பட்ட சிக்கல் உள்ள மக்களுக்காக அணுகக் கூடிய வடிவங்கள் அல்லது வரைபடங்கள் என்பன பயன்படுத்தப்படலாம் (மிக முக்கியமான தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

3. **எரிபொருள், பயன்படுத்தக் கூடிய நீர் மற்றும் வீட்டுப் பொருட்கள்:** தேவையான சந்தர்ப்பங்களில், பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்ற விறகு சேகரிக்கும் பிரதான தரப்பினருக்காக போதியளவு எரிபொருள் வழங்கப்படல் வேண்டும் அல்லது விறகுகள் அல்லது அறுவடை நிகழ்ச்சிகள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும் (அடுப்புக்கள் மற்றும் எரிபொருள், உணவு சாராத விடயங்கள் தரம் 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). நீர் பிரவேசம் அளவு, தரம் மற்றும் வசதிகளுக்கு, நீர் விநியோக தரங்கள் 1-3ஐப் பார்க்கவும், சமைத்தல் மற்றும் உணவு உட்கொள்ளல் உபகரணங்கள் மற்றும் நீர் கொள்கலன்களுக்கு, உணவு சாராத விடயங்கள் தரம் 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**.

4. தானியங்கள் அரைக்கும் ஆலை போன்ற **உணவு பதனிடல் வசதிகளுக்கான பிரவேசம்** என்பது தமது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மக்கள் உணவினை தயாரிப்பதற்கு இயலுமானதாக்கும். அத்துடன், ஏனைய உற்பத்தித் திறன் நடவடிக்கைகளுக்காக மக்களின் நேரத்தை சேமிக்கும். வீட்டு மட்டங்களில் உணவு பதனிடும் நடவடிக்கைகளான அரைத்தல் என்பது, சமைத்தலுக்கான நேரம் மற்றும் நீர் மற்றும் எரிபொருள் தேவையின் அளவை குறைக்கும் (உணவுப் பாதுகாப்பு -உணவு பரிமாற்றங்கள் தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

5. **.விசேடத் தேவைகள்:** சிறுவர்கள், வயதானவர்கள், மாற்றுத் திறனுடையவர்கள் மற்றும் எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள் உள்ளடங்கலாக தனிநபர்களுக்கு விசேட உதவிகள் தேவையாக இருக்கும் (குழந்தை மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல் தரம் 2, மற்றும் உணவு பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 5-7ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). வெளிப்படையான நிகழ்ச்சிகள் அல்லது மேலதிக உதவிகள் மற்றும் பின்தொடரல் என்பன

தம்மைத் தங்கியிருப்பவர்களுக்கு உதவி வழங்குவதற்கு போதிய இயலுமை அற்ற மக்களுக்கு மிகவும் அவசியமாக இருக்கும் (உ-ம். மனநலம் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள்).

4.2. உணவுப் பாதுகாப்பு பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள்.

பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் இரண்டு வகையான உதவிகளை உள்ளடக்கியுள்ளன: பண பரிமாற்றங்கள் என்பது மக்களுக்கு பணத்தை வழங்குவதாகும். அதேவேளை, சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் என்பது, நிர்ணயிக்கப்பட்ட அளவிலான குறிப்பிடத்தக்க பொருட்களான உணவு போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கான கூப்பன்கள் (பொருட்கள் சார்ந்த சான்றுச் சீட்டுக்கள்) அல்லது நிர்ணயிக்கப்பட்ட நிதி பெறுமதியை உடைய கூப்பன்கள் (பெறுமதி சார்ந்த சான்றுச் சீட்டுக்கள்) என்பனவற்றை மக்களுக்கு வழங்குவதாகும். அதேவேளை, அவற்றின் குறிக்கோள்களும், வடிவங்களும் வேறுபட்டதாக இருக்கும். பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் பயனாளிகளுக்கு கொள்வனவு செய்யும் அதிகாரத்தை வழங்கும் சந்தை அடிப்படையிலான அணுகுமுறையை கையாள்கின்றன.

அடிப்படையான உணவு மற்றும் உணவு சாராத தேவைகள் அல்லது பொருளாதார நடவடிக்கையை மீள ஆரம்பிப்பதற்கு உதவும் பொருட்களை கொள்வனவு செய்தல் என்பனவற்றிற்கு பயன்படுத்தக் கூடியதாக பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் காணப்படுகின்றன. நிபந்தனையற்ற (அல்லது இலக்கு வைக்கப்படாத அல்லது "உலகளாவிய") பண உதவிகளுக்கு, பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் நிபந்தனைகள் எதுவும் இல்லை. இருப்பினும், மதிப்பீட்டில் அடிப்படைத் தேவைகள் அடையாளங் காணப்படுமாயின், இந்த தேவைகளை நிறைவு செய்வதற்கு பணம் பயன்படுத்தப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வாழ்வாதாரங்கள் அல்லது உற்பத்தித் திறன் மிக்க நடவடிக்கைகளுக்கான உதவியானது தேவையாக அடையாளங் காணப்படுமாயின், வழங்கப்பட்ட பணமானது அதன் பொருட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். நிபந்தனையற்ற பண உதவிகள் அவசரகால நிலைமையின் ஆரம்பத்தில் மிகவும் பொருத்தமானதாக இருக்கலாம். குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவே (உ-ம்: வீடுகளை மீள் நிர்மாணித்தல், தொழிலாளர்களை வழங்கல், வாழ்வாதாரத்தை நிர்மாணித்தல் அல்லது மீள் நிர்மாணித்தல் மற்றும்/அல்லது சுகாதார சேவைகளை அடைதல்) பணம் பயன்படுத்தப்படல் வேண்டும் என்பது நிபந்தனையுடனான பண உதவியாக இருக்கும். முன் தீர்மானிக்கப்பட்ட பொருட்களின் வகைகளுக்கு (உ-ம் உணவு, கால்நடை, விதைகள், கருவிகள்) அல்லது சேவைகளுக்கு (உ-ம்: அரைத்தல் ஆலைகள், போக்குவரத்து, சந்தை அல்லது நிரந்தர பிரவேசம், வங்கிக் கடன்கள்) சான்றுச் சீட்டுக்கள் பிரவேசத்தை வழங்கும். குறிப்பிடத்தக்க வர்த்தகர்களிடம் அல்லது சேவை வழங்குநர்களிடம் அல்லது சந்தைகளில் முன்தெரிவு செய்யப்பட்ட கடைகளில் பயன்படுத்தப்படுவதற்காக சான்றுச் சீட்டுக்களுக்கு பண பெறுமதி அல்லது பொருட்களுக்கான பெறுமதி இருக்கும். சான்றுச் சீட்டு நிகழ்ச்சிகள் துறை சார்ந்த தரங்களுடன் சம்பந்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்: உதாரணமாக, உணவு சான்றுச் சீட்டு நிகழ்ச்சிகள் உணவுப் பாதுகாப்பு -உணவுப் பரிமாற்றங்கள் தரங்கள் 1-3 மற்றும் 6 என்பவற்றை பின்பற்ற வேண்டும் (**பக்கம் ???**).

பொருத்தமான பரிமாற்றங்கள் (உணவு, பணம் அல்லது சான்றுச் சீட்டு) தொடர்பான தெரிவுக்கு செலவின் பயனுறுதி, இரண்டாம் நிலை சந்தை தாக்கங்கள்,

பரிமாற்றங்களின் நெகிழ்ச்சித் தன்மை, இலக்கு வைத்தல் மற்றும் பாதுகாப்பின்மை மற்றும் ஊழலின் சவால்கள் என்பன உள்ளடங்கலாக சூழ்நிலை சம்பந்தப்பட்ட பகுப்பாய்வு அவசியமாகும்

உணவுப் பாதுகாப்பு - பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் தரம் 1: கிடைக்கக் கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பிரவேசம்.

அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதாரங்களை பாதுகாத்தல் மற்றும் மீள்கட்டமைப்பதற்கான வழிகளாக பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் கருதப்படுகின்றன.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- மதிப்பீடு, வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வில் பயனாளிகள், சமுதாய பிரதிநிதிகள் மற்றும் வேறு முக்கியமான பங்குதாரர்களை கலந்தாய்வு செய்தல் மற்றும் ஈடுபடுத்திக் கொள்ளல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3,6-7 மற்றும் மிக முக்கிய தரங்கள் 1-3ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- மாற்றுவழி பரிமாற்றங்களுடன் ஒப்பிடும் போது செலவு பயனுறுதி மிக்க விலையில் உள்ளூர் சந்தைகளில் தமக்குத் தேவையானவற்றை மக்கள் பெறக் கூடியதாக உள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல். அத்துடன், சந்தை சங்கிலியையும் பகுப்பாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை மற்றும் உள்ளூர் பொருளா-தாரம் ஆகியவற்றுக்கு பயன் ஏற்படுத்தக் கூடிய மிகவும் பொருத்தமான விநியோக பொறியமைப்பின் அடிப்படையில் பணம் அல்லது சான்றுச் சீட்டுக்கள் அல்லது அவை இரண்டும் கலந்த முறையொன்றை தெரிவு செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3, 5-6ஐப் பார்க்கவும்).
- சட்டவிரோத வழி மாற்றங்கள், பாதுகாப்பின்மை, பணவீக்கம், தீங்கு விளைவிக்கக் கூடிய பயன்பாடு மற்றும் பலவீனமான குழுக்களின் மீது எதிர்மறையான தாக்கங்கள் போன்ற ஆபத்துக்களை குறைக்கக் கூடியதாக செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படல். இலக்கு வைத்தல் முறை தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 4 மற்றும் 7ஐப் பார்க்கவும்).
- மிகவும் பொருத்தமான பரிமாற்றமாக பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டுக்கள் காணப்படுகின்றதா மற்றும் மாற்றங்கள் ஏதும் முன்னெடுக்கப்படல் வேண்டுமா என்பதனை மதிப்பீடு செய்வதற்கான கண்காணித்தலை முன்னெடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உள்ளூர் சந்தைகளின் கொள்வனவு மூலம் இலக்கு வைக்கப்பட்ட மக்கள் தொகை முழுவதும் தமது அடிப்படை உணவுத் தேவைகள் மற்றும் வேறு வாழ்வாதாரத் தேவைகள் (உ-ம்: உற்பத்தித் திறன் மிக்க சொத்துக்கள், சுகாதாரம், கல்வி,

போக்குவரத்து, உறைவிடம்) சிலவற்றை அல்லது முழுவதையும் அடைதல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2, 8ஐப் பார்க்கவும்).

- பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டுக்கள் என்பன அனைத்து இலக்கு வைக்கப்பட்ட மக்கள் தொகைக்குமான பரிமாற்றத்திற்கான வடிவமாக பரிந்துரைக்கப்படுகின்றது. விசேடமாக பெண்கள் மற்றும் வேறு பலவீனமான மக்களுக்கு இது பொருந்தும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-8ஐப் பார்க்கவும்).
- சமூகத்துக்கு எதிரான செலவீனங்களுக்கு பரிமாற்றங்கள் உதவியாக அமையக் கூடாது (வழிகாட்டல் குறிப்புக்கள் 4 மற்றும் 8ஐப் பார்க்கவும்).
- பரிமாற்றமானது பாதுகாப்பின்மையை தூண்டி விடுவதாக இருக்கக் கூடாது (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4, 8ஐப் பார்க்கவும்).
- அனர்த்தத்தில் இருந்து மீட்சிப் பெறுவதற்கு உள்ளூர் பொருளாதாரத்திற்கு உதவி வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2, 8ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் என்பது ஒரு கருவி:** எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான பொறியமைப்புக்களாக பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் காணப்படுகின்றன. அவை இடையீடுகள் அல்ல. பண மற்றும்/அல்லது சான்றுச் சீட்டுக்கள் பொருத்தமானவையா அல்லது பொருத்தமற்றவையா மற்றும் அவை தனித்து பயன்படுத்தப்படல் வேண்டுமா அல்லது வேறு உதவிகளுடன் இணைத்து பயன்படுத்தப்படல் வேண்டுமா என்பன தொடர்பில் அவதானமான, ஒப்பீட்டு ரீதியான மதிப்பீடுகள் என்பன குறிப்பிட வேண்டும். அனர்த்தத்தின் பல்வேறுபட்ட நிலைகளில் பண மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் பயன்படுத்தப்படலாம். எதிர்பார்க்கப்படும் பயனாளிகளின் அடிப்படைத் தேவைகளை அடைதல் அல்லது வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பல் போன்றவற்றின் பயனுறுதித் தன்மை மற்றும் வினைத்திறனினால் மாத்திரம் மறுசீரமைப்பு என்பது தீர்மானிக்கப்படுவதில்லை. அவற்றுடன் சம்பந்தப்பட்ட எதிர்பார்க்கப்படும் சவால்களின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றது. தனித்தனியான உதவிகளிலும் பார்க்க, பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் என்பன சிறந்த தெரிவு மற்றும் வசதியை வழங்குகின்றன. அத்துடன், சிறந்த கண்ணியத்திற்கான உணர்வை உதவி பெறுபவர்களுக்கு வழங்கக் கூடியதாகவும் இது இருக்கும். பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் சாதகமான பல்வகை தாக்கங்களை உருவாக்கும். இவை மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். பணமும், சான்றுச் சீட்டுக்களும் பின்வரும் வகையில் பயன்படுத்தப்படலாம்.

   - **பண உதவிகள் - பல்வகையான தேவைகளை எட்டுவதற்கு ஒரு தவணையாக அல்லது பல தவணைகளாக நிபந்தனையுடன் அல்லது நிபந்தனையற்ற பண பரிமாற்றம்**
   - **பொருட்கள் அல்லது பெறுமதி சார்ந்த சான்றுச் சீட்டு - முக்கியமான பொருட்கள் அல்லது பல பொருட்களை, சான்றுச் சீட்டின் பெறுமதிக்கு ஏற்ப பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் காகிதம் அல்லது இலத்திரனியல் சான்றுச் சீட்டுக்களின் பரிமாற்றம்.**

- **பணிக்கான பணம் - குறிப்பிட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான பண பரிமாற்றம் (வழமையாக பௌதீக தொழிலாளர் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்)**

அரசாங்கங்கள், உள்ளூர் அதிகாரிகள், சமுதாய கட்டமைப்புக்கள் மற்றும் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளூர் குழுக்கள் மற்றும் பயனாளிகள் போன்ற உள்ளூர் பங்குதாரர்கள் போன்றோர் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தலில் உள்ளடக்கப்படல் வேண்டும். பொருத்தப்பாடு மற்றும் ஸ்திரத் தன்மையை உறுதி செய்வதற்கு இது உதவி புரியும். பிரதான பங்குதாரர்களுடன் இணைந்து வெளி வருவதற்கான மூலோபாயம் தயாரிக்கப்படல் வேண்டும்.

2. **உள்ளூர் பொருளாதாரங்கள் மற்றும் சந்தை முறைமைகள் மீதான தாக்கம்:** அனர்த்தத்திற்கு முன்னரும், பின்னரும் சூழ்நிலையை சந்தை மதிப்பீடு பகுப்பாய்வு செய்தல் வேண்டும். அத்துடன், நடப்புத் தேவைகளுக்கு பிரதிபலிக்கக் கூடிய சந்தையின் போட்டித் திறன் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பிலும் பகுப்பாய்வு முன்னெடுக்கப்படல் வேண்டும். இந்த பகுப்பாய்வானது வேறுபட்ட சந்தை செயற்பாட்டாளர்கள், பொருட்கள் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் விலை (வாழ்வாதார சொத்துக்கள், உறைவிட மூலப்பொருட்கள், உணவு மற்றும் குறிக்கோளின் அடிப்படையில் வேறு பொருட்கள்) பருவம் மற்றும் பலவீனமான குழுக்களின் பல்வேறுபட்ட மக்களின் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார பிரவேசம் என்பன தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். சந்தைகள் செயற்படும் போதும், அணுகக் கூடியதாக இருக்கும் போதும் உணவு மற்றும் வேறு அடிப்படைப் பொருட்கள் போதிய அளவில் மற்றும் நியாயமான விலையில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் போதும், பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறான பரிமாற்றங்கள் உள்ளூர் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உடனடியாக அல்லது நிலைத்திருக்கக் கூடிய மீட்சிக்கு துணை புரியும். சந்தை மறுசீரமைப்புக்கள் உள்ளூர் கொள்முதல் மற்றும் சிறந்த பயன்பாடு சார்ந்த இயலுமைகளை நடைமுறையில் உள்ள சந்தை செயற்பாட்டாளர்களில் மேம்படுத்தும். பொருத்தமற்ற சூழ்நிலையில் பணம் மற்றும் சான்றுச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படுமாயின், சந்தைகளை உருக்குலையச் செய்வதுடன், பணவீக்கம் போன்ற எதிர்மறையான தாக்கங்களையும் ஏற்படுத்தும். உள்ளூர் பொருளாதாரங்கள் மற்றும் மக்களுக்கு சந்தை கண்காணித்தல் என்பன பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்களின் தாக்கத்தை புரிந்து கொள்வதற்கு அத்தியாவசியமானவையாகும்.

3. **பணம் மற்றும் சான்றுச் சீட்டு விநியோக பொறியமைப்புக்கள்:** உள்ளூர் வங்கிகள், கடைகள், வர்த்தகர்கள், உள்ளூர் நிதி பரிமாற்ற நிறுவனங்கள், சம்பள கொடுப்பனவு நிறுவனங்கள் மற்றும் தபால் அலுவலகங்கள் ஊடாக பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படலாம். அவை கையடக்கத் தொலைபேசி வங்கிச் சேவை மற்றும் கையடக்கத் தொலைபேசி வலையமைப்புக்கள் போன்ற வகையில் பௌதீக ரீதியாக அல்லது தொழில்நுட்பங்கள் ஊடாக விநியோகிக்கப்படலாம். வங்கிகள் பொதுவாக பயனுறுதி மிக்கதாக மற்றும் வினைத்திறன் மிக்கதாக இருக்கும். ஆனால், பலவீனமான மக்களிற்கான பிரவேசத் தன்மை குறைவாக இருக்கும். நடமாடும் வங்கிகள், ஊடாகவேனும், வங்கிகளை அணுகக் கூடியதாக இருப்பின், அது மிகவும் பாதுகாப்பான தெரிவாக இருக்கும்.

விநியோக பொறியமைப்பினை தெரிவு செய்தல் என்பதற்கு தெரிவுகளின் மதிப்பீடு முன்னெடுக்கப்படல் வேண்டும். அத்துடன், உதவி பெறுபவர்களுடன் கலந்தாய்வும் முன்னெடுக்கப்படல் வேண்டும். உதவி பெறுபவர்களுக்கான செலவுகள் (வங்கிக் கட்டணங்கள், போக்குவரத்து நேரம் மற்றும் செலவு, சேகரிப்பு நிலையங்களில் நேரம்), நிறுவனத்திற்கான செலவுகள் (வழங்குநரின் கட்டணங்கள் மற்றும் தயாரித்தல் செலவுகள், தயாரிப்பதற்கான மற்றும் நிர்வகிப்பதற்கான ஊழியர் நேரம், மற்றும் போக்குவரத்து, பாதுகாப்பு, கல்வி மற்றும் உதவி பெறுபவர்களுக்கு பயிற்சி), பயனுறுதித் தன்மை மற்றும் வினைத்திறன் (பொருத்தப்பாடு, நெகிழ்ச்சி, நம்பகத் தன்மை, வெளிப்படைத் தன்மை, கண்காணித்தல், வசதி, நிதி கட்டுப்பாடு, நிதி பாதுகாப்பு மற்றும் பலவீனமான மக்களின் பிரவேசம்) என்பன கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயங்களாக இருக்கின்றன. அதிக செலவீனம் மிக்கதாக காணப்படும் அணுகுமுறையே, மிகவும் பொருத்தமான பரிமாற்றல் பொறியமைப்பாக உள்ளது.

4. **சவால்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தல்:** பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாக அமையும் (அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் ஏனையோருக்கு குறைந்த கொள்வனவு செய்யும் அதிகாரத்தை வழங்கும்), சமூகத்திற்கு எதிரான நோக்கங்களுக்கு பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்களை பயன்படுத்தல் (உ-ம், மதுபானம் மற்றும்/அல்லது புகைத்தலுக்கு) மற்றும் தனியான உதவிகளுடன் இணைத்ததாக பார்க்கும் போது பெண்கள் மற்றும் ஆண்களுக்கான பிரவேசத்தில் வேறுபாடு என்பன சார்ந்த அச்சம் உள்ளடங்கலாக பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் பரிமாற்றங்கள் சார்ந்த சவால்கள் தொடர்பான பொதுவான அக்கறைகள் காணப்படுகின்றன. பணத்தை கொண்டு செல்லும் போது நடைமுறைப்படுத்தும் ஊழியருக்கு மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகைக்கு பாதுகாப்பு சார்ந்த பிரச்சினை ஏற்படலாம் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). பணம் மீதான கவரும் தன்மையானது உதவி பெறுபவர்களை இலக்கு வைப்பதில் சிக்கலை உண்டு பண்ணலாம். அல்லது ஊழல் செய்வதற்கான எண்ண மாறுபாடு அல்லது ஆயுதக் குழுக்களினால் கைப்பற்றப்படுவதற்கான ஆபத்து என்பன ஏனைய அக்கறை செலுத்த வேண்டிய விடயங்களாகும். எவ்வாறாயினும், தனியான உதவிகளிலும் சவால்கள் உள்ளன (உணவுப் பாதுகாப்பு - உணவுப் பரிமாற்றங்கள் தரம் 4-6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). சிறந்த வலையமைப்பின் ஊடாக, பகுப்பாய்வுக்கான ஆபத்து மற்றும் சிறந்த முகாமைத்துவம் என்பவற்றின் ஊடாக பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் தொடர்பில் காணப்படும் ஆபத்துக்களை தவிர்க்க முடியும். தீர்மானம் எடுத்தல் என்பது ஆதாரங்கள் சார்ந்த கலந்தாய்வின் ஊடாக முன்னெடுக்கப்படல் வேண்டும். கண்டறியப்படாத அச்சங்கள் நிகழ்ச்சி திட்டமிடலில் செல்வாக்கு செலுத்தக் கூடாது.

5. **பணத்தின் பெறுமதி அல்லது சான்றுச் சீட்டு பரிமாற்றத்தின் பெறுமதியை நிர்ணயித்தல்:** பரிமாற்றங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியானது சூழ்நிலையைப் பொருத்தது. ஏனைய நிறுவனங்களுடன் கலந்தாய்வு மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில், உள்ளூர் சந்தைகளில் கொள்வனவு செய்யப்படவுள்ள முக்கியமான பொருட்களின் விலைகளின் அடிப்படையில், வழங்கப்படும் மற்றும்/அல்லது வழங்கப்படவுள்ள வேறு உதவிகள் (உ-ம்: மட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம் உள்ள மக்களுக்கு போக்குவரத்து உதவி), முறை,

அளவு மற்றும் கொடுப்பனவுகளின் அலைவரிசை மற்றும் பருவம் அடிப்படையில் கொடுப்பனவுக்கான காலம், மற்றும் நிகழ்ச்சி மற்றும் பரிமாற்றங்களின் குறிக்கோள்கள் (உ-ம்: உணவுப் பொதியின் அடிப்படையில் உணவுத் தேவைகளை உள்ளடக்கல் அல்லது நாளாந்த கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பினை வழங்கல்) என்பவற்றின் அடிப்படையில் இதற்கான கணிப்பீடு முன்னெடுக்கப்படும். விலை ஏற்றத்தாழ்வு என்பது பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் பரிமாற்றத்தின் வெற்றியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். வரவு செலவுத் திட்ட வசதி என்பது சந்தை கண்காணித்தலின் அடிப்படையில் பரிமாற்றத்தின் பெறுமதியை சரி செய்வதற்கு அல்லது பொருட்களின் அளவினை சரி செய்வதற்கு அவசியமாகும்.

6. **எந்த வகையான பணம் அல்லது சான்றுச் சீட்டு பரிமாற்றம் என்பதனை தெரிவு செய்தல்:** நிகழ்ச்சி குறிக்கோள்கள் மற்றும் உள்ளூர் சூழ்நிலையின் அடிப்படையில் பொருத்தமான வகையான பரிமாற்றம் தெரிவு செய்யப்படும். தனியான உதவிகள் மற்றும் பருவ வேறுபாடுகளுக்கு அமைய அணுகுமுறைகள் இணைக்கப்படுவது பொருத்தமானது. அறிவுறுத்தப்பட்ட கலந்தாய்வின் ஊடாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு மிகவும் பொருத்தமான வடிவம் என கருதுவதனை நிறுவனங்கள் கண்டறிதல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதார தரம் 2 ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

7. **பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்ற நிகழ்ச்சிகளை இலக்கு வைத்தல்:** தனியான பொருட்கள் மற்றும் சேவைகளிற்கு சவால்கள் தனித்துவமானவையாக இருக்கும். ஆனால், பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் தொடர்பான கவர்ச்சித் தன்மையின் காரணமாக, வெளியேறல் மற்றும் உள்ளடக்கல் தவறுகளை குறைப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். நேரடியான இலக்கு வைத்தல் (அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அல்லது மக்கள் தொகை) அல்லது மறைமுகமான இலக்கு வைத்தல் (உ-ம்: உள்ளூர் வர்த்தகர்கள் அல்லது சேவை வழங்குநர்கள்) மூலம் மக்களை அடைய முடியும். பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் மறைமுகமான இலக்கு வைத்தல் அணுகுமுறை அவசியமாக இருக்கும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). பணம் அல்லது சான்றுச் சீட்டுக்களை பெறுவதற்கு பதிவு செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான தீர்மானங்கள், தனியான பரிமாற்றங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் (உணவுப் பாதுகாப்பு - உணவுப் பரிமாற்றங்கள் தரம் 5ஐப் பார்க்கவும்). பணப் பரிமாற்றங்களை வழங்கும் அரசாங்க நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக பங்குதாரர்களுடனான ஒருங்கிணைப்பு என்பது இலக்கு வைத்தலுக்கு அத்தியாவசியமானதாகும் (தனியான பரிமாற்றங்களுக்கு போன்று).

8. **பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்களை கண்காணித்தல்:** சந்தையில் பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்களின் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களை கவனத்திற் கொண்ட கண்காணித்தலுக்கு பரிமாற்றங்கள் நிகழ்ச்சிக்கு முன்னர், நிகழ்ச்சியின் போது மற்றும் நிகழ்ச்சிக்குப் பின்னரான அடிப்படைத் தகவல்கள் தேவையாகும். இடையீட்டின் மாற்றங்கள் சூழ்நிலையின் மாற்றங்கள் மற்றும் சந்தை சூழ்நிலையின் மாற்றங்களுக்கு பிரதிபலிக்க வேண்டும். முக்கியமான பொருட்களின் விலைகள், உள்ளூர் பொருளாதாரத்தில் பல்வகைப்பட்டோரின் முயற்சிகள் மற்றும் விலை ஏற்றத் தாழ்வு என்பவற்றை கண்காணித்தல் உள்ளடக்கல் வேண்டும். வழங்கப்பட்ட பணம்

மற்றும் சான்றுச் சீட்டுக்களில் மக்கள் எதனை கொள்வனவு செய்கின்றனர்? மக்கள் பணத்தை பாதுகாப்பாக பெறவும், செலவிடவும் முடியுமா? பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் வழிமாற்றப்பட்டுள்ளனவா? பணம் அல்லது சான்றுச் சீட்டு செலவிடப்படுவதில் பெண்கள் செல்வாக்கு செலுத்துகின்றனரா? என்பவையே முக்கியமான கேள்விகளாகும் (மிக முக்கியமான தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4.3. உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதாரங்கள்

மக்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் அவர்களது பலவீனங்களின் உணவு பாதுகாப்பின்மைக்கான நெகிழ்வுத் தன்மையானது அவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்கள் (அல்லது சொத்துக்கள்) மற்றும் அவை எவ்வாறு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என்பன சார்ந்ததாகவே அதிகளவில் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த வளங்களில் நிதி மூலதனம் (பணம், கடன், சேமிப்புக்கள் போன்றவை), மற்றும் பௌதீக (வீடுகள், கருவிகள்), இயற்கை (நிலம், நீர்), மனித (தொழிலாளர், திறன்கள்), சமூக (வலையமைப்புக்கள், விழுமியங்கள்) மற்றும் அரசியல் (செல்வாக்கு, கொள்கை) மூலதனங்கள் உள்ளடங்குகின்றன. உணவு தயாரிப்பவர்களுக்கு முக்கியமாக இருப்பது, உற்பத்திக்கு உதவக் கூடிய நிலத்திற்கான பிரவேசம் அவர்களுக்கு உள்ளதா மற்றும் விவசாயத்தை தொடர்வதற்கான வழிவகைகள் அவர்களுக்கு உள்ளதா என்பதாகும். தமது உணவுக்கான வருமானம் தேவையாக உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு, சந்தைகள் மற்றும் சேவைகளுக்கான பிரவேசம் உள்ளதா என்பது முக்கியமானதாக இருக்கின்றது. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வளங்களின் பாதுகாப்பு, மீட்சி மற்றும் அபிவிருத்தி என்பன தமது உணவுப் பாதுகாப்புக்கு அவசியமாக இருப்பதுடன், எதிர்கால வாழ்வாதாரம் என்பது முன்னுரிமை மிக்கதாக இருக்கும். நீண்ட காலம் நீடிக்கும் அரசியல் நிலையற்ற தன்மை, பாதுகாப்பின்மை மற்றும் முரண்பாட்டின் அச்சுறுத்தல் என்பன வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் சந்தைகளுக்கான பிரவேசத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். தமது வாழ்விடங்களை மக்கள் இழக்க நேரிடும். தமது சொத்துக்களை இழக்க நேரிடும். இவை யுத்தத்தினால் ஈடுபடும் தரப்பினரால் அழிக்கப்படலாம்.

முதன்மை உற்பத்தி, வருமானம் ஈட்டல் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளடங்கலாக சந்தைகளுக்கான பிரவேசம் சம்பந்தப்பட்டதாக மூன்று தரங்கள் உள்ளன

உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதாரங்கள் தரம் 1: முதன்மை உற்பத்தி

முதன்மை உற்பத்தி பொறியமைப்புக்கள் பாதுகாக்கப்படுவதுடன், ஆதரவளிக்கப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- வாழ்வாதார மதிப்பீடு, சூழ்நிலை பகுப்பாய்வு தொடர்பிலான முதன்மை உற்பத்தி உதவிக்கு இடையீடுகளை அடிப்படையாகக் கொள்ளவும். அத்துடன், தேவையான

உள்ளீடுகள், சேவைகள் மற்றும் சந்தை கேள்விகள் என்பவற்றுக்கான பிரவேசம் மற்றும் கிடைக்கக் கூடியத் தன்மை உள்ளடங்கலாக உற்பத்தி முறைகளின் நிலைக்குந் தன்மை புரிந்து கொள்ளப்படல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளூர் நுகர்வோரால் உள்ளூர் உற்பத்தி முறைகள், கலாசார பயிற்சிகள் மற்றும் இயற்கை சுற்றுச் சூழல் என்பன புரிந்து கொள்ளப்படும் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- பல்வேறுபட்ட மூலோபாயங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்களுக்கு நெகிழ்ச்சித் தன்மையை வழங்குவதற்கு பலவகையான உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்கான பணம் அல்லது உற்பத்தி உள்ளீடுகளை வழங்கல் மற்றும் அவர்களின் உற்பத்தியை முகாமை செய்தல் மற்றும் ஆபத்துக்களை குறைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- உரிய நேரத்தில் உள்ளீடுகளை விநியோகித்தல், உள்ளூரில் அவை ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை மற்றும் பொருத்தமான தர விழுமியங்களுக்கு ஒத்தவை என்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 4-5ஐப் பார்க்கவும்).
- அவதானத்துடன் உள்ளீடுகள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்தல், பலவீனத் தன்மையை அல்லது ஆபத்தை அதிகரிக்கக் கூடாது. உ-ம். அரிதான இயற்கை வளங்களுக்கான போட்டியை அதிகரித்தல் அல்லது நடைமுறையில் உள்ள சமூக வலையமைப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- இயலுமான சந்தர்ப்பங்களில் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் சிறந்த முகாமைத்துவப் பயிற்சிகள் தொடர்பில் உணவு உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி வழங்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2, 5-6ஐப் பார்க்கவும்).
- உள்ளூர் உற்பத்தியாளர்கள், சந்தைகள் அல்லது நுகர்வோரில் தாக்கம் ஏற்படுத்தாத வரை இயலுமான சந்தர்ப்பங்களில் உள்ளீடுகள் மற்றும் சேவைகளை உள்ளூரில் பெறல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- உற்பத்தி உள்ளீடுகள் பயனாளிகளால் பொருத்தமான வகையில் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை மதிப்பீடு செய்வதற்கு வழமையான கண்காணித்தலை முன்னெடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நியாயம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மற்றும் விவசாய நாட்காட்டிக்கு அமைவாக, அனர்த்தத்திற்கு முந்தைய மட்டத்திற்கு முதன்மை உற்பத்தியை பாதுகாக்கவும் மற்றும் மீள் ஆரம்பிப்பதற்கும் தேவையான உள்ளீடுகளுக்கு அனைத்து குடும்பங்களுக்குமான மதிப்பீடு செய்யப்பட்ட தேவைகளுக்கு பிரவேசம் உள்ளமை உறுதி செய்யப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-6ஐப் பார்க்கவும்).
- செயற்பாட்டு ரீதியாக பொருத்தமானது என கருதப்படும் (அல்லது மதிப்பிடப்பட்ட) சந்தர்ப்பங்களில் இலக்கு வைக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும், தேவையான உள்ளீடுகளின் சந்தை பெறுமதியில், வாழ்வாதார தெரிவுகள் தொடர்பில் குடும்பங்களுக்கு தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பணம் அல்லது

சான்றுச் சீட்டு வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3,5 மற்றும் 7ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **முதன்மை உற்பத்தியின் நிலைக்குந் தன்மை:** நிலைக்குந் தன்மைக்கு, போதிய அளவில் மற்றும் வெற்றிகரமாக அபிவிருத்தி செய்வதற்கு உணவு உற்பத்தி மூலோபாயங்கள் நியாயமான சந்தர்ப்பங்களை கொண்டிருத்தல் வேண்டும் (கால்நடை அவசரகால வழிகாட்டிகள் மற்றும் தரங்கள் (LEGS) குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில் பார்க்கவும்). பரந்த அளவிலான காரணிகளால் இது செல்வாக்கு செலுத்தப்படலாம், பின்வருவன உள்ளடங்கலாக

   - போதிய இயற்கை வளங்களுக்கான (விவசாய நிலம், மேய்ச்சல் நிலம், தீவனம், நீர், ஆறுகள், அருவிகள், கரையோர நீர், இன்னபிற) பிரவேசம். சுற்றுச் சூழல் சமநிலையென்பதற்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது. உ-ம், விளிம்புநிலை நிலங்களின் அதிகளவிலான சுரண்டல், அதிகளவு மீன்பிடி அல்லது அதிகளவு நீர் மாசடைதல், விசேடமாக நகர்ப் புறங்களில்.
   - மக்கள் தொகையில் மோசமாக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் போது அல்லது கல்வி மற்றும் பயிற்சி என்பன சில குழுக்களுக்கானதாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் போது திறன்கள் மற்றும் இயலுமைகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.
   - நடைமுறையில் உள்ள உற்பத்தி முறைகளுக்கு அமைய தொழிலாளர்களின் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் முக்கியமான விவசாய மற்றும் நீர் வேளாண்மை நடவடிக்கைகளின் காலம்
   - விவசாய மற்றும் நீர் வேளாண்மை உற்பத்திக்கு தேவையான உள்ளீடுகளுக்கான கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் பிரவேசம்

   அனர்த்தத்திற்கு முந்தைய காலப்பகுதியில் உற்பத்தி என்பது சிறந்ததாக இருந்திருக்காது. அதேநிலைக்கு மீளச்செல்ல முயற்சிப்பது “பாதகம் செய்யாமைக்கு” எதிரானது (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

2. **தொழில்நுட்ப அபிவிருத்தி:** மேம்படுத்தப்பட்ட பல்வகை பயிர்கள், கால்நடை அல்லது மீன் வளர்ப்பு, புதிய கருவிகள், பசளைகள் அல்லது புத்தாக்க முகாமைத்துவ பயிற்சிகள் என்பன “புதிய” தொழில்நுட்பங்கள் என்பவற்றில் உள்ளடங்கும். இயலுமான வரையில், உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் வலுவான நடைமுறையில் உள்ள முறைகள் தொடர்பானதான மற்றும்/அல்லது தேசிய அபிவிருத்தி திட்டங்களுடன் ஒருங்கிணைந்ததாக கட்டியெழுப்பப்படல் வேண்டும். உள்ளூர் பகுதிகளில் ஏற்கனவே பரீட்சிக்கப்பட்டிருந்தால், பயனாளிகளால் உள்வாங்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் மாத்திரமே, அனர்த்தத்திற்குப் பின்னர் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். அறிமுகப்படுத்தப்படும் போது, பொருத்தமான சமுதாய ஆலோசனைகள், தகவல்களின் பிரிவு, பயிற்சிகள் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட ஆதரவு என்பவற்றுடன் இணைந்ததாக புதிய தொழில்நுட்பங்கள் இருத்தல் வேண்டும். இயலுமான சந்தர்ப்பங்களில், தனியார் மற்றும் பொது பரவலாக்கல் வழங்குநர்களின் ஒருங்கிணைப்புடன் முன்னெடுக்கப்படல் வேண்டும். அத்துடன், உள்ளீடு விநியோகஸ்தர்கள் முன்னெடுத்துச் செல்லப்படும் உதவி மற்றும் எதிர்காலத்தில் தொழில்நுட்பத்திற்கான அணுகுந் தன்மை, விமர்சன ரீதியாக வர்த்தக நிலைக்குந் தன்மை என்பவற்றை உறுதி செய்தல் வேண்டும்.

3. **தெரிவுகளை மேம்படுத்தல்:** உற்பத்தித் திறன் மிக்க உள்ளீடுகளுக்கு மற்றும் தமது விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் பல்வகையான விதை அல்லது கால்நடையை தெரிவு செய்வதற்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் சான்றுச் சீட்டுக்களை பயன்படுத்தி விதை மற்றும் கால்நடை செலவுகள் பணம் அல்லது கடன் உள்ளடங்கலாக இடையீடுகள், உற்பத்தியாளர்களுக்கு சிறந்த தெரிவினை வழங்கும். சொந்த உற்பத்தியின் ஊடாக அல்லது இந்த உற்பத்தியின் மூலம் ஈட்டப்பட்ட பணத்தின் ஊடாக போஷாக்கு நிறைந்த உணவுகளுக்கான பிரவேசம் உள்ளடங்கலாக போஷாக்கிற்கான சாத்தியமான ஊகக் குறிப்புக்களை உற்பத்திக்கான உதவி மதிப்பீடு செய்தல் வேண்டும். மக்களுக்கு வழங்கப்படும் உணவு பரிமாற்றங்களை விட வரட்சி காலத்தில் விலங்குகளுக்கான தீவனத்தின் அளவு மேலதிக நேரடி மனித போஷாக்கு பலத்தை வழங்கும். உற்பத்தி உள்ளீடுகளுக்கு பிரவேசத்தை வழங்குவதற்கு குடும்பங்களுக்கு பணத்தை பரிமாற்றம் செய்வதற்கான இயலுந் தன்மை உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக உள்ள பொருட்கள், சந்தைகளுக்கான பிரவேசம் மற்றும் பாதுகாப்பான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பரிமாற்ற பொறியமைப்பின் கிடைக்கும் தன்மை என்பவற்றின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

4. **பொருத்தப்பாடு மற்றும் ஏற்றுக் கொள்ளுந் தன்மை:** விதைகள், கருவிகள், பசளைகள், கால்நடை, மீன்பிடி உபகரணங்கள், வேட்டைக்கான உபகரணங்கள், கடன்கள் மற்றும் கடன் வசதிகள், சந்தை தகவல்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பன உள்ளடங்கலாக உற்பத்தி உள்ளீடுகள். தனியான உள்ளீடுகளுக்கான மாற்றுவழியாக பணம் அல்லது சான்றுச் சீட்டுக்களை வழங்குதலின் ஊடாக மக்களுக்கு தமக்கு விருப்பமான உள்ளீடுகளை கொள்வனவு செய்து கொள்ள முடியும். விவசாய உள்ளீடுகள் மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள் என்பன சம்பந்தப்பட்ட விவசாய மற்றும் கால்நடை பராமரிப்பு பருவங்களுக்கு பொருத்தமான வகையில் உரிய நேரத்தில் வழங்கப்படல் வேண்டும். விதைகள் மற்றும் கருவிகளுக்கான பகுதி விதைத்தல் பருவம் மற்றும் வரட்சி காலத்தில் கால்நடைகளின் அவசர கால சேமித்தல் என்பன கால்நடைகள் இறப்பதற்கு முன்னர் முன்னெடுக்கப்படல் வேண்டும். மீளமைப்பு என்பது முழுமையாக உறுதி செய்யப்பட்ட பின்னர் மீள் சேமித்தல் முன்னெடுக்கப்படலாம். உ-ம்: அடுத்த மழைக் காலத்தின் பின்னர்.

5. **விதைகள்:** உள்ளூரில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள பயிர்களின் விதைகள் மற்றும் வகைகள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். எனவே, சிறந்த தரத்தை எட்டுவதற்கு தம்மிடம் உள்ள சொந்த பிரமாணங்களை விவசாயிகள் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். எதிர்வரும் பருவத்தில் அதிக விளைச்சலைத் தரக் கூடிய பயிர்கள் பரிந்துரைக்கப்படல் வேண்டும். விவசாயிகள் மற்றும் உள்ளூர் விவசாய நிபுணர்களால் விசேட வகைகள் அனுமதிக்கப்படல் வேண்டும். உள்ளூர் விவசாயச் சூழலுக்கு உகந்த வகையில் மற்றும் விவசாயிகளின் சொந்த முகாமைத்துவ சூழ்நிலைக்கு ஏற்றதாக நோய்த் தாக்கம் ஏற்படுத்ததாத, வெள்ளப் பெருக்கு அல்லது வரட்சி மற்றும் கடல் மட்டம் அதிகரித்தல் போன்ற எதிர்கால காலநிலை மாற்ற காட்சிப்புலன்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டதாக விதைகள் தெரிவு செய்யப்படல் வேண்டும். பிராந்தியத்திற்கு வெளியில் உற்பத்தி செய்து கொண்டு வரப்படும் விதைகள் தரம் தொடர்பில் போதிய அளவில் பரீட்சிக்கப்பட்டு, உள்ளூர் சூழ்நிலைகளின் பொருத்தப்பாட்டுக்காக பரிசோதிக்கப்படல் வேண்டும். எந்தவொரு விதை சம்பந்தப்பட்ட இடையீட்டிலும் பல மட்டங்களிலுமான பயிர்கள் மற்றும் பல வகைகள் தொடர்பிலான பிரவேசம் விவசாயிகளுக்கு வழங்கப்படல் வேண்டும். எனவே, தமது முக்கியமான விவசாய முறைக்குப் பொருத்தமான மூலோபாயங்களை அவர்களே

உருவாக்க முடியும். விவசாயிகள் கலப்பு விதைகள் தொடர்பில் பழக்கமானவர்களாக மற்றும் அவற்றினை வளரச் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பின், அந்த விதைகள் பொருத்தமானதாக இருக்கும். மக்கள் தொகையுடனான கலந்தாய்வின் மூலம் மாத்திரமே இதனை தீர்மானிக்க முடியும். விதைகள் இலவசமாக வழங்கப்படுமாயின், விவசாயிகள் சோளச் செய்கை மேற்கொள்வார்களாயின், அவர்கள் கலப்பு விதைகளை உள்ளூர் வகைகளுக்காக எதிர்பார்ப்பர். ஏனெனில், இதனை கொள்வனவு செய்வது அதிக செலவினை ஏற்படுத்தும். கலப்பின விதைகள் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளும் விநியோகத்திற்கு முன்னர் பின்பற்றப்படல் வேண்டும். மரபியல் ரீதியாக நவீனமயப்படுத்தப்பட்ட விதைகள், உள்ளூர் அதிகாரிகளின் அனுமதி பெறாதபட்சத்தில் விநியோகிக்கப்படக் கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில், உதவியில் மரபியல் ரீதியாக நவீனமயப்படுத்தப்பட்ட விதைகள் இருக்கின்றமை தொடர்பில் விவசாயிகள் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

6. **கிராமப்புற வாழ்வாதாரங்களின் மீதான தாக்கம்:** முக்கியமான இயற்கை வளங்களின் பற்றாக்குறை (நீண்ட காலத்திற்கு நிலைக்குந் தன்மை அற்றதாக இருக்குமாயின், அனர்த்தத்திற்கு முன்னரே அவை அழிவடைந்திருப்பின்) அல்லது குறிப்பிட்ட மக்களுக்கு குறைந்தளவிலான பிரவேசம் (உ-ம். நிலமற்ற மக்கள்) என்பன காணப்படுமாயின் முதன்மை உணவு உற்பத்தியானது நிலைக்குந் தன்மையற்றதாக இருக்கும். உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக உள்ள இயற்கை வளங்களுக்கான அதிகரித்த (அல்லது மாற்றப்பட்ட) பிரவேசத்தை கோரும் உற்பத்தியை மேம்படுத்தல் என்பது உள்ளூர் மக்கள் தொகையில் பதட்டத்தை அதிகரிக்கும். இதன் பிரதிபலிப்பாக நீர் மற்றும் வேறு அத்தியாவசியத் தேவைகளுக்கான பிரவேசம் மட்டுப்படுத்தப்படும். உதவி பெறுபவர்களுக்கு பாதுகாப்பு ஆபத்துக்களை ஏற்படுத்தாது அல்லது முரண்பாட்டை உருவாக்காது என்பன தொடர்பில் தனியானதாக அல்லது பணமாக வளங்களை வழங்கும் போது அவதானம் செலுத்தப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதாரங்கள் தரம் 2 மற்றும் உணவுப் பாதுகாப்பு - பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). அது மாத்திரமின்றி, இலவசமாக உதவிகள் வழங்கப்படுவது சமூக உதவி மற்றும் மீள் விநியோகத்திற்கான பாரம்பரிய பொறியமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதேவேளை, தனியார் துறையினை வர்த்தகத்திலிருந்து வெளியேற்றுவதுடன், உள்ளீடுகளுக்கான எதிர்கால பிரவேசத்தை அழிக்கும்.

7. **உள்ளீடுகளை உள்ளூரில் கொள்வனவு செய்தல்:** கால்நடை மருத்துவ சேவைகள் மற்றும் விதை போன்ற உணவு உற்பத்திக்கான உள்ளீடுகள் மற்றும் சேவைகள், இயலுமான வரையில் நடைமுறையில் உள்ள உள்ளூர் சட்ட மற்றும் உறுதி செய்து கொள்ளக் கூடிய விநியோக முறைமைகளின் ஊடாக பெறப்படல் வேண்டும். உள்ளூர் தனியார் துறைக்கு ஆதரவளிப்பதற்கான, பணம் அல்லது சான்றுச் சீட்டுக்கள் போன்ற பொறியமைப்புக்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், முதன்மை உற்பத்தியாளர்களை நேரடியாக விநியோகஸ்தர்களுடன் இணைக்க வேண்டும். அவ்வாறான முறைமைகளை வடிவமைக்கும் போது, பணவீக்கத்திற்கான சவால் (உ-ம்: அரிதான விடயங்களின் விலைகள் அதிகரித்தல்) மற்றும் உள்ளீடுகளின் தரம் என்பன சார்ந்ததாக உள்ளூர் கொள்வனவை இயலுமாக்குவதற்கு, பொருத்தமான உள்ளீடுகள் மற்றும் விநியோகஸ்தர்களின் கிடைக்கக் கூடியத் தன்மையை அதிகரிப்பது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். உள்ளூர் மாற்றுவழிகள் இயலுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே, இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் நேரடியான பகுதிகள் உள்வாங்கப்படல் வேண்டும்.

8. **கண்காணித்தல் பயன்பாடு:** செயற்பாட்டின் குறிகாட்டிகள் மற்றும் உணவு உற்பத்தியின் வெளியீடுகள், பதப்படுத்தல் மற்றும் விநியோகம் என்பன மதிப்பீடு செய்யப்படலாம். உ-ம்: பயிர் செய்யப்பட்ட பகுதி, ஒரு ஹெக்டருக்கு விதைக்கப்பட்ட விதைகளின் அளவு, விளைச்சல் மற்றும் கால்நடைகளின் எண்ணிக்கை. உற்பத்தியாளர்கள் உள்ளீடுகளை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் (எடுத்துக்காட்டாக, விதைகள் முறையாக விதைக்கப்பட்டமையை உறுதி செய்தல் மற்றும் கருவிகள், பசளைகள், வலைகள் மற்றும் மீன்பிடி தூண்டி -ல்கள் முறையாக பயன்படுத்தப்படல்) அல்லது உள்ளீடுகளில் பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதனை தீர்மானிப்பது முக்கியமானது ஆகும். செயற்பாடு, ஏற்றுக் கொள்ளும் தன்மை மற்றும் உற்பத்தியாளர்களின் முன்னுரிமைகள் என்பவற்றின் அடிப்படையில் உள்ளீடுகளின் தரமானது மீளாய்வு செய்யப்படல் வேண்டும். வீடுகளுக்கு கிடைத்துக் கொண்டிருந்த உணவில் செயற்றிட்டமானது எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பது தொடர்பான அக்கறையானது மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கு முக்கியமானது. உ-ம்: குடும்பத்தின் உணவு சேமிப்புக்கள், உட்கொள்ளப்பட்ட உணவின் அளவு மற்றும் தரம் அல்லது வர்த்தகஞ் செய்யப்பட்ட உணவு அல்லது பிறருக்கு கொடுக்கப்பட்ட உணவின் அளவு. விலங்கு அல்லது மீன் உற்பத்திகள் அல்லது உயிர்ச்சத்து நிறைந்தவை உள்ளடங்கிய பயறு வகைத் தீவனங்கள் போன்ற குறிப்பிட்ட உணவு வகையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு செயற்றிட்டம் இலக்கு வைத்தல் வேண்டும். இந்தப் பொருட்களின் பயன்பாடு தொடர்பில் ஆய்வு செய்யப்படல் வேண்டும்

உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதாரங்கள் தரம் 2: வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு

வருமானம் ஈட்டல் மற்றும் வேலைவாய்ப்பு என்பன இயலுமான வாழ்வாதார மூலோபாயங்களாகும். வருமானம் ஈட்டும் பொருத்தமான சந்தர்ப்பங்களுக்கு பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமமான பிரவேசம் இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- குடும்பங்களை நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கு சந்தை மதிப்பீடு தொடர்பான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளின் தீர்மானங்களின் அடிப்படையில் குடும்பங்களின் இயலுமைகள் தொடர்பான போதிய பங்குபற்றல் பகுப்பாய்வு அவசியமாகும். (வழிகாட்டல் குறிப்பு 1-2ஐப் பார்க்கவும்).
- உள்ளூர் இயலுமைகள், உடனடித் தேவைகள், சந்தை முறைகள் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் விருப்பங்கள் என்பன தொடர்பான உழைப்பூதியத்தின் வகையின் (பணம், சான்றுச் சீட்டு, உணவு அல்லது இவற்றின் கலப்பு) அடிப்படையில், (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- தேவைகள், வாழ்வாதாரத்தை மீளக் கட்டமைப்பதற்கான குறிக்கோள்கள் மற்றும் உள்ளூர் தொழிலாளர் கூலி என்பன தொடர்பான உழைப்பூதியத்தின் மட்டங்களின் அடிப்படையில் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- பாதுகாப்பான, ஏதுவான பணிபுரியும் சுற்றுச் சூழலை உருவாக்குவதற்கான நடைமுறைகளை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

- பெருந்தொகையான பணம் பயன்படுத்தப்படும் போது தடம் மாறல் மற்றும்/அல்லது பாதுகாப்பின்மை என்பவற்றை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனைத்து இலக்கு வைக்கப்பட்ட மக்கள் தொகையும் தமது நடவடிக்கைகளின் ஊடாக வருமானத்தை ஈட்டும். தமது அடிப்படை மற்றும் வாழ்வாதார தேவைகளை எட்டுவதற்கு பங்களிக்க வேண்டும்.
- வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை வழங்கும் மறுசீரமைப்புக்கள், பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சமமான வகையில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். உள்ளூர் சந்தையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாது. அல்லது வழமையான வாழ்வாதார நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- உழைப்பூதியம் தொடர்பில் மக்கள் தொகை விழிப்புணர்வைப் பெறுதல் வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சமமான வகையிலான உணவுப் பாதுகாப்புக்கு அது உதவும் என்ற புரிந்துணர்வு (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **முயற்சிகளுக்கான பொருத்தப்பாட்டுத் தன்மை:** நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கும் மற்றும் வரையறுப்பதற்கும் சந்தை பகுப்பாய்வே அடிப்படையானதாகும். சந்தைகள் மற்றும் பொருளாதார முறைமைகளை புரிந்து கொள்வதற்கு நடைமுறையில் உள்ள கருவிகள் பயன்படுத்தப்படல் வேண்டும் (குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில் சந்தைகள் பிரிவைப் பார்க்கவும்). செயற்றிட்ட வடிவமைப்பு மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளங்காணல் என்பவற்றில் உள்ளூர் மனித வளங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படல் வேண்டும். குறிப்பிடத்தக்க குழுக்களுக்கான (கர்ப்பிணிப் பெண்கள், மாற்றுத் திறனுடையவர்கள் அல்லது வயதானவர்கள் போன்றோர்) மாற்று வழிகள் தொடர்பில் இலக்கு வைக்கப்பட்ட குழுவுடன் கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும். அதிக எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்தவர்கள் (அகதிகள் அல்லது உள்ளக இடம்பெயர்ந்த மக்கள்) காணப்படும் சந்தர்ப்பங்களில், இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் தங்குவதற்கு இடம் அளிப்பவர்கள் என இரு தரப்பினருக்கும் வேலைவாய்ப்பு மற்றும் திறன்களுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். நடவடிக்கைகளுக்கான இடங்கள் தாக்குதலுக்கான அச்சுறுத்தல், பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் (நிலக்கண்ணி வெடி பகுதிகள்) மற்றும் சுற்றுச் சூழல் ரீதியாக பொருத்தமற்ற பகுதிகள் (உ-ம்: மாசடைந்த நிலம் அல்லது அசுத்தமடைந்த நிலம், அமிழ்தல் அல்லது வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலம்) என்பன தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடுகள் 1-3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).
2. **பங்குபற்றுவதற்கான வரையறுக்கப்பட்ட இயலுமைகளுடன் குடும்பங்களுக்கான வருமான பரிமாற்றங்கள்:** வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளினை பெரும்பாலான குடும்பங்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்ற நிலையில், சில குடும்பங்களின் மீதான அனர்த்தத்தின் தாக்கமானது,

இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்துவதற்கான சாதகத்தன்மையை வழங்காது. அல்லது போதிய மீளமைப்பு உதவிகளைப் பெறுவதற்கான காலம் நீண்டதாக இருக்கும். நடைமுறையில் உள்ள சமூக பாதுகாப்பு முறைகளுடன் ஒன்றிணைத்தல் அல்லது தேவையாயின் புதிய பாதுகாப்பு வலைக்கு பரிந்து பேசல் போன்ற திட்டத்துடன், அவ்வாறான குடும்பங்களுக்கு நிபந்தனையற்ற பணம் மற்றும்/அல்லது உணவு பரிமாற்றங்கள் போன்ற பாதுகாப்பு வலையமைப்பு பொறியமைப்புக்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

3. **உழைப்பூதியத்தின் வகை:** உழைப்பூதியம் என்பது பணமாக அல்லது உணவாக அல்லது இரண்டும் கலந்ததாக இருக்கலாம். அத்துடன், உணவு பாதுகாப்பு இல்லாத குடும்பங்கள் தமது தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். சமுதாய பணிகளுக்கான கொடுப்பனவு வழங்குவதிலும் பார்க்க, தமக்கு நேரடியான பயனை வழங்குவதற்கு வழிகாட்டக் கூடிய நடவடிக்கைகளை மக்கள் முன்னெடுப்பதற்கு உதவும் ஊக்குவிப்பாக உழைப்பூதியம் காணப்படுகின்றது. மக்களின் கொள்வனவு தேவைகள் மற்றும் வேறு அடிப்படைத் தேவைகளுக்காக (பாடசாலை, சுகாதார சேவைகளுக்கான பிரவேசம் மற்றும் சமூக பொறுப்புக்கள்) பணம் அல்லது உணவினை வழங்குவதன் தாக்கம் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். உழைப்பூதியத்தின் வகை மற்றும் மட்டம் என்பன மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டு, பணம் மற்றும் உணவின் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் உள்ளூர் தொழிலாளர் சந்தையில் ஏற்படக் கூடிய தாக்கங்கள் போன்றவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு சம்பவமாக கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

4. **கொடுப்பனவுகள்:** உழைப்பூதியத்தின் மட்டங்களை தீர்மானிப்பதற்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டிகள் எதுவும் இல்லை. ஆனால், உழைப்பூதியம் என்பது தனியானதாக மற்றும் வருமான பரிமாற்றமாக வழங்கப்படும் போது, உள்ளூர் சந்தைகளில் மீள் விற்பனை பெறுமதியானது (உ-ம்: உணவினது) கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். நிகழ்ச்சி நடவடிக்கைகளில் பங்குபற்றுவதன் மூலம் தனிநபர்களின் மொத்த வருமான ஈட்டலானது, அவர்கள் வேறு நடவடிக்கைகளில் தமது நேரத்தினை செலவிடுவதிலும் பார்க்க சிறந்தது. உணவு மற்றும் பணிக்கான பணம் போன்ற நடவடிக்கைகளுக்கு இது பொருந்தும். அத்துடன், கடன்கள், வர்த்தகங்கள், இன்னபிற நடவடிக்கைகளுக்கும் பொருந்தும். வருமானம் ஈட்டும் சந்தர்ப்பங்கள் வருமான வளங்களின் மட்டத்தை பரவலாக்க வேண்டும். அத்துடன், நடைமுறையில் உள்ள வளங்களை மாற்றியமைப்பதாக இருக்கக் கூடாது. உழைப்பூதியம் என்பது உள்ளூர் தொழிலாளர் சந்தைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது. உ-ம்: கூலி வீதங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தி, ஏனைய நடவடிக்கைகளில் இருந்து தொழிலாளர்களை தடம் மாற்றும் அல்லது அத்தியாவசியமான பொது சேவைகளை கீழ் தரப்படுத்தல்.

5. **பணிச் சூழலில் காணப்படும் சவால்கள்:** சவால்களை குறைப்பதற்கான அல்லது காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் பிரயோக நடைமுறைகள் மூலம் அதிக சவால் மிக்க பணிபுரியும் சூழல் தவிர்க்கப்படல் வேண்டும். உ-ம். சுருக்கமான விளக்கங்கள், பாதுகாப்பான உடை மற்றும் முதலுதவி தொகுதிகள். எச்.ஐ.வி தொற்றுக்கான சவால்களை குறைத்துக் கொள்வதும் இதில் உள்ளடங்கும். இடம்பெயர்வதன் போது பாதுகாப்பினை அதிகரித்தல் பயிற்சிகள் பணிபுரிதலுக்கான பாதுகாப்பான வீதிகள், வீதிகள் நன்றாக உள்ளமையை உறுதி செய்தல், மின்பந்தங்களை வழங்குதல், முன்னெச்சரிக்கை முறைகளைப் பயன்படுத்தல் (மணிகள், ஊதுகுழல்கள், வானொ-

ாலிகள் மற்றும் வேறு கருவிகள் உள்ளடங்கிய) மற்றும் கூட்டமாக பயணித்தல் அல்லது இரவில் பயணஞ் செய்வதனை தவிர்த்தல் போன்ற பாதுகாப்பு விழுமியங்கள் இதில் உள்ளடங்குகின்றன. பாலியல் தாக்கத்துக்கு இலக்காகக் கூடிய பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஏனையோர் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அவசர கால நடைமுறைகள் தொடர்பில் அனைத்து பங்குபற்றுநர்களும் அறிந்து வைத்திருப்பதனை உறுதி செய்யவும். அனைத்து பங்குபற்றுநர்களுக்கு முன்னெச்சரிக்கை முறைமைக்கு பிரவேசம் உள்ளதனை உறுதி செய்யவும் (பாதுகாப்பு கோட்பாடுகள் 1 மற்றும் 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

6. **பாதுகாப்பின்மை மற்றும் தடம் மாறலுக்கான சவால்கள்:** உணவு அல்லது பணிக்கான பணம் (உ-ம்: கடன்கள் அல்லது செய்யப்பட்ட பணிக்கான கொடுப்பனவு) என்ற வடிவங்களில் வளங்களை வழங்குவது என்பது நிகழ்ச்சி ஊழியர்கள் மற்றும் உதவி பெறுபவர்களுக்கு பாதுகாப்பு பிரச்சினைகளை கொண்டு வருகின்றது (உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 5, வழிகாட்டல் குறிப்பு 6 மற்றும் உணவுப் பாதுகாப்பு - பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் பரிமாற்றங்கள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

7. **பராமரிக்கும் பொறுப்புக்கள் மற்றும் வாழ்வாதாரங்கள்:** வருமானம் ஈட்டும் சந்தர்ப்பங்களில் பங்குபற்றல் என்பது சிறுவர் பராமரிப்பு அல்லது வேறு பராமரிப்பு பொறுப்புக்களை மறந்து விடக் கூடாது. ஏனெனில், இது போஷாக்கு குறைபாடு மற்றும் வேறு சுகாதார சவால்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்து விடும். பராமரிப்பு வழங்குபவர்கள் அல்லது பராமரிப்பு வசதிகளை வழங்குபவர்களை வேலையில் இணைத்துக் கொள்வது தொடர்பில் நிகழ்ச்சிகள் கவனஞ் செலுத்தல் வேண்டும். மக்களின் வாழ்க்கையில் விசேடமாக பெண்களுக்கு அதிகரித்த பணிச் சுமையை சுமத்துவதும் பொருத்தமாக இருக்காது. வேறு வேலைவாய்ப்பு அல்லது கல்வி, அல்லது ஏற்கனவே உள்ள வீட்டு வளங்களை உற்பத்தித் திறன் மிக்க நடவடிக்கைகளுக்கான மாற்றுதல் போன்ற ஏனைய சந்தர்ப்பங்களுக்கான பிரவேசத்தில் நிகழ்ச்சிகள் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது. வருமானம் ஈட்டலில் ஈடுபடுதல் என்பது வேலைவாய்ப்புக்கு அனுமதிப்பதற்கான ஆகக் குறைந்த வயது, கட்டாய பாடசாலை காலத்தினை பூர்த்தி செய்வதற்கான வயதுக்கு குறைவாக இருக்கக் கூடாது போன்ற தேசிய சட்டங்களை மதிப்பதாக இருத்தல் வேண்டும்.

8. **உழைப்பூதியத்தின் பயன்பாடு:** ஈட்டப்பட்ட வருமானம் பங்களிக்கும் நீதியான உழைப்பூதிய வகைகள், உணவுப் பாதுகாப்புக்கு தேவையான வளங்களின் குறிப்பிட்ட அளவை வழங்குகின்றன. பணம் அல்லது உணவு பரிமாற்றங்களின் குடும்ப மட்டத்திலான முகாமைவத்துவம் (குடும்பங்களுக்கு இடையிலான விநியோகம் மற்றும் நிறைவான பயன்பாடு உள்ளடங்கலாக) புரிந்து கொள்ளப்படல் வேண்டும். ஏனெனில், அவை விநியோகிக்கப்படும் விதமானது குடும்ப உறுப்பினர்களின் வேறுபட்ட உணவுப் பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும் வகையில் நடைமுறை -யில் இருக்கும் பதட்டங்களை அதிகரிக்கச் செய்யலாம் அல்லது விரிவடையச் செய்யலாம். வருமானம் மற்றும் வேலைவாய்ப்பினை வழமையாக உருவாக்கும் மறுசீரமைப்புக்கள் உணவுப் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமுதாய மட்ட வளங்கள் உள்ளடங்கலாக பல்வகையான உணவுப் பாதுகாப்பு குறிக்கோள்களை கொண்டிருக்கும். உதாரணமாக, வீதிகளை புனரமைப்பது என்பது சந்தைகளுக்கான பிரவேசத்தை மற்றும் சுகாதார சேவைகளுக்கான பிரவேசத்தை அதிகரிக்கும்.

அதேவேளை, நீர்ப்பாசன மற்றும் வாய்க்கால் முறைமைகளை புனரமைப்பது அல்லது நிர்மாணிப்பது என்பது உற்பத்தித் திறனை அதிகரிக்கும்.

உணவுப் பாதுகாப்பு - வாழ்வாதார தரம் 3: சந்தைகளுக்கான பிரவேசம்

உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்கள் என்ற வகையில் சந்தைப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பான பிரவேசமானது பேணப்படுவதுடன், மேம்படுத்தப்படல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களுக்கான இயலுமான செயற்பாட்டுக்கான சந்தைகளுக்கான பிரவேசத்தை பாதுகாத்தல் மற்றும் வலியுறுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- உள்ளூர் சந்தைகள் செயற்படுகின்றவா அல்லது அழிவடைந்துள்ளனவா என்பது குறித்த புரிந்துணர்வு தொடர்பில் மற்றும் வலுப்படுத்தலுக்கான அவற்றின் சாத்தியத் தன்மைகள் சார்ந்ததாக உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்புக்களை அமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- ஒவ்வொரு இடையீட்டுக்கு முன்னரும் முன்னெடுக்கப்பட்ட சந்தை பகுப்பாய்வின் அடிப்படையில் முன்னேற்றங்கள் மற்றும் கொள்கை மாற்றங்களுக்கு பரிந்து பேசலை அமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- பலவீனமான மக்களுக்கான சந்தை பிரவேசத்தை மேம்படுத்துவதற்கு மற்றும் ஆதரவளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- உணவு கொள்வனவுகள் மற்றும் விநியோகம் உள்ளடங்கலாக சந்தை மீதான மறுசீரமைப்புக்களின் மோசமான தாக்கங்களை கட்டுப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- சந்தை தொடர்பில் அதிக பருவகால அல்லது வேறு சாதாரணமற்ற விலை ஏற்றத் தாழ்வுகளின் எதிர்மறையான விளைவுகளை குறைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நேரடியான இடையீடு அல்லது பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டு நிகழ்ச்சிகளின் ஊடாக உள்ளூர் வர்த்தகங்களினை மேம்படுத்தலின் ஊடாக சந்தைகளின் மீளமைப்புக்கு வடிவமைக்கப்பட்ட இடையீடுகள்.
- நிகழ்ச்சியின் கால அவகாசம் முழுவதும் சந்தைப் பொருட்கள், சேவைகள் மற்றும் முறைமைகளுக்கு அனைத்து இலக்கு வைக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் முழுமையான பிரவேசம்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சந்தை கேள்வி மற்றும் விநியோகம்:** சந்தைகளுக்கான பொருளாதார பிரவேசம் என்பது கொள்வனவு அதிகாரம், சந்தை விலைகள் மற்றும் கிடைக்கும் தன்மை என்பவற்றின் அடிப்படையில் தங்கியுள்ளது. பெற்றுக் கொள்ளும்

தன்மை என்பது அடிப்படைத் தேவைகள் (உணவு, விதைகள், கருவிகள் போன்ற அத்தியாவசிய விவசாய உள்ளீடுகள், சுகாதார பராமரிப்பு மற்றும் இன்னபிற) மற்றும் வருமான வளங்களுக்கு (பணப் பயிர்கள், கால்நடை, கூலி மற்றும் இன்னபிற) இடையிலான வர்த்தகத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது. வர்த்தக பலங்கள் குறைந்த மக்கள் அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு (அதிகரித்த விலையில்) தமது சொத்துக்களை விற்பனை செய்யும் (மிகவும் குறைந்த விலைக்கு) போது சொத்துக்களின் அழிவு ஏற்படும். சந்தைகளுக்கான பிரவேசத்தில் அரசியல் மற்றும் பாதுகாப்பு சுற்றுச் சூழல், மற்றும் கலாசார அல்லது மத அக்கறைகள் செல்வாக்கு செலுத்தும். இது சிறுபான்மையினர் போன்ற குறிப்பிட்ட குழுக்களுக்கான பிரவேசத்தை கட்டுப்படுத்தும்.

2. **சந்தை பகுப்பாய்வு:** பலவீனமான தனிநபர்கள் உள்ளடங்கலாக அனைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கும் செயற்படும் சந்தைகளுக்கான பிரவேசம் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பணமாக, சான்றுச் சீட்டுக்களாக அல்லது உணவாக அல்லது உள்ளீட்டினை வழங்கும் உழைப்பூதியம் வழங்கும் மறுசீரமைப்புக்கள், விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கான பொருத்தமான மட்ட சந்தை பகுப்பாய்வினால் முன்னெடுக்கப்படல் வேண்டும். மிகை உணவுப் பொருட்களின் உள்ளூர் கொள்வனவு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உதவி வழங்கும். ஆனால், மோசமான ஆபத்துக்களும் அடையாளங் காணப்படல் வேண்டும். இறக்குமதிகள் உள்ளூர் விலைகளை குறைக்கலாம் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீடு தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

3. **பரிந்து பேசல்:** பரந்த தேசிய மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் செயற்படும் சந்தைகள் உள்ளூர் சந்தை சூழ்நிலையில் செல்வாக்கு செலுத்தும். உதாரணமாக, விலையிடல் மற்றும் வர்த்தக கொள்கைகள் உள்ளடங்கலாக அரசாங்க கொள்கைகள் பிரவேசம் மற்றும் கிடைக்கும் தன்மையில் செல்வாக்கு செலுத்துகின்றன. இருப்பினும், இந்த நிலையில் நடவடிக்கைகள் அனர்த்த மறுசீரமைப்பின் வீச்செல்லைக்கு அப்பாற்பட்டவையாகும். ஒருங்கிணைந்த நிறுவன அணுகுமுறைக்கு சந்தர்ப்பங்கள் உள்ளதாக அல்லது அரசாங்கம் மற்றும் வேறு நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக பரிந்து பேசல் சந்தர்ப்பங்கள் உள்ளதாக இந்த காரணிகள் பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **பலவீனமான மக்கள்:** சந்தைகள் மற்றும் வாழ்வாதார சந்தர்ப்பங்களுக்கான பிரவேசம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள மக்களை அடையாளங் காண்பதற்கான பலவீனத் தன்மையின் பகுப்பாய்வு முன்னெடுக்கப்படல் வேண்டும். மாற்றுத் திறனுடைய நபர்கள், எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள், வயதானவர்கள் மற்றும் பராமரிப்பு பொறுப்புள்ள பெண்களுக்கு சந்தைகளுக்கு பிரவேசிப்பதற்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டும்.

5. **இடையீடுகளின் தாக்கம்:** உணவு, விதைகள் அல்லது வேறு பொருட்களின் உள்ளூர் கொள்முதல் என்பது உள்ளூர் பணவீக்கத்திற்கு காரணமாக அமையும். இது நுகர்வோருக்கு பாதகமாக அமையும். ஆனால், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு பயனாக அமையும். அதேபோன்று, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

விலை குறைவுக்கு காரணமாகும். அத்துடன், உள்ளூர் உணவு உற்பத்திக்கு ஊக்குவிப்பு அற்றதாக மாறும். உணவு பாதுகாப்பின்மையை அதிகரிக்கும். பணம் வழங்கல் என்பது உள்ளூர் பொருளாதாரங்களில் பல்வகையான சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். இருப்பினும், முக்கியமான பொருட்களின் உள்ளூர் பண வீக்கத்திற்கும் காரணமாக அமையும். கொள்முதலுக்கு பொறுப்பானவர்கள் இந்த விடயங்கள் தொடர்பில் கண்காணித்தல் வேண்டும். அத்துடன், அவற்றை கவனத்திற் கொள்ளல் வேண்டும். உணவு விநியோகம் என்பது பயனாளிகளின் கொள்வனவு செய்யும் அதிகாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனெனில், அது வருமான பரிமாற்றத்தின் வடிவமாக இருக்கின்றது. சில பொருட்கள் ஏனையப் பொருட்களை விட சிறந்த விலையில் விற்பதற்கு இலகுவானவை. உ-ம்: எண்ணெய் எதிர் செறிவூட்டப்பட்ட உணவு. “கொள்வனவு அதிகாரம்” என்பது வழங்கப்பட்ட உணவு அல்லது உணவுப் பொதியுடன் சம்பந்தப்பட்டது. அது பயனாளிகள் குடும்பத்தினால் உணவு உண்ணப்பட்டதா அல்லது விற்கப்பட்டதா என்பது தொடர்பில் செல்வாக்கு செலுத்தும். குடும்பங்களின் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் தொடர்பான புரிந்துணர்வு உணவு விநியோக நிகழ்ச்சிகளின் பரந்த தாக்கத்தை தீர்மானிப்பதற்கு மிகவும் முக்கியமானது ஆகும்.

6. **அசாதாரணமாக தீவிர பருவகால விலை ஏற்றத் தாழ்வுகள்** வறிய விவசாய உற்பத்தியாளர்கள் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும். இவர்கள் வழமையாக, தமது உற்பத்திகளுக்கான விலை குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்திலேயே (பொதுவாக அறுவடைக்குப் பின்னர்) விற்பனை செய்கின்றனர். அல்லது கால்நடை உரிமையாளர்கள் வரட்சி காலத்தில் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு உந்தப்படுகின்றனர். அதேபோன்று, மிகவும் குறைந்த வருமானம் உடைய நுகர்வோர், உணவு சேமிப்புக்களில் முதலிடுவதற்கு இயலாத நிலையில் உள்ளனர். இதன் காரணமாக அவர்கள் தொடர்ச்சியாக உணவு கொள்வனவில் ஈடுபடுகின்றனர். எனவே, விலை அதிகமாக இருக்கின்ற போதிலும் கொள்வனவு செய்வதற்கு உந்தப்படுகின்றனர் (உ-ம் வரட்சியான காலத்தில்). மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து மற்றும் சேமிப்பு முறைகள் உள்ளடங்கலாக இந்த தாக்கங்களை குறைக்கக் கூடிய இடையீடுகளுக்கான உதாரணங்கள் உணவு உற்பத்தி மற்றும் பணம் அல்லது உணவு பரிமாற்றங்களை சிக்கலான சந்தர்ப்பங்களில் மாற்றியமைக்கும

பிற்சேர்க்கை 1:

உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள்

உணவுப் பாதுகாப்பு மதிப்பீடுகள் பொதுவாக பரந்தளவில் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையை வாழ்வாதார குழுக்களாக, அவர்களது வளங்கள் மற்றும் வருமானம் அல்லது உணவைப் பெறுவதற்கான மூலோபாயங்களின் அடிப்படையில் வகைப்படுத்துகின்றன. இதில் செல்வந்த குழுக்கள் அல்லது சமுதாய படிநிலைகள் என்பதன் அடிப்படையிலான மக்கள் தொகையின் பிரிவுகளும் உள்ளடங்கலாம். தற்போதுள்ள சூழ்நிலையை அனர்த்தத்திற்கு முன்னரான உணவுப் பாதுகாப்பு சூழ்நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது முக்கியமானது ஆகும். “வழமையான வருடங்களின் சராசரி” என்பது அடிப்படையாக கருதப்படல் வேண்டும். பெண்கள் மற்றும் ஆண்களின் விசேட பாத்திரங்கள் மற்றும் பலவீனங்கள் மற்றும் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்புக்கான ஊகக் குறிப்புக்கள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டில் கவனஞ் செலுத்தப்படும் பரந்த விடயங்களை பின்வரும் சரிபார்ப்பு பட்டியல் கேள்விகள் உள்ளடக்குகின்றன.

1.வாழ்வாதார குழுக்களின் உணவுப் பாதுகாப்பு

- ஒரே போன்ற வாழ்வாதார மூலோபாயங்களைப் பகிரும் குழுக்கள் இந்த மக்கள் தொகையில் உள்ளனவா? உணவு அல்லது வருமானம் தொடர்பான அவர்களது பிரதான வளங்களுடன் இதனை எவ்வாறு இணைக்க முடியும்?

2.அனர்த்தத்திற்கு முன்னரான உணவுப் பாதுகாப்பு (அடிப்படை)

- அனர்த்தத்திற்கு முன்னர் பல்வேறுபட்ட வாழ்வாதார குழுக்கள் எவ்வாறு உணவு அல்லது வருமானத்தைப் பெற்றுக் கொண்டன? அண்மைக் காலத்தில் உணவு மற்றும் வருமானம் தொடர்பில் வருடாந்த சராசரி வளங்கள் எவை?
- வருடத்தின் வழமையான பருவங்களுக்கு அமைய உணவு மற்றும் வருமானத்தின் வேறுபட்ட வளங்கள் எவ்வாறு வித்தியாசப்படுகின்றன? (பருவகால நாட்காட்டியை அமைப்பது பயனுள்ளது).
- கடந்த ஐந்து அல்லது பத்து வருடங்களைப் பின்னோக்கிப் பார்க்கும் போது, வருடத்திற்கு, வருடம் எவ்வாறு உணவுப் பாதுகாப்பு என்பது வேறுபட்டுள்ளது? (சிறந்த மற்றும் மோசமான வருடங்கள் தொடர்பான கால அட்டவை ஒன்றை தயாரிப்பது பயனுள்ளது).
- வேறுபட்ட வாழ்வாதார குழுக்களிற்கு சொந்தமாக உள்ள சொத்துக்கள், சேமிப்புக்கள் அல்லது வேறு வளங்கள் எவை? (உ-ம்: உணவு சேமிப்பு, பண

சேமிப்பு, வாழ்வாதார உரிமங்கள், முதலீடுகள், கடன், செலுத்தப்படாத கடன், இன்னபிற).

- வாரம் அல்லது மாதம் ஒன்றிற்கான குடும்பம் ஒன்றின் செலவுகளில் உள்ளடங்குவது என்ன மற்றும் ஒவ்வொரு பொருளிற்கும் செலவிடப்படும் விகிதம் என்ன?
- குடும்பங்களில் பண முகாமைத்துவத்திற்கு பொறுப்பானவர் யார் மற்றும் செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவு?
- அடிப்படைப் பொருட்களை பெறுவதற்கு அருகில் உள்ள சந்தையை எவ்வாறு அடைவது? (தூரம், பாதுகாப்பு, நடமாட்டத்திற்கான எளிமை, சந்தை தகவல்கள் கிடைக்குந் தன்மை, போக்குவரத்து, இன்னபிற).
- உணவு உள்ளடங்கலாக, அத்தியாவசியப் பொருட்களின் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் விலை என்ன?
- அனர்த்தத்திற்கு முன்னர், வருமானத்தின் அத்தியாவசிய வளங்கள் மற்றும் உணவுக்கு இடையிலான சராசரி நிபந்தனைகள் என்ன? உ-ம் உணவுக்கான சம்பளம், கால்நடைகளுக்கான உணவு, இன்னபிற.

3.அனர்த்தத்தின் போது உணவுப் பாதுகாப்பு

- அடையாளங் காணப்பட்ட ஒவ்வொரு குழுக்களுக்குமான உணவு மற்றும் வருமானத்தின் வேறுபட்ட வளங்களில் அனர்த்தம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?
- வேறுபட்ட குழுக்களின் உணவுப் பாதுகாப்பில் வழமையான பருவகால முறைகள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன?
- சந்தைகளுக்கான பிரவேசம், சந்தைகளை அணுகுந் தன்மை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?
- வேறுபட்ட வாழ்வாதார குழுக்களுக்கு, வேறுபட்ட எதிர்கொள்ளும் மூலோபாயங்கள் என்ன மற்றும் அவற்றில் ஈடுபட்டுள்ள மக்களின் விகிதம் என்ன?
- அனர்த்தத்திற்கு முன்னரான சூழ்நிலையுடன் ஒப்பிடும் போது, இது எவ்வாறு மாற்றமடைந்துள்ளது?
- எந்த குழு அல்லது மக்கள் தொகை அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது?
- மக்களின் நிதி மற்றும் வேறு சொத்துக்களின் எதிர்கொள்ளும் மூலோபாயங்களின் குறுகிய மற்றும் இடைக்கால தாக்கங்கள் எவை?
- அனைத்து வாழ்வாதார குழுக்களுக்கும் மற்றும் அனைத்து பலவீனமான மக்களுக்கும், அவர்களுடைய சுகாதாரம், பொது நலன்கள் மற்றும் கண்ணியம் தொடர்பில் எதிர்கொள்ளும் மூலோபாயங்களின் முயற்சிகள் எவை? எதிர்கொள்ளும் மூலோபாயங்களுடன் சம்பந்தப்பட்ட ஆபத்துக்கள் ஏதும் உள்ளனவா?

பிற்சேர்க்கை 2:

விதைப் பாதுகாப்பு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள்

விதைப் பாதுகாப்பு மதிப்பீடுகளுக்கான மாதிரி கேள்விகள் பின்வருமாறு:

1. அனர்த்தத்திற்கு முன்னர் (அடிப்படை)

- விவசாயிகளின் மிகவும் முக்கியமான பயிர்கள் எவை? நுகர்வு, வருமானம் அல்லது இரண்டிற்கும் அவர்கள் பயன்படுத்துவது எதனை? ஒவ்வொரு பருவத்திலும் இந்த பயிர்கள் விளைகின்றனவா? அழுத்தம் மிக்க காலப்பகுதியில் எந்தப் பயிர்கள் மிக முக்கியமானவையாக மாறும்?
- இந்தப் பயிர்களுக்கான விதைகள் அல்லது வேறு விதைத்தல் மூலப்பொருட்களை விவசாயிகள் வழமையாக எவ்வாறு பெறுவர்? (அனைத்து அலைவரிசைகள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தவும்).
- ஒவ்வொரு பாரிய பயிருக்குமான விதை தூவப்பட்ட அளவுரு என்ன? பயிரிடப்படும் சராசரி பகுதி எவ்வளவு? விதைகளின் விலைகள் என்ன? பெருக்கல் பெறுமதி என்ன? (விதைக்கப்பட்ட விதை அல்லது தானியத்திலிருந்து அறுவடை செய்யப்பட்ட விகிதாசாரம்)
- குறிப்பிடத்தக்க பயிர்களுக்கு முக்கியமான அல்லது விருப்புக்குரிய வகைகள் ஏதேனும் உள்ளனவா?
- குறிப்பிட்ட பயிர்கள் அல்லது வகைகளுக்கு எவ்வாறான உற்பத்தி உள்ளீடுகள் தேவை?
- தீர்மானம் எடுத்தல், பயிர்களை முகாமை செய்தல் மற்றும் உற்பத்தி மற்றும் உற்பத்திக்குப் பின்னர் வேறுபட்ட படிநிலைகளில் பயிர் உற்பத்திகளை அகற்றல் போன்றன தொடர்பில் குடும்ப மட்டங்களில் பொறுப்பானவர் யார்?

2. அனர்த்தத்திற்கு பின்னர்

- பயனாளிகளின் பார்வையில் விவசாம் சார்ந்த இடையீடுகள் இயலுமானவையா?
- தாம் வெற்றிகரமாக விதைக்கலாம், அறுவடை செய்யலாம் மற்றும் விற்பனை செய்யலாம் அல்லது நுகர்வுக்கு பயன்படுத்தலாம் என்பன தொடர்பில் ஸ்திரமான நிலையில் மற்றும் பாதுகாப்பான நிலையில் உள்ளதாக விவசாயிகள் நம்பிக்கை கொண்டுள்ளனரா?
- பயிர்நிலங்கள் மற்றும் உற்பத்திக்கான வழி வகைகளுக்கான (எரு, நடைமுறைப்படுத்தல்கள், விலங்குகள்) போதிய பிரவேசம் அவர்களுக்கு உள்ளதா?
- விவசாயத்தில் மீள ஈடுபடுவதற்கு அவர்கள் தயாராக உள்ளனரா?

4. விதை விநியோகம் மற்றும் விதை கேள்விகளை மதிப்பீடு செய்தல்: வீட்டு சேமிப்புக்கள்

- அனர்த்தத்தின் மத்தியிலும் சந்தைகள் இயல்பாக இயங்கி வருகின்றனவா (சந்தை தினங்களில் சந்தை நடைபெறுகின்றதா, விவசாயிகள் சுதந்திரமாக செல்லக் கூடியதாக, விற்பனை செய்யக் கூடியதாக மற்றும் கொள்வனவு செய்யக் கூடியதாக உள்ளதா)?
- கிடைக்கக் கூடியதாக உள்ள விதை அல்லது தானியத்தின் தற்போதைய அளவு, முந்தைய பருவத்தின் வழமையான சூழ்நிலைகளுக்கு கீழ் பொருந்துவதாக உள்ளதா?
- விதைப்பதற்கு ஏதுவானது என விவசாயிகள் தெரிவு செய்யும் பயிர்களும் மற்றும் பயிர் வகைகளும் சந்தைகளில் கிடைக்கக் கூடியதாக உள்ளதா?
- விதை அல்லது தானியங்களின் தற்போதைய சந்தை விலைகள் முந்தைய பருவத்தின் விலைகளுடன் பொருத்தமானதாக உள்ளதா? விலைகளில் மாற்றம் காணப்படுமாயின், இந்த வேறுபாடு விவசாயிகளுக்கு பிரச்சினையானதா?

5. விதை விநியோகம் மற்றும் விதைக்கான கேள்வியை மதிப்பீடு செய்தல்: முறைசார் துறை விதை

- முறை சார் துறையில் இருந்து கிடைக்கும் பயிர்கள் மற்றும் பயிர் வகைகள் குறிப்பிட்ட வலயங்களுக்கு பொருத்தமானதா? விவசாயிகள் அவற்றை விரும்புவதற்கான ஆதாரங்கள் உள்ளனவா?
- முறைசார் துறையில் கிடைக்கக் கூடியதாக உள்ள விதைகளின் அளவு உதவிக்கான தேவையை எட்டுவதாக உள்ளதா? இல்லையெனின், விவசாயிகளின் தேவையின் எந்த அளவினை பூர்த்தி செய்ய முடியும்?

பிற்சேர்க்கை 3:

போஷாக்கு மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள்

போஷாக்கு குறைபாடு, போஷாக்கு சவாலின் அளவு மற்றும் மறுசீரமைப்புக்கான சாத்தியங்கள் என்பன தொடர்பிலான மறைந்திருக்கும் காரணிகளை கண்டறிவதற்கான மதிப்பீடுகளுக்கான மாதிரி கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன. போஷாக்கு குறைபாட்டின் விளைவுகளின் கருத்துசார் சட்டகத்தின் (**பக்கம் ???**) அடிப்படையில் இந்த கேள்விகள் அமைந்துள்ளன. தகவல்கள் பல்வேறுபட்ட வளங்களில் இருந்து மற்றும் சேகரிப்பில் இருந்து கிடைக்கக் கூடியதாக உள்ளன. அதற்கு பல்வேறுபட்ட மதிப்பீட்டு கருவிகள் அவசியமாக உள்ளன. முக்கியமான தகவல் தருநர்கள் நேர்காணப்படல், கண்காணித்தல் மற்றும் இரண்டாம் நிலைத் தகவல்களை மீளாய்வு செய்தல் என்பன இந்த கருவிகளில் உள்ளடங்குகின்றன (மிக முக்கியமான தரங்கள் 1,3-4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

அவசர கால நிலைக்கு முன்னர்

பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் போஷாக்கு குறைபாட்டின் தன்மை, அளவு மற்றும் காரணிகள் தொடர்பில் எவ்வாறான தகவல்கள் ஏற்கனவே கிடைக்கக் கூடியதாக உள்ளன (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டு தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**)?

போஷாக்கு குறைபாட்டின் தற்போதைய சவால்

1. உணவுக்கான குறைந்த பிரவேசம் சம்பந்தப்பட்ட போஷாக்கு குறைபாடு சவால் - பிற்சேர்க்கை 1: உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்களைப் பார்க்கவும்,

2. குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் உணவூட்டல் மற்றும் பராமரிப்பு பயிற்சிகளில் போஷாக்கு குறைபாடு சம்பந்தப்பட்ட சவால்கள்

   - பணி மற்றும் சமூக முறைகளில் ஏதேனும் மாற்றங்கள் உள்ளனவா (உ-ம். புலம்பெயர்பு, இடப்பெயர்வு அல்லது ஆயுத முரண்பாடு காரணமாக), அதாவது, குடும்பங்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள் மாறியுள்ளனவா?

   - குடும்பங்களின் சாதாரணமான உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? தனித்துவிடப்பட்ட சிறுவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனரா?

   - சாதாரணமான பாதுகாப்பு சுற்றுச் சூழலில் தாக்கம் ஏற்பட்டுள்ளதா (உ-ம். இடப்பெயர்வின் ஊடாக), இரண்டாம் நிலை பராமரிப்பு வழங்குவர்களுக்கான பிரவேசம், சிறுவர்களின் உணவுக்கான பிரவேசம், நீருக்கான பிரவேசம் மற்றும் இன்னபிறவற்றில் தாக்கம் ஏற்பட்டுள்ளதா?

- ஏதேனும் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டப்படவில்லையா? செயற்கை தாய்ப்பாலூட்ட-ப்பட்ட குழந்தைகள் ஏதேனும் உள்ளதா?

- அவசர கால நிலைமைகளில் குழந்தைகளுக்கான உணவூட்டல் பயிற்சிகளில் கவனக் குறைவு ஏற்பட்டமை விசேடமாக தாய்ப்பாலூட்டல் நடவடிக்கைகளில் ஏதேனும் குறைபாடு அல்லது நேரடியான தாய்ப்பாலூட்டல் வீதம் குறைதல், செயற்கையான தாய்ப்பாலூட்டல் அதிகரித்துள்ளமை மற்றும்/அல்லது தாய்ப்பாலூ-ட்டப்படாத குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தொடர்பில் ஆதாரம் அல்லது சந்தேகம் ஏதேனும் உள்ளதா?

- வயதுக்குப் பொருத்தமான, போஷாக்கு ரீதியாக போதிய, பாதுகாப்பான மிகை நிரப்பு உணவுகள் மற்றும் போஷாக்கினை அதிகரிக்கக் கூடிய வழிவகைகளை அணுகக் கூடியதாக உள்ளதா?

- பொதுவான தாய்ப்பாலூட்டல் விநியோகத்திற்கு மாற்று வழியாக குழந்தைகளுக்கான உணவு, வேறு பால் உற்பத்திகள், போத்தல்கள் மற்றும் உறிஞ்சுகள் உதவியாக வழங்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் ஆதாரம் அல்லது சந்தேகம் ஏதேனும் உள்ளதா?

- கிராமிய சமுதாயங்களில், தாய்மார் குழந்தைகளை விட்டு நீண்ட காலம் பிரிந்திருக்கின்றனரா? வழமையான மாற்றுப் பாலுக்கு பிரவேசம் உள்ளதா?

- குடும்ப மட்டங்களில் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் பாதிப்பு சம்பந்தப்பட்ட பராமரிப்பு பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவா?

3. மோசமான பொது சுகாதார சம்பந்தபட்ட போஷாக்கு குறைபாடு சவால் (சுகாதார அத்தியாயத்தைப் பார்க்கவும்)

   - சின்னம்மை அல்லது தீவிரமான வயிற்றுப் போக்கு நோய் போன்ற போஷாக்கு நிலையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நோய்கள் பரவுகின்றமை தொடர்பில் ஏதேனும் அறிக்கைகள் உள்ளனவா? இந்த நோய் பரவல் ஏற்படுவதற்கான சவால் உள்ளதா? (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - தொற்று நோய்களை கட்டுப்படுத்தல் தரங்கள் 1-3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

   - பாதிக்கப்பட்ட மக்கள் தொகையில் கணிப்பிடப்பட்ட சின்னம்மை தொற்றூசி ஏற்றப்பட்ட அளவு என்ன? (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் சுகாதார தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

   - சின்னம்மை தடுப்பூசியுடன் தொடர்ச்சியாக உயிர்ச்சத்து ஏ வழங்கப்பட்டுள்ளதா? கணிப்பிடப்பட்ட உயிர்ச்சத்து ஏ வழங்கப்பட்ட அளவு என்ன?

   - உயிரிழப்பு வீதங்கள் தொடர்பில் ஏதேனும் கணிப்பீடுகள் உள்ளனவா (பக்குவமற்ற அல்லது 5 வயதுக்கு கீழ்)? அவை எவை மற்றும் எவ்வாறான முறைகள் பயன்படுத்தப்பட்டன? (அத்தியாவசிய சுகாதார சேவைகள் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

- பாதிக்கப்பட்ட மக்களின் தீவிரமான மூச்சுப் பாதை தொற்று நோய் பாதிப்பு வீதம் அல்லது சக்தித் தேவைகளில் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய வெப்பநிலை மாற்றத்திற்கான சாத்தியங்கள் உள்ளதா?
- எச்.ஐ.வி நோய் பாதிப்பு வீதத்திற்கான அதிகரித்த சவால் உள்ளதா?
- வறுமை அல்லது மோசமான உடல்நிலை காரணமாக மக்கள் ஏற்கனவே போஷாக்கு குறைபாட்டினை எதிர்நோக்கியுள்ளனரா?
- சனநெருக்கடி அல்லது காநோய் பாதிப்பு வீதத்திற்கான அதிகளவு சவால் உள்ளதா?
- மலேரியா தாக்கம் அதிக அளவில் இடம்பெறுகின்றதா?
- நீர் அல்லது ஈரமான உடைகள் அல்லது வேறு மோசமான சுற்றுச் சூழல் சூழ்நிலைகளுக்கு மக்கள் நீண்ட காலத்திற்கு முகங் கொடுத்துள்ளனரா?

4. எவ்வாறான சாத்தியமான இடையீடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள முறைசார் மற்றும் முறைசாரா உள்ளூர் கட்டமைப்புக்கள் எவை?

- சுகாதார அமைச்சு, மத நிறுவனங்கள், சமுதாய ஆதரவு குழுக்கள், தாய்ப்பாலூட் -டல் ஆதரவு குழுக்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் நீண்ட கால அல்லது குறுகிய கால செயற்பாடு தொடர்பிலான இயலுமை என்ன?
- எவ்வாறான போஷாக்கு இடையீடுகள் அல்லது சமுதாயஞ் சார்ந்த ஆதரவு நடவடிக்கைகள் தற்போது நடைமுறையில் உள்ளன மற்றும் உள்ளூர் சமுதாயங்கள், தனிநபர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள், ஐ.நா நிறுவனங்கள், மத நிறுவனங்கள், மற்றும் இன்னபிற தொடர்பில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன? தற்போதைய சூழ்நிலைக்கு பிரதிபலிப்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது திட்டமிடப்பட்ட போஷாக்கு கொள்கைகள் (கடந்த, நடைமுறையில் உள்ள மற்றும் காலங் கடந்த), திட்டமிடப்பட்ட நீண்டகால போஷாக்கு மறுசீரமைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் எவை?

பிற்சேர்க்கை 4:
தீவிரமான போஷாக்கின்மையை அளவிடுதல்

பாரிய போஷாக்கு சார் அவசர கால நிலைகளில், 6 மாதங்களுக்கு குறைந்த வயதுடைய குழந்தைகளை, கர்ப்பிணித் தாய்மாரை மற்றும் தாய்ப்பாலூட்டும் பெண்களை, வளர்ந்த சிறுவர்களை, பருவமானவர்களை, வயதானவர்களை போஷாக்கு மதிப்பீடு அல்லது போஷாக்கு நிகழ்ச்சிகளில் உள்ளடக்கல் வேண்டியது அவசியமாக இருக்கலாம். பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே 6-59 மாதங்கள் வயதுடைய சிறுவர்களைத் தவிர ஏனைய வயதுக் குழுக்களின் ஆய்வுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்:

- போஷாக்கின்மையின் காரணங்கள் தொடர்பான பகுப்பாய்வு உள்ளடங்கலாக சூழ்நிலை தொடர்பான முழுமையான சூழ்நிலை பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டிருப்பின். இளம் சிறுவர்களின் போஷாக்கு நிலையானது, பொது மக்கள் தொகையின் போஷாக்கு நிலையில் தாக்கத்தினை ஏற்படுத்தாது என இந்த பகுப்பாய்வின் முடிவுகள் அறிவுறுத்துமாயின் மாத்திரமே, ஏனைய வயதுப் பிரிவுக்கான போஷாக்கு ஆய்வு முன்னெடுக்கப்படல் வேண்டும்.
- தரவு சேகரிப்பின் உயர்ந்த தரம், போதிய பகுப்பாய்வு மற்றும் சரியான சமர்ப்பணம் மற்றும் பெறுபேறுகளை விளக்கல் என்பதனை உறுதி செய்வதற்கு தொழில்நுணுக்க நிபுணர்கள் இருப்பார்களாயின்,
- ஏனைய வயதுக் குழுக்களை உள்ளடக்குவதற்கு வளம் மற்றும்/அல்லது சந்தர்ப்பம் சார்ந்த செலவுகள் இருக்குமாயின்,
- ஆய்வுக்கான தெளிவான மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டிருக்குமாயின்,

6 மாதங்களுக்கு குறைவான குழந்தைகள்

இந்த வயதுக் குழுவுக்கான ஆய்வு முன்னெடுக்கப்படும் வேளையில், மதிப்பீட்டுக்கான மற்றும் முகாமைத்துவத்திற்கான ஆதார அடிப்படை கட்டுப்படுத்தப்படும். 6-59 மாதங்கள் வயதுடைய வளர்ந்த குழந்தைகளின் தீவிர குழந்தை போஷாக்கின்மைக்கு ஒரே மனிதர் அளவையியல் சம்பவ விளக்கங்களையே பெரும்பாலான வழிகாட்டிகள் பரிந்துரைக்கின்றன (<6மாதங்கள் வயதுடைய சிறுவர்களுக்கு தற்போது பரிந்துரைக்கப்படாத என்பது MUAC தவிர). வளர்ச்சியின் மதிப்பீட்டிலும் பார்க்க தற்போதைய அளவு தொடர்பிலேயே அனுமதித்தல் பிரமாணம் கவனஞ் செலுத்துகின்றது. NCHS வளர்ச்சி குறிப்புதவிகளில் இருந்து WHO 2006 வளர்ச்சி தரங்களின் பெறுபேறுகளுக்கான மாற்றம் பெரும்பாலான சம்பவங்கள் <6 மாதங்கள் வயதுடைய குழந்தைகள் சம்பந்தப்பட்டதாகும். இந்த மாற்றங்களின் ஊகக் குறிப்புக்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படுவதுடன், அடையாளப்படுத்தப்படல் வேண்டும். சாத்தியமான விடயங்களில் உணவூட்டல் நிகழ்ச்சிகளில் மேலும் குழந்தைகள் ஈடுபடுத்தப்படல் அல்லது நேரடியான தாய்ப்பாலூட்டலின் பொருத்தப்பாடு தொடர்பில் பராமரிப்பு வழங்குபவர்கள் அக்கறை கொள்ளுதல் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும். பின்வரும் விடயங்கள் மதிப்பீடு செய்யப்படுவதும், கவனத்திற் கொள்ளப்படுவதும் அவசியமாகும்.

- குழந்தைகளின் நீள்பக்கத்திற்குரிய வளர்ச்சி - உடல் பருமன் சிறிதாக இருக்கும் நிலையில் வளர்ச்சி சிறந்ததாக இருக்கின்றதா (உதாரணமாக, சில குழந்தைகள் குறைந்த எடையுடன் பிறந்து பின்னர் வளர்ச்சியடையும்)?
- குழந்தைகளுக்கு உணவூட்டும் பயிற்சிகள் - குழந்தைக்கு நேரடியான தாய்ப்பாலூட்ட -ப்படுகின்றதா?
- மருத்துவ நிலை - குழந்தைக்கு ஏதேனும் மருத்துவ குறைபாடுகள் உள்ளதா அல்லது சிகிச்சை அளிக்கக் கூடிய சூழ்நிலை உள்ளதா அல்லது குழந்தையை சவாலுக்கு உட்படுத்தக் கூடியதாக உள்ளதா?
- தாய்வழி காரணிகள் - உ-ம்: தாய்க்கு குடும்ப ஆதரவு குறைவாக உள்ளதா அல்லது அவர் துன்பத்தில் உள்ளாரா? சிகிச்சை சார் உணவூட்டல் நிகழ்ச்சிகளுக்கான உள்நோயாளர் அனுமதி என்பது அதிக சவாலில் உள்ள குழந்தைகள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

6-59 மாத குழந்தைகள்

6-59 மாத வயதுடைய குழந்தைகளிற்கு மத்தியில் காணப்படும் போஷாக்கின்மை தொடர்பான வேறுபட்ட தரங்களின் பொதுவாக பயன்படுத்தப்படும் குறிகாட்டிகளை கீழுள்ள அட்டவணை வெளிப்படுத்துகின்றது. உயரத்திற்கான எடை (WFH) 2006ஆம் ஆண்டு WHO சிறுவர் வளர்ச்சி தரங்களை பயன்படுத்தி கணிப்பிடப்படல் வேண்டும். மனிதர் அளவையியல் ஆய்வு பெறுபேறுகளை அறிக்கையிடுவதற்கு விருப்பிற்குரிய குறிகாட்டியாக WFH Z புள்ளி (WHO தரங்களுக்கு அமைய) உள்ளது. தீவிர போஷாக்கின்மைக்கான சுயாதீன பிரமாணமாக MUAC உள்ளது. அத்துடன், குழந்தை உயிரிழப்பது தொடர்பான சிறந்த எதிர்வுகூறல் கருவியாகவும் இது உள்ளது. குறை நிரப்பு உணவூட்டல் மற்றும் சிகிச்சை சார் பராமரிப்பு நிகழ்ச்சிகளுக்கான சம்பவங்களை கணிப்பதற்கும் குறைந்த MUAC நோய் பாதிப்பு வீதம் என்பது ஆய்வுகளில் ஆராயப்பட்டுள்ளது. மோசமான தீவிர போஷாக்கின்மைக்கான பொதுவான அளவாக <11.5செ.மீ உள்ளது. மிகை தீவிர போஷாக்கின்மைக்கு 11.5-<12.5செ.மீ உள்ளது. இது பொதுவாக இரண்டு மட்டங்களிலான செயற்பாட்டின் ஒரு பகுதியாக அதிகளவான வெட்டுப்புள்ளியுடன் பயன்படுத்தப்படும். அது மனிதர் அளவையியல் ஆய்வுகளுடன் மாத்திரம் தனித்து பயன்படுத்தப்படக் கூடாது. ஆனால், உணவூட்டல் நிகழ்ச்சிகளுக்கான தனியான நிர்வாக பிரமாணங்களாக பயன்படுத்தப்படலாம்.

	உலகளாவிய தீவிர போஷாக்கின்மை	மிகை தீவிர போஷாக்கின்மை	மோசமான தீவிர போஷாக்கின்மை
சிறுவர்கள் 6.0-59.9 மாதங்கள்	WFH <-2 Z புள்ளி மற்றும்/அல்லது MUAC <12.5செ.மீ மற்றும் அல்லது போஷாக்கு அழற்சி	WFH -3 - <-2 Z புள்ளி மற்றும்/அல்லது MUAC 11.5-<12.5 செ.மீ	WFH <-3 Z புள்ளி மற்றும்/அல்லது MUAC <11.5 செ.மீ மற்றும்/அல்லது போஷாக்கு அழற்சி

5-19 வயதுடைய சிறுவர்கள்

5-19 வயதுடைய சிறுவர்களின் போஷாக்கு நிலையை தீர்மானிப்பதற்கு WHO 2007 வளர்ச்சி தரங்களை பயன்படுத்துவது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி

குறிப்புதவி தரவு வளைவுகள் 1977 NCHS/WHO குறிப்புதவியின் மீள்கட்டுமாணம் ஆகும். அத்துடன், அவை 6-59 மாதங்கள் வயதுடைய சிறுவர்களின் WHO சிறுவர் வளர்ச்சி தரங்கள் மற்றும் பருவமானவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் என்பவற்றுடன் நெருக்கமானவை ஆகும். வளர்ந்த சிறுவர்கள் மற்றும் பருவமானவர்கள் தொடர்பில், விசேடமாக எச்.ஐ.வி சார்ந்த சூழ்நிலைகளில் MUACஇனைப் பயன்படுத்துவது குறித்து கவனஞ் செலுத்தப்படலாம். ஏனெனில், இது அபிவிருத்தியடையும் தொழில்நுட்ப பகுதியாக உள்ளது. நவீன வழிகாட்டல் மற்றும் தொழில்நுட்ப விடயங்களை குறித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும.

பெரியவர்கள் (20-59.9 வருடங்கள்)

பெரியவர்களில் தீவிர போஷாக்கின்மை தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஏதும் இல்லை. மோசமான தீவிர போஷாக்கின்மைக்கான வெட்டுப்புள்ளிகள் body mass சுட்டெண்ணான (BMI) 16இலும் குறைவானவை எனவும், சிறிய மற்றும் கடுமையான தீவிர போஷாக்கின்மை சுட்டெண்ணான 18.5இலும் குறைவானவை எனவும் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. பெரியவர்களின் போஷாக்கின்மை தொடர்பான ஆய்வுகள் எடை, உயரம், அமர்ந்திருக்கும் போது உயரம் மற்றும் MUAC அளவுகள் என்பன தொடர்பில் தரவுகளை சேகரிப்பதனை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். இந்த தரவுகள் BMI கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படலாம். மக்கள் தொகைக்கு மத்தியில் ஒப்பீடுகளை மேற்கொள்வதற்கு Cormic சுட்டெண்ணுக்காக (அமர்ந்திருக்கும் உயரத்திலிருந்து, நிற்கும் உயரத்தின் விகிதாசாரம்) BMI சரி செய்யப்பட வேண்டும். இவ்வாறான சரிசெய்தல்கள் பெரியவர்களில் போஷாக்கு குறைபாட்டின் நோய் பாதிக்கும் அளவில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தும். அத்துடன், முக்கியமான நிகழ்ச்சிசார் கிளைத்தலையும் கொண்டிருக்கலாம். MUAC அளவுகள் எப்போதும் முன்னெடுக்கப்படல் வேண்டும். உடனடி பெறுபேறுகள் தேவையாயின் அல்லது வளங்கள் கடுமையாக வரையறுக்கப்பட்டிருப்பின் MUAC அளவுகள் சார்ந்ததாக மாத்திரம் ஆய்வு அமையலாம்.

பெறுபேற்றின் அர்த்தத்தை தீர்மானிப்பதற்கான பெறுமதிசேர்க்கப்பட்ட செயற்பாட்டு வெளியீட்டு தரவு மற்றும் மட்டக்குறிகளின் பற்றாக்குறை காரணமாக மனிதர் அளவையியல் பெறுபேறுகளை விளக்குவது சிக்கலாக இருப்பதனால், அவ்வாறான பெறுபேறுகள் விரிவான சூழ்நிலை தகவல்களுடன் இணைந்ததாக விளக்கப்படல் வேண்டும். மதிப்பீடு தொடர்பான வழிகாட்டல்களை குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

போஷாக்கு பராமரிப்பு அனுமதி மற்றும் வெளியேற்றலுக்கு தனிநபர்களை தெரிவு செய்தல் பிரமாணத்தில் மனிதர் அளவையியல் சுட்டெண்கள், சிகிச்சை குறியீடுகள் (முக்கியமான பலவீனம், அண்மைய எடை குறைவு) மற்றும் சமூக காரணிகள் (உணவுக்கான பிரவேசம், பராமரிப்பவர்களின் பங்கு, உறைவிடம், இன்னபிற) உள்ளடக்கப்படல் வேண்டும். பெரியவர்களில் அழற்சி என்பது போஷாக்கின்மை தவிர வேறு பல காரணங்களாலும் ஏற்படக் கூடும் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். எனவே, பெரியவர்களின் அழற்சியினை சிகிச்சை அளிப்பவர்கள் மதிப்பீடு செய்து, ஏனைய காரணிகளை அப்புறப்படுத்தல் வேண்டும். BMIஇன் வெளித் தெரியக் கூடிய பற்றாக்குறைகள் மற்றும் MUAC தொடர்பான குறைந்தளவான தகவல்கள் மற்றும் அவற்றின் பயன்பாட்டினால் ஏற்படும் நிகழ்ச்சி ஊகக்குறிப்புக்கள் என்பவற்றை கவனத்திற் கொண்டு பராமரிப்புக்கான தகைமையை நிர்ணயிப்பதற்கான

குறிகாட்டி தொடர்பில் தனிப்பட்ட நிறுவனங்கள் தீர்மானம் எடுத்தல் வேண்டும். இது அபிவிருத்தியடைந்து வரும் தொழில்நுட்பப் பகுதியாக இருப்பதனால், நவீன வழிகாட்டிகள் மற்றும் தொழில்நுட்ப விடயங்களை பார்ப்பது முக்கியமானது.

கர்ப்பிணித் பெண்களின் தெரிவு செய்தல் கருவியாக MUAC அமையலாம். உ-ம்: உணவூட்டல் நிகழ்ச்சிக்கு நுழைவதற்கான பிரமாணம். அவற்றின் மேலதிக போஷாக்கு தேவைகளை வழங்கவில்லையெனின், மக்கள் தொகையின் ஏனைய குழுக்களை விட கர்ப்பணிப் பெண்களே அதிகம் பாதிக்கப்படுவர். கர்ப்பந் தரித்தலின் விசேடத் தன்மையில் MUAC மாற்றத்தை ஏற்படுத்தாது. MUAC <20.7 செ.மீ (கடுமையான சவால்) மற்றும் <23 செ.மீ (நடுத்தர சவால்) என்பன கருத்தரித்தல் தாமத வளர்ச்சிக்கான சவாலை வெளிப்படுத்துகின்றன. வழங்கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் நாட்டின் அடிப்படையில் மற்றும் 21 செ.மீஇலிருந்து 23செ.மீ வரையானதாக வேறுபடும். அவசரகால நிலைகளில் பெண்களை தெரிவு செய்வதில் 21 செ.மீக்கு குறைவான அளவு பொருத்தமான வெட்டுப்புள்ளியாக பரிந்துரைக்கப்படுகின்றது

வயதானவர்கள்

வயதானவர்களின் போஷாக்கின்மை தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஏதும் இல்லை. இருப்பினும், அவசரகால நிலைகளில் இவர்கள் போஷாக்கின்மைக்கு ஆளாகலாம். பெரியவர்களுக்கான BMI தொடக்க நிலை என்பது 60-69 வயதுடைய மற்றும் அதற்கு அதிகமான வயதானவர்களுக்கு பொருத்தமாக இருக்கும் என WHO பரிந்துரைக்கின்றது. எவ்வாறாயினும், முதுகுத் தண்டு வளைதல் (கூன் விழல்) மற்றும் முதுகெலும்புகளின் சுருக்கம் என்பன காரணமாக அளவுகளின் பூரணத் தன்மை என்பது சிக்கலானது. தோள் இடை நீளம் அல்லது பாதி இடை நீளம் என்பன உயரத்திற்குப் பதிலாக பயன்படுத்தப்படலாம். ஆனால் உயரத்தின் பெருக்கல் காரணியானது மக்கள் தொகைக்கு அமைய வேறுபடும். பார்வைத் திறன் மதிப்பீடும் அவசியமாகும். மக்கள் சார்ந்ததாக போஷாக்கின்மையை அளவிடுவதற்கு MUAC பயனுள்ள கருவியாகும். ஆனால், பொருத்தமான வெட்டுப்புள்ளி தொடர்பான ஆய்வும் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாற்றுத் திறனுடைய நபர்கள்

உடல் சார்ந்த மாற்றுத் திறனுடைய நபர்களினை அளவிடுவதற்கான எதுவிதமான வழிகாட்டிகளும் தற்போது இல்லை. எனவே, மனிதர் அளவையியலில் அவர்கள் பொதுவாக ஒதுக்கப்பட்டவர்களாக உள்ளனர். பார்வைத் திறன் மதிப்பீடும் அவசியமாகும். மேற்தோள் சதையானது உதவி நடமாட்டத்திற்காக வளர்ந்திருக்கும் சந்தர்ப்பங்களில் MUAC அளவீடுகள் தவறாக வழிநடத்தலாம். அகலம், தோள் இடைநீளம், பாதி இடைநீளம் அல்லது குறைந்த கால் நீளம் என்பன உள்ளடங்கலாக உயரத்தை அளவிடுவதற்கான மாற்று தரங்கள் உள்ளன. நியம எடை, உயரம் மற்றும் அளவிடுதல் பொருத்தமாக இல்லாத மாற்றுத் திறனுடைய நபர்களை அளவிடுவதற்கான மிகவும் பொருத்தமான வழியை கண்டறிவதற்கு நவீன ஆய்வுகள் தொடர்பில் ஆராய்வது முக்கியமாகும்.

பிற்சேர்க்கை 5:

நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் பொது உடல் நலன் முக்கியத்துவத்தை அளவிடுதல்

மருத்துவஞ் சார் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில், அவற்றுக்கு தனிநபர் அடிப்படையில் உடனடியாக சிகிச்சை வழங்கப்படல் வேண்டும். மருத்துவஞ் சார் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளுக்கு உள்ளான தனிநபர்களிலிருந்து, மக்கள் மட்டத்தில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு மறைந்திருப்பதற்கான குறிகாட்டியாக கருதப்படல் வேண்டும். நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளின் அளவீடு மற்றும் வகைப்படுத்தல் என்பன மக்கள் மட்டத்தில் திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் இடையீடுகளுக்கு முக்கியத்துவமாகும்.

நுண்ணூட்ட நிலையின் குறிக்கோள் அளவினை வழங்குவதற்கான சாதகத் தன்மையை உயிரியல் இரசாயன பரிசோதனைகள் கொண்டுள்ளன. எவ்வாறாயினும், பரீட்சிப்பதற்கான உயிரியல் மாதிரிகளின் சேமிப்பு பொதுவாக, அனைத்து ஏற்பாடுகள் சம்பந்தமான, ஊழியர் பயிற்சி, மற்றும் சில சந்தர்ப்பங்களில் சவால்களுக்கு முகங் கொடுத்தல் என்பன தொடர்பிலான தகவல்களை வழங்குகின்றன. உயிரியல் இரசாயன அளவுகள் எல்லா சந்தர்ப்பங்களில் பயனுள்ளதாக இருக்காது. எடுத்துக்காட்டாக, அவை கூருணர்வு மிக்கதாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் இருக்கும். மாதிரி சேமிக்கப்பட்ட நாளின் நேரத்திலிருந்து, வருடத்தின் பருவகாலத்திற்கு இடையில் வேறுபாடுகள் காணப்படலாம். மாதிரி பரிசோதனைக்காக ஆய்வுகூடங்களை தெரிவு செய்யும் போது சிறந்த தர கட்டுப்பாடு என்பது அத்தியாவசியமாகும்.

நுண்ணூட்டச் சத்து நிலையை மதிப்பீடு செய்யும் போது, மேலதிக உள்ளெடுத்தல் மற்றும் குறைபாடு என்பன ஏற்படக் கூடிய சாத்தியங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். பெருக்கப்படும் போது இது விசேட கவனமாக மாறிவிடும். அதிகளவு உற்பத்திகள் அல்லது மிகைநிரப்புக்கள் என்பன பாதிக்கப்பட்ட மக்களுக்கு நுண்ணூட்டச் சத்துக்களை வழங்குவதற்கு பயன்படுத்தப்படலாம்.

.

கீழுள்ள அட்டவணை, பொது மக்களின் உடல் நலன் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை, வேறுபட்ட குறிகாட்டிகளை பயன்படுத்தி விளக்குகின்றது.

நுண்ணூட்டச் சத்து குறைபாடு குறிகாட்டி	நோய் பாதிக்கும் அளவு ஆய்வுகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட வயது குழுக்கள்	பொது சுகாதார பிரச்சினைக்கான விளக்கம்	
		தீவிரத் தன்மை	நோய் பாதிக்கும் அளவு (%)
உயிர்ச்சத்து ஏ குறைபாடு			
மாலைக் கண் நோய்(XN)	24-71 மாதங்கள்	ஓரளவு	> 0 – < 1
		நடுத்தரமான	≥1 – < 5
		மோசமான	≥ 5
பைட்டொட் புள்ளிகள் (X1B)	6-71 மாதங்கள்		> 0.5
கண்விழிப்படல வரட்சி/புண் ஆதல்/கருவிழி நைவு (X2, X3A, X3B)	6-71 மாதங்கள்		> 0.01
கண்விழிப்படலக் காயங்கள் (XS)	6-71 மாதங்கள்		> 0.05
விழித்திரைக்குரிய நீர்ப்பாயம் (< 0.7 □ mol/yP)	6-71 மாதங்கள்	ஓரளவு	≥ 2 – < 10
		நடுத்தரமான	≥10 – < 20
			≥ 20
அயடீன் குறைபாடு			
கண்டமாலை (கண்ணுக்குப் புலப்படும் + தொட்டுணரக் கூடிய)	பாடசாலைச் செல்லும் சிறுவர்கள்	ஓரளவு	5.0 – 19.9
		நடுத்தரமான	20.0 – 29.9
		மோசமான	≥ 30.0
இடைநிலை சிறுநீர் அயடீன் செறிவு (mg/l̂)	பாடசாலைச் செல்லும் சிறுவர்கள்	அதிகளவு உட்கொள்ளல்	> 300[1]
		போதியளவு உட்கொள்ளல்	100 – 199[1]
		ஓரளவு குறைபாடு	50 – 99[1]
		நடுத்தர குறைபாடு	20 – 49[1]
		மோசமான குறைபாடு	< 20[1]

நுண்ணூட்டச் சத்து குறைபாடு குறிகாட்டி	நோய் பாதிக்கும் அளவு ஆய்வுகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட வயது குழுக்கள்	பொது சுகாதார பிரச்சினைக்கான விளக்கம்	
		தீவிரத் தன்மை	நோய் பாதிக்கும் அளவு (%)
இரும்புச் சத்து குறைபாடு			
குருதிச் சோகை (கர்ப்பந் தரிக்காத பெண்கள் ஹீமோகுளோபின் <12.0 g/dl; 6-59 மாதங்களுடைய சிறுவர்கள் <11.0 g/dl)	பெண்கள், 6-59 மாதங்களுடைய சிறுவர்கள்	குறைவான	5 – 20
		நடுத்தரமான	20 – 40
		அதிகமான	≥ 40
உயிர்ச்சத்து பீ குறைபாடு[1]			
மருத்துவ குறியீடுகள்	அனைத்து மக்களும்	ஓரளவு	≥ 1 case & <1%
		நடுத்தரமான	1 – 4
		மோசமான	≥ 5
உணவு உட்கொள்ளும் பழக்கம் (< 0.33 mg/1000 kcal)	அனைத்து மக்களும்	ஓரளவு	≥ 5
		நடுத்தரமான	5 – 19
		மோசமான	20 – 49
குழந்தை மரணம்	2-5 மாதங்களுடைய சிறுவர்கள்	ஓரளவு	அளவில் மாற்றம் இல்லை
		நடுத்தரமான	அளவு ஓரளவு அதிகரித்துள்ளது
		மோசமான	அளவு குறிப்பிட்டளவு அதிகரித்துள்ளது
தோல் வரட்சி[1]			
மருத்துவ குறியீடுகள் (சரும வியாதி) ஆய்வு செய்யப்பட்ட வயதுக் குழுவில்	அனைத்து மக்களும் அல்லது >15 வருடங்கள் வயதுடைய பெண்கள	ஓரளவு	≥ 1 case & <1%
		நடுத்தரமான	1 – 4
		மோசமான	≥ 5
சமமான அளவு நியாசின் உணவு உட்கொள்ளல் பழக்கம் <5 மி.கி/நாள்	அனைத்து மக்களும் அல்லது >15 வருடங்கள் வயதுடைய பெண்கள	ஓரளவு	5 – 19
		நடுத்தரமான	20 – 49
		மோசமான	≥ 50
உயிர்ச்சத்து சி குறைபாடு[1]			
மருத்துவ குறியீடுகள்	அனைத்து மக்களும்	ஓரளவு	≥ 1 சம்பவம் மற்றும்< 1%
		நடுத்தரமான	1 – 4
		மோசமான	≥ 5

1 உயிரியல் இரசாயண பரிசோதனை மற்றும் பொது சுகாதார தொடக்க நிலை தொடர்பான தகவல்களுக்கு, நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுங்கள். .

பிற்சேர்க்கை 6:

போஷாக்குத் தேவைகள்

அனர்த்தத்தின் ஆரம்ப நிலையில் திட்டமிடல் நோக்கங்களுக்காக பின்வரும் அளவுகள் பயன்படுத்தப்படலாம். ஆகக் குறைந்த போஷாக்குத் தேவைகள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. மக்கள் தொகையை இலக்கு வைக்கும் பொதுவான பங்கீட்டு முறையின் போதியளவினை மதிப்பீடு செய்வதற்கு இது பயன்படுத்தப்படலாம். உத்தேச புள்ளிவிபரத் தகவல்கள், சுற்றுப் புற வெப்பநிலையின் உத்தேசங்கள் மற்றும் மக்களின் நடவடிக்கை மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தேவைகள் கணிப்பிடப்பட்டுள்ளன. கர்ப்பிணி மற்றும் தாய்ப்பாலூட்டும் பெண்களின் மேலதிகத் தேவைகளையும் இவை கவனத்திற் கொண்டுள்ளன. மிகை நிரப்பு அல்லது சிகிச்சை சார் பராமரிப்பு பங்கீடுகளின் போதியத் தன்மையை மதிப்பீடு செய்வதற்கோ அல்லது காசநோயினால் அவதியுறும் தனிநபர்கள் அல்லது எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள் போன்ற விசேட குழுக்களை இலக்கு வைத்த பங்கீடுகளை மதிப்பீடு செய்வதற்கோ இந்த தேவைகள் முயற்சிக்கவில்லை.

கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தேவைகளை பயன்படுத்துவதற்கு முன்னர் இரண்டு முக்கியமான விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். முதலாவதாக, இந்த சராசரி மக்கள் தொகையின் மக்கள் தொகை குழுக்களுக்கான ஆகக் குறைந்த தேவைகள் அனைத்து வயதுக் குழுக்கள் மற்றும் பால்நிலைகளினதும் தேவைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. எனவே, அவை எந்தவொரு தனி வயது அல்லது பால் குழுவுக்கும் விசேடமானது அல்ல. தனிநபரின் தேவையாக அதனை பயன்படுத்தக் கூடாது. இரண்டாவதாக, மக்கள் தொகை விபரத்தின் அடிப்படையிலேயே போஷாக்குத் தேவைகள் கணிக்கப்பட்டுள்ளன.

போஷாக்கு	ஆகக் குறைந்த மக்கள் தொகை தேவைகள்[1]
சக்தி	2,100 kcals
புரதம்	53 g (10% மொத்த சக்தியின்)
கொழுப்பு	40 g (17% மொத்த சக்தியின்)
உயிர்ச்சத்து ஏ	550 µg RAE*
உயிர்ச்சத்து டீ	6.1 µg
உயிர்ச்சத்து ஈ	8.0 mg alpha-TE*
உயிர்ச்சத்து கே	48.2 µg
உயிர்ச்சத்து பீ1 (தையமின்)	1.1 mg

போஷாக்கு	ஆகக் குறைந்த மக்கள் தொகை தேவைகள்[1]
உயிர்ச்சத்து பீ2 (ரிபோ.்.பிளேவின்)	1.1 mg
உயிர்ச்சத்து பீ3 (நியாசின்)	13.8 mg NE
உயிர்ச்சத்து பீ6 (பிரிடொட்சின்)	1.2 mg
உயிர்ச்சத்து பீ12 (கொபளமின்)	2.2 µg
.்.போளேட்	363 µg DFE*
பென்டோதனேட்	4.6 mg
உயிர்ச்சத்து சீ	41.6 mg
இரும்புச் சத்து	32 mg
அயடீன்	138 µg
துத்தநாகம்	12.4 mg
செப்பு	1.1 mg
செலினியம்	27.6 µg
கல்சியம்	989 mg
மக்னீசியம்	201 mg

ழ யுடீாய-வுநு - யடீாய-வழஉழிாநசழட நஙரளைையடநவெள
சுயுநு - சநவலைழட யஉவளைவைல நஙரளைையடநவெள
னுகுநு - னநைவயசல கழடயவந நஙரளைையடநவெள

1 சக்தி மற்றும் செப்பு தவிர அனைத்து போஷாக்குச் சக்திக்குமான உள்ளெடுக்க வேண்டிய அளவு (RNI) தரப்பட்டுள்ளது. .

குறிப்புதவி: அனைத்து உயிர்ச்சத்து மற்றும் தாதுப்பொருட்கள் தேவைக்கான செப்பு தவிர்த்த போஷாக்கு உட்கொள்ளல் தொடர்பான குறிப்புதவி ‘Vitamin and Mineral Requirements in Human Nutrition. Second edition’ FAO/WHO (2004)இலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. செப்புக்கான தேவைகள் ‘Trace Elements in Human Nutrition and Health’ WHO (1996) இலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. .

வயது அடிப்படையில் பிரிக்கப்பட்ட சராசரி உலகளாவிய மக்கள் தொகை கட்டமைப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது. எவ்வாறாயினும், இது சூழ்நிலை சார்ந்தது என்பதனையும், வேறுபடலாம் என்பதனையும் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியம். உதாரணமாக, சில கிராம சமுதாயங்களில், நடுத்தர வயதுடையவர்களின் புலம்பெயர்வானது சிறுவர்களை பராமரிக்கும் வயதானவர்களின் அளவு அதிகமாக இருக்க காரணமாக உள்ளது.

குழு	மக்கள் தொகையில் %
0-6 மாதங்கள்	1.32
7-11 மாதங்கள்	0.95
1-3 வருடங்கள்	6.58
4-6 வருடங்கள்	6.41
7-9 வருடங்கள்	6.37

10-18வருடங்கள் பெண்கள்	9.01
10-18 வருடங்கள் ஆண்கள்	9.52
19-50 பெண்கள்	17.42
51-65 பெண்கள்	4.72
19-65ஆண்கள்	27.90
65ஐ பெண்கள்	2.62
65ஐ ஆண்கள்	2.18
கர்ப்பிணிகள்	2.40
தாய்ப்பாலூட்டுபவர்கள்	2.60

குறிப்புதவி: ஐக்கிய நாடுகள் சபை (2003), உலக மக்கள் தொகை அமைவுகள்: 2002 மீட்டல், Interpolated Population by Sex, Single Years of Age and Single Calendar Years, 1950 to 2050..

பின்வரும் காரணங்களுக்காக மக்கள் தொகையின் சக்தி தேவைகள் சரி செய்யப்படல் வேண்டும்:

- மக்கள் தொகையின் புள்ளிவிபர கட்டமைப்பு, விசேடமாக 5 வயதுக்கு குறைவானவர்களின் வீதம் மற்றும் பெண்களின் வீதம்
- கருதுபொருள் பெரியவர்கள் எடைகள் மற்றும் உண்மையான, வழமையான அல்லது எதிர்பார்க்கப்படும் உடல் எடைகள்
- உற்பத்தி திறன் மிக்க வாழ்க்கையை பேணுவதற்கான நடவடிக்கை மட்டங்கள் - நடவடிக்கை மட்டங்கள் அதிகரிக்கும் போது தேவைகள் அதிகரிக்கும் (எடுத்துக்காட்டாக, 1.6 x Basal Metabolic Rate)
- சராசரி சுற்றுச் சூழல் வெப்பநிலை மற்றும் உறைவிடம் மற்றும் ஆடைகளுக்கான இயலுமைகள் - கருதப்படும் சுற்றுச் சூழல் வெப்பநிலை 20°Cக்கு குறைவாக இருப்பினும் தேவைகள் அதிரிக்கும்
- மக்கள் தொகையின் போஷாக்கு மற்றும் சுகாதார நிலை - மக்கள் தொகை போஷாக்கின்மையுடன் காணப்படுமாயின் தேவைகள் அதிகரிக்கும். வளர்ச்சிக்காக மேலதிக தேவைகள் இருக்கும். எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் நோய் பாதிக்கும் அளவு சராசரி மக்கள் தொகையின் தேவைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் (உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 1ஐப் பார்க்கவும்). பொதுவான பங்கீடுகள் இந்த தேவைகளை எட்டுவதற்காக சரிசெய்யப்படும் போது, சூழ்நிலை பகுப்பாய்வுகள் மற்றும் தற்போதைய சர்வதேச பரிந்துரைகளில் தங்கியிருக்கும்.

மதிப்பீடுகளில் இருந்து இவ்வாறான தகவல்களை பெறுவது சாத்தியமாக இல்லாத சந்தர்ப்பங்களில், மேலே உள்ள அட்டவணையில் உள்ள அளவுகள் ஆகக் குறைந்த தேவைகளாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

மூலங்கள்

Black et al (2008), Maternal and child undernutrition 1. Maternal and child undernutrition: global and regional exposures and health consequences. www.thelancet.com, series, 17 January.

CARE (2008), Coping Strategies Index: CSI Field Methods Manual.

Castleman, T, Seumo-Fasso, E and Cogill, B (2004 rev.), Food and Nutrition Implications of Antiretroviral Therapy in Resource Limited Settings. FANTA (Food and Nutrition Technical Assistance) technical note no. 7. Washington DC.

Coates, J, Swindale, A and Bilinsky, P (2007), Household Food Insecurity Access Scale (HFIAS) for Measurement of Food Access. Indicator Guide. Version 3. FANTA. Washington DC.

Committee on World Food Security (2004), Voluntary guidelines to support the progressive realization of the right to adequate food in the context of national food security. Rome.

IFE Core Group (2007), Operational Guidance on Infant and Young Child Feeding in Emergencies. www.ennonline.net/ife

Inter-Agency Network for Education in Emergencies (INEE) (2004), Minimum Standards for Education in Emergencies, Chronic Crises and Early Reconstruction (includes School Feeding in Emergencies). Geneva.

International Labour Office (ILO) (1973), Minimum Age Convention No. 138. www.ilo.org/ilolex/english/convdisp1.htm

LEGS (2009), Livestock Emergency Guidelines and Standards (LEGS). Practical Action Publishing, UK. www.livestock-emergency.net/userfiles/file/legs.pdf

Pejic, J (2001), The Right to Food in Situations of Armed Conflict: The Legal Framework. International Review of the Red Cross, vol. 83, no. 844, p. 1097. Geneva. www.icrc.org.

SMART (Standardised Monitoring and Assessments of Relief and Transition) Guidelines: SMART methodology version.

Swindale, A and Bilinsky, P (2006), Household Dietary Diversity Score (HDDS) for Measurement of Household Food Access: Indicator Guide. Version 2. FANTA. Washington DC.

The Right to Adequate Food (Article 11: 12/05/99. E/C 12/1999/5, CESCR General Comment 12. United National Economic and Social Council (1999). www.unhchr.ch

ருரேர்ஊசுஇ றுழசடன குழழன ீசழபசயஅஅந (றுகுீ)இ ருளைைநசளவைல ழுக ழுஒகழசன யனெ ஐயுளுஊ ரேவசவைழைெ ஊடரளவநச (2006)இ ரேவஎயட 2006 எநசளழைெ 2.2.

www.nutval.net/2008/05/download-page.html

WFP (2006), Food Distribution Guidelines. Rome.

WHO (2009), Child Growth Standards and the identification of severe acute malnutrition in infants and children.

WHO (2007), Growth reference for school-aged children and adolescents.

www.who.int/growthref/en/

WHO (1981), The International Code of Marketing of Breast-Milk Substitutes.

The full code and subsequent relevant World Health Assembly resolutions:

www.ibfan.org

மேலதிக வாசிப்புக்கானவை

மதிப்பீட்டு குறிப்புதவிகள்

ஆரம்ப மதிப்பீடு

IASC (2009), Multi-sectoral Initial Rapid Assessment (IRA) Tool. Global Health, Nutrition and WASH Clusters.

உணவுப் பாதுகாப்பு மதிப்பீடு

CARE (2002), Household Livelihood Security Assessments: A Toolkit for Practitioners. USA.

FANTA-2 (2009), Alternative Sampling Designs for Emergency Settings: A Guide for Survey Planning, Data Collection and Analysis. Washington DC.

www.fantaproject.org/publications/asg2009.shtml

FAO and WFP (2009), Crop and Food Security Assessment Missions (CFSAM) Guidelines. Rome.

Save the Children (2008), The Household Economy Approach: A guide for programme planners and policy-makers. London.

WFP (2009), Emergency Food Security Assessment Handbook (EFSA) – second edition. Rome.

WFP (2009), Comprehensive Food Security and Vulnerability Analysis (CFSVA) Guidelines. Rome.

விதை பாதுகாப்பு மதிப்பீடு

Longley, C et al (2002), Do Farmers Need Relief Seed? A Methodology for Assessing Seed Systems. Disasters, 26, 343–355.

Sperling, L (2008), When disaster strikes: a guide to assessing seed system security. International Center for Tropical Agriculture. Cali, Colombia.

வாழ்வாதார மதிப்பீடு

Jaspers, S and Shoham, J (2002), A Critical Review of Approaches to Assessing and Monitoring Livelihoods in Situations of Chronic Conflict and Political Instability. ODI. London.

IASC (2009), Matrix on Agency Roles and Responsibilities for Ensuring a Coordinated, Multi-Sectoral Fuel Strategy in Humanitarian Settings. Version 1.1. Task Force on Safe Access to Firewood and Alternative Energy in Humanitarian Settings.

சந்தைகள்

CARE (2008), Cash, Local Purchase, and/or Imported Food Aid?: Market Information and Food Insecurity Response Analysis.

Mike, A (2010), Emergency Market Mapping and Analysis (EMMA) toolkit. Practical action, Oxfam GB.

உணவு நுகர்வு

Food and Nutrition Technical Assistance Project (2006), Household Dietary Diversity Score (HDDS).

WFP (2008), Food Consumption Analysis: Calculation and Use of the Food Consumption Score in Food Security Analysis. Technical Guidance Sheet.Rome.

பங்குபற்றல் முறையியல்கள்

ActionAid (2004), Participatory Vulnerability Analysis. London.

CARE (2009), Climate Vulnerability and Capacity Analysis handbook.

IFRC (2007), How to do a Vulnerability and Capacity Assessment (VCA), a step-by-step guide for Red Cross and Red Crescent Staff and Volunteers. Geneva.

Tearfund (2009), Climate change and Environmental Degradation Risk and Adaptation assessment CEDRA.

போஷாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு தகவல் முறைகள்

Famine Early Warning Systems Network (FEWS NET): www.fews.net

Food Insecurity and Vulnerability Information and Mapping Systems (FIVIMS): www.fivims.net/index.jsp

Integrated Food Security Phase Classification (2008), Technical Manual. Version 1.1.

Global Information and Early Warning System on Food and Agriculture, FAO: www.fao.org

Shoham, J, Watson, F and Dolan, C, The use of nutrition indicators in surveillance systems, Technical paper 2. ODI. London.

மனிதர் அளவையியல் மதிப்பீடு

Centers for Disease Control and Prevention (CDC) and WFP (2005), A Manual: Measuring and Interpreting Malnutrition and Mortality. Rome.

Collins, S, Duffield, A and Myatt, M (2000), Adults: Assessment of Nutritional Status in Emergency-Affected Populations. Geneva.

UN ACC Sub Committee on Nutrition (2001), Assessment of Adult Undernutrition in Emergencies. Report of an SCN working group on emergencies special meeting in SCN News, 22, pp49–51. Geneva.

Save the Children UK (2004), Emergency nutrition assessment, and guidance for field workers. London

Young, H and Jaspars, S (2006), The meaning and measurement of acute malnutrition in emergencies. A primer for decision makers. London.

நுண்ணூட்டச் சத்து மதிப்பீடு

Gorstein, J et al (2007), Indicators and methods for cross sectional surveys of vitamin and mineral status of populations.

Seal, A and Prudhon, C (2007), Assessing micronutrient deficiencies in emergencies: Current practice and future directions. Geneva

IYCF மதிப்பீடு

CARE (2010), Infant and young child feeding practices. Collecting and Using Data: A Step-by-Step Guide. www.ennonline.net/resources

குழந்தைகள் மற்றும் இளஞ் சிறுவர்கள் உணவூட்டல்

IFE Core Group (2009), Protecting infants in emergencies, Information for the media. www.ennonline.net/ife

IFE Core Group and collaborators (2009), IFE Module 1: Orientation package on IFE. www.ennonline.net/ife

ஐகுநு ஊழசந புசழரி யனெ உழடடயடிழசயவழசள (2007)இ ஆழனரடந 2 ழெ ஐகெயவெ குநநனபைெ ைெ நுஅநசபநெஉநைள கழச ாநயடவா யனெ ரெவசவைழைெ றழசமநசள ைெ நஅநசபநெஉல ளவைரயவழைளெ.

www.ennonline.net/ife

UNICEF and WHO (2003), Global Strategy for infant and young child feeding. Geneva.

UNHCR (2009), Guidance on Infant Feeding and HIV in the Context of Refugees and Displaced Populations. www.ennonline.net/ife

USAID, AED, FANTA, University of California DAVIS, International Food Policy Research Institute (IFPRI), UNICEF and WHO (2007), Indicators for assessing infant and young child feeding practices. Washington DC.

WHO (2010), HIV and infant feeding. Principles and recommendationsfor infant feeding inthe context of HIV and a summary of evidence. Geneva.

WHO (2004), Guiding Principles for feeding infants and young children during emergencies. Geneva.

உணவுப் பாதுகாப்பு இடையீடுகள்

பொதுவானவை

Barrett, C and Maxwell, D (2005), Food Aid After Fifty Years: Recasting Its Role. London.

IASC (2005), Guidelines for Gender-based Violence Interventions in Humanitarian Settings – Focusing on Prevention of and Response to Sexual Violence in Emergencies, Chapters 1–4, Action Sheet 6.1 Food Security and Nutrition.

Maxwell, D et al (2008), Emergency food security interventions. ODI, Good Practice Review #10. Relief and Rehabilitation Network, ODI. London.

UNHCR, UNICEF, WFP and WHO (2002), Food and Nutrition Needs in Emergencies. Geneva.

இலக்கு வைத்தல் மற்றும் உணவு விநியோகம்

Jaspars, S and Young, H (1995), General Food Distribution in Emergencies: from Nutritional Needs to Political Priorities. Good Practice Review 3. Relief and Rehabilitation Network, ODI. London.

UNHCR (2003), UNHCR Handbook for Registration. Geneva.

WFP (2009), School Feeding Quality Standards. Rome.

WFP (2008), Food Assistance in the context of HIV: Ration Design Guide. Rome.

WFP (2006), Targeting in Emergencies. Rome.

விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் உணவு தரம் மற்றும் பாதுகாப்பு

CARE, Food Resource Management handbook.

Logistics Cluster (2010), Logistics Operational Guide. WFP. Rome.

United Nations Humanitarian Response Depot (2010), Catalogue and Standard Operating Procedures. www.unhrd.org

WFP (2010), Food Quality Control: http://foodquality.wfp.org

WFP (2003), Food Storage Manual. Natural Resources Institute and WFP. Chatham, UK and Rome.

World Vision International, World Vision Food Resource Manual. Second edition.

World Vision International, Food Monitors Manual.

பணம் மற்றும் சான்றுச் சீட்டு இடையீடுகள்

Action contre la faim (2007), Implementing Cash-Based Interventions. A guide for aid workers. Paris.

Adams, L (2007), Learnings from cash responses to the tsunami: Final report, HPG background paper.

Cash Learning Partnership (2010), Delivering Money: Cash Transfer Mechanisms in Emergencies. Save the Children UK, Oxfam GB and British Red Cross, with support from ECHO. London.

Creti, P and Jaspars, S (2006), Cash Transfer Programming in Emergencies, Oxfam GB. London.

Harvey, P (2005), Cash and Vouchers in Emergencies, HPG background paper. ODI. London.

விதை இடையீடுகள்

Catholic Relief Services (CRS) (2002), Seed Vouchers and Fairs: A Manual for Seed-Based Agricultural Recovery in Africa. CRS, incollaboration with ODI and the International Crops Research Institute for the Semi-Arid Tropics.

Sperling, L and Remington, T, with Haugen JM (2006), Seed Aid for Seed Security: Advice for Practitioners, Practice Briefs 1-10. International Centre for Tropical Agriculture and CRS. Rome.

பொதுவான அவசரகால போஷாக்கு கையேடுகள்

IASC (2008), A toolkit for addressing nutrition in emergency situations.

IASC Nutrition Cluster's Capacity Development Working Group (2006), Harmonised Training Package (HTP).

Prudhon, C (2002), Assessment and Treatment of Malnutrition in Emergency Situations. Paris.

UNHCR and WFP (2009), Guidelines for Selective Feeding the Management of Malnutrition in Emergencies.

UNHCR, UNICEF, WFP and WHO (2002), Food and Nutrition Needs in Emergencies. Geneva.

WFP (2001), Food and Nutrition Handbook. Rome.

WHO (2000), The Management of Nutrition in Major Emergencies. Geneva.

பலவீனமான மக்கள்

FANTA and WFP (2007), Food Assistance Programming in the Context of HIV.

FAO and WHO (2002), Living Well with HIV and AIDS. A Manual on Nutritional Care and Support for People Living with HIV and AIDS.

HelpAge International (2001), Addressing the Nutritional Needs of Older People in Emergency Situations in Africa: Ideas for Action. Nairobi.

www.helpage.org/publications

HelpAge and UNHCR (2007), Older people in disasters and humanitarian crisis.

IASC (2006), Women, Girls, Boys and Men: Different Needs – Equal Opportunities.

Winstock, A (1994), The Practical Management of Eating and Drinking Difficulties in Children. Winslow Press. Bicester, UK.

தீவிர போஷாக்கின்மை முகாமைத்துவம்

ENN, CIHD and ACF (2010), MAMI Report. Technical Review: Current evidence, policies, practices & programme outcomes.

ENN, IFE Core Group and collaborators (2009), Integration of IYCF support into CMAM. www.ennonline.net/resources

FANTA-2 (2008), Training guide for community based management of acute malnutrition.

Navarro-Colorado, C, Mason, F and Shoham, J (2008), Measuring the effectiveness of SFP in emergencies.

Navarro-Colorado, C and Shoham, J (forthcoming), Supplementary feeding minimum reporting package.

VALID International (2006), Community Based Therapeutic Care (CTC): A Field Manual.

WHO (1999), Management of Severe Malnutrition: A Manual for Physicians and Other Senior Health Workers. Geneva.

WHO, WFP, UNSCN and UNICEF (2007), Community-Based Management of Severe Acute Malnutrition. A Joint Statement by the WHO, WFP, the United Nations System Standing Committee on Nutrition and UNICEF.

நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள்

Seal, A and Prudhon, C (2007), Assessing micronutrient deficiencies in emergencies: Current practice and future directions.

UNICEF, UNU and WHO (2001), Iron Deficiency Anaemia: Assessment, Prevention and Control. A Guide for Programme Managers. Geneva.

WHO (2000), Pellagra and Its Prevention and Control in Major Emergencies. Geneva.

WHO (1999), Scurvy and Its Prevention and Control in Major Emergencies. Geneva.

WHO (1999),Thiamine Deficiency And Its Prevention And Control In Major Emergencies. Geneva.

WHO (1997), Vitamin A Supplements: A Guide to Their Use in the Treatment and Prevention of Vitamin A Deficiency and Xeropthalmia. Second Edition. Geneva.

WHO and UNICEF (2007), Guiding principles for the use of multiple vitamin and mineral preparations in emergencies.

உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்களில் அடிப்படைத் தரங்கள்

இந்த அத்தியாயத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

இந்த அத்தியாயம் இரண்டு பிரதான பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது:

உறைவிடம் மற்றும் குடியிருப்பு

உணவல்லாத விடயங்கள்: ஆடைகள், படுக்கைப் பொருட்கள் மற்றும் வீட்டுக்குரிய பொருட்கள்

இடம்பெயர்ந்த மற்றும் இடம்பெயராத மக்கள் ஆகிய இரு தரப்பினரும், பின்வருவன உள்ளடங்கலாக எந்தவொரு தீவிர மறுசீரமைப்பின் போதும் பயன்படுத்த வேண்டிய பொதுவான தரங்களை இந்த இரண்டு பிரதான பகுதிகளும் வழங்குகின்றன. சொந்த இடங்களில் தற்காலிக அல்லது இடைத்தங்கல் தனிநபர் குடும்ப உறைவிடம், அல்லது திருத்தப்பட்ட வாழ்விடத்திற்கு திரும்பல் : தங்க இடம் அளிக்கும் குடும்பங்களுடன் தற்காலிக தங்குமிட வசதி : திட்டமிடப்பட்ட அல்லது சுயமாக அமைக்கப்பட்ட முகாம்கள், சேகரிப்பு நிலையங்கள், இடைத்தங்கல் அல்லது மீள்திரும்பும் நிலையங்கள் உள்ளடங்கலாக தற்காலிக சமுதாய குடியிருப்பு.

பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள் இந்த அத்தியாயத்துடன் கொள்கை மாறாத வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். அனர்த்தத்தின் போதான மனிதநேய மறுசீரமைப்பு தொடர்பில் தகவல் வழங்குவதனை பிரதான எண்ணமாக கொண்டுள்ள போதிலும், அனர்த்த முன்னாயத்தம் மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளை நோக்கிய நிலைமாற்றம் என்பவற்றின் போது அடிப்படைத் தரங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்

.ஒவ்வொரு பிரிவும் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளன:

- அடிப்படைத் தரங்கள் : இவை தன்மையில் தர அடிப்படையிலானதாக இருக்கின்ற போதிலும், உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் தொடர்பிலான மனிதநேய மறுசீரமைப்பின் போது எட்டப்பட்ட வேண்டிய ஆகக் குறைந்த மட்டங்களையும் குறிப்பிடுகின்றன.
- பிரதான நடவடிக்கைகள்ˊ: இவை தரங்களை எட்டுவதற்கு சுட்டிக் காட்டப்படும் நடவடிக்கைகள் மற்றும் உள்ளீடுகள் ஆகும்.
- பிரதான குறிகாட்டிகள்: இவை தரம் எட்டப்பட்டுள்ளதா என்பதனை சுட்டிக் காட்டும் “அடையாளங்கள்” ஆகும். இவை பிரதான நடவடிக்கைகளின் செயற்பாடு மற்றும் (பெறுபே-றுகளை) அளவிடுவதற்கு மற்றும் அறிவிப்பதற்கான வழி வகைகளை வழங்குகின்றன. இவை பிரதான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டது அல்லது அடிப்படைத் தரங்களுடன் சம்பந்தப்பட்டவை. .
- வழிகாட்டல் குறிப்புக்கள்: அடிப்படைத் தரங்கள், பிரதான நடவடிக்கைகள் மற்றும் பிரதான குறிகாட்டிகளை பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பிரயோகிக்கும் போது கவனஞ் செலுத்த வேண்டிய முக்கியமான விடயங்களை இவை உள்ளடக்கியுள்ளன. பிரயோக ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளல், மட்டக்குறிகள் அல்லது முன்னுரிமை செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பான அறிவுரை என்பன தொடர்பிலான வழிகாட்டல்களை வழங்குகின்றன. இவை தரங்கள், நடவடிக்கைகள் அல்லது குறிகாட்டிகள் சம்பந்தப்பட்ட சிக்கலான விடயங்களையும் உள்ளடக்கியிருக்கலாம். அத்துடன், தற்போதைய அறிவுமட்டத்தில் உள்ள குழப்பங்கள், சிக்கல்கள் அல்லது இடைவெளிகளையும் இவை விளக்குகின்றன.

தேவையான பிரதான குறிகாட்டிகள் மற்றும் நடவடிக்கைகள் எட்டப்படவில்லையாயின், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, பொருத்தமான தணித்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விளக்குவதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் தரங்கள் பிரயோகிக்கப்படும் போது பயன்படுத்துவதற்காக தேவைகள் மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. “எவ்வாறு முன்னெடுப்பது“ என்பது தொடர்பான வழிகாட்டல் வளங்கள் உள்ளடங்கலாக குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கான பகுதியும் பிற்சேர்க்கையாக தரப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

அறிமுகம் 243

1. உறைவிடம் மற்றும் குடியிருப்பு 249

2. உணவல்லாத விடயங்கள்: ஆடைகள், படுக்கைப் பொருட்கள் மற்றும் வீட்டுக்குரிய பொருட்கள் 268

பிற்சேர்க்கை 1: உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல் 278

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை 284

மனிதநேய சாசனம்

பாதுகாப்பு கோட்பாடுகள்

மிக முக்கியமான தரங்கள்

உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள்

உறைவிடம் மற்றும் குடியிருப்பு

தரம் 1
மூலோபாய திட்டமிடல்

தரம் 2
குடியிருப்பு திட்டமிடல்

தரம் 3
உள்ளடக்கப்பட்ட வாழ்விடம்

தரம் 4
நிர்மாணம்

தரம் 4
சுற்றுச் சூழல் தாக்கம்

உணவல்லாத விடயங்கள்

தரம் 1
தனிப்பட்ட, பொது வீட்டுக்குரிய மற்றும் உறைவிட ஆதரவு விடயங்கள்

தரம் 2
ஆடைகள் மற்றும் படுக்கைக்கான பொருட்கள்

தரம் 3 சமைத்தல் மற்றும் உண்பதற்கான பாத்திரங்கள்

தரம் 4
அடுப்பு, எரிபொருள் மற்றும் நெருப்பு

தரம் 5
கருவிகள் மற்றும் பொருத்தல்

பிற்சேர்க்கை 1 உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

அறிமுகம்

மனிதநேய சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்திற்கான தொடர்புகள்

உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் என்பவற்றில் அடிப்படைத் தரங்கள் என்பது மனிதநேய நிறுவனங்களின் பகிரப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பற்றுறுதிகளின் பிரயோக வெளிப்பாடாக உள்ளது. மனிதநேய நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொதுவான கோட்பாடுகள் மனிதநேய சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதநேய கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் சர்வதேச சட்டத்தில் பிரதிபலிக்கின்ற வகையில் இந்த கோட்பாடுகள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பு மற்றும் காவலுக்கான உரிமை மற்றும் மனிதநேய உதவிகளை அடிப்படை தேவையின் பிரகாரம் பெறுவதற்கான உரிமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மனிதநேய சாசனத்தை குறிப்பிடும் பிரதான சட்ட மற்றும் கொள்கை ஆவணங்களின் பட்டியல் பிற்சேர்க்கை 1 இல் (**பக்கம் ???**) மனிதநேய பணியாளர்களுக்கான மேலதிக விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளது. மனிதநேய நடவடிக்கைகளில், உறைவிடம், குடியிருப்பு மற்றும் தொடர்புடைய உணவல்லாத விடயங்கள் என்பன, மனித உரிமைகள் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள போதிய அளவில் வீட்டை அமைப்பதற்கான உரிமையின் வீச்சளவுக்கு உட்படும் பழக்கமான பதங்களாக உள்ளன.

போதிய அளவில் வீட்டை அமைப்பதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. பிரதான சட்ட ஆவணங்களில் இந்த உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது (குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியில்: சர்வதேச சட்ட ஆவணங்களைப் பார்க்கவும்). பாதுகாப்பு, சமாதானம் மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை உள்ளடங்குகின்றது. நில உரிமைக்கான பாதுகாப்புடன், பலவந்தமான வெளியேற்றலில் இருந்து பாதுகாப்பு மற்றும் பரிகாரத்திற்கான உரிமை என்பனவும் இதில் உள்ளடங்குகின்றது. பின்வரும் விடயங்களை உறுதி செய்வதன் மூலம் போதிய அளவில் வீட்டை அமைப்பதற்கான உரிமையை இந்த சட்ட ஆவணங்கள் விளக்குகின்றன::

- கட்டமைப்பு சார்ந்த அனர்த்தங்கள் மற்றும் நோய் நுண்மப் பரப்பிகள் உள்ளடங்கலாக போதியளவு இடம் மற்றும் குளிர், ஈரம், வெப்பம், மழை, காற்று அல்லது உடல் நலனுக்கான வேறு அச்சுறுத்தல்கள் என்பவற்றில் இருந்து பாதுகாப்பு
- சேவைகள், வசதிகள், மூலப்பொருட்கள் மற்றும் உட்கட்டமைப்புகளின் கிடைக்கும் தன்மை

- செலவிடும் தன்மை, புவியில் உயிர்களின் புழக்கத் தன்மை, அணுகுந் தன்மை, இடம் மற்றும் கலாசார பொருத்தப்பாடு
- இயற்கை மற்றும் பொது வளங்களுக்கான நிலைத்திருக்கக் கூடிய பிரவேசம்: பாதுகாப்பான குடிநீர், சமையலுக்கான சக்தி, சூடேற்றல் மற்றும் எரித்தல், தேகாரோக்கியம் மற்றும் சுத்திகரிப்பதற்கான வசதிகள், உணவு சேமிப்பதற்கான வழி வகைகள்: அகற்றல் மறுத்தல்: தள சாக்கடை வடிகால்: மற்றும் அவசரகால சேவைகள்
- சுகாதார பராமரிப்பு சேவைகள், பாடசாலைகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் வாழ்வாதார சந்தர்ப்பங்களுக்கான வேறு சமூக வசதிகள் என்பவற்றுக்கான பாதுகாப்பான பிரவேசத்தை வழங்கும் குடியிருப்புக்கள் மற்றும் வீடமைப்புக்கான பொருத்தமான இடத்தெரிவு.
- பொருத்தமான வீடமைப்பு நிர்மாணம் சம்பந்தப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் கொள்கைகள் கலாசார அடையாளம் மற்றும் வீடமைப்பின் வித்தியாசத்தினை வெளிப்படுத்துவதாக இருக்கும்.

இந்த அத்தியாயத்தில் உள்ள அடிப்படைத் தரங்கள், சம்பந்தப்பட்ட சர்வதேச சட்ட ஆவணங்களில் விளக்கப்பட்டுள்ளவாறு போதிய வீடமைப்புக்கான உரிமையை முழுமையாக வெளிப்படுத்துவதாக இல்லை. அதற்குப் பதிலாக, போதிய அளவில் வீட்டினை அமைக்கும் உரிமைக்கான **முக்கியமான** உள்ளடக்கங்களை அடிப்படைத் தரங்கள் பிரதிபலிக்கின்றன. அத்துடன், இந்த உரிமை யதார்த்தமாவதற்கான நடவடிக்கைகளுக்கு உதவுகின்றன.

அனர்த்தங்களின் போது உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்களின் முக்கியத்துவம்

அனர்த்தத்தின் ஆரம்பப் பகுதியில் வாழ்வதற்கு மிகவும் முக்கியமான தேவையாக உறைவிடம் உள்ளது. அதற்கு அப்பால், பாதுகாப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் காலநிலையிலிருந்து பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்கும், குன்றிய உடல் நலம் மற்றும் நோய்த் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கும் மிகவும் அத்தியாவசியமானதாக உறைவிடம் உள்ளது. குடும்ப மற்றும் சமுதாய வாழ்க்கையை நிலைத்திருக்கச் செய்வதற்கு மற்றும் அனர்த்தத்தின் தாக்கத்திலிருந்து பாதிக்கப்பட்ட மக்கள் மீட்சி பெறுவதற்குமான மனித கண்ணியத்திற்கு அது மிகவும் முக்கியமானது. உறைவிடம் மற்றும் அதனுடன் தொடர்புடைய குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடய மறுசீரமைப்பானது நடைமுறையில் உள்ள எதிர்கொள்ளல் மூலோபாயங்களுக்கு ஆதரவளிப்பதாக மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சுய நிறைவு மற்றும் சுய முகாமைத்துவத்தை மேம்படுத்துவதாக இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தொகை அல்லது உள்ளூர் பொருளாதாரத்தில் மோசமான தாக்கத்திற்கு இது காரணமாகாத சந்தர்ப்பங்களில், உள்ளூர் திறன்கள் மற்றும் வளங்கள் அதிகரிக்கப்படல் வேண்டும். அனர்த்த அபாயங்கள் மற்றும் இயற்கை சுற்றுச் சூழல் மீதான நீண்ட கால மோசமான தாக்கம் என்பவற்றை கவனத்திற்

கொண்டதாக எந்தவொரு மறுசீரமைப்பும் வடிவமைக்கப்படல் வேண்டும். அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்கள் தொகை தமது வாழ்வாதார ஆதரவு நடவடிக்கைகளை பேணக் கூடியதாகவும் அல்லது கட்டியெழுப்பக் கூடியதாகவும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

வெப்ப வசதி, காலநிலை விளைவுகளில் இருந்து பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் கண்ணியம் என்பன உள்ளடக்கப்பட்ட இடத்தில் அவர்கள் வசிக்கும் பகுதி மற்றும் உள்ளடக்கப்பட்ட பகுதியில் அவர்கள் வசிக்கும் இடம் என்பன சார்ந்ததாக தனிப்பட்ட நபர்களின் மட்டங்களின் அடிப்படையில், தேவைகளின் ஒருங்கிணைப்பாக எட்டப்படல் வேண்டும். அதேவேளை, உணவினை தயாரிப்பதற்கான, சமைப்பதற்கான மற்றும் உண்பதற்கு பொருத்தமான ஒருங்கிணைந்த வழிவகைகள் இந்த தேவைகளை எட்டுவதற்கு அவசியமாக உள்ளன. ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள், போதியளவில் மூடப்பட்ட பகுதி அல்லது உறைவிடம், வெப்பம் மற்றும் காற்று புகுவதற்கான இடத்திற்கான வழிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான பெறக்கூடியத் தன்மை.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் தொடர்பான தேவைகள் அனர்த்தத்தின் வகை மற்றும் வீச்சளவு மற்றும் மக்கள் தொகை இடம்பெயர்ந்துள்ள அளவு என்பவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். இடம்பெயர்ந்த மக்களின் ஆற்றல் மற்றும் ஆர்வம் என்பவற்றின் அடிப்படையில் மீண்டும் திரும்பிச் செல்ல விருப்பம் இல்லாத அல்லது முடியாத தமது சொந்த வசிப்பிடத்திற்கு மீண்டும் சென்று, மீளமைப்பு செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான மறுசீரமைப்பு அமைய வேண்டும். அவர்களுக்கு தற்காலிக அல்லது இடைத்தங்கல் உறைவிட மற்றும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும் (அடுத்த பக்கத்தில் உள்ள வரைபடத்தைப் பார்க்கவும்). பாதிக்கப்பட்ட பகுதியானது கிராமப் பகுதியா அல்லது நகரப் பகுதியா, உள்ளூர் காலநிலை மற்றும் சுற்றுச் சூழல் நிலைமைகள், அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமை மற்றும் தமது உறைவிட தேவைகளை எட்டுவதற்கு பங்களிக்கக் கூடிய பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் சக்தி என்பன உள்ளடங்கலாக அனர்த்தத்தின் உள்ளூர் சூழ்நிலையானது மறுசீரமைப்புக்கான தகவலை வழங்கும். தீவிரமான வானிலையின் போது, உறைவிடங்களில் வசிப்பது சிக்கலாக இருக்கும் அல்லது இடப்பெயர்வின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களால் பொருத்தமான உறைவிடத்தை நிர்மாணிக்க முடியாது இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் கூடாரங்கள் போன்ற உடனடியாக அமைக்கக் கூடிய உறைவிடங்களுக்கான தீர்வுகள், அல்லது பொதுக் கட்டடங்களில் தற்காலிக தங்குமிட வசதி என்பன வழங்கப்படல் வேண்டும். இடம்பெயர்ந்த மக்களுக்கான உறைவிடம், தங்குவதற்கு இடம் வழங்கும் குடும்பங்களுடன் இணைந்ததாக தனிப்பட்ட வீடுகளாக அல்லது தொகுதிகளான வீடுகளாக ஏற்கனவே உள்ள குடியிருப்புக்களில் அமைக்கப்படலாம் அல்லது திட்டமிடப்பட்ட மற்றும் முகாமை செய்யப்பட்ட முகாம்களில் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட நிலையங்களில் இவர்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்படலாம்.

உறைவிடம் மற்றும் குடியிருப்பு தெரிவுகள் மற்றும் மறுசீரமைப்பு காட்சிப் பாகுபாடு

PRE-DISASTER SETTLED
மக்கள் தொகை: தற்காலிக அல்லது நிரந்த உறைவிடம்

குடியிருப்பு தெரிவுகள்

- வீட்டு உரிமையாளர் - அனுபவிப்பவர்
- அடுக்குமாடி உரிமையாளர் -அனுபவிப்பவர்
- வீட்டு குத்தகையாளர்
- அடுக்குமாடி குத்தகையாளர்
- நில குத்தகையாளர்
- சட்ட அந்தஸ்து இன்றி அனுபவிப்பவர்

அனர்த்தம்

அனர்த்தத்திற்குப் பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் தொகை தற்காலிக அல்லது இடைத்தங்கல் உறைவிடம்: திருத்தல் அல்லது மீள்நிர்மாணம்

குடியிருப்பு தெரிவுகள்

- வீட்டு உரிமையாளர் - அனுபவிப்பவர்
- அடுக்குமாடி உரிமையாளர் -அனுபவிப்பவர்
- வீட்டு குத்தகையாளர்
- அடுக்குமாடி குத்தகையாளர்
- நில குத்தகையாளர்
- சட்ட அந்தஸ்து இன்றி அனுபவிப்பவர்

அனர்த்தத்திற்குப் பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் தொகை தற்காலிக அல்லது இடைத்தங்கல் உறைவிடம்:

குடியிருப்பு தெரிவுகள்

- சட்ட அந்தஸ்து இன்மையால் சிதறடிக்கப்பட்ட சுய குடியிருப்பு
- குறுகிய காலத்திற்கான, நிலம், அடுக்குமாடி அல்லது குத்தகை
- குடும்பங்களினால் தங்க வைக்கப்படல்
- சேகரிப்பு நிலையங்கள்
- சுய குடியிருப்பு, திட்டமிடப்படாத முகாம்கள்
- திட்டமிடப்பட்ட மற்றும் முகாமை செய்யப்பட்ட முகாம்கள்

நிலைத்திருக்கக் கூடிய தீர்வுகள்
மீள்நிர்மாணம்
மீள்குடியேற்றம்
மீள்ஒருங்கிணைப்பு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயலுமான சந்தர்ப்பங்களில் ஏற்கனவே உள்ள வசிப்பிடங்களை அல்லது கட்டடங்களின் புதிய கட்டமைப்புக்களை திருத்துவதற்கு ஆதரவு வழங்கப்படல் வேண்டும். இந்த உதவிகளில் பொருத்தமான நிர்மாணத்திற்கும், பொருத்துவதற்குமான மூலப் பொருட்கள், கருவிகள், பணம் அல்லது சான்றுச் சீட்டுக்கள், தொழில் நுணுக்க வழிகாட்டல் மற்றும் பயிற்சி அல்லது இவை அனைத்தும் இணைந்தவை உள்ளடக்கப்படலாம். நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இயலுமை அல்லது நிபுணத்துவம் இல்லாத பாதிக்கப்பட்ட மக்களுக்கே ஆதரவு அல்லது தொழில் நுணுக்க உதவி வழங்கப்படல் வேண்டும். அனர்த்தத்தினால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டவர்களின் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அருகாமையில் உள்ள மக்கள் தொகை தங்க வைக்கப்படல் போன்ற உரிமைகள் மற்றும் தேவைகள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பாடசாலைகள் போன்ற பொது கட்டடங்கள் தற்காலிக சமுதாய தங்குமிடங்களாக பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், விரைவாக இயல்பு நடவடிக்கைகளை மீள்ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட மற்றும் முகாமைத்துவம் செய்யப்பட்ட பாதுகாப்பான வேறொரு இடத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களால் தற்காலிக அல்லது நிரந்த உறைவிடங்களை வழங்குவதற்கு தமது சொந்த இயலுமைகள் மற்றும் வளங்களை பயன்படுத்தி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த எந்தவொரு மறுசீரமைப்பும் அறிவிக்கப்படல் வேண்டும். உறைவிட மறுசீரமைப்புக்களின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூடுதலாக மேம்படுத்தவும் மற்றும்/அல்லது அவசர கால நிலைமையில் இருந்து இயல்பு வீடமைப்பு நிலைக்கு திரும்புவதற்கும் இயலுமானதாக இருக்கும். சேதமடைந்த பொதுக் கட்டடங்களை அல்லது பாடசாலைகளாக, சுகாதார பராமரிப்பு நிலையங்களாக மற்றும் வேறு சமுதாய வசதிகள் போன்ற சேவைகளை வழங்கிய தற்காலிக கட்டமைப்புக்களின் பகுதிகளை திருத்துதலும் மிகவும் அவசியமானது. சில பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உறைவிட வசதிகளின் ஒரு அங்கமாக கால்நடை போன்ற வாழ்வாதார சொத்துக்களுக்கு உறைவிட வசதிகளை செய்து கொடுப்பதும், அத்தியாவசியமான அம்சமாகும். ஏற்கனவே உள்ள உறைவிட மற்றும் குடியிருப்புச் சவால்கள் மற்றும் இடம், திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணம் தொடர்பான பலவீனங்கள், அனர்த்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் அல்லது காலநிலை மாற்றத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் என்பன தொடர்பில் இந்த மறுசீரமைப்பு அறிந்து வைத்திருத்தல் வேண்டும். குடியிருப்பு தீர்வுகள் மற்றும் உறைவிட நிர்மாணங்கள் சார்ந்த சுற்றுச் சூழல் தாக்கங்கள் தொடர்பிலான அக்கறையும் அனர்த்தத்தின் நீண்ட காலத் தாக்கத்தை குறைப்பதற்கு மிகவும் அவசியமானது ஆகும். சிறந்த உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் தொடர்பான அனர்த்த மறுசீரமைப்பினை சிறந்த முன்னாயத்தத்தின் ஊடாகவே எட்ட முடியும். இந்த முன்னாயத்தம் என்பது இயலுமைகள், உறவுகள் மற்றும் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் அல்லது இடம்பெறும் அனர்த்தங்களை எதிர்பார்த்து மற்றும் அதற்கு பிரதிபலிக்கும் வகையில் அரசாங்கங்கள், மனிதநேய நிறுவனங்கள், உள்ளூர் சிவில் சமூக நிறுவனங்கள், சமுதாயங்கள் மற்றும் தனிநபர்களினால் உருவாக்கப்பட்ட அறிவின் விளைவாக உருவானதாகும். முன்னாயத்தம் என்பது சவால்களின் பகுப்பாய்வு மற்றும் முன்னெச்சரிக்கை முறைகளின் பயன்பாடு என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

ஏனைய அத்தியாயங்களுடனான தொடர்புகள்

ஏனைய அத்தியாயங்களில் உள்ள பெரும்பாலான தரங்கள் இந்த அத்தியாத்துடன் தொடர்புடையதாகும். ஒரு பகுதியில் தரங்களை எட்டுவதற்கான தேர்ச்சியானது பொதுவாக செல்வாக்கு செலுத்துவதுடன், வேறு பகுதிகளின் தேர்ச்சியினையும் தீர்மானிப்பதாக

உள்ளது. மறுசீரமைப்பானது மிகவும் பயனுறுதி கொண்டதாக இருப்பதற்கு, ஏனைய துறைகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பன முக்கியமானது ஆகும். உதாரணமாக, பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரம் மற்றும் கண்ணியத்தினை உறுதி செய்வதற்கு உறைவிட உதவி வழங்கப்படும் பகுதிகளில் போதிய நீர் விநி-யோகம் மற்றும் தேகாரோக்கிய வசதிகள் வழங்கப்படுவது, மிகவும் அவசியமானது ஆகும். அதேபோன்று, போதிய உறைவிடத்திற்கான அங்கமானது சுகாதாரம் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களுக்கு பங்களிக்கின்றன. அதேவேளை, அத்தியாவசிய சமைத்தல் மற்றும் உண்பதற்கான உபகரணங்கள் மற்றும் சமைப்பதற்கான எரிபொருள் என்பன உணவு உதவியை இயலுமானதாக்குவதற்கு பயன்படுவதுடன், போஷாக்குத் தேவைகளையும் எட்டச் செய்கின்றன. தேவைகள் நிறைவேற்றப்படுதல், முயற்சிகள் போலியாக இல்லாது இருத்தல் மற்றும் உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் சார்ந்த இடையீடுகளின் தரம் எட்டப்படுதல் என்பவற்றை உறுதி செய்வதற்கு உள்ளூர் அதிகாரிகள், வேறு பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் சமுதாயஞ் சார்ந்த மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் என்பவற்றுடனான ஒருங்கிணைப்பும் அவசியமாகும்.

பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்களுக்கான இணைப்புக்கள்

இந்த கையேட்டின் தரங்களை எட்டுவதற்காக, அனைத்து மனிதநேய நிறுவனங்களும், அவற்றிற்கு தீர்மான பாதுகாப்பு கட்டளை அல்லது பாதுகாப்பில் விசேட நிபுணத்துவ இயலுமை இல்லாத போதிலும் அவை பாதுகாப்பு கோட்பாடுகளால் வழிகாட்டப்படல் வேண்டும். கோட்பாடுகள் என்பது “முழுமையானவை” அல்ல. அவற்றை எந்த நிறுவனங்களால் பூர்த்தி செய்ய முடியும் என்பது சூழ்நிலைகளுக்கு அமைவானதாகவே இருக்கும். இருப்பினும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் உலகளாவிய மனிதநேய அக்கறைகளை பிரதிபலிக்கும் கோட்பாடுகள் அவசியமாகும். வடிவமைக்கப்படும் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடு என்பது அதன் பயனுறுதித் தன்மைக்கு மிகவும் முக்கியமானது ஆகும். ஆறு முக்கியமான அடிப்படை தரங்கள் பங்குபற்றல், ஆரம்ப மதிப்பீடு, மறுசீரமைப்பு, இலக்குப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீட்டாய்வு, நிதி பணியாளர் செயற்பாடு மற்றும் மேற்பார்வை மற்றும் நபர்களுக்கான உதவி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஏனைய தரங்களையும் சுட்டிக்காட்டும் அணுகுமுறைகளுக்கான தனிப்பட்ட குறிப்புதவி மையத்தினை அவை வழங்குகின்றன. எனவே, ஒவ்வொரு தொழில் நுணுக்க அத்தியாயத்திற்கும், சுய தரங்களை எட்டுவதற்கு உதவிப் புரிவதற்கான முக்கியமான தரங்களின் பயன்பாடு அவசியமாக இருக்கின்றது. மிகவும் முக்கியமாக, எந்தவொரு மறுசீரமைப்பினதும் பொருத்தப்பாடு மற்றும் தரத்தினை உறுதி செய்வதற்கு வழமையாக அனர்த்தத்தினால் பாதிக்கப்படக் கூடிய அபாயம் நிறைந்த குழுக்கள் மற்றும் தனி நபர்கள் உள்ளடங்கலாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பங்குபற்றல் அதிகரிக்கப்படல் வேண்டும.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பலவீனங்கள் மற்றும் இயலுமைகள்

இந்த பிரிவானது முக்கியமான அடிப்படை தரங்களை மீள் அமுலாக்குவதற்கும், அதனுடன் இணைந்து வாசிப்பதற்கும் ஏற்றதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இளையவராக இருத்தல் அல்லது முதியவராக இருத்தல், பெண்ணாக இருத்தல் அல்லது வலுவிழந்த அல்லது எச். ஐ. வி தாக்கத்துக்கு உள்ளானவராக இருத்தல்

என்பவற்றின் காரணமாக, அவர் பலவீனமானவராக கருதப்படவோ அல்லது அதிகரித்த அபாயத்துக்கு உட்படுபவராகவோ கூடாது. ஆனால், காரணிகளுக்கு இடையிலான செயற்பாடே இதனை தீர்மானிக்கின்றது. உதாரணமாக, 70 வயதுடைய நபரொருவர், தனியாக வறுமையில் வசித்து வருகின்றார். அதே வயது மற்றும் சுகாதார நிலையை உடைய, ஆனால் கூட்டுக் குடும்பத்துடன் மற்றும் போதிய வருமானத்துடன் வசிக்கும் ஒருவரிலும் பார்க்க பலவீனமானவராக இருப்பார். அதேவேளை, 3 வயது சிறுமியொ -ருவர், தமக்குப் பொறுப்பான பெற்றோரின் பராமரிப்பில் இல்லாது இருக்கும் போது அதிக பலவீனம் உடையவராக இருப்பார்.

உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயத்தின் தரங்கள் பிரதான நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படும் போது, பலவீனம் மற்றும் இயலுமை தொடர்பான பகுப்பாய்வானது உதவிக்கான உரிமையுள்ளவர்களுக்கு, பாரபட்சமின்றி மற்றும் அதிக உதவி தேவையாக உள்ளவர்களுக்கு அனர்த்த மறுசீரமைப்பு முயற்சிகள் சென்றடைவதனை உறுதி செய்கின்றது. இதற்கு உள்ளூர் சூழ்நிலை தொடர்பில் மற்றும் வேறுபட்ட மக்களின் வேறுபட்ட குழுக்களின் மீது அவர்களிடம் ஏற்கனவே காணப்படும் பலவீனம் காரணமாக (உ-ம்: மிகவும் வறியவராக இருத்தல் அல்லது பாரபட்சம் காட்டப்பட்டவராக இருத்தல்), வேறுபட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான அவர்களது வெளிப்பாடு (உ-ம்: பாலியல் சுரண்டல் உள்ளடங்கலாக பால்நிலை சார்ந்த வன்முறைகள்), நோய் தாக்கம் அல்லது பரவல் (எச்.ஐ.வி அல்லது காச நோய்), மற்றும் தொற்று நோய்க்கான சாத்தியங்கள் (உ-ம்: சின்னம்மை அல்லது கொலரா) போன்றன எவ்வாறு தாக்கத்தை புரிகின்றன என்பன தொடர்பில் முழுமையான புரிந்துணர்வு அவசியமாக உள்ளது. ஏற்கனவே உள்ள சமத்துவமின்மையை அனர்த்தங்கள் மேலும் மோசமானதாக மாற்றும். எவ்வாறாயினும், மக்களின் எதிர்கொள்ளும் மூலோபாயங்கள், நெகிழ்ச்சித் தன்மை மற்றும் மீளெழல் இயலுமைகள் என்பனவற்றுக்கான ஆதரவானது மிகவும் அத்தியாவசியமானது. அவர்களுடைய அறிவு, திறன்கள் மற்றும் மூலோபாயாங்கள், சமூக, சட்ட, நிதி மற்றும் உளச்சமூக உதவிக்கான அவர்களுடைய பிரவேசம் என்பவற்றிக்கான உதவி மற்றும் இந்த சேவைகளை சமமான வகையில் பெறும் போது எதிர்நோக்கக் கூடிய பல்வேறுபட்ட பௌதீக, கலாசார, பொருளாதார மற்றும் சமூக தடைகள் என்பன தொடர்பிலும் பரிந்து பேசல் முன்னெடுக்கப்படுவதுடன், உதவி வழங்கப்படலும் வேண்டும்.

பலவீனமான அனைத்து மக்களினதும் உரிமைகள் மற்றும் இயலுமைகள் உறுதி செய்யப்படுவதனை குறிப்பிடும் பிரதான பகுதிகள் பின்வருமாறு:

- அனைத்து பிரதிநிதித்துவக் குழுக்கள் அனைத்து உள்ளடக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்து மக்களின், விசேடமாக அதிக சந்தர்ப்பங்கள் அற்றவர்களின் பங்குபற்றலை நம்பிக்கையுடைதாக்கல். (உ-ம்: தொடர்பாடல் மற்றும் ஒன்றிணைதல் சிக்கல் உள்ளவர்கள், நிறுவனங்களில் வசிப்பவர்கள், களங்கப்படுத்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் வேறு கீழ்ப்படுத்தப்பட்ட அல்லது பிரதிநிதித்துவம் புரியாத குழுக்கள்).
- மதிப்பீட்டின் போது பால் மற்றும் வயது (0-80+ வருடங்கள்) என்பதன் அடிப்படையில் தரவுகளை பிரிக்கவும். உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு துறையானது போதிய அளவில் மக்களின் பல்வகைத் தன்மை தொடர்பில் கவனஞ் செலுத்துவதனை உறுதி செய்வதற்கான முக்கியமான அம்சமாக இது உள்ளது.
- உரிமைத் தகுதிக்கான தகவல் உரிமை உறுதி செய்யப்படலானது, சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளடக்கமான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தொடர்பாடப்படுதல்.

அடிப்படைத் தரங்கள்

1. உறைவிடம் மற்றும் குடியிருப்பு

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடம்பெயராத மக்கள், அவர்களது சொந்த வீடுகள் அமைந்திருந்த தளத்தில் தற்காலிக அல்லது இடைத்தங்கல் வீட்டு உறைவிடம் அல்லது பொருத்தமான உறைவிடத்தினை திருத்துவதற்கான அல்லது நிர்மாணிப்பதற்கான வளங்கள் என்பவற்றின் ஊடாக உதவப்படல் வேண்டும். உதவி வழங்கப்படும் அளவு, நிலப் பயன்பாட்டு உரிமைகள் அல்லது உரிமைத்துவம், அத்தியாவசியச் சேவைகள் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் உறைவிடத்தை மேம்படுத்துவதற்கான மற்றும் பரவலாக்குவதற்கான சந்தர்ப்பங்கள் போன்ற காரணிகளின் அடிப்படையில் இந்த மக்களுக்கான தனிப்பட்ட வீட்டு உறைவிடம் என்பது தற்காலிகமானதாக அல்லது நிரந்தரமானதாக இருக்கலாம். அனர்த்தத்திற்கு முன்னர் தங்கியிருந்த வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல முடியாதுள்ள இடம்பெயர்ந்த மக்கள் பொதுவாக ஏனைய குடும்ப உறுப்பினர்கள் அல்லது வரலாற்று, மத அல்லது வேறு பிணைப்புக்கள் ரீதியாக தாம் இணைந்து வாழும் மக்களுடன் தங்கியிருப்பதற்கு விருப்பம் கொள்வர். எனவே, அவர்களுக்கு அதற்கேற்ற உதவிகள் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறான குடியிருப்பு சாத்தியமாக இல்லாத சந்தர்ப்பங்களில், தற்காலிக சமுதாய குடியிருப்பு என்பது திட்டமிடப்பட்ட அல்லது தற்காலிக அல்லது இடைத்தங்கல் வீட்டு உறைவிடத்துடன் சுயமாக அமைக்கப்பட்ட முகாம்களில் அல்லது சேகரிப்பு நிலையங்களான பொருத்தமான பாரிய பொதுக் கட்டடங்களில் வழங்கப்படல் வேண்டும்.

உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 1: மூலோபாய திட்டமிடல்

உறைவிட மற்றும் குடியிருப்பு மூலோபாயங்கள் இடம்பெயர்ந்த மற்றும் இடம்பெயராத பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு, அவதானமாக இருத்தல், சுகாதாரம் மற்றும் நலன்களுக்கு பங்களிக்கின்றன. அத்துடன், இயலுமான சந்தர்ப்பங்களில் மீளமைப்பு மற்றும் மீள் நிர்மாணத்தினையும் மேம்படுத்துகின்றன

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையுடனான கலந்தாய்வின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் உறைவிட மற்றும் குடியிருப்புத் தேவைகளை மதிப்பீடு செய்வதுடன், பகுப்பாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மறுசீரமைப்பு நிறுவனங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் ஒத்துழைப்புடன் உறைவிட மற்றும் குடியிருப்பு மறுசீரமைப்பு திட்டத்தை (துரித மீளமைப்பினையும் உள்ளடக்கியதாக) வடிவமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது சொந்த வசிப்பிடங்களுக்கு அல்லது தமது வசிப்பிடங்கள் அமைந்திருந்த பகுதிக்கு திரும்புவதனை முன்னுரிமைப்படுத்தி, உதவி வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- அனர்த்தத்திற்கு முன்பு இருந்த வசிப்பிடத்திற்கு திரும்புவதற்கு இயலாதவர்களை அல்லது விருப்பமில்லாதவர்களை வேறு வீடுகளில் அல்லது தற்காலிக சமுதாய குடியிருப்புக்களில் தங்க வைப்பதற்காக உதவிகளை வழங்கல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐப் பார்க்கவும்).
- உணவல்லாத விடயங்கள், உறைவிடத் தீர்வுகள் (கூடாரங்கள் அல்லது உறைவிடத் தொகுதிகள்), நிர்மாண மூலப் பொருட்கள், பணம், தொழில் நுணுக்க உதவி அல்லது தகவல் அல்லது இவை அனைத்தும் கலந்த சேவைகளுக்கான பிரவேசத்தை தேவையின் அடிப்படையில் உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐப் பார்க்கவும்).
- இடம்பெற்றுள்ள அனர்த்தத்தின் உண்மையான அல்லது சாத்தியமான அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களில் இருந்து பாதுகாப்பான தூரத்தில் வசிப்பிடங்கள் அல்லது குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- சேதமடைந்த அல்லது அழிக்கப்பட்ட வீடுகள், தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள், அத்தியாவசிய பொதுக் கட்டடங்கள் மற்றும் பிரவேச வழிகள் உள்ளடங்கலாக முக்கியமான இடங்களில் அனர்த்தத்தின் விளைவாக ஏற்படும் சிதைவுக் கூளங்கள் அகற்றப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).
- நீர் மற்றும் தேகாரோக்கிய சேவைகள், சுகாதார வசதிகள், பாடசாலைகள் மற்றும் பொழுதுபோக்கு மற்றும் வழிபாட்டுக்கான இடங்கள் மற்றும் வாழ்வாதார உதவி நடவடிக்கைகளைத் தொடருவதற்காக அல்லது அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் நிலத்திற்கான, சந்தைகளுக்கான அல்லது சேவைகளுக்கான பாதுகாப்பான பிரவேசத்தை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 9-10ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினதும் அத்தியாவசியத் தேவைகளை எட்டுவதற்கான உறைவிடம் மற்றும் குடியிருப்புத் தீர்வுகள் பாதிக்கப்பட்ட மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன் மறுசீரமைப்பு நிறுவனங்களால் முன்னெடுக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அனைத்து தற்காலிக உறைவிடம் மற்றும் குடியிருப்பு தீர்வுகளும் பாதுகாப்பானதாகவும், போதியதாகவும், நிலைத்திருக்கக் கூடிய தீர்வுகள் எட்டப்படும் வரை தொடர்வதாகவும் இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-10ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **மதிப்பீடு, கலந்தாய்வு மற்றும் ஒருங்கிணைப்பு:** பாதிக்கப்பட்ட மக்களின் உறைவிட மற்றும் குடியிருப்புத் தேவைகளை அடையாளங் காண்பதற்கு அனர்த்தத்திற்கு பின்னரான சவால்கள், பலவீனங்கள் மற்றும் இயலுமைகள், ஆரம்பத்தில் இருந்து மீளமைப்பை அடையாளங் காண்பதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் சுற்றுச் சூழல் தாக்கம் உள்ளடங்கலாக மேலும் விளக்கமான

மதிப்பீட்டுக்கான தேவை என்பவற்றின் ஆரம்ப தேவைகள் மதிப்பீடு என்பது அவசியமானது ஆகும். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை (குறிப்பாக விசேடத் தேவைகள் உடைய பலவீனமான மக்கள்), சம்பந்தப்பட்ட அதிகாரி -களுடன் இணைந்து இவ்வாறான மதிப்பீட்டில் ஈடுபடல் வேண்டும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள எதிர்பாராத நிகழ்வுகளுக்கான திட்டங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மனிதநேய மற்றும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையுடனான ஒருங்கிணைப்புடன், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு பொறியமைப்புக்களைப் பயன்படுத்தி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை வெளிப் -படுத்துவதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். வளங்கள் கிடைக்கக் கூடியத் தன்மை, உள்ளூர் சூழ்நிலை (பருவகால வானிலை மாற்றங்கள் உள்ளடங்கலாக), பாதுகாப்பு மற்றும் ஏற்கனவே உள்ள அல்லது புதிய இடங்கள் மற்றும் நிலத்திற்கான பிரவேசம் என்பன மறுசீரமைப்பு திட்டமிடலை வெளிப்படுத்தும் (மிக முக்கியமான தரங்கள் 1-5, உணவல்லாத விடயங்கள் தரங்கள் 1-5 மற்றும் பிற்சேர்க்கை 1: உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியல் என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**)

2. **மீள்திரும்பல்:** தமது சொந்த நிலத்திற்கு மற்றும் வசிப்பிடத்திற்கு மீள திரும்புவதற்கான சந்தர்ப்பமானது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் தொகையின் பாரிய இலக்காக உள்ளது. சமுதாய எதிர்கொள்ளல் மூலோபாயங்களை ஆதரிக்கும் வகையில், ஸ்தாபிக்கப்பட்ட குடியிருப்பு முறைகளை தக்கத் வைத்துக் கொள்ளும் வகையில் மற்றும் ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கு இயலுமாக்கும் வகையில் வசிப்பிடங்களை திருத்துதல் அல்லது உறைவிடங்களை மேம்படுத்துதல் என்பன பாதிக்கப்பட்ட மக்களினாலேயே தீர்மானிக்கப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும்). மீள் திரும்பல் என்பது தாமதப்படுத்தப்படலாம் அல்லது தவிர்க்கப்படலாம். எனவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக குடியிருப்பு வேறெங்காவது அமைக்கப்படல் வேண்டும். வெள்ளப் பெருக்கு தொடரல், மண்சரிவுகள் அல்லது நிலஅதிர்வுகள் மற்றும் சொத்தினை அல்லது நிலத்தினை அனுபவித்தல் மற்றும் பரிகாரத்திற்கான தேவை, வன்முறை மோதல் தொடரல், இன அல்லது மத பதட்டங்கள், அடக்கு முறை அல்லது நிலக்கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத இராணுவத் தளபாடங்கள் சம்பந்தப்பட்ட அபாயம் போன்ற பாதுகாப்பு சார்ந்த அக்கறைகள் ஆகிய அனர்த்தங்களின் தொடர்ச்சி காரணமாக மீள் திரும்பல் என்பது தாமதமடையலாம். பாடசாலைகளின் மீள் நிர்மாணம் என்பதும் பாதிக்கப்பட்ட மக்கள் மீள்திரும்புவதனை இயலுமாக்குவதற்கு முக்கியமானது ஆகும். பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மீள்திரும்பல், கணவனை இழந்தவர்கள் அல்லது அனர்த்தத்தினால் நிர்க்கதியானவர்கள் அல்லது வலுவிழந்த நபர்கள் போதியதற்ற அல்லது பாரபட்ச நில மற்றும் சொத்து சட்ட உரிமை அல்லது பாரம்பரிய நடைமுறைகள் என்பன காரணமாக தடுக்கப்படலாம். மீள்நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சக்தி இல்லாத இடம்பெயர்ந்த நபர்களும் மீள் திரும்புவதில் இருந்து தடுக்கப்படுகின்றனர் அல்லது ஊக்குவிக்கப்படுவதில்லை.

3. **குடும்பங்கள் மற்றும் சமுதாயங்களால் தங்க வைக்கப்படல்:** தமது சொந்த வீடுகளுக்கு திரும்ப இயலாத இடம்பெயர்ந்த மக்கள் தொகை, ஏனைய குடும்ப உறுப்பினர்கள் அல்லது நீண்டகாலமாக வரலாற்று ரீதியான, மத அல்லது வேறு பிணைப்புக்களை கொண்ட மக்களுடன் இணைந்து வாழ்வதற்கே பொதுவாக

விருப்பம் கொள்வர் (மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). இவ்வாறான சந்தர்ப்பத்தில் உதவி என்பதில், தங்குவதற்கு வசதியளிக்கும் குடும்பத்தின் உறைவிடம் மற்றும் வசதிகளை இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தங்கும் வசதி அளிப்பதற்கு ஏற்ற வகையில் அல்லது தங்க வசதி அளிக்கும் குடும்பத்தின் உறைவிடத்திற்கு நெருக்கமானதாக மேலதிக உறைவிட வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பரவலாக்கல் அல்லது உள்வாங்கல் என்பது தொடர் -பிலானதாக இருத்தல் வேண்டும். மக்கள் தொகை அதிகரித்தல் தொடர்பில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். அத்துடன், சமூக வசதிகள், உட்கட்டமைப்பு பிரிவுகள் மற்றும் இயற்கை வளங்கள் என்பனவற்றிற்கான கேள்வியும் மதிப்பீடு செய்யப்பட்டு, தணித்து வைக்கப்படல் வேண்டும்.

4. **தற்காலிக சமுதாய குடியிருப்பு:** இது இறுதியான மறுசீரமைப்பாக இல்லாத போதிலும், தமது சொந்த வசிப்பிடங்களுக்கு திரும்புவதற்கு இயலாத அல்லது விருப்பம் இல்லாத பாதிக்கப்பட்ட மக்கள் தொகையை தங்க வைப்பதற்கு தற்காலிக திட்டமிடப்பட்ட முகாம்கள் பயன்படுத்தப்படலாம். ஏனைய குடும்பத்தினால் தங்க வைப்பதற்கு வசதி அளிப்பவர்களுக்கு இது சிறந்த தெரிவு அல்ல. மக்கள் தொகை புறக்கணிக்கப்படுதலுக்கான ஆபத்துக்கள் அதிகரிக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உள்ள பகுதிகள் அல்லது நீர், உணவு மற்றும் உள்ளூரில் வளமளிக்கப்பட்ட கட்டட மூலப்பொருட்கள் போன்ற அத்தியாவசிய சேவைகள் மற்றும் வளங்களுக்கான பிரவேசம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் இவ்வாறான குடியிருப்பு தீர்வுகள் அவசியமாக இருக்கும். சேகரிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படக் கூடிய ஏற்கனவே உள்ள கட்டடங்கள் காலநிலையிலிருந்து துரித தற்காலிக பாதுகாப்பினை வழங்க முடியும். இவ்வாறான தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் கட்டடங்கள் திருத்தப்படல் அல்லது மேம்படுத்தப்படல் வேண்டும். உதாரணமாக, நடமாடுவதற்கான சிக்கல்கள் உள்ள மக்களுக்கான உள்ளக உபப்பிரிவுகள் மற்றும் சரிவு மேடைகள் அமைக்கப்படல் வேண்டும். பல நாடுகளில், சேகரிப்பு நிலையங்களாக முன்னடையாளங் காணப்பட்ட கட்டடங்கள், அனர்த்தத்தின் தன்மைக்கு ஏற்றதாக முகாமைத்துவ மற்றும் சேவைப் பிரிவுகளின் பொறுப்புக்களுடன் ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைப்பதற்கான இடமாக பாடசாலைக் கட்டடங்கள் காணப்படும் நிலையில், பாடசாலை நடவடிக்கைகளைத் தொடருவதனை இலக்காகக் கொண்ட மாற்று கட்டமைப்புக்கள் அடையாளங் காணப்படல் வேண்டும். தற்காலிக சமுதாய குடியிருப்புக்களை திட்டமிடும் போது, அனுபவிப்பவரின் தனிப்பட்ட பாதுகாப்பு, அந்தரங்கத் தன்மை மற்றும் கண்ணியம் மற்றும் அத்தியாவசிய வசதிகளுக்கான பிரவேசம் என்பன தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். தாக்குதலுக்கு இலக்காகுவதாகவோ, அயலில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவோ அல்லது அருகில் உள்ள இயற்கைச் சுற்றுச் சூழலுக்கு அபாயத்தை விளைவிப்பதாகவோ தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள் அமையாதிருப்பதனை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும்.

5. **உறைவிட உதவிகளின் வகைகள்:** பாதிக்கப்பட்ட மக்களின் உறைவிடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேறுபட்ட வகையான உதவி முறைகள் ஒன்றிணைக்கப்பட வேண்டியத் தேவை உள்ளது. ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள், பிளாஸ்டிக் சீட்டுக்கள் மற்றும் கருவித் தொகுதிகள், நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் நிரந்தர உறைவிடங்களில் பகுதிகளாக பயன்படுத்தக்

கூடியப் பொருட்களை பயன்படுத்தி அமைக்கப்பட்ட தற்காலிக அல்லது இடைத்தங்கல் உறைவிடங்கள் போன்றன அடிப்படை உதவியில் உள்ளடக்கப்படல் வேண்டும். இவற்றிற்கு சாதாரண அல்லது நிபுணத்துவம் பெற்ற தொழிலாளர், தன்னார்வ அடிப்படையில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் தேவைப்படலாம். அத்துடன், பொருத்தமான கட்டட நிர்மாண உத்திகள் தொடர்பான தொழில் நுணுக்க வழிகாட்டலும் அவசியமாக இருக்கும். உள்ளூர் பொருளாதாரத்தின் செயற்பாட்டு சார்ந்ததாக பார்க்கும் போது, உள்ளூர் விநியோகச் சங்கிலி மற்றும் வளங்களை பயன்படுத்துவதனை மேம்படுத்துவதற்கான பணம் அல்லது சான்றுச் சீட்டுக்களின் பயன்பாடு தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். வாடகை தங்குமிட வசதிக்கு வழங்குவதற்காகவும் பணம் பயன்படுத்தப்படலாம். பொது பிரசாரங்கள் அல்லது உள்ளூர் நிலையங்கள் ஊடாக எவ்வாறு உதவித் தொகைகளை, மூலப்பொருட்களை அல்லது வேறு வடிவிலான உறைவிட உதவிகளை பெறுவது என்பது தொடர்பில் வழங்கப்பட்ட தகவல் அல்லது ஆலோசனையானது பொருட்கள் சார்ந்த உதவியினை நிறைவு செய்வதாக இருத்தல் வேண்டும்.

6. **இடைத்தங்கல் உறைவிடம்:** மறுசீரமைப்பின் நிலை என்ற அணுகுமுறை -யிலும் பார்க்க, இடைத்தங்கல் உறைவிடங்களின் பிரதிபலிப்புக்களின் பகுதிகள், அனர்த்தத்திற்குப் பின்னரான உறைவிடங்களை அமைத்தலில் பாதிக்கப்பட்ட மக்களே ஈடுபடுகின்றனர். அவர்களுடைய இந்த சுய முகாமைத்துவ முயற்சிக்கு ஆதரவளிக்கப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). அனர்த்தத்திற்குப் பின்னரான உறைவிடத் தீர்வுகள் பெரும்பாலான நிரந்தர கட்டமைப்புக்கள் அல்லது தற்காலிக நிலைகளில் இருந்து நிரந்தர இடங்களுக்கு மாற்றப்படும் சந்தர்ப்பங்களில் முழுமையாக அல்லது பகுதியாக மீளப்பயன்படுத்தப்படுகின்றமை பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் நிலைத்திருக்கக் கூடிய உறைவிடங்களை நோக்கி நகர்வதனை ஊக்குவிக்கலாம். தமது சொந்த வீடுகள் இருக்கும் பகுதியில் இருந்து இடம்பெயராத மக்களுக்கு, இடைத்தங்கல் உறைவிடங்கள் வீட்டிற்குச் செல்வதற்கான, வீட்டை மேம்படுத்துவதற்கான, விஸ்தரிப்பதற்கான அல்லது புனரமைப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கும். பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீடுகள் இருக்கும் பகுதிக்கு திரும்பிச் செல்லும் போது அல்லது புதிய இடங்களில் மீள்குடியேற்றப்படும் போது இடம்பெயர்ந்த மக்களுக்கு விரும்பிய சந்தர்ப்பங்களில் அப்புறப்படுத்தக் கூடிய அல்லது மீண்டும் பயன்படுத்தக் கூடிய இடைத்தங்கல் உறைவிடங்கள் பொருத்தமான உறைவிடங்களை வழங்கக் கூடும். அருகில் உள்ள அல்லது இணைந்துள்ள உறைவிடங்கள் சேதமடையும் சந்தர்ப்பங்களில் வேறு குடும்பங்களினால் தங்க வைக்கப்படும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகைக்கும் இடைத்தங்கல் உறைவிடங்கள் வழங்கப்படலாம். பாதிக்கப்பட்ட மக்கள் தொகை தமது சொந்த இடங்களுக்கு அல்லது வேறு இடங்களுக்கு திரும்புவதற்கு இயலுமானதாக இருக்கின்ற போது, இவ்வாறான கட்டமைப்புக்கள் அகற்றப்படுவதுடன், மீள்பயன்பாட்டுக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

7. **அபாயம், பலவீனத் தன்மை மற்றும் அனர்த்த மதிப்பீடுகள்:** முழுமையான அபாயம் மற்றும் பலவீனத் தன்மை மதிப்பீட்டினை பொறுப்பேற்று, தொடர்ச்சியாக மீளாய்வு செய்யவும் (மிக முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). உண்மையான அல்லது சாத்தியமான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் வயது, பால்நிலை, மாற்றுத் திறன், சமூக அல்லது பொருளாதார அந்தஸ்து, இயற்கையான சுற்றுச் சூழல் வளங்களில் பாதிக்கப்பட்ட மக்களின்

தங்கியிருக்கும் தன்மை மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகைக்கும், தங்குவதற்கு இடமளித்துள்ள சமுதாயத்திற்கும் இடையிலான உறவுகள் சார்ந்த தனித்துவமான அபாயங்கள் மற்றும் பலவீனத் தன்மைகள் இவ்வாறான மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 3இனைப் பார்க்கவும் **பக்கம் ???**). பூமியதிர்ச்சிகள், எரிமலை குமுறல், மண்ணரிப்புக்கள், வெள்ளப்பெருக்கு அல்லது சுழல் காற்றுக்கள் போன்ற இயற்கை பேரிடர்க-ளினால் ஏற்படும் ஆபத்துக்களை உறைவிட மற்றும் குடியிருப்புத் தீர்வுகளின் திட்டமிடல்கள் வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். குடியிருப்புக்காக தெரிவு செய்யப்படும் இடங்கள் நோய்கள் அல்லது மாசடைதல் அல்லது குறிப்பிட்ட நோய் நுண்மப் பரப்பிகள் காணப்படும் இடங்களாக இருக்கக் கூடாது. பூமியதிர்ச்சிகள், வெள்ளப்பெருக்குகள் மற்றும் சுழல் காற்றுக்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது தேவையாக இருக்கக் கூடிய பேரிடர் கால மூலப்பொருட்கள் மற்றும் வேறு பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிலக்கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத இராணுவத் தளபாடங்கள் முந்தைய அல்லது தற்போது இடம்பெறும் முரண்பாடுகளின் காரணமாக காணக் கிடைக்கக் கூடியதாக இருக்கும். அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் கட்டட கட்டமைப்புக்களின் உறுதிப்பாடு தொழில் நுணுக்க நிபுணர்களால் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். சேகரிப்பு நிலையங்களுக்கு, எந்தவொரு கூடுதல் கூட்டத்தையும் தங்க வைப்பதற்கான தற்போதுள்ள கட்டட கட்டமைப்பு திறன் மற்றும் தரைகள், உள்ளக பிரிப்புச் சுவர்கள், கூரைகள் மற்றும் இன்னபிற போன்ற கட்டட அம்சங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பினால் அதிகரித்துள்ள ஆபத்து என்பன தொடர்பில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

8. **சிதைவுக் கூளங்களை அகற்றல்:** இயற்கை அனர்த்தம் அல்லது மோதலினைத் தொடர்ந்து சிதைவுக் கூளங்களை அகற்றுதல் என்பது, உறைவிடம் வழங்குதலுக்கு உதவுவதற்கு மற்றும் பொருத்தமான குடியிருப்புத் தெரிவுகளை அமைப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும். அனர்த்தத்திற்கு பின்னர் சிதைவுக் கூளங்கள் மீள்சுழற்சி செய்யப்படுவதனை அல்லது பிரித்தெடுத்தல், சேமித்தல் மற்றும்/அல்லது பராமரிக்கப்படுவதனை உறுதி செய்வதற்கு சிதைவுக் கூளங்கள் முகாமைத்துவ திட்டமிடல் என்பது உடனடியாக ஆரம்பிக்கப்படல் வேண்டும் (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). சடலங்களை அடையாளங் காணல் மற்றும் பொருத்தமாக கையாளுதல், தனிப்பட்ட உடைமைகள், கட்டமைப்பு ரீதியாக ஆபத்தான இடங்கள் மற்றும் அபாயகரமான பொருட்களை மீட்டல் மற்றும் மறுபாவனைக்கு அல்லது விற்பனைக்கு ஏற்ற பொருட்கள் போன்றன முக்கியமான விடயங்களாக உள்ளன. சிதைவுக் கூளங்களை அகற்றுதலானது பணிக்கான பணம் நிகழ்ச்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்கும் மற்றும்∵.அல்லது பாரிய கருவிகள் மற்றும் நிபுணர்களை பயன்படுத்துவதற்கான தேவையையும் உருவாக்கும். சிதைவுக் கூளங்கள் அகற்றப்படும் பகுதிகளின் பயன்பாடு, முகாமைத்துவம், உரிமைத்துவம் மற்றும் சுற்றுச் சூழல் தாக்கம் என்பன கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

9. **பாடசாலைகள், சுகாதார வசதிகள் மற்றும் சமுதாய உட்கட்டமைப்புக்கள்:** பாடசாலைகள், சுகாதார வசதி கூடங்கள், பாதுகாப்பான விளையாட்டு மைதானங்கள் மற்றும் சமுதாய கூட்டங்களுக்கான பகுதிகள் உள்ளடங்கலாக அத்தியாவசிய சேவைகளுக்கான பிரவேசமானது உறுதி செய்யப்படல் வேண்டும். தேவையின் அடிப்படையில் மேலதிக தற்காலிக சேவைகள் அல்லது வசதிகளுடன் ஏற்கனவே

உள்ள அல்லது திருத்தப்பட்ட சேவை உட்கட்டமைப்பு பயன்படுத்தப்படல் வேண்டும். பொதுக் கட்டடங்களின் திருத்தல் அல்லது நிர்மாணமானது புதிய குடியிருப்பு திட்டங்களுக்கான அபிவிருத்தி அல்லது வேறு கட்டுப்பாட்டுச் செயல்முறைகள் சம்பந்தப்பட்டதாக இருக்கும் போது, உடனடியான, குறுகிய கால வசதிகளினை வழங்குவதற்கு தற்காலிக கட்டமைப்புக்கள் தேவையாக இருக்கலாம். தற்காலிக அல்லது நிரந்தர கட்டமைப்புக்களைப் பயன்படுத்தும் அவ்வாறான சேவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களை பின்பற்றல் வேண்டும் (WASH தரம் 1, சுகாதார முறைகள் தரம் 1 மற்றும் கல்வி: முன்னாயத்தம், மறுசீரமைப்பு, மீளமைப்புக்கான INEE அடிப்படைத் தரங்கள்).

10. **வாழ்வாதார உதவி:** அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை குடியேற்றும் நடவடிக்கையானது அவர்களுடைய அனர்த்தத்திற்கு முன்னரான பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் காணப்படும் சந்தர்ப்பங்கள் என்பவற்றின் அடிப்படையில் அமைதல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மதிப்பீட்டுத் தரங்கள் 1-2 மற்றும் மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கான நிலம் கிடைக்கும் தன்மை மற்றும் விளைச்சல் மற்றும் மேய்ச்சலுக்கான பிரவேசம் மற்றும் சந்தைப் பகுதிகளுக்கும், உள்ளூர் சேவைகளுக்குமான பிரவேசம் என்பன கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்

உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 2: குடியிருப்பு திட்டமிடல்

மீள்திரும்பல், தங்க வசதியளித்தல் அல்லது தற்காலிக சமுதாய குடியிருப்புக்களின் திட்டமிடலானது, பாதிக்கப்பட்ட மக்களின் தங்குமிடம் மற்றும் அத்தியாவசிய சேவைகளின் அவதானமான மற்றும் பாதுகாப்பான பயன்பாட்டினை இயலுமானதாக்குகின்றது.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- இயலுமான சந்தர்ப்பங்களில் குடியிருப்புக்கள் சார்ந்த ஆபத்துக்கள் மற்றும் பலவீனத் தன்மைகளை குறைப்பதற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த பயிற்சியினால் தெரிவிக்கப்பட்ட நடைமுறையில் உள்ள திட்டமிடல் செயல்முறைகளை அடையாளங் கண்டு பயன்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- வீடமைப்பு, நிலம் மற்றும் சொத்து உரிமைத்துவத்தினை அடையாளங் காணல் மற்றும்/அல்லது கட்டடங்கள் அல்லது இடங்களுக்கான உரிமைகளைப் பயன்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- அனைத்து உறைவிடங்கள் மற்றும் குடியிருப்பு நிலையங்களுக்கான மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான பாதுகாப்பான பிரவேசத்தை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐப் பார்க்கவும்).
- இயற்கை சுற்றுச் சூழலில் ஏற்படும் மோசமான தாக்கத்தை குறைப்பதற்கு நடைமுறையில் உள்ள குடியிருப்பு முறைகள் மற்றும் பரப்பியல் (ஸ்தல அமைப்பு விபரம்) அம்சங்களை பயன்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

- பொருத்தமான வகையில் குடும்பங்களாக, அயலவர்களாக அல்லது கிராமக் குழுக்களாக பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிக சமுதாய குடியிருப்புக்களை திட்டமிடுதலில் ஈடுபடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- தற்காலிகமாக திட்டமிடப்பட்ட மற்றும் சுயமாக அமைக்கப்பட்ட முகாம்களில் போதியளவு வெப்பம் உள்ளமையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8ஐப் பார்க்கவும்).
- நோய் நுண்மப் பரப்பி ஆபத்துக்களை குறைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்)

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமிடல் செயல்முறைகளின் ஊடாக உறைவிடங்கள் அமைப்பதில் உதவி புரிந்த மக்களுடன் கலந்தாய்வு செய்யப்படுவதனையும், தமது உறைவிடம் சார்ந்த இடம் அல்லது உள்ளடக்கப்பட்ட பகுதி மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான பிரவேசம் என்பன தொடர்பிலானதாக இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- உறைவிடங்கள், உள்ளடக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் பலவீனத் தன்மைகளை குடியிருப்பு திட்டங்கள் வெளிப்படுத்துவதுடன், அவை அடையாளங் காணப்பட்டு தணிக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-9ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **திட்டமிடல் செயல்முறைகள்:** அனர்த்தத்தின் அல்லது நெருக்கடி நிலையின் போது, அடையாளங் காணப்பட்ட பேரிடர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் மீதான தாக்கத்தின் வகை என்பவற்றின் மூலம் உள்ளூர் திட்டமிடல் செயற்பாடுகள் பயன்படுத்தப்பட்டு, அறிவிக்கப்படல் வேண்டும். குடியிருப்பு ஆபத்துக்கள் மற்றும் பலவீனத் தன்மைகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரியினால் தேவையாக இருக்கும்பட்சத்தில் மற்றும் உடனடியான உறைவிட மற்றும் குடியிருப்புத் தேவைகளை எட்டுவதில் மனிதநேய கட்டாயங்களை இவை தாமதப்படுத்தாத சந்தர்ப்பங்களில் நடைமுறையில் உள்ள திட்டமிடல் கட்டுப்பாடுகள் இணைக்கப்படல் வேண்டும். தீர்மானங்களை திட்டமிடலின் நீண்டகால ஊகக் குறிப்புக்கள், குறிப்பாக தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள் சம்பந்தப்பட்ட இடங்கள் அடையாளங் காணப்படல் வேண்டும்.
2. **வீடமைப்பு, நிலம் மற்றும் சொத்து உரிமைத்துவம், உரிமைகள் மற்றும் பயன்பாடு:** இடம்பெயராத மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் பிரிவினர் இருவருக்கும், சம்பந்தப்பட்ட நிலத்தின், வீட்டின் அல்லது வேறு கட்டடங்களின் உரிமைத்துவத்தினை மற்றும் முறைசார் அல்லது வழக்கு ரீதியான உரிமை-களைப் பயன்படுத்துவதற்கான உரிமையாளர்களை அடையாளங் காண்பதற்கான விடயங்கள் பொதுவாக சிக்கலானவை. விசேடமாக, பதிவுகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அல்லது மோதலின் காரணமாக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் அழிக்கப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களை குறிப்பிடலாம். பலரால் அனுபவிக்கப்படும் வசிப்பிடங்கள் அல்லது கலப்பு பயன்பாடு உள்ளடங்கிய கட்டடங்கள் என்பன பொதுவான அல்லது பகிரப்பட்ட உரிமைத்துவத்தினை

அல்லது அனுபவித்தல் உரிமையை கொண்டிருக்கும். பலவீன மக்களின் நிலம் அல்லது சொத்தின் உரிமையை அடையாளங் காணல் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அவர்களுக்கான உதவி வழங்கப்படல் வேண்டும். குறிப்பாக அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கணவனை இழந்த அல்லது நிர்க்கதியான பெண்கள், வலுவிழந்தவர்கள், வாடகை குடியிருப்பாளர்கள், சமூக உரிமைகளைப் கொண்டிருப்பவர்கள் மற்றும் முறைசாரா குடியிருப்பாளர்கள் போன்றவர்களுக்கு உதவி வழங்கப்படல் வேண்டும். குறிப்பாக அனர்த்தத்தினைத் தொடர்ந்து, உரிமைகளை வைத்திருப்பவர் அல்லது பொறுப்பினை வைத்திருப்பவர் உயிரிழக்கலாம் அல்லது இடம்பெயரலாம். உரிமையாளர் அல்லது பரம்பரை முறைசார், முறைசாரா அல்லது உரிமைத்துவம் தொடர்பில் புரிந்துகொள்ளப்பட்ட உரிமைகள் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். குழு பதவி வழங்குதல் அல்லது வீடுகள் பல ஒத்தத் தன்மையிலான அனர்த்தத்திற்கு முன்னர் நடைமுறையில் முறைசார் உரிமைகள் இல்லாத, குறித்த உரிமைகளை உறுதியாக கட்டமைப்பதற்கு உதவி புரியும். மனிதநேய நடவடிக்கைகளை தடை செய்யும் அல்லது தவிர்க்கக் கூடியதாக உள்ள நில உரிமைத்துவ கோரலை சட்டப்பூர்வமாக்கலுக்கு ஏற்றதாக அல்லது பயன்படுவதாக உறைவிட உதவிகள் அமைய வேண்டும். தற்காலிக சமுதாய குடியிருப்புக்களுக்கு நிலத்தை பயன்படுத்தும் போது நிலம் அல்லது இயற்கை சுற்றுச் சூழல் வளங்கள் தொடர்பில் தங்க இடம் வழங்குபவர்கள் அல்லது அயல் சமுதாயங்களினால் தற்போது புழக்கத்தில் உள்ள உரிமைகள் குறித்து கவனஞ் செலுத்தல் வேண்டும் (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

3. **அத்தியாவசிய சேவைகள் மற்றும் வசதிகள்:** தமது வீடுகள் உள்ள பகுதிகளுக்கு மீள்திரும்பும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், தற்காலிக சமுதாய குடியிருப்புக்களில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்கள் அனைவருக்கும், அனைத்து அத்தியாவசிய சேவைகளுக்கும் பாதுகாப்பான, அவதானமான மற்றும் சமத்துவமான பிரவேசம் வழங்கப்படல் வேண்டும். இதில் பொருத்தமான வகையில் நீர், தேகாரோக்கிய வசதிகள், சமைத்தலுக்கான எரிபொருள் அல்லது கூட்டு சமையல் வசதிகள், சுகாதார பராமரிப்பு, திண்மக் கழிவு அகற்றல், பாடசாலைகள், சமூக வசதிகள், வழிபடுவதற்கான இடங்கள், சந்திக்கும் நிலையங்கள், பொழுதுபோக்கு பகுதிகள், சிறுவர்களுக்கு ஏற்ற இடங்கள் மற்றும் கால்நடைகள் வசிப்பதற்கு ஏற்ற இடங்கள் (கால்நடைகள் வதியும் பகுதியில் இருந்து குறித்தளவு தொலைவில் இருப்பதனை உறுதி செய்தல்) என்பன உள்ளடங்குகின்றன. கலாசார ரீதியாக பொருத்தமான இடங்களில் சடலங்களை புதைத்தல் மற்றும் அது சம்பந்தப்பட்ட சடங்குகளை முன்னெடுப்பதற்கு போதிய வசதி வழங்கப்படல் வேண்டும். நடைமுறையில் உள்ள அல்லது திருத்தப்பட்ட வசதிகளைப் பயன்படுத்தலானது அயலில் உள்ள அல்லது தங்க வசதி வழங்கும் சமுதாயத்தினருக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அதிகரிக்கப்படல் வேண்டும். இலக்கு வைக்கப்பட்ட மக்களின், விசேடமாக பலவீனமான மக்களின் தேவைகளை எட்டுவதற்கான மேலதிக வசதிகள் அல்லது அணுகுவதற்கான வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் சமூக கட்டமைப்பு மற்றும் பால்நிலையின் பாத்திரங்கள் மற்றும் பலவீனமான மக்களின் தேவைகள் என்பன சேவைப் பிரிவில் பிரதிபலிக்க வேண்டும். உதாரணமாக, நடமாடும் சிக்கல் உள்ள நபர்களுக்காக சாதாரணமான நடக்கும் தூரத்திற்கு உட்பட்டதாக சேவைகள் வழங்கப்படும் இடங்கள் அமைவதனை உறுதி செய்தல்

மற்றும் தற்காலிக சமுதாய குடியிருப்புக்களில் பாதுகாப்பான தாய்ப்பாலூட்டும் பிரிவுகளை அமைத்தல் என்பனவற்றை குறிப்பிடலாம். வயதான மக்களுக்கான, குறிப்பாக உடல் சார்ந்த குறைபாடுகள் உள்ளவர்களுக்கான மற்றும் அடிக்கடி பிரவேசம் தேவையாக உள்ளவர்களுக்கான வசதிகளுக்கு பொருத்தமான பிரவேச -மானது உறுதி செய்யப்படல் வேண்டும். நிர்வாக அலுவலகங்கள், களஞ்சிய சாலைகள் மற்றும் ஊழியர் தங்குமிடங்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் தேவையான வகையில் தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள் வழங்கப்படல் வேண்டும் (WASH தரம் 1 மற்றும் சுகாதார முறைகள் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **பிரவேசம்:** பருவகால இடையூறுகள், அனர்த்தங்கள் மற்றும் பாதுகாப்புச் சவால்களை கருத்திற் கொண்டதாக குடியிருப்புக்கான பிரவேசம், உள்ளூர் வீதி உட்கட்டமைப்பின் நிலைமை மற்றும் நிவாரண உதவி விநியோகத்திற்கான போக்குவரத்து மையங்களிற்கான தூரம் என்பன மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள் அமைக்கப்படும் இடங்கள், அதிகளவு சேமிப்புக்காகவும் மற்றும் உணவு விநியோக நிலையத்திற்கு கனரக வாகனங்கள் பிரவேசிக்கக் கூடிய வீதி உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். ஏனைய வசதிகளுக்கு இலகுரக வாகனங்களை பயன்படுத்த முடியும். குடியிருப்புக்களுக்குள் காணப்படும் வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் தனிப்பட்ட வசிப்பிடங்கள் மற்றும் பாடசாலைகள் மற்றும் சுகாதார சேவை வழங்கும் இடங்கள் உள்ளடங்கலாக சமுதாய வசதிகளுக்கு பாதுகாப்பானதாக, அவதானமானதாக மற்றும் அனைத்து வானிலைகளுக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். தேவையாக இருக்கும்பட்சத்தில் செயற்கை வெளிச்சம் வழங்கப்படல் வேண்டும். தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள் அல்லது சேகரிப்பு நிலையத்திற்குள், பயனாளிகளின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை வழங்கும் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது வெளிப்படையான பகுதிகளை உருவாக்கக் கூடிய பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் வீதிகள் தவிர்க்கப்படல் வேண்டும். சேகரிப்பு நிலையங்களின் வெளியேறல் பகுதியில் படிகள் மற்றும் மட்டத்தில் மாற்றங்கள் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். அத்துடன், எந்தவொரு படிவழிகள் மற்றும் சறுக்குப் பாதைகளுக்கு கைப்பிடிச் சட்டங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உதவிகளை அனுபவிப்பவர்களில் நடமாடும் சிக்கல் உள்ளவர்களுக்கு கீழ்தளத்தில் இடம் வழங்கப்படல் வேண்டும். அது வெளியேறும் பகுதிக்கு அருகாமையில் அல்லது பிரவேசப் பகுதியுடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும். இந்த பகுதியின் நிலமட்டங்களில் மாற்றங்கள் இருக்கக் கூடாது. சேகரிப்பு நிலையங்களாக கட்டடங்களை பயன்படுத்துபவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதாரணமான தூரத்தில் அமைந்த இரண்டு வெளியேறும் பகுதிகளுக்கு இடையில் இருத்தல் வேண்டும். அவர்களுக்கு மேலதிக வெளியேறும் பகுதிகள் வழங்கப்படல் வேண்டும். அத்துடன், இந்த வழிகள் அனைவரும் பார்க்கும் இடத்தில் இருத்தல் வேண்டும்.

5. **இடத்தை தெரிவு செய்தல் மற்றும் சாக்கடை வடிகால்:** மேற்தள நீர் சாக்கடை வடிகால் மற்றும் நீர் தேங்கல் அல்லது வெள்ளப்பெருக்கு தொடர்பான அச்சுறுத்தல்கள் என்பன இடத்தினை தெரிவு செய்யும் போது மற்றும் தற்காலிக சமுதாய குடியிருப்புக்களை திட்டமிடும் போது மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும். விரிவான வடிகால் மற்றும் மண்ணரிப்பு கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் மாத்திரமே, தளத்தின் சாய்வானது 6 வீதத்திற்கு அதிகரித்ததாக

இருக்கக் கூடாது. அல்லது போதிய வடிகாலை வழங்குவதற்கு 1 வீதமாக இருக்கலாம். வெள்ளப்பெருக்கு அல்லது நீர் தேங்குவதனை குறைப்பதற்கு வடிகால் அமைப்புக்களும் தேவையாக இருக்கலாம். கணிப்பிடப்பட்ட ஆகக் கூடிய நீர் மேடையின் மட்டத்திலிருந்து மூன்று மீற்றருக்கு குறையாததாக இடத்தின் கீழ்ப் பகுதி இருத்தல் வேண்டும். மலசல கூட குழிகளை செப்பனிடுவதற்கு நிலத்தின் சூழ்நிலைகள் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், மலசல கூடங்கள் மற்றும் வேறு வசதிகள் அமைந்துள்ள இடங்களில் வெளியேற்றல் வேண்டும் (கழிவுப் பொருள் வெளியேற்றல் தரங்கள் 1-2 மற்றும் சாக்கடை வடிகால் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

6. **தற்காலிக சமுதாய குடியிருப்புக்களுக்காக இடத்தினை தெரிவு செய்தல்:** தற்காலிகமான திட்டமிடப்பட்ட முகாம்களுக்குள் சேகரிப்பு நிலையங்கள் மற்றும் வீடமைப்பு பகுதிக்கான இட ஒதுக்கீடு என்பது ஏற்கனவே உள்ள சமூக செயற்பாடுகள் மற்றும் நீர் மற்றும் தேகாரோக்கிய வசதிகள், சமுதாய சமையல், உணவு விநியோகம், இன்னபிற என்பன உள்ளடங்கலாக பகிரப்பட்ட வளங்களின் பயன்பாட்டினையும் தெரிவிக்க வேண்டும். அருகாமை திட்டமிடல் என்பது நடைமுறையில் உள்ள சமூக வலையமைப்புக்களுக்கு ஆதரவு வழங்குவதாக இருத்தல் வேண்டும். அத்துடன், பாதுகாப்புக்கு பங்களிப்பதாகவும், பாதிக்கப்பட்ட மக்களால் சுய முகாமைத்துவத்தை இயலுமானதாக்குவதாகவும் இருத்தல் வேண்டும். தற்காலிகமாக திட்டமிடப்பட்ட முகாம்களின் சிறு நில அமைப்பானது ஒவ்வொரு வீட்டு உறைவிடங்களும் பொதுவான இடத்திற்கு அல்லது வெளிப்படையான பகுதிக்கு வீடமைப்பின் பயன்பாட்டுக்கு உதவுவதுடன், மற்றைய உறைவிடத்தின் நுழைவாயிலுக்கு எதிரானதாக இல்லாதிருப்பதற்கு தனித்தனியான வீடமைப்புக்களின் அந்தரங்கம் மற்றும் கண்ணியத்தினை பேணல் வேண்டும். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் பருவமானவர்கள் அல்லது கைவிடப்பட்ட சிறுவர்கள் உள்ளடங்கிய பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான, ஒன்றிணைக்கப்பட்ட வசிக்கும் பகுதிகள் வழங்கப்படல் வேண்டும். கலைக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு, அயலவர்கள் திட்டமிடல் கோட்பாடானது பிரயோகிக்கப்படல் வேண்டும். உ-ம், வீடமைப்பு குழுக்கள் வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதிக்கு திரும்பல் வேண்டும் அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நெருக்கமான தூரத்தில் தங்க வசதியளிக்கும் குடும்பங்கள் அடையாளங் காணப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும்).

7. **தற்காலிகமாக திட்டமிடப்பட்ட அல்லது சுயமாக குடியிருத்தப்பட்ட முகாம்களின் மேற்தளப் பகுதி:** முகாம் வடிவிலான குடியிருப்புக்களில், வீடமைப்பு பகுதி உள்ளடங்கலாக நபர் ஒருவருக்கான ஆகக் குறைந்த மேற்தளப் பகுதியான 45 சதுர மீற்றர்கள் வழங்கப்படல் வேண்டும். இந்தப் பகுதியில் வீதிகள் மற்றும் ஒழுங்கைகள், வீட்டிற்கு வெளியே அமைந்துள்ள சமையல் பகுதிகள் அல்லது கூட்டு சமைத்தல் பகுதிகள், கற்பதற்கான வசதிகள் மற்றும் பொழுதுபோக்கு பகுதிகள், தேகாரோக்கியம், நிர்வாகம், நீர் சேமிப்பு, விநியோக பகுதிகள், சந்தைகள், களஞ்சிய சாலை மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சமையலறை பூங்காக்கள் என்பவற்றை கொண்டதாக இருத்தல் வேண்டும். குடியிருப்பின் திட்டமிடப்பட்ட பகுதிக்கு வெளியே ஏற்கனவே உள்ள அல்லது மேலதிக வசதிகளின் ஊடாக சமுதாய சேவைகளை வழங்கக் கூடியதாக இருக்கும் போது, நபர் ஒருவருக்கான ஆகக் குறைந்த பயன்படுத்தக் கூடிய இடமாக 30 சதுர மீற்றர்கள் இருத்தல் வேண்டும். இடத்தை திட்டமிடலில் மக்கள்

தொகையின் மாற்றங்களை கவனத்திற் கொள்ளல் வேண்டும். ஆகக் குறைந்த மேற்தளப் பகுதியை வழங்க முடியவில்லை எனின், சனத்தொகையின் அதிக அடர்த்தியினால் ஏற்படும் விளைவுகள் தணிக்கப்படல் வேண்டும். உதாரணமாக, தனிப்பட்ட வீடுகளுக்கு இடையில் போதிய விலக்கல் மற்றும் தனிமையை உறுதிப்படுத்துவதன் ஊடாக, தேவையான வசதிகளுக்கான இடத்தை வழங்க முடியும்.

8. **தீயிலிருந்து பாதுகாப்பு:** தற்காலிக சமுதாய குடியிருப்புக்களைத் திட்டமிடும் போது மற்றும் தனிப்பட்ட வீட்டு உறைவிடங்களை குழுப்படுத்தும் போது, குறித்த பகுதியில் தீயினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யவும். கட்டமைக்கப்பட்ட ஒவ்வொரு 300மீற்றர்கள் பகுதிக்கும் இடையில் 30 மீற்றர் தீ பரவல் கட்டுப்படுத்தும் பகுதி மற்றும் அருகில் உள்ள கட்டடத்திற்கு பரவுதலை தடுப்பதற்கு தனிப்பட்ட கட்டடங்கள் மற்றும் உறைவிடங்களுக்கு இடையில் ஆகக் குறைந்தது 2 மீற்றர்கள் (ஆனால், பொதுவாக, எந்தவொரு கட்டடத்தின் ஒட்டுமொத்த உயரத்தின் இரண்டு மடங்கு) இடைவெளி என்பன தணித்தல் நடவடிக்கைகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். விருப்புக்குரிய சமைத்தல் செயற்பாடுகள் மற்றும் அடுப்புக்கள் அல்லது வெதுப்பிகளின் பயன்பாடு தொடர்பிலும் ஒட்டுமொத்த தளத்தையும் திட்டமிடலின் போது குறிப்பிடப்படல் வேண்டம். அத்துடன், வீட்டு உறைவிடங்களினை பாதுகாப்பாக பிரித்து வைத்தலும் இதில் உள்ளடங்க வேண்டும் (உணவு சாராத விடயங்கள் தரம் 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

9. **நோய் நுண்மப் பரப்பி ஆபத்துக்கள்:** தாழ்வான பகுதிகள், அனர்த்தத்தினால் ஏற்பட்ட சிதைவுக் கூளங்கள், வெற்றுக் கட்டடங்கள் மற்றும் உள்ளூர் நிர்மாணப் பணிகளினால் உருவாகும் குழிகள் என்பன காரணமாக அருகில் வசிக்கும் மக்களுக்கு உடல் நலன் கோளாறுகளை ஏற்படுத்தக் கூடிய பூச்சிகள் உருவாகும் இடங்களாக இவை காணப்படும். தற்காலிக சமுதாய குடியிருப்புக்களுக்கு, பாதிக்கப்பட்ட மக்கள் மீது நோய் நுண்மப் பரப்பிகளினால் ஏற்படும் நோய்த் தாக்கத்தை குறைப்பதற்கான பொருத்தமான இடத் தெரிவு மற்றும் நோய் நுண்மப் பரப்பிகளின் ஆபத்தினை தணித்தல் என்பன முக்கியமான விடயமாகும் (நோய் நுண்மப் பரப்பிகள் கட்டுப்பாட்டு தரங்கள் 1-3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 3: பாதுகாக்கப்பட்ட வசிக்கும் இடம்

வெப்ப வசதி, தூய வளி மற்றும் காலநிலையின் அந்தரங்கத்தை உறுதி செய்வதன் மூலம் காலநிலையிலிருந்து பாதுகாப்பு, எச்சரிக்கை, பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை வழங்குவதன் மூலம் மக்கள் போதிய மூடப்பட்ட வசிக்கும் இடத்தை கொண்டிருத்தல். அத்துடன், அத்தியாவசிய வீடமைப்பு மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதனை இயலுமானதாக்கல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கு போதிய மூடப்பட்ட வசிக்கும் இடம் இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

- தேவையின் அடிப்படையில் வழங்கப்பட்ட குடும்பங்களுக்குள் பால்நிலைகளுக்கு இடையில், வேறுபட்ட வயதுப் பிரிவுகளுக்கு இடையில் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு இடையில் பாதுகாப்பான பிரிப்பு மற்றும் அந்தரங்கத் தன்மையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- மூடப்பட்ட வசிக்கும் இடம் அல்லது அதனுடன் இணைந்த பகுதியில் அத்தியாவசிய குடும்ப மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க இயலுமாக இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பழங்கமான உறைவிட தீர்வுகள் மற்றும் மூலப்பொருட்களை மேம்படுத்தல் மற்றும் இயலுமாயின், கலாசார ரீதியாக மற்றும் சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் சுற்றுச் சூழலுக்கு பொருத்தமான விடயங்களை மேம்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐப் பார்க்கவும்).
- உகந்த சீதோஷண நிலை, காற்று வழி மற்றும் பாதுகாப்பினை வழங்குவதற்கு அனைத்து பருவங்களுக்குமான முக்கியமான காலநிலை மாற்றங்களை மதிப்பீடு செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-10ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பாதிக்கப்பட்ட தனிநபர்கள் அனைவரும், ஆரம்பத்தில் ஆகக் குறைந்த மூடப்பட்ட தனிநபருக்கான 3.5 சதுர மீற்றர் நிலப்பரப்பை கொண்டிக்க வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- அனைத்து உறைவிடத் தீர்வுகள் மற்றும் மூலப்பொருட்களும் தொழில் நுணுக்க மற்றும் செயற்பாட்டு தரங்களை எட்டுவதுடன், கலாசார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-10ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **காலநிலை மற்றும் சூழ்நிலை:** குளிர் காலங்களில், குடும்ப நடவடிக்கைகள் பொதுவாக மூடப்பட்ட பகுதிக்குள் முன்னெடுக்கப்படும். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிடளவு நேரத்தினை வெப்ப சக்தியை பெற்றுக் கொள்வதற்காக மூடப்பட்ட இடத்திற்குள் கழிப்பர். நகர்ப்புறங்களில், பொதுவாகவே மூடப்பட்ட பகுதிக்குள்ளேயே குடும்ப செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏனெனில், பயன்படுத்துவதற்கான வெளியிடத்தின் அளவு மிகவும் குறைவாக இருப்பதே இதற்கு காரணமாகும். நபரொருவருக்கான ஆகக் குறைந்த 3.5 சதுர மீற்றர் மூடப்பட்ட நிலப்பகுதிக்கான அளவு பொதுவாக இந்த அக்கறைகளை நிறைவேற்றுவதாக இருத்தல் வேண்டும். நிலத்திலிருந்து உட்கூரைக்கான உயரம் முக்கியமான அம்சமாகும். காற்று சுழற்சியை பெற்றுக் கொள்வதற்கு உஷ்ண மற்றும் ஈரப்பதனான காலநிலைகளில் அதிக உயரமானதாக இருத்தல் வேண்டும். அதேவேளை, குளிர் காலநிலைகளில் குறைந்த உயரத்திலான உட்கூரை பொருத்தமானது. ஏனெனில், உஷ்ணம் அதிகளவில் பரவுவதற்கு இடத்தை வழங்குவதற்கே இந்த நிலை தேவையாக இருக்கும். உள்ளக தரையிலிருந்து, உட்கூரைக்கான உயரம் ஆகக் குறைந்த இரண்டு மீற்றர்கள் உயரமாக இருத்தல் வேண்டும். சூடான காலநிலை நிலவும் சந்தர்ப்பத்தில், உணவுத் தயாரிப்பு மற்றும் சமைத்தலுக்கு புற இடங்கள் பயன்படுத்தப்படலாம். குளிர் கால இரவுகள் மற்றும் குளிர்காலத்திலிருந்து, உஷ்ணம் நிறைந்த நாட்கள் மற்றும் கோடை காலத்திற்கான காலநிலை மாற்றங்களை உள்வாங்கக் கூடியதாக

உறைவிடத் தீர்வுகள் அமைதல் வேண்டும். முழுமையான உறைவிடத்திற்கான மூலப்பொருட்களை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில், ஆகக் குறைந்த மூடப்பட்ட பகுதியை உறுதி செய்வதற்கு கூரைக்கான மூலப்பொருட்கள் வழங்கப்படும் நடவடிக்கைக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். விளைவான வேறு காலநிலையிலிருந்து தேவையான பாதுகாப்பை, அந்தரங்கத் தன்மையை மற்றும் கண்ணியத்தினை வழங்காது. எனவே, வெகுவிரைவில் இந்த தேவைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).

2. **கால அளவு:** அனர்த்தத்திற்குப் பின்னர் உடனடியாக, குறிப்பாக மோசமான காலநிலையின் போது, உறைவிட மூலப்பொருட்கள் தயாராகக் கிடைக்கக் கூடிய நிலையில் இல்லாத போது, நபரொருவருக்கு 3.5 சதுர மீற்றர் மூடப்பட்ட பகுதியானது வாழ்க்கையை காப்பாற்றுவதற்கும், போதிய குறுகிய கால உறைவிடத்தை வழங்குவதற்கும் பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களின் உடல் நலனில் ஏற்படும் தாக்கங்களை குறைப்பதற்கு மூடப்பட்ட பகுதியானது நபரொருவருக்கு 3.5சதுர மீற்றர் என்பதனை இயலுமான வரையில் எட்ட வேண்டும். நபரொருவருக்கு 3.5சதுர மீற்றர் மூடப்பட்ட பகுதியினை வழங்க இயலவில்லை எனின், அல்லது பாதிக்கப்பட்ட/அயல் மக்களினால் பொதுவான இடத்திற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளதாயின், மூடப்பட்ட பகுதியின் அளவு குறைந்துள்ளமையினால் கண்ணியம், உடல் நலன் மற்றும் அந்தரங்கத் தன்மையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து அக்கறை செலுத்த வேண்டும். நபர் ஒருவருக்கு 3.5 சதுர மீற்றரிலும் குறைவான இடத்தினை வழங்குவதற்கான எந்தவொரு தீர்மானமும், பாதிக்கப்பட்ட சமூகத்தின் மீதான மோசமான தாக்கங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளுடன் இணைந்ததாக சுட்டிக்காட்டப்படல் வேண்டும். அதிகரித்த காலப்பகுதிக்கு, வேறுபட்ட பருவ காலநிலைகளின் ஊடாக மற்றும் பல வருடங்களுக்கு போதிய உறைவிடத்தினை வழங்குவதற்கு தற்காலிக அல்லது இடைத்தங்கல் உறைவிடத் தீர்வுகள் தேவையாக இருக்கும். உள்ளூர் அதிகாரிகளினால் அல்லது வேறு நபர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு திட்டங்களானது, தற்காலிக அல்லது இடைத்தங்கல் உறைவிடங்கள் நிரந்தரமான வீடமைப்புக்களாக மாறாது இருப்பதனை உறுதி செய்ய வேண்டும்.

3. **கலாசார பயிற்சிகள், பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத் தன்மை:** மூடப்பட்ட வசிக்கும் இடத்தின் பயன்பாட்டிற்கான ஏற்கனவே உள்ள உள்ளூர் செயற்பாடுகளின் (உதாரணமாக உறங்குவதற்கான ஒழுங்குகள் மற்றும் அதிகரித்த குடும்ப உறுப்பினர்களுக்கான தங்குமிடங்கள்) அடிப்படையில் தேவையான மூடப்பட்ட பகுதியினை வெளிப்படுத்த வேண்டும். பலவீனமான குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அவ்வாறான தனிநபர்களுக்காக வருந்துபவர்களை உள்ளடக்கி கலந்தாய்வு முன்னெடுக்கப்படல் வேண்டும். தனிப்பட்ட குடும்ப உறைவிடத்திற்குள் உள்ளக உப பிரிவுகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். சேகரிப்பு தங்குமிடங்களில், சம்பந்தப்பட்ட குடும்பங்களை குழுவாக்கல், மூடப்பட்ட பகுதிகளுக்குள்ளான நன்கு திட்டமிடப்பட்ட பிரவேச வழிகள் மற்றும் தனிப்பட்ட மற்றும் குடும்ப இடங்களை காட்சிப்படுத்துவதற்கான மூலப்பொருட்கள் என்பன போதிய தனிப்பட்ட அந்தரங்கத் தன்மை மற்றும் பாதுகாப்பான வசதியை வழங்க முடியும். போதிய இடம் மற்றும் அந்தரங்கத் தன்மையை

உறுதி செய்யும் உளச்சமூக பயன்கள், அதிக சனத்தொகை நெருக்கடியை குறைப்பதற்கான நடவடிக்கைகள் தனிப்பட்ட குடும்ப உறைவிடங்கள் மற்றும் தற்காலிக இணைந்த தங்குமிடங்கள் என்பவற்றில் முன்னெடுக்கப்படல் வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **குடும்ப மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள்:** உறங்குதல், சுத்தம் செய்தல் மற்றும் ஆடை அணிதல், குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் சுகவீனம் அடைந்தோர்களை பராமரித்தல், உணவு, நீர், வீட்டுப் பொருட்கள் மற்றும் வேறு முக்கியமான பொருட்களை சேமித்தல், அவசியமாயின் வீட்டிற்குள் சமைத்தல் மற்றும் உணவுண்ணல் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடல் போன்றவற்றுக்கு இடவசதியினை வழங்கக் கூடியதாக மூடப்பட்ட பகுதி இருத்தல் வேண்டும். மூடப்பட்ட பகுதியை திட்டமிடல் என்பது, முக்கியமாக திறந்த மற்றும் உப பிரிவுகளுக்கான இடமானது, உள்ளக இடம் மற்றும் வேறு இணைந்த புறப் பகுதியின் பயன்பாட்டினை அதிகரிப்பதாக இருத்தல் வேண்டும்.

5. **உறைவிடத் தீர்வுகள், மூலப்பொருட்கள் மற்றும் நிர்மாணம்:** உள்ளூரில் அனர்த்தத்திற்குப் பின்னரான உறைவிடத் தெரிவுகள் தயாராக இல்லாத சந்தர்ப்பங்களில், போதியதாக இல்லாத சந்தர்ப்பங்களில் அல்லது உள்ளூர் இயற்கைச் சுற்றுச் சூழலுக்கு நிலைத்திருக்கக் கூடியதாக இல்லாத சந்தர்ப்பத்தில் குடும்ப கூடாரங்கள், உறைவிடத் தொகுதிகள், மூலப்பொருட்களின் தொகுதிகள் அல்லது நூலிழையால் ஆக்கப்பட்ட கட்டடங்கள் என்பன உள்ளடங்கலாக வரையறுக்கப்பட்ட உறைவிடத் தீர்வுகள் வழங்கப்படல் வேண்டும். அவசரகால நிலைகளின் போதான உறைவிடம் அமைத்தலுக்கு நெகிழிகள் வழங்கப்படுகின்றன. அதனுடன், கயிறுகள், கருவிகள், பொருத்தல் மற்றும் மரத் தூண்கள் அல்லது உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்டவை போன்ற உதவிகரமான மூலப்பொருட்களும் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பொருட்கள் அல்லது வரையறுக்கப்பட்ட உறைவிடத் தீர்வுகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச விளக்கக் குறிப்புக்கள் மற்றும் தரங்களை எட்ட வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். அடிப்படை உறைவிடத்திற்கான ஒரு பகுதி மூலப்பொருட்கள் மாத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் (உ-ம். நெகிழிகள்), தேவையான பொருட்கள் (உ-ம், வடிவமைத்தலுக்கான மரத்தூண் -கள்) வழங்கப்பட்டதன் பின்னர் உள்ளூர் பொருளாதாரம் அல்லது இயற்கைச் சுற்றுச் சூழல் மீதான சாத்தியமான மோசமான விளைவுகள் தொடர்பில் மதிப்பீட்டினை முன்னெடுத்து, தணித்தல் நடவடிக்கையை எடுக்கவும். தமது உறைவிடங்களை பராமரிப்பதற்கு மற்றும் திருத்துவதற்கு பாதிக்கப்பட்ட மக்களின் தொழில் நுணுக்க மற்றும் நிதி இயலுமையையும், மூலப்பொருட்கள் மற்றும் தொழில் நுணுக்கங்களின் விவரக் குறிப்புக்களையும் வழங்கல் வேண்டும் (உணவு சாராத விடயங்கள் தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). உறைவிடத் தீர்வுகள் தொடர்ரான செயற்பாடுகள் நீண்டகாலத்திற்கானதாக எஞ்சியுள்ளமையை உறுதி செய்வதற்கான தொடர்ச்சியான கண்காணிப்பு முன்னெடுக்கப்படல் வேண்டும்.

6. **பங்குபற்றல் வடிவம்:** பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினதும் அனைத்து உறுப்பினர்களும் வழங்கப்பட வேண்டிய உறைவிட உதவியினை தீர்மானிக்கும்

நடவடிக்கையில் இயன்றளவில் உள்வாங்கப்படல் வேண்டும். மூடப்பட்ட வாழ்விடத்திற்குள் அதிகளவான நேரத்தினை வழமையாக கழிக்கும் குழுக்கள் அல்லது தனிநபர்களின் கருத்துக்கள் மற்றும் விசேட பிரவேசத் தேவைகள் உள்ளவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். நடைமுறையில் உள்ள வழமையான வீடுகள் தொடர்பான மதிப்பீடுகளின் மூலம் இந்த தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். நிர்மாணத்திற்கான பழக்கமற்ற “நவீன” வடிவங்கள் மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதற்கான மூலப்பொருட்களின் சாதக மற்றும் பாதகத் தன்மைகள் தொடர்பில் குடும்பங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் (மிக முக்கியமான தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

7. **வெப்பமான, ஈரப்பதனான காலநிலைகளில்:** காற்றோட்டத்தை அதிகரிக்கும் வகையில் மற்றும் நேரடியான சூரிய ஒளி புகுதலை குறைப்பதனை இலக்கு வைத்ததாக உறைவிடங்கள் அமைக்கப்படுவதுடன், வடிவமைக்கப்படல் வேண்டும். கடும் காற்று வீசாத இடங்களில் பாரிய தொங்கலுடன் மழைநீர் வடிகாலுக்கான நியாயமான சாய்வினை கொண்டதாக கூரை இருத்தல் வேண்டும். உறைவிடத்தின் நிர்மாணம் குறைந்த எடையுடையதாக இருத்தல் வேண்டும். அத்துடன் குறைந்த வெப்ப இயலுமையும் தேவையாக இருக்கும். மூடப்பட்ட பகுதிக்கு நீர் உட்புகுவதற்கான அச்சுறுத்தலை குறைப்பதற்கு அதிகரிக்கப்பட்ட நிலங்கள் போதியளவு மேற்தள நீர் வடிகால் என்பது உறைவிடத்தினைச் சூழ்ந்ததாக உறுதி செய்யப்படல் வேண்டும்.

8. **சூடான, உலர்ந்த காலநிலைகளில்:** இரவு மற்றும் பகல் பொழுதில் வெப்பநிலைகளில் ஏற்படும் மாற்றத்தின் உயர் வெப்ப இயலுமையை தாங்கக் கூடியதாக, அதற்கு மாறானதாக குளிர் மற்றும் வெப்பத்தினை உள்ளே ஏற்படுத்தக் கூடியதாக அல்லது போதிய உள்ளடக்கலுடன் கட்டட நிர்மாணம் அமைதல் வேண்டும். அதிர்வு அச்சுறுத்தல்கள் உள்ள பகுதிகளில் உறுதியான நிர்மாணத்தின் கட்டமைப்பு வடிவம் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். வெறும் பிளாஸ்டிக் நெகிழிகள் அல்லது கூடாரங்கள் இருக்குமாயின், அடுக்குகளுக்கு இடையில் வெப்ப கதிர்வீச்சினை குறைப்பதற்கு காற்றோட்டமுடைய இரட்டை நிறமுள்ள கூரைகள் வழங்கப்படல் வேண்டும். யன்னல் மற்றும் கதவுகள் திறக்கும் அளவு காற்று வீசும் திசைக்கு எதிரான -தாக இருத்தல் வேண்டும். இதன் மூலம், உஷ்ணக் காற்றுக்களால் சூடாதல் மற்றும் உஷ்ண கதிர்வீச்சினால் சூடாதலை தவிர்க்க முடியும். தூசு மற்றும் நோய் நுண்மப் பரப்பிகள் உருவாதலை குறைக்கக் கூடியதாக மேலதிக புற வசதிகள் நிலத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

9. **குளிர் காலநிலைகளில்:** நாள் முழுவதிலும் பயன்படுத்தப்படும் உறைவிடங்களுக்கு உயர் வெப்ப திறனுடனான உறுதியான நிர்மாணங்கள் அவசியமாகும். இரவு நேரங்களில் மாத்திரம் பயன்படுத்தப்படும் உறைவிடங்களுக்கு குறைந்த வெப்ப திறனுடனான உறுதியற்ற நிர்மாணங்கள் மற்றும் கணிசமான காப்பு என்பன மிகவும் பொருத்தமானவை. நில வெப்பமாக்கிகள் அல்லது சமையல் அடுப்புக்களுக்கு போதிய காற்றோட்டத்தை வழங்கும் அதேவேளையில், தனிப்பட்ட வசதியை உத்தேசித்து, விசேடமாக கதவு மற்றும் யன்னல்களுக்கு அருகிலானதாக காற்று வீசுதலை குறைத்தல். இவ்வாறான உறைவிடங்களுக்கு அடுப்புக்கள் அல்லது வேறு வகையிலான

நில வெப்பமாக்கிகள் மிகவும் அத்தியவசியமானவையாகவும் மற்றும் மிகவும் பொருத்தமானவையாகவும் அவை இருக்கும். அடுப்புக்கள் அல்லது வெப்பமாக்கிகளை பயன்படுத்துவதனால் ஏற்படக் கூடிய சாத்தியமான தீ ஆபத்துக்களை மதிப்பீடு செய்வதுடன், தணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் (உணவு சாராத விடயங்கள் தரம் 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). மேற்பரப்பு நீர் வடிகால் என்பது உறைவிடத்தைச் சூழ்ந்ததாக வழங்கப்படல் வேண்டும். மழை அல்லது மூடப்பட்ட பகுதிக்குள் வருவதனால் பனியுருகல் என்பவற்றினால் நீருக்கு ஏற்படும் ஆபத்துக்களை குறைப்பதற்கான நிலம் பயன்படுத்தப்படல் வேண்டும். நிலம் ஊடாக உடல் வெப்பம் இழக்கப்படுவது நிலமானது காக்கப்படுவதன் மூலம் மற்றும் காக்கப்பட்ட படுக்கை விரிப்புக்கள், மெத்தைகள் அல்லது உயரமான படுக்கைகள் மூலம் குறைக்கப்படல் வேண்டும் (உணவு சாராத விடயங்கள் தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

10. **காற்றோட்டம் மற்றும் நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு:** ஆரோக்கியமான உள்ளகச் சுற்றுச் சூழலை பேணுவதற்கு, வீட்டிற்குள்ளான அடுப்புக்களில் இருந்து வெளிவரும் புகையை குறைப்பதற்கு, சுவாசத் தொற்று மற்றும் கண் பார்வை பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு மற்றும் துளித் தொற்றின் காரணமாக உருவாகும் காசநோய் போன்ற நோய்கள் பரவுவதனை தடுப்பதற்கு தனிப்பட்ட குடும்ப உறைவிடங்கள் மற்றும் பாடசாலைகள், சுகாதார பராமரிப்பு வசதிகள் போன்ற பொதுக் கட்டடங்களுக்கு இடையில் போதிய காற்றோட்டம் வழங்கப்படல் வேண்டும். உள்ளூர் கட்டட செயற்பாடுகள், இடம்பெயர்ந்த மக்களால் பயன்படுத்தப்படும் உறைவிட வகைகள் மற்றும் மூலப்பொருட்கள் தெரிவு என்பன நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடுகளை தெரிவிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - தொடர்பு நோய்களின் கட்டுப்பாடு தரம் 1 மற்றும் நோய் நுண்மப் பரப்பிகள் கட்டுப்பாடு தரங்கள் 1-3ஐப் பார்க்கவும்).

உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 4: நிர்மாணம்

உள்ளூர் மட்டத்தில் பாதுகாப்பான கட்டடப் பயிற்சிகள், மூலப்பொருட்கள், நிபுணத்துவம் மற்றும் இயலுமைகள் என்பன பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்ட போது பாதிக்கப்பட்ட மக்களின் ஈடுபாடு மற்றும் உள்ளூர் வாழ்வாதார சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உள்ளூர் வாழ்வாதார சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கு பொருத்தமான பாதுகாப்பான கட்டடப் பயிற்சிகள், மூலப்பொருட்கள் மற்றும் நிபுணத்துவம் என்பவற்றிற்கு பாதிக்கப்பட்ட மக்கள், உள்ளூர் கட்டட நிபுணர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஈடுபடுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).
- நிர்மாணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இயலுமை, தகைமை அல்லது சந்தர்ப்பம் இல்லாத பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக உதவி அல்லது வளங்களுக்கான பிரவேசத்தை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).

- கட்டமைப்புச் சார்ந்த சவால்கள் மற்றும் பலவீனத் தன்மைகளை பொருத்தமான நிர்மாணம் மற்றும் மூலப்பொருட்கள் விபரக்குறிப்புக்களின் மூலம் குறைத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 4-5ஐப் பார்க்கவும்).
- மூலப்பொருட்கள் மற்றும் பணியின் தரம் தொடர்பிலான ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களை எட்டல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 5-6ஐப் பார்க்கவும்).
- மூலப்பொருட்கள், தொழிலாளர், தொழில் நுணுக்க உதவி மற்றும் கட்டுப்பாட்டு அனுமதிகள் என்பவற்றை பொருத்தமான ஏலமிடல், கொள்முதல் மற்றும் நிர்மாண நிர்வாக செயற்பாடுகளின் ஊடாக முகாமை செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).
- உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக உள்ள கருவிகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி பராமரித்தலை செயற்படுத்துவதுடன், தனிப்பட்ட வீட்டு உறைவிடங்களை மேம்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பான கட்டட செயற்பாடுகள் மற்றும் தரங்களுக்கு பொருத்தமானதாக அனைத்து நிர்மாண நடவடிக்கைகளும் அமைதல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-7ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் ஈடுபாட்டினை நிர்மாண நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன், உள்ளூர் வாழ்வாதார சந்தர்ப்பங்களையும் அதிகரிக்கின்றன (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2, 8ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் பங்குபற்றல்:** உறைவிட மற்றும் குடியிருப்பு நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட மக்களின் பங்குபற்றுதலானது வீடமைப்பு மற்றும் குடியிருப்புக்கள் திட்டமிடப்பட்டுள்ள நடைமுறையில் உள்ள பயிற்சிகளினால், நிர்மாணிக்கப்பட்டு, பேணப்படல் வேண்டும். விசேடமாக நிர்மாணப் பணிகள் தொடர்பான திறன்கள் அல்லது அனுபவங்கள் போதியதாக இல்லாத தனிநபர்களுக்கான திறன் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் தொழிற்பயிற்சி திட்டங்கள் என்பன நிர்மாணத்தின் போது பங்குபற்றுதலுக்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கும். உறைவிடம் மற்றும் நிர்மாணப் பணிகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பயிற்சிகளில் அனைத்து வயதுப் பிரிவினையும் சேர்ந்த பெண்கள் பங்குபற்றுவதற்கு ஊக்கமளிக்கப்படல் வேண்டும். பௌதீக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இயலுமை குறைந்தவர்கள் அல்லது விசேட தொழில் நுணுக்க உதவி தேவையாக உள்ளவர்களிடமிருந்தான பங்களிப்பில், இடத்தை கண்காணித்தல் மற்றும் சரக்குப் பொருட்களின் கட்டுப்பாடு, சிறுவர் பராமரிப்பு, தற்காலிக தங்குமிடம் அல்லது நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உணவு தயாரித்தல் மற்றும் நிர்வாக உதவி என்பன உள்ளடங்கும். பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் நேரம் மற்றும் தொழிலாளர் வளங்கள் தொடர்பான வேறு நிபந்தனைகளும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். தன்னார்வ சமுதாய தொழிலாளர் குழுக்கள் அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட தொழிலாளரிடமிருந்து பெறப்படும் உதவியின் பகுதியானது தனிப்பட்ட குடும்பங்களின் பங்களிப்பினை ஈடு செய்வதாக அமையும். தமது உறைவிடத்தினை நிர்மாணிப்பதற்கான உதவியைத் தேடிச் செல்வதில் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படக் கூடிய குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல் பெண்களுக்கு

உள்ளமையினால் பெண்கள் தலைமையிலான குடும்பங்களிற்கு உதவுவதற்கு இவ்வாறான ஆதரவுகள் அத்தியாவசியமானவை (மிக முக்கியமான தரம் 1, பாதுகாப்பு கோட்பாடு 2 மற்றும் உணவல்லாத விடயங்கள் தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இயலாத நடமாடும் சிக்கலுடைய நபர்கள், வயதான மக்கள் மற்றும் வேறு இயலாதவர்களுக்கும் உதவி தேவையாக இருக்கும்.

2. **தொழில் நுணுக்க நிபுணத்துவம் மற்றும் அனுபவம்:** பொருத்தமான தொழில் நுணுக்க வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் முகாமைத்துவ நிபுணத்துவம் என்பன திறன்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் புரிந்துணர்வை ஈடு செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். அத்துடன், கட்டமைக்கப்பட்ட தொழில் நுணுக்க மற்றும் கட்டுப்பாடுகள் நடவடிக்கைகளுக்கான அனுபவத்தை வழங்க வேண்டும் (மிக முக்கியமான தரம் 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). பருவகால அல்லது சுழற்சி பேரழிவுகளுக்கு இலக்காகக் கூடிய இடங்களில், பொருத்தமான முன் அனுபவங்கள் உள்ள தொழில் நுணுக்க நிபுணர்களின் ஈடுபாடு, உள்ளூர் தீர்வுகள் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த செயற்பாடுகள் என்பன வடிவமைப்பு மற்றும் நிர்மாணச் செயற்பாட்டை தெரிவிக்கக் கூடும்.

3. **மூலப்பொருட்கள் மற்றும் தொழிலாளர் ஆதாரமாக்குதல்:** தனியா-னதாக அல்லது முன்திட்டமிடப்பட்ட தொகுதியாக உறைவிடத் தீர்வுகள் அல்லது மூலப்பொருட்கள் மற்றும் கருவிகளின் துரித ஏற்பாடானது, பாதிக்கப்பட்ட மக்கள் தாமாகவே உறைவிடத்தை நிறுவுவதற்கான அல்லது கட்டுவதற்கான இயலுமையை வழங்கும். இயலுமான சந்தர்ப்பங்களில் கட்டட மூலப் பொருட்களின் உள்ளூர் கொள்முதல், விசேடமான கட்டட திறன்கள் மற்றும் துரித சந்தை மதிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகள் மூலம் வெளிப்பட்ட உடல் உழைப்பு தொழிலாளர்கள் ஊடாக உள்ளூர் வாழ்வாதாரங்களுக்கு உதவி அளிக்கப்படல் வேண்டும். உள்ளூர் ஆதாரமாக்கலானது உள்ளூர் பொருளாதாரம் அல்லது இயற்கை சுற்றுச் சூழலில் குறிப்பிடத்தக்க மோசமான தாக்கத்தை ஏற்படுத்துமாயின் பின்வரும் விடயங்கள் அவசியமாகும்: பல்வகையான வளங்களை பயன்படுத்தல், மாற்று மூலப்பொருட்கள் அல்லது உற்பத்தி செயற்பாடுகள், பிராந்திய ரீதியாக அல்லது சர்வதேச ரீதியாக ஆதாரமாக்கப்பட்ட பொருட்கள், அல்லது தனியுரிம உறைவிட அமைப்புக்கள் (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). சேதமடைந்த கட்டடங்களின் சிதைவுகளில் இருந்து மீள்பயன்பாட்டுக்கு பொருட்களை அடையாளங் காண்பதற்கான உரிமையும் மேம்படுத்தப்படல் வேண்டும்.

4. **அனர்த்த தவிர்ப்பு மற்றும் அபாய குறைப்பு:** தெரிந்த தப்ப வெப்ப நிலை மற்றும் இயற்கை பேரழிவுகளுடன் சீரானதாக கட்டமைப்பு விரிவாற்றல் அமைதல் வேண்டும். அத்துடன், காலநிலை மாற்றத்தின் உள்ளூர் தாக்கங்களை அடையாளப்படுத்துவதனை உள்வாங்குவது தொடர்பிலும் கவனஞ் செலுத்தல் வேண்டும். அனர்த்தத்தின் காரணமாக கட்டட தரங்கள் அல்லது கட்டட செயற்பாடுகள் தொடர்பிலான மாற்றங்கள், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாய்வு முன்னெடுக்கப்பட்ட பின்னரே பிரயோகிக்கப்படல் வேண்டும்.

5. **பாதுகாப்பான பொதுக் கட்டட வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்:** பாடசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு வசதிகள் போன்ற தற்காலிக மற்றும்

நிரந்தர பொதுக் கட்டடங்கள் அனர்த்தத்திற்கு ஈடு கொடுக்கக் கூடியதாக மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் பிரவேசத்தை உறுதி செய்யக் கூடியதாக நிர்மாணிக்கப்படல் வேண்டும் அல்லது திருத்தி அமைக்கப்படல் வேண்டும். இவ்வாறான வசதிகள் நடமாடும் சிக்கல் உள்ளவர்கள், பார்க்கும் அல்லது தொடர்-பாடும் திறன் அற்றவர்களுக்கான பிரவேச தகுதிகள் உள்ளடங்கலாக துறை சார்ந்த நிர்மாணத் தரங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு பொருத்தமானதாக அமைதல் வேண்டும். இவ்வாறான கட்டடங்களில் திருத்த வேலைகள் அல்லது கட்டுமாணம் என்பது பொருத்தமான அதிகாரிகளுடனான கலந்தாய்வு மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சேவை உட்கட்டமைப்பு மற்றும் பெற்றுக் கொள்ளக் கூடிய பராமரிப்பு மூலோபாயம் என்பவற்றின் அடிப்படையில் அமைதல் வேண்டும் (கல்வியில் INEE அடிப்படைத் தரங்கள்: முன்னாயத்தம், மறுசீரமைப்பு, மீளமைப்பைப் பார்க்கவும்).

6. **நிர்மாணத் தரங்கள்:** முக்கியமான பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு தகுதிகள் எட்டப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி-களினால் நிர்மாணம் தொடர்பான தரங்கள் மற்றும் வழிகாட்டிகள் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். பிரயோகிக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் உள்ளூர் அல்லது தேசிய கட்டடங்கள் கோவைகள் பாரம்பரியமாக பின்பற்றப்படாத அல்லது அமுல்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் அதிகரிக்கும் இணக்கம் ஒப்புக் கொள்ளப்படல் வேண்டும். உள்ளூர் வீடமைப்பு கலாசாரம், தட்ப வெப்ப நிலை, வளங்கள், கட்டடங்கள் மற்றும் பராமரித்தல் இயலுமைகள், பிரவேசிக்கும் தன்மை மற்றும் செலவிடும் தன்மை என்பவற்றை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.

7. **கொள்முதல் மற்றும் நிர்மாண முகாமைத்துவம்:** நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு நிர்மாண அட்டவணை வடிவமைக்கப்படல் வேண்டும். இலக்கு வைக்கப்பட்ட, பூர்த்தி செய்யப்பட்ட தினங்கள், குறிப்பிடத்தக்க உறைவிடம் மற்றும் குடியிருப்பு தீர்வுகளில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்படல் மற்றும் பருவகால காலநிலை வகையின் ஆரம்பம் என்பன இந்த அட்டவணையில் முக்கிய மைல்கற்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். மூலப்பொருட்கள், தொழிலாளர் மற்றும் இட மேற்பார்வை போன்றவற்றுக்கு பொறுப்பான, பயனுறுதி மிக்க மற்றும் நம்பகமான விநியோகச் சங்கிலியும் நிர்மாண முகாமைத்துவ முறையும் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். இதில் மூல ஆரம்பப் புள்ளியில் இருந்து, தேவைப்படும் என்ற அந்தந்த தளங்களுக்கு ஆதாரமாக்கல், கொள்முதல், போக்குவரத்து, கையாளல் மற்றும் நிர்வாகம் என்பன உள்ளடங்கல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு: உணவு பரிமாற்றங்கள் தரம் 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

8. **மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பு:** ஆரம்ப உறைவிட மறுசீரமைப்புக்கள் வழமையாக ஆகக் குறைந்த மட்டத்திலான மூடப்பட்ட இடம் மற்றும் மூலப்பொருட்கள் உதவியை வழங்குவதனால், பாதிக்கப்பட்ட மக்கள் வழங்கப்பட்ட மூடப்பட்ட இடத்தின் அளவு அல்லது தரத்தினை மேம்படுத்துவதற்கு மாற்று வழிகளை நாட வேண்டிய தேவையுள்ளது. பயன்படுத்தப்பட்ட நிர்மாணத்தின் வடிவம் மற்றும் மூலப்பொருட்கள் தனிப்பட்ட குடும்பங்கள் உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக உள்ள கருவிகள் மற்றும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தமது நீண்ட காலத் தேவைகளை எட்டுவதற்கு உறைவிடத்தை மேம்படுத்தவும், பராமரிக்கவும் தலைப்படுகின்றனர் (உணவல்லாத விடயங்கள் தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 5: சுற்றுச் சூழல் தாக்கம்

பயன்படுத்தப்பட்ட உறைவிடம் மற்றும் குடியிருப்பு தீர்வுகள் மற்றும் மூலப்பொருட்களை ஆதாரமாக்கல் மற்றும் நிர்மாண உத்திகள் என்பன உள்ளூர் இயற்கைச் சூழல் மீதான மோசமான தாக்கத்தை குறைத்துள்ளன.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உள்ளூர் இயற்கை சுற்றுச் சூழல் மற்றும் சுற்றுச் சூழல் ஆபத்துக்கள் மற்றும் பலவீனத் தன்மைகள் தொடர்பான மோசமான தாக்கத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட மக்களின் தற்காலிக அல்லது நிரந்தர குடியிருப்புக்களை திட்டமிடும் போது கிடைக்கக் கூடியதாக உள்ள உள்ளூர் இயற்கை வளங்களின் அளவு தொடர்பில் கவனஞ் செலுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).
- பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை எட்டுவதற்கான உள்ளூர் இயற்கை சுற்றுச் சூழல் வளங்களை முகாமை செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).
- நிர்மாணப் பணிகளுக்கான மூலப்பொருட்கள் மற்றும் கட்டட செயற்பாடுகளுக்கான உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் உள்ளூர் இயற்கை சுற்றுச் சூழல் வளங்களில் ஏற்படும் மோசமான தாக்கத்தை குறைத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 3-4ஐப் பார்க்கவும்).
- நீர் தேக்கத்தை அதிகரிப்பதற்கான, மண் பாதிக்கப்படுவதனை குறைப்பதற்கான மற்றும் நிழல் வழங்குவதற்கான மரங்கள் மற்றும் வேறு தாவரங்களை வளர்த்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- மேலும் தேவையாக இல்லாதபட்சத்தில், தற்காலிக சமுதாய குடியிருப்புக்களின் இடத்தை அதன் மூல நிலைமைக்கு கொண்டு செல்லல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- மீள்குடியேறிய, தங்கும் வசதியளித்த அல்லது தற்காலிக சமுதாய குடியிருப்புக்களை திட்டமிடும் போது, இயற்கைச் சுற்றுச் சூழல் மீதான தாக்கமானது குறைக்கப்படுதல் மற்றும்/அல்லது தணிக்கப்படுதல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-6ஐப் பார்க்கவும்).
- அனைத்து உறைவிடத் தீர்வுகளுக்குமான நிர்மாணச் செயற்பாடு மற்றும் மூலப்பொருட்களை ஆதாரமாக்கல் உள்ளூர் இயற்கைச் சுற்றுச் சூழல் மீதான மோசமான தாக்கத்தை குறைத்துள்ளது மற்றும்/அல்லது தணித்துள்ளது (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்)

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சுற்றுச் சூழல் மதிப்பீடு:** இயற்கை சுற்றுச் சூழல் மீதான அனர்த்தத்தின் தாக்கமானது தேவையான மறுசீரமைப்பு மற்றும் தணித்தல் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். பெரும்பாலான இயற்கை அனர்த்தங்கள், உதாரணமாக, மண்ணரிப்புக்கள், பொதுவாக இயற்கைச் சுற்றுச் சூழலின் தவறான முகாமைத்துவத்தினால் ஏற்படும் நேரடி விளைவாகும். மாற்றாக, அவை கீழ்மட்டப் பகுதிகளில் பருவகால வெள்ளப்பெருக்கு அல்லது இயற்கை சுற்றுச் சூழல் வளங்களின் பற்றாக்குறை போன்ற தற்போதுள்ள சுற்றுச் சூழல் ஆபத்துக்கள் அல்லது பலவீனங்களின் காரணமாகவும் ஏற்படலாம். இந்த ஆபத்துக்களை புரிந்து கொள்ளல் என்பது குடியிருப்பு திட்டமிடலை அறிவிப்பதற்கும், காலநிலை மாற்றத்தின் தாக்கம் உள்ளடங்கலாக தெரிந்து கொண்ட பலவீனங்களின் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக அறிந்து கொள்ளப்பட்டுள்ளமையையும் உறுதி செய்தல்.

2. **சுற்றுச் சூழல் வளங்களின் நிலைத்திருக்கும் தன்மை மற்றும் முகாமைத்துவம்:** மனித வாழ்விடத்தில் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உதவி வழங்க வேண்டிய சுற்றுச் சூழல் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும் போது, இயற்கை சுற்றுச் சூழல் மீதான அவ்வாறான கேள்விகள் தணிக்கப்படல் வேண்டும். இவ்வாறான இயற்கை வளங்கள் கிடைக்கக் கூடிய இடங்களில், சுற்றுச் சூழல் தாக்கத்தை குறைக்கக் கூடியதாக தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள் அமைதல் வேண்டும். கால்நடை மேய்ச்சல், விவசாய உற்பத்தி மற்றும் வேறு இயற்கை வளங்களை தங்கியிருக்கும் வாழ்வாதார உதவி நடவடிக்கைகள் போன்ற நிலைத்திருக்கக் கூடிய வெளியக விநியோகங்களான எரிபொருள் மற்றும் தெரிவுகள் வழங்கப்படுவதுடன், முகாமை செய்யப்படல் வேண்டும். வெகுசில, ஆனால் முகாமை செய்யப்பட்ட பாரிய குடியிருப்புக்கள் பெரும் எண்ணிக்கையிலான சிறிய, இலகுவாக பராமரிக்கப்படாத அல்லது கண்காணிக்கப்படாத கலைக்கப்பட்ட குடியிருப்புக்கள் பெரும்பாலும் சுற்றுச் சூழல் ரீதியாக நிலைத்திருக்கக் கூடியவை. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குவதற்கு இடமளிக்கும் மக்கள் தொகை அல்லது பாதிக்கப்பட்ட பகுதிக்கு நெருக்கமாக குடியேறியுள்ள இயற்கை சுற்றுச் சூழல் வளங்களின் தேவைகள் மீதான தாக்கம் குறித்தும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

3. **நீண்ட கால சுற்றுச் சூழல் தாக்கத்தினை தணித்தல்:** அனைத்து திட்டமிடல் மட்டங்களிலும் இயற்கை சுற்றுச் சூழல் வளங்களின் முகாமைத்துவம் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தொகைக்கு உறைவிடம் வழங்குவதற்கான தேவை உள்ளூர் சுற்றுச் சூழல் வளங்களின் செறிவை குறைப்பதன் மூலம் இயற்கை சுற்றுச் சூழலில் குறிப்பிடத்தக்க மோசமான தாக்கத்தை கொண்டுள்ள சந்தர்ப்பத்தில், நீண்ட கால முயற்சிகள் முழுமையான சுற்றுச் சூழல் முகாமைத்துவம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஊடாக குறைக்கப்படல் வேண்டும். பொருத்தமான சுற்றுச் சூழல் நிறுவனங்களுடனான கலந்தாய்வு பரிந்துரைக்கப்படுகின்றது.

4. **நிர்மாணப் பொருட்களின் ஆதாரமாக்குதல்:** நீர், நிர்மாண மரம், மணல், மண் மற்றும் புற்கள் மற்றும் செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகளை சூடாக்குவதற்கான

எரிபொருள் மற்றும் இயற்கை சுற்றுச் சூழல் வளங்களை ஆதாரமாக்கலின் சுற்றுச் சூழல் தாக்கமானது மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். வழக்கமான பயனர்களை, பிரித்தெடுத்தல் மற்றும் மீளுருவாக்கல் விகிதங்களை மற்றும் இந்த வளங்களின் உரிமைத்துவம் அல்லது கட்டுப்பாட்டை அடையாளங் காணல். விநியோகத்தின் மாற்று அல்லது முழுமையான வளங்கள் உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஆதரவு அளிக்கலாம். அத்துடன், உள்ளூர் இயற்கை சுற்றுச் சூழலில் எந்தவொரு நீண்ட கால மோசமான தாக்கத்தையும் குறைக்கலாம். பல்வகை வளங்களின் பயன்பாடு மற்றும் சிதைவு பொருட்களை மீளப் பயன்படுத்தல், மாற்றுப் பொருட்கள் மற்றும் உற்பத்தி செயற்பாடுகள் என்பன மேம்படுத்தப்படல் வேண்டும். முழுமையான மீள் தாவரமாக்கல் மூலம் இது தணித்தல் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

5. **அரிப்பு:** உறைவிட மற்றும் குடியிருப்புத் தீர்வுகள் மண்ணின் தன்மையை நிலைத்திருக்கச் செய்வதற்கு மரங்கள் மற்றும் வேறு தாவரங்களை தக்க வைக்க வேண்டும். அத்துடன், நிழலுக்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்க வேண்டும். காலநிலையிலிருந்தான பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும். வீதிகள், ஒழுங்கைகள் மற்றும் வடிகால் வலையமைப்புக்களில் இருந்து அரிப்பு மற்றும் வெள்ளப் பெருக்கினை தடை செய்வதற்கு அவ்வாறான அம்சங்களுக்கு இயற்கை வரையறைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். இதனை எட்ட முடியாத பட்சத்தில், சாத்தியமான அரிப்புக்கள் தோண்டியெடுக்கப்பட்ட வடிகால் அமைப்புக்களின் ஊடாக, குழாய் மூல வடிகால் வீதிகளுக்கு கீழேச் செல்லும். அல்லது பூமிக்கு கீழே அமைக்கப்பட்டு நீர் ஓட்டத்தை கட்டுப்படுத்த முடியும் (வடிகால் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

6. **கையளித்தல்:** சுற்றுச் சூழலின் இயற்கையான மீளுருவாக்கமானது, தற்காலிக சமுதாய குடியிருப்புக்களுக்கு உள்ளும், சுற்றியும் பொருத்தமான சுற்றுச் சூழல் புனரமைப்பு செயற்பாடுகளின் ஊடாக பரவலாக்கப்படல் வேண்டும். இவ்வாறான குடியிருப்புக்களை இறுதியாக இடைநிறுத்தும் போது, மீண்டும் பயன்படுத்த முடியாத அல்லது இயற்கை சுற்றுச் சூழல் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அனைத்து பொருட்களும் அல்லது கழிவுகளும் முறையாக அகற்றப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும்.

2. உணவல்லாத விடயங்கள்: ஆடைகள், படுக்கைப் பொருட்கள் மற்றும் வீட்டுக்குரியப் பொருட்கள்

காலநிலை மற்றும் உடல் நலனை பேணுவதற்கான உறைவிடத்திற்கு மிகவும் முக்கியமான தனிப்பட்ட மனிதத் தேவைகளாக ஆடைகள், போர்வைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் தொகை உணவினை தயாரிப்பதற்கு மற்றும் உட்கொள்வதற்கு, வெப்ப வசதி வழங்குவதற்கு, தனிப்பட்ட போஷாக்குத் தேவைகளை எட்டுவதற்கு, உறைவிடங்களை நிர்மாணிப்பதற்கு, பராமரிப்பதற்கு அல்லது திருத்துவதற்கு அடிப்படைப் பொருட்கள் மற்றும் விநியோகங்களுக்கான பிரவேசம் அவசியமாகும் (போஷாக்கு மேம்பாடு தரம் 2 மற்றும் நீர் விநியோகத் தரம் 1 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும், தமது உண்மையான வீடுகள் அமைந்துள்ள இடங்களுக்கு திரும்புவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தாலும், வேறு குடும்பங்களினால் தங்க வசதி வழங்கப்பட்டாலும் அல்லது தற்காலிக சமுதாய குடியிருப்புக்களில் தங்க வைக்கப்பட்டாலும், தனிப்பட்ட மற்றும் வீட்டுக்கான உணவல்லாத விடயங்களின் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டு, பொருத்தமான வகையில் நிறைவேற்றி வைக்கப்படல் வேண்டும். அடுத்ததாக அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், மிகவும் முக்கியமாக தங்குவதற்கு இடமளிக்கும் குடும்பங்களுக்கும் தங்க இடமளிப்பதால் அல்லது அனர்த்தத்தின் தாக்கம் காரணமாக உள்ளூர் பொருளாதாரம் மற்றும் குறித்தப் பொருட்களுக்கான பிரவேசத்தில் ஏற்படும் மேலதிக தடையை ஈடுசெய்வதற்கும் உணவல்லாத விடயங்களின் உதவி அவசியமாக இருக்கும்.

இருப்பினும், உணவல்லாத விடயங்களின் விநியோகம் என்பது பொதுவான பொறுப்புடைய நடவடிக்கையாகும். குறித்த உணவல்லாத விடயங்களுக்காக பணம் அல்லது சான்றுச்சீட்டுக்கள் வழங்கும் போது, உள்ளூர் சந்தைகள் செயற்பாட்டு நிலையில் உள்ளனவா என்பது தொடர்பிலும் கவனஞ் செலுத்தல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு - பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள் தரம் 1ஐப் பார்க்கவும்). தனிப்பட்ட அல்லது குடும்ப பயன்பாட்டிற்கான பொருட்களுக்கு, அதனை எவ்வாறு பயன்படுத்தல் வேண்டும் என்பது தொடர்பில் வழமையாக மேலதிக தகவல் அல்லது அறிவுறுத்தல் அவசியமாக இருக்காது. எவ்வாறாயினும், உறைவிடம் பழுதுபார்த்தல் அல்லது நிர்மாணத்திற்கு ஆதரவளிக்கக் கூடிய விடயங்கள், உதாரணமாக, கட்டட நிர்மாணப் பொருட்கள், பொருத்துதல் மற்றும் கருவிகள் என்பன பொதுவாக பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க பயன்பாட்டிற்கு மேலதிக தொழில் நுணுக்க வழிகாட்டலை நாடி நிற்கும். அதேவேளை, தனிப்பட்ட போஷாக்குத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பொருட்கள், பொருத்தமான போஷாக்கு மேம்படுத்தல் நடவடிக்கைகளின் ஊடாக வழங்கப்படல் வேண்டும் (போஷாக்கு மேம்படுத்தல் தரங்கள் 1-2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

உணவல்லாத விடயங்கள் தரம் 1: தனிப்பட்ட, பொதுவான வீட்டு மற்றும் உறைவிட உதவிப் பொருட்கள்

பாதிக்கப்பட்ட மக்கள் தொகை தமது உடல் நலன், கண்ணியம், பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதற்கு போதிய தனிப்பட்ட, பொதுவான வீட்டு மற்றும் உறைவிட உதவிப் பொருட்களை பெறுதல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பாதிக்கப்பட்ட மக்களின் உணவல்லாத விடயங்களின் தேவைகளினை தனித்தனியாக மதிப்பீடு செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2 மற்றும் நீர் விநியோகத் தரம் 3ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- பணம் அல்லது சான்றுச் சீட்டு உதவியின் ஊடாக, பாதிக்கப்பட்ட மக்களால் எந்த உணவல்லாத விடயங்களை உள்ளூர் மட்டத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது அல்லது பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- வழங்கப்பட்ட தொகுதிக்குள் அனைத்து உணவல்லாத விடயங்களினதும் பொருத்தப்பாடு தொடர்பில் அக்கறை செலுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- அனைத்து உணவல்லாத விடயங்களினதும் ஒழுங்கான, வெளிப்படையான மற்றும் சமமான விநியோகத்தினை திட்டமிடல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- தேவையான வகையில் உறைவிட உதவியின் பயன்பாடு தொடர்பில் அறிவுறுத்தல், தொழில் நுணுக்க வழிகாட்டல் அல்லது மேம்படுத்தல் என்பவற்றை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- அதிகரித்த காலப்பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களின் உணவல்லாத விடயங்களின் வளப்படுதுதலுக்கு திட்டமிடல் (வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஒட்டு மொத்த பாதிக்கப்பட்ட மக்கள் தொகையினதும் மதிப்பீடு செய்யப்பட்ட உணவல்லாத விடயத் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-7ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **தேவைகள் மதிப்பீடு:** ஆடைகள் மற்றும் தனிப்பட்ட போஷாக்கு போன்ற தனிப்பட்ட விடயங்கள், உணவு சேமிப்பு மற்றும் தயாரித்தல் தொடர்பான பொதுவான வீட்டுக்குரிய பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் நெகிழிகள், கயிறு, கருவிகள் அல்லது அடிப்படை கட்டட நிர்மாணப் பொருட்கள் போன்ற உறைவிடத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உதவக் கூடிய பொருட்கள் என்பவற்றின் வெவ்வேறான தேவைகள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். தனிப்பட்ட மற்றும் சமுதாயத் தேவைகளிற்கு இடைப்பட்டதாக ஒரு வேறுபாட்டை உருவாக்க வேண்டும்.

முக்கியமாக, சமைத்தல் மற்றும் எரிபொருளுக்கு இந்த வேறுபாடு உருவாக்கப்படல் வேண்டும். பழக்கமான, உள்ளூரில் கிடைக்கக் கூடிய உற்பத்திகளை அடையாளங் காண்பதன் ஊடாக உணவல்லாத விடயங்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் மற்றும் இடைத்தங்கல் மக்கள் தொகையின் தனிப்பட்ட மற்றும் வீட்டுக்குரிய பொருட்களினை சேமித்தல் மற்றும் போக்குவரத்து செய்வதற்கு பெட்டிகள், பைகள் அல்லது அதனையொத்த கொள்கலன்களுக்கான தேவைகள் உணவல்லாத விடயங்களின் உதவிகளின் ஒரு கட்டமாக உள்ளடக்கப்படுவது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். உணவல்லாத விடயங்களின் பகுதியானது ஒட்டுமொத்த அனர்த்த மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாகும் (மிக முக்கியமான தரங்கள் 1-3 மற்றும் உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

2. **சமுதாய வசதிகள்:** பாடசாலைகள் மற்றும் வேறு சமுதாய வசதிகளுக்கு பொருத்தமான வகையில், தனிப்பட்ட போஷாக்கு, சுகாதார, உணவு தயாரித்தல் மற்றும் சமைத்தல், இன்னபிற தேவைகளுக்கான உணவல்லாத விடயங்கள் வழங்கப்படல் வேண்டும். பொழுதுபோக்கு மற்றும் கற்றல் பொருட்களுக்கான அனுமதி கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். உணவல்லாத விடயங்களின் பொருத்தமான பயன்பாட்டுக்கு ஆதரவு வழங்கும் பொது உடல் நலன் மற்றும் போஷாக்கு செய்திகளை உறுதி செய்வதற்கு சுகாதார மற்றும் கல்வித் துறைகளுக்கு இடையிலான உறவு ஸ்தாபிக்கப்படல் வேண்டும் (போஷாக்கு மேம்படுத்தல் தரங்கள் 1-2 மற்றும் கல்வியில் INEE அடிப்படைத் தரங்கள்: முன்னாயத்தம், மறுசீரமைப்பு, மீளமைப்பு என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

3. **உணவல்லாத விடயங்களை ஆதாரமாக்குதல்:** உள்ளூர் பொருளாதாரம் மற்றும் விநியோகச் சங்கிலியில் அனர்த்தங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வழமையாக உணவல்லாத விடயங்களின் வெளியக வளங்களுக்கு தேவையானதாக இருக்கின்றது. அத்துடன், தனிநபர்கள், குடும்பங்கள் அல்லது சமுதாயங்களின் நேரடியான விநியோகத்திற்கும் தேவையானதாக இருக்கின்றது. பழக்கமான உணவல்லாத விடயங்களை உள்ளூரில் அல்லது அயலில் உள்ள பாதிக்கப்படாத பகுதிகளில் இருந்து பெற்றுக் கொள்ள முடியுமா என்பதனை ஆரம்ப தேவைகள் மதிப்பீட்டின் ஒரு அங்கமான துரித சந்தைப் பகுப்பாய்வினால் தீர்மானிக்க முடியும். உள்ளூர் பொருளாதாரமானது தொடர்ந்து செயற்படும் சந்தர்ப்பங்களில், அல்லது ஆதாரமாக்கல் அல்லது விநியோகச் சங்கிலி முகாமைத்துவத்தில் விசேட உதவியின் ஊடாக ஆதரவளிக்கக் கூடிய சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்ட மக்கள் தமது சுய நிவாரண பொருட்களின் தேவைகளை பெற்றுக் கொள்வதற்கு பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டுக்கள் உதவி புரியும் (உணவுப் பாதுகாப்பு, பணம் மற்றும் சான்றுச் சீட்டுக்கள் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). பலவீனமான மக்கள் பாதிக்கப்படவில்லை என்பதனையும், அவர்களுக்கான நிவாரணத் தேவைகளை பூர்த்தி செய்யப்படுவதனையும் உறுதி செய்வதாக குறித்த உதவிகள் திட்டமிடப்படல் வேண்டும்.

4. **நிவாரணத் தொகுதிகள்:** தர விபரக் குறிப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்களின் அடிப்படையில் களஞ்சிய சாலைகளில் உணவல்லாத விடயங்கள் பொதுவாக பொதியிடப்படுவதுடன், முன்நிலைநிறுத்தப்பட்டிருக்கும். குடும்பத்திற்கான தொகுதியில் உணவல்லாத விடயங்களின் அளவு மற்றும் விபரங்கள், வழமையான

குடும்பம் ஒன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களது வயது, பால்நிலை மற்றும் விசேடத் தேவைகள் அவசியமாக உள்ளவர்கள் மற்றும் கலாசார ரீதியாக பொருத்தமானவை என்பவற்றுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

5. **விநியோகம்:** பாதிக்கப்பட்ட மக்கள் தொகையுடனான கலந்தாய்வின் அடிப்படையிலேயே பயனுறுதி மிக்க மற்றும் ஒப்புரவான விநியோக முறைகள் திட்டமிடப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் பங்குபற்ற வேண்டிய விநியோகங்கள் மற்றும் வேறு பதிவு அல்லது மதிப்பீட்டு செயற்பாடு தொடர்பில், அவர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் வேண்டும். முறைசார் பதிவு அல்லது அடையாளம் வழங்குதல் என்பனவும் முன்னெடுக்கப்படல் வேண்டும். விநியோகப் பட்டியலில் இருந்து பலவீனமான தனிநபர்கள் அல்லது குடும்பங்கள் விலக்கப்படாது இருப்பதனையும், தகவல் மற்றும் விநியோகத்தினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதனையும் உறுதி செய்யவும். பதிவு செய்தல் அல்லது விநியோகத்தின் போது ஏற்படும் எந்தவொரு அக்கறைகளை அடையாளப்படுத்துவதற்கும், குறைகளை தெரிவிப்பதற்குமான செயல்முறை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். பாதுகாப்பான பிரவேசம் மற்றும் உணவல்லாத விடயங்களின் பற்றுச்சீட்டுக்கும், உதவியினை பெறுபவர்கள் பாதுகாப்பாக திரும்பிச் செல்வதற்கும் மிகவும் பொருத்தமான விநியோக நிலையங்கள் எவை என்பதனை அறிந்து கொள்வதற்கு சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகளுடன் கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும். நிலப்பரப்பு மற்றும் நடைமுறைகள் உள்ளடங்கலாக நடப்பதற்கான தூரங்கள் மற்றும் உறைவிட உதவிப் பொருட்கள் போன்ற பாரியப் பொருட்களை போக்குவரத்து செய்வதில் உள்ள செலவு சார்ந்த ஊகக் குறிப்புக்கள் என்பன குறித்து கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். விநியோகங்கள் மற்றும் வழங்கப்பட்ட உணவல்லாத விடயங்களின் பயன்பாடு என்பவற்றின் கண்காணிப்பானது, விநி-யோகச் செயற்பாடு மற்றும் உணவல்லாத விடயங்களின் போதுமான தன்மை மற்றும் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கு முன்னெடுக்கப்படல் வேண்டும் (உணவுப் பாதுகாப்பு - உணவு பரிமாற்றங்கள் தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

6. **ஊக்குவிப்பு, அறிவுறுத்தல் மற்றும் தொழில் நுணுக்க வழிகாட்டல்:** தனிப்பட்ட மற்றும் பொதுவான வீட்டுக்குரியப் பொருட்கள், மேலதிக வழிகாட்டல் இன்றி உடனடியாக பயன்படுத்தக் கூடிய வகையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகைக்கு பழக்கமானதாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், நிர்மாணப் பொருட்கள், கருவிகள் மற்றும் பொருத்தல்கள் போன்ற உறைவிட ஆதரவுப் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பொருத்தமானதாக தொழில் நுணுக்க வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல் என்பன வழங்கப்படல் வேண்டும் (உணவல்லாத விடயங்கள் தரம் 5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). பாதுகாப்பான மற்றும் போதுமான அளவு உறைவிடத்தை பழுது பார்ப்பதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் விளக்கும் எளிய விளக்கப்படங்களை தொகுத்தல் கொண்டிருக்கும். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை மற்றும் உள்ளூர் நிர்மாண நிபுணர்கள் ஆகியோர் தேவையான நிர்மாண உத்திகளை நன்கு புரிந்து கொள்வதற்கு தளத்தில் விழிப்புணர்ச்சியை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும் (உதாரணமாக, உறைவிடங்களின் பழுது பார்த்தல் அல்லது அமைத்தல் தொடர்பில் செயல் முறை விளக்கம் வழங்கல்). அனர்த்தத்திற்கு முன்னரான உறைவிடம் மற்றும் குடியிருப்பு வடிவமைப்பு

மற்றும் நிர்மாணத்தில் ஏதேனும் பலவீனம் இருக்குமாயின், அது வீடுகள் சேதமடைவதற்கு அல்லது அழிவடைவதற்கு காரணமாக அமையலாம். அத்துடன், அனர்த்தத்திற்கு தாக்குப் பிடிக்கக் கூடிய உள்ளூரில் சிறந்த செயற்பாடுகள் நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

7. **மீட்பு:** நுகர்வின் அளவு, பயன்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் கால அளவு மற்றும் குறித்த விடயங்களை மீட்பதற்கான பாதிக்கப்பட்ட மக்களின் திறன் என்பவற்றின் அடிப்படையில் நிவாரண விநியோகத்தின் திட்டமிடலானது அமைதல் வேண்டும்.

உணவல்லாத விடயங்கள் தரம் 2: ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள்

தமது தனிப்பட்ட வசதி, கண்ணியம், சுகாதாரம் மற்றும் நலனை உறுதி செய்வதற்கு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் போதிய ஆடைகள், போர்வைகள் மற்றும் படுக்கைப் பொருட்களை கொண்டிருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- குழந்தைகள் மற்றும் பலவீனமானவர்கள் அல்லது ஒதுக்கப்பட்ட தனிநபர்கள் உள்ளடங்கலாக பெண்கள், சிறுமிகள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் என அனைத்து வயதுப் பிரிவினரையும் சேர்ந்தோரின் தனித்தனியான ஆடைத் தேவைகளை அடையாளங் காணல். அத்துடன், பொருத்தமான அளவுகளில் மற்றும் கலாசாரம், பருவம் மற்றும் காலநிலைக்கு பொருத்தமான வகையில் தேவையானவை கிடைப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-5ஐப் பார்க்கவும்).

- பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் போர்வை மற்றும் படுக்கைப் பொருட்களுக்கான தேவைகளை அடையாளங் காணல். அத்துடன், போதிய வெப்ப சக்தி வழங்குவதற்கு தேவையான போர்வைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள் கிடைப்பதனை உறுதி செய்யவும். மேலும், பொருத்தமான உறங்குவதற்கான ஒழுங்குகளை செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-5ஐப் பார்க்கவும்).

- பூச்சிக் கொல்லி அகற்றப்பட்ட படுக்கை வலைகளுக்கான தேவை தொடர்பில் மதிப்பீடு செய்து, தேவையான அடிப்படையில் வழங்கல் (நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு தரங்கள் 1-3ஐப் பார்க்கவும் பக்கம் ???).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- கலாசாரம், பருவம் மற்றும் காலநிலைக்கு பொருத்தமான, சரியான அளவில் ஆகக் குறைந்தது இரண்டு முழுமையான தொகுதி ஆடைகளை அனைத்து பெண்கள், சிறுமிகள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் கொண்டிருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-5ஐப் பார்க்கவும் பக்கம் ???).

- பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் போர்வைகள், போதிய வெப்ப வசதி வழங்கல் மற்றும் பொருத்தமான உறங்குவதற்கான ஒழுங்குகளை உறுதி செய்வதற்கு தேவையான படுக்கைப் பொருட்கள், உறங்கும் விரிப்புக்கள் அல்லது மெத்தைகள் மற்றும் பூச்சிக் கொல்லி அகற்றப்பட்ட படுக்கை வலைகள் என்பனவற்றை கொண்டிருத்தல்

(வழிகாட்டல் குறிப்புக்கள் 2-5 மற்றும் நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு தரங்கள் 1-3 என்பவற்றைப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **ஆடைகள் மாற்றல்:** தமது வெப்ப வசதி, கண்ணியம், சுகாதாரம் மற்றும் நலனை உறுதி செய்யவும் அனைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஆடைகளை மாற்றுவதற்கான பிரவேசம் இருத்தல். இதில் ஆடைகளை சலவை செய்து பயன்படுத்துவதற்காக ஆகக் குறைந்த இரண்டு தொகுதி அத்தியாவசிய ஆடைகள் உள்ளடங்கல் வேண்டும். மிகவும் முக்கியமாக உள்ளாடைகள்.

2. **பொருத்தப்பாடு:** ஆடைகள் (தேவையாயின் பாதணிகளை உள்ளடக்கல்) காலநிலை மற்றும் கலாசார செயற்பாடுகளுக்கு பொருத்தமானதாகவும், தேவைக்கு ஏற்ற அளவில் வழங்கப்படல் வேண்டும். பொருத்தமான ஆடைகளுக்கு மேலதிகமாக குழந்தைகள் மற்றும் 2 வயது வரையான சிறுவர்களுக்கும் போர்வை ஒன்று வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். படுக்கைப் பொருட்களும் கலாசார செயற்பாடுகளுக்கு இணக்கமானதாக மற்றும் தேவையின் அடிப்படையில் தனித்தனியான உறங்குவதற்கான ஒழுங்குகளை வழங்கக் கூடியதாக போதிய அளவில் இருத்தல் வேண்டும்.

3. .**வெப்ப செயல் திறன்:** ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள் தொடர்பான காவலிடல் குணங்கள் குறித்து கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், ஈரப்பதனான அல்லது ஈரமான காலநிலைகளில் குறித்துப் பொருட்களின் மீதான தாக்கத்தின் வெப்ப செயல் திறன் தொடர்பிலும் கவனஞ் செலுத்தல் வேண்டும். தேவையான அளவு வெப்ப செயல் திறன் நிறைவேற்றப்படுவதனை உறுதி செய்வதற்கு ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்களை ஒன்றாக வழங்குவது தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். காப்பளிக்கப்பட்ட படுக்கை விரிப்புக்கள் அல்லது மெத்தைகளை பயன்படுத்தி, நிலத்தினால் ஏற்படும் வெப்ப இழப்பிற்கு எதிராக செயற்படல். மேலதிக போர்வையை வழங்குவதில் இது சிறப்பான செயற்பாடாகும்.

4. **நிலைத்திருக்கும் தன்மை:** வழமையாக அணிவதற்கு மற்றும் நீண்டகால பயன்பாட்டிற்கு ஏற்றதாக நிலைத்திருக்கக் கூடியதாக ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள் இருத்தல் வேண்டும்.

5. **விசேடத் தேவைகள்:** அதிக ஆபத்து உள்ள தனிநபர்களுக்கு, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள் வழங்கப்படல் வேண்டும். இதில் அடங்காமைப் பிரச்சினைகள் உடைய மக்கள், நீண்ட நாட்களாக நோய் வாய்ப்பட்டுள்ள மக்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள், வயதானவர்கள் மற்றும் நடமாடும் சிக்கல் உள்ள தனிநபர்கள் போன்றோர் உள்ளடங்குகின்றனர். குழந்தைகள், சிறுவர்கள் அதிகளவில் நடமாட்டம் தவிர்க்கப்பட்டவர்களாக இருப்பர். வயதானவர்களும் அதிகளவில் வெப்ப இழப்புக்கு இலக்காவர். எனவே, போதிய வெப்ப செயல் திறனை பேணுவதற்கு மேலதிக ஆடைகள், போர்வைகள், மற்றும் இன்னபிற உதவிகள் அவர்களுக்குத் தேவையாக இருக்கும். வயதானவர்கள் மற்றும் சுகவீனமுற்றவர்களின் நடமாட்ட

பிரச்சினைகளை கருத்திற் கொண்டதாக, அவர்களுக்கு மெத்தைகள் அல்லது உயரமான படுக்கைகள் வழங்கப்படல் வேண்டும்.

உணவல்லாத விடயங்கள் தரம் 3: சமைத்தல் மற்றும் உணவு உண்பதற்கான பாத்திரங்கள்

உணவினைத் தயாரிப்பதற்கு மற்றும் சேமிப்பதற்கு, மற்றும் சமைப்பதற்கு, உண்பதற்கு மற்றும் பருகுவதற்கு கலாசார ரீதியாக பொருத்தமான பாத்திரங்கள்/குவளைகளுக்கு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரவேசம் இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உணவு தயாரிப்பதற்கு மற்றும் சேமிப்பதற்கு, மற்றும் சமைப்பதற்கு, உண்பதற்கு மற்றும் பருகுவதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை அடையாளங் காணல். அத்துடன், தேவையின் அடிப்படையில் கலாசார ரீதியாக பொருத்தமானவை கிடைப்பதற்கு வழி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஒவ்வொரு குடும்பத்திற்கும் அல்லது நான்கிலிருந்து, ஐந்து வரையான தனிநபர்கள் இணைந்த குழுவுக்கும் குடும்பத்திற்கு ஏற்ற அளவிலான கைபிடிகள் மற்றும் மூடிகளுடனான இரண்டு சமையல் பானைகள், உணவு தயாரிப்பதற்கு மற்றும் வைப்பதற்கான பாத்திரம், சமையலறை கத்தி மற்றும் இரண்டு கரண்டிகள் என்பன வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் ஒரு கோப்பை, ஒரு கரண்டி அல்லது வேறு உண்பதற்கான உபகரணங்கள் மற்றும் குவளை அல்லது பருகுவதற்கான பாத்திரம் வழங்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **பொருத்தப்பாடு:** சமைத்தல் பொருட்கள் மற்றும் உணவுண்பதற்கான கருவிகளின் தெரிவு கலாசார ரீதியாக பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், பாதுகாப்பான செயற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். பொருட்களை தீர்மானிக்கும் போது பெண்கள் அல்லது உணவுத் தயாரிப்பினை வழமையாக மேற்பார்வை செய்பவர்களுடன் கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும். குடும்பத்திற்குள் வேறுபட்ட குடும்ப குழுக்களுக்கு தனியான சமைத்தல் ஒழுங்குகள் தேவையாக உள்ளவர்கள் அல்லது தயாரித்தலின் போது சில உணவுப் பொருட்களை பிரித்தெடுத்தல் என்பன தொடர்பில் கலாசார செயற்பாடுகளின் ஊடாக சமைக்கும் விடயங்களின் அளவு அறிவிக்கப்படல் வேண்டும். சமைத்தல் மற்றும் உண்பதற்கான பாத்திரங்களின் வகைகள் வயதானவர்கள், மாற்றுத் திறனுடையவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.
2. **மூலப்பொருட்கள்:** அனைத்து பிளாஸ்டிக் பொருட்களும் (வாளி, கிண்ணம், நீர் நிரப்பு கொள்கலன்கள் மற்றும் இன்னபிற), உணவு உண்பதற்கு ஏற்ற

பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அனைத்து உலோகப் பொருட்களும் (கருவிகள், கிண்ணங்கள், தட்டுக்கள் மற்றும் குவளைகள், மற்றும் இன்னபிற) எ.்.கு அல்லது கண்ணாடியினால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

உணவல்லாத விடயங்கள் தரம் 4: அடுப்புக்கள், எரிபொருள் மற்றும் விளக்கு

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான, எரிபொருள் திறன் அடுப்பு மற்றும் எரிபொருள் அல்லது உள்ளக சக்திக்கான பிரவேசத்திற்குரிய விநியோகம், அல்லது சமுதாய சமைத்தல் வசதிகள் வழங்கப்படல். தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பொருத்தமான செயற்கையான வெளிச்ச வசதிகளை வழங்குவதற்கான பொருத்தமான வழிவகைகளுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பாதுகாப்பான, எரிபொருள் திறன் அடுப்புகள் மற்றும் எரிபொருள் அல்லது உள்ளக சக்தி அல்லது சமுதாய சமைத்தல் வசதிகளுக்கான பிரவேசம் என்பவற்றை உறுதி செய்வதன் மூலம் வீட்டில் சமைத்தல் மற்றும் சூடாக்குவதற்கான இடத்தை அடையாளங் காணல் மற்றும் அவற்றை பூர்த்தி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அடுப்புக்களை எச்சரிக்கையாக பயன்படுத்தல் மற்றும் தீ விபத்துக்கள் குறைந்துள்ளமையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3ஐப் பார்க்கவும்).
- எரிபொருள் மற்றும் உள்ளக சக்தி தொடர்பான சுற்றுச் சூழல் ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக நிலைத்திருக்கக் கூடிய வளங்களை அடையாளங் கண்டு, முன்னிலைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- எரிபொருளானது சேகரிக்கப்பட்டு, பாதுகாப்பான இடத்தில், எச்சரிக்கையாக வைக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- செயற்கை ஒளி மற்றும் தீப்பெட்டிகளுக்கான அல்லது பொருத்தமான எரிபொருள் மாற்று வழிகள் அல்லது மெழுகுவர்த்திகள், இன்னபிற போன்ற நிலைத்திருக்கக் கூடிய வீட்டின் தேவைகளை அடையாளங் கண்டு, பூர்த்தி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- தேவையான எரிபொருள் அல்லது உள்ளக சக்திக்கான விநியோகத்துடன் எரிபொருள் திறன் அடுப்புக்களை பாதிக்கப்பட்ட மக்கள் பயன்படுத்துதல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3ஐப் பார்க்கவும்).
- அடுப்புக்களை சுழற்சி முறையில் பயன்படுத்தல் மற்றும் எரிபொருள் சேமிப்புக்களின் போது மக்களுக்கு எதுவிதமான ஆபத்தும் ஏற்படாமை (வழிகாட்டல் குறிப்புக்கள் 4-5ஐப் பார்க்கவும்).

- செயற்கை ஒளி மற்றும் தீப்பெட்டிகளுக்கான அல்லது பொருத்தமான எரிபொருள் மாற்று வழிகள் அல்லது மெழுகுவர்த்திகள், இன்னபிற என்பவற்றை வழங்கி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலைத்திருக்கக் கூடிய வழிகளுக்கு பிரவேசம் இருத்தல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்)

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **அடுப்புக்கள்:** நடைமுறையில் உள்ள செயற்பாடுகளுக்கு அமைய அடுப்புக்களின் விபரக்குறிப்புக்கள் வெளியிடப்படல் வேண்டும். எரிபொருள் திறன் அடுப்புக்களை பயன்படுத்தல், விறகுகளை தயாரித்தல், தீ முகாமைத்துவம், உணவு தயாரிப்பு, பகிர்ந்து சமைத்தல், இன்னபிற உள்ளடங்கலாக சக்தி திறன் மிக்க சமைத்தல் செயற்பாடுகள் மேம்படுத்தப்படல் வேண்டும். சமுதாய தங்குமிடங்களில், பொதுவான அல்லது மத்திய நிலையில் அமைந்த சமைத்தல் வசதிகள் தனிப்பட்ட வீட்டு அடுப்புக்களின் பகுதிக்கு ஆபத்துக்களை குறைக்கவும் மற்றும் வீட்டிற்குள் ஏற்படும் புகையை குறைக்கவும் மிகவும் பொருத்தமாக இருக்கும் (உணவுப் பாதுகாப்பு – உணவுப் பரிமாற்றங்கள் தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).
2. **காற்றோட்டம்:** அருகில் உள்ள பகுதிகளில் வெளியேறும் வாயுக்கள் அல்லது புகையை வெளியேற்றுவதற்கு சுற்றுச் சூழல் மாசடையாது தடுப்பதற்கு அடுப்புக்களில் புகைப்போக்கி பொருத்தப்படல் வேண்டும். போதிய காற்றோட்டத்தை உறுதி செய்வதற்கும் மற்றும் சுவாசத் தொற்றுப் பிரச்சினைகளை குறைப்பதற்கும் காலநிலை குறித்த அக்கறையுடன் புகைபோக்கி அமைக்கப்படல் வேண்டும்.
3. **தீ பாதுகாப்பு:** அடுப்பு மற்றும் உறைவிடத்தின் ஏனைய அம்சங்களுக்கு இடையில் பாதுகாப்பான பிரித்தெடுத்தல் உறுதி செய்யப்படல் வேண்டும். உள்ளக அடுப்புக்கள் எரிபற்றுத் திறன் குறைந்த அடிப்படையில் வைக்கப்படல் வேண்டும். புகைப்போக்கியைச் சூழ்ந்ததாக வெடிக்காத அமைப்புடன் உறைவிடம் என்ற கட்டமைப்பில் இருந்து வெளியக அமைப்பிற்கு இது செல்கின்றது. நுழைவாயிலிருந்து தூரத்தில் அடுப்புக்கள் வைக்கப்படல் வேண்டும். பயன்பாட்டின் போது பாதுகாப்பான பிரவேசத்தை வழங்கக் கூடிய இடத்தில் வைக்கப்படல் வேண்டும்.
4. **எரிபொருளின் நிலைத்திருக்கக் கூடிய வளங்கள்:** விசேடமாக தங்குவதற்கு வசதியளிக்கும் அல்லது அயல் சமுதாயங்களுக்கு இந்த எரிபொருளிலேயே தங்கியுள்ளமையினால் எரிபொருளுக்கான வளங்கள் முறையாக முகாமை செய்யப்படல் வேண்டும். விநியோகத்தின் நிலைத்திருக்கக் கூடிய தன்மையை உறுதி செய்வதற்கு வளங்கள் மீட்கப்படல் வேண்டும். உ-ம், விறகுக்கான மரங்களை நடல். அருகில் உள்ள காடுகளில் இருந்து விறகுக்காக மரங்கள் வெட்டப்படுதலை குறைத்தல் அல்லது தவிர்த்தல். பாரம்பரியமற்ற எரிபொருள் வளங்களுக்கு உதவி வழங்கப்படல் வேண்டும். முக்கியமாக, இந்த நிலை பாதிக்கப்பட்ட மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.
5. **எரிபொருளை சேகரித்தல் மற்றும் சேமித்தல்:** சமைத்தலுக்கான எரிபொருள் சேகரிப்பதற்கான மற்றும் சூடாக்குவதில் உள்ள தனிப்பட்ட பாதுகாப்பு சார்ந்த விடயங்களுக்கான இடங்கள் மற்றும் வழிகள் தொடர்பில்

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடன், முக்கியமாக பெண்கள் மற்றும் சிறுமிகளுடன் கலந்தாய்வு செய்யப்படல் வேண்டும். எரிபொருள் சேகரிப்பதற்கான கேள்வி, விசேடமாக பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் அக்கறை செலுத்துபவர்கள் அல்லது நடமாடும் சிக்கல் உடைய தனிநபர்கள் அல்லது பிரவேச சிக்கலுடைய தனிநபர்கள் போன்ற பலவீனமான மக்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். எரிபொருள் திறன் அடுப்புக்கள் மற்றும் எரிபொருள் வளங்களுக்கான பிரவேசம் உள்ளடங்கலாக குறைந்த தொழிலாளர் திறன் மிக்க எரிபொருள் பயன்பாடு மேம்படுத்தப்படல் வேண்டும். அடுப்பில் இருந்து பாதுகாப்பான தூரத்தில் எரிபொருள் வைக்கப்படல் வேண்டும். அத்துடன், மண்ணெண்ணெய் போன்ற திரவ நிலையிலான எரிபொருட்கள் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு எட்டாத தூரத்தில் வைக்கப்படல் வேண்டும்.

6. **செயற்கை ஒளி:** விளக்குகள் அல்லது மெழுகுவர்த்திகள் நன்கு பழக்கமான மற்றும் தயாரான நிலையில் உள்ள ஒளியினைத் தரும். இருப்பினும், இவ்வாறான பொருட்களை பயன்படுத்தும் போது ஏற்படக் கூடிய தீ விபத்துக்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். தனிப்பட்ட பாதுகாப்புக்கு மற்றும் பொதுவான வெளிச்சம் இல்லாத குடியிருப்புக்களைச் சூழ்ந்த பகுதிகளுக்கு வேறு வகையான செயற்கை ஒளி பெறக் கூடிய வளங்களை வழங்கவும். ஒளி உமிழ் இருமுனையம் (டுநுனு) மற்றும் உள்ளூர் மின்சக்தியை உருவாக்குவதற்கான சூரிய ஒளி அமைப்பு போன்ற சக்தி திறன் மிக்க செயற்கை ஒளி தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

உணவல்லாத விடயங்கள் தரம் 5: கருவிகள் மற்றும் பொருத்துதல்

தமது உறைவிட நிர்மாணம் அல்லது பராமரிப்பு அல்லது சிதைவுக் கூளங்களை அகற்றுவதற்கான பொறுப்புடைய பாதிக்கப்பட்ட மக்கள் தேவையான கருவிகள், பொருத்தல்கள் மற்றும் முழுமையான பயிற்சிக்கான பிரவேசத்தை கொண்டிருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அத்தியாவசிய பராமரிப்பு அல்லது சிதைவுக் கூளங்கள் அகற்றுதலை முன்னெடுப்பதற்கு தமது உறைவிடங்கள் அல்லது சமுதாய வசதிகளை பகுதியாக அல்லது முழுமையாக பாதுகாப்பான முறையில் நிர்மாணிப்பதற்கு பொறுப்பான மக்களின் கருவிகள் மற்றும் பொருத்தல்கள் தொடர்பான தேவைகளை அடையாளங் கண்டு, பூர்த்தி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- சமுதாய அல்லது பகிரப்பட்ட பயன்பாட்டுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் கருவிகள் மற்றும் பொருத்தல்களின் பயன்பாடு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பாக வைத்திருத்தலுக்கான போதிய நுட்பங்கள் உள்ளமையையும், அவை ஏற்றுக்

கொள்ளப்பட்டுள்ளமை மற்றும் பொதுவாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளமையையும் உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).

- நிர்மாணம், பராமரிப்பு அல்லது சிதைவுக் கூளங்கள் அகற்றலில் கருவிகள் பயன்படுத்தப்படும் போது, தேவையான சந்தர்ப்பங்களில், பயிற்சிகள் அல்லது வழிகாட்டல்களை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்). .

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நிர்மாணம், பராமரிப்பு அல்லது சிதைவுக் கூளங்கள் அகற்றல் போன்றவற்றை தேவையின் அடிப்படையில் பாதுகாப்பாக முன்னெடுப்பதற்கு அனைத்து குடும்பங்களுக்கும் அல்லது சமுதாயக் குழுக்களுக்கும் கருவிகள் மற்றும் உபகரணங்களுக்கு போதிய பிரவேசம் உள்ளமை (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- வழங்கப்பட்ட கருவிகள் மற்றும் பொருத்தல்களை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தலுக்கு அனைத்து குடும்பங்கள் மற்றும் சமுதாய குழுக்களுக்கு பிரவேசம் உள்ளமை (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **வழமையான கருவித் தொகுதிகள்:** வழங்கப்பட்ட கருவிகள் மற்றும் பொருத்தல்கள் சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவும் மற்றும் பழக்கமானதாகவும் இருத்தல் வேண்டும். வேறுபட்ட அளவிலான ஆணிகள், துத்தநாகம் பூசப்பட்ட கம்பி மற்றும் கயிறு மற்றும் அமைப்பதற்கான மற்றும் அளவிடுவதற்கான பொருட்கள் போன்ற பொருத்தல்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பொதுக் கட்டடங்களில் பயன்பாட்டிற்கான சந்தர்ப்பங்களில் மற்றும் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் தேவையாக இருக்கும் போது அல்லது குறித்த வளங்களின் அளவு குறைவாக இருக்கும் போது சமுதாயஞ் சார்ந்த கருவிகள் வழங்கப்படல் வேண்டும். விநியோகத்திற்கு முன்னரே, இவ்வாறான பகிரப்பட்ட பயன்பாடு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பாக வைத்திருத்தல் என்பன தொடர்பில் இணக்கம் காணப்படல் வேண்டும்.
2. **வாழ்வாதார நடவடிக்கைகள்:** இயலுமான சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கருவிகள் வாழ்வாதார உதவி நடவடிக்கைகளுக்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். சுற்றுச் சூழல் மீதான எதிர்மறையான தாக்கங்களை தவிர்ப்பதற்கும் (அங்கீகரிக்கப்படாத அல்லது நிலையற்ற இயற்கை வளங்களை அறுவடை செய்தல், இன்னபிற) மற்றும் குறித்த கருவிகள் பகிரப்பட்ட அல்லது சமுதாய பயன்பாட்டிற்கு உள்வாங்கப்படுவதனையும் தவிர்ப்பதற்கு கருவிப் பயன்பாடு கண்காணிக்கப்படும்.
3. **பயிற்சி மற்றும் தொழில் நுணுக்க உதவி:** திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளில் கருவிகளின் பாதுகாப்பான பயன்பாடு மற்றும் எளிமையான பராமரிப்பிற்காக பயிற்சி அல்லது விழிப்புணர்வு ஏற்படுத்தலானது கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். திட்டமிடப்பட்ட நிர்மாணம் அல்லது பராமரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள் அல்லது ஒப்பந்த

தொழிலாளர்களிடமிருந்து பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு மற்றும் அடையாளங் காணப்பட்ட பலவீனமான மக்களுக்கு உதவி வழங்கப்படல் வேண்டும் (உறைவிடம் மற்றும் குடியிருப்புக்கள் தரம் 4, வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

பிற்சேர்க்கை 1:

உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்

இதிலுள்ள கேள்விகளின் பட்டியல் ஒரு வழிகாட்டியாக உள்ளது. அனர்த்தத்திற்குப் பின்னரான உறைவிடம் மற்றும் குடியிருப்பு மறுசீரமைப்புக்களை தெரிவிக்கும் பொருத்தமான தகவல் பெறப்படுவதனை உறுதி செய்வதாக சரிபார்க்கும் பட்டியல் உள்ளது. இங்கு பட்டியலிடப்பட்டுள்ள கேள்விகள் கட்டாயமானது அல்ல. பொருத்தமான வகையில் பயன்படுத்தப்படலாம் மற்றும் உள்வாங்கப்படலாம். இடம்பெயர்ந்த மற்றும் எந்தவொரு தங்க வசதியளிக்கும் மக்களினதும் அனர்த்தம், பாதுகாப்பு சூழ்நிலை, அடிப்படை மக்கள் வகைப்பாடுகள் என்பவற்றின் மறைந்துள்ள காரணிகளை அவை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், கலந்தாய்வு செய்ய வேண்டிய மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முக்கியமானவர்கள் தொடர்பிலும் தனியாக அறிந்து கொள்ளலாம் (மிகவும் முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

1 உறைவிடம் மற்றும் குடியிருப்பு

மதிப்பீடு மற்றும் ஒருங்கிணைப்பு

- சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு நுட்பம் வடிவமைக்கப்பட்டுள்ளதா?
- பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பில் கிடைக்கக் கூடியதாக உள்ள அடிப்படைத் தரவுகள் எவை மற்றும் தெரிந்த பேரிடர்கள் மற்றும் உறைவிட மற்றும் குடியிருப்பு ஆபத்துக்கள் மற்றும் பலவீனங்கள் எவை?
- மறுசீரமைப்பை வெளிப்படுத்துவதற்கு தற்செயல் திட்டம் ஏதேனும் உள்ளதா?
- ஏற்கனவே கிடைக்கக் கூடியதாக உள்ள ஆரம்ப மதிப்பீட்டு தகவல்கள் எவை?
- நிறுவனங்களுக்கு இடையிலான மற்றும்/அல்லது பல்துறை சார்ந்த மதிப்பீடுகள் திட்டமிடப்பட்டுள்ளதா மற்றும் இதில் உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதா?

மக்கள் வகைப்பாடு

- வழமையான குடும்பமொன்றில் எத்தனை பேர் உள்ளடங்குகின்றனர்?

- வழமையான குடும்பம் ஒன்றை கொண்டிராத தனிநபர்கள் (கைவிடப்பட்ட சிறுவர்கள் போன்றோர்) அல்லது குடும்ப அளவுகள் வழமையானதாக இல்லாத குறிப்பிடத்தக்க சிறுபான்மை குழுக்களை உள்ளடக்கிய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையில் எத்தனை பேர் பால் மற்றும் வயது அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர்?
- பாதிக்கப்பட்ட எத்தனை குடும்பங்கள் போதிய உறைவிட வசதியின்றி உள்ளனர், அவர்கள் தற்போது எங்கு உள்ளனர்?
- எந்தவொரு அல்லது போதியளவு உறைவிடம் இன்றி உள்ள தனிப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்கள் அல்லாதவர்கள் எத்தனை பேர் பால் மற்றும் வயது அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர், இவர்கள் தற்போது எங்குள்ளனர்?
- இடம்பெயராத மற்றும் சொந்த வீடுகள் உள்ள பகுதியிலேயே உதவி வழங்குவதற்கு பொருத்தமான பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை போதியளவு உறைவிட வசதியின்றி உள்ளன?
- இடம்பெயர்ந்தவர்களில் எத்தனைப் பேர் போதிய உறைவிட வசதியின்றி உள்ளனர் மற்றும் தங்குவதற்கு இடம் வழங்கும் குடும்பங்களுடன் அல்லது தற்காலிக சமுதாய குடியிருப்புக்களில் எத்தனைப் பேருக்கு உறைவிடம் தேவையாக உள்ளது?
- பாடசாலைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நிலையங்கள் போன்ற சமுதாய வசதிகளுக்கான பிரவேசம் குறைவாக உள்ள எத்தனைப் பேர் பால் மற்றும் வயது அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர்?

ஆபத்துக்கள்

- உறைவிட வசதிகள் போதாமையின் காரணமாக வாழ்க்கைக்கு ஏற்படக் கூடிய உடனடியான ஆபத்து என்ன, மற்றும் எத்தனைப் பேர் இந்த ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளனர்?
- அனர்த்தத்தின் அல்லது வேறு அறிந்த பேரிடர்களினால் உறைவிடத்தின் மீது ஏற்படும் தற்போதைய விளைவுகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஏற்படக் கூடிய மேலதிக ஆபத்துக்கள் எவை?
- போதிய உறைவிட வசதியின்மை காரணமாக, பெண்கள், சிறுவர்கள், கைவிடப்பட்ட இளைஞர்கள், மாற்றுத் திறனுடைய நபர்கள் அல்லது நீண்டகால நோய்த் தாக்கத்துக்கு உள்ளானவர்கள் போன்ற பலவீனமான மக்கள் மீதான குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் எவை மற்றும் ஏன்?
- இடம்பெயர்ந்த மக்களின் காரணமாக தங்குவதற்கு இடமளிக்கும் மக்கள் மீது ஏற்படும் தாக்கம் என்ன?
- பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் அல்லது இடையில் முரண்பாடு அல்லது பாரபட்சம் ஏற்படுவதற்கான சாத்தியமான ஆபத்துக்கள் எவை?

வளங்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

- பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி உறைவிடத் தேவைகள் சிலவற்றை அல்லது அனைத்தையும் நிறைவு செய்வதற்கு அவர்களிடம் உள்ள மூலப்பொருட்கள், நிதிகள் மற்றும் மனித வளங்கள் எவை?
- தேவையான சந்தர்ப்பங்களில் தற்காலிக சமுதாய குடியிருப்புக்கள் உள்ளடங்கலாக உடனடி உறைவிடத் தேவைகளை நிறைவு செய்வதற்கு நிலம் கிடைக்கக் கூடியத் தன்மை, உரிமைத்துவம் மற்றும் பயன்பாடு தொடர்பில் உள்ள பிரச்சினைகள் எவை?
- பாதிக்கப்பட்ட மக்களை தமது வாழ்விடத்தில் அல்லது அருகில் உள்ள நிலத்தில் தங்க வைப்பதன் மூலம், வசதியளிக்கும் மக்கள் எதிர்நோக்கும் சாத்தியமான பிரச்சினைகள் எவை?
- பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிகமாக தற்போதைய, கிடைக்கக் கூடிய மற்றும் பாதிக்கப்படாத கட்டடங்களில் அல்லது கட்டமைப்புக்களில் தங்க வைப்பதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் எவை?
- தற்காலிக குடியிருப்புக்களை அமைப்பதற்கு அணுகக் கூடியதாக உள்ள காலி நிலத்தை பயன்படுத்துவதில் உள்ள பரப்பியல் மற்றும் உள்ளூர் சுற்றுச் சூழல் பொருத்தப்பாடு என்ன?
- உறைவிடத் தீர்வுகளை உருவாக்கும் போது உள்ளூர் அதிகார விதிமுறைகளின் தேவைகள் மற்றும் கட்டுப்பாடுகள் எவை?

மூலப்பொருட்கள், வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்

- பாதிக்கப்பட்ட மக்கள் அல்லது வேறு செயற்பாட்டாளர்களால் இதுவரை வழங்கப்பட்டுள்ள ஆரம்ப உறைவிடத் தீர்வுகள் அல்லது மூலப்பொருட்கள் எவை?
- உறைவிடங்களை மீள் நிர்மாணம் செய்வதற்கு பயன்படுத்துவதற்கு சேதமடைந்த பகுதிகளில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய அழிவடையாத பொருட்கள் எவை?
- பாதிக்கப்பட்ட மக்களின் வழமையான கட்டட செயற்பாடுகள் எவை மற்றும் கட்டமைப்பு சட்டகம் மற்றும் கூரை, மற்றும் புறச் சுவர் வேலிகளை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் வேறுபட்ட மூலப்பொருட்கள் எவை?
- எவ்வாறான மாற்று வடிவமைப்பு அல்லது மூலப்பொருட்கள் தீர்வுகள் கிடைக்கக் கூடியதாக உள்ளன மற்றும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு பழக்கமானதாக அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளன?
- பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் விசேடமாக, நடமாடும் சிக்கல் உள்ளவர்களுக்கு உறைவிடத் தீர்வுகளைப் பயன்படுத்துவதில் பாதுகாப்பான

மற்றும் தயாரான பிரவேசத்தை உறுதி செய்வதற்கான எவ்வாறான வடிவமைப்பு அம்சங்கள் தேவையாக உள்ளன?

- எதிர்கால ஆபத்துக்கள் மற்றும் பலவீனங்களை குறைப்பதற்கு சாத்தியமான உறைவிடத் தீர்வுகளை எவ்வாறு அடையாளங் காண்பது?
- வழமையாக உறைவிடங்கள் எவ்வாறு கட்டப்படுகின்றன மற்றும் யாரால் கட்டப்படுகின்றன?
- எவ்வாறு உறைவிட மூலப்பொருட்கள் பெறப்படுகின்றன மற்றும் யாரால் பெறப்படுகின்றன?
- தமது சொந்த உறைவிடங்களை நிர்மாணிப்பதில் பங்குபற்றுவதற்கு பெண்கள், இளைஞர்கள், மாற்றுத் திறனுடைய நபர்கள் மற்றும் வயதான மக்கள் போன்றோருக்கு எவ்வாறு பயிற்சி அல்லது உதவி வழங்குவது மற்றும் அதில் உள்ள கட்டுப்பாடுகள் எவை?
- நிர்மாணம் தொடர்பான இயலுமை அல்லது சந்தர்ப்பம் குறைவாக உள்ள தனிநபர்கள் அல்லது குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்கு, தன்னார்வ அல்லது ஒப்பந்த தொழிலாளர் அல்லது தொழில் நுணுக்க உதவி ஊடாக மேலதிக உதவி அவசியமாக உள்ளதா?

குடும்பங்கள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள்

- பாதிக்கப்பட்ட மக்களின் உறைவிடங்களில் அல்லது உறைவிடங்களுக்கு அருகில் எவ்வாறான குடும்ப மற்றும் வாழ்வாதார உதவி நடவடிக்கைகள் வழமையாக முன்னெடுக்கப்படுகின்றன மற்றும் இட ஒதுக்கீடு மற்றும் வடிவமைப்பு என்பன இந்த நடவடிக்கைகளில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன?
- மூலப்பொருட்களை வழங்கல் மற்றும் உறைவிடம் மற்றும் குடியிருப்புத் தீர்வுகளி -னை நிர்மாணித்தல் என்பவற்றின் ஊடாக வழங்கப்படக் கூடிய சட்ட மற்றும் சுற்றுச் சூழல் ரீதியாக பொருத்தமான வாழ்வாதார உதவி சந்தர்ப்பங்கள் எவை?

அத்தியாவசிய சேவைகள் மற்றும் சமுதாய வசதிகள்

- பருகுதலுக்கு மற்றும் தனிப்பட்ட போஷாக்கிற்கான நீரின் தற்போது கிடைக்கக் கூடிய அளவு என்ன மற்றும் எதிர்பார்க்கப்படும் தேகாரோக்கியத் தேவைகளை எட்டுவதில் உள்ள சாத்தியங்களும், கட்டுப்பாடுகளும் எவை?
- சமூக வசதி கூடங்களின் (சுகாதார நிலையங்கள், பாடசாலைகள், வழிபாட்டு தலங்கள், இன்னபிற) தற்போதைய நிலை என்ன மற்றும் இந்த வசதிகளை அணுகுவதில் கட்டுப்பாடுகளும், சந்தர்ப்பங்களும் எவை?
- பாதிக்கப்பட்ட மக்களினால் உறைவிடமாக பயன்படுத்தப்பட்ட சமுதாய கட்டடங்கள், குறிப்பாக பாடசாலைகளை மீள திட்டமிடப்பட்ட பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான செயற்பாடு மற்றும் கால அளவு எவை?

தங்க வைக்கும் சமுதாயம் மற்றும் சுற்றுச் சூழல் தாக்கம்

- தங்குவதற்கு வசதியளிக்கும் சமுதாயத்திற்கான கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் எவை?
- தங்குவதற்கு வசதியளிக்கும் சமுதாயத்தின் அல்லது தற்காலிக குடியிருப்புக்குள் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைப்பதற்கான நிறுவன ரீதியான மற்றும் பௌதீக திட்டமிடல் பிரச்சினைகள் எவை?
- நிர்மாண மூலப்பொருட்களை உள்ளூரில் பெற்றுக் கொள்வது தொடர்பில் உள்ளூர் சுற்றுச் சூழல் அக்கறைகள் எவை?
- பாதிக்கப்பட்ட மக்களின் எரிபொருள், தேகாரோக்கியம், கழிவு அகற்றல், விலங்குகளுக்கான மேய்ச்சல் வசதிகள் போன்ற தேவைகள் தொடர்பான உள்ளூர் சுற்றுச் சூழல் அக்கறைகள் எவை?

2 உணவல்லாத விடயங்கள்

உணவல்லாத விடயத் தேவைகள்

- பாதிக்கப்பட்ட மக்களிற்குத் தேவையான சிக்கலான உணவல்லாத விடயங்கள் எவை?
- தேவையான ஏதாவது ஒரு உணவல்லாத விடயங்களை உள்ளூரில் பெற்றுக் கொள்ள முடியுமா?
- பணம் அல்லது சான்றுச் சீட்டுக்களின் பயன்பாடு சாத்தியமானதா?
- உறைவிட உதவி விடயங்களை முழுமையாக்குவதற்கு தொழில் நுணுக்க உதவி தேவையாக இருக்குமா?

ஆடைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள்

- பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள் மற்றும் வயதான நபர்களால் வழமையாக பயன்படுத்தப்படும் ஆடைகள், போர்வைகள் மற்றும் படுக்கைப் பொருட்கள் எவை மற்றும் குறிப்பிடத்தக்க சமூக மற்றும் கலாசார அக்கறைகள் எவை?
- காலநிலையின் மோசமான தாக்கங்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கும் மற்றும் தமது சுகாதாரம், கண்ணியம் மற்றும் நலனை பேணுவதற்கும் அனைத்து வயதுப் பிரிவையும் சேர்ந்த எத்தனை பெண்கள் மற்றும் ஆண்கள், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு போதியதல்லாத அல்லது பற்றாக்குறையான ஆடைகள், போர்வைகள் அல்லது படுக்கைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன?
- போதிய ஆடைகள், போர்வைகள் அல்லது படுக்கைப் பொருட்களின் தேவைகளின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை, சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பில் காணப்படும் ஆபத்துக்கள் எவை?

- குடும்பங்களின் சுகாதாரம் மற்றும் நலனை உறுதி செய்வதற்கு எவ்வாறான நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாட்டு நுட்பங்கள், குறிப்பாக நுளம்பு வலைகள் தேவையாக உள்ளன?

சமைத்தல் மற்றும் உண்ணல், அடுப்புக்கள் மற்றும் எரிபொருள்

- அனர்த்தத்திற்கு முன்னர் வழமையான குடும்ப ஒன்றுக்கு பிரவேசம் இருந்த சமைத்தலுக்கும், உண்பதற்குமான உபகரணங்கள் எவை?
- எத்தனை குடும்பங்களுக்க போதிய சமைத்தலுக்கும், உண்பதற்குமான உபகரணங்களுக்கான பிரவேசம் இல்லை?
- அனர்த்தத்திற்கு முன்னர் வழமையாக பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வாறு சமைப்பர் மற்றும் தமது வாழ்விடங்களை சூடேற்றுவர் மற்றும் எங்கு சமைத்தல் நடைபெறும்?
- அனர்த்தத்திற்கு முன்னர் சமைத்தல் மற்றும் சூடேற்றுவதற்கு வழமையாக பயன்படுத்தப்படும் எரிபொருள் என்ன மற்றும் அது எங்கிருந்து பெறப்படும்?
- எத்தனை குடும்பங்களுக்கு சமைத்தலுக்கான மற்றும் சூடேற்றுவதற்கான அடுப்புக்கள் இல்லை மற்றும் ஏன்?
- சமைத்தல் மற்றும் சூடேற்றுவதற்கான எரிபொருளுக்கான போதிய விநியோகத்திற்கான பிரவேசம் எத்தனை குடும்பங்களுக்கு இல்லை?
- அனர்த்ததால் பாதிக்கப்பட்ட மற்றும் அருகில் உள்ள மக்கள் தொகைக்கு போதிய அளவு எரிபொருளை வழங்குவதற்கு உள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் கட்டுப்பாடுகள், விசேடமாக சுற்றுச் சூழல் மீதான அக்கறைகள் எவை?
- போதிய அளவு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், விசேடமாக அனைத்து வயதுப் பிரிவினரையும் சேர்ந்த பெண்கள் மீதான தாக்கம் என்ன?
- சமைத்தல் மற்றும் உண்ணல் தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டிய கலாசார ரீதியான விடயங்கள் எவை?

கருவிகள் மற்றும் உபகரணங்கள்

- உறைவிடத்தை பழுது பார்ப்பதற்கு, நிர்மாணிப்பதற்கு அல்லது பராமரிப்பதற்கு எவ்வாறான அடிப்படை கருவிகளுக்கான பிரவேசம் குடும்பங்களுக்கு உள்ளது?
- நிர்மாணத்திற்கான, பராமரிப்பிற்கான மற்றும் சிதைவுக் கூளங்களை அகற்றுவதற்கான அடிப்படைக் கருவிகளாக எந்த வாழ்வாதார உதவி நடவடிக்கைகளை பயன்படுத்த முடியும்?
- கருவிகளை பாதுகாப்பாக பயன்படுத்துவது தொடர்பில் எவ்வாறான பயிற்சி அல்லது விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தேவையாக உள்ளன?

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

சர்வதேச சட்ட ஆவணங்கள்

The Right to Adequate Housing (Article 11 (1) Covenant on Economic, Social and Cultural Rights), CECSR General Comment 4, 12 December 1991. Committee on Economic, Social and Cultural Rights.

Convention on the Elimination of All Forms of Discrimination Against Women (1981); Article 14(2)(h).

Convention on the Rights of the Child (1990); Article 27(3).

International Convention on the Elimination of All Forms of Racial Discrimination (1969); Article 5(e)(iii).

International Convention Relating to the Status of Refugees (1954); Article 21.

Universal Declaration of Human Rights (1948); Article 25.

பொதுவானவை

Corsellis, T and Vitale, A (2005), Transitional Settlement: Displaced Populations. Oxfam. Oxford.

Davis, J and Lambert, R (2002), Engineering in Emergencies: A Practical Guide for Relief Workers. RedR/IT Publications. London.

Inter-Agency Network for Education in Emergencies (INEE) (2010), Minimum Standards for Education: Preparedness, Response, Recovery. New York. www.ineesite.org

Inter-Agency Standing Committee (IASC) (2008), Shelter Projects 2008. IASC Emergency Shelter Cluster. Geneva.

International Federation of Red Cross and Red Crescent Societies (IFRC) (2010), Owner-Driven Housing Reconstruction Guidelines. Geneva.

IFRC and United Nations Human Settlements Programme (UN-Habitat) (2010), Shelter Projects 2009. IFRC. Geneva.

OCHA (2010), Shelter after disaster: strategies for transitional settlement and reconstruction. Geneva.

ProVention Consortium (2007), Tools for Mainstreaming Disaster Risk Reduction: Construction Design, Building Standards and Site Selection, Guidance Note 12. Geneva.

United Nations Disaster Relief Organization (UNDRO) (1982), Shelter After Disaster: Guidelines for Assistance. Geneva.

UNHCR (2007), Handbook for Emergencies. Third Edition. Geneva.

United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA), UN Refugee Agency (UNHCR), Office of the UN High Commissioner for Human Rights (OHCHR), Food and Agriculture Organization of the UN (FAO), Norwegian Refugee Council (NRC) (2006), Handbook on the Implementation of the UN Principles on Housing and Property Restitution Rights for Refugees and Displaced Persons (The 'Pinheiro Principles').

World Bank (2010), Handbook for Post-Disaster Housing and Community Reconstruction. Washington DC.

தற்காலிக சமுதாய குடியிருப்பு

CCCM Cluster (2010), Collective Centre Guidelines. UNHCR and International Organization for Migration. Geneva.

NRC (2008), Camp Management Toolkit. Oslo.

சுற்றுச் சூழல்

Kelly, C (2005), Guidelines for Rapid Environmental Impact Assessment in Disasters. Benfield Hazard Research Center, University College London and CARE International. London.

Kelly, C (2005), Checklist-Based Guide to Identifying Critical Environmental Considerations in Emergency Shelter Site Selection, Construction, Management and Decommissioning. ProAct Network and CARE International.

UNHCR (2002), Environmental Considerations in the Life Cycle of Refugee Camps. Geneva.

WWF and American Red Cross (2010), Green Recovery and Reconstruction Toolkit for Humanitarian Aid. Washington DC. www.worldwildlife.org/what/partners/humanitarian/green-recovery-and-reconstruction-toolkit.html

பணம், சான்றுச் சீட்டு மற்றும் சந்தை மதிப்பீடுகள்

Albu, M (2010), The Emergency Market Mapping and Analysis Toolkit. Practical Action Publishing. Rugby, UK.

Creti, P and Jaspars, S (2006), Cash Transfer Programming in Emergencies. Oxfam. Oxford

International Committee of the Red Cross (ICRC) and IFRC (2007), Guidelines for cash transfer programming. Geneva.

மாற்றுத் திறன்கள்

Handicap International, Disability Checklist for Emergency Response.

www.handicap-international.de/fileadmin/redaktion/pdf/disability_checklist_booklet_01.pdf

பால்நிலை

IASC (2006), Women, Girls, Boys and Men: Different Needs – Equal Opportunities: The Gender Handbook in Humanitarian Action. Geneva.

உளச்சமூக உதவி

IASC (2007), Guidelines on Mental Health and Psychosocial Support in Emergency Settings. Geneva.

பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்கள்

UN International Strategy for Disaster Reduction, INEE, World Bank (2009), Guidance Notes on Safer School Construction.

உணவல்லாத விடயங்கள்:அவசர கால விடயங்கள்

IASC Emergency Shelter Cluster (2007), Selecting NFIs for Shelter. Geneva.

IASC Task Force on Safe Access to Firewood and Alternative Energy in humanitarian settings (2009), Decision Tree Diagrams on Factors Affecting Choice of Fuel Strategy in Humanitarian Settings. Geneva.

ICRC and IFRC (2009), Emergency Items Catalogue. Third Edition. Geneva.

IFRC and Oxfam International (2007), Plastic Sheeting: a guide to the specification and use of plastic sheeting in humanitarian relief. Oxford.

Inter-Agency Procurement Services Offices (2000), Emergency Relief Items: Compendium of Generic Specifications. Vols 1 and 2. United Nations Development Programme. New York.

OCHA (2004), Tents: A Guide to the Use and Logistics of Family Tents in Humanitarian Relief. Geneva.

சுகாதார நடவடிக்கையில் அடிப்படைத் தரங்கள்

இந்த அத்தியாயத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

இந்த அத்தியாயம் இரண்டு பிரதான பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது:

- **சுகாதார முறைமைகள்**
- **அத்தியாவசிய சுகாதார சேவைகள்**

சுகாதார சேவைகளின் வடிவமைப்பு, நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலுக்கான சுகாதார முறைமைகள் அணுகுமுறையானது அனர்த்த மறுசீரமைப்பின் போது சுகாதார சேவைகளை ஒழுங்கமைப்பதற்கான சட்டகமாக உள்வாங்கப்பட்டுள்ளது. முன்னுரிமை வழங்க வேண்டிய சுகாதாரத் தேவைகள் அடையாளங் காணப்பட்டு, பயனுறுதி மற்றும் வினைத்திறன் மிக்க வகையில் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதி செய்வதற்கான சிறந்த அணுகுமுறையாக இது உள்ளது. தேசிய மற்றும் உள்ளூர் சுகாதார முறைகளுக்கு உதவும் கோட்பாடுகள், கருவிகள் மற்றும் அணுகுமுறைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தரப்படுத்தல் என்பன அத்தியாயம் முழுவதிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்கள் இந்த அத்தியாயத்துடன் கொள்கை மாறாத வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். அனர்த்தத்தின் போதான மனிதநேய மறுசீரமைப்பு தொடர்பில் தகவல் வழங்குவதனை பிரதான எண்ணமாக கொண்டுள்ள போதிலும், அனர்த்த முன்னாயத்தம் மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளை நோக்கிய நிலைமாற்றம் என்பவற்றின் போது அடிப்படைத் தரங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பிரிவும் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளன:

- **அடிப்படைத் தரங்கள்:** இவை தன்மையில் தர அடிப்படையிலானதாக இருக்கின்ற போதிலும், சுகாதார சேவைகள் தொடர்பிலான மனிதநேய மறுசீரமைப்பின் போது எட்டப்பட்ட வேண்டிய ஆகக் குறைந்த மட்டங்களையும் குறிப்பிடுகின்றது.
- **பிரதான நடவடிக்கைகள்:** இவை தரங்களை எட்டுவதற்கு குறிப்பிட்டுச் சொல்லப்படும் நடவடிக்கைகள் மற்றும் உள்ளீடுகள் ஆகும்.
- **பிரதான குறிகாட்டிகள்:** இவை தரம் எட்டப்பட்டுள்ளதா என்பதனை சுட்டிக் காட்டும் “அடையாளங்கள்” ஆகும். இவை பிரதான நடவடிக்கைகளின் செயற்பாடு மற்றும் பெறுபேறு -களை அளவிடுவதற்கு மற்றும் அறிவிப்பதற்கான வழி வகைகளை வழங்குகின்றன. இவை பிரதான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டது/அடிப்படைத் தரங்களுடன் சம்பந்தப்பட்டவை.
- **வழிகாட்டல் குறிப்புக்கள்:** அடிப்படைத் தரங்கள், பிரதான நடவடிக்கைகள் மற்றும் பிரதான குறிகாட்டிகளை பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பிரயோகிக்கும் போது கவனஞ் செலுத்த வேண்டிய முக்கியமான விடயங்களை இவை உள்ளடக்கியுள்ளன. பிரயோக ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளல், மட்டக்குறிகள் அல்லது முன்னுரிமை செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பான அறிவுரை என்பன தொடர்பிலான வழிகாட்டல்களை இவை வழங்குகின்றன. இவை தரங்கள், நடவடிக்கைகள் அல்லது குறிகாட்டிகள் சம்பந்தப்பட்ட சிக்கலான விடயங்களையும் உள்ளடக்கியிருக்கலாம். அத்துடன், தற்போதைய அறிவுமட்டத்தில் உள்ள குழப்பங்கள், சிக்கல்கள் அல்லது இடைவெளிகளையும் இவை விளக்குகின்றன

தேவையான பிரதான குறிகாட்டிகள் மற்றும் நடவடிக்கைகள் எட்டப்படவில்லையாயின், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, பொருத்தமான தணித்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விளக்குவதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் தரங்கள் பிரயோகிக்கப்படும் போது பயன்படுத்துவதற்காக தேவைகள் மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. “எவ்வாறு முன்னெடுப்பது” என்பது தொடர்பான வழிகாட்டல் வளங்கள் உள்ளடங்கலாக குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை பகுதியும் பிற்சேர்க்கையாக தரப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

அறிமுகம் 291

1. சுகாதார முறைமைகள் 296

2. அத்தியாவசிய சுகாதார சேவைகள் 309

2.1. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களின் கட்டுப்பாடு 311

2.2. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் உடல் நலன் . 320

2.3. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம் 325

2.4. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - காயம் 331

2.5. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - மனநலம் 333

2.6. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவாத நோய்கள் . . . 336

பிற்சேர்க்கை 1: சுகாதார சேவைகள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல் . 338

பிற்சேர்க்கை 2: வாராந்த ஆய்வறிக்கைப் படிவங்களின் மாதிரி . . . 341

பிற்சேர்க்கை 3: முக்கியமான சுகாதார குறிகாட்டிகளை கணிப்பதற்கான சமன்பாடுகள் 346

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை 348


மனிதநேய சாசனம்
மிக முக்கியமான தரங்கள்
பாதுகாப்பு கோட்பாடுகள்
சுகாதார நடவடிக்கை
சுகாதார முறைமைகள்
அத்தியாவசிய சுகாதார சேவைகள்
தரம் 1 சுகாதார சேவைகளை முன்னுரிமைப்படுத்தல
தரம் 1 சுகாதார சேவை விநியோகம்
2.1 பரவக் கூடிய நோய்களின் கட்டுப்பாடு
2.2 சிறுவர் உடல் நலன்
2.3 பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம்
2.4 காயம்
2.5 மனநலம்
2.6 பரவாத நோய்கள்
தரம் 2 மனித வளங்கள்
தரம் 1 பரவக் கூடிய நோய்களினை தடுத்தல்
தரம் 1 தடுப்பூசி தடுக்கக் கூடிய நோய் தடுத்தல்
தரம் 1 இனப்பெருக்கச் சுகாதாரம்
தரம் 1 காய பராமரிப்பு
தரம் 1 மன நலம்
தரம் 1 பரவாத நோய்கள்
தரம் 3 மருந்துகள் மற்றும் மருத்துவ விநியோகம்
தரம் 2 பரவக் கூடிய நோய்களை அறுதியிடல் மற்றும் சம்பவ முகாமைத்துவம்
தரம் 2 புதிததாக தோன்றும் மற்றும் சிறுபராய நோய்களை முகாமை செய்தல்
தரம் 2 எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ்
தரம் 4 உடல் நலன் நிதியுதவி
தரம் 3 நோய் கண்டறிதல் மற்றும் மறுசீரமைப்பு
தரம் 5 சுகாதார தகவல் முகாமைத்துவம்
தரம் 6 தலைமைத்துவம் மற்றும் ஒருங்கிணைத்தல்
பிற்சேர்க்கை 1: சுகாதார சேவைகள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்
பிற்சேர்க்கை 2: வாராந்த ஆய்வறிக்கைப் படிவங்களின் மாதிரி
பிற்சேர்க்கை 3: முக்கியமான சுகாதார குறிகாட்டிகளை கணிப்பதற்கான சமன்பாடுகள்
குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

அறிமுகம்

மனிதநேய சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்திற்கான தொடர்புகள்

சுகாதார நடவடிக்கைகளில் அடிப்படைத் தரங்கள் என்பது மனிதநேய நிறுவனங்களின் பகிரப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பற்றுறுதிகளின் பிரயோக வெளிப்பாடாக உள்ளது. மனிதநேய நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொதுவான கோட்பாடுகள் மனிதநேய சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதநேய கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் சர்வதேச சட்டத்தில் பிரதிபலிக்கின்ற வகையில் இந்த கோட்பாடுகள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பு மற்றும் காவலுக்கான உரிமை மற்றும் மனிதநேய உதவிகளை அடிப்படை தேவையின் பிரகாரம் பெறுவதற்கான உரிமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மனிதநேய சாசனத்தை குறிப்பிடும் பிரதான சட்ட மற்றும் கொள்கை ஆவணங்களின் பட்டியல் பிற்சேர்க்கை 1 இல் (**பக்கம் ???**) மனிதநேய பணியாளர்களுக்கான மேலதிக விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட உரிமைகள் தொடர்பில் பிரதான பொறுப்புக்களை உடையவர்களாக அரசுகள் இருக்கின்ற போதிலும், மனிதநேய நிறுவனங்களுக்கும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இந்த உரிமைகளை தொடர்ச்சியாக கிடைக்க வேண்டியதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது. இந்த பொதுவான உரிமைகள் மேலும் முக்கியமான உரிமைத் தகுதிகளை குறிப்பிடுகின்றன. மிக முக்கியமான தரங்களின் அடிப்படையை உருவாக்கும் பங்குபற்றல், தகவல் தெரிவித்தல் மற்றும் பாரபட்சமின்மை தொடர்பிலான உரிமைகளை இது உள்ளடக்கியுள்ளது. அத்துடன், இவற்றையும், இந்த கையேட்டில் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தரங்களையும் சுட்டிக்காட்டும் நீர், உணவு, உறைவிடம் மற்றும் சுகாதாரம் என்பன சார்ந்த உரிமைகளும் உள்ளடங்கியுள்ளன.

பல்வேறு சர்வதேச சட்ட ஆவணங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள வகையில், சுகாதாரத்திற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. மக்கள் தொகை பாதுகாக்கப்பட வேண்டுமாயின், சுகாதார முறைமைக்கு பொறுப்பான நிபுணர்கள் நன்கு பயிற்றப்பட்டவர்களாகவும், உலகளாவிய ஒழுங்கு கோட்பாடுகள் மற்றும் நிபுணத்துவ தரங்களிற்கு அர்ப்பணிப்புள்ளவர்களாகவும் இருப்பின், அவர்கள் பணி பரியும் முறைமையானது தேவைகளின் அடிப்படைத் தரங்களை எட்டுவதாக இருப்பின் மற்றும் பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கும் தன்மைக்கான இந்த சூழ்நிலைகளை நிர்மாணிப்பதற்கான மற்றும் பாதுகாப்பதற்கான இயலுமையும் விருப்பமும் அரசுக்கு இருப்பின் மாத்திரமே சுகாதாரத்திற்கான உரிமையை உறுதி செய்ய முடியும். ஆயுத முரண்பாடுகளின் போது பொது மக்களுக்கான வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்படும் இடங்கள் எந்த காரணத்தினை முன்னிட்டும் தாக்குதலுக்கு இலக்காகக் கூடாது. அத்துடன், சுகாதார மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கும் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை உள்ளது. சுகாதார வசதிகளின் நடுநிலைமையை சிக்கலுக்கு உள்ளாக்கும் ஆயுதங்களை ஏந்துதல் போன்ற செயற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் தவிர்க்கப்படல் வேண்டும். இந்த அத்தியாயத்தில்

உள்ள அடிப்படைத் தரங்கள் உணவுக்கான உரிமையின் மிகவும் முக்கியமான உள்ளடக்கத்தினை பிரதிபலிப்பதுடன், இந்த உரிமையை உலகளாவிய ரீதியில் யதார்த்தமாக்குவதற்கான நடவடிக்கைக்கும் பங்களிக்கின்றன.

அனர்த்தங்களின் போது சுகாதார நடவடிக்கையின் முக்கியத்துவம்

அனர்த்தத்தின் ஆரம்ப கட்டத்தில் வாழ்வதனை தீர்மானிக்கும் முக்கியமான காரணியாக சுகாதார பராமரிப்புக்கான பிரவேசம் உள்ளது. அனர்த்தங்கள் எப்போதும் பாதிக்கப்பட்ட மக்களின் பொது சுகாதாரத்திலும், நலனிலும் குறிப்பிடத்தக்க அளவு தாக்கங்களை ஏற்படுத்தும். பொது சுகாதாரம் மீதான தாக்கம் நேரடியான (உ-ம்: வன்முறை மற்றும் காயத்தினால் இறத்தல்) அல்லது மறைமுகமான (உ-ம்: தொற்றுக்குள்ளாகும் நோய்கள் மற்றும்/அல்லது போஷாக்கின்மை அதிக வீதம்) தாக்கமாக விளக்கப்படும். இந்த மறைமுகமான சுகாதார தாக்கங்கள் பொதுவாக போதிய அளவு மற்றும் போதிய தரத்தில் நீர் இன்மை, தேகாரோக்கிய சேவைகள் சிதைவுறல், சுகாதார சேவைகள் தடைபடல் அல்லது குறைக்கப்படல் மற்றும் உணவு பாதுகாப்பு அழிவடைதல் போன்ற காரணிகளுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும். பாதுகாப்பு குறைபாடு, நடமாடுவதற்கு தடைகள், மக்கள் இடப்பெயர்வு மற்றும் மோசமான வாழ்க்கை நிலைகள் (சனநெருக்கடி மற்றும் போதிய உறைவிடம் இன்மை) என்பனவும் பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம். காலநிலை மாற்றமானது பலவீனம் மற்றும் ஆபத்தை அதிகரிக்கும். மனிதநேய நெருக்கடிகளின் போது, மனிதநேய மறுசீரமைப்பின் முதன்மை இலக்காக இருப்பது அதிகரிக்கும் இறப்பு வீதம் மற்றும் நோய் தாக்கு வீதத்தை தடுப்பதும் மற்றும் குறைப்பதும் ஆகும். முக்கியமான நோக்கமாக இருப்பது, பக்குவமற்ற இறப்பு வீதம் (CMR) மற்றும் 5 வயதுக்கு குறைவான இறப்பு வீதத்தை (U5MR) என்பவற்றை பேணல். அவற்றை அனர்த்தத்திற்கு முன்னரான மக்களின் அடிமட்ட அளவின் இரண்டு மடங்கிலும் குறைத்தல் (பிராந்திய அடிப்படையில் அடிமட்ட குறிப்புதவி இறப்பு தரவு அட்டவணையைப் பார்க்கவும்). வேறுபட்ட வகையிலான அனர்த்தங்களுக்கு ஏற்றதாக இறப்பு வீதம் மற்றும் நோய் தாக்கும் வீதத்தின் அளவுகள் மற்றும் வடிவங்களும் மாற்றமடையும் (தெரிவு செய்யப்பட்ட அனர்த்தங்களில் பொது சுகாதார தாக்கம் குறித்த அட்டவணையைப் பார்க்கவும்). எனவே, பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரத் தேவைகளும் அதற்கேற்ப அனர்த்தத்தின் வகை மற்றும் அளவு என்பவற்றின் அடிப்படையில் வேறுபடும்.

தடுத்தல் மற்றும் மேம்படுத்தல் இடையீடுகள் உள்ளடங்கலாக அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவதற்கான சுகாதார துறையின் பங்களிப்புக்கள் சுகாதார ஆபத்துக்களை குறைப்பதற்கு பயனுள்ளவையாகும். இறப்பு வீதம் மற்றும் நோய் தாக்கும் வீதம் அதிகரிப்பதற்கான பிரதான காரணிகளை பயனுள்ள வகையில் அடையாளங் காண்பதில் அத்தியாவசிய சுகாதார சேவைகள் முன்னுரிமையான சுகாதார இடையீடுகளாக உள்ளன. அத்தியாவசிய சுகாதார சேவைகளின் நடைமுறைப்படுத்தலானது சுகாதார முறையினை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளின் ஊடாக ஆதரவளிக்கப்படல் வேண்டும். அனர்த்தத்திற்கான மறுசீரமைப்பில் சுகாதார இடையீடுகள் திட்டமிடப்படும், ஒழுங்கமைக்கப்படும் மற்றும் விநியோகிக்கப்படும் வழியானது தற்போதைய சுகாதார முறைமை மற்றும் அவற்றின் எதிர்கால மீளமைப்பு மற்றும் அபிவிருத்தியை விஸ்தரிக்கலாம் அல்லது குறைத்து மதிப்பிடலாம்.

சுகாதார முறைமையின் செயற்பாட்டு மட்டத்தை தீர்மானிப்பதற்கும் மற்றும் சுகாதார சேவைகளின் விநியோகம் மற்றும் பிரவேசத்திற்கான பிரதான தடைகளை அடையாளங் காண்பதற்கும் தற்போதைய சுகாதார முறைமையை பகுப்பாய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். அனர்த்தத்தின் ஆரம்ப நிலைகளில், தகவல்கள் பூரணமானதாக இருக்காது. அத்துடன், கிடைக்கக் கூடியதாக உள்ள சம்பந்தப்பட்ட தரவுகள் அனைத்தும் இன்றி முக்கிய பொது சுகாதார தீர்மானங்கள் எடுக்கப்பட நேரிடலாம். இயலுமான விரைவில் பல்துறை சார்ந்த மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). சிறந்த முன்னாயத்தம் ஊடாகவே சிறந்த மறுசீரமைப்பை எட்ட முடியும். முன்னாயத்தம் என்பது ஆபத்துக்களின் பகுப்பாய்வு மற்றும் முன்னெச்சரிக்கை முறைமைகள் என்பவற்றுடன் தொடர்புடையது. தற்செயல் நிகழ்வுகளை திட்டமிடல், கருவிகள் மற்றும் விநியோகங்களால் இருப்பு நிரப்பல், அவசரகால சேவைகள் மற்றும் முன்னேற்பாடு ஒழுங்குகளை நிறுவுதல் மற்றும்/அல்லது பேணல், தொடர்பாடல், தகவல் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு ஏற்பாடுகள், தனிப்பட்ட பயிற்சிகள், சமுதாய மட்ட திட்டமிடல், அப்பியாசங்கள் மற்றும் பயிற்சிகள் என்பன முன்னாயத்தம் என்பதில் உள்ளடங்குகின்றன. கட்டமைக்கப்பட்ட நெறிமுறைகளை அமுலாக்குவதன் மூலம், வியத்தகு முறையில் பூமியதிர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மற்றும் கடுமையான காயங்கள் என்பவற்றை குறைக்க முடியும் மற்றும்/அல்லது அனர்த்தத்தின் பின்னரும் சுகாதார வசதிகள் செயற்படுகின்றன என்பதனை உறுதி செய்ய முடியும

தெரிவு செய்யப்பட்ட அனர்த்தங்களின் பொது சுகாதார தாக்கம்

குறிப்பு: குறிப்பிட்ட வகையிலான அனர்த்தங்களுக்கு, இறப்பு வீதம் மற்றும் நோய் பாதிக்கும் வீதம் என்பன குறிப்பிட்டளவு சூழ்நிலைக்கு, சூழ்நிலை மாற்றமடையும்.

விளைவு	சிக்கலான அவசரகால நிலைகள்	பூமியதிர்ச்சிகள்	கடும் காற்று (வெள்ளப் பெருக்கு இன்றி)	வெள்ளப் பெருக்கு	கடும் வெள்ளப் பெருக்குகள், சுனாமிகள்
இறப்புக்கள்	பல	பல	சில	சில	பல
கடுமையான காயங்கள்	வேறுபடும் *	பல	இயல்பானது	சில	சில
பரவக் கூடிய நோய்களுக்கு அதிகரித்த அச்சுறுத்தல்	அதிகம்	வேறுபடும் *	சிறியது	வேறுபடும் *	வேறுபடும் *
உணவுப் பற்றாக்குறை	பொதுவானது	அரிது	அரிது	வேறுபடும் *	பொதுவானது
பாரிய சனத்தொகை இடப்பெயர்வுகள	பொதுவானது	அரிதானது (அதிகளவு பாதிக்கப்பட்ட நகர்ப்புறங்களில் நிகழலாம்).	அரிதானது (அதிகளவு பாதிக்கப்பட்ட நகர்ப்புறங்களில் நிகழலாம்).	பொதுவானது	வேறுபடும் *

* அனர்த்தத்திற்குப் பின்னரான இடப்பெயர்வு மற்றும் மக்கள் தொகையின் வாழ்க்கை நிலையில் தங்கியுள்ளது

மூலம்: Pan American Health Organization, 1981இலிருந்து பெறப்பட்டது.

ஏனைய அத்தியாயங்களுடனான தொடர்புகள்

சுகாதார நிலை மீதான பல்வேறு சுகாதார கூறுகளின் தாக்கங்கள் காரணமாக, ஏனைய அத்தியாயங்களில் உள்ள பெரும்பாலான தரங்கள் இந்த அத்தியாத்துடன் தொடர்புடையதாகும். ஒரு பகுதியில் தரங்களை எட்டுவதற்கான தேர்ச்சியானது பொதுவாக செல்வாக்கு செலுத்துவதுடன், வேறு பகுதிகளின் தேர்ச்சியினையும் தீர்மானிப்பதாக உள்ளது. மறுசீரமைப்பானது மிகவும் பயனுறுதி கொண்டதாக இருப்பதற்கு, ஏனைய துறைகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பும், ஒத்துழைப்பும் முக்கியமானது ஆகும். தேவைகள் நிறைவேற்றப்படுதல், முயற்சிகள் போலியாக இல்லாது இருத்தல் மற்றும் உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள் சார்ந்த இடையீடுகளின் தரம் எட்டப்படுதல் என்பவற்றை உறுதி செய்வதற்கு உள்ளூர் அதிகாரிகள், வேறு பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் சமுதாயஞ் சார்ந்த மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் என்பவற்றுடனான ஒருங்கிணைப்பும் அவசியமாகும். வேறு தொழில் நுணுக்க அத்தியாயங்களில் உள்ள முக்கியமான தரங்களுக்கான அல்லது வழிகாட்டல் குறிப்புக்களுக்கான குறிப்புதவிகள் தேவையான இடங்களில் தரப்பட்டுள்ளன. துணை மற்றும் குறைநிரப்பு தரங்களுக்கும் குறிப்புதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு கோட்பாடுகள் மற்றும் மிக முக்கியமான தரங்களுக்கான இணைப்புக்கள்

இந்த கையேட்டின் தரங்களை எட்டுவதற்காக, அனைத்து மனிதநேய நிறுவனங்களும், அவற்றிற்கு தீர்மான பாதுகாப்பு கட்டளை அல்லது பாதுகாப்பில் விசேட நிபுணத்துவ இயலுமை இல்லாத போதிலும் அவை பாதுகாப்பு கோட்பாடுகளால் வழிகாட்டப்படல் வேண்டும். கோட்பாடுகள் என்பது "முழுமையானவை" அல்ல. அவற்றை எந்த நிறுவனங்களால் பூர்த்தி செய்ய முடியும் என்பது சூழ்நிலைகளுக்கு அமைவானதாகவே இருக்கும். இருப்பினும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் உலகளாவிய மனிதநேய அக்கறைகளை பிரதிபலிக்கும் கோட்பாடுகள் அவசியமாகும். மிக முக்கியமான தரங்கள் அத்தியாவசியமான நடைமுறையாகும். அத்துடன், தனிப்பட்ட தரங்கள் அனைத்து துறைகளாலும் பகிரப்படுகின்றன. ஆறு முக்கியமான அடிப்படை தரங்கள் பங்குபற்றல், ஆரம்ப மதிப்பீடு, மறுசீரமைப்பு, இலகுப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீட்டாய்வு, நிதி பணியாளர் செயற்பாடு மற்றும் மேற்பார்வை மற்றும் நபர்களுக்கான உதவி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து தரங்களையும் சுட்டிக்காட்டும் அணுகுமுறைகளுக்கான தனிப்பட்ட குறிப்புதவி மையத்தினை அவை வழங்குகின்றன. எனவே, ஒவ்வொரு தொழில் நுணுக்க அத்தியாயத்திற்கும், சுய தரங்களை எட்டுவதற்கு உதவிப் புரிவதற்கான முக்கியமான தரங்களின் பயன்பாடு அவசியமாக இருக்கின்றது. மிகவும் முக்கியமாக, எந்தவொரு மறுசீரமைப்பினதும் பொருத்தப்பாடு மற்றும் தரத்தினை உறுதி செய்வதற்கு வழமையாக அனர்த்தத்தினால் பாதிக்கப்படக் கூடிய அபாயம் நிறைந்த குழுக்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளடங்கலாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பங்குபற்றல் அதிகரிக்கப்படல் வேண்டும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பலவீனங்கள் மற்றும் இயலுமைகள்

இந்த பிரிவானது முக்கியமான அடிப்படை தரங்களை மீள் அமுலாக்குவதற்கும், அதனுடன் இணைந்து வாசிப்பதற்கும் ஏற்றதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இளையவராக இருத்தல் அல்லது முதியவராக இருத்தல், பெண்ணாக இருத்தல் அல்லது மாற்றுத் திறன் அல்லது எச். ஐ. வி தாக்கத்துக்கு உள்ளானவராக இருத்தல் என்பவற்றின்

காரணமாக, அவர் பலவீனமானவராக கருதப்படவோ அல்லது அதிகரித்த அபாயத்துக்கு உள்ளாகவோ கூடாது. ஆனால், காரணிகளுக்கு இடையிலான செயற்பாடே இதனை தீர்மானிக்கின்றது. உதாரணமாக, 70 வயதுடைய நபரொருவர், தனியாக வறுமையில் வசித்து வருகின்றார். அதே வயது மற்றும் சுகாதார நிலையை உடைய, ஆனால் கூட்டுக் குடும்பத்துடன் மற்றும் போதிய வருமானத்துடன் வசிக்கும் ஒருவரிலும் பார்க்க பலவீனமானவராக இருப்பார். அதேவேளை, 3 வயது சிறுமியொருவர், தமக்குப் பொறுப்பான பெற்றோரின் பராமரிப்பில் இல்லாது இருக்கும் போது அதிக பலவீனம் உடையவராக இருப்பார்.

சுகாதார நடவடிக்கை தரங்களும் மற்றும் பிரதான நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படும் போது, பலவீனம் மற்றும் இயலுமை தொடர்பான பகுப்பாய்வானது உதவிக்கான உரிமையுள்ளவர்களுக்கு, பாரபட்சமின்றி மற்றும் அதிக உதவி தேவையாக உள்ளவர்களுக்கு அனர்த்த மறுசீரமைப்பு முயற்சிகள் சென்றடைவதனை உறுதி செய்கின்றது. இதற்கு உள்ளூர் சூழ்நிலை தொடர்பில் மற்றும் வேறுபட்ட மக்களின் வேறுபட்ட குழுக்களின் மீது அவர்களிடம் ஏற்கனவே காணப்படும் பலவீனம் காரணமாக (உ-ம்: மிகவும் வறியவராக இருத்தல் அல்லது பாரபட்சம் காட்டப்பட்டவராக இருத்தல்), வேறுபட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான அவர்களது வெளிப்பாடு (உ-ம்: பாலியல் சுரண்டல் உள்ளடங்கலாக பால்நிலை சார்ந்த வன்முறைகள்), நோய் தாக்கம் அல்லது பரவல் (எச்.ஐ.வி அல்லது காச நோய்), மற்றும் தொற்று நோய்க்கான சாத்தியங்கள் (உ-ம்: சின்னம்மை அல்லது கொலரா) போன்றன எவ்வாறு தாக்கத்தை புரிகின்றன என்பன தொடர்பில் முழுமையான புரிந்துணர்வு அவசியமாக உள்ளது. ஏற்கனவே உள்ள சமத்துவமின்மையை அனர்த்தங்கள் மேலும் மோசமானதாக மாற்றும். எவ்வாறாயினும், மக்களின் எதிர்கொள்ளும் மூலோபாயங்கள், நெகிழ்ச்சித் தன்மை மற்றும் மீளெழல் இயலுமைகள் என்பனவற்றுக்கான ஆதரவானது மிகவும் அத்தியாவசியமானது. அவர்களுடைய அறிவு, திறன்கள் மற்றும் மூலோபாயாங்கள், சமூக, சட்ட, நிதி மற்றும் உளச் சமூக உதவிக்கான அவர்களுடைய பிரவேசம் என்பவற்றிக்கான உதவி மற்றும் இந்த சேவைகளை சமமான வகையில் பெறும் போது எதிர்நோக்கக் கூடிய பல்வேறுபட்ட பௌதீக, கலாசார, பொருளாதார மற்றும் சமூக தடைகள் என்பன தொடர்பிலும் பரிந்து பேசல் முன்னெடுக்கப்படுவதுடன், உதவி வழங்கப்படலும் வேண்டும்.

பலவீனமான அனைத்து மக்களினதும் உரிமைகள் மற்றும் இயலுமைகள் உறுதி செய்யப்படுவதனை குறிப்பிடும் பிரதான பகுதிகள் பின்வருமாறு:

- பிரதிநிதித்துவக் குழுக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்து மக்களின், விசேடமாக அதிக சந்தர்ப்பங்கள் அற்றவர்களின் பங்குபற்றலை நம்பிக்கையுடைதாக்கல். (உ-ம்: தொடர்பாடல் மற்றும் ஒன்றிணைதல் சிக்கல் உள்ளவர்கள், நிறுவனங்களில் வசிப்பவர்கள், களங்கப்படுத்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் வேறு கீழ்ப்படுத்தப்பட்ட அல்லது பிரதிநிதித்துவம் புரியாத குழுக்கள்).
- மதிப்பீட்டின் போது பால் மற்றும் வயது (0-80+ வருடங்கள்) என்பதன் அடிப்படையில் தரவுகளை பிரிக்கவும். உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு துறையானது போதிய அளவில் மக்களின் பல்வகைத் தன்மை தொடர்பில் கவனஞ் செலுத்துவதனை உறுதி செய்வதற்கான முக்கியமான அம்சமாக இது உள்ளது.
- உரிமைத் தகுதிக்கான தகவல் உரிமை உறுதி செய்யப்படலானது, சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளடக்கமான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தொடர்பாடப்படுதல்.

அடிப்படைத் தரங்கள்

1. சுகாதார முறைமைகள்

“சுகாதார செயற்பாடுகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ள அனைத்து நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் மற்றும் வளங்களை” சுகாதார முறைமைகள் என உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) வரையறை செய்கின்றது. சுகாதார சேவைகளின் ஏற்பாடுகள், நிதியிடல் மற்றும் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள முழு அளவிலான செயற்பாட்டாளர்களை, உடற் கூறுகளில் செல்வாக்கு செலுத்தும் முயற்சிகள், நேரடியான சுகாதார சேவைகளை வழங்குதல் மற்றும் மத்திய, பிராந்திய, மாவட்ட, சமுதாய மற்றும் குடும்ப மட்டங்கள் என அனைத்து மட்டங்களையும் கொண்ட அம்சங்களை அது உள்ளடக்கியுள்ளது.

ஸ்பியரின் சுகாதார முறைகளுக்கான தரங்கள் WHO சுகாதார முறைமை சட்டகத்தின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டகத்தில் தலைமைத்துவம், மனித வளங்கள், போதைப் பொருட்கள் மற்றும் மருத்துவ விநியோகங்கள், சுகாதார நிதியிடல், சுகாதார தகவல் முகாமைத்துவம் மற்றும் சேவை விநியோகம் ஆகிய ஆறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தமக்கிடையில் பல உள்ளிணைப்புக்கள் மற்றும் இடைவினைகளை கொண்டுள்ளது. எனவே, ஒரு அம்சத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை, ஏனைய அம்சத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த சுகாதார முறைமையின் கட்டமைப்பு படிகளே, அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவதற்கு தேவையான செயற்பாடுகளாகும். அனர்த்த மறுசீரமைப்பின் போதான சுகாதார இடையீடுகள் சுகாதார முறைமைகளை வலுப்படுத்துவதற்கு பங்களிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்படுவதுடன், நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

சுகாதார முறைமைகள் தரம் 1: சுகாதார சேவை விநியோகம்

தரப்படுத்தப்பட்ட மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டிகளைப் பின்பற்றும், பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் தரமான சுகாதார சேவைகளைப் பெறுவதற்கு மக்களுக்கு சமமான பிரவேச சந்தர்ப்பம் உள்ளது. .

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சுகாதார முறைமையின் பொருத்தமான மட்டத்தில் சுகாதார சேவைகளை வழங்குதல். இந்த மட்டங்களில் குடும்பங்கள், மற்றும் சமுதாயம், சிகிச்சை நிலையம் அல்லது சுகாதார மையம், சுகாதார நிலையம் மற்றும் வைத்தியசாலை என்பன உள்ளடங்கும் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- தேசிய தரங்கள் மற்றும் வழிகாட்டிகளை கவனத்திற் கொண்டு பெரும்பாலும் பொதுவான நோய்களுக்கு தரப்படுத்தப்பட்ட சம்பவ முகாமைத்துவ நெறிமுறைகளை உள்வாங்கல் அல்லது கட்டமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).

- தரப்படுத்தப்பட்ட குறிப்பு முறைமையை உருவாக்கல் அல்லது வலுப்படுத்தல். அத்துடன், அனைத்து நிறுவனங்களாலும் அது பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அனைத்து சுகாதார வசதிகளிலும் அவசர அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உடனடி சிகிச்சை வழங்கப்படுவதனை உறுதி செய்வதற்கு, வகைப்படுத்தப்பட்ட தரப்படுத்தப்பட்ட முறைமையை உருவாக்கல் அல்லது வலுப்படுத்தல்.
- சமுதாய மற்றும் சுகாதார வசதி மட்டங்களில் சுகாதார கல்வி மற்றும் மேம்படுத்தலை ஆரம்பித்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- இரத்த விநியோகம் மற்றும் இரத்தப் பொருட்களிற்கு பாதுகாப்பான மற்றும் பகுத்தறிவு பயன்படுத்தப்படலை உருவாக்கி, பின்பற்றல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- ஆய்வுகூட சேவைகள் கிடைக்கக் கூடியதாக இருப்பதனையும், தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுவதனையும் உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- நடமாடும் சிகிச்சை நிலையங்கள் மற்றும் கள வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக மாற்று அல்லது சமாந்தரமான சுகாதார சேவைகள் உருவாக்கப்படுவதனை தவிர்த்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 7-8ஐப் பார்க்கவும்).
- தனியுரிமை, நம்பகத் தன்மை மற்றும் தகவல் ஒப்புதல் தொடர்பில் நோயாளிகளின் உரிமைகளை உறுதி செய்யும் வகையில் சுகாதார சேவைகளை வடிவமைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்).
- சுகாதார வசதிகளில் பொருத்தமான கழிவு முகாமைத்துவ நடைமுறைகள், பாதுகாப்பான செயற்பாடுகள் மற்றும் தொற்று கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 10-11 மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ தரம் 1ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- கௌரவத்துடன், கலாசார ரீதியாக பொருத்தமான வகையில் மற்றும் சிறந்த பொது சுகாதார பயிற்சியின் அடிப்படையில் இறந்த உடல்கள் அகற்றப்படுதல் (வழிகாட்டல் குறிப்பு 12 மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 8ஐப் பார்க்கவும் பக்கம் ???).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரினதும் அத்தியாவசிய சுகாதார தேவைகளை எட்டுவதற்கு போதிய எண்ணிக்கையில் சுகாதார வசதிகள் உள்ளன:

  - அடிப்படை சுகாதாரப் பிரிவு/10,000 மக்கள் (பொது சுகாதார சேவைகள் வழங்கப்படும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு வசதியாக அடிப்படை சுகாதாரப் பிரிவுகள் காணப்படுகின்றன)

  - சுகாதார நிலையம்/50,000 மக்கள்

  - மாவட்ட அல்லது கிராம வைத்தியசாலை/250,000 மக்கள்

  - >10 உள்நோயாளர் மற்றும் மகப்பேற்றுப் பிரிவு/10,000 மக்கள் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் சுகாதார வசதிகளில் பயன்படுத்தும் அளவுகள் 2-4 புதிய ஆலோசனைகள்/நபர்/வருடம் மற்றும் கிராமப்புற மற்றும் மேலதிக மக்களுக்கு மத்தியில் ,1 புதிய ஆலோசனைகள்/நபர்/வருடம் (வழிகாட்டல் குறிப்பு 4 மற்றும் பிற்சேர்க்கை 3: முக்கிய சுகாதார

குறிகாட்டிகளை கணிப்பிடுவதற்கான சமன்பாடுகள் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **பராமரிப்பு நிலை:** பராமரிப்பு நிலையின் அடிப்படையில், அவற்றின் அளவு மற்றும் அவை வழங்கும் சேவைகளுக்கு அமைவாக சுகாதார வசதிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தேவையான சுகாதார வசதிகளின் எண்ணிக்கை மற்றும் இடம் என்பன சூழ்நிலைக்கு, சூழ்நிலை மாற்றமடையலாம். தொடர்ச்சியான பராமரிப்பினை வழங்குவதற்கான செயன்முறை ஒன்றினை சுகாதார முறைமைகள் வடிவமைக்க வேண்டும். பயனுள்ள குறிப்பு முறைமையை உருவாக்குவதன் மூலம் இதனை சிறப்பாக எட்ட முடியும். விசேடமாக, வாழ்க்கையை காப்பாற்றும் இடையீடுகளை குறிப்பிடலாம். இந்த குறிப்புதவி முறையானது வாரத்தின் ஏழு நாட்களும், நாளொன்றின் 24 மணித்தியாலங்களும் செயற்படல் வேண்டும்.

2. **தேசிய தரங்கள் மற்றும் வழிகாட்டிகள்:** பொதுவாக, அனர்த்த மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் நாட்டின் சுகாதார தரங்கள் மற்றும் வழிகாட்டிகளை நிறுவனங்கள் பின்பற்றல் வேண்டும். இதில் சிகிச்சை நெறிமுறைகள் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் பட்டியல்கள் என்பன உள்ளடங்கும். இவை காலாவதியாகும் போது அல்லது ஆதாரம் சார்ந்த பயிற்சியை வெளிப்படுத்தாத போது, சர்வதேச தரங்கள் குறிப்புதவியாக பயன்படுத்தப்படலாம். அத்துடன், சுகாதாரத் துறைக்கான முன்னணி நிறுவனம் சுகாதார அமைச்சுக்கு (MOH) ஆதரவு வழங்கலாம்.

3. **சுகாதார மேம்பாடு:** சமுதாய சுகாதார மேம்பாடு தொடர்பான செயற்றிறன் மிக்க நிகழ்ச்சியொன்று, உள்ளூர் சுகாதார அதிகாரிகள் மற்றும் சமுதாயப் பிரதிநிதிகளின் கலந்தாய்வுடன் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதன் போது பெண்கள் மற்றும் ஆண்களின் சமமான பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படல் வேண்டும். பிரதான சுகாதார பிரச்சினைகள், சுகாதார சவால்கள், சுகாதார சேவைகளின் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் இடம் மற்றும் சிறந்த உடல் நலனை பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் நடத்தைகள் என்பன தொடர்பான தகவல்களை இந்த நிகழ்ச்சி வழங்க வேண்டும். அத்துடன், தீங்கான நடத்தைகளை அடையாளங் கண்டு, அவற்றை குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படல் வேண்டும். கலாசார ரீதியாக கூருணர்வு மிக்க மற்றும் புரிந்து கொள்வதற்கு இலகுவான மொழி மற்றும் ஊடகத்தை பொது சுகாதாரச் செய்திகள் மற்றும் மூலப்பொருட்கள் பயன்படுத்தல் வேண்டும். தகவல்களை பரிமாற்றவும் மற்றும் சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களை சென்றடைவதற்கும் பாடசாலைகள் மற்றும் சிறுவர் நட்புறவு இடங்கள் என்பன மிகவும் முக்கியமான இடங்களாக உள்ளன (கல்வியில் INEE அடிப்படைத் தரங்கள் - பிரவேசித்தல் மற்றும் கற்றல் சுற்றுச் சூழல் தரம் 3ஐப் பார்க்கவும்).

4. **சுகாதார சேவைகளின் பயன்படுத்தும் வீதம்:** சுகாதார சேவைகளைப் பயன்படுத்துவதில் ஆகக் குறைந்தபட்ச விளிம்புநிலை தொகை இல்லை. ஏனெனில், இது சூழ்நிலைக்கு, சூழ்நிலை மாற்றமடையக் கூடியது. நிலையான கிராமப்புற மற்றும் அதிகப்படியான மக்கள் மத்தியில், பயன்படுத்தல் வீதமானது 1 புதிய ஆலோசனை/நபர்/வருடமாக இருத்தல் வேண்டும். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் சராசரியாக 2-4 புதிய ஆலோசனை/நபர்/வருடம் என்பது பொதுவாக எதிர்பார்க்கப்படுவதாக இருக்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட இது குறைந்ததாக இருப்பின், சுகாதார சேவைகளுக்கு போதிய பிரவேசத்தை

அது வழங்காது. அளவானது அதிகமானதாக இருப்பின், குறிப்பிட்ட பொது சுகாதார பிரச்சினை அல்லது இலக்கு வைக்கப்பட்ட மக்களின் குறைவான கணிப்பீடு காரணமாக அதிக பயன்பாட்டினை அது குறிப்பிடலாம். பயன்படுத்தல் வீதங்களை பகுப்பாய்வு செய்யும் போது, பால், வயது, இனம் மற்றும் மாற்றுத் திறன் என்பதன் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும் (பிற்சேர்க்கை 3: முக்கிய சுகாதார குறிகாட்டிகளை கணிப்பிடுவதற்கான சமன்பாடுகளைப் பார்க்கவும் **பக்கம் ???**).

5. **பாதுகாப்பான இரத்தம் ஏற்றல்:** தேசிய இரத்தம் ஏற்றல் சேவை (BTS) இருக்குமாயின், அதனுடன் இணைந்து இரத்தம் ஏற்றலுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இரத்த சேகரிப்பானது தன்னார்வமான, கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாதவர்களிடமிருந்து மாத்திரமே பெறப்படல் வேண்டும். ஏற்றல்-பரிமாற்றல் தொற்றுக்களை கண்டறிதல், இரத்த வகையாக்கல், பொருந்தக் கூடிய சோதனை, இரத்தக் கூறு உற்பத்தி மற்றும் இரத்தப் பொருட்களை சேமித்தல் மற்றும் போக்குவரத்து செய்தல் உள்ளடங்கலாக சிறந்த ஆய்வுகூட நடைமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். இயலுமான சந்தர்ப்பங்களில் ஏற்றல்களுக்குப் பதிலாக மாற்றுக்களைப் (படுகடப்பொருட்கள் மற்றும் கூழ்மநிலை) பயன்படுத்தல் உள்ளடங்கலாக இரத்தத்தை சிறப்பாக மருத்துவ தேவைக்கு பயன்படுத்தல் மூலம் தேவையற்ற ஏற்றல்கள் குறைக்கப்படலாம். இரத்தம் பாதுகாக்கப்படல் மற்றும் அதன் பயனுள்ள மருத்துவ பயன்பாடு என்பவற்றை உறுதி செய்வதற்கு பொருத்தமான மருத்துவ ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்படல் வேண்டும்.

6. **ஆய்வுகூட சேவைகள்:** மருத்துவ ரீதியாக (உ-ம்: வயிற்றுப் போக்கு, கடுமையான சுவாசத் தொற்றுக்கள்) அல்லது துரிதமான ஆய்வறிக்கை சோதனைகள் அல்லது நுண்ணோக்கியியல் (உ-ம்: மலேரியா) ஊடாக பெரும்பாலும் பொதுவான பரவக் கூடிய நோய்களை கண்டறியலாம். சந்தேகத்திற்கிடமான நோய்த் தாக்கத்தின் காரணத்தை உறுதி செய்வதற்கு, சம்பவ முகாமைத்துவ தீர்மானங்களுக்கு உதவும் நோய் கலாசாரம் மற்றும் பக்ரீரியாவுக்கு எதிரான கூருணர்வை சோதனை செய்வதற்கு (உ-ம்: இரத்தக் கழிச்சல்) மற்றும் பாரிய நோய்த்தடுப்பு சுட்டிக்காட்டப்படும் சந்தர்ப்பங்களில் தடுப்பு மருந்துகளை தெரிவு செய்வதற்கு (உ-ம்: மெனிங்கோக்காகல் மூளைக்காய்ச்சல்) ஆய்வு கூட சோதனைகள் மிகவும் பயனுள்ளவையாகும். சர்க்கரை வியாதி போன்ற குறிப்பிட்ட பரவுந் தன்மையற்ற நோய்களுக்கு, நோயறிதலுக்கும் மற்றும் சிகிச்சைக்கும் ஆய்வுகூட சோதனைகள் அத்தியாவசியமாகும்.

7. **நடமாடும் சிகிச்சை நிலையங்கள்:** சில அனர்த்தங்களின் போது, சுகாதார பராமரிப்பு சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரவேசம் உடைய தனிமைப்படுத்தப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடமாடும் சிகிச்சை நிலையங்களை செயற்படுத்த வேண்டிய தேவை உருவாகலாம். மலேரியா போன்ற திடீர் நோய்த் தொற்றுக்கு, அதிக எண்ணிக்கையில் மக்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில், சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான அதிகளவு பிரவேசத்தை வழங்கும் முக்கியமான சிகிச்சை வழியாக நடமாடும் சிகிச்சை நிலையங்கள் தம்மை நிரூபித்துள்ளன. சுகாதார துறையின் முன்னணி நிறுவனம் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடனான கலந்தாய்வின் பின்னரே நடமாடும் சிகிச்சை நிலையங்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் (சுகாதார முறைமைகள் தரம் 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

8. **கள வைத்தியசாலைகள்:** சில சந்தர்ப்பங்களில், தற்போதுள்ள வைத்தியசாலைகள் மோசமாக சேதமடைந்துள்ள அல்லது அழிவடைந்துள்ள

சந்தர்ப்பங்களில் சுகாதார பராமரிப்புக்களை வழங்குவதற்கான ஒரே வழியாக கள வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், ஏற்கனவே உள்ள வைத்தியசாலைகளுக்கு வளங்களை வழங்குவதே பயனுள்ளதாக இருக்கும். இதன் மூலம் அந்த வைத்தியசாலைகள் மீண்டும் செயற்பட ஆரம்பிக்கும் அல்லது மேலதிக சுமையை எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கும். உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயங்களுக்கு (முதல் 48 மணித்தியாலங்கள்) உடனடி சிகிச்சை வழங்குவதற்கு, உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு இரண்டாம் பாதுகாப்பு வழங்குவதற்கு மற்றும் வழமையான சத்திர சிகிச்சை மற்றும் மகப்பேற்று அவசரங்களுக்கு (நாள் 3இலிருந்து 15வரை) கள வைத்தியசாலைகளை அமைப்பது அல்லது சேதமடைந்த உள்ளூர் வைத்தியசாலை புனரமைக்கப்படும் வரை தற்காலிக வசதிகளை வழங்குவது என்பன மிகவும் பொருத்தமானதாக இருக்கலாம். ஏனெனில், கள வைத்தியசாலைகள் பொதுவாக தெரியக் கூடியன. இவற்றை அமைப்பதற்கான அழுத்தங்கள் பொதுவாக நிதியுதவி வழங்கும் அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், தேவை மற்றும் பெறுமதியான சேவையின் அடிப்படையில் அமைந்ததாக மாத்திரம் கள வைத்தியசாலைகளை செயற்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானது ஆகும்.

9. **நோயாளிகளின் உரிமைகள்:** தனியுரிமை மற்றும் நம்பகத் தன்மையை உறுதி செய்யும் வகையில் சுகாதார வசதிகள் மற்றும் சேவைகள் வடிவமைக்கப்படல் வேண்டும். மருத்துவ அல்லது அறுவை சிகிச்சை நடைமுறைகளுக்கு முன்னர் ஒப்புதல் வழங்கல் என்பது நோயாளர்களிடமிருந்து (அல்லது அவர்களால் இயலாத சந்தர்ப்பங்களில் அவர்களது பாதுகாவலர்களிடமிருந்து) பெறப்படல் வேண்டும். ஒவ்வொரு நடைமுறையிலும் என்ன உள்ளடங்கியுள்ளது, எதிர்பார்க்கப்படும் பலன்கள், சாத்தியமான ஆபத்துக்கள், செலவு மற்றும் கால அளவு என்பன குறித்து அறிந்து கொள்வதற்கான உரிமை நோயாளர்களுக்கு உண்டு என்பதனை சுகாதார ஊழியர்கள் புரிந்து வைத்திருக்க வேண்டும்.

10. **சுகாதார பராமரிப்பு அமைப்புக்களில் மற்றும் நோயாளர் பாதுகாப்பில் தொற்றுக் கட்டுப்பாடு:** அனர்த்தங்களின் போது பயனுள்ள மறுசீரமைப்புக்கு, தொடர்ச்சியான தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு (IPC) நிகழ்ச்சிகள் தேசிய மற்றும் சுற்றயல் மட்டங்களிலும், பல்வேறுப்பட்ட சுகாதார பராமரிப்பு வசதிகள் மட்டங்களிலும் அமுலாக்கப்படல் வேண்டும். இவ்வாறான நிகழ்ச்சிகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்:

- விளக்கப்பட்ட IPC கொள்கைகள் (உ-ம்: சாத்தியமான ஆபத்துக்களை அடையாளங் காண்பதற்கான தொடர்ச்சியான மற்றும் மேலதிக தொற்று கட்டுப்பாடு நடவடிக்கைகள்)
- வரையறுக்கப்பட்ட நோக்கம், செயற்பாடு மற்றும் பொறுப்பு என்பவற்றுடன் தொற்றுக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சியை முன்னெடுப்பதற்கு தகுதி வாய்ந்த, அர்ப்பணிப்புள்ள தொழில் நுணுக்க ஊழியர்கள் (IPC அணி)
- பரவக் கூடிய நோய்கள் அதிகரிப்பதனை கண்டறிவதற்கு முன்னெச்சரிக்கை கண்காணிப்பு அமைப்பு
- அவசர காலத்தின் போதான மறுசீரமைப்பின் நடவடிக்கைகள் (உ-ம்: ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல்) மற்றும் விநியோகத்திற்கான வரவுசெலவுத் திட்டத்தை தீர்மானித்தல்.

- தொற்று நோயிற்காக வரையறுக்கப்பட்ட தரமான முன்னெச்சரிக்கைகள் மற்றும் மேலதிக விசேட முன்னெச்சரிக்கைகளை வலுப்படுத்தவும்.
- நிர்வாக கட்டுப்பாடுகள் (உ-ம்: தனிமைப்படுத்தப்பட்ட கொள்கைகள்) மற்றும் சுற்றுச் சூழல் மற்றும் பொறியியல் கட்டுப்பாடுகள் (உ-ம்: சுற்றுச் சூழல் காற்றோட்டத்தை மேம்படுத்தல்).
- தனிப்பட்ட பாதுகாப்பு கருவிகள் பயன்படுத்தப்படல்
- IPC செயற்பாடுகள் கண்காணிக்கப்படல் மற்றும் பரிந்துரைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படல்.

11. **சுகாதார பராமரிப்பு கழிவுகள்:** சுகாதார பராமரிப்பு வசதிகளின் ஊடாக வெளிப்படும் தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகள் தொற்று ஏற்படுத்தும் கூர்மையற்ற கழிவு, கூர்மையானவை மற்றும் தொற்று ஏற்படுத்தாத பொதுவான கழிவுகள் என பிரிக்கப்படலாம். சுகாதார பராமரிப்பில் கழிவுகளை மிகவும் மோசமாக முகாமைத்துவம் செய்வதன் காரணமாக, சுகாதார ஊழியர்கள், சுத்திகரிப்பாளர்கள், கழிவுகளை கையாள்பவர்கள், நோயாளிகள் மற்றும் சமுதாயத்தில் உள்ள ஏனையோர் எச்.ஐ.வி, ஈரல் அழற்சி பீ மற்றும் சீ போன்ற தொற்றுக்கு இலக்காலாம். தொற்று ஏற்படுவதன் சவாலை குறைப்பதற்காக இறுதி பிரிவில் குறிப்பிட்ட அகற்றல் நடைமுறைகளின் ஊடாக கழிவு ஏற்படும் இடத்திலேயே முறையாக பிரித்தல் என்பது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். சுகாதார பராமரிப்பு துறையில் கழிவுகளை கையாள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளவர்கள், முறையாக பயிற்றப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன், பாதுகாப்பு ஆடைகளையும் (கையுறைகள் மற்றும் பாதணிகள் ஆகியன ஆகக் குறைந்த தேவைகள் ஆகும்) அணிதல் வேண்டும். கழிவுக்கு ஏற்ற வகையில் அவை அகற்றப்படல் வேண்டும். உதாரணமாக, தொற்று ஏற்படுத்தக் கூடிய கூர்மையற்ற கழிவுகள் மற்றும் கூர்மையான கழிவுகள் முறையாக அகற்றப்பட்டு புதைக்கப்படல் வேண்டும் அல்லது எரிக்கப்படல் வேண்டும்.

12. **இறந்த உடல்களை கையாளுதல்:** அனர்த்தத்தினால் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புக்கள் ஏற்படும் போது, அதிக எண்ணிக்கையிலான சடலங்களை முகாமை செய்ய நேரிடும். பெரும் எண்ணிக்கையிலான மனித உடலங்களை பொது மயானங்களில் புதைப்பது என்பது பொதுவாக அவை உடனடியாக புதைக்கப்படாவிட்டால் அல்லது எரிக்கப்படாவிட்டால் உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் என்ற பொய்யான நம்பிக்கையின் அடிப்படையிலானதாகும். சில சந்தர்ப்பங்களில் மாத்திரமே (உ-ம்: கொலரா அல்லது இரத்தப் போக்கு நோய்) மனித சடலங்கள் சுகாதார அச்சுறுத்தலை ஏற்படுத்துவதுடன், விசேட முன்னெச்சரிக்கைகள் அவசியமாக இருக்கும். ஒழுங்கற்ற வகையில் சடலங்கள் பொது மயானங்களில் அடக்கம் செய்யப்படக் கூடாது. தமது குடும்ப உறுப்பினர்களை அடையாளங் காணவும் மற்றும் கலாசார ரீதியில் பொருத்தமான மரணச் சடங்குகளை முன்னெடுப்பதற்கும் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். சட்ட உரிமைகளைப் பெறுவதற்கு தேவையான இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுவானதாக அடக்கம் செய்யப்படுவது தடையாக இருக்கும். வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களாக சடலங்கள் புதைக்கப்படும் போது, தடயவியல் சிக்கல்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 2, வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???).**

சுகாதார முறைமைகள் தரம் 2: மனித வளங்கள்

மக்களின் சுகாதார தேவைகளை எட்டுவதற்கு போதிய அறிவு மற்றும் திறன்கள் கலந்துள்ள பயிற்றப்பட்ட மற்றும் தகுதியுடைய சுகாதார பணியாளர் -களினால் வழங்கப்படும் சுகாதார சேவைகள்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அடிமட்ட சுகாதார மதிப்பீட்டின் முக்கியமான அம்சமாக ஊழியர்களின் மட்டங்களையும், இயலுமையையும் மீளாய்வு செய்தல்.
- ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் திறமை கலப்பு மற்றும் பால்நிலை மற்றும்/அல்லது இன வீதம் என்பவற்றின் சமத்துவமின்மையை இயலுமான சந்தர்ப்பங்களில் அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- உள்ளூர் சுகாதார பணியாளர்களுக்கு உதவி வழங்கல், அத்துடன், அவர்களுடைய திறனை கருத்திற் கொண்டு முழுமையாக சுகாதார சேவைகளுக்குள் ஒன்றிணைத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- ஒவ்வொரு சுகாதார வசதியிலும் உதவி செயற்பாடுகளுக்கு போதிய துணை ஊழியர்களை உறுதி செய்தல்.
- சிகிச்சை நிலைய நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டிகளை பயன்படுத்துவது தொடர்பில் சிகிச்சை நிலைய ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- பின்னூட்டம் உள்ளடங்கலாக தரங்கள் மற்றும் வழிகாட்டிகளினை பின்பற்றும் ஊழியர்களின் செயற்பாட்டை உறுதி செய்வதற்கு வழமையான அடிப்படையில் உதவிகரமான மேற்பார்வையை ஊழியர்களுக்கு வழங்குதல்.
- பயிற்சி நிகழ்ச்சிகளை தரப்படுத்தல். அத்துடன், அவற்றை முக்கியமான சுகாதாரத் தேவைகள் மற்றும் திறன்களின் இடைவெளிகளுக்கு ஏற்ற வகையில் முன்னுரிமைப்படுத்தல்.
- அனைத்து சுகாதார பணியாளர்களுக்கும், அனைத்து நிறுவனங்களுக்கு இடையில் இணங்கிக் கொள்ளப்பட்ட வகையில் தேசிய சுகாதார அதிகா-ரிகளுடனான ஒருங்கிணைப்புடன் நியாயமான மற்றும் சாதாரணமான ஊதியம் வழங்கப்படுவதனை உறுதி செய்தல்.
- அனைத்து சுகாதார பணியாளர்களுக்கும் அடிப்படை போஷாக்கு மற்றும் பாதுகாப்பு உள்ளடங்கலாக பாதுகாப்பான பணிபுரியும் சுற்றுச் சூழலை உருவாக்கல்.

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- ஆகக் குறைந்தது 22 தகுதி வாய்ந்த சுகாதார ஊழியர்கள் (வைத்தியர்கள், தாதிகள் மற்றும் செவிலித் தாய்கள்) இருத்தல் வேண்டும்:
  - ஆகக் குறைந்தது ஒரு வைத்தியர்/50,000 மக்களுக்கு
  - ஆகக் குறைந்தது ஒரு தகுதி வாய்ந்த தாதி/10,000 மக்களுக்கு
  - ஆகக் குறைந்தது ஒரு செவிலித் தாய்/10,000 மக்களுக்கு

- ஆகக் குறைந்தது ஒரு சமுதாய சுகாதார பணியாளர்(CHW)/1>000 மக்கள், ஒரு மேற்பார்வையாளர்/10 வீடுகள், வருகையாளர் மற்றும் ஒரு சிரேஷ்ட மேற்பார்வையாளர்.
- தொடர்ச்சியாக ஒரு நாளில் 50 நோயாளர்களுக்கு மேல் பார்வையிட வேண்டியதில்லை. இது வழமையாக மீறப்படுமாயின், மேலதிக சிகிச்சை ஊழியர்கள் இணைக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்பு 1 மற்றும் பிற்சேர்க்கை 3: முக்கியமான சுகாதார குறிகாட்டிகளை கணிப்பதற்கான சமன்பாடுகள் என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **ஊழியர்கள் மட்டங்கள்:** வைத்தியர்கள், தாதிகள், செவிலித் தாய்கள், சிகிச்சை அளிக்கும் அதிகாரிகள் அல்லது மருத்துவ உதவியாளர்கள், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தகர், CHW மற்றும் இன்னபிறரையும், முகாமைத்துவ மற்றும் உதவி ஊழியர்களையும் உள்ளடங்கலாக பரந்தளவிலான சுகாதார பணியாளர்களை உள்ளடக்கியதாக சுகாதார பணி பலம் உள்ளது. மக்கள் தொகைக்கான, சுகாதார பணியாளர்களின் அனுகூலமான நிலை தொடர்பில் ஒருமித்த தன்மை எதுவும் இல்லை. இது சூழ்நிலைக்கு, சூழ்நிலை மாற்றமடையலாம். எவ்வாறாயினும், சுகாதாரப் பணியாளர்கள் கிடைக்கக் கூடிய நிலைக்கும் மற்றும் சுகாதார இடையீடுகளுக்கும் இடையில் தொடர்பு உள்ளது. உதாரணமாக, ஒரு பெண் சுகாதார ஊழியர் அல்லது ஒதுக்கப்பட்ட இனக் குழுவின் ஒரு பிரதிநிதி சுகாதார சேவையில் இருக்கும் போது, பெண்கள் அல்லது சிறுபான்மை குழுக்களைச் சேர்ந்தவர்கள் சுகாதார சேவையை நாடி வருவதனை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்க முடியும். சுகாதார தேவைகளை அடைவது தொடர்பில் சிக்கலான இடைவெளிகள் உள்ள பகுதிகளில் சுகாதார பணியா-ளர்களின் மீள ஆட்சேர்ப்பு மற்றும்/அல்லது ஆட்சேர்ப்பின் ஊடாக ஊழியர்களின் சமத்துவமின்மையை சரி செய்யலாம் (மிக முக்கியமான தரம் 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???).**
2. **ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல் மற்றும் மேற்பார்வை செய்தல்:** சுகாதார பணியாளர்களுக்கு முறையான பயிற்சிகள், திறன்கள் மற்றும் மேற்பார்வை உதவி என்பன அவர்களுடைய பொறுப்பு நிலைகளுக்கு வழங்கப்படல் வேண்டும். ஊழியர்களின் அறிவு புதுப்பிக்கப்படுவதனை உறுதி செய்வதற்கு அவர்களை பயிற்றுவிக்க வேண்டியதும், மேற்பார்வை செய்ய வேண்டியதும் நிறுவனங்களின் பொறுப்பாகும். ஊழியர்கள் தொடர்ச்சியாக கல்வியினைப் பெறாத சந்தர்ப்பங்களில் அல்லது புதிய நெறிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் பயிற்சி மற்றும் மேற்பார்வை என்பன முன்னுரிமை வழங்கப்படும் விடயங்களாக இருத்தல் வேண்டும். இயலுமான வரையில், முக்கியமான சுகாதாரத் தேவைகள் மற்றும் திறன் இடைவெளிகள் மேற்பார்வையின் ஊடாக அடையாளங் காணப்பட்டு, அவற்றுக்கு அமைய பயிற்சி நிகழ்ச்சிகள் தரப்படுத்தப்படுவதுடன், முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். யாருக்கு, எது தொடர்பில், யாரால், எங்கு மற்றும் எப்போது பயிற்சி அளிக்கப்பட்டது என்பது தொடர்பிலான தகவல்கள் பேணப்படல் வேண்டும். இந்த தகவல்கள் உள்ளூர் சுகாதார அதிகாரிகளின் மனிதவளப் பிரிவுடன் பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 6ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

சுகாதார முறைமைகள் தரம் 3: மருந்துகள் மற்றும் மருத்துவ விநியோகம்

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்கு மக்களுக்கு எப்போதும் பிரவேசம் உள்ளமை.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பொருத்தப்பாட்டினை தீர்மானிப்பதற்கு மறுசீரமைப்பின் ஆரம்ப கட்டத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாட்டின் வசமுள்ள அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலை மீளாய்வு செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- சுகாதாரத் தேவைகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் திறன் மட்டத்திற்கு பொருத்தமான தரப்படுத்தப்பட்ட அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ கருவிகளின் பட்டியலை உருவாக்கி, அமுல்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- பயனுள்ள மருத்துவ முகாமைத்துவ முறையை உருவாக்கல்/உள்வாங்கல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- பொது சுகவீனத்திற்கு சிகிச்சையளிப்பதற்கான அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கக் கூடியதாக உள்ளமையை உறுதி செய்தல்.
- சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களை பின்பற்றுமாயின் மாத்திரம் மருந்துப் பொருட்கள் நன்கொடையாக வழங்கப்படுவதனை ஏற்றல். இந்த வழிகாட்டிகளை பின்பற்றாத மருந்து நன்கொடைகளை பயன்படுத்த வேண்டாம். அவற்றை உடனடியாக பாதுகாப்பான வகையில் அகற்றவும்.

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தேவையான பொருட்கள் போன்ற சுகாதார வசதிகள் ஒரு வாரத்திற்கும் அதிக காலம் சேமிப்பில் இல்லாது இருக்கக் கூடாது (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **அத்தியாவசிய மருந்துகள் பட்டியல்:** பெரும்பாலான நாடுகளில் அத்தியாவசிய மருந்துகளின் கட்டமைக்கப்பட்ட பட்டியல் உண்டு. தேவையான சந்தர்ப்பங்களில், பொருத்தப்பாட்டினை உறுதி செய்வதற்கு முன்னணி சுகாதார அதிகார சபையுடன் மறுசீரமைப்பின் ஆரம்ப கட்டத்தில் கலந்தாய்வு முன்னெடுத்து இந்த பட்டியல் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில், அத்தியாவசிய மருந்துகளுக்கான மாற்றுக்கள் தேவையாக இருக்கும். உதாரணமாக, பரிந்துரைக்கப்பட்ட நுண்ணுயிர்க்கொல்லிகளுக்கான எதிர்ப்பு தொடர்பில் ஆதாரம் இருக்குமாயின் மாற்று மருந்துகள் அவசியமாக இருக்கும். புதுப்பிக்கப்பட்ட பட்டியல் கிடைக்க கூடியதாக இல்லாது இருப்பின், WHOஇனால் வடிவமைக்கப்பட்ட வழிகாட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். உதாரணமாக, WHOஇன் அத்தியாவசிய மருந்துகளுக்கான மாதிரி பட்டியல். தரமான முன்பொதியிடப்பட்ட தொகுதிகளின்

பயன்பாடு அனர்த்தத்தின் ஆரம்ப கட்டங்களில் மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

2. **மருத்துவ கருவிகள்:** பல்வேறுபட்ட சுகாதார பராமரிப்பு மட்டங்களில் கிடைக்கக் கூடியதாக உள்ள தேவையான கருவிகளின் பட்டியல் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். ஊழியர்களுக்கு தேவையான திறன் சார்ந்ததாக இது இணைக்கப்படல் வேண்டும்.
3. **மருந்து முகாமைத்துவம்:** மருந்து முகாமைத்துவம் தொடர்பில் பயனுள்ள முறையொன்றை சுகாதார நிறுவனங்கள் உருவாக்க வேண்டும். பயனுறுதித் தன்மை, தரமான மருந்துகளின் செலவு குறைவு மற்றும் அறிவார்ந்த பயன்படுத்தல், சேமித்தல் மற்றும் காலாவதியான மருந்துகளினை பாதுகாப்பாக அப்புறப்படுத்தல் என்பவற்றை உறுதி செய்வதனை இலக்காகக் கொண்டதாக அந்த முறைமை அமைதல் வேண்டும். மருத்துவ முகாமைத்துவச் சக்கரத்தின் நான்கு பிரதான அம்சங்களாகிய தெரிவு செய்தல், கொள்வனவு செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் பயன்படுத்தல் என்பவற்றின் அடிப்படையிலானதாக அமைதல் வேண்டும்.
4. **தடப்பொருட்கள்:** மருந்து முகாமைத்துவ முறைமையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய அல்லது முக்கியமான மருந்துகளை இது உள்ளடக்கியிருக்கும். தடப்பொருட்களாக தெரிவு செய்யப்பட வேண்டிய பொருட்கள் உள்ளூர் பொதுமக்களின் சுகாதார முன்னுரிமைகளுடன் சம்பந்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். அத்துடன், சுகாதார வசதிகளில் எந்தவொரு சந்தர்ப்பங்களில் கிடைக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாக, அமொக்சளின் (amoxicillin) மற்றும் பரசிட்டமோல் (paracetamol) என்பவற்றை உள்ளடக்கல்.

சுகாதார முறைமைகள் தரம் 4: உடல் நலன் நிதியுதவி

அனர்த்தத்தின் போதான காலப்பகுதியில் மக்களுக்கு இலவசமான ஆரம்ப உடல் நலன் பராமரிப்புக்கு பிரவேசம் இருத்தல் வேண்டும்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனர்த்தத்தின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோக மையத்தில் இலவச சுகாதார சேவைகளை வழங்குவதற்கு நிதி வளங்களை அடையாளங் காணல் மற்றும் ஒன்று திரட்டல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அரசாங்க முறைமையின் ஊடாக பயன்படுத்துபவர்களின் கட்டணம் அறவிடப்படும் போது, அனர்த்த மறுசீரமைப்பின் போது அவற்றை இல்லாது செய்வதற்கு அல்லது தற்காலிகமாக நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- பயன்படுத்துபவர்களுக்கான கட்டணத்தை நீக்குதல் மற்றும்/அல்லது இரத்துச் செய்தல் மூலம் உருவாகக் கூடிய எந்தவொரு நிதி இடைவெளிகளையும் சரிசெய்வதற்கும் மற்றும் சுகாதார சேவைகளுக்கான அதிகரித்துள்ள கேள்வியை

எதிர்கொள்வதற்கும் ஏற்ற வகையில் சுகாதார முறைமைக்கு நிதி மற்றும் தொழில் நுணுக்க உதவியை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனர்த்த மறுசீரமைப்பின் போது அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் அனர்த்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக ஆரம்ப உடல் நலன் பராமரிப்பு சேவைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **உடல் நலன் நிதியுதவி:** சூழ்நிலைக்கு ஏற்றதாக அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவதற்கு செலவு வேறுபடும். அவ்வாறான சூழ்நிலையில், நடைமுறையில் உள்ள சுகாதார முறைமை, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை மற்றும் அனர்த்தத்தினால் உருவாகியிருக்கக் கூடிய விசேடமான சுகாதாரத் தேவைகள் என்பன உள்ளடங்கும். WHOஇன் பருப்பொருளியல் மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆணைக்குழுவுக்கு அமைய, ஆகக் குறைந்த தொகுதி அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவதற்கு, குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் ஆகக் குறைந்தது வருடமொன்றுக்கு, நபரொருவருக்கும் 40 அமெரிக்க டொலர்கள் அவசியமாகும் (2008ஆம் ஆண்டு கணிப்பீடுகள்). அனர்த்த சந்தர்ப்பங்களில் சுகாதார சேவைகளை வழங்குவது என்பது, சாதாரண சந்தர்ப்பங்களில் சுகாதார சேவைகளை வழங்குவதிலும் பார்க்க அதிக செலவுக்குரியது.
2. **பயன்படுத்துநர் கட்டணம்:** சேவை விநியோக மையத்தில் பயனாளிகளால் வழங்கப்படும் நேரடியான கட்டணம் பயன்படுத்துநர் கட்டணம் எனப்படுகின்றது. பயன்படுத்துநர் கட்டணம் என்பது சுகாதார சேவைகளை அணுகுவதனை தாமதப்படுத்துகின்றது. அத்துடன், பலவீனமான மக்கள் எப்போதும், தமக்கு தேவையான சந்தர்ப்பங்களில் சுகாதார சேவைகளை அணுக முடியாதுள்ளது. நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் பொருட்கள், உதவிகளைப் பெறுபவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பதே, அடிப்படையான மனிதநேய கோட்பாடாகும். இது சாத்தியமாக இல்லாத சூழ்நிலைகளில், சுகாதார சேவைகளுக்கான பிரவேசத்தை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணம் மற்றும்/அல்லது சான்றுச் சீட்டுக்கள் வழங்கப்படலாம் (உணவுப் பாதுகாப்பு - பணம் மற்றும் சான்றுச் சீட்டு பரிமாற்றங்கள தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). வருவாய் மற்றும் பயன்பாட்டினை ஈடுசெய்வதற்கு சுகாதார முறைமைக்கு ஆதரவளிக்கும் ஏனைய நடவடிக்கைகளுடன் இணைந்ததாக பயன்படுத்துநர்களுக்கான கட்டணம் இரத்துச் செய்யப்படல் முன்னெடுக்கப்படல் வேண்டும் (உ-ம்: சுகாதார ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கல், மேலதிக மருந்துப் பொருட்கள் வழங்கல்). பயன்படுத்துநர் கட்டணம் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் சேவைகளின் அணுகுந் தன்மை மற்றும் தரம் தொடர்பில் கண்காணித்தலை முன்னெடுக்கவும்,

சுகாதார முறைமைகள் தரம் 5: சுகாதார தகவல் முகாமைத்துவம்

சுகாதார சேவைகளின் வடிவமைப்பு மற்றும் விநியோகம் என்பது சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதார தரவுகளை சேமித்தல், பகுப்பாய்வு செய்தல், விளக்கல் மற்றும் பயன்படுத்தல் என்பவற்றினால் வழிநடத்தப்படல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நடைமுறையில் உள்ள சுகாதார தகவல் முறைமையின் (HIS) பயன்பாடு, அதன் உள்வாங்கல் அல்லது HIS மாற்று பயன்பாடு என்பன தொடர்பில் தீர்மானித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- தேவைப்படும் போது, HISஇல் கிடைக்காதுள்ள மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய சுகாதார சேவைகளை தீர்மானிப்பதில் சிக்கலாக உள்ள தகவல்களை சேகரிப்பதற்கான மதிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகளை முன்னெடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- அனைத்து பதிவு செய்யக் கூடிய நோய்கள் மற்றும் சுகாதார நிலைமைகளை தரப்படுத்தப்பட்ட சம்பவ வரைவிலக்கணங்களை உருவாக்கல் மற்றும்/ அல்லது பயன்படுத்தல். அத்துடன், அனைத்து நிறுவனங்களாலும் அவை பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்தல்.
- HISஇன் ஒரு அம்சமாக திடீர் கண்டறிதலுக்கு கண்காணிப்பு மற்றும் ஆரம்ப எச்சரிக்கை (EWARN) முறைகளை வடிவமைத்தல். இயலுமான சந்தர்ப்பங்களில் தற்போதுள்ள HISஇன் மீது உருவாக்கல் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களை தடுத்தல் தரம் 3 மற்றும் பிற்சேர்க்கை 2: வாராந்த ஆய்வறிக்கைப் படிவங்களின் மாதிரி பக்கம் ???).
- HISஇன் ஊடாக முன்னுரிமை வழங்க வேண்டிய நோய்கள் மற்றும் உடல் நிலைமைகளை அடையாளங் காணல் மற்றும் அறிக்கையிடல்.
- பிரதிபலிக்கும் நிறுவனங்கள் அனைத்தும் இசைந்து, மக்கள் தொகை பொதுவான அலகு பயன்படுத்தப்படல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- கண்காணிப்பு மற்றும் வேறு தரவுகளை சுகாதார வசதிகள் மற்றும் நிறுவனங்கள் முன்னணி நிறுவனத்திற்கு தொடர்ச்சியான முறையில் சமர்ப்பிக்கப்படல். இந்த அறிக்கைகளின் அலைவரிசையானது சூழ்நிலை மற்றும் தரவின் தன்மைக்கு ஏற்ற வகையில் மாறுபடும் (உ-ம்: நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த).
- ஆய்வுகள் போன்ற சம்பந்தப்பட்ட வளங்களின் குறைநிரப்பு தரவுகளை கண்காணிப்பு தரவினை விளக்குவதற்கும், தீர்மானம் எடுத்தலுக்கு உதவி புரிவதற்கும் தொடந்து பயன்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- தனிநபர்கள் மற்றும்/அல்லது மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்துவதற்கு தரவுகளின் பாதுகாப்புக்கு போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அறிக்கையிடல் காலப்பகுதிக்கு 48 மணித்தியாலங்களுக்குள் தலைமை நிறுவனத்திற்கு அனைத்து சுகாதார வசதிகளும் மற்றும் நிறுவனங்களும் தொடர்ச்சியாக HIS அறிக்கையை வழங்கும்.
- சுகவீனம் ஆரம்பித்து 24 மணித்தியாலங்களுக்குள் தொற்று மூலம் பரவிய நோய்கள் தொடர்பான சம்பவங்கள் அனைத்து சுகாதார வசதிகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிக்கையிடப்படல் வேண்டும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களை தடுத்தல் தரம் 3ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- நோய்த் தொற்றின் பகுப்பாய்வு மற்றும் விளக்கம் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த சுகாதார தகவல் அறிக்கையை தலைமை நிறுவனம் தயாரிக்கும். அத்துடன், இதில் சுகாதார சேவைகளின் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் பயன்பாடு தொடர்பிலான அறிக்கையும் உள்ளடங்கியிருக்கும்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சுகாதார தகவல் முறைமை:** இயலுமான சந்தர்ப்பங்களில் நடைமுறை -யில் HISஇன் அடிப்படையில் கண்காணிப்பு முறைமை உருவாக்கப்படல் வேண்டும். சில அனர்த்தங்களின் போது, புதிய அல்லது சமாந்தரமான HIS தேவையாக இருக்கலாம். இது செயற்பாட்டின் மதிப்பீடு மற்றும் நடைமுறையில் உள்ள HISஇன் போதிய தன்மை மற்றும் தற்போதைய அனர்த்தத்திற்குத் தேவையான தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம். அனர்த்த மறுசீரமைப்பின் போது சுகாதார தரவுகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். ஆனால், இத்துடன் மட்டுப்படுத்தப்படக் கூடாது
   - ஐந்து வயதுக்கு குறைந்தவர்களின் மரணம் உள்ளடங்கலாக பதிவான மரணங்கள்
   - விகிதாசார இறப்பு
   - விளைவு சம்பந்தப்பட்ட இறப்பு
   - மிகவும் பொதுவான நோய் பாதிக்கும் அளவுகள்
   - விகிதாசார நோய் பாதிக்கும் அளவு
   - சுகாதார வசதிகள் பயன்படுத்தப்படும் அளவு
   - மருத்துவ ஆலோசகர்/சிகிச்சையாளர்/நாள் எண்ணிக்கை
2. **தரவுகளின் மூலம்:** சுகாதார வசதி தரவுகளின் விளக்கம் மற்றும் பயன்பாடு என்பது, தகவல்கள் மற்றும் அதன் வரையறைகள் தொடர்பான மூலம் தொடர்பில் கவனஞ் செலுத்தல் வேண்டும். தீர்மானம் எடுத்தலுக்கான குறைநிரப்பு தரவின் பயன்பாடு என்பது, முழுமையான HISஇற்கு அத்தியாவசியமாகும். உதாரணமாக, நோய்கள் தாக்கும் அளவு அல்லது சுகாதார வசதிகளை பெறும் நடத்தை தொடர்பான தகவல்களை கணிப்பீடு செய்தல். பகுப்பாய்வினை மேம்படுத்தக் கூடிய தரவுகளின் வேறு மூலங்களில் மக்கள் தொகை அடிப்படையிலான ஆய்வுகள், ஆய்வுகூட அறிக்கைகள் மற்றும் சேவை அளவுகளின் தரம் என்பன உள்ளடங்கும். ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தர

பிரமாணங்களை பின்பற்றல் வேண்டும். அத்துடன், தரப்படுத்தப்பட்ட கருவிகள் மற்றும் நெறிமுறைகளைப் பயன்படுத்தல் வேண்டும். இயலுமான சந்தர்ப்பங்களில் சக மீளாய்வு செயற்பாட்டுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. **தரவுகளைப் பிரித்தல்:** தீர்மானம் எடுத்தலுக்கு பிரயோக ரீதியில் வழிகாட்டக் கூடியதாக பால், வயது, குறிப்பிட்ட தனிநபர்களின் பலவீனம், பாதிக்கப்பட்ட மற்றும் தங்குவதற்கு இடம் அளிக்கும் மக்கள் மற்றும் சூழ்நிலைகள் (உ-ம்: முகாம் எதிர் முகாம் அற்ற சூழ்நிலை) என்பதன் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்படல் வேண்டும். அவசர கால நிலைமையின் ஆரம்பப் பகுதியில் விளக்கமான தரவு பிரித்தல் என்பது சாத்தியமானது அல்ல. எவ்வாறாயினும், உயிரிழப்பு மற்றும் நோய் தாக்கும் தரவுகள் ஐந்து வயதுக்கு குறைவான சிறுவர்கள் என்பதன் அடிப்படையிலாவது ஆகக் குறைந்தது பிரிக்கப்படல் வேண்டும். நேரம் மற்றும் சூழ்நிலைகள் சந்தர்ப்பம் வழங்குமாயின், மேலும் விளக்கமான தரவு பிரிப்பு என்பது சாதகமான சமத்துவமின்மைகள் மற்றும் பலவீமான மக்களை அடையாளங் காண்பதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும் (மிகவும் முக்கியமான தரங்கள் 3ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **அந்தரங்கத் தன்மை:** தனிநபர்கள் மற்றும் தரவுகளுக்கு ஏற்ற வகையில் பாதுகாப்பதற்கு போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். நோயாளர் பராமரிப்பில் நேரடியாக ஈடுபடாத எவருக்கும் நோயாளர் தொடர்பான தகவல்களை நோயாளரின் அனுமதியின்றி ஊழியர்கள் வழங்கக் கூடாது. புலமை சார்ந்த, மனநல அல்லது உணர்வு சார்ந்த குறைபாடுகள் உள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். ஏனெனில், இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களிடமிருந்து முறையான உடன்பாட்டினை பெற முடியாது. சித்திரவதை அல்லது பாலியல் பலாத்காரம் உள்ளடங்கலாக வேறு மனித உரிமைகள் மீறல்களினால் ஏற்பட்ட காயம் சம்பந்தப்பட்ட தரவுகள் மிகவும் எச்சரிக்கையுடன் கையாளப்படல் வேண்டும். பாதிக்கப்பட்ட தனிநபர்கள் முறைசார் உடன்பாட்டினை வழங்குவார்களாயின், பொருத்தமான செயற்பாட்டாளர்கள் அல்லது நிறுவனங்களுக்கு இந்த தகவல்களை பரிமாறுவது தொடர்பில் அவதானஞ் செலுத்தப்படல் வேண்டும் (சுகாதார முறைமைகள் தரம் 1 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 7-12என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

மாதிரி நோய் தாக்கும் அளவு, EWARN மற்றும் நோய் தாக்கும் அளவு கண்காணித்தல் படிவங்களை பிற்சேர்க்கை 2இலும், முக்கியமான சுகாதார குறிகாட்டிகளை கணிப்பதற்கான சமன்பாடுகளை பிற்சேர்க்கை 3இலும் பார்க்கவும்.

சுகாதார முறைமைகள் தரம் 6: தலைமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு

ஆகக் கூடிய தாக்கத்தை எட்டுவதற்கு நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்கு இடையில் ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதார சேவைகளுக்கான பிரவேசம் மக்களுக்கு இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள் தலைமை வகித்தல் அல்லது ஆகக் குறைந்தது சுகாதார துறை ஒருங்கிணைப்பில் நெருக்கமாக செயற்படுதலை இயலுமான சந்தர்ப்பங்களில் உறுதி செய்தல்.
- தேவையான இயலுமை மற்றும் விருப்பத்தின் பற்றாக்குறை சுகாதார அமைச்சிடம் காணப்படும் நிலையில், பிரதிபலிப்பாக தலைமைத்துவத்தை வழங்கும் போது, தேவையான இயலுமையுடன் மாற்ற நிறுவனம் அடையாளங் காணப்பட்டு, சுகாதாரத் துறை ஒருங்கிணைப்பினை தலைமையேற்றல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- மத்திய, துணை, தேசிய மற்றும் கள மட்டங்களில் சுகாதாரத் துறைக்குள், சுகாதார துறைகளுக்கும், ஏனைய துறைகளுக்கும் இடையில் மற்றும் பொருத்தமான எழுந்தமான குழுக்களுக்கு இடையில் உள்ளூர், மற்றும் வெளியக பங்காளர்களுக்கு தொடர்ச்சியான சுகாதார ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் மிகவும் முக்கியமான தரம் 2ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- மக்கள் தொகையின் குறிப்பிடளவு உள்ளடக்கத்தை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு சுகாதார நிறுவனத்தினதும் குறிப்பிடத்தக்க பொறுப்புக்கள் மற்றும் இயலுமைகளை தெளிவுப்படுத்தி, ஆவணப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- குறிப்பிட்ட சூழ்நிலை ஒன்றுக்கு தேவையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் சுகாதார ஒருங்கிணைப்பு அமைப்புக்குள் பணிசெய்யும் குழுக்களை உருவாக்கல் (உ-ம்: வெடித்த ஆயத்தமாயிருத்தல் மற்றும் மறுசீரமைப்பு, இனப்பெருக்கச் சுகாதாரம்).
- புதிய செய்திகள் மற்றும் சுகாதாரத் துறை துணுக்குகளை தொடர்ச்சியாக தயாரித்து, விநியோகித்தல்.

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- இடையீடுகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு மற்றும் அவசர கால மறுசீரமைப்பின் ஆரம்பத்தில் தலைமை மற்றும் பங்காளர் நிறுவனங்களின் பாத்திரங்களை விளக்குவதற்கு தலைமை நிறுவனமானது சுகாதார துறை மறுசீரமைப்பு மூலோபாய ஆவணத்தினை வடிவமைத்துள்ளது (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சுகாதார நிறுவனங்களுக்கு தலைமை வகித்தல்:** தலைமை சுகாதார நிறுவனமாகவும் மற்றும் சுகாதாரத் துறை மறுசீரமைப்புக்களை தலைமை வகிப்பதற்கு பொறுப்புள்ள நிறுவனமாகவும் சுகாதார அமைச்சு இருத்தல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில், சுகாதார அமைச்சானது பயனுள்ள மற்றும் பக்கச்சார்பற்ற வகையில் தலைமைத்துவத்தினை வழங்குவதற்கான இயலுமை அல்லது விருப்பு பற்றாக்குறையுடையதாக இருக்கும். இந்த சூழ்நிலையில், உலக சுகாதார தொகுதிகளின் தலைமை நிறுவனமான WHO பொதுவாக இவ்வாறான பொறுப்புக்களை எடுக்கும். சில சந்தர்ப்பங்களில், சுகாதார அமைச்சு மற்றும் WHO என்பன இயலுமை பற்றாக்குறையுடன் இருக்கும் போது, நடவடிக்கைகளை வேறு நிறுவனம் ஒருங்கிணைக்க வேண்டும். பிரதிபலிக்கும் சுகாதார நிறுவனங்கள் உள்ளூர் சுகாதார அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பு செய்வதனை மற்றும் உள்ளூர் சுகாதார முறைமைகளின் இயலுமைகளுக்கு அவை ஆதரவு வழங்குவதனை தலைமை சுகாதார நிறுவனம் உறுதி செய்தல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).
2. **சுகாதாரத் துறை மூலோபாயம்:** சுகாதாரத் துறைக்குள் அவசர கால மறுசீரமைப்புக்கு ஒட்டு மொத்த மூலோபாயத்தை வடிவமைக்க வேண்டியது முன்னணி சுகாதார நிறுவனத்தின் முக்கியமான பொறுப்பாகும். அதேவேளை, சுகாதார துறை முன்னுரிமைகள் மற்றும் குறிக்கோள்களை குறிப்பிடும் மற்றும் அவற்றை எட்டுவதற்கான மூலோபாயங்களை குறிப்பிடும் ஆவணம் ஒன்றும் தயாரிக்கப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சமுதாயப் பிரதிநிதி -களுடன் இயலுமான வரையில் உள்ளடக்கல் செயல்முறையை உறுதி செய்து கலந்தாய்வின் பின்னரே இவ்வாறான ஆவணம் வடிவமைக்கப்படல் வேண்டும்.
3. **ஒருங்கிணைத்தல் கூட்டங்கள்:** இவை நடவடிக்கை சார்ந்தவை. தகவல்கள் பரிமாறப்படும், முன்னுரிமைகள் அடையாளங் காணப்படும் மற்றும் கண்காணிக்கப்படும், பொதுவான சுகாதார மூலோபாயங்கள் வடிவமைக்கப்படல் மற்றும் உள்வாங்கப்படல், விசேட நடவடிக்கைகள் ஒதுக்கப்படல் மற்றும் தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகள் மற்றும் இடையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படல் என்பவற்றுக்கான தளத்தை இவை வழங்கும். அனைத்து சுகாதார பங்காளர்களும் பொதுவான விகுதிகளை, மற்றும் வேறு சம்பந்தப்பட்ட அலகுகள், கருவிகள், வழிகாட்டிகள் மற்றும் தரங்களை இயலுமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதனை உறுதி செய்வதற்கு இந்த கூட்டங்கள் பயன்படும். அனர்த்தத்தின் ஆரம்ப காலப்பகுதியில் அடிக்கடி கூட்டங்கள் நடைபெறல் வேண்டும்.

2. அத்தியாவசிய சுகாதார சேவைகள்

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் சுகாதாரத் தேவைகளை அடையாளங் காண்பதற்கு மிகவும் பொருத்தமான தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் சுகாதார சேவைகள் அத்தியாவசிய சுகாதார சேவைகள் ஆகும். நோய் பாதிக்கும் அளவு மற்றும் நோய் பரவல் மற்றும் நோய் பரவாமை ஊடாக இறப்பு என்பன அதிகரித்தலை, முரண்பாடு மற்றும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் நிகழ்வுகளை தடுக்கும் மற்றும் குறைக்கும் மிகவும் பயனுள்ள இடையீடுகள் இதில் உள்ளடங்கும். அனர்த்தங்களின் போது, இறப்பு வீதங்கள் மிகவும் அதிகமாக இருக்கும். அத்துடன், நோய் பாதிக்கும் அளவு மற்றும் இறத்தலுக்கு பிரதான காரணங்களை அடையாளங் காண்பது பொருத்தமான அத்தியாவசிய சுகாதார சேவைகளை வடிவமைப்பதற்கு மிகவும் முக்கியமானது ஆகும். சுகாதார அத்தியாயத்தின் இந்த பகுதியானது அத்தியாவசிய சுகாதார சேவைகளின் கீழ் வகைப் பிரிக்கப்பட்ட ஆறு பிரிவுகளின் கீழ் விளக்கமளிக்கின்றது: பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்தல், சிறுவர் சுகாதாரம் மற்றும் பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம், காயமடைதல், மன நலம், மற்றும் பரவாத தன்மையுடைய நோய்கள்.

அத்தியாவசிய சுகாதார சேவைகள் தரம் 1: சுகாதார சேவைகளை முன்னுரிமைப்படுத்தல்

இறப்பு வீதம் மற்றும் நோய் பாதிக்கும் அளவு அதிகரிப்பதற்கான பிரதான காரணங்களை அடையாளங் காண்பதற்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட சுகாதார சேவைகளுக்கு மக்களுக்கு பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- இறப்பு வீதம் மற்றும் நோய் பாதிக்கும் அளவு அதிகரிப்பதற்கான பிரதான காரணங்களை இலக்கு வைத்து, உள்ளூர் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து சுகாதார பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பான தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் (மிக முக்கியமான தரம் 3ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- முக்கியமாக சவாலுக்கு உள்ளாகியுள்ள பலவீனமான மக்களை (உ-ம்: பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் இன்னபிறர்) அடையாளங் காணல் (பாதுகாப்பு கோட்பாடு 2ஐப் பார்க்கவும்).
- உள்ளூர் சுகாதார அதிகாரிகளுடனான ஒருங்கிணைப்புடன், இறப்பு வீதம் மற்றும் நோய் பாதிக்கும் அளவு அதிகரிப்பதனை குறைப்பதற்கு பொருத்தமான, சாத்தியமான மற்றும் பயனுள்ள சுகாதார சேவைகளை முன்னிலைப்படுத்தி, நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

- முன்னுரிமைப்படுத்தப்பட்ட சுகாதார சேவைகளுக்கான பிரவேசத்தை தாமதப்படுத்தும் தடைகளை அடையாளங் காணல். அத்துடன், அவற்றை அடையாளங் காண்பதற்கான பிரயோக ரீதியான தீர்வுகளை உருவாக்கல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- ஏனைய அனைத்து துறைகள் மற்றும்/அல்லது தொகுதிகள் மற்றும் எழுந்தமான தொனிப் பொருட்களுடனான ஒருங்கிணைப்புடன் முன்னுரிமையான சுகாதார சேவைகளை நடைமுறைப்படுத்தல் (மிக முக்கியமான தரம் 2ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- கொடூரமான இறப்பு வீதமானது (CMR), அனர்த்தத்திற்கு முன்னர் மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆரம்ப வீதத்தின் இரண்டு மடங்கிலும் குறைக்கப்படல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- ஐந்து வயதுக்கு குறைவானவர்களின் இறப்பு வீதமானது (U5MR) அனர்த்தத்திற்கு முன்னர் மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆரம்ப வீதத்தின் இரண்டு மடங்கிலும் குறைக்கப்படல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **முன்னுரிமை வழங்க வேண்டிய சுகாதார சேவைகள்** என்பது இறப்பு வீதம் மற்றும் நோய் பாதிக்கும் அளவு என்பன அதிகரிப்பதற்கான முக்கியமான காரணிகளை அடையாளங் காண்பதற்கு பயனுள்ள அத்தியாவசிய சுகாதார சேவைகளாகும். அனர்த்தம் மற்றும் அதன் தாக்கத்தின் வகை என்பன உள்ளடங்கலாக சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் அது மாற்றமடையும். இயலுமான வரையில், முன்னுரிமை வழங்க வேண்டிய சுகாதார சேவைகள் ஆதாரம் சார்ந்த பயிற்சிகளின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அத்துடன், பொது சுகாதாரத்திற்கு பயனளிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அடிப்படை மட்டங்களை நோக்கியதாக இறப்பு வீதம் குறையும் போது, மேலும் முழுமையான வகையில் சுகாதார சேவைகள் அறிமுகப்படுத்தப்படலாம் (மிக முக்கியமான தரம் 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).
2. ஒப்புரவு மற்றும் பக்கச்சார்பின்மை கோட்பாடுகளின் அடிப்படையிலானதாக **சுகாதார சேவைகளுக்கான பிரவேசம்** அமைதல் வேண்டும். அது, தேவைக்கு ஏற்ற வகையில் பாரபட்சம் எதுவும் இன்றி சமமான பிரவேசத்தை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். பயிற்சியில், சுகாதார சேவைகளுக்கான இடம் மற்றும் ஊழியர்களை நியமித்தல் என்பன உகந்த பிரவேசம் மற்றும் உள்ளடக்கலைக் கொண்டிருத்தல் வேண்டும். சுகாதார தேவைகளை வடிவமைக்கும் போது பலவீனமான மக்களின் குறிப்பிடத்தக்க தேவைகள், அடையாளங் காணப்படல் வேண்டும். பிரவேசத்துக்கான தடைகள் பௌதீக ரீதியானதாக, நிதி ரீதியான -தாக, நடத்தை ரீதியானதாக மற்றும்/அல்லது கலாசார ரீதியானதாகவும், தொடர்பாடல் சார்ந்ததாகவும் இருக்கலாம். இவ்வாறான தடைகளை அடையாளங் காணல் மற்றும் கடந்து செல்லல் என்பன சுகாதார சேவைகளின் பிரவேசத்தினை முன்னுரிமைப்படுத்துவதற்கு அத்தியாவசியமாகும் (மிக முக்கியமான தரம் 3 மற்றும் பாதுகாப்பு 2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).
3. **கொடூரமான இறப்பு வீதம் மற்றும் ஐந்து வயதுக்கு குறைவான இறப்பு வீதம்:** அவசர கால நிலையின் தீவிரத் தன்மையை கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பீடு செய்வதற்கும் மிகவும் பயனுள்ள சுகாதார குறிகாட்டியாக CMR காணப்படுகின்றது. அடிமட்ட CMR இரண்டு மடங்காதல் அல்லது அதிகரித்தல் என்பது உடனடி மறுசீரமைப்பு அவசியமாக உள்ள குறிப்பிடத்தக்க பொது சுகாதார

அவசரகாலத் தன்மையை சுட்டிக்காட்டும். அடிமட்ட வீதமான தெரியாத போது அல்லது சந்தேகத்திற்கிடமானதாக இருக்கும் போது, 1.0/10,000/நாள் என்ற அளவுக்கு குறைந்ததாக CMRஇனை வைத்திருப்பதற்கு நிறுவனங்கள் முயற்சி செய்தல் வேண்டும்).

CMRஇலும் பார்க்க மிகவும் கூருணர்வு மிக்க குறிகாட்டியாக U5MR காணப்படுகின்றது. அடிமட்ட வீதம் தெரியாத போது அல்லது சந்தேகத்திற்கிடமானதாக இருக்கும் போது, 2.0/10,000/நாள் என்ற அளவுக்கு குறைந்ததாக U5MRஇனை வைத்திருப்பதற்கு நிறுவனங்கள் முயற்சி செய்தல் வேண்டும் (பிற்சேர்க்கை 3: முக்கியமான சுகாதார குறிகாட்டிகளை கணிப்பதற்கான சமன்பாடுகளைப் பார்க்கவும் **பக்கம் ???**).

பிராந்திய அடிப்படையில் இறப்பு வீதத்தின் அடிப்படை குறிப்பு

பிராந்தியம்	CMR (இறப்புக்கள்/ 10,000/நாள்)	CMR அவசர கால தொடக்க நிலை	U5MR (இறப்புக்கள்/ 10,000/நாள்)	U5MR அவசர கால தொடக்க நிலை
துணை சகாரா- ஆபிரிக்கா	0.41	0.8	1.07	2.1
மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா	0.16	0.3	0.27	0.5
தெற்காசியா	0.22	0.4	0.46	0.9
கிழக்காசியா மற்றும் பசுபிக்	0.19	0.4	0.15	0.3
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்	0.16	0.3	0.15	0.3
மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய பிராந்தியம் / CIS* மற்றும் பால்டிக் நாடுகள்	0.33	0.7	0.14	0.3
கைத்தொழில் நாடுகள்	0.25	0.5	0.03	0.1
அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்	0.22	0.4	0.44	0.9
அபிவிருத்தி அடையாத நாடுகள்	0.33	0.7	0.82	1.7
உலகம்	0.25	0.5	0.40	0.8

சுயாதீன நாடுகளின் பொதுநலவாயம்

மூலம்: UNICEF, State of the World's Children 2009 (2007ஆம் ஆண்டு தரவு).

2.1.அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்தல்

பரவக் கூடிய நோய்களினால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் நோய் தாக்கும் அளவு என்பன அனர்த்தங்களின் போது மேலும் அதிகரிக்கும். பெரும்பாலான மோதலால் பாதிக்கப்பட்ட அமைப்புக்களில், 60 வீதத்திற்கும், 90 வீதத்திற்கும் இடையில்,

மரணம் என்பது தீவிரமான தொற்றுக்கள், வயிற்றுப் போக்கு, சின்னம்மை மற்றும் மலேரியா போன்ற நான்கு பிரதான தொற்றுக்கு காரணங்களாகியுள்ளன. தீவிரமான போஷாக்கின்மை இந்த நோய்கள் பாதிக்கும் அளவை அதிகரிக்கின்றது. விசேடமாக, ஐந்து வயதுக்கு குறைந்த சிறுவர்களினை சுட்டிக்காட்டலாம். பரவக் கூடிய நோய்களின் வெளிப்பாடானது இயற்கை அனர்த்தங்களின் ஆரம்ப நிலை தீவிரமடைவதுடன் சம்பந்தப்பட்டதாக பொதுவானதாகவும் இருக்கின்றது. இந்த வெளிப்பாடு நிகழும் போது, அவை பொதுவாக மக்கள் தொகை இடம்பெயரல், மக்கள் தொகை அதிகரித்தல், போதிய உறைவிடம் இன்மை, போதாமை மற்றும் பாதுகாப்பற்ற நீர் மற்றும் போதிய தேகாரோக்கிய வசதியின்மை போன்ற சவால் காரணிகளுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும்

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களை தடுத்தல் தரம் 1: பரவக் கூடிய நோய்களை தடுத்தல்

அதிக எண்ணிக்கையிலான இறப்பு மற்றும் நோய் பாதிக்கும் அளவு என்பவற்றுக்கு அதிக அளவில் பங்களிக்கும் பரவக் கூடிய நோய்களை தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தகவல்கள் மற்றும் சேவைகளுக்கு மக்களுக்கு பிரவேசம் உள்ளமை.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சம்பந்தப்பட்ட துறைகளுடனான ஒருங்கிணைப்புடன் பொதுவான தடுப்பு பொறியமைப்புக்களை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- மலேரியா, டெங்கு மற்றும் வேறு நோய் நுண்மப் பரப்பிகளினால் உருவாகும் நோய்களுக்கு உள்ளூர் நோயியலுக்கு அமைவாக பொருத்தமான நோய் நுண்மப் பரப்பிகள் கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3ஐப் பார்க்கவும்).
- விசேடமாக நோய் சம்பந்தப்பட்ட தடுப்பு முறைகளை நடைமுறைப்படுத்தல். உ-ம்: சின்னம்மை போன்றவற்றுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்படல் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் உடல் நலன் தரம் 1ஐப் பார்க்கவும் பக்கம் ???).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சூழ்நிலையுடன் சம்பந்தப்பட்ட பாரிய பரவக் கூடிய நோய்கள் தொடர்பான சம்பவங்கள் ஸ்திர நிலைக்கு வரும் (அதிகரிக்காது).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. பொதுவான தடுப்பு முறைகள்: சிறந்த தள திட்டமிடல், சுத்தமான நீரின் பகுதி மற்றும் முறையான தேகாரோக்கியம், போஷாக்கு வசதிகளுக்கான பிரவேசம், குறிப்பிடத்தக்க நோய்களுக்கான தடுப்பூசிகள், போதிய மற்றும் பாதுகாப்பான

உணவு விநியோகம், தனிப்பட்ட பாதுகாப்பும், நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடும், சமுதாய சுகாதாரக் கல்வியும், சமூக ஒன்றுதிரட்டலும் என்பவற்றை இது உள்ளடக்கியுள்ளது. பின்வரும் துறைகள் உள்ளடங்கலாக, ஏனைய துறைகளு -டனான ஒருங்கிணைப்புடன் இந்த இடையீடுகளில் பெரும்பாலானவை முன்னெடுக்கப்படல் வேண்டும்:

- உறைவிடம் - போதிய எண்ணிக்கையிலான உறைவிடங்கள் மற்றும் அவற்றிற்கு இடையில் போதிய இடவசதி, போதிய காற்றோட்டம், தொற்று ஏற்படுத்தாதவை, தேங்கும் நீர் காணப்படும் பகுதிகளின் அருகில் அமைக்கப்படாமை. நீர் மற்றும் தேகாரோக்கிய வசதிகளுக்கு அருகில் அமைத்தல் (உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரங்கள் 1-3 மற்றும் உணவல்லாத விடயங்கள் தரம் 2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

- நீர், தேகாரோக்கியம், போஷாக்கு - போதிய அளவான பாதுகாப்பான நீர் மற்றும் போதிய தேகாரோக்கிய வசதிகள் மற்றும் போஷாக்கு மேம்பாடு (போஷாக்கு மேம்பாடு தரங்கள் 1- 2, நீர் விநியோகத் தரங்கள் 1-3 மற்றும் கழிவு அகற்றல் தரங்கள் 1-2 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

- சுற்றுச் சூழல் தேகாரோக்கியம் மற்றும் பாதுகாப்பான கழிவு முகாமைத்துவம் மற்றும் நோய் நுண்மப் பரப்பி (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3, உறைவிடம் மற்றும் குடியிருப்பு தரம் 4, நோய் நுண்மப் பரப்பிகள் கட்டுப்பாடு தரங்கள் 1-3, திண்மக் கழிவு அகற்றல் தரம் 1 மற்றும் சாக்கடை வடிகால் தரம் 1 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

- உணவு பாதுகாப்பு, ஊட்டச் சத்து மற்றும் உணவு உதவி - போதிய உணவு மற்றும் போஷாக்கின்மையை முகாமைத்துவம் செய்வதற்கான பிரவேசம் (குழந்தைகள் மற்றும் இளஞ் சிறுவர்கள் உணவூட்டல் தரம் 1-2, தீவிர போஷாக்கின்மையை முகாமைத்துவம் செய்தல் தரங்கள் 1-2 மற்றும் உணவுப் பாதுகாப்பு தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

- சுகாதாரக் கல்வி மற்றும் சமூக ஒன்றுதிரட்டல் - மேற்குறிப்பிட்ட தடுப்பு முறைகளை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதனை உறுதி செய்வதற்கு செய்திகளை உருவாக்கவும்.

2. **மலேரியா தடுப்பு:** தொற்றின் தாக்கத்தின் அளவு, அவசர கால நிலையின் மட்டம் மற்றும் மக்களின் இறப்பு வீதம், உறைவிடங்களின் வகைகள் மற்றும் மலேரியா நோய் பாதிப்பு காணப்படும் பிராந்தியங்களில் உள்ளூர் நோய் நுண்மப் பரப்பிகளின் நடத்தை என்பவற்றின் அடிப்படையில் மலேரியா தடுப்பு முறைகளை நடைமுறைப்படுத்தவும். பயனுள்ள பூச்சிக் கொல்லியுடன் உள்ளக எஞ்சிய தூவல் (IRS) மற்றும் நீண்ட காலம் நீடித்திருக்கக் கூடிய தொற்று நீக்கப்பட்ட நுளம்பு வலைகளை (LLIN) விநியோகித்தல் போன்ற நோய் நுண்மப் பரப்பிகளை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் நோயியல் மதிப்பீடுகள் மற்றும் நிபுணர்களினால் வழிநடத்தப்படல் வேண்டும். சமுதாய கட்டுப்பாட்டு பொறிமுறையாக பயனுள்ளதாக இருப்பதற்கு, ஆகக் குறைந்தது வசிக்கும் இடங்களின் 80வீதங்களை IRS உள்ளடக்கல் வேண்டும். LLINஆனது நீண்ட கால தனிப்பட்ட பாதுகாப்பினை வழங்கும். அத்துடன், தெரிவின் அடிப்படையில் வலைகளை

பெற்றுக் கொள்ள முடியும். தொற்று நீக்கப்படாத வலைகளை விநியோகிப்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாது (உணவல்லாத விடயங்கள் தரம் 2 மற்றும் நோய் நுண்மப் பரப்பிகள் கட்டுப்பாட்டு தரங்கள் 1-3 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

அனர்த்தத்தின் மட்டத்தின் அடிப்படையிலும் மற்றும் மலேரியா பரவும் நிலையின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு LLIN விநியோகிப்பதற்கான முன்னுரிமை தங்கியுள்ளது. அனர்த்தத்தின் ஆரம்ப காலப்பகுதியில் அதிக அளவில் மலேரியா பரவுவதற்கான அச்சுறுத்தல் அதிகம் காணப்படும் பகுதிகளில், வைத்தியசாலை நோயாளிகள், தீவிரமாக போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களின் உறுப்பினர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 2 வயதுக்கு குறைவான சிறுவர்கள் போன்றோர் தொடர்பில் சிறப்பு கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். அடுத்த கவனம் குறைநிரப்பு உணவூட்டல் நிகழ்ச்சிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள், ஐந்து வயதுக்கு குறைந்தவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் உள்ள குடும்பங்கள் மற்றும் 2 வயதுக்கு குறைந்தவர்கள் போன்றோர் தொடர்பில் செலுத்தப்படல் வேண்டும். இறுதியாக, ஆபத்தில் உள்ள ஒட்டுமொத்த மக்கள் தொகைக்கும் LLINஇன் பாதுகாப்பு அவசியமாக இருக்கும். குறைந்த அளவான நோய் பரவல் காணப்படும் அனர்த்தம் இடம்பெற்ற காலப்பகுதியின் ஆரம்பத்தில், சிகிச்சை வழங்கும் அமைப்புக்களினால் பயன்படுத்தப்படலாம் (உதாரணமாக, வதிவிடங்களுக்கான சிகிச்சை ரீதியான உணவூட்டல் நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள்).

3. **டெங்கு தடுத்தல்:** நோய் நுண்மப் பரப்பிகள் கட்டுப்பாடு என்பது டெங்கு தடுப்பிற்கான பிரதான முறையாக இருக்கின்றது. டெங்கு நோய் நுண்மப் பரப்பி கட்டுப்பாடு என்பது நோயினால் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் நோய் நுண்மப் பரப்பியின் அளவு என்பவற்றின் மேற்பார்வை தரவு என்பதன் அடிப்படையில் வழிகாட்டப்படும். அதிக அளவில் நோய் நுண்மப் பரப்பிகள் பரவும் தளங்கள் இடத்திற்கு இடம் வேறுபடும். அது குறித்து இலக்கு வைக்கப்படல் வேண்டும். நகர்ப்புறங்களில், Aedes நுளம்புகள் நீர் தேங்கி நிற்கும் கொள்கலன்கள் மற்றும் வேறு செயற்கை நீர் தேங்கும் பகுதிகளில் (பிளாஸ்டிக் கோப்பைகள், பயன்படுத்தப்பட்ட டயர்கள், உடைந்த போத்தல்கள், பூச்சாடிகள், இன்னபிற) பரவும். நுளம்புகள் பரவும் இடங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கு பருவகால வடிதட்டு மற்றும் கொள்கலன்களை அகற்றல் என்பன மிகவும் பயனுள்ள வழியாகும். வீடுகளில் தேங்கியுள்ள நீர் என்பது எல்லா சந்தர்ப்பங்களில் அகற்றப்படல் வேண்டும். அத்துடன், வார அடிப்படையில் கொள்கலன்கள் சுத்தமாக்கப்படுவதுடன், நீக்கப்படல் வேண்டும். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகைக்கு முறையான நீர் சேமிப்பு கொள்கலன்கள் வழங்கப்படல் வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையைப் பயன்படுத்தி கொள்கலன்களை சுத்திகரித்தல் என்பது நுளம்புகள் பெருகுவதனை தடுப்பதற்கான பயனுள்ள வழியாகும். பூச்சிக்கொல்லிகளை தூவுதலும், நுளம்புகள் பெருகுவதனை தடுப்பதற்கான பயனுள்ள வழியாகும். தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படல் வேண்டும் (உணவல்லாத விடயங்கள் தரம் 2 மற்றும் நோய் நுண்மப் பரப்பிகள் தரம் 1-3 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்தல் தரம் 2: பரவக் கூடிய நோய்களை அறுதியீடு செய்தல் மற்றும் சம்பவ முகாமைத்துவம்

பயனுள்ள நோய் அறுதியீடு மற்றும் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்தல் என்பவற்றுக்கு, குறிப்பாக அதிகரிக்கும் இறப்பு வீதம் மற்றும் நோய் தாக்கும் வீதம் என்பவற்றை குறைப்பதற்கு மக்களுக்கு பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சுகவீனம், தடிமன், வயிற்றுப் போக்கு, இன்னபிற என்பவற்றுக்கு பராமரிப்பினைப் பெறுவதற்கு மக்களை ஊக்குவிக்கும் பொது சுகாதார கல்வி செய்திகளை வடிவமைத்தல்.
- தரமான சம்பவ முகாமைத்துவ நெறிமுறை அல்லது சிறுபராய சுகவீனத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவம் (IMCI) மற்றும் பருவமா-னவர்களின் சுகவீனத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவம் (IMAI) என்பவற்றின் அடிப்படையில் தீவிரமான சுகவீனத்திற்கான முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் குறிப்புதவி பராமரிப்பின் போதும், அனைத்து முதல் தர சுகாதார வசதிகளிலும் சுகாதார பராமரிப்பை வழங்கல். (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- நியூமோனியா, மலேரியா, வயிற்றுப் போக்கு, சின்னம்மை, மூளையழற்சி, போஷாக்கின்மை மற்றும் டெங்கு போன்ற சூழ்நிலைகளுக்கான முன் சிகிச்சைக்கு வகைப்படுத்தல், நோய் அறுதியீட்டு மற்றும் சம்பவ முகாமைத்துவ நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தல். அத்துடன், சிகிச்சையளிக்கும் நெறிமுறைகள் தொடர்பில் ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 2-3 மற்றும் அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் உடல் நலன் தரம் 2 என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).
- ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரமாணங்கள் எட்டப்பட்டால் மாத்திரம் காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- நோய் அறுதியீடு மற்றும் பொதுவான தொற்று நோய்களுக்கான சிகிச்சை என்பன தொடர்பில் தரப்படுத்தப்பட்ட சம்பவ முகாமைத்துவ நெறிமுறைகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல் மற்றும் தொடர்ச்சியாக பயன்படுத்தல் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-3 மற்றும் சுகாதார முறைமைகள் - சுகாதார சேவை விநியோகம் தரம் 1 என்பவற்றைப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள (

1. **சிறுபராய சுகவீனத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவம் மற்றும் பருவமானவர்களின் சுகவீனத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவம்:** ஆரம்ப மற்றும் நேர்த்தியான நோய் அறுதியீடு மற்றும் பொருத்தமான சிகிச்சை என்பவற்றின் மூலம் பரவக் கூடிய நோய்களினால்

ஏற்படும் இறப்பு வீதத்தை குறைக்க முடியும். IMCI மற்றும் IMAIஇன் பயன்பாடு நடைமுறைப்படுத்தப்படும் போது, அல்லது வேறு தேசிய நோய் அறுதியீடு படித்தீர்வுகள் வகை மற்றும் அவற்றின் தீவிரத்தின் அடிப்படையில் நோய்களை வகைப் பிரித்தல் அல்லது வகுப்பாக்கம் செய்தல் முக்கியமானதாக இருக்கும் போதும், பொருத்தமான சிகிச்சைகளை நிர்வாகம் செய்வதற்கும் உதவி வழங்கல் என்பவற்றில் IMCI மற்றும் IMAIபயன்படுத்தல். உள்ளக நோயாளர் வசதிக்கான குறிப்புக்களாக அபாய எச்சரிக்கை குறியீடுகள் காணப்படும். தரமான சம்பவ முகாமைத்துவ நெறிமுறைகள் பொருத்தமான நோய் அறுதியீடு மற்றும் விகித மருந்துப் பாவனை என்பவற்றை அனுமதிக்கும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் உடல் நலன் தரம் 2ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

2. **நியூமோனியா:** நியூமோனியாவினால் ஏற்படும் இறப்பு வீதத்தை குறைப்பதற்கு முக்கியமான அம்சமாக இருப்பது, வாய் மூலம் பக்றீரியாவுக்கு எதிரான, அமொக்சிளின் போன்ற மருந்துகளை தேசிய நெறிமுறைகளுக்கு ஏற்றதாக உட்கொள்ளல். தீவிரமான நியூமோனியாவுக்கு வைத்தியசாலையில் அனுமதித்தல், உடல் வழியாக மருந்தேற்றல் என்பன பின்பற்றப்படல் வேண்டும்.

3. **மலேரியா:** நேர்த்தியான மற்றும் பயனுறுதி மிக்க சிகிச்சைக்கான பிரவேசம் என்பது வெற்றிகரமான மலேரியா கட்டுப்படுத்தலுக்கு முக்கியமானது ஆகும். மலேரியா பரவும் பகுதிகளில், ஆரம்ப (24 மணித்தியாலங்களுக்குள்) சுகவீன நோய் அறுதியீடு மற்றும் அதிக பயனுறுதி மிக்க மருந்துகளுடன் சிகிச்சை என்பவற்றுக்கான நெறமுறையை உருவாக்க வேண்டும். Falciparum மலேரியாவுக்கான சிகிச்சைகளின் முக்கியமான விழுமியமாக ஆர்டிமிஸினின் அடிப்படையாகக் கொண்ட சேர்க்கை சிகிச்சைகள் (Artemisinin-based combination therapies - ACT) காணப்படுகின்றன. முன்னணி சுகாதார நிறுவனம் மற்றும் தேசிய மலேரியா கட்டுப்பாட்டு நிகழ்ச்சி என்பவற்றுடனான கலந்தாய்வின் அடிப்படையில் மருந்து தெரிவு என்பது தீர்மானிக்கப்படல் வேண்டும். மருந்துகளை விநியோகிக்கும் போது, மருந்தின் தரம் தொடர்பில் கவனஞ் செலுத்தவும். சிகிச்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆய்வுகூட பரிசோதனைகளின் (துரித நோய் அறுதியீட்டு சோதனை, நுண்ணோக்கி) மூலமே மலேரியா நோய் அறுதியீடு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், ஆய்வுகூட நோய் அறுதியீடு கிடைக்காத சந்தர்ப்பத்தில் மலேரியாவுக்கான சிகிச்சை என்பது தாமதமடையக் கூடாது

4. **காச நோய் (TB) கட்டுப்பாடு:** மோசமான வகையில் நடைமுறைப்படுத்தப்படும் காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சியானது, நோய் தாக்கத்தினை நீடிக்கச் செய்தல் மற்றும் மருந்து எதிர்ப்பு திறன் அதிகரித்தல் என்பவற்றின் மூலம் அதிகளவில் தீங்கினை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். அனர்த்தங்களின் போது, பொதுவாக அவதானிக்கக் கூடிய தனிநபர்கள் காசநோயுடன் இருக்கும் போது, முழுமையான காச நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அதற்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரமானணங்கள் எட்டப்படல் வேண்டும். நிறுவனங்களின் அர்ப்பணிப்பு மற்றும் வளங்கள், ஆகக் குறைந்தது 12-15 மாதங்களுக்கு மக்கள் தொகையின் ஸ்திரத்தன்மை மற்றும் சிறந்த தரமான நிகழ்ச்சியை வழங்க முடியும் போன்றவற்றை இந்த பிரமாணங்கள் உள்ளடக்கியிருக்கும். நடைமுறைப்படுத்தப்படும் போது, தேசிய வதிவிட நிகழ்ச்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டதாக, நேரடியாக கண்காணிக்கப்பட்ட சிகிச்சை,

குறுகிய கால மூலோபாயம் என்பவற்றை பின்பற்றுவதாக காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்.

அவசர கால நிலையின், தீவிரமான கட்டத்தில், காசநோய் உள்ளடங்கலாக அனைத்து பரவக் கூடிய நோய்களுக்குமான அனைத்து சிகிச்சைகளும் பாதிக்கக் கூடிய மற்றும் நோயாளர்களின் தொடர் கவனிப்பு இழக்கப்படல் என்பவற்றுக்கு சாத்தியம் உள்ளது. இது மிகவும் குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். அவசரகால சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் உருவாக்கப்பட்ட தேசிய காசநோய் நிகழ்ச்சி சேவைகள் என்பவற்றுக்கு இடையில் உறுதியான ஒருங்கிணைப்பு இருத்தல் வேண்டும். இதன் மூலம் அனர்த்தத்திற்கு முன்னர் சிகிச்சைப் பெற்று வந்தர்வர்களுக்கு, அனர்த்தத்தின் பின்னரும் சிகிச்சை தொடரப்படுவதனை உறுதி செய்வதற்கு உதவ முடியும் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவுந் தன்மையற்ற நோய்கள் தரம் 1ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்தல் தரம் 3: பரவல் கண்டறிதல் மற்றும் மறுசீரமைப்பு

உரிய நேரத்தில் மற்றும் பயனுள்ள வகையில் நோய் பரவலுக்கு தயாராய் இருத்தல், கண்டறிதல், ஆய்வு செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

கண்டறிதல்

- பரந்த சுகாதார தகவல் முறையின் ஒரு அங்கமாக பரவக் கூடிய நோய்களின் முழுமையான சவால் மதிப்பீட்டின் அடிப்படையில் நோய் EWARN (முன்னெச்சரிக்கை) மேற்பார்வை மற்றும் மறுசீரமைப்பு முறைகளை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1 மற்றும் சுகாதார முறைமைகள் தரம் 5 என்பவற்றைப் பார்க்கவும் பக்கம் ???).
- சுகாதார பராமரிப்பு ஊழியர்கள் மற்றும் சமுதாய சுகாதாரப் பணியாளர்களுக்கு சாத்தியமான நோய் பரவலை கண்டறிதல் மற்றும் அறிக்கையிடலுக்கு பயிற்சி வழங்கல்.
- தொற்றினால் பரவும் நோய்களின் அறிகுறிகள் மற்றும் எங்கு உதவி நாடிச் செல்வது என்பது தொடர்பிலான சாதாரணமான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்.

முன்னாயத்தம்

- நோய் பரவல் விசாரணை மற்றும் மறுசீரமைப்பு திட்டத்தை தயாரித்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- சம்பந்தப்பட்ட சிகிச்சை நெறிமுறைகள் உள்ளடங்கலாக விசாரணை மற்றும் பொதுவான நோய் பரவலுக்கான கட்டுப்பாடுகள் தொடர்பான நெறிமுறைகள் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருத்தல் மற்றும் விநியோகிக்கப்படலை உறுதி செய்தல்.

- முன்னுரிமை வழங்க வேண்டிய நோய்களுக்கு கிடைக்கக் கூடியதாக சேமிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் இருத்தல் அல்லது முன் அடையாளங் காணப்பட்ட வளங்களில் இருந்து துரிதமாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோயாளர்களுக்கு முன்கூட்டியே சிகிச்சை அளித்தல் என்பவற்றுக்கான இடத்தை அடையாளங் காணல். உ-ம்: கொலரா சிகிச்சை நிலையங்கள்.
- உள்ளூரில், பிராந்திய ரீதியில், தேசிய ரீதியில் அல்லது வேறு நாடுகளில் நோய் பரவல் தொடர்பான உறுதிப்பாட்டினைத் தரும் ஆய்வுகூடங்களை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- திடீரென நோய் பரவல் தொடர்பான சந்தர்ப்பங்களில் தளத்தில் மாதிரி மூலப்பொருட்கள் மற்றும் போக்குவரத்து ஊடகங்கள் என்பன கிடைக்கக் கூடியதாக இருத்தலை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
.

கட்டுப்பாடு

- அதிக ஆபத்து உள்ள தனிநபர்கள் மற்றும் உள்வாங்கப்படும் கட்டுப்பாடு முறைகளை அடையாளங் காண்பதற்கு உதவும் நேரம், இடம் மற்றும் நபர் என்பதன் அடிப்படையில் நோய் பரவலை விளக்கவும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 6-8ஐப் பார்க்கவும்).
- நோய் மற்றும் சூழ்நிலைக்கு விசேடமான பொருத்தமான கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 9ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- எழுதப்பட்ட நோய் பரவல் விசாரணை மற்றும் மறுசீரமைப்பு திட்டம் என்பன கிடைக்கக் கூடியதாக இருத்தல் அல்லது அனர்த்தத்தின் ஆரம்பத்தில் வடிவமைக்கப்படல்.
- அடுத்த பொருத்தமான மட்டத்திற்கு, நோய் கண்டறிதலின் 24மணித்தியாலங்களிற்குள் சுகாதார முறைமைக்குள் சந்தேகத்திற்கிடமான நோய் பரவலை சுகாதார நிறுவனங்கள் அறிக்கையிடல்.
- தொற்றினால் பரவக் கூடிய நோய்கள் தொடர்பான அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் கண்டறிந்து 48 மணித்தியாலங்களுக்குள் முன்னணி சுகாதார நிறுவனம் விசாரணைகளை ஆரம்பித்தல்.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட மட்டங்களுக்கு குறைவானதாக சம்பவ இறப்பு வீதத்தை (CFR) பேணல்.
  - கொலரா - 1 வீதம் அல்லது குறைவாக
  - ஷிகெல்லா வயிற்றுக் கடுப்பு- 1 வீதம் அல்லது குறைவாக
  - தைபாயிட் - 1 வீதம் அல்லது குறைவாக
  - மெனிங்கோகாக்கல் மூளை அழற்சி- வேறுபடும், 5-15 வீதம்

- மலேரியா - வேறுபடும், தீவிர சுகவீனமுற்ற மலேரியா நோயாளர்களின் <5வீதம் என்பதே நோக்கம்
- சின்னம்மை - வேறுபடும், 2-21 வீதம் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அறிக்கையாகியுள்ளது, <5வீதம் என்பதே நோக்கம். (வழிகாட்டல் குறிப்பு 10ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **நோய் பரவலை கண்டறிதலுக்கான முன்னெச்சரிக்கை முறை:** இந்த முறையின் பிரதான அம்சங்களில் பின்வருவன உள்ளடங்கும்:
   - நடைமுறைப்படுத்தும் பங்காளர்களின் வலையமைப்பு
   - இயலுமாயின் அனைத்து சுகாதார வசதிகளிலும், சமுதாய மட்டத்திலும் நடைமுறைப்படுத்தல்.
   - தொற்றினால் ஏற்படக் கூடிய நோய்கள் அனைத்தினதும் முழுமையான சவால் மதிப்பீடு
   - வாராந்த மேற்பார்வைக்கு சிறிய எண்ணிக்கையிலான முன்னுரிமை வழங்க வேண்டிய சூழ்நிலைகள் தொடர்பில் (10-12) சவால் மதிப்பீட்டின் அடிப்படையில் அடையாளப்படுத்தல், மற்றும் உடனடி “எச்சரிக்கை” அறிக்கையிடலுக்கு சில எண்ணிக்கையிலான நோய்களை தெரிவு செய்தல் (பிற்சேர்க்கை 2: வாராந்த ஆய்வறிக்கைப் படிவங்களின் மாதிரியைப் பார்க்கவும் **பக்கம் ???**).
   - தர ஆய்வறிக்கைப் படிவம் தொடர்பில் ஒவ்வொரு நோய் அல்லது சூழ்நிலை தொடர்பில் தெளிவான சம்பவ விளக்கங்கள்.
   - மேற்பார்வையை ஆரம்பிப்பதற்கு ஒவ்வொரு முன்னுரிமை வழங்க வேண்டிய நோய் அல்லது நிபந்தனை தொடர்பில் விளக்கல்
   - சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகளுக்கு முறைசார் அல்லது முறைசாரா எச்சரிக்கைகள் தொடர்பில் துரித குறிப்புக்களை உறுதி செய்வதற்கான தொடர்பாடல் (வாந்திகள், ஊடக அறிக்கைகள், இன்னபிற)
   - உடனடி எச்சரிக்கைகளை அறிக்கையிடுவதற்கு மற்றும் பிரதிபலிப்பதற்கான முறைமை
   - தர அறிக்கையிடல், தரமான தரவு தளத்திற்குள் பிரவேசித்தல் மற்றும் வாராந்த அடிப்படையில் பகுப்பாய்வு செய்தல்
   - வாராந்த ஆய்வறிக்கை மற்றும் உடனடி எச்சரிக்கை தகவல் தொடர்பில் அனைத்து பங்காளர்களுக்கும் பின்னூட்டம்
   - அறிக்கையிடலின் கால அளவு மற்றும் பூர்த்தித் தன்மை தொடர்பில் தரவு தரத்தை உறுதி செய்வதற்கு வழமையான மேற்பார்வை.
   - தரமான சம்பவ விசாரணை நெறிமுறைகள் மற்றும் படிவங்கள்
   - தகவல் பகிரல் மற்றும் நோய் பரவல் மறுசீரமைப்பு ஆரம்பித்தலுக்கான தர நடைமுறைகள்

2. **.நோய் பரவல் விசாரணை மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம்:** அனைத்து பங்குதாரர்களினதும் முழுமையான பங்குபற்றலுடன் இது தயாரிக்கப்படல் வேண்டும். பின்வரும் விடயங்கள் அடையாளப்படுத்தப்படல் வேண்டும்: **:**
   - எந்த பிரமாணத்திற்குள் நோய் பரவல் கட்டுப்பாட்டு குழு உள்ளடக்கப்படல் வேண்டும்
   - நோய் பரவல் கட்டுப்பாட்டு குழுவின் கலவை
   - குழுவில் நிறுவனங்கள் மற்றும் நிலைகளின் முக்கியமான பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள்
   - நோய் பரவலை விசாரிப்பதற்கு மற்றும் பதிலளிப்பதற்கு கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்கள் மற்றும் வசதிகள்
   - தேவையான அத்தியாவசிய மருந்துகள், விநியோகங்கள் மற்றும் நோய் அறுதியீடுகள் என்பவற்றின் பட்டியல்
3. **சேமிக்கப்பட்ட பொருட்கள்:** எதிர்பார்க்கப்படும் நோய் பரவலுக்கான பிரதிபலிப்புக்கு பயன்படுத்தக் கூடிய வகையிலான பொருட்கள் தளத்தில் சேமிக்கப்படும் பொருட்களில் உள்ளடங்கல் வேண்டும். முன் பொதியிட்ட வயிற்றுப் போக்கு நோய் அல்லது கொலராவுக்கான தொகுதி என்பன சில சூழ்நிலைகளில் தேவையாக இருக்கலாம். மென்னிங்கோகாகல் தடுப்பூசி போன்ற சில பொருட்களை தளத்தில் வைத்திருப்பதனால் எதுவித பயனும் இல்லை. இவற்றுக்காக முறையான கொள்முதலுக்கான, ஏற்றுமதிக்கான மற்றும் சேமிப்புக்கான நடைமுறைகள் முற்கூட்டியே தீர்மானிக்கப்படல் வேண்டும். எனவே, அவற்றினை துரிதமாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.
4. **குறிப்புதவி ஆய்வுகூடங்கள்:** வெகுசன நோய்த்தடுப்பு காணப்படும் (உ-ம்: மெனிங்கொகாக்கல் மூளை அழற்சி) அல்லது சம்பவ முகாமைத்துவ தீர்மானங்களில் கலாசார ரீதியான மற்றும் பக்ரீரியாவுக்கு எதிரான கூருணர்வு பரிசோதனை செல்வாக்கு செலுத்தும் (உ-ம்: ஷிகொலெசிஸ்) சந்தேகத்திற்கிடமான நோய் பரவலின் போது நோய் அறுதியீடு செய்தலை உறுதி செய்வதற்கு ஆய்வுகூட பரிசோதனை என்பது பயனுள்ளது. மிகவும் நேர்த்தியான வகையில் பரிசோதனை செய்வதற்கு உதவக் கூடிய குறிப்புதவி ஆய்வுகூடங்களும், பிராந்திய ரீதியில் அல்லது சர்வதேச ரீதியில் அடையாளங் காணப்படல் வேண்டும். உ-ம்: தட்டம்மைக்கான நிணநீர் நோய் அறுதியீடு, மஞ்சள் காய்ச்சல், டெங்கு நோய் மற்றும் வைரஸ் இரத்தக் காய்ச்சல்.
5. **நோய் காவும் ஊடகங்கள் மற்றும் துரித பரிசோதனைகள்:** மாதிரிப் பொருட்கள் (உ-ம்: rectal swabs) மற்றும் காவும் ஊடகங்கள் (கொலராவுக்கான Cary-Blair காவி, ஷிகெல்லா, E. coli மற்றும் ஷல்மொனெல்லா) மற்றும் பொருட்களை சீதோஷண நிலையில் வைத்திருப்பன போன்றவை தளத்தில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். மேலதிகமாக, கிடைக்கக் கூடியதாக உள்ள பல்வேறு துரித பரிசோதனைகள் களத்தில் பரவக் கூடிய மலேரியா மற்றும் மூளை அழற்சி போன்ற நோய்களை கண்டறிவதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

6. **நோய் பரவல் ஆய்வு:** நோய் பரவல் விசாரணையின் பிரதான பத்து விடயங்கள் பின்வருமாறு:

- ஒரு நோய் இருப்பதற்கான தன்மையை ஸ்தாபித்தல்
- நோய் அறுதியீட்டை உறுதி செய்தல்
- சம்பவத்தை விளக்கல்
- சம்பவங்களை கணிப்பிடல்
- விளக்க புறப்பரவியலை செய்யவும் (நேரம், நபர், இடம்)
- ஆபத்தில் உள்ளவர்கள் யார் என தீர்மானிக்கவும்
- வெளிப்பாடு மற்றும் நோய்களை விளக்கி கருதுகோள்களை வடிவமைக்கவும்
- கருதுகோள்களை மதிப்பீடு செய்யவும்
- முடிவுகளை தொடர்பாடல் செய்யவும்
- கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல்

எந்தவொரு கடுமையான உத்தரவின் அடிப்படையிலும் இந்த நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படக் கூடாது. கட்டுப்பாடு முறைகள் இயலுமான வரையில் விரைவாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்

7. **நோய் பரவல் இருப்பதற்கான தன்மையை உறுதி செய்தல்:** நோய் பரவல் தற்போதும் உள்ளதா என்பதனை தீர்மானிப்பது எப்போதும் நேரடியானது அல்ல. அத்துடன், நோய் பரவல் ஆரம்ப நிலை தொடர்பான தெளிவான விளக்கங்கள் என்பது எல்லா நோய்களுக்கும் இருக்காது. இருந்த போதிலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நோய்களுக்கு ஆரம்ப நிலை உள்ளது**.**

- நோயால் பாதிக்கப்பட்ட தனிநபர் ஒருவரின் மூலம் நோய் பரவக் கூடிய சாத்தியம்: கொலரா, சின்னம்மை, மஞ்சள் காய்ச்சல், வைரஸ் இரத்தக் காய்ச்சல்
- நோயாளிகள் அல்லது மரணங்கள் ஏற்படும் நோய் பரவல் தொடர்பில் சந்தேகிக்கப்படும் நோய்கள், நோய் பரவும் அளவு அல்லது கடந்த வாரத்தை விட இரண்டு மடங்காதல்: ஷிகெல்லோசிஸ் - தொற்று ஏற்படுத்தாத பிராந்தியங்கள் மற்றும் அகதி முகாம்கள், சாத்தியமான நோய் பரவல் தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டிய ஒரு சம்பவம் தொடர்பான ஷிகெல்லோசிஸ்
- மலேரியா - விளக்கங்கள் சூழ்நிலை சார்ந்தது: மேலே உள்ள சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு. வரையறுக்கப்பட்ட மக்கள் மத்தியில் வருடத்தின் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும். பழைய வரலாறு தொடர்பான தரவு இன்றி, எச்சரிக்கை அடையாளங்கள் கடந்த இரண்டு வாரங்களில் மலேரியா என உறுதி செய்யப்பட்ட சுகவீன சம்பவங்களின் வீதம் தொடர்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை உள்ளடக்கும். அத்துடன், கடந்த வாரங்களின் சம்பவ உயிரிழப்பு வீதங்களின் அளவிலும் அதிகரிப்பை காட்டும்.
- மெனிங்கோகாக்கல் மூளை அழற்சி - 30,000க்கும் அதிகமான மக்களில், 15சம்பவங்கள்/100,000 பேர்/வாரம்: எவ்வாறாயினும், அதிகளவான நோய் பரவல் ஆபத்து (எடுத்துக்காட்டாக, 3+வருடங்களுக்கு எவ்வித பரம்பலும் இல்லை. மற்றும்

தடுப்பூசி ஏற்றல் <80வீதம்). இந்த ஆரம்பநிலை 10 சம்பவங்கள்/100>000 பேர்/வாரம் என்ற அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 30,000க்கும் குறைவான மக்கள் தொகையில், ஒரு வாரத்தில் ஐந்து சம்பவங்கள் அல்லது மூன்று வார காலப்பகுதியில் சம்பவங்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காதல் என்பது நோய் பரவலை உறுதி செய்யும். முகாம்களில் ஒரு வாரத்தில் இரண்டு சம்பவங்கள் நோய் பரவலை உறுதி செய்யும்.

- டெங்கு - கடந்த இரண்டு வாரங்களில் சுகவீன சம்பவங்கள் அதிகரித்தல் சுகவீனமுற்ற நோயாளியின் IgG மட்டங்கள் (செரா-மாதிரிகள் தொடர்ச்சியாக சோடிகளாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படல்) 3-5 நாட்களில் சுகவீனம் மற்றும் சிறுதட்டுக்களின் எண்ணிக்கை குறைதல் (<20,000) என்பன அதிகரித்தலை வெளிப்படுத்தும்.

8. **நோய் பரவல் மறுசீரமைப்பு:** ஒருங்கிணைப்பு, சம்பவ முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் நோயியல், ஆய்வுகூடம், நோயின் அடிப்படையில் நீர் மற்றும் தேகாரோக்கிய மேம்படுத்தல், சவால் தொடர்பாடல், சமூக ஒன்றுதிரட்டல், ஊடக உறவுகள் மற்றும் தகவல் முகாமைத்துவம், அனைத்து ஒழுங்கு வசதிகள் மற்றும் பாதுகாப்பு போன்ற குறிப்பிட்ட தடுப்பு முறைகள் நோய் பரவல் மறுசீரமைப்பின் முக்கியமான அம்சங்களாகும்.

9. **கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்:** நோய் பரவலை ஏற்படுத்தும் நோய் காவியை தடுப்பதற்காக கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் விசேடமாக வடிவமைக்கப்படல் வேண்டும். வழமையாக, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பொருத்தமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வடிவமைப்பதற்கு முகவர் தொடர்பாக தற்போதுள்ள அறிவானது நமக்கு வழிகாட்டும். பொதுவாக, மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் வளங்களை கட்டுப்படுத்தல் மற்றும்/அல்லது பரவலை தடுத்தல் (உ-ம்: கொலராவை தடுப்பதற்கு மேம்படுத்தப்பட்ட நீர் வளம்), பரவலுக்கு இடையூறு ஏற்படுத்தல் மற்றும்/அல்லது தொற்றுதலை தடுத்தல் (உ-ம்: சின்னம்மையை தடுப்பதற்கு வெகுசன தடுப்பூசி ஏற்றல் அல்லது மலேரியாவை தடுப்பதற்கு LLINபயன்படுத்தல்) மற்றும் பாதுகாப்பினை நவீனமயப்படுத்தல் என்பன உள்ளடங்குகின்றன (சுகாதார முறைகள் தரம் 5, நீர் விநியோக தரங்கள் 1-2, போஷாக்கு மேம்பாடு தரங்கள் 1-2 மற்றும் நோய் நுண்மப் பரப்பிகள் கட்டுப்பாட்டு தரங்கள் 1-3 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???).**

10. **சம்பவ இறப்பு வீதங்கள்:** பொதுவான சூழ்நிலை, சுகாதார சேவைகளின் ஏற்றுக் கொள்ளும் தன்மை மற்றும் சம்பவ முகாமைத்துவத்தின் தரம் மற்றும் துரிதத் தன்மை என்பவற்றின் அடிப்படையில் பரவக் கூடிய நோய்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவ இறப்பு வீதங்கள் வேறுபடும். பொதுவாக, சம்பவ இறப்பு வீதங்களில் இறப்பதற்கு இலக்கு இயன்றளவு குறைவாக இருக்கும். எதிர்பார்க்கப்பட்ட ஆகக் குறைந்த மட்டங்களை சம்பவ இறப்பு வீதங்கள் தாண்டுமாயின், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் உடனடி மதிப்பீடு முன்னெடுக்கப்படல் வேண்டும். அத்துடன், சம்பவ இறப்பு வீதங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பேணப்படுவதனை உறுதி செய்வதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்**.**

2.2. அத்தியாவசிய சுகாதார சேவைகள்: சிறுவர் உடல் நலன்

அவசர கால நிலைகளின் போது, இறப்பு வீதம் மற்றும் நோய் பாதிக்கும் அளவு அதிகரிப்பதில் விசேடமாக பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்கள். அவர்களுடைய விசேடமான சுகாதாரத் தேவைகளை அடையாளங் காண்பதில், சிறுவர்களை இலக்கு வைத்த இடையீடுகள் அவசியமாக இருக்கும். சிறுவர் சுகாதார இடையீடுகள் தீவிரமான சுவாசத் தொற்றுக்கள், வயிற்றுப் போக்கு, சின்னம்மை, போஷாக்கின்மை மற்றும் மகப்பேற்றுக்குப் பின்னரான விளைவுகள் உள்ளடங்கலாக, இறப்பு வீதம் மற்றும் நோய் பாதிக்கும் அளவு என்பன அதிகரிப்பதற்கான முக்கியமான காரணிகளை அடையாளங் காணும் நடவடிக்கைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் உடல் நலன் தரம் 1: தடுப்பூசியினால் தடுக்கக் கூடிய நோய்களின் தடுப்பு

சின்னம்மைக்கு எதிரான தடுப்பூசி 6 மாதங்கள் தொடக்கம் 15 வயதுடையவர்களுக்கு வழங்கப்படும். அத்துடன், நிலைமை சுமூகமடைந்தவுடன் தடுப்பூசியேற்றல் தொடர்பான விஸ்தரிக்கப்பட்ட நிகழ்ச்சி (EPI) சேவைகளுக்கு பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனர்த்த மறுசீரமைப்பின் ஆரம்பத்தில், நோய் பரவலின் ஆபத்தை தீர்மானிப்பதற்கு, 9 மாதங்கள் முதல் 15 வருடங்கள் வரை வயதுடையவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான கணிப்பீட்டினை செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- <90வீதமாக அல்லது தெரியாததாக சின்னம்மை தடுப்பூசி வழங்கல் இருக்கும் போது, 6 மாதங்கள் முதல் 15 வருடங்கள் வரை வெகுசன சின்னம்மை தடுப்பூசி வழங்கல் பிரசாரத்தை முன்னெடுத்தல். இதில் 6 தொடக்கம் 59 மாதங்கள் வயதுடையவர்களுக்கு உயிர்ச்சத்து ஏ வழங்கல் தொடர்பான நிர்வாகமும் முன்னெடுக்கப்படல் வேண்டும் (வழிகாட்டல் குறிப்புக்கள் 1-2ஐப் பார்க்கவும்).
- தடுப்பூசி ஏற்றப்பட்ட 6-9 மாதங்கள் வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும், 9 மாதங்களை அடைந்தவுடன் சின்னம்மை தடுப்பூசி வழங்கப்படல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- இடம்பெயர்ந்த மக்களுக்கு, ஆகக் குறைந்தது 95 வீதமான புதியவர்களுக்கு முகாமுக்கு அல்லது சமுதாயத்திற்கு 6 மாதங்கள் மற்றும் 15 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு சின்னம்மைக்கு எதிரான தடுப்பூசி வழங்கப்படலை உறுதி செய்யும் முன்னெடுத்துச் செல்லப்படும் முறையொன்றை ஸ்தாபித்தல்
- சின்னம்மைக்கு எதிராக மற்றும் தேசிய அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள தடுப்பூசியின் மூலம் தடுக்கக் கூடிய நோய்களுக்கு வழமையான தடுப்பூசி வழங்கப்பட்ட சூழ்நிலை மீள் திரும்பும் போது EPII மீள் ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- சின்னம்மை தடுப்பூசி பிராசரத்தை பூர்த்தி செய்தலின் அடிப்படையில்
  - 6 மாதங்களிலிருந்து 15 வயதுடையவர்களில் 95 வீதமானவர்கள் சின்னம்மை தடுப்பூசியினைப் பெறுவதனை உறுதி செய்தல்.
  - 6 மாதங்களிலிருந்து 15 வயதுடையவர்களில் 95 வீதமானவர்கள் பொருத்தமான உயிர்ச்சத்து ஏ பெறுவதனை உறுதி செய்தல்.
- வழமையான EPI சேவைகள் மீள்ஸ்தாபிக்கப்பட்டவுடன், 12 மாதங்கள் வயதுடைய சிறுவர்களில் ஆகக் குறைந்தது 90 வீதமானோர் சிறுவர்களுக்கான முழுமையான தடுப்பூசி ஏற்றல் அளவான DPT (diphtheria, pertussis மற்றும் tetanus) துளிகள் மூன்றினைப் பெறுதல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சின்னம்மை தடுப்பூசி ஏற்றல்:** தடுப்பூசி ஏற்றல் தரவின் மீளாய்வின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்கள் தொகையில் சின்னம்மை தடுப்பூசி ஏற்றலை தீர்மானிக்கவும். இந்த மீளாய்வின் அடிப்படையில், வழமையான சின்னம்மை தடுப்பூசி ஏற்றலானது ஐந்து வயதுக்கு முந்தியவர்களுக்கு ≥90வீதம் வழங்கப்பட்டிருக்கின்றதா மற்றும்/அல்லது 12 மாதங்களுக்கு முந்தியவர்களுக்கு நடத்தப்பட்ட சின்னம்மை தடுப்பூசி நிகழ்ச்சி 9 மாதம் தொடக்கம் 5 வயது வரையான ≥90 வீத சிறுவர்களை அடைந்திருக்கின்றதா என்பதனை தீர்மானிக்கவும். சின்னம்மை தடுப்பூசி ஏற்றலாது <90 வீதமாக இருக்குமாயின், தடுப்பூசி ஏற்றல் சம்பந்தப்பட்ட குறிப்பிடப்படாதவை அல்லது சந்தேகத்திற்கிடமானவையின் மூலம், முன்னெடுக்கப்பட்ட தடுப்பூசி ஏற்றல் நிகழ்ச்சியானது கருதுகோளின் அடிப்படையில் நடைபெற்றதாகவும், நோய் பரவலைத் தடுப்பதற்கு அது போதியது அல்ல என்ற முடிவுக்கும் வரலாம்
2. **சின்னம்மை தடுப்பூசி ஏற்றலுக்கான வயது மட்டங்கள்:** சில சிறுவர்கள் முந்தைய சின்னம்மை தடுப்பூசி நிகழ்ச்சிகள் மற்றும் சின்னம்மை நோயிலிருந்து தப்பியிருக்கலாம். இந்த சிறுவர்களுக்கு இன்னும் சின்னம்மை தொற்றுக்கான ஆபத்து உள்ளது. அத்துடன், குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களுக்கு நோயைத் தொற்றச் செய்யக் கூடிய அதிக அச்சுறுத்தல் மிக்க வளமாக மாறலாம். 15 வயது வரையானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான பரிந்துரை முன்வைக்கப்படுவதற்கு முக்கியமான காரணம் இதுவாகும். வளங்கள் மிகவும் மோசமாக இருக்கின்ற நிலையில், 6 மாதங்கள் தொடக்கம் 15 வயதுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றுவது என்பது சாத்தியமானதாக இருக்காது. இவ்வாறான நிலையில், 6-59 மாதங்கள் வயதுடைய சிறுவர்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். இலக்கு வைக்கப்பட்ட வயதுக் குழுவில் உள்ள அனைத்து சிறுவர்களுக்கும், அவர்களுடைய முந்தைய தடுப்பூசி ஏற்றப்பட்ட நிலை தொடர்பில் கவனஞ் செலுத்தப்படாது சின்னம்மை தடுப்பூசி ஏற்றப்படல் வேண்டும்.
3. **6-9 மாதங்கள் வயதுடைய சிறுவர்களுக்கு சின்னம்மை தடுப்பூசியை மீள ஏற்றல்:** சின்னம்மை தடுப்பூசி ஏற்றப்பட்ட 6-9 மாதங்கள் வயதுடைய அனைத்து சிறுவர்களுக்கும், 9 மாதங்களை எட்டும் போது, 2 துளிகள் ஏற்றப்பட்டு

ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்குப் பின்னர் மேலதிக துளி சின்னம்மை தடுப்பூசி வழங்கப்படல் வேண்டும்.

4. **தேசிய EPI நிகழ்ச்சியை மீள ஸ்தாபித்தல்:** சின்னம்மைக்கு எதிரான தடுப்பூசி ஏற்றல் நிகழ்ச்சியானது பாரிய அளவில் முன்னெடுக்கப்படும் அதே வேளை, தேசிய அதிகாரிகளுடனான ஒருங்கிணைப்புடன் EPI நிகழ்ச்சிகளை மீள ஸ்தாபிப்பதற்கான திட்டங்களும் ஆரம்பிக்கப்படல் வேண்டும். EPI தடுப்பூசி நிகழ்ச்சியை முறையாக மீள ஸ்தாபிப்பது என்பது சின்னம்மை, தொண்டை அடைப்பான் மற்றும் கக்குவான் போன்ற நோய்களில் இருந்து சிறுவர்களை நேரடியாக பாதுகாப்பது மாத்திரமன்றி, சுவாசத் தொற்றுக்கள் ஏற்படுவதற்கான அச்சுறுத்தல்களையும் குறைக்கின்றது.

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - சிறுவர் உடல் நலன் தரம் 2: புதிதாக பிறந்த மற்றும் சிறுபராய சுகவீனங்களை முகாமை செய்தல்.

புதிதாக பிறக்கும் மற்றும் சிறுபராய நோய் தாக்கும் வீதம் மற்றும் இறப்பு வீதம் என்பவற்றிற்கான முக்கியமான காரணங்களை அடையாளங் காண்பதற்கு வடிவமைக்கப்பட்ட முன்னிலை சுகாதார சேவைகளுக்கு சிறுவர்களுக்கு பிரவேசம் உள்ளமை.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- புதிதாக பிறந்தவர்களின் எந்தவொரு சுகவீனத்திற்கும் (காய்ச்சல், தடிமன், வயிற்றுப்போக்கு, இன்னபிற) துரித சிகிச்சையைப் பெறுவதற்கு பாதிக்கப்பட்ட மக்களை ஊக்குவிக்கும் சுகாதாரக் கல்வி செய்திகளை உருவாக்கல். சுகாதாரக் கல்வி செய்திகளை வடிவமைக்கும் போது, பெரியவர்களின் பராமரிப்பு இல்லாத சிறுவர்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தல் (சுகாதார முறைமைகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- இயலுமாயின், புதிதாக பிறந்தவர்களுக்கான அத்தியாவசிய பராமரிப்பினை, கர்ப்பம் மற்றும் குழந்தைப் பிறப்பு தொடர்பான ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவ (IMPAC) வழிகாட்டிகளின் அடிப்படையில் புதிதாக பிறந்தவர்கள் அனைவருக்கும் வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- தேசிய நெறிமுறைகள் அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் IMCI வழிகாட்டிகளைப் பயன்படுத்தி முதல் தர சுகாதார வசதிகளில் சிறுவர்களுக்கு சுகாதார பராமரிப்பினை வழங்கல். அத்துடன், தீவிரமாக சுகவீனமுற்றுள்ள சிறுவர்களுக்கு வைத்தியசாலை பராமரிப்பினை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- அவசர கால மதிப்பீட்டுக்கான தரப்படுத்தப்பட்ட முறைமையை உருவாக்கல். அவசர கால அறிகுறியுடன் உள்ள அனைவருக்கும் உடனடியாக சிகிச்சை வழங்கப்படுவதனை உறுதி செய்வதற்கு சுகவீனமுற்ற சிறுவர்களுக்கு பராமரிப்பு வழங்கும் அனைத்து சுகாதார வசதிகளிலும் அதனை வகைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

- சுகாதார சேவைகளுக்கு சமூகமளிக்கும் சிறுவர்கள் அனைவரினதும் போஷாக்கு நிலை தொடர்பில் பரிசோதிக்கப்படுவதுடன், போஷாக்குச் சேவைகளுக்கான குறிப்புதவிகள் வழங்கப்படுவதனை உறுதி செய்தல் (தீவிர போஷாக்கின்மை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை முகாமைத்துவம் செய்தல் தரங்கள் 1-3ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- தொண்டை அடைப்பான் மற்றும் கக்குவான் போன்ற நோய்கள் அதிகளவில் பரவுவதற்கான அச்சுறுத்தல் உள்ள சூழ்நிலைகளில், அவற்றுக்கு சிகிச்சை அளிப்பதற்கான பொருத்தமான சம்பவ முகாமைத்துவ நெறிமுறைகளை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).
- பொதுவான சிறுபராய சுகவீனங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான அத்தியாவசிய மருந்துகள் பொருத்தமான அளவில் மற்றும் வடிவில் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- மலேரியா தாக்கத்துக்கு உள்ளான 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள் அனைவரும், அறிகுறிகள் தென்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் பயனுள்ள மலேரியாவுக்கு எதிரான சிகிச்சைகளைப் பெறுதல் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய நோய்களைக் கட்டுப்படுத்தல் தரம் 2ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டுள்ள 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள் அனைவரும் வாய் வழி உடல் நீரேற்ட உப்புக்கள் (ORS) மற்றும் துத்தநாகம் உட்கொள்ளல் ஆகிய இரண்டு வழிகளையும் பெறுதல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- நியூமோனியா தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள் அனைவரும் பொருத்தமான பக்ரீரியாவுக்கு எதிரான மருந்துகளை உட்கொள்ளுதல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **புதிதாக பிறந்தவர்களுக்கான பராமரிப்பு:** புதிததாக பிறந்த குழந்தைகள் அனைத்திற்கும், பிறப்பின் போது திறன் சார்ந்த பராமரிப்பு (சுகதார வசதியில் வழங்கப்படுவது விரும்பத்தக்கது) வழங்கப்படல் வேண்டும். அத்துடன், சூடான நிலையில் வைத்திருக்கப்படுவதுடன், துரித மற்றும் நேரடி தாய்ப்பாலூட்டல் வழங்கப்படல் வேண்டும். புதிதாக பிறந்த அனைத்து குழந்தைகளும் எந்தவொரு பிரச்சினைகள் தொடர்பிலும், விசேடமாக பாலூட்டல் சிக்கல்கள் தொடர்பில் பரிசோதிக்கப்படல் வேண்டும். புதிதாக பிறந்த குழந்தைகளில் சுகவீனமுற்றவர்கள், சாத்தியமான சீழ்பிடிப்பு மற்றும் உள்ளூர் தொற்றுக்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.
2. **சிறுபராய சுகவீனத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவம் (IMCI):** சிறுவர் உடல் நலனுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையாக IMCI உள்ளது. அது ஆரம்ப பராமரிப்பு மட்டத்தில் உள்ள 5 வயதுக்கு குறைந்தவர்களின் பராமரிப்பு தொடர்பில் இலக்கு வைக்கின்றது. நாடொன்றில் IMCI வடிவமைக்கப்பட்டு, சிகிச்சை வழங்கல் வழகாட்டிகள் உள்வாங்கப்படும்

போது, இந்த வழிகாட்டிகள் தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளுடன் சேர்க்கப்படல் வேண்டும். அத்துடன், சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பொருத்தமான வகையில் பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

3. **வகைப்படுத்தல்:** IMCI மற்றும் குறிப்புதவி பராமரிப்பு வழிகாட்டிகள் துரித வகைப்படுத்தல் மற்றும் சிகிச்சையுடன் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்படும் போது பரவலாக்கப்படும். நோயாளிகளின் மருத்துவ தேவைகள், கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்கள் மற்றும் அவர்கள் வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் என்பவற்றின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய குழுக்களை பிரித்தலே வகைப்படுத்தல் எனப்படுகின்றது. சுகவீனமுற்ற சிறுவர்களுக்கான பராமரிப்பில் ஈடுபட்டுள்ள மருத்துவ ஊழியர்கள், துரித மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு அவசரகால வகைப்படுத்தல், மதிப்பீடு மற்றும் சிகிச்சை அளித்தல் (ETAT) வழிகாட்டிகள் தொடர்பில் பயிற்றப்படல் வேண்டும்.
4. **வயிற்றுப்போக்கை முகாமைத்துவம் செய்தல்:** வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு குறைந்த ஒஸ்மோலிட்டியுடனான ORS வழங்கப்படல் வேண்டும். அத்துடன், துத்தநாகமும் வழங்கப்படல் வேண்டும். குறைந்த ORSஆனது வயிற்றுப் போக்குக்கான அவகாசத்தை குறுகியதாக்கி, நரம்பு வழித் திரவத்திற்கான தேவையை குறைக்கின்றது.
5. **நியூமோனியாவை முகாமைத்துவம் செய்தல்:** இருமலினால் பாதிக்கப்பட்ட, வேகமான மற்றும்/அல்லது சுவாசிப்பதற்கு நெருக்கடி மற்றும் மார்புச் சளி என்பவற்றினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் துரிதமாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். வேகமான மற்றும்/அல்லது சுவாச நெருக்கடி உள்ளவர்களுக்கு பொருத்தமான பக்ரீரியாவுக்கு எதிரான மருந்து வாய்வழி மூலம் வழங்கப்படல் வேண்டும். மார்புச் சளி பிரச்சினை உள்ளவர்கள் வைத்தியசாலைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.
6. **கக்குவான் அல்லது தொண்டை அடைப்பான் நோய்கள்:** மக்கள் இடப்பெயர்வின் போது பொதுவாக ஏற்படும் நோயாக கக்குவான் உள்ளது. whole-cell DPT தடுப்பூசி குறித்து வயதான தடுப்பூசி பெறுபவர்கள் மத்தியிலான மோசமான நிகழ்வுகள் தொடர்பான அக்கறைகள் காரணமாக கக்குவான் நோய் தொடர்பில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சியானது பொதுவாக தவிர்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இவ்வாறான நோய் பரவல்கள், வழமையான தடுப்பூசி ஏற்றல் இடைவெளிகளை அடையாளங் காண பயன்படுகின்றது. சம்பவ முகாமைத்துவத்தில் நோயாளிகளுக்கு பக்ரீரியாவுக்கு எதிரான சிகிச்சை மற்றும் குழந்தை அல்லது கர்ப்பிணிப் பெண் உள்ள குடும்பங்களில் துரித நோய் தடுப்பு சிகிச்சை என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. தொண்டை அடைப்பான் நோய் பரவல் அதிகம் பொதுவானது அல்ல. ஆனால், அதிக சன நெருக்கடி வாய்ந்த பகுதிகளில் ஏற்படக் கூடிய நோயாக காணப்படுகின்றது. தொண்டை அடைப்பான் நோயினை கட்டுப்படுத்துவதற்கு முகாம் அமைப்புக்களில் பரந்த அளவில் மூன்று துளி தனித் தனி தடுப்பு மருந்து வழங்கல் முன்னெடுக்கப்படல் வேண்டும். சம்பவ முகாமைத்துவத்தில் எதிர் நச்சு மற்றும் நுண்ணுயிர் கொல்லிகள் உள்ளடக்கப்படல் வேண்டும்

2.3.அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம்

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் உள்ளடங்கலாக தனிநபர்கள் அனைவரும், இனப்பெருக்கச் சுகாதாரத்திற்கான (RH) உரிமை உடையவர்கள். இந்த உரிமையை பயிற்சி செய்வதற்கு, சுதந்திரமான மற்றும் முறையான தெரிவுகளை மேற்கொள்வதற்கு முழுமையான இனப்பெருக்கச் சுகாதார தகவல்கள் மற்றும் சேவைகளுக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரவேசம் இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளின் அடிப்படையில் தரமான இனப்பெருக்கச் சுகாதார சேவைகள் அமைதல் வேண்டும். அவை, சமுதாயத்தின் மத நம்பிக்கைகள், இன அடையாளங்கள் மற்றும் கலாசார பின்னணிகளை மதிப்பதாக அமைதல் வேண்டும். அதேவேளை, உலகாளவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தரங்களிற்கு இசைவானதாகவும் இருத்தல் வேண்டும்.

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதார தரம் 1: இனப்பெருக்கச் சுகாதாரம்

அவசரகால நிலையில் ஆரம்ப கட்டத்தில் ஆகக் குறைந்த ஆரம்ப சேவைத் தொகுதியின் (MISP) முன்னுரிமை இனப்பெருக்கச் சுகாதார சேவைகளுக்கும், நிலைமை இயல்புக்கு திரும்பியவுடன் முழுமையான இனப்பெருக்கச் சுகாதாரத்திற்கும் மக்களுக்கு பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- MISPஇன் ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலை இலகுபடுத்துவதற்கும் மற்றும் RH அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளமை மற்றும் சுகாதாரத் துறை அல்லது தொகுதிக்குள் செயற்படுதல் என்பவற்றை உறுதி செய்வதற்கும் சுகாதாரத் துறைக்குள் அல்லது தொகுதிக்குள் முன்னணி இனப்பெருக்கச் சுகாதார நிறுவனத்தை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- வேறு சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் தொகுதிகளுடனான ஒருங்கிணைப்புடன் பாலியல் வன்முறை சார்ந்த ஆபத்துக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- மனநலம் மற்றும் உளச்சமூக உதவிகள் மற்றும் சட்ட உதவிக்கான பிரவேசம் உள்ளடங்கலாக பாலியல் வன்முறை குறித்த மருத்துவ முகாமைவத்திற்கான சேவைகளை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 2, வழிகாட்டல் குறிப்பு 7ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- எச்.ஐ.வி பரவலை தடுப்பதற்கு எச்.ஐ.வி தடுப்பு, சிகிச்சை, பராமரிப்பு மற்றும் உதவி சேவைகளுக்கான ஆகக் குறைந்த தொகுதியை ஸ்தாபித்தல் (அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதார தரம் 2ஐப் பார்க்கவும் பக்கம் ???).

- அவசரகால மகப்பேறு மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான பராமரிப்பு சேவைகள் பின்வருவன உள்ளடங்கலாக கிடைக்கக் கூடியதாகவும், அணுகக் கூடியதாகவும் இருத்தல்:
    - சுகாதார நிலையங்களில் - திறமையான பிறப்பு வேலையாட்களுடன், வழமையான பிறப்புக்கான விநியோகம் மற்றும் அவசரகால மகப்பேற்றுக்கான அடிப்படை முகாமைத்துவம் மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான சிக்கல்கள்: அடிப்படை அவசரகால மகப்பேற்று பராமரிப்பு (BEmOC) மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான பராமரிப்பு
    - குறிப்பு வைத்தியசாலைகளில் - திறமையான மருத்துவ ஊழியர்கள் மற்றும் மகப்பேற்று மற்றும் புதிதாக பிறந்தவர்களின் சிக்கல்களுக்கான முழுமையான முகாமைத்துவத்திற்கான விநியோகம், முழுமையான அவசரகால மகப்பேற்று பராமரிப்பு (CEmOC) மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான பராமரிப்பு
    - மகப்பேற்று மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான அவசரகால நிலைகளை முகாமை செய்வதற்கான தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து முறைகள் ஸ்தாபிக்கப்படல் மற்றும் 24 மணித்தியாலங்களும், வாரத்தின் 7 நாட்களும் செயற்படல். சமுதாயத்திலிருந்து சுகாதார நிலையங்களுக்கு மற்றும் சுகாதார நிலையங்கள் மற்றும் குறிப்பு வைத்தியசாலைகளுக்கு இடையில் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- திறமையான சுகாதார சேவை வழங்குநர் மற்றும் சுகாதார வசதிகளுக்கான பிரவேசம் சாத்தியமாக இல்லாத சந்தர்ப்பங்களில் சுத்தமான வீட்டு விநியோகங்களுக்கு கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பிறப்பு வேலையாட்களுக்கு சுத்தமான விநியோகத் தொகுதிகளை வழங்கல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- பாலியல் வன்முறையில் தப்பியவர்களுக்கான மற்றும் கர்ப்பம் மற்றும் குழந்தை பிறப்பு தொடர்பான சிக்கல்களுக்கான அவசரகால குறிப்புதவி முறைகள் சார்ந்த பயன்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாக உள்ள சேவைகள் தொடர்பில் மக்கள் தொகைக்கு தகவல் தெரிவித்தல் (வழிகாட்டல் குறிப்பு 3-4ஐப் பார்க்கவும்).
- தேவைகளை நிறைவு செய்வதற்கு பொதுவான கருத்தடை முறைகள் இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- இயலுமான விரைவில் ஆரம்ப சுகாதார பராமரிப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான RH சேவைகளை நடைமுறைப்படுத்த திட்டமிடல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- தேசிய அல்லது WHO நெறிமுறைகளின் அடிப்படையில் அனைத்து சுகாதார வசதிகளுக்கும் பயிற்றப்பட்ட ஊழியர்கள், போதிய விநியோகம் மற்றும் பாலியல் பலாத்காரத்தில் உயிர்தப்பியவர்களுக்கான சேவைகள் சார்ந்த சிகிச்சை முகாமைத்துவத்திற்குமான கருவிகள் இருத்தல்.

- தமது ஒன்பது மாத காலப் பகுதியில் இருக்கும் அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் சுத்தமான விநியோகத் தொகுதி இருத்தல்.
- BEmOCஉடன் மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான பராமரிப்பு/500>000 மக்கள் தொகைக்கு ஆகக் குறைந்தது நான்கு சுகாதார வசதிகள் இருத்தல்.
- CEmOCஉடன் மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான பராமரிப்பு/500,000 மக்கள் தொகைக்கு ஆகக் குறைந்தது ஒரு சுகாதார வசதி இருத்தல்.
- சிசேரியன் செய்யப்படும் மகப்பேற்றின் அளவு 5 வீதத்திற்கு அல்லது 15 வீதத்திற்கு அதிகமானதாக இருக்கக் கூடாது (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்)

வழிகாட்டல் குறிப்புகள்

1. **ஆகக் குறைந்த ஆரம்ப சேவைத் தொகுதி:** அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பெண்கள், ஆண்கள் மற்றும் பருவமானவர்கள் மத்தியில் RH சம்பந்தப்பட்ட நோய் பாதிக்கும் வீதம் மற்றும் இறப்பு வீதங்களை தடுப்பதற்கு மிகவும் முக்கியமான சேவைகள் MISP எனப்படுகின்றது. அது, பாலியல் வன்முறையின் விளைவுகளை தடுத்தல் மற்றும் முகாமை செய்தல், எச்.ஐ.வி பரவலைத் தடுத்தல், மகப்பேற்று மற்றும் புதிதாக பிறக்கும் குழந்தைகளின் நோய் பாதிக்கும் வீதம் மற்றும் இறப்பு வீதங்கள் அதிகரித்தலை தடுத்தல் மற்றும் நிலைமை இயல்புக்கு திரும்பியவுடன் முழுமையான RH சேவைகளுக்கான திட்டமிடலை ஆரம்பித்தல் என்பவற்றுக்கு இணையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒருங்கிணைக்கப்பட்ட முன்னுரிமையான RH சேவைகளின் தொகுதியை உள்ளடங்கியுள்ளது. சிறந்த தரத்திலான முழுமையான RH நடவடிக்கைகளை அவசரகால நிலையின் ஆரம்ப நிலையில், ஆரம்ப சுகாதார பராமரிப்பாக ஒருங்கிணைக்கும் திட்டமிடல் என்பது தொடர்ச்சியான பராமரிப்பை உறுதி செய்வதற்கு அத்தியாவசியமானது ஆகும். முழுமையான RH பராமரிப்பு என்பதில் தற்போதைய சேவைகளை மேம்படுத்தல், தவறவிடப்பட்ட சேவைகளை சேர்த்தல் மற்றும் சேவை தரத்தை விஸ்தரித்தல் என்பன உள்ளடங்கும்.
2. RH **விநியோகங்கள்:** மக்கள் தொகைக்கு இந்த அத்தியாவசிய உற்பத்திகள் கிடைப்பது தாமதமடைவதனை தவிர்ப்பதற்கு MISPஇற்கான விநியோகம் ஒழுங்கு செய்யப்பட்டு, விநியோகிக்கப்பட்டு, சேமிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவனங்களுக்கு இடையிலான அவசரகால சுகாதாரத் தொகுதி 2006இல், பிந்தைய நோய்க் கட்டுப்பாட்டுக்கான, மக்னீசியம் சல்பேட் நோயாளிகளுக்கான வரையறுக்கப்பட்ட அளவில் மருந்துகள் மற்றும் தாதிகள் பராமரிப்புக்கான கருவிகள் மற்றும் மருந்துகளை உள்ளடக்கியுள்ளது. ஆனால், அனைத்து விநியோகங்களுக்கும் MISP அவசியம் இல்லை. நெருக்கடி நிலைமைகளுக்காக நிறுவனங்களுக்கு இடையிலான பணிக் குழுவினால் வடிவமைக்கப்பட்ட RH தொடர்பான நிறுவனங்களுக்கு இடையிலான இனப்பெருக்கச் சுகாதார தொகுதிகளில் மூன்று மாத காலத்திற்கான மருந்துகள் மற்றும் விநியோகங்கள் உள்ளடங்கியுள்ளன.

3. **பாலியல் வன்முறை:** அனர்த்த மறுசீரமைப்பில் உள்ள அனைத்து செயற்பாட்டாளர்களும் பாலியல் சுரண்டல் மற்றும் மனிதநேயப் பணியாளர் -களினால் துஷ்பிரயோகம் என்பன உள்ளடங்கலாக பாலியல் வன்முறை தொடர்பான அச்சுறுத்தல் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். அத்துடன், அவற்றை தடுப்பது மற்றும் அவற்றுக்கு பிரதிபலிப்பது தொடர்பில் பணியாற்ற வேண்டும். அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் திரட்டப்பட்ட தகவல்கள் பாதுகாப்பாக மற்றும் ஒழுங்காக சேர்க்கப்பட்டு, தகவல் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு பகிரப்படல் வேண்டும். பாலியல் வன்முறை தொடர்பான சம்பவங்கள் கண்காணிக்கப்படல் வேண்டும். தப்பியவர்களுக்கு உதவி செய்வதற்கான நடவடிக்கைகள், அனைத்து ஆரம்ப மட்ட சுகாதார வசதிகளிலும் இருத்தல் வேண்டும். அவசரகால கருத்தடை, எச்.ஐ.வியை தடுப்பதற்கான பிந்தைய நோய்க் கட்டுப்பாடு, பாலியல் ரீதியாக பரவும் நோய்களிற்கான முன்னோடி சிக்சை, காய பராமரிப்பு, டெட்டானஸ் தடுப்பு மற்றும் மஞ்சள் காய்ச்சல் பீ தடுப்பு என்பவற்றை வழங்குவதற்கான திறமையான ஊழியர்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். அவசரகால கருத்தடை முறையை பயன்படுத்தல் என்பது தனிப்பட்ட தெரிவின்பாற்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்களால் மாத்திரமே அந்த தெரிவு முன்னெடுக்கப்படல் வேண்டும். உகந்த தீர்மானத்தினை எடுப்பதற்கு பக்கச்சார்பற்ற உளவள ஆலோசனை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கப்படல் வேண்டும். மருத்துவ பராமரிப்பினை பெறுவதற்கு பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு உயிர்த் தப்பியவர்கள் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், அவர்களுக்கு மனநலம் மற்றும் உளச்சமூக உதவிகளுக்கான பிரவேசம் இருத்தல் வேண்டும். தப்பியவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், பாதுகாப்பு ஊழியர்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட உதவியினை வழங்குதல் வேண்டும். பாதிக்கப்பட்டு உயிர்த் தப்பியவரின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே அனைத்து பரிசோதனை மற்றும் சிகிச்சையும் முன்னெடுக்கப்படல் வேண்டும். அனைத்து மட்டங்களிலும் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படல் வேண்டும் (சுகாதார முறைமைகள் தரம் 5, வழிகாட்டல் குறிப்பு 3 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 7-12 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).

4. **அவசர கால மகப்பேறு மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கான பராமரிப்பு:** அண்ணளவாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையில் நான்கு வீதமானோர் கர்ப்பிணிப் பெண்களாக இருப்பர். அனைத்து கர்ப்பிணிப் பெண்களிலும் 15வீதமானவர்கள், எதிர்பாராத மகப்பேற்று சிக்கல்களை பிரசவத்தின் போது அல்லது கர்ப்பத்தின் போது எதிர்நோக்குவர். இதன்போது, அவசரகால மகப்பேற்று பராமரிப்பு அவசியமாகும். அத்துடன், அனைத்து பிரசவங்களினதும் 5-15வீதங்களுக்கு சிசேரியன் போன்ற சத்திர சிகிச்சை அவசியமாக இருக்கும். தாய்வழி மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளின் நோய் பாதிப்பு வீதம் மற்றும் இறப்பு வீதத்தினை தடுப்பதற்கு, திறமையான பிறப்பு வேலையாட்கள் அனைத்து பிரசவங்களின், BEmOC மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான சுவாசம் வழங்கல் என அனைத்து சந்தர்ப்பங்களிலும் சகல சுகாதார பராமரிப்பு வசதிகளிலும் தயாராக இருத்தல் வேண்டும். அல்லூண் வழி கொல்லிகள், அல்லூண்வழி மருந்துகள் (ஒக்சிடோசின்), அல்லூண்வழி வலிப்படக்கி மருந்துகள் (மக்னீசியம் சல்பேட்), பொருத்தமான தொழில் நுணுக்கத்தினைப் பயன்படுத்தி கருத்துருவின்

தக்க வைத்த பொருட்களை கைமுறை அகற்றல், நஞ்சுக்கொடியை கைமுறை மூலம் அகற்றல், உதவப்பட்ட யோனி பிரசவம் (வெற்றிடம் அல்லது இயல்பான பிறப்பு வழியில் இடுக்கியால் இழுத்துப் பெறுதல்), மற்றும் தாய்வழி மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளின் சுவாசம் என்பன BEmOC செயற்பாடுகளில் உள்ளடங்குகின்றன. CEmOCஇன் அனைத்து இடையீடுகளும், பொது மயக்க மருந்து வழங்கப்படும் சத்திர சிகிச்சை (சிசேரியன் பிரசவம், உதரத் திறப்பு) மற்றும் பகுத்த மற்றும் பாதுகாப்பான இரத்தமேற்றல் என்பன CEmOC செயற்பாடுகளில் உள்ளடங்குகின்றன.

பெண்கள் அல்லது புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு பரிந்துரை செய்யப்படுவது மற்றும் BEmOC மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்புடன் ஆரம்ப சுகாதார பராமரிப்புக்கு மற்றும் சுகாதார பராமரிப்பிலிருந்து போக்குவரத்து செய்தலுக்கான பிரவேசம் மற்றும் CEmOC மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்பு சேவைகளுடன் வைத்தியசாலைக்கு செல்வதற்கான பிரவேசம் என்பவற்றை குறிப்புதவி முறை உறுதி செய்தல் வேண்டும்.

அத்தியாவசிய சுகாதார சேவை - பாலியல் ரீதியான மற்றும் இனப்பெருக்கச் சுகாதார தரம் 2: எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ்

அனர்த்த காலங்களின் போது ஆகக் குறைந்த தொகுதி எச்.ஐ.வி தடுப்பு, சிகிச்சை, பராமரிப்பு மற்றும் உதவி சேவைகளுக்கு மக்களுக்கு பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அனைத்து சுகாதார பராமரிப்பு அமைப்புக்குள்ளும் கழிவு அகற்றலுக்கு தரமான முன்நிபந்தனைகள் மற்றும் பாதுகாப்பான நடைமுறைகளை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 2 மற்றும் சுகாதார முறைமைகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 10-11ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- பாதுகாப்பான இரத்த விநியோகம் மற்றும் இரத்தமேற்றலின் பாதுகாப்பான பயன்பாடு என்பவற்றை ஸ்தாபித்து, பின்பற்றல் (வழிகாட்டல் குறிப்பு 2 மற்றும் சுகாதார முறைமைகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- முறையான ஆணுறை பயன்பாடு உள்ளடங்கலாக சிறந்த தரமான இலவச ஆண் மற்றும் பெண் ஆணுறைகளுக்கான பிரவேசத்தை ஸ்தாபித்தல்.
- பாலியல் ரீதியாக பரவிய தொற்றுக்களுக்கான அறிகுறிகளுடன் உள்ள அனைத்து நோயாளர்களுக்கும் அறிகுறி முகாமைத்துவத்தினை சுகாதார வசதிகள் வழங்குவதனை உறுதி செய்தல்.
- பிந்தைய நோய்க் கட்டுப்பாட்டுச் சேவைகள்;(PEP) எச்.ஐ.வி நோய்த் தாக்கத்திற்கான சாத்தியம் ஏற்பட்டு 72 மணித்தியாலங்களுக்குள் வழங்கப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).

- அணுகக் கூடிய வடிவங்களில் தகவல்களையும் மற்றும் எச்.ஐ.வி தடுப்பு கல்வியையும் பொது மக்கள் மற்றும் அதிக ஆபத்துள்ள மக்களுக்கு (உ-ம்: பாலியல் தொழிலாளர்கள்) வழங்கல்.
- கருத்தடைகள், சுத்தமான மற்றும் பாதுகாப்பான குழந்தை பிரசவங்கள் (அவசரகால மகப்பேற்று பராமரிப்பு உள்ளடங்கலாக) என்பவற்றுக்கான பிரவேசம் மற்றும் ரெட்ரோவைரசுக்கு எதிரான (ARV) மருந்துகள் என்பவற்றை உறுதி செய்வதன் ஊடாக எச்.ஐ.வி தாயிடமிருந்து குழந்தைக்கு பரவுவதனை தடுத்தல் (PMTCT) (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான தாயிற்கு பிறந்த குழந்தைகளுக்கு வழிகாட்டல் மற்றும் குழந்தைகளுக்கு உணவூட்டல் தொடர்பான ஆலோசனைகள் உள்ளடங்கலாக சிகிச்சை, பராமரிப்பு மற்றும் உதவிகளை வழங்குதல் (குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உணவூட்டல் தரம் 2ஐப் பார்க்கவும் பக்கம் ???).
- எச்.ஐ.வி சார்ந்த தொற்றுக்களுக்கான cotrimoxazole நோய்க்கட்டுப்பாட்டு உள்ளடங்கலாக, எச்.ஐ.வியுடன் வாழும் மக்கள் (PLHIV) சுகாதார பராமரிப்பினைப் பெறுவதனை உறுதி செய்தல்.
- அனர்த்தத்திற்கு முன்னர் ரெட்ரோவைரசுக்கு எதிரான சிகிச்சைகளைப் (ART) பெற்று வந்தவர்கள், சிகிச்சையை தொடருவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- எச்.ஐ.வி மற்றும் காசநோய் நிகழ்ச்சிகள் காணப்படும் இடங்களில், அவற்றுக்கு இடையில் தொடர்பினை ஏற்படுத்தல்.
- அதிக அளவில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகும் ஆபத்து உள்ள மக்களுக்கு பாலியல் ரீதியான எச்.ஐ.வி தொற்றுவதிருந்து எச்.ஐ.வி தடுப்பு இடையீடுகளுக்கு பிரவேசம் இருப்பதனை உறுதி செய்தல். அத்துடன் சுத்தமான ஊசி ஏற்றல் கருவிகளுக்கான பிரவேசத்தை உறுதி செய்தல்.
- அனர்த்தத்திற்குப் பின்னரான நிலையில் எச்.ஐ.வி கட்டுப்பாட்டுச் சேவைகளை பரவலாக்குவதற்கான திட்டங்களை ஆரம்பித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- எச்.ஐ.வி தாக்கத்துக்கான அதிக ஆபத்துள்ள மக்கள் எச்.ஐ.வி தடுப்பு நிகழ்ச்சியின் மூலம் இலக்கு வைக்கப்படல்.
- எச்.ஐ.வி தொற்றுள்ளதாக கருதப்படும் கர்ப்பிணித் தாய்மாருக்கு PMTCTஇற்கான ARV மருந்துகள் வழங்கப்படுதல்.
- 100 வீதம் இரத்தம் ஏற்றல்கள், எச்.ஐ.வி உள்ளடங்கலாக இரத்தமேற்றல்-பரவல் தொற்றுக்களுக்காக பரிசோதிக்கப்படல் வேண்டும்.
- எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகும் சாத்தியமுள்ள தனிநபர்கள், (சுகாதார பராமரிப்பு அமைப்புக்களுக்கான தொழிற்சார் வெளிப்பாடு மற்றும் தொழிற்சாராத வெளிப்பாடு) சம்பவம் இடம்பெற்று 72 மணித்தியாலங்களுக்குள் PEPஇனைப் பெறல்.
- STI அறிகுறிகளுடன் உள்ள நோயாளிகளுக்கு அறிகுறி சார்ந்த முகாமைத்துவத்தினை வழங்குவதற்கு அனைத்து ஆரம்ப சுகாதார பராமரிப்பு வசதிகளிலும் அன்டிமைக்ரோபயல்கள் இருத்தல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **எச்.ஐ.வி கட்டுப்பாடு:** இந்த தரத்தின் பிரதான நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தொகுதியான எச்.ஐ.வி தடுப்பு, சிகிச்சை, பராமரிப்பு மற்றும் உதவி என்பன எச்.ஐ.வி பரவலைத் தடுப்பதற்கு மற்றும் எச்.ஐ.வியுடன் வாழும் மக்களுக்கு பராமரிப்பு மற்றும் உதவியை வழங்குவதற்கு சுகாதார துறை எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது. எந்தவொரு அனர்த்த மறுசீரமைப்பினதும் ஆரம்ப நிலையில் இவை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
2. **சுகாதார பராமரிப்பு அமைப்புக்களில் எச்.ஐ.வி பரவலைத் தடுத்தல்:** சுகாதார பராமரிப்பு அமைப்புக்களில் (உ-ம்: வைத்தியசாலைகள், சுகாதார பராமரிப்பு மருந்தகங்கள், தடுப்பூசி நிகழ்ச்சிகள்) எச்.ஐ.வி பரவலைத் தடுத்தல் என்பது அனர்த்த மறுசீரமைப்பின் ஆரம்ப கட்டங்களில் முன்னுரிமை வழங்க வேண்டியதாகும். தரமான முன்நிபந்தனைகளின் பயன்பாட்டினை அத்தியாவசிய நடவடிக்கைகள் உறுதி செய்தல் வேண்டும். பாதுகாப்பான மற்றும் பகுக்கப்பட்ட இரத்தமேற்றல் பயிற்சிகளை கட்டமைக்க வேண்டும். அத்துடன், சுகாதார பராமரிப்பு கழிவுகளின் முறையான அப்புறப்படுத்தலையும் உறுதி செய்தல் வேண்டும் (சுகாதார முறைமைகள் தரம் 1, வழிகாட்டல் குறிப்புக்கள் 5,10,11 என்பவற்றைப் பார்க்கவும் **பக்கம் ???**).
3. **பிந்தைய நோய்க் கட்டுப்பாடு:** எச்.ஐ.வி தொற்றினை தடுப்பதற்கான PEPஇல் உளவள ஆலோசனைகள், எச்.ஐ.வி வெளிப்பாடு சவாலினை மதிப்பீடு செய்தல், உடன்பாடு தெரிவித்தல், ARV மருந்துகளின் மூலம் மற்றும் பகுதியை மதிப்பீடு செய்தல் என்பன உள்ளடங்கும். எவ்வாறாயினும், எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர் என அறியப்படும் நபருக்கு PEP வழங்கப்படக் கூடாது. உளவள ஆலோசனை மற்றும் பரிசோதனைகள் என்பன எப்போதும் கட்டாயமானது அல்ல. அதேவேளை, பரிசோதனை அறிக்கைகளுக்கு காத்திருக்கும் சந்தர்ப்பத்தில் தாமதப்படுத்தக்கூடாது.
4. **ரெட்ரோவைரசுக்கு எதிரான மருந்துகள்:** அனர்த்த சூழ்நிலைகளில் PMTCT, PEP மற்றும் நீண்ட கால ARTஇற்கான ARVஇன் பகுதிகள் சாத்தியமானது. அனர்த்தத்திற்கு முன்னர் சிகிச்சைப் பெற்று வந்தவர்களுக்கு, ARTஇனை தொடருதல் என்பது குறித்து அனர்த்த மறுசீரமைப்பின் போது முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். ஏற்கனவே ART பெற்று வரும் கர்ப்பிணித் தாய்மார் தடையின்றி ARTஇனை பெறுவதனை தொடரல் வேண்டும். இயலுமான சந்தர்ப்பங்களில் தேசிய நெறிமுறைகளுக்கு அமைய எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான கர்ப்பிணிப் பெண்கள் PMTCTஇற்கு ARVஇனைப் பெறல் வேண்டும்.

குறிப்பு

Caritas Internationalis மற்றும் அதன் உறுப்பினர்கள் செயற்கையான பிறப்பு கட்டுப்பாட்டு கருவிகள் விநியோகத்தினை, அல்லது பயன்பாட்டினை பிரசாரப்படுத்துவது இல்லை.

2.4. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - காயமடைதல்

பூமியதிர்ச்சிகள் போன்ற கடுமையான இயற்கை அனர்த்தங்களினைத் தொடர்ந்து இடம்பெறும் நோய் தாக்கும் வீதம் மற்றும் இறப்பு வீதம் என்பவற்றிற்கு முக்கியமான காரணமாக காயம் காணப்படுகின்றது. பல கடுமையான இயற்கை அனர்த்தங்கள் பாரிய அளவில் சேதத்தை ஏற்படுத்தும். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நோயாளிகளாக மாறுவர். உடல் சார் வன்முறைகளினால் ஏற்படும் காயமும், சிக்கலான அவசர காலநிலைகளுடன் தொடர்புடையது. உதாரணமாக, ஆயுத முரண்பாட்டின் போது சுகாதார வசதிகளுக்கு வெகு தொலைவில் உள்ள பாதுகாப்பற்ற பிராந்தியங்களில் பெரும்பாலான அதிர்ச்சி சம்பந்தப்பட்ட இறப்புக்கள் நிகழும். இவற்றை பொதுவாக சுகாதார பராமரிப்பின் ஊடாக குணப்படுத்த முடியாது. சிவில் மக்களை பாதுகாப்பதனை இலக்காகக் கொண்ட இடையீடுகள், இந்த உயிரிழப்புக்களையும் தடுக்க வேண்டும் (பாதுகாப்பு கோட்பாடு 3, வழிகாட்டல் குறிப்புக்கள் 1-5ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - காயம் தரம் 1: காய பராமரிப்பு

அனர்த்தங்களின் போது தவிர்க்கக் கூடிய நோய் பாதிக்கும் வீதம், இறப்பு வீதம் மற்றும் அங்கவீனமடைதலை தவிர்ப்பதற்கு பயனுள்ள காய பராமரிப்புக்கு மக்களுக்கு பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- உள்ளூர் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் சுகாதாரத் துறை மறுசீரமைப்புக்களை ஒருங்கிணைப்பவர்கள் பாரிய விபத்து முகாமைத்துவம் தொடர்பில் பழக்கமுடையவராக இருத்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- பாரிய விபத்து நிகழும் சந்தர்ப்பங்களில், மதிப்பீடு, முன்னுரிமைப்படுத்தல், அடிப்படை இரத்தமேற்றல் மற்றும் குறிப்புதவி தொடர்பான தெளிவான வழிகாட்டலுடன் வகைப்படுத்தலின் தரப்படுத்தப்பட்ட முறைமையை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- முதலுதவி மற்றும் அடிப்படை இரத்தமேற்றலுக்கான அத்தியாவசிய கோட்பாடுகள் மற்றும் திறன்கள் சுகாதாரப் பணியாளர்களால் பரந்தளவில் புரிந்து கொள்ளப்படுவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- காய முகாமைத்துவத்தின் முக்கியமான கோட்பாடுகள் தொடர்பில் உள்ளூர் சுகாதாரப் பணியாளர்கள் பழக்கமுடையவர்களாக இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- மோசமான காயங்களுடன் உள்ளவர்கள் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு டொக்சைட் உள்ளடங்கிய டெட்டானஸ் தடுப்பூசியை வழங்குதல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- சத்திர சிகிச்சை மற்றும் அதற்குப் பின்னரான பராமரிப்பு உள்ளடங்கலாக மேலதிக பராமரிப்புக்காக காயமடைந்த நோயாளிகளுக்கான குறிப்புதவிகளுக்கு

தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளை ஸ்தாபித்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

- உறுதியான அதிர்ச்சி மற்றும் அறுவை சிகிச்சை சேவைகள் மற்றும் அதிர்ச்சிக்குப் பின்னரான, அறுவை சிகிச்சைக்குப் பின்னரான புனர்வாழ்வு என்பன பொருத்தமான நிபுணர்கள் மற்றும் வளங்களை கொண்ட நிறுவனங்களால் மாத்திரமே உருவாக்கப்படலை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).
- தரப்படுத்தப்பட்ட உதவி கருவிகளும் மற்றும் நடமாடும் உதவிகளும் (சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள்) காயமடைந்த நோயாளிகளுக்கும், மாற்றுத் திறனுடையவர்களுக்கும் இயலுமான விரைவில், இந்த உதவிகள் உள்ளூரில் திருத்தக் கூடிய வகையில் கிடைக்கக் கூடியதாக இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 6ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- பல வகையான விபத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு அனைத்து சுகாதார வசதிகளிலும் போதிய அளவு பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் முறைமைகள் இருத்தல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **வகைப்படுத்தல்:** நோயாளிகளை அவர்களுடைய காயங்களின் தீவிரத் தன்மை அல்லது சுகவீனம் என்பவற்றின் அடிப்படையில் வகுப்பாக்கம் செய்தல் மற்றும் வளங்களின் கிடைக்கக் கூடியத் தன்மை மற்றும் நோயளிகளின் பிழைக்கக் கூடியத் தன்மை என்பவற்றின் அடிப்படையில் சிகிச்சைகளை முன்னுரிமைப் படுத்துகின்ற நடைமுறை வகைப்படுத்தல் எனப்படுகின்றது. பாரிய விபத்து நிகழும் சந்தர்ப்பங்களில், தீவிரமான, உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் காயங்களுக்கு, காப்பாற்றக் கூடிய காயங்களை உடையவர்களிலும் பார்க்க குறைந்த அளவிலான முன்னுரிமையே வழங்கப்படும். வகைப்படுத்தலுக்கான தரப்படுத்தப்பட்ட முறைமை எதுவும் இல்லை. அத்துடன், உலகம் முழுவதிலும் பல முறைமைகள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக பயன்படுத்தப்படும் வகைப்படுத்தலாக இருப்பது நான்கு நிறங்களில் குறியீடு செய்யும் முறைமையாகும். சிவப்பு நிறம் அதிக முன்னுரிமையை குறிக்கும். மஞ்சள் நிறம் நடுத்தர முன்னுரிமையைக் குறிக்கும். பச்சை நிறம் நடமாடக் கூடிய நோயாளிகளைக் குறிக்கும். கறுப்பு நிறம் இறந்தவர்களைக் குறிக்கும்.
2. **முதலுதவி மற்றும் அடிப்படை மருத்துவ பராமரிப்பு:** மீள சுவாசிக்க வைத்தல் மற்றும் சுவாசித்தலை பேணல் என்பவற்றுக்கு சுத்தமான காற்றும், காற்று வழி அடைக்கப்படாது இருத்தலும் அவசியம். அத்துடன், இரத்தம் வெளி-யேறலை தடுத்தல் மற்றும் தேவையாயின் நரம்பு வழி திரவங்களை நிர்வகித்தல் என்பன சிக்கலான நடைமுறைகளில் உள்ளடங்கும். குறிப்புதவி நிலையங்களுக்கு அனுப்புவதற்கு காயமடைந்த நபர்களை உயிர் அச்சுறுத்தலில் இருந்து காப்பாற்றுவதற்கு இந்த நடைமுறைகள் உதவி புரியும். அத்துடன், தீவிரமான காயங்களில் இருந்து அவர்கள் உயிர் பிழைப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கும். சுத்தம் செய்தல், காயங்களுக்கு கட்டுப் போடுதல், பக்ரீரியாவுக்கு எதிரான மருந்துகள் மற்றும் டெட்டானஸ் நோய்க் கட்டுப்பாட்டினை வழங்கல்

போன்ற வேறு செயற்படுத்தப்படாத நடைமுறைகளும் இதேபோன்று முக்கியமானது ஆகும்.

3. **காய முகாமைத்துவம்:** பெரும்பாலான அனர்த்தங்களில், காயமடைந்து ஆறு மணித்தியாலங்களுக்கும் அதிகமாக பெரும் எண்ணிக்கையிலான நோயா-ளிகள் சிகிச்சைப் பெறுவர். தாமதமாக சிகிச்சை அளிப்பது என்பது காயத்தின் தொற்று அதிகரிப்பதற்கு காரணமாகிவிடும். அத்துடன், நோய் பாதிக்கும் அளவும் அதிகரிக்கும். எனவே, தாமதமான முதன்மை மூடல் மற்றும் காயக் கழிவு மற்றும் அறுவைச் சிகிச்சையால் நீக்கப்பட்ட புறப் பொருட்கள் மற்றும் இறந்த கலங்கள் என்பன உள்ளடங்கலாக காயத் தொற்றினை தடுப்பதற்கு மற்றும் முகாமை செய்வதற்கு தேவையான பொருத்தமான கோட்பாடுகள் மற்றும் நெறி-முறைகள் தொடர்பில் உள்ளூர் சுகாதாரப் பணியாளர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமானது ஆகும்.

4. **டெட்டானஸ்:** திடீரென இடம்பெறும் இயற்கை அனர்த்தங்களில் அதிக எண்ணிக்கையிலானோர் காயமடைவர். அதிகமானோர் அதிர்ச்சி அடைவர். எனவே, டெட்டானஸிற்கான அச்சுறுத்தல் அதிகமாக இருக்கும். பரந்தளவிலான டெட்டானஸ் தடுப்பு மருந்து பரிந்துரைக்கப்படவில்லை எனின், மோசமான காயங்களை உடையவர்களுக்கு மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு டெட்டானஸ் டொக்சைட் (DT அல்லது Td - தொண்டை அடைப்பான் மற்றும் டெட்டானஸ் தடுப்பு மருந்து - அல்லது DPT, வயது மற்றும் தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட வரலாறு என்பதன் அடிப்படையில்) வழங்கப்படல் வேண்டும். முன்னர் டெட்டானஸுக்கு எதிரான தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட மோசமான காயமடைந்த நபர்கள், டெட்டானஸ் தடுப்பு மருந்து குளோபுளின் (TIG) துளியொன்றை பெறல் வேண்டும்.

5. **அதிர்ச்சி மற்றும் அறுவை சிகிச்சை பராமரிப்பு:** காய அறுவை சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை என்பன உயிரையும், நீண்ட கால மாற்றுத் திறனையும் காப்பாற்றும். அத்துடன், சில நிறுவனங்களிடம் மாத்திரம் உள்ள விசேட பயிற்சிகள் மற்றும் வளங்கள் தேவையாக இருக்கும். பொருத்தமற்ற அல்லது போதியற்ற அறுவை சிகிச்சை என்பன மேலும் கெடுதியை ஏற்படுத்தும். அதுமாத்திரமின்றி, எதுவிதமான உடனடி புனவாழ்வும் இன்றி வழங்கப்படும் அறுவை சிகிச்சை என்பது, நோயாளியின் செயற்பாட்டு இயலுமையை மீளச் செய்வதில் தோல்வியை சந்திக்கும். சம்பந்தப்பட்ட நிபுணத்துவத்துடன் உள்ள நிறுவனங்கள் மற்றும் நிபுணர்கள் மாத்திரமே, உயிரைக் காப்பாற்றும், அங்கவீனம் ஏற்படாது பாதுகாக்கும் இந்த சேவைகளை வழங்குதல் வேண்டும்.

6. **அதிர்ச்சி சம்பந்தப்பட்ட காயங்களின் அறுவை சிகிச்சையின் பின்னரான மறுவாழ்வு:** துரித மறுவாழ்வு என்பது உயிர் பிழைத்தலுக்கான வாய்ப்பினை அதிகரிப்பதுடன், காயமடைந்த தப்பியவர்களின் வாழ்க்கை தரமும் அதிகரிக்கும். உதவி கருவிகள் தேவையாகவுள்ள நோயாளிகளுக்கு பௌதீக மறுவாழ்வு வழங்கப்படல் வேண்டும். கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களில், அறுவை சிகிச்சைக்குப் பின்னரான பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு உள்ளடக்கிய சமுதாயஞ் சார்ந்த மறுவாழ்வு நிகழ்ச்சிகளுடனான பங்காளித்துவம் காயமடைந்த தப்பியவர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும்.

2.5. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - மனநலம்

அனைத்து மனிதநேய அமைப்புக்களிலும் மனநலம் மற்றும் உளச்சமூக பிரச்சினைகள் நிகழும். இழப்புக்கள், உறுதியற்ற தன்மைகள் மற்றும் முரண்பாடு மற்றும் வேறு அனர்த்தங்களுடன் சம்பந்தப்பட்ட வேறு பல அழுத்தங்கள் மக்களை சமூக, நடத்தை, உளச்சமூக மற்றும் உளவியல் சார்ந்த வேறுபட்ட அதிகரித்த சவாலுக்கு இட்டுச் செல்லும் (கீழுள்ள இடையீட்டு பிரமிட் அட்டவணையைப் பார்க்கவும்).இந்த உதவிகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் தேவையாக உள்ளது. உ-ம்: கலந்த தொகுதி அல்லது கலந்த துறை சார்ந்த பணிக் குழுக்களைக் குறிப்பிடலாம். கீழுள்ள மனநல தரமானது, சுகாதாரத் துறைகளினால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனஞ் செலுத்துகின்றது. வாசகர்கள் மிக முக்கியமான தரம் 1 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 3 என்பவற்றையும் பார்க்க வேண்டும்.

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - மனநலம் தரம் 1: மனநலம்

மனநலப் பிரச்சினைகளைத் தடுக்கும் அல்லது குறைக்கும் மற்றும் செயல்பாட்டை பலவீனமடையச் செய்வதுடன் சம்பந்தப்பட்ட சுகாதார சேவைகளுக்கு மக்களுக்கு பிரவேசம் உள்ளமை.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- அடையாளங் காணப்பட்ட தேவைகள் மற்றும் வளங்களின் அடிப்படையில் இடையீடுகள் வடிவமைக்கப்படுவதனை உறுதி செய்தல்.
- சமுதாய சுய உதவிகள் மற்றும் சமூக ஆதரவினை வலுப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட மக்கள் உள்ளடங்கலாக சமுதாய உறுப்பினர்களை இயலுமாக்கல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- சுகாதாரச் சேவைகளின் தன்னார்வ தொண்டர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளடங்கலாக, சமுதாயப் பணியாளர்கள் தீவிரமான அழுத்தத்தின் பின்னர் கடுமையான மனஅழுத்தங்களை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு உளச்சமூக முதலுதவியை வழங்குவதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 2ஐப் பார்க்கவும்).
- பருவமானவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் வேறுபட்ட, தீவிரமான மனநலப் பிரச்சினைகளை கையாளும் ஒரு ஊழியர் ஒவ்வொரு மருத்துவ வசதியிலும் இருப்பதனை உறுதி செய்தல் (வழிகாட்டல் குறிப்பு 3ஐப் பார்க்கவும்).
- நிறுவனங்களின் மனநலப் பிரச்சினைகளுடன் உள்ள மக்களின் பாதுகாப்பு, அடிப்படைத் தேவைகள் மற்றும் உரிமைகளை அடையாளங் காணல் (வழிகாட்டல் குறிப்பு 4ஐப் பார்க்கவும்).
- மதுபாவனை மற்றும் போதைப் பொருள் பாவனையுடன் சம்பந்தப்பட்ட தீங்குகளை குறைத்தல்.

- துரித மீளமைப்பின் ஒரு கட்டமாக, ஸ்திரமான சமுதாய மனநல முறைமையை வடிவமைப்பதற்கான திட்டங்களை ஆரம்பித்தல் (வழிகாட்டல் குறிப்பு 5ஐப் பார்க்கவும்).

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- மனநலப் பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்வதற்கு அனைத்து சுகாதார வசதிகளும் பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் முறைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **சமுதாய சுய உதவி மற்றும் சமூக ஆதரவு:** ஒட்டுமொத்த மனநலம் மற்றும் உளச்சமூக பல்துறை ஆதரவுகளின் முக்கியமான அம்சத்தை சமுதாய சுய உதவி மற்றும் சமூக ஆதரவு உருவாக்கும் (கீழுள்ள வரைபடத்தைப் பார்க்கவும்) (மிக முக்கியமான தரம் 1 மற்றும் பாதுகாப்பு கோட்பாடு 4, வழிகாட்டல் குறிப்புக்கள் 2-4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**). சுகாதார நிறுவனங்கள் பொதுவாக ஒதுக்கப்பட்ட மக்கள் உள்ளடங்கலாக சமுதாய உறுப்பினர்கள் மத்தியில் சுய உதவி மற்றும் சமூக ஆதரவினை அதிகரிக்கும் சமுதாயப் பணியா-ளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களை நியமிக்கும் அல்லது ஈடுபடுத்தும்.

இடையீட்டு பிரமிட்



அவசரகால நிலைமைகளில் மனநலம் மற்றும் உளச்சமூக உதவி இடையீட்டு பிரமிட், மூலம்: Interagewncy Steering Committee Reference Group on Mental Health and Psychosocial Support, 2010

2. **உளச்சமூக முதலுதவி:** தீவிரமான உளைச்சலிற்குப் (உ-ம்: அதிர்ச்சியான நிகழ்வுகள்) பின்னர் கடுமையான கவலை என்பது, உளச்சமூக முதலுதவியின் கோட்பாடுகளை பின்பற்றுவதன் மூலம் நன்கு முகாமை செய்யப்படலாம். இது பொதுவாக சிகிச்சை சார் இடையீடாக கருதப்படுகின்றது. ஆனால், அது ஒரு மனிதாபி-மானம், பாதிக்கப்பட்டுள்ள மற்றும் உதவி தேவையாகவுள்ள சக மனிதருக்கான

ஆதரவு மறுசீரமைப்பு என விளக்கப்படலாம். அதில், செவிமடுத்தல் என்ற நோக்கத்துடனான அடிப்படையான ஆக்கிரமிக்காத நடைமுறைக்கேற்ற பாதுகாப்பு உள்ளடங்கியுள்ளது. ஆனால், கதைப்பதற்கு வற்புறுத்த முடியாது. அவர்களுடைய தேவைகள் மற்றும் அக்கறைகளை மதிப்பீடு செய்தல், அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் எட்டப்படுவதனை உறுதி செய்தல், குறிப்பிடத்தக்கவர்களிடமிருந்து சமூக உதவி பெறுதலை ஊக்குவித்தல் மற்றும் மேலதிக தீங்கிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் என்பன அதில் உள்ளடங்குகின்றன. உளவியல் கலந்துரையாடல் (எடுத்துக்காட்டாக, சுருக்கமாக ஆனால் முறையாக அண்மையில் எதிர்நோக்கிய அழுத்த மிக்க நிகழ்வின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் உணர்வு ரீதியான பிரதிபலிப்புக்களை மீள்கணித்து நபரை ஊக்குவிப்பதன் மூலம் காற்றோட்டத்தை மேம்படுத்தல்) என்பது பயனற்ற வழியாகும். அது பிரயோகிக்கப்படக் கூடாது. அதேவேளை, தீவிரமான அழுத்தத்தை முகாமைத்துவம் செய்யும் போது பென்சோடயசிபைன்ஸ் தவிர்க்கப்படல் வேண்டும். ஏனெனில், இயற்கை மீட்சிக்கு அது தடையாக இருக்கும்.

3. **அடிப்படை மனநல பராமரிப்பு:** மக்களின் மனநலப் பிரச்சினைகள் என்பது அவசரமாக தூண்டப்பட்டதாக, முன்பே இருந்ததாக அல்லது இரண்டுமாக இருக்கலாம். தீவிரமான மனநலப் பிரச்சினைகளையுடைய மக்கள் சமுதாயஞ் சார்ந்த சமூக ஆதரவுகளுக்கான வலையமைப்புக்கு பிரவேசம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன், கிடைக்கக் கூடியதாக உள்ள சுகாதார சேவைகளின் மருத்துவ பராமரிப்பையும் பெறல் வேண்டும் (உ-ம்: பொது வைத்தியசாலைகள், ஆரம்ப பராமரிப்பு சிகிச்சை நிலையங்கள், இன்னபிற). அடிப்படை மருத்துவ மனநல பராமரிப்பினை ஒழுங்கமைப்பது, பொதுவாக துரித பயிற்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பொது சுகாதார ஊழியர்களை மேற்பார்வை செய்தல் அல்லது சுகாதார சிகிச்சை நிலையத்திற்கு சுகாதார நிபுணர் ஒருவரை நியமித்தல் என்பனவற்றுடன் தொடர்புடையதாகும். அத்தியாவசிய உளநிலை மாற்றல் மற்றும் முயலகடனக்கி என்பன கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். நெருக்கடிக்கு மனநல சிகிச்சைகளை பெறும் தனிநபர்களுக்கு, தொடர்ந்தும் சிகிச்சையைப் பெறுவதற்கு பிரவேசம் இருத்தல் வேண்டும்.

4. **நிறுவனங்களில் உள்ள மக்கள்:** தீவிரமான மனநலப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான மனநல வைத்தியசாலைகள் மற்றும் வதிவிட இல்லங்களுக்கு தொடர்ச்சியாக விஜயம் மேற்கொள்ளப்படல் வேண்டும். விசேடமாக நெருக்கடியின் ஆரம்ப கட்டத்தில் இந்த விஜயங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். ஏனெனில், நிறுவனங்களில் உள்ள மக்களுக்கான தீவிரமான புறக்கணிப்பு அல்லது துஷ்பிரயோகத்திற்கான அச்சுறுத்தல் அதிகமாக உள்ளது. பாதுகாப்பு, அடிப்படை பௌதீகத் தேவைகள் (நீர், உணவு, உறைவிடம், தேகாரோக்கியம் மற்றும் மருத்துவ பராமரிப்பு), மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் அடிப்படை உளவியல் மற்றும் உளச்சமூக பராமரிப்பு என்பன நெருக்கடியின் முழு காலப்பகுதியிலும் வழங்கப்படல் வேண்டும்.

5. **துரித மீளமைப்பு:** மனிதநேய நெருக்கடிகள் மனநல பாதிப்புக்களின் எண்ணிக்கையை பாரிய அளவில் அதிகரிப்பதன் காரணமாக, பாதிக்கப்பட்ட பகுதியில் பயனுள்ள மனநல சிகிச்சையை வழங்குவதற்கான மனநல

முறைமைகளை வடிவமைப்பதற்கு திட்டங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் (மிக முக்கியமான தரம் 4ஐப் பார்க்கவும் **பக்கம் ???**).

2.6. அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடிய தன்மையற்ற நோய்கள்

மக்கள் முதிர்ச்சியடைதல் மற்றும் ஆயுட் காலம் அதிகரித்தல் என்பன தொற்றக் கூடிய நோய்கள் என்பதிலிருந்து, பரவக் கூடியத் தன்மையற்ற நோய்கள் (NCD) என்ற நிலையை நோக்கி குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் உள்ளடங்கலாக பெரும்பாலான நாடுகளில் நோய்கள் மாற்றமடைந்துள்ளன. இதன் விளைவாக, அனர்த்த அமைப்புக்களில் மிகவும் முக்கியமான பொது சுகாதார விடயமாக NCD மாறியுள்ளது. தற்போதுள்ள நீண்ட நாள் நிலைத்திருக்கும் சுகாதார நிலைமைகளின் அதிகரிப்பு காரணமாக சுகாதாரப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளமை, பெரும்பாலான அனர்த்தங்களின் பொதுவான அம்சமாக உள்ளது.

அத்தியாவசிய சுகாதார சேவைகள் - பரவக் கூடியத் தன்மையற்ற நோய்கள் தரம் 1: பரவக் கூடியத் தன்மையற்ற நோய்கள்

தீவிரமான சிக்கல்கள் அல்லது நீண்ட நாள் நிலைத்திருக்கும் சுகாதார நிலைமை அதிகரிப்பு என்பவற்றினால் நோய் பாதிக்கும் வீதம் மற்றும் இறப்பு வீதம் என்பவற்றை குறைப்பதற்கு தேவையான அத்தியாவசிய சிகிச்சைகளுக்கு மக்களுக்கு பிரவேசம் இருத்தல்.

பிரதான நடவடிக்கைகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- NCDஇன் பரவல் தொடர்பில் மதிப்பீடு செய்து அறிக்கை தயாரிக்கவும். அனர்த்த மறுசீரமைப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அந்த தரவுகளை பகிரல் (வழிகாட்டல் குறிப்பு 1ஐப் பார்க்கவும்).
- அவசரகால நிலைக்கு முன்னர் NCDக்கு சிகிச்சைப் பெற்று வந்த தனிநபர்களை அடையாளங் கண்டு, அவர்கள் சிகிச்சையைத் தொடர்வதனை உறுதி செய்யவும். சிகிச்சைகள் திடீரென நிறுத்தப்படுவதனை தவிர்த்தல்.
- வாழ்க்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் தீவிரமான சிக்கல்கள் மற்றும் NCD அதிகரிப்பு உள்ள மக்கள் (உ-ம்: இதய நோய்கள், தீவிர பதட்டம்) மற்றும் வலியுடன் உள்ள மக்கள் (முற்றிய புற்றுநோய் காரணமாக வலி) சிகிச்சைப் பெறுவதனை உறுதி செய்தல்.
- NCDஇற்கான சிகிச்சைகள் கிடைக்காத சந்தர்ப்பங்களில், குறிப்புதவிக்கான தெளிவான தரமான செயற்பாட்டு நடைமுறைகளை ஸ்தாபித்தல்.
- அத்தியாவசிய நோய் கண்டறிதல் கருவி, முக்கியமான ஆய்வுகூட பரிசோதனைகள் மற்றும் வழமையான மருந்து வழங்கல், NCDஇன் முன்னெடுக்கப்பட்டு வரும் முகாமைத்துவம் என்பன ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறையின் ஊடாக கிடைக்கக் கூடியதா இருத்தலை உறுதி செய்தல். இந்த மருந்துகள் அத்தியாவசிய மருந்துப் பட்டியலில் குறிப்பிடப்படல் வேண்டும்.
- நடமாடும் அல்லது தொடர்பாடும் சிக்கல் உடைய மக்களுக்கு, உதவிக் கருவிகள் (உ-ம்: ஊன்று கோல்கள்) கிடைக்கக் கூடியதாக இருப்பதனை உறுதி செய்தல்.

பிரதான குறிகாட்டிகள் (வழிகாட்டல் குறிப்புக்களுடன் ஒன்றிணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும்)

- NCD உள்ள நோயாளிகளின் குறிப்புதவிகளுக்கு இரண்டாம் நிலை மற்றும் இடைநிலை மருத்துவ வசதிகளுக்கு அனைத்து சுகாதார பராமரிப்பு வசதிகளும் தெளிவான தரமான செயற்பாட்டு நடைமுறைகளை கொண்டிருத்தல்.
- அவசர கால நிலைக்கு முன்னர் சிகிச்சைப் பெற்று வந்த தனிநபர்களுக்கு சிகிச்சையைத் தொடருவதற்கு போதிய மருந்து, அனைத்து ஆரம்ப சுகாதார பராமரிப்பு வசதிகளிலும் இருத்தல்.

வழிகாட்டல் குறிப்புக்கள்

1. **பரவக் கூடியத் தன்மையற்ற நோய்கள் எ**ன்பதில், இதய நோய், மாரடைப்பு, உயர்இரத்த அழுத்தம், நாப்பட்ட சிறுநீரக செயலிழப்பு, மூச்சுக் குழாய் ஆஸ்துமா, கூழ்மப் பிரிப்பு சார்ந்த நாப்பட்ட சிறுநீரக செயலிழப்பு, இன்சுலின் சார்ந்த நீரிழிவு மற்றும் வலிப்பு என்பன உள்ளடங்குகின்றன. அவசர கால நிலைமைகளின் போது, நாப்பட்ட மருத்துவ நிலைமைகளைக் கொண்ட தனிநபர்கள், தமது நிலைமை மேலும் மோசமடைவதற்கான அச்சுறுத்தலை எதிர்நோக்குவர் அல்லது சிகிச்சைத் தடைபடும் போது இரண்டாம் நிலை தொற்றுக்கு இலக்காகும் அச்சுறுத்தலை எதிர்நோக்குவர். சிகிச்சையின் மருத்துவ உறுதிப்படுத்தல் மற்றும் பராமரிப்பு என்பன மனிதநேய முறைமைகளில் சுகாதாரத் துறை மறுசீரமைப்புக்கான முக்கியமான அம்சமாக உள்ளன.

   NCD உள்ள மக்களுக்கு நீண்ட காலம் மருந்து வழங்கப்படுவதுடன், தொடர் கவனிப்புக்கு உட்படுத்தப்படல் வேண்டும். வழமையான, முன்னெடுக்கப்படும் NCD முகாமைத்துவம் என்பன ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறையின் ஊடாக, அத்தியாவசிய மருந்துப் பட்டியலில் உள்ள மருந்துகளைப் பயன்படுத்தி, கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். நிவாரண முயற்சிகளின் போது, விசேடமாக அவசரகால நிலையின் போது நாப்பட்ட சுகாதார நிலைமைகளுக்கு புதிய சிகிச்சைகள் அல்லது நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவது பொதுவாக பரிந்துரைக்கப்படும் விடயம் அல்ல

பிற்சேர்க்கை 1

சுகாதார சேவைகள் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்

தயாரிப்பு

- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை தொடர்பில் கிடைக்கக் கூடியதாக உள்ள தகவல்களை பெற்றுக் கொள்ளவும்.
- கிடைக்கக் கூடியதாக உள்ள வரைபடங்கள் மற்றும் வான்வழி புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளவும்.
- புள்ளிவிபர மற்றும் சுகாதாரத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

பாதுகாப்பு மற்றும் பிரவேசம்

- தற்போதைய இயற்கையான அல்லது மனிதனால் ஏற்படும் அனர்த்தங்களை வரையறுக்கவும்.
- ஆயுதப் படையினரின் இருப்பு உள்ளடங்கலாக ஒட்டு மொத்த பாதுகாப்புச் சூழ்நிலையை வரையறுக்கவும்.
- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அடைவதற்கு மனிதநேய நிறுவனங்களுக்கு உள்ள பிரவேசத்தை வரையறுக்கவும்.

மக்கள் மற்றும் சமூக கூட்டமைப்பு

- அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மொத்த அளவினை வரையறுக்கவும்: மக்கள் தொகையின் வயது மற்றும் பால்நிலை அடிப்படையிலான பிரிப்பு.
- அதிக அச்சுறுத்தல் உள்ள குழுக்களை அடையாளங் காணவும்: உ-ம்: பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள், மாற்றுத் திறனுடையவர்கள்.
- சராசரி குடும்ப அளவு மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தலைமையிலான குடும்பங்களின் எண்ணிக்கையை கணிப்பிடல்
- அதிகார நிலைகள் மற்றும்/அல்லது செல்வாக்கு உள்ளடங்கலாக தற்போதைய சமூக கட்டமைப்பினை வரையறுக்கவும்.

பின்னணி சுகாதாரத் தகவல்

- அனர்த்தத்திற்கு முன்னர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் ஏற்கனவே இருந்த சுகாதாரப் பிரச்சினைகளை அடையாளங் காணல்.
- ஏதிலிகளின் சொந்த நாட்டில் ஏற்கனவே இருந்த சுகாதாரப் பிரச்சினைகளை அடையாளங் காணல் (சர்வதேச ரீதியில் இடம்பெயர்ந்த மக்களின் சொந்த நாடு).
- உடல் நலனுக்கு தற்போதுள்ள அச்சுறுத்தல்களை அடையாளங் காணல். உ-ம். சாத்தியமான தொற்று நோய்கள்
- சுகாதார பராமரிப்புக்கான முந்தைய வளங்களை அடையாளங் காணல்.
- சுகாதார முறைமை செயற்பாடுகளின் செயற்றிறனை பகுப்பாய்வு செய்தல்.

இறப்பு வீதங்கள்

- தெளிவற்ற இறப்பு வீதத்தை கணிப்பிடல்.
- வயது சார்ந்த இறப்பு வீதத்தை கணிப்பிடல் (உ-ம்: 5 வயதுக்கு குறைந்தவர்களின் இறப்பு வீதம்).
- காரணம் சம்பந்தப்பட்ட இறப்பு வீதங்களை கணிப்பிடல்
- விகிதாசார இறப்பு வீதத்தை கணிப்பிடல்.

நோய் பாதிக்கும் வீதங்கள்

- பொது சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரதான நோய்களின் தாக்க வீதங்களை வரையறுக்கவும்
- பிரதான நோய்களின் வயது மற்றும் பால் சம்பந்தப்பட்ட தாக்க வீதங்களை இயலுமான சந்தர்ப்பங்களில் வரையறுக்கவும்.

கிடைக்கக் கூடிய வளங்கள்

- அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டின் சுகாதார அமைச்சின் இயலுமையை தீர்மானித்தல்.
- வழங்கப்பட்ட பராமரிப்பு, பௌதீக நிலை மற்றும் பிரவேசம் என்பவற்றின் மொத்த எண்ணிக்கை உள்ளடங்கலாக தேசிய சுகாதார வசதிகளின் நிலைமையை தீர்மானித்தல்.
- கிடைக்கக் கூடியதாக உள்ள சுகாதார ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் திறன்களை வரையறுக்கவும்.
- கிடைக்கக் கூடியதாக உள்ள சுகாதார வரவுசெலவுத் திட்டம் மற்றும் நிதியிடல் பொறியமைப்புக்களை வரையறுக்கவும்.
- தற்போதுள்ள பொது சுகாதாரப் பிரச்சினைகளின் இயலுமை மற்றும் செயற்பாட்டு நிலையை வரையறுக்கவும். உ-ம்: தடுப்பூசி ஏற்றல் நிகழ்ச்சி
- தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகள், அத்தியாவசிய மருந்துகள், விநியோகம் மற்றும் ஒழுங்கமைப்பு முறைமைகள் என்பவற்றின் கிடைக்கக் கூடியத் தன்மையை வரையறுக்கவும்.
- தற்போதுள்ள குறிப்புதவி முறைமைகளின் நிலையை வரையறுக்கவும்.
- சுகாதார பராமரிப்பு வசதிகளில் சுற்றுச் சூழல் சுகாதாரத்தின் அளவை வரையறுக்கவும்
- தற்போதுள்ள சுகாதார தகவல் முறைமையின் நிலையை வரையறுக்கவும்.

வேறு சம்பந்தப்பட்ட துறைகளில் இருந்து தரவு

- போஷாக்கு நிலைமை
- உணவு மற்றும் உணவுப் பாதுகாப்பு
- சுற்றுச் சூழல் நிலைமைகள்
- உறைவிடம் - உறைவிடத்தின் தரம்
- கல்வி - சுகாதாரம் மற்றும் போஷாக்கு கல்வி

பிற்சேர்க்கை 2:

வாராந்த ஆய்வறிக்கைப் படிவங்களின் மாதிரி

இறப்பு ஆய்வறிக்கைப் படிவம் 1 *

தளம்: . . . .

திகதி: திங்கள் முதல்: . . . . ஞாயிறு வரை: . . . .

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் மொத்த மக்கள் தொகை: . . . .

இந்த வாரத்தில் பிறப்புக்கள்: . . . . .இந்த வாரத்தில் இறப்புக்கள்: . . . .

இந்த வாரத்தில் வருகைகள் (தேவையாயின்) . . . . .இந்த வாரத்தில் வெளியேறல்கள் . . . .

வாரத்தின் இறுதியில் மொத்த மக்கள் தொகை:. . . . . .5 வயதுக்கு குறைந்தவர்களின் மொத்த மக்கள் தொகை::. .

	0-4 வருடங்கள்		5+ வருடங்கள்		மொத்தம்
	ஆண்	பெண்	ஆண்	பெண்	
உடனடி காரணங்கள்					
தீவிரமான குறைவான சுவாசக் கோளாறு					
கொலரா (சந்தேகத்திற்கிடமான)					
வயிற்றோட்டம் - இரத்தத் தன்மையான					
வயிற்றோட்டம் - நீர்த் தன்மையான					
காயம் - விபத்தற்ற					
மலேரியா					
பிரசவத்தின் போதான இறப்பு - நேரடியான					
சின்னம்மை					
மூளை அழற்சி (சந்தேகத்திற்கிடமான)					
பிறந்த குழந்தை (0-28 நாட்கள்)					
வேறு					
குறிப்பிடப்படாதவை					
வயது மற்றும் பால் அடிப்படையில் மொத்தம்					
மறைந்திருக்கும் காரணிகள்					
எயிட்ஸ் (சந்தேகத்திற்கிடமான)					
போஷாக்கின்மை					
பிரசவத்தின் போதான இறப்பு - மறைமுகமான					
பரவக் கூடியத் தன்மையற்ற நோய்கள்					
வேறு					
வயது மற்றும் பால் அடிப்படையில் மொத்தம்					

-பல இறப்புக்கள் நிகழும் போதும், தனிநபர் தொடர்பில் அதிக தகவல்கள் உள்ள போதும், இறப்புக்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாத போதும் இந்த படிவம் பயன்படுத்தப்படும்.

- சூழ்நிலை மற்றும் நோயியல் முறைக்கு ஏற்றவாறு இறப்புக்கான வேறு காரணங்கள் சேர்க்கப்படலாம்.
- வயதானது மேலும் (0-11 மாதங்கள், 1-4 வருடங்கள், 5-14 வருடங்கள், 15-49 வருடங்கள், 50-59 வருடங்கள், 60-69 வருடங்கள், 70-79 வருடங்கள் 80+ வருடங்கள்) பிரிக்கப்படலாம்.
- சுகாதார வசதிகளில் இருந்து மாத்திரம் இறப்புக்கள் பதிவு செய்யப்படக் கூடாது. தளத்திலிருந்து, மதத் தலைவர்கள், சமுதாயப் பணியாளர்கள், மகளிர் குழுக்கள் மற்றும் குறிப்புதவி வைத்தியசாலைகளில் இருந்தும் பெறப்படல் வேண்டும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் சம்பவ விளக்கங்கள் படிவத்தின் பின்பக்கத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

இறப்பு வீதம் ஆய்வறிக்கைப் படிவம் 2*

தளம் . . . .

திகதி திங்கள் முதல்: . . . . ஞாயிறு வரை: . . . .

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் மொத்த சனத்தொகை: . . . .

இந்த வாரத்தில் பிறப்புக்கள்: . . . . இந்த வாரத்தில் இறப்புக்கள்:: . . . .

இந்த வாரத்தில் வந்தர்வகள் (தேவையாயின்): . . . . இந்த வாரத்தில் வெளியேறியவர்கள் . . . .

இந்த வாரத்தின் இறுதியில் மொத்த மக்கள்தொகை: . . . . மக்கள் தொகையில் 5 வயதுக்கு குறைந்தவர்கள் மொத்தம்:: . .

			மரணத்துக்கான நேரடி காரணம்													மறைந்திருக்கும் காரணிகள்						
இல	பால் (ஆ, பெ)	வயது (நாட்கள் = நா, மாதங்கள் = மா, வருடங்கள் = வ)	கடுமையான தாழ்வான சுவாசக் கோளாறு	கொலரா (சந்தேகத்திற்கிடமான)	வயிற்றோட்டம் (இரத்தம் சம்பந்தப்பட்டது)	வயிற்றோட்டம் (நீர் சம்பந்தப்பட்டது)	காயம் (விபத்து சாராதது)	மலேரியா	பிரசவத்தின் போதான இறப்பு	சின்னம்மை	மூளை அழற்சி (சந்தேகத்திற்கிடமானது)	உடன் பிறந்த குழந்தைகள் (0-28நாட்கள்)	பரவக் கூடிய தன்மையற்ற நோய்கள் (குறிப்பிடுக)	வேறு (குறிப்பிடுக)	குறிப்பிடப்படாதவை	எய்ட்ஸ் (சந்தேகத்திற்கிடமான)	போஷாக்கின்மை	பிரசவத்தின் போதான இறப்பு (நேரடியற்றது)	வேறு (குறிப்பிடுக)	திகதி (நாள்/மாதம்/வருடம்)	தளம் (பிரிவு இல)	வைத்தியசாலை அல்லது வீட்டில் இறந்தவர்கள்
1																						
2																						
3																						
4																						
5																						
6																						
7																						
8																						

* தனிப்பட்ட இறப்புக்கள் தொடர்பில் தரவுகளைப் பதிவு செய்வதற்கு போதிய நேரம் இருக்கும் போது இந்த படிவம் பயன்படுத்தப்படும். வயது, வெளிப்பாடு ஆய்வு என்பவற்றை இடம் மற்றும் பயன்பாட்டு வசதி வீதங்களின் அடிப்படையில் மூலம் நடத்த இது உதவும்

- இறப்புக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அறிக்கையிடல் அலைவரிசை (எடுததுக்காட்டாக, நாளாந்தம் அல்லது வாராந்தம்)
- சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் இறப்புக்கான வேறு காரணங்கள் சேர்க்கப்படலாம்
- தளத்தின் சுகாதார வசதிகளிலிருந்து மாத்திரம் இறப்புக்கள் அறிக்கையிடப்படக் கூடாது. ஆனால், தளம் மற்றும் மதத் தலைவர்கள், சமுதாயப் பணியாளர்கள், மகளிர் குழுக்கள் மற்றும் குறிப்புதவி வைத்தியசாலைகளின் அறிக்கைகளும் உள்ளடக்கப்படல் வேண்டும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில், சம்பவ விளக்கங்கள் படிவத்தின் பின்புறத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்

வாராந்த EWARN அறிக்கைப் படிவம் மாதிரி *

* அவசரகால நிலைமையின் தீவிரமான கட்டத்தில் தொற்று நோய்கள் பரவும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ள போது இந்த படிவம் பயன்படுத்தப்படும்.

திகதி: திங்கள் முதல் . . . ஞாயிறு வரை: . . . .

நகரம்/கிராமம்/குடியிருப்பு/முகாம்: . . . .

மாகாணம்: . . . . மாவட்டம்: . . . . துணை மாவட்டம்: . . . .

இடத்தின் பெயர்: . ☐ உள்நோயாளர் ☐ வெளிநோயாளர் ☐ சுகாதார நிலையம் ☐ நடமாடும் சிகிச்சை நிலையம்

உதவி நிறுவனம்(கள்): . . . . அறிக்கை அதிகாரி, தொடர்பு இல:. . . . . . .

மொத்த மக்கள் தொகை: . . . . .5 வயதுக்கு குறைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை

A. வாராந்தம் திரட்டப்பட்ட தரவு

புதிய சம்பவங்கள்:	நோய்த் தாக்க வீதம்		இறப்பு வீதம்		மொத்தம்
	< 5 வருடங்கள்	5 வருடங்கள், அதிகம்	< 5 வருடங்கள்	5 வருடங்கள், அதிகம்	
மொத்த அனுமதிகள்					
மொத்த இறப்புக்கள்					
தீவிரமான சுவாசக் கோளாறு**					
தீவிரமான நீர்த்தன்மையுடனான வயிற்றோட்டம்					
தீவிரமான இரத்தத் தன்மையுடனான வயிற்றோட்டம்					
மலேரியா சந்தேகத்திற்கிடமான/உறுதி செய்யப்பட்ட					
சின்னம்மை					
மூளை அழற்சி - சந்தேகத்திற்கிடமான					
தீவிரமான இரத்தக் காய்ச்சல் அறிகுறி					
தீவிரமான மஞ்சள் காமாலை அறிகுறி					
தீவிரமான மென்மையான பக்கவாதம் (AFP)					
ெட்டானஸ்					
வேறு காய்ச்சல் , 38.5°C					
காயங்கள்					
வேறு					
மொத்தம்					

- ஒன்றுக்கு அதிகமான நோய் அறுதியீடுகள் சாத்தியம். மிகவும் முக்கியமானது பதிவு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு சம்பவமும் ஒரு தடவை மாத்திரம் கணிக்கப்படல் வேண்டும்.
- ஆய்வறிக்கை வாரத்தில் கண்டறியப்பட்ட சம்பவங்களை (அல்லது இறப்புக்களை) மாத்திரம் உள்ளடக்கவும்.
- படிவத்தில் தரப்பட்டுள்ள எந்தவொரு நோய் அறிகுறியும் இல்லாத சந்தர்ப்பத்தில் '"0" பூச்சியம் எனக் குறிக்கவும். இறப்பு வீதம் பகுதியில் மாத்திரமே இறப்புச் சம்பவங்கள் குறிப்பிடப்படல் வேண்டும். நோய் தாக்க வீதம் பகுதியில் குறிப்பிடப்படக் கூடாது.
- ஒவ்வொரு நிலைக்குமான சம்பவ விளக்கங்கள் படிவத்தின் பின்பகுதியில் குறிப்பிடப்படல் வேண்டும்..
- நோய்த் தாக்கத்திற்கான காரணம் சேர்க்கப்பட்டு, நோயியல் மற்றும் சவால் மதிப்பீட்டின் அடிப்படையில் பிரிக்கப்படல் வேண்டும்.
- தொற்றினால் பரவக் கூடிய நோய்கள் தொடர்பில் முன் கண்டறிவதே EWARN ஆய்வறிக்கையின் நோக்கமாகும்.
- ஆய்வறிக்கையை விட, ஆய்வுகளின் மூலமே போஷாக்கின்மை போன்றவை தொடர்பான தரவுகள் பெறப்படல் வேண்டும். .
-

B. நோய் பரவல் எச்சரிக்கை

பின்வரும் எந்தவொரு நோய்கள் தொடர்பிலும் நீங்கள் சந்தேகம் கொள்வதாயின் தயவு செய்து, குறுஞ்செய்தி அல்லது அழைப்பு .... அல்லது மின்னஞ்சல் .... நேரம், இடம் மற்றும் சம்பவங்கள் மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை போன்ற அதிகப்பட்ச தகவல்களுடன் தொடர்பு கொள்ளவும்.

கொலரா, வயிற்றுக்கடுப்பு/ஷிகொல்லாசிஸ், சின்னம்மை, AFP, தைபாயிட், டெட்டானஸ், ஈரல் அழற்சி, டெங்கு, மூளை அழற்சி, தொண்டை அடைப்பான், கக்குவான், இரத்தக் காய்ச்சல்

மாதிரி வழக்கமான நோய் பாதிப்பு ஆய்வறிக்கை படிவம்*

* தீவிரமான நிலைக்குப் பின்னர் வேறு நோய்கள் மற்றும் குறிகாட்டிகள் பொருத்தமான வகையில் உள்ளடக்கப்பட்ட நுறுயுசுஇேலிருந்து நோய் பாதிப்பு ஆய்வு என்பது விஸ்தரிக்கப்படலாம

தளம் . . . .

திகதி திங்கள் முதல் . . . . ஞாயிறு வரை:. . . . .

வாரத்தின்/மாதத்தின் ஆரம்பத்தில் மொத்த மக்கள் தொகை:. . . . .

இந்த வாரத்தில்/மாதத்தில் பிறப்புக்கள்: . . . . இந்த வாரத்தில்/மாதத்தில் இறப்புக்கள்: . . . . . .

இந்த வாரத்தில;/மாதத்தில் வருகை தந்தவர்கள் (தேவையாயின்): . . . .

இந்த வாரத்தில்/மாதத்தில் வெளியேறியவர்கள் . . . .

வாரத்தின;/மாதத்தின் இறுதியில் மொத்த மக்கள் தொகை . . 5 வயதுக்கு குறைந்தவர்களின் மொத்த தொகை: . .

நோய் பாதிக்கும் அளவு	5 வயதுக்கு குறைந்த (புதிய சம்பவங்கள்)#			5 வயது மற்றும் அதிகமானவை (புதிய சம்பவங்கள்)			மொத்தம்	மீள ஏற்பட்ட சம்பவம்
நோய் கண்டறிதல்*	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	புதிய	மொத்தம்
தீவிரமான சுவாசத் தொற்று**								
தீவிரமான நீர்த் தன்மையான வயிற்றோட்டம்								
தீவிரமான இரத்தத் தன்மையான வயிற்றோட்டம்								
மலேரியா - சந்தேகத்திற்கிடமான/ உறுதி செய்யப்பட்ட								
சின்னம்மை								
மூளை அழற்சி - சந்தேகத்திற்கிடமான								
தீவிரமான இரத்தக் காய்ச்சல் அறிகுறி								
தீவிரமான மஞ்சள் காமாலை அறிகுறி								
தீவிரமான மென்மையான பக்கவாதம் (AFP)								
டெட்டானஸ்								
வேறு காய்ச்சல் , 38.5°C								
எய்ட்ஸ் - சந்தேகத்திற்கிடமான ***								
கண் நோய்கள்								
போஷாக்கின்மை ****								
காயங்கள் - விபத்தினால்								
காயங்கள் - விபத்தின்றி								
பாலியல் ரீதியாக பரவும் நோய்கள்								
பிறப்புறுப்பு புண் நோய்								
ஆண் சிறுநீர்குழாய் வெளியேற்றல்								
யோனி வெளியேற்றல்								
கீழ் வயிற்று வலி								
தோல் நோய்கள்								
பரவுந் தன்மையற்ற நோய்கள் (உ-ம்: சர்க்கரை நோய்								
புழுக்கள்								
வேறு								
குறிப்பிடப்படாதவை								
மொத்தம்								

* ஒன்றுக்கும் மேற்பட்ட நோய் கண்டறிதல் சாத்தியம்: நோய்த் தாக்கத்திற்கான காரணம் உள்ளடக்கப்படலாம் அல்லது சூழ்நிலை மற்றும் நோயியலுக்கு அமைய கழிக்கப்படலாம்..
** தீவிரமான சுவாசக் குழாய் நோய்த் தொற்றுக்கள்: சில நாடுகளில், இந்த வகை மேல் மற்றும் கீழ் நோய்த் தொற்றுக்கள் என பிரிக்கப்படலாம்.
***எச்.ஐ.வி.ஃஎய்ட்ஸ் தடுப்பு என்பது ஆய்வின் ஊடாக நன்கு மதிப்பீடு செய்யப்படலாம;
**** போஷாக்கின்மை தடுப்பு என்பது துரித ஆய்வுகளின் ஊடாக நன்கு மதிப்பீடு செய்யப்படலாம் (MUAC oஅல்லது W/H screening) ஆய்வு என்பது பராமரிப்பு பெற வந்தவர்களை மாத்திரமே வெளிப்படுத்தும்.
# இயலுமான வரையில் வயதுகள் மேலும் பிரிக்கப்படல் வேண்டும்..

நோய் பரவல் எச்சரிக்கை

பின்வரும் எந்தவொரு நோய்கள் தொடர்பிலும் நீங்கள் சந்தேகம் கொள்வதாயின் தயவு செய்துவ, குறுஞ்செய்தி அல்லது அழைப்பு .... அல்லது மின்னஞ்சல் .... நேரம், இடம் மற்றும் சம்பவங்கள் மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை போன்ற அதிகப்பட்ச தகவல்களுடன் தொடர்பு கொள்ளவும்.
கொலரா, வயிற்றுக்கடுப்பு/ஷிகொல்லாசிஸ், சின்னம்மை, AF*, தைபாயிட், டெ்டானஸ், ஈரல் அழற்சி, டெங்கு, மூளை அழற்சி, தொண்டை அடைப்பான், கக்குவான், இரத்தக் காய்ச்சல்

விஜயம்	5 வயதுக்கு குறைந்தவர்கள்			5 வயது மற்றும் அதிகமானவர்கள்			மொத்தம்	
சுகாதார வசதிகளுக்கு	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்
மொத்த விஜயங்கள்								

பயன்படுத்தல் வீதம்: வருடமொன்றுக்கு, நபரொருவரின் சுகாதார வசதிக்கான விஜயங்கள் = 1 வாரத்தில் விஜயங்களின் மொத்த எண்ணிக்கை/மொத்த மக்கள் தொகை ஒ 52 வாரங்கள்
- வயது மேலும் பிரிக்கப்படலாம் (0-11 மாதங்கள், 1-4 வருடங்கள், 5-14 வருடங்கள், 15-49 வருடங்கள், 50-59 வருடங்கள், 60+ வருடங்கள்)
மருத்துவர் ஒருவருக்கான ஆலோசனைகள்: மொத்த விஜயங்களின் எண்ணிக்கை (புதிய மற்றும் மீள் விஜயம்)/சுகாதார வசதியில் உள்ள FTE மருத்துவர்/வாரமொன்றில் சுகாதார வசதி செயற்படும் நாட்களின் எண்ணிக்கை

பிற்சேர்க்கை 3

முக்கியமான சுகாதார குறிகாட்டிகளை கணிப்பதற்கான சமன்பாடுகள்

சாதாரண இறப்பு வீதம் (CMR)

வரைவிலக்கணம்: மொத்த சனத்தொகையில் ஆண், பெண் உள்ளடங்கலாக அனைத்து வயதுப் பிரிவினரையும் கொண்டதாக இறப்பு வீதம்.

சமன்பாடு:

$$\frac{\text{குறித்த காலப்பகுதிக்கான மொத்த இறப்புக்கள்}}{\text{ஆபத்தில் உள்ள மக்கள் தொகை X காலப் பகுதியில் உள்ள நாட்களின் எண்ணிக்கை}} \text{ x10,000 நபர்கள்} = \text{இறப்புக்கள்/10,000 நபர்கள்/நாள்}$$

5 வயதுக்கு குறைந்தவர்களின் இறப்பு வீதம் (U5MR)

வரைவிலக்கணம்: மக்கள் தொகையில் 5 வயதுக்கு குறைவானவர்களிடையே இறப்பு வீதம்.

சமன்பாடு:

$$\frac{\text{குறித்த காலப்பகுதியில் இறந்த <5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை}}{\text{5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை X காலப் பகுதியில் உள்ள நாட்களின் எண்ணிக்கை}} \text{ x10,000 நபர்கள்} = \text{இறப்புக்கள்/5 வயதுக்கு குறைந்த 10,000 சிறுவர்கள்/நாள்}$$

நிகழ்வு வீதம்

வரைவிலக்கணம்: ஆபத்தில் உள்ள மக்கள் மத்தியில் நோய் ஏற்படும் வகையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிகழ்ந்த நோய் பாதித்த புதிய சம்பவங்களின் எண்ணிக்கை

சமன்பாடு:

$$\frac{\text{குறித்த காலப்பகுதியில் குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப்பட்ட புதிய சம்பவங்களின் எண்ணிக்கை}}{\text{நோய் ஏற்படுவதற்கான ஆபத்து உள்ள மக்கள் தொகை X காலப்பகுதியில் உள்ள மாதங்களின் எண்ணிக்கை}} \text{ x10,00 நபர்கள்} = \text{விசேட நோயில் பாதிக்கப்பட்ட புதிய சம்பவங்கள்/1,000 நபர்கள்/மாதம்}$$

நோய்த் தாக்கங்களினால் இறப்பு வீதம் (CFR)

வரைவிலக்கணம்: நோய்த் தாக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கையினால் பிரிக்கப்பட்டுள்ளது.

சமன்பாடு:

$$\frac{\text{குறித்த காலப் பகுதியில் நோய்த் தாக்கத்தின் காரணமாக இறந்த மக்களின் எண்ணிக்கை}}{\text{குறித்த காலப் பகுதியில் நோய்த் தாக்கத்தினால் பீடிக்கப்பட்ட மக்கள்}} \times 100 = x\%$$

சுகாதார சேவை பயன்பாட்டு வீதம்

வரைவிலக்கணம்: வருடமொன்றுக்கு, நபரொருவருக்கு என்ற அடிப்படையில் வெளி-நோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை. இயலுமான சந்தர்ப்பங்களில், புதிய மற்றும் பழைய விஜயங்களின் அடிப்படையில் வேறுபாட்டை கணிக்க வேண்டும். அத்துடன், புதிய விஜயங்கள் இந்த வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், புதிய மற்றும் பழைய விஜயங்களுக்கு இடையில் வேறுபாட்டை கண்டறிவது மிகவும் சிக்கலானது. எனவே, அனர்த்தத்தின் போது அவை வழமையாக மொத்த விஜயங்கள் என கணிக்கப்படும்.

சமன்பாடு:

$$\frac{\text{ஒரு வாரத்தில் மொத்த விஜயங்களின் எண்ணிக்கை}}{\text{மொத்த சனத்தொகை}} \text{ X 52 வாரங்கள்} = \text{விஜயங்கள்/நபர்/வருடம்}$$

மருத்துவர் ஒருவருக்கு, நாளொன்றுக்கான ஆலோசனைகளின் எண்ணிக்கை

வரைவிலக்கணம்: ஒவ்வொரு மருத்துவரினாலும், ஒவ்வொரு நாளும் பார்க்கப்படும் ஆலோசனைகளின் (புதிய மற்றும் மீண்டும் விஜயம் செய்தல்) சராசரி எண்ணிக்கை.

சமன்பாடு:

$$\frac{\text{ஒரு வாரத்தில் மொத்த ஆலோசனைகளின் எண்ணிக்கை}}{\text{சுகாதார வசதியில் உள்ள FTE* மருத்துவர்களின் எண்ணிக்கை}} \div \text{வாரமொன்றில் சுகாதார வசதி வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கை}$$

*FTE (முழு நேரத்திற்கு சமானம்) என்பது சுகாதார வசதியில் பணியாற்றும் சமானமான மருத்துவர்களின் எண்ணிக்கையை குறிப்பிடும். உதாரணமாக, வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் ஆறு மருத்துவர்கள் கடமையாற்றும் போது, அவர்களில் இருவர் அரைநாள் கடமையாற்றுவர். எனவே, FTE மருத்துவர்களின் எண்ணிக்கை = 4 முழுநேர ஊழியர்+2 அரைநாள் ஊழியர் = 5 மருத்துவர்கள்

குறிப்புதவிகள் மற்றும் மேலதிக வாசிப்புக்கானவை

மூலங்கள்

சர்வதேச சட்ட ஆவணங்கள்

The Right to the Highest Attainable Standard of Health (Article 12 of the International Covenant on Economic, Social and Cultural Rights), CESCR General Comment 14, 11 August 2000. UN Doc. E/C.12/2000/4. Committee on Economic, Social and Cultural Rights.

World Health Organization (WHO) (2002), 25 Questions & Answers on Health & Human Rights. Health & Human Rights Publication Issue No. 1. Geneva.
http://whqlibdoc.who.int/hq/2002/9241545690.pdf

சுகாதார முறைமைகள்

Inter-Agency Network for Education in Emergencies (INEE) (2004), Minimum Standards for Education in Emergencies, Chronic Crises and Early Reconstruction. Geneva. www.exacteditions.com/exact/browse/436/494/2635/2/47?dps=on

Inter-Agency Steering Committee (IASC) Global Health Cluster (2009), Health Cluster Guide: A practical guide for country-level implementation of the Health Cluster. WHO. Geneva.

Management Sciences for Health (1997), Managing Drug Supply, 2nd edition. Kumarian Press. Bloomfield, CT, USA.

Office of the United Nations High Commissioner for Refugees (UNHCR) (2009), Emergency Health Information System. www.unhcr.org/pages/49c3646ce0.html

Pan American Health Organization (PAHO) (2000), Natural Disasters: protecting the public's health. Scientific Publication No. 575. Washington DC.

WHO (1994), Health Laboratory Facilities in Emergencies and Disaster Situations.Geneva.

WHO (1999), Guidelines for Drug Donations, 2nd edition. Geneva.

WHO (2000), World health report 2000 – Health systems: improving performance. Geneva. www.who.int/whr/2000/en/index.html

WHO (2001), Macroeconomics and health: Investing in health for economic development. Geneva.

WHO (2009), Model Lists of Essential Medicines. Geneva.

www.who.int/medicines/publications/essentialmedicines/en/index.html

WHO (2008), The Interagency Emergency Health Kit: Medicines and Medical Devices for 10,000 People for Approximately 3 Months, 4th edition. Geneva.

WHO and PAHO (2001), Health Library for Disasters. Geneva. http://helid.desastres.net/

பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்தல்

Heymann, David L (2008), Control of Communicable Diseases Manual, 19th edition. American Public Health Association. Washington DC.

WHO (2002), Guidelines for the Collection of Clinical Specimens During Field Investigation of Outbreaks. Geneva.

WHO (2005), Communicable disease control in emergencies. Geneva.

WHO (2005), Malaria Control in Complex Emergencies: An Interagency Field Handbook. Geneva.

WHO (2007), Tuberculosis Care and Control in Refugee and Displaced Populations: An Interagency Field Manual, 2nd edition.Geneva.

சிறுவர் உடல் நலன்

WHO (1997), Immunisation in Practice. A Guide for Health Workers Who Give Vaccines. Macmillan. London.

WHO (2005), IMCI Handbook (Integrated Management of Childhood Illness). Geneva.

WHO (2005), Pocket book of hospital care for children: Guidelines for the management of common illnesses with limited resources. Geneva.

WHO (2008), Manual for the health care of children in humanitarian emergencies. Geneva.

United Nations Children's Fund (UNICEF) (2009), The State of the World's Children 2009. New York. www.unicef.org/sowc09/docs/SOWC09-FullReport-EN.pdf

பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம்

IASC (2009), Guidelines for Addressing HIV in Humanitarian Settings.

www.aidsandemergencies.org/cms/documents/IASC_HIV_Guidelines_2009_En.pdf

Inter-Agency Working Group on Reproductive Health in Crises (2010 revision for field review), Inter-agency Field Manual on Reproductive Health in Humanitarian Settings.

Women's Commission for Refugee Women and Children (2006), Minimum Initial Service Package (MISP) for Reproductive Health: A Distance Learning Module. http://misp.rhrc.org/

WHO (2006), Pregnancy, Childbirth, Postpartum and Newborn Care: A guide for essential practice, 2nd edition. Geneva.
http://whqlibdoc.who.int/publications/2006/924159084X_eng.pdf

WHO and UNHCR (2004), Clinical Management of Rape Survivors: Developing Protocols for use with Refugees and Internally Displaced Persons. Geneva.

WHO, United Nations Population Fund (UNFPA) and Andalucia School of Public Health (2009), Granada Consensus on Sexual and Reproductive Health in Protracted Crises and Recovery. Granada, Spain.

காயமடைதல்

Hayward-Karlsson, J et al (1998), Hospitals for War-Wounded: A Practical Guide for Setting Up and Running a Surgical Hospital in an Area of Armed Conflict. International Committee of the Red Cross (ICRC). Geneva.

PAHO (1995, reprint 2001), Establishing a Mass Casualty Management System. Washington DC. www.disasterpublications.info/english/viewtopic.php?topic=victimasmasa

WHO (2005), Integrated Management for Emergency and Essential Surgical Care tool kit: Disaster Management Guidelines. Geneva. www.who.int/surgery/publications/Disastermanagguide.pdf

மனநலம்

IASC (2007), IASC Guidelines on Mental Health and Psychosocial Support in Emergency Settings. Geneva. www.humanitarianinfo.org/iasc

IASC Reference Group on Mental Health and Psychosocial Support (2010), Mental Health and Psychosocial Support (MHPSS) In Humanitarian Emergencies: What Should Humanitarian Health Actors Know? Geneva.

www.who.int/mental_health/emergencies/en/

WHO (2010), mhGAP Intervention Guide for Mental, Neurological and Substance Use Disorders in Non-specialized Health Settings. Geneva.

www.who.int/mental_health/

WHO, World Vision International and War Trauma Foundation (forthcoming), Psychological First Aid Guide. Geneva.

பரவுந் தன்மையற்ற நோய்கள்

Spiegel et al (2010), Health-care needs of people affected by conflict: future trends and changing frameworks. Lancet, Vol. 375, 23 January 2010.

WHO (2008), The Management of Cardiovascular Disease, Diabetes, Asthma and Chronic Obstructive Pulmonary Disease in Emergency and Humanitarian Settings. Draft, 28 February 2008. Geneva.

WHO (2009), WHO Package of Essential Non-communicable Disease Interventions (WHO PEN). Geneva.

மேலதிக வாசிப்புக்கானவை

சர்வதேச சட்ட ஆவணங்கள்

Mann, J et al (eds) (1999), Health and Human Rights: A Reader. Routledge. New York.

Baccino-Astrada, A (1982), Manual on the Rights and Duties of Medical Personnel in Armed Conflicts. ICRC. Geneva.

சுகாதார முறைமைகள்

Beaglehole, R, Bonita, R and Kjellstrom, T (2006), Basic Epidemiology, 2nd edition. WHO. Geneva.

IASC Global Health Cluster (2010), GHC position paper: removing user fees for primary health care services during humanitarian crises. Geneva.

Johns Hopkins Bloomberg School of Public Health and International Federation of Red Cross and Red Crescent Societies (2008), Public health guide in emergencies. Geneva. www.ifrc.org/what/health/relief/guide.asp

Médecins sans Frontières (MSF) (1997), Refugee Health. An Approach to Emergency Situations. Macmillan. London.

Noji, E (ed) (1997), The Public Health Consequences of Disasters. Oxford University Press. New York.

Perrin, P (1996), Handbook on War and Public Health. ICRC. Geneva.

WHO (2006), The Interagency Emergency Health Kit 2006. Geneva.

அத்தியாவசிய சுகாதார சேவைகள்

Checchi, F and Roberts, L (2005), Interpreting and using mortality data in humanitarian emergencies. Humanitarian Practice Network. Overseas Development Institute. London. www.odihpn.org

MSF (2006), Rapid health assessment of refugee or displaced populations. Paris.

SMART (2006), Measuring Mortality, Nutritional Status and Food Security in Crisis Situations: Standardized Monitoring and Assessment of Relief and Transition. www.smartindicators.org

UNHCR (2009), UNHCR's Priniciples and Guidance for Referral Health Care for Refugees and Other Persons of Concern. Geneva. www.unhcr.org/cgi-bin/texis/vtx/search?page=search&docid=4b4c4fca9&query=referral%20 guidelines

WHO (1999), Rapid Health Assessment Protocols for Emergencies. Geneva.

பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்தல்

Cook, GC, Manson, P and Zumla, AI (2008), Manson's Tropical Diseases, 22nd edition. WB Saunders.

Connolly, MA et al (2004), Communicable diseases in complex emergencies: impact and challenges. The Lancet. London.

WHO (2004), Cholera outbreak, assessing the outbreak response and improving preparedness. Geneva.

WHO (2005), Guidelines for the control of shigellosis, including epidemics due to shigella dysenteriae type 1. Geneva.

சிறுவர் உடல் நலன்

WHO (2005), Guidelines for the management of common illnesses with limited resources. Geneva.

WHO, UNFPA, UNICEF and The World Bank Group (2003), Managing Newborn Problems: A guide for doctors, nurses, and midwives. Geneva.

http://whqlibdoc.who.int/publications/2003/9241546220.pdf

பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம்

Inter-agency Standing Committee (2006), Guidelines for Gender-based Violence Interventions in Humanitarian Emergencies. Geneva.

International Rescue Committee (2003), Protecting the Future: HIV Prevention, Care and Support Among Displaced and War-Affected Populations. Kumarian Press. Bloomfield, CT, USA.

UNFPA and Inter-agency Working Group on Reproductive Health in Refugee Situations (2008), The Reproductive Health Kit for Emergency Situations.

UNHCR (2006), Note on HIV/AIDS and the Protection of Refugees, IDPs and Other Persons of Concern. Geneva. www.unhcr.org/444e20892.html

UNHCR (2007), Antiretroviral Medication Policy for Refugees. Geneva.

www.unhcr.org/45b479642.html

UNHCR and Southern African Clinicians Society (2007), Clinical guidelines on antiretroviral therapy management for displaced populations.

www.unhcr.org/cgi-bin/texis/vtx/search?page=search&docid=46238d5f2&query=art%20guidelines

UNHCR, WHO and the Joint United Nations Programme on HIV/AIDS (UNAIDS) (2009), Policy Statement on HIV Testing and Counselling in Health Facilities for Refugees, Internally Displaced Persons and other Persons of Concern to UNHCR. Geneva. www.unhcr.org/4b508b9c9.html

WHO, UNFPA, UNICEF and The World Bank Group (2000, reprint 2007), Managing Complications in Pregnancy and Childbirth: A guide for midwives and doctors. Geneva. http://whqlibdoc.who.int/publications/2007/9241545879_eng.pdf

காயமடைதல்

International Society for Prosthetics and Orthotics (ISPO) (2001), ISPO consensus conference on appropriate orthopaedic technology for low-income countries: conclusions and recommendations. Prosthetics Orthotics International. Vol. 25, pp 168–170.

ISPO Code of Conduct for International Non-Governmental Prosthetics, Orthotics, and Mobility Assistance: www.usispo.org/code.asp

Landmines Survivors Network (2007), Prosthetics and Orthotics Programme Guide: implementing P&O services in poor settings: guide for planners and providers of services for persons in need of orthopaedic devices. Geneva.

Landmine Survivors Network (2007), Prosthetics and Orthotics Project Guide: supporting P&O services in low-income settings a common approach for organizations implementing aid projects. Geneva.

MSF (1989), Minor Surgical Procedures in Remote Areas. Paris.

WHO (1991), Surgery at the District Hospital: Obstetrics, Gynaecology, Orthopaedics and Traumatology. Geneva.

மனநலம்

UNHCR and WHO (2008), Rapid Assessment of Alcohol and Other Substance Use in Conflict-affected and Displaced Populations: A Field Guide. Geneva.

www.who.int/mental_health/emergencies/en/

WHO (2009), Pharmacological treatment of mental disorders in primary health care. Geneva. www.who.int/mental_health/

பரவுந் தன்மையற்ற நோய்கள்

Fauci, AS et al (eds) (2008), Harrison's Principles of Internal Medicine, 15th edition. McGraw Hill Professional. New York.

Foster, C et al (eds), The Washington Manual of Medical Therapeutics, 33rd edition. Lippincott Williams & Wilkins Publishers. Philadelphia.

Tierny, LM, McPhee, SJ, Papadakis, MA (eds) (2003), Current Medical Diagnosis and Treatment, 42nd edition. McGraw-Hill/Appleton & Lange. New York.

பிற்சேர்க்கை

பிற்சேர்க்கை 1.
மனிதநேய சாசனத்தை வலியுறுத்தும் பிரதான ஆவணங்கள்

அறிமுகம் : அனர்த்தம் அல்லது மோதல் போன்ற சூழ்நிலைகளின் போதான மனிதநேய நடவடிக்கைகள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தப்பட்ட பகிரப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பொதுவான கோட்பாடுகளை மனிதநேய சாசனம் உருவாக்குகின்றது. அத்துடன், இவை சர்வதேச சட்டத்தின் பிரதிபலிப்பாக அமைவதனையும் சுட்டிக்காட்டுகின்றது. பின்வரும் பிரதான ஆவணங்களின் உரைவிளக்கம் அளிக்கப்பட்ட பட்டியலில், சர்வதேச மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட பொருத்தமான சர்வதேச சட்ட ஆவணங்கள், சர்வதேச மனிதநேயச் சட்டம் (IHL), அகதிகளுக்கானச் சட்டம் மற்றும் மனிதநேய நடவடிக்கை என்பன உள்ளடங்கியுள்ளன. பிராந்தியச் சட்டம் மற்றும் வேறு அபிவிருத்திகளை உள்ளடக்குவதற்கு அது முயற்சிக்கவில்லை. இந்த பட்டியலில் மனிதநேய சாசனத்தை குறிப்பிடும் வேறு பல வழிகாட்டிகள், கோட்பாடுகள், தரங்கள் மற்றும் சட்டகங்களும் உள்ளடங்குகின்றன. இது மிகவும் முக்கியமாக தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் இருப்பதன் காரணமாக, இந்த ஆவணங்களுக்கான மேலதிக மூலங்கள் மற்றும் இணைய இணைப்புக்கள் ஸ்பியர் திட்டத்தின் இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ளன. இடப்பற்றாக்குறை காரணமாக, அறிமுகம் அல்லது விசேட விளக்கம் தேவையாக உள்ள ஆவணங்களுக்கு மாத்திரமே குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. ஏனெனில், அவை புதிதாக இருக்கின்றன அல்லது அனர்த்தங்கள் மற்றும் மோதலுடன் தொடர்புடைய விசேடமான பிரிவுகளை கொண்டிருக்கின்றன.

பின்வரும் தலையங்கங்களின் கீழ், கருப்பொருட்களின் அடிப்படையில் ஆவணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன: :

1. மனித உரிமைகள், பாதுகாப்பு மற்றும் பலவீனத் தன்மை
2. ஆயுத முரண்பாட்டு மற்றும் மனிதநேய உதவி
3. அகதிகள் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் (IDP)
4. அனர்த்தங்கள் மற்றும் மனிதநேய உதவி

ஒவ்வொரு ஆவணத்தின் தெளிவுத் தன்மையை உறுதி செய்வதற்கும், அவை ஒவ்வொன்றும் பின்வரும் உப தலைப்புக்களின் கீழும் வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன.

1. உடன்படிக்கைகள் மற்றும் வழக்காற்றுச் சட்டம் (தேவையான இடங்களில்)
2. ஐ.நா மற்றும் வேறு முறைசார் அடிப்படையில் உள்வாங்கப்பட்ட அரசாங்கங்களுக்கு இடையிலான வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்
3. மனிதநேய கொள்கைச் சட்டகம், வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

1. மனித உரிமைகள், பாதுகாப்பு மற்றும் பலவீனத் தன்மை

உலகளாவிய உடன்படிக்கைகளிலும், பிரகடனங்களிலும் பின்வரும் ஆவணங்கள் மனித உரிமைகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வயது (சிறுவர்கள் மற்றும் முதியவர்கள்), பால்நிலை மற்றும் மாற்றுத் திறன் என்பவற்றுடன் தொடர்புடைய முக்கியமான ஆவணங்கள் பலவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏனெனில், அனர்த்தம் அல்லது மோதலின் போது பலவீனத்திற்கு உள்ளாகும் பொதுவான அடிப்படை விடயங்களாக இவை காணப்படுகின்றன.

1.1. மனித உரிமைகள், பாதுகாப்பு மற்றும் பலவீனத் தன்மை தொடர்பான உடன்படிக்கைகள் மற்றும் வழக்காற்றுச் சட்டம்.

உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட தரப்பினராக இருக்கும் அரசுகளுக்கு மாத்திரமே மனித உரிமைகள் உடன்படிக்கைகள் சட்டம் பொருந்தும். ஆனால், வழக்காற்றுச் சட்டம் (உ-ம்: சித்திரவதை மீதான தடை) என்பது அனைத்து அரசுகளுக்கும் பொருந்தும். மனித உரிமைகள் சட்டம் இரண்டு சாத்தியமான விதிவிலக்குகள் தவிர, அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொருந்தக் கூடியது:

- சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் உறுப்புரை 4க்கு இசைவானதாக தேசிய அவசர கால நிலைமைகள் அறிவிக்கப்படும் போது சில வரையறுக்கப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் இரத்துச் செய்யப்படும் (“தரமிறக்கல்”).
- அங்கீகரிக்கப்பட்ட ஆயுத முரண்பாடுகளின் போது, மனித உரிமைகள் சட்டத்துடன் இசைவான தன்மை ஏதும் இல்லாது இருப்பின் முதலில் பிரயோகிக்கப்படும்.

1.1.1. உலகளாவிய மனித உரிமைகள்

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் 1948 (UDHR), 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 217 A (III)இனால் உள்வாங்கப்பட்டது.
www.un.org/en/documents/udhr/index.shtml

1948ஆம் ஆண்டு ஐ.நாவின் பொதுச் சபையினால் UDHR ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடிப்படை மனித உரிமைகள் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக UDHR உருவாக்கப்பட்டது. இது ஒரு உடன்படிக்கை அல்ல. இருப்பினும், இது வழக்காற்றுச் சர்வதேச சட்டத்தின் ஒரு பகுதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முன்னுரையின் முதல் வசனமானது, மனிதர்களின் “உள்ளார்ந்த கண்ணியத்தினை” அடிப்படை கருத்தாக அறிமுகப்படுத்துகின்றது. அத்துடன், முதல் உறுப்புரையில் “அனைத்து மனிதர்களும் கண்ணியம் மற்றும் உரிமைகளில் சுதந்திரமானவர்களாகவும், சமமானவர்களாகவும் பிறக்கின்றனர்” எனக் குறிப்பிடுகின்றது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் 1996 (ICCPR), 1966ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 2200A (XXI)இனால் உள்வாங்கப்பட்டது. 1976ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது United Nations Treaty Series vol. 999, p. 171 and vol. 1057, p. 407. www2.ohchr.org/english/law/ccpr.htm

ICCPR**க்கான இரண்டாவது விருப்ப நெறிமுறை 1989** (மரணத் தண்டனையை ஒழிப்பதனை இலக்காகக் கொண்டது), 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 44/128இனால் உள்வாங்கப்பட்டது. 1991ஆம் ஆண்டு ஜுலை 11ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. United Nations Treaty Series vol. 1642, p. 414. www2.ohchr.org/english/law/ccpr-death.htm

ICCPRஇன் தரப்பினராக உள்ள நாடுகள் அனைத்தும், “மக்களின்” சுய நிர்ணய உரிமை மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களின் சம உரிமைகள் என்பவற்றை அங்கீகரிக்கும் அதேவேளை, தமது எல்லைக்குள் உள்ள அல்லது தமது சட்டவாக்கத்திற்கு கீழ் உள்ள அனைத்து தனிநபர்களினதும் உரிமைகளை மதிக்கவும், உறுதி செய்யவும் வேண்டும். சில உரிமைகள் (*என்ற அடையாளத்தால் குறிப்பிடப்பட்டுள்ளவை) மிக மோசமான தேசிய அவசர கால நிலைமைகளின் போதும் கூட, எப்போதும் ரத்துச் செய்யப்படக் கூடாது.

உரிமைகள்: வாழ்வதற்கான உரிமை*, சித்திரவதை புரியாமை அல்லது வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான வகையில் நடத்தாமை*, அடிமைத்தனம் இன்மை*, தன்னிச்சையான கைது செய்யாமை அல்லது காவலில் வைக்காமை காவலில் மனிதநேயம் மற்றும் கண்ணியம் ஒப்பந்த மீறலுக்கு சிறை வைக்கப்படாமை*, நடமாடுவதற்கான மற்றும் வதிவதற்கான சுதந்திரம் வெளிநாட்டினருக்கு மாத்திரம் சட்டப்பூர்வமான வெளியேற்றம், சட்டத்தின் முன் சமத்துவம், குற்றவியல் விசாரணைகளில் நீதியான வழக்கு விசாரணை மற்றும் ஊகம்: குற்றவியல் தவறுகளுக்கு பின்னோக்கியத் தன்மை இன்மை* சட்டத்தின் முன் சமமான அங்கீகாரம்* தனிப்பட்ட வாழ்க்கை, சுதந்திரமான சிந்தனை, மதம் மற்றும் மனசாட்சி* சுதந்திரமான கருத்து வெளிப்பாடு மற்றும் அமைதியான ஒன்று கூடல், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், திருமணம் செய்வதற்கான மற்றும் குடும்ப வாழ்க்கைக்கான உரிமை, சிறுவர்களின் பாதுகாப்பு வாக்களிப்பதற்கான மற்றும் பொது விவகாரங்களில் கலந்து கொள்வதற்கான உரிமை, தமது சுய கலாசாரம், மதம் மற்றும் மொழியை அனுபவிப்பதற்கான சிறுபான்மையினரின் உரிமைகள்*

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் 1966 (ICESCR), 1966 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 2200A (XXI)இனால் உள்வாங்கப்பட்டது. 1976ஆம் ஆண்டு ஜனவரி 03ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. United Nations Treaty Series vol. 993, p. 3 www2.ohchr.org/english/law/cescr.htm

ஆண்கள் மற்றும் பெண்கள் சமமான வகையில் அனுபவிக்கக் கூடியதாக, சாசனத்தின் உரிமைகளை “படிப்படியாக அடைவதற்கு” கிடைக்கக் கூடிய வளங்களை ஆகக் கூடிய அளவில் ஈடுபடுத்துவதற்கு அரச தரப்புக்கள் இணங்கும்.

உரிமைகள்: பணி புரிவதற்கான, ஊதியத்தை மாத்திரம் பெறுவதற்கான, தொழிற் சங்கங்களில் இணைவதற்கான, சமூக பாதுகாப்பு/காப்புறுதியை கொண்டிருப்பதற்கான, பிரசவத்தின் பின்னர் தாய்மாரின் பாதுகாப்பு மற்றும் சுரண்டலில் இருந்து சிறுவர்களின் பாதுகாப்பு உள்ளடங்கலாக குடும்ப வாழ்க்கைக்கான பாதுகாப்பு, உணவு, உடை மற்றும் உறையுள் உள்ளடங்கலாக போதிய தரத்துடன் வாழ்வதற்கான உடல் நலன் மற்றும் மனநலனிற்கான் கல்விக்கான மற்றும் கலாசார வாழ்க்கையில் பங்குபற்றுவதற்கான மற்றும் விஞ்ஞான மற்றும் கலாசார முன்னேற்றங்களை அனுபவிப்பதற்கானவை.

அனைத்து வகையான இனப் பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச சாசனம் 1969 (ICERD)1965 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 2106 (XX)இனால் உள்வாங்கப்பட்டது. 1969ஆம் ஆண்டு ஜனவரி 04ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. United Nations Treaty Series, vol. 660, p. 195. www2.ohchr.org/english/law/cerd.htm

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாட்டினையும் ஒழிப்பதற்கான சாசனம் 1979 (CEDAW)1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 34/180இனால் உள்வாங்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு செப்ரம்பர் 03ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது, United Nations, Treaty Series, vol. 1249, p. 13. www2.ohchr.org/english/law/cedaw.htm

சிறுவர் உரிமைகளுக்கான சாசனம் 1989 (CRC)1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 44/25இனால் உள்வாங்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு செப்ரம்பர் 02ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது., United Nations, Treaty Series, vol. 1577, p. 3. www2.ohchr.org/english/law/crc.htm

சிறுவர்கள் ஆயுத முரண்பாட்டில் ஈடுபடுவது தொடர்பான விருப்ப நெறிமுறை 2000, 2000ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் A/RES/54/263இனால் உள்வாங்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது United Nations, Treaty Series, vol. 2173, p. 222. www2.ohchr.org/english/law/crc-conflict.htm

சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர்களை பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தல் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்களுக்கு பயன்படுத்தல் தொடர்பான விருப்ப நெறிமுறை 2000, 2000ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் A/RES/54/263இனால் உள்வாங்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. United Nations, Treaty Series, vol. 2171, p. 227. www2.ohchr.org/english/law/crc-sale.htm

CRCஇல் அண்ணளவாக உலகில் உள்ள அனைத்து நாடுகளும் இணைந்துள்ளன. அதில் சிறுவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் அவர்களுக்கு எப்போது விசேடப் பாதுகாப்பு தேவை (உ-ம்: தமது குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்ட பின்னர்) என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் தரப்பாக உள்ள அரசுகள் விசேட சிறுவர் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் சாதகமான நடடிவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே நெறிமுறைகளின் கோரிக்கையாகும்.

மாற்றுத் திறனுடையவர்களின் உரிமைகள் தொடர்பான சாசனம் 2006 (CRPD), 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம்

A/RES/61/106இனால் உள்வாங்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு மே 03ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. United Nations Treaty Collection, Chapter IV, 15. www2.ohchr.org/english/law/disabilities-convention.htm

ஏனைய அனைத்து மனித உரிமைகள் உடன்படிக்கைகளின் கீழும் வருகின்ற மாற்றுத்திறனுடைய மக்களின் உரிமைகளுக்கு CRPD உதவி புரிகின்றது. அத்துடன், மாற்றுத் திறனுடைய மக்களின், பாரபட்சமின்மை மற்றும் சேவைகள் மற்றும் வசதிகளுக்கான பிரவேசத் தன்மை என்பன தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பில் விசேடமாக கவனஞ் செலுத்துகின்றது. "சவால் சூழ்நிலைகள் மற்றும் மனிதநேய அவசர கால நிலைமைகள்" என்பன தொடர்பான விசேட குறிப்புக்களாகவும் உள்ளன (உறுப்புரை 11).

1.1.2. இனப்படுகொலை, சித்திரவதை மற்றும் உரிமைகளின் வேறு குற்றவியல் துஷ்பிரயோகம்

இனப்படுகொலையை தடுப்பதற்கான மற்றும் இனப்படுகொலை குற்றத்திற்கான தண்டனை தொடர்பான சாசனம் 1948, 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 260 (III)இனால் உள்வாங்கப்பட்டது. 1951ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது United Nations, Treaty Series, vol. 78, p. 277 www2.ohchr.org/english/law/genocide.htm

சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது கீழ்த்தரமாக நடத்தல் அல்லது தண்டனைக்கு எதிரான சாசனம் 1984, 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 39/46இனால் உள்வாங்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. United Nations, Treaty Series, vol. 1465, p. 85. www2.ohchr.org/english/law/cat.htm

இந்த சாசனத்தில் அதிக எண்ணிக்கையிலான அரச தரப்புக்கள் கைச்சாத்திட்டுள்ளன. சித்திரவதை மீதான தடையும் தற்போது வழக்காற்றுச் சட்டத்தின் ஒரு பகுதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொது அவசர கால நிலைமை அல்லது யுத்தம் என்ற எந்த காரணத்திற்காகவும், சித்திரவதையை நியாயப்படுத்த முடியாது. நபர் ஒருவருக்கு சித்திரவதை தொடர்பான அச்சுறுத்தல் இருப்பதாக எண்ணும் பகுதிக்கு, அவரை அரசு அனுப்பக் கூடாது

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் நியதிச் சட்டம். 1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி ரோமில் நடைபெற்ற இராஜதந்திர மாநாட்டின் போது உள்வாங்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. , United Nations, Treaty Series, vol. 2187, p. 3. www.icrc.org/ihl.nsf/INTRO/585?OpenDocument

நியதிச் சட்டத்தின் உறுப்புரை 9 (குற்றங்களின் அம்சங்கள்), சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் (ICC) 2002ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்டது. இதில் பெரும்பாலான வழக்காற்று சர்வதேச குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் யுத்தக் குற்றங்கள், மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஐ.நா பாதுகாப்புப் பேரவையினால் பரிந்துரைக்கப்படும் விடயங்கள் தொடர்பில் (குற்றஞ் சாட்டப்பட்ட நபரின் அரசு உடன்படிக்கையின்

ஒரு தரப்பாக இல்லாத போதிலும்) மற்றும் உடன்படிக்கையின் அரச தரப்புக்களின் நபர்கள் அல்லது தமது பிராந்தியத்தில் முன்னெடுக்கப்படும் குற்றச் செயல்கள் தொடர்பிலும் விசாரணை செய்யவும், வழக்கு தொடுக்கவும் ICCஇனால் முடியும்.

1.2. ஐ.நா மற்றும் வேறு முறைசார் அடிப்படையில் உள்வாங்கப்பட்ட அரசாங்கங்களுக்கு இடையிலான வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

மனித உரிமைகள் முதிர்ச்சியடைதல் தொடர்பான நடவடிக்கைக்கான மெட்ரிட் சர்வதேச திட்டம் 2002, முதிர்ச்சியடைதல் தொடர்பான ஐ.நாவின் இரண்டாவது உலக மாநாடு, மெட்ரிட், 2002, 1982ஆம் ஆண்டு டிசம்பர் 03ஆம் திகதியின் ஐ.நா பொதுச் சபை தீர்மானம் 37/51இனால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. www.globalaging.org/agingwatch/events/CSD/mipaa+5.htm

வயதானவர்களுக்கான ஐக்கிய நாடுகளின் கோட்பாடுகள் 1991, 1991ஆம் ஆண்டு டிசம்பர்16ஆம் திகதியின் ஐ.நா பொதுச் சபை தீர்மானம் 46/91 www2.ohchr.org/english/law/olderpersons.htm

1.3. மனித உரிமைகள், பாதுகாப்பு மற்றும் பலவீனத் தன்மை தொடர்பான மனிதநேய கொள்கைச் சட்டகங்கள், வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நபர்களை பாதுகாத்தல்: மனித உரிமைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான IASC **செயற்பாட்டு வழிகாட்டிகள்** 2006, Inter-Agency Standing Committee. www.humanitarianinfo.org/iasc/pageloader.aspx

இயற்கை அனர்த்த சூழ்நிலைகளில் பிரயோகிக்கக் கூடிய சர்வதேச சட்டம் மற்றும் தரங்கள் (IDLO **சட்ட கையேடு) 2009,** International Development Law Organization (IDLO). www.idlo.int/DOCNews/352doc.pdf

ஆதரவற்ற மற்றும் பிரிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான நிறுவனங்களுக்கு இடையிலான வழிகாட்டும் கோட்பாடுகள் 2002, CRC அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயம் (UNHCR), ஐ.நா சிறுவர் நிதியம் (UNICEF),World Vision International, சேவ் த சில்ரன் UK மற்றும் international Rescue Committee என்பவற்றினால் வடிவமைக்கப்பட்டது. www.icrc.org

மனிதநேய நடவடிக்கைக்கான பால்நிலை கையேடு 2006, Inter-Agency Standing Committee. www.humanitarianinfo.org/iasc/pageloader.aspx?page=content-subsidi-tf_gender-genderh

அவசர கால நிலைமைகளில் மனநலம் மற்றும் உளச்சமூக உதவி தொடர்பான IASC **வழிகாட்டிகள் 2007**, Inter-Agency Standing Committee. www.humanitarian-info.org/iasc/pageloader.aspx?page=content-subsidi-tf_mhps-default

அவசர கால நிலைமைகள், நாட்பட்ட மோதல்கள் மற்றும் துரித மீளமைப்பின் போது கல்விக்கான ஆகக் குறைந்த INEE தரங்கள் 2007, 2010ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. அவசர கால நிலைமைகளில் கல்விக்கான நிறுவனங்களுக்கு இடையிலான வலையமைப்பு (INEE) (2008ஆம் ஆண்டு முதல் ஸ்பியரின் சகத் தரங்களாக முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது)
www.ineesite.org/index.php/post/inee_minimum_standards_overview/

2. ஆயுத முரண்பாடு, சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் மனிதநேய உதவி

2.1. ஆயுத முரண்பாடு, சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் மனிதநேய உதவி தொடர்பான உடன்படிக்கைகள் மற்றும் வழக்காற்றுச் சட்டம்

வன்முறை முரண்பாடு எப்போது “ஆயுத முரண்பாடாக” மாறுகின்றது என்ற ஆரம்ப நிலையையும், இந்த சட்ட ஆவணத்தின் பயன்பாட்டினையும் சர்வதேச மனிதநேயச் சட்டம் (IHL) விளக்குகின்றது. IHL உடன்படிக்கைகளின் அதிகாரப்பூர்வ களஞ்சியமாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு (ICRC) உள்ளது. அத்துடன், ஜெனீவா சாசனங்கள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான அதிகாரப்பூர்வ வர்ணனை மற்றும் வழக்காற்று சர்வதேச மனிதநேயச் சட்ட கற்கையின் விதிகள் என்பன உள்ளடங்கலாக மேலதிக தகவல் மற்றும் மூலங்களை தமது இணையளத்தில் (www.icrc.org) வழங்குகின்றது.

2.1.1. முக்கியமான IHL உடன்படிக்கைகள்

1949ஆம் ஆண்டு நான்கு ஜெனீவா சாசனங்கள்
ஜெனீவா சாசனங்களுக்கு மேலதிகமான நெறிமுறை, சர்வதேச ஆயுத முரண்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் 1977 (நெறிமுறை I**)**
ஜெனீவா சாசனங்களுக்கு மேலதிகமான நெறிமுறை, சர்வதேசமற்ற ஆயுத முரண்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் 1977 (நெறிமுறை II**)**
www.icrc.org/ihl.nsf/CONVPRES?OpenView

அனைத்து அரசுகளும் தரப்புக்களாக உள்ள மற்றும் வழக்காற்றுச் சட்டத்தின் ஒரு பகுதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நான்கு ஜெனீவா சாசனங்கள், யுத்தம் இடம்பெறும் நிலத்தில் (I) மற்றும் கடலில் (II) காயமடைந்த மற்றும் சுகவீனமுற்றவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்குதல், யுத்தத்தில் கைது செய்யப்பட்டுவர்களுக்கான சிகிச்சை வழங்குதல் (III) மற்றும் ஆயுத முரண்பாட்டின் போது சிவில் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் (IV) என்பவற்றை அக்கறையாக கொண்டுள்ளது. சர்வதேச ரீதியானது அற்ற முரண்பாடுகள் தொடர்பான சாசனங்களுக்கு இணையான உறுப்புரை 3 தவிர, அவை பிரதானமாக சர்வதேச ஆயுத முரண்பாடுகளுக்கு பிரயோகிக்கப்படுகின்றன. தற்போது சர்வதேச ரீதியற்ற முரண்பாடுகளின் வேறு சில அம்சங்கள் வழக்காற்றுச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அந்த சந்தர்ப்பத்தில் 1977ஆம் ஆண்டு நெறிமுறைகள் இரண்டு சாசனங்களை புதுப்பித்தன. விசேடமாக போராளிகள் என்பதற்கான வரைவிலக்கண்ங்கள் மற்றும் சர்வதேச ரீதியற்ற முரண்பாடுகளை குறிப்பிடல் என்பவற்றை சுட்டிக்காட்டலாம். பெரும்பாலான நாடுகள் இந்த நெறிமுறைகளுக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

2.1.2. கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் கலாசார சொத்துக்கள் தொடர்பான உடன்படிக்கைகள்

மேலே சுட்டிக்காட்டப்பட்ட "ஜெனீவா சட்டத்திற்கு" மேலதிகமாக, ஆயுத முரண்பாட்டின் போது பொதுவாக பயன்படுத்தப்படும் "ஹேக் சட்டம்" என்ற சட்ட அங்கமும் உள்ளது. இதில் கலாசார சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பான சாசனம் மற்றும் வாயு மற்றும் வேறு இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள், பாகுபாட்டினை ஏற்படுத்தும் அல்லது தேவையற்ற பாதிப்பை ஏற்படுத்தும் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் மற்றும் கொத்து குண்டுகள் போன்ற வழக்கமான ஆயுதங்கள் உள்ளடங்கலாக கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட பல வகையான ஆயுதங்கள் தொடர்பான சாசனம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. www.icrc.org/ihl.nsf

2.1.3. வழக்காற்று IHL

வழக்காற்று IHL என்பது, அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய வழக்காற்று விதிகளைக் கொண்டதாக, IHL உடன்படிக்கைகளுக்கான தமது பிரவேசத் தன்மை குறித்த அக்கறையற்றதாக, தமது கருத்துக்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் ஊடாக அரசுகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆயுத முரண்பாட்டு சட்டத்தினை குறிக்கின்றது. வழக்காற்று விதிகள் தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டியல்கள் இல்லை. ஆனால், மிகவும் அதிகாரப்பூர்வ உரைவிளக்கமாக கீழுள்ள கற்கை காணப்படுகின்றது.

வழக்காற்று சர்வதேச மனிதநேயச் சட்டம் (CIHL) Study, ICRC, Henckaerts, J-M and Doswald-Beck, L, Cambridge University Press, Cambridge & New York, 2005. www.icrc.org/ihl.nsf/INTRO/612?OpenDocument

ஆயுத முரண்பாடு சம்பந்தப்பட்ட சட்டத்தின் முழு அம்சங்களையும் இந்த கற்கை உள்ளடக்குகின்றது. அதில் 161 விசேட விதிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அத்துடன், அவை சர்வதேச ஆயுத முரண்பாட்டுக்கு மற்றும்/அல்லது சர்வதேச ரீதியிலற்ற ஆயுத முரண்பாட்டுக்கு பிரயோகிக்கப்படுகின்றமை தொடர்பிலும் விளக்குகின்றன. அதேவேளை, சில சட்ட வர்ணனையாளர்கள் இந்த முறையியலை விமர்சிக்கின்றனர். CIHL கற்கை என்பது 10 வருடங்களுக்கும் அதிகமான பரந்த கலந்தாய்வு மற்றும் ஆழமான ஆய்வு என்பவற்றின் ஊடாக வெளிவந்தது. அத்துடன், வழக்காற்று விதிகளின் உரைவிளக்கமாக அதன் அதிகாரப்பூர்வத் தன்மையும் பரந்த அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.2. ஆயுத முரண்பாடு, சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் மனிதநேய உதவி தொடர்பான ஐ.நா மற்றும் வேறு முறைசார் அடிப்படையில் உள்வாங்கப்பட்ட அரசாங்கங்களுக்கு இடையிலான வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

பாதுகாப்பு தொடர்பான ஐ.நா பாதுகாப்பு பேரவை 'Aide Memoire' 2002, 2003ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது (S/PRST/2003/27). www.un.org/Docs/journal/asp/ws.asp?m=S/PRST/2003/27
இது அரசுகளைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் அல்ல. ஆனால், சமாதானத்தைக் காத்தல் மற்றும் முரண்பாட்டின் அவசர சூழ்நிலைகளுடன் சம்பந்தப்பட்ட ஐ.நா பாதுகாப்பு பேரவைக்கான வழிகாட்டும் ஆவணமாகும். பல்வேறு ஐ.நா நிறுவனங்கள் மற்றும் IASCஉடனான கலந்தாய்வின் அடிப்படையில் உருவானது.

பாலியல் வன்முறை மற்றும் ஆயுத முரண்பாட்டில் பெண்கள் தொடர்பான ஐ.நா பாதுகாப்பு பேரவை தீர்மானங்கள், விசேடமாக தீர்மானங்கள், 1820 (2008), 1888 (2009) மற்றும்1889 (2009) வருடம் மற்றும் இலக்கத்தின் அடிப்படையில் ஐ.நா பாதுகாப்பு பேரவையின் அனைத்து தீர்மானங்களும்: www.un.org/documents/scres.htm

2.3. ஆயுத முரண்பாடு, சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் மனிதநேய உதவி தொடர்பான மனிதநேய கொள்கை சட்டகங்கள், வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

ஆயுத முரண்பாடு மற்றும் வேறு வன்முறைச் சூழ்நிலைகளில் மனிதநேய மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு பணிக்கான தொழிற்சார் தரங்கள் 2009, ICRC,. ICRC. www.icrc.org

3. அகதிகள் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்த நபர்கள் (IDP)

அகதிகள் சாசனம் மற்றும் நெறிமுறையின் கீழ் அகதிகளை பாதுகாப்பதற்கான விசேட சட்ட கட்டளையை அகதிகளுக்கான ஐ.நா நிறுவனமான UNHCR கொண்டுள்ளது. அத்துடன், உள்ளக இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்புக்காக அரசுகளுடன் ஒன்றிணைந்து செயற்படுமாறும் ஐ.நா பாதுகாப்புச் சபை UNHCRஇனை பணித்துள்ளது. தமது இணையத்தளத்தில் பரவலான மூலங்களை UNHCR கொண்டுள்ளது.

3.1. அகதிகள் மற்றும் IDPஇற்கான உடன்படிக்கைகள்

சர்வதேச உடன்படிக்கைக்கு மேலதிகமாக, இந்த பகுதியில் இரண்டு ஆபிரிக்க ஒன்றிய (ஆபிரிக்க ஒற்றுமைக்கான முன்னாள் நிறுவனம் அல்லது OAU) உடன்படிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏனெனில், அவை இரண்டும் வரலாற்று ரீதியான முன்னோடிகளாக உள்ளன.

அகதிகளின் நிலைமையுடன் சம்பந்தப்பட்ட சாசனம் 1951 (திருத்தப்பட்டது), 1951ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற அகதிகள் மற்றும் நாடற்ற மக்களின் நிலைமை தொடர்பான ஐக்கிய நாடுகளின் Plenipotentiaries மாநாட்டின் போது உள்வாங்கப்பட்டது. 1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி முதல் நடைமுறையில் உள்ளது. United Nations, Treaty Series, vol. 189, p. 137..

அகதிகளின் நிலைமையுடன் சம்பந்தப்பட்ட நெறிமுறை 1967, 1966ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் தீர்மானம் 2198 (XXI) 2இனால் குறிக்கப்பட்டது. United Nations, Treaty Series, vol. 606, p. 267. www.unhcr.org/protect/PROTECTION/3b66c2aa10.pdf

அகதிகள் தொடர்பான முதலாவது சர்வதேச உடன்படிக்கையானது அகதி என்பவரை, "இனம், மதம், தேசிய அடையாளம், குறிப்பிட்ட சமூகக் குழுவின் அல்லது அரசியல் கருத்தின் உறுப்பினர், என்ற காரணங்களுக்காக துன்பப்படுத்தப்படலாம் என்ற அச்சம் நாட்டிற்கு வெளியே அவரது தேசிய அடையாளம் காரணமாக மற்றும் அந்த நாட்டில் தமக்கான பாதுகாப்பை உறுதி செய்துக் கொள்ள முடியாத அல்லது துன்பப்படுத்தப்படலாம் என்ற பயத்தின் காரணமாக நாட்டுக்கு திரும்ப முடியாத நபர்." என வரையறுக்கின்றது.

ஆபிரிக்காவில் அகதிகள் பிரச்சினைகளின் விசேட அம்சங்களை நிர்வகிக்கும் OAU சாசனம் 1969, 1969ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 10ஆம் திகதி, அடிஸ் அபாபாவில் நடைபெற்ற அரசுகள் மற்றும் அரசாங்கங்களின் தலைவர்களுக்கான சபையின், ஆறாவது சாதாரண அமர்வில் உள்வாங்கப்பட்டது www.unhcr.org/45dc1a682.html

துன்பப்படுத்தப்படலாம் என்பதன் காரணமாக மாத்திரமின்றி, புற ஆக்கிரமிப்பு, கைப்பற்றல், வெளிநாட்டு ஆதிக்கம் அல்லது பொது மக்களின் ஒழுங்கில் தீவிர தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள் என்பன காரணமாகவும் தமது நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுபவர்களையும் உள்ளடக்கும் 1951ஆம் ஆண்டு சாசனத்தை ஏற்றுக் கொள்வதுடன், அதனை பரவலாக்குகின்றது. அத்துடன், அரசு சாராத குழுக்களையும் துன்புறுத்தலுக்கான குற்றவாளிகளாக அது அடையாளப்படுத்துகின்றது. அகதிகள் தமக்கிடையிலும் மற்றும் எதிர்கால ஆபத்துக்கு இடையிலும் நேரடியான தொடர்பினை கொண்டிருக்கின்றார்கள் என அவதானிப்பதில்லை.

ஆபிரிக்காவில் உள்ளக இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்பு மற்றும் உதவிக்கான ஆபிரிக்க ஒன்றிய சாசனம் (கம்பாலா சாசனம்) 2009, 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி, உகண்டாவின், கம்பாலாவில் நடைபெற்ற ஆபிரிக்க ஒன்றியத்தின் விசேட மாநாட்டின் போது உள்வாங்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் வரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. www.unhcr.org/4ae9bede9.html

இதுவே, உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் சம்பந்தமான முதலாவது பன்முக சாசனமாகும். 17 ஆபிரிக்க ஒன்றிய அரசுகளினால் 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலில் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு 15 முறைசார் ஏற்றுக் கொள்ளல்கள்/ஏற்புறுதிகள் அவசியமாகும்.

3.2. அகதிகள் மற்றும் IDP தொடர்பான ஐ.நா மற்றும் வேறு முறைசார் அடிப்படையில் உள்வாங்கப்பட்ட அரசாங்கங்களுக்கு இடையிலான வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

உள்ளக இடப்பெயர்வு தொடர்பான வழிகாட்டல் கோட்பாடுகள் 1998, 2005ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா பொதுச் சபை தீர்மானம் 60/L.1

(132, UN Doc. A/60/L.1)இல் அரசுகளின் மற்றும் அரசாங்கங்களின் தலைவர்களினால் “உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்புக்கான முக்கியமான சர்வதேச சட்டகமாக” ஏற்றுக் கொள்ளப்பட்டது. www.idpguidingprinciples.org/

இந்த கோட்பாடுகள் சர்வதேச மனிதநேய மற்றும் மனித உரிமைகள் சட்டம் மற்றும் ஒத்த அகதிகள் சட்டம் என்பவற்றின் அடிப்படையிலானது. உள்ளக இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கும் அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு வழிகாட்டும் சர்வதேச தரமாக செயற்பட்டு வருகின்றது.

4. அனர்த்தங்கள் மற்றும் மனிதநேய உதவி

4.1. அனர்த்தங்கள் மற்றும் மனிதநேய உதவி தொடர்பான உடன்படிக்கைகள்

ஐக்கிய நாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களின் பாதுகாப்பு தொடர்பான சாசனம் 1994, 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 49/59இனால் உள்வாங்கப்பட்டது. 1999ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. www.un.org/law/cod/safety.htm

ஐக்கிய நாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களின் பாதுகாப்பு தொடர்பான சாசனத்திற்கான விருப்புக்குரிய நெறிமுறை 2005, 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் A/60/42இனால் உள்வாங்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. www.ocha.unog.ch/drptoolkit/PNormativeGuidanceInternationalConventions.html#UNSpecificConventions

இந்த சாசனத்தில் “விதிவிலக்கான சவாலை” சாத்தியமற்ற தேவை என ஐ.நா பிரகடனம் செய்யாதிருப்பின், பாதுகாப்பு என்பது ஐ.நா அமைதிகாத்தலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சாசனத்தில் உள்ள பாரிய குறைபாட்டை திருத்தும் நெறிமுறை, அவசர கால மனிதநேய உதவியிலிருந்து, அமைதி காத்தல் வரை அனைத்து ஐ.நா செயற்பாடுகளினதும் மற்றும் மனிதநேய, அரசியல் மற்றும் அபிவிருத்தி உதவிகளின் விநியோகத்தினதும் சட்ட பாதுகாப்பை பரவலாக்குகின்றது.

உணவு உதவி சாசனம் 1999, 1995ஆம் ஆண்டு தானியங்கள் தொழில் சாசனத்தின் கீழான தனியான சட்ட ஆவணம். சர்வதேச தானியங்கள் பேரவை (IGC) செயலகத்தின் ஊடாக உணவு உதவி ஆலோசனைக் குழுவினால் நிர்வகிக்கப்படுகின்றது.

அனர்த்த தணிப்பு மற்றும் நிவாரணச் செயற்பாடுகளுக்கான தொலைத் தொடர்பு வளங்கள் தொடர்பான டெம்பியர் சாசனம் 1998, அவசரகாலத் தொலைத் தொடர்புகள் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2005ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. www.unhcr.org/refworld/publisher,ICET98,,,41dec59d4,0.html

காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா சட்டக சாசனம் (UNFCCC) **1992,** 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை, ரியோ டி

ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் உள்வாங்கப்பட்டு, 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை தீர்மானம் 47/195இனால் வரவேற்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. United Nations, Treaty Series, vol. 1771, p. 107.
http://unfccc.int/essential_background/convention/items/2627.php

UNFCCC**இற்கான கியோட்டோ நெறிமுறை 1997,** 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி ஜப்பான், கியோட்டோவில் நடைபெற்ற சட்டக சாசனத்தின் தரப்புக்களின் மாநாட்டின் மூன்றாவது அமர்வில் உள்வாங்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது United Nations, Treaty Series, vol. 2303, p. 148. http://unfccc.int/essential_background/kyoto_protocol/items/1678.php

காலநிலை மாற்ற உள்வாங்கல் மற்றும் சவால் குறைப்பு உபாயங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் விசேடமாக இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ளூர் இயலுமை மற்றும் நெகிழ்ச்சியை கட்டியெழுப்பல் என்பவற்றுக்கான அவசரத் தேவையை, UNFCCC மற்றும் கியோட்டோ நெறிமுறை என்பன அடையாளப்படுத்துகின்றன. காலநிலை மாற்றம் தொடர்பான அனர்த்த குறைப்பு மூலோபாயங்கள் மற்றும் சவால் முகாமைத்துவத்தினை அவை விளக்குகின்றன.

4.2. அனர்த்தங்கள் மற்றும் மனிதநேய உதவி தொடர்பான ஐ.நா மற்றும் வேறு முறைசார் அடிப்படையில் உள்வாங்கப்பட்ட அரசாங்கங்களுக்கு இடையிலான வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

ஐக்கிய நாடுகளின் மனிதநேய அவசர கால உதவியின் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தல், இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டல் கோட்பாடுகளுடன், 1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி பொதுச் சபை தீர்மானம் 46/182.
www.reliefweb.int/ocha_ol/about/resol/resol_e.html

1998ஆம் ஆண்டு மனிதநேய விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான (OCHA) ஐ.நா அலுவலகமாக மாறிய, மனிதநேய விவகாரங்களின் ஐ.நா திணைக்களம் உருவாக இது வழிவகுத்தது.

நடவடிக்கைக்கான ஹயாகோ (Hyogo) **சட்டகம் 2005-2015: அனர்த்தங்களில் இருந்து தேசங்களின் மற்றும் சமுதாயங்களின் நெகிழ்ச்சியை கட்டியெழுப்பல்.** 2005ஆம் ஆண்டு அனர்த்த குறைப்பு தொடர்பான உலக மாநாட்டில் உள்வாங்கப்பட்டது.
www.unisdr.org/eng/hfa/hfa.htm

அனர்த்த சவால் குறைப்பினை அவசரகால மறுசீரமைப்பு, மீளமைப்பு மற்றும் முன்னாயத்த நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தலுடன் ஒன்றிணைக்க அரசுகள் மற்றும் மனிதநேய நிறுவனங்களுக்கான மூலோபாயங்களை இது உருவாக்குகின்றது. அத்துடன், அதனை நிலைத்திருக்கக் கூடிய நெகிழ்ச்சிக்கான அபிவிருத்தி மற்றும் இயலுமையை கட்டியெழுப்புவதுடன் ஒன்றிணைக்கவும் உதவுகின்றன.

உள்ளக இலகுப்படுத்தல் மற்றும் சர்வதேச அனர்த்த நிவாரணம் மற்றும் ஆரம்ப மீளமைப்பு உதவி கட்டுப்படுத்தலுக்கான வழிகாட்டிகள் (IDRL **வழிகாட்டிகள்) 2007,** செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் 30ஆவது சர்வதேச மாநாட்டில் உள்வாங்கப்பட்டது (ஜெனீவா சாசனங்களின் அரசு தரப்புக்களை உள்ளடக்குகின்றது). www.ifrc.org/what/disasters/idrl/index.asp

4.3.அனர்த்தங்கள் மற்றும் மனிதநேய உதவி தொடர்பான மனிதநேய கொள்கை சட்டகங்கள், வழிகாட்டிகள் மற்றும் கோட்பாடுகள்

சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) **என்பவற்றிற்கான நடத்தை நெறித் தொகுப்பு** (பிற்சேர்க்கை 2: நடத்தை நெறிகளின் தொகுப்பினைப் பார்க்கவும்).

சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கத்தின் அடிப்படை கோட்பாடுகள் 1965, செஞ்சிலுவையின் 20ஆவது சர்வதேச மாநாட்டின் போது உள்வாங்கப்பட்டது**.** www.ifrc.org/what/values/principles/index.asp

மனிதநேய பொறுப்புடைமையின் HAP **தரங்கள் 2007,** மனிதநேய பொறுப்புடைமை பங்காளித்துவம் (சான்றுப்படுத்தல் உள்ளடங்கலாக மனிதநேயத் துறைக்கான சர்வதேச சுயக் கட்டுப்பாட்டு அங்கம்) . www.hapinternational.org

மனிதநேய நிதியுதவித்துவ கோட்பாடுகள் மற்றும் சிறந்த செயற்பாடு 2003, நிதியுதவி நாடுகள், ஐ.நா நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கம் என்பவற்றின் ஸ்டோக்ஹோம் மாநாட்டின் போது ஒத்துக் கொள்ளப்பட்டது. ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் 16 அரசுகளினால் கைச்சாத்திடப்பட்டது. www.goodhumanitariandonorship.org

பங்காளித்துவத்தின் கோட்பாடுகள்: அர்ப்பணிப்புக்கான ஆவணம் 2007, 2007ஆம் ஆண்டு ஜுலை மாதம் உலக மனிதநேய கூட்டத்தின் (ஐ.நா மற்றும் ஐ.நா அல்லாத மனிதநேய நிறுவனங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்) போது ஒத்துக் கொள்ளப்பட்டது.www.globalhumanitarianplatform.org/ghp.html

பிற்சேர்க்கை 2

பேரிடர் நிவாரணத்தில் ஈடுபடும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் , செம்பிறைச் சங்கம் இயக்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நடத்தை நெறிகளின் தொகுப்பு.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் பேரவையினாலும் செம்பிறைச் சங்கத்தினாலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவினராலும் இணைந்து தயாரிக்கப்பட்டது.

நிதி உதவி: கெரிட்டாஸ் இன்டர்நேஷனலிஸ், கத்தோலிக்க நிவாரண சேவைகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கள் மற்றும் செம்பிறை அமைப்புக்கள் பேரவை, குழந்தைகளை காப்போம் சர்வதேசக் கூட்டணி, லூத்தரன் உலகப் பேரவை, ஆக்ஸ்பாம் உலக தேவாலயங்களின் செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேசக் குழு (செஞ்சிலுவை சங்கங்களின் சர்வதேச குழு தவிர மற்றவை அனைத்தும் மனிதநேய எதிர்கொள்ளல் அமைப்பின் கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களாகும்)

நோக்கம்

இந்நடத்தை நெறிகள் நமது நடத்தையின் தரங்களைப் பாதுகாக்கிறது. அது செயற்படுவதை பற்றி விபரிப்பதில்லை. அது எப்படி உணவுப் பங்கீடுகளை கருதுகின்றது/அகதிகள் முகாம் எப்படி அமைக்கப்படுகின்றன என்பதை கூறுகிறது. பேரிடர் எதிர்கொள்ளல் நடவடிக்கைளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ரெட் கிரெசன்ட் இயக்கம் ஆகியவற்றின் சுதந்திரம், சிறப்புத் தன்மை மற்றும் பாதிப்பு போன்றவற்றில் உயர்தரங்களை பராமரிக்கிறது. இது ஒரு தன்னார்வத்தில் அமைந்த நெறிகளின் தொகுப்பாகும். நெறித் தொகுப்பில் முன் வைக்கப்படும் தரங்கள் பராமரிப்பதற்கு ஏற்றுக் கொள்ளும் அமைப்பின் விருப்பத்தினால் அமுல்படுத்தப்படுகிறது.

ஆயுத மோதல் சூழலில், இப்போதைய நடத்தை நெறித் தொகுப்பானது சர்வதேச மனிதநேயச் சட்டங்களுக்கு இணங்கவும் விளக்கம் பெறப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது.

இந்த நடத்தை நெறிகளின் தொகுப்பானது முதலில் தரப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிகமான, மூன்று இணைப்புகளாக பின் வருபவை முன் வைக்கப்படுகின்றன. பேரிடர்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு அடைக்கலம் அளித்து, உபசரிக்கும் அரச கொடையாளராக உள்ள அரசுகள் மற்றும் நாடுகளுக்கிடையிலான அமைப்புக்கள். இவை மனிதநேய உதவியை சிறப்பாக செய்வதற்காக வேலை செய்வதற்கான சூழலை உருவாக்குவதற்கான நெறிகளை முன் வைக்கின்றன.

வரையறைகளுக்கான விளக்கங்கள்.

NGO: NGO என்றழைக்கப்படும் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அரசிடமிருந்து தனித்து அமைக்கப்படுபவை ஆகும். எந்த நாட்டில் உருவாகின்றனவோ அங்கு செயல்படுபவை ஆகும்.

NGHA: NGHA (அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்கள்) என்ற பதமானது மனிதநேயப் பணியில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் குறிக்கும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை இயக்கம், செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை அமைப்புக்களின் சர்வதேசக் கூட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பு அமைப்புக்கள் மற்றும் மேலே வரையறுத்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் இதில் அடங்கும். இந்த நெறித் தொகுப்பு பேரிடர் எதிர்கொள்ளல் நடவடிக்கையில் ஈடுபடும் மனிதநேய நிறுவனங்களுக்கு மட்டுமே குறிப்பாக பொருந்தும்.

IGO: IGO (அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனங்கள்) இத்தகைய அமைப்புக்கள் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான அரசாங்கங்களினால் உருவாக்கப்படுபவை. இதில் ஐ.நாவின் அனைத்து நிறுவனங்களும் மற்றும் பகுதி அமைப்புக்களும் அடங்கும்.

பேரிடர்கள்: உயிர் இழப்போ பெரிய அளவிலான மனிதத் துயரமும் சிரமமும் மற்றும் பெரிய அளவிலான பொருட்சேதத்தையோ வரவழைக்கும் பேரழிவு சம்பவம் ஒரு பேரிடர் என்றழைக்கப்படுகிறது.

நடத்தை நெறித் தொகுப்பு

பேரிடர் எதிர்கொள்ளல் திட்டங்களில் ஈடுபடும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை இயக்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நடத்தைக்கான கொள்கைகள்.

1 மனிதநேய உதவியே முதன்மையானது.

மனிதநேய உதவியைப் பெறுவதற்கான உரிமையும், அதைப் பெறுவதற்கான உரிமையும் அடிப்படை மனிதநேயக் கொள்கையாகும். அது அனைத்து நாடுகளிலுமுள்ள அனைத்து குடிமக்களினாலும் அனுபவிக்கத் தகுந்ததாகும். சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில், எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மனிதநேய உதவியை அளிப்பது என்பது நமது கடமை என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம். எனவே பாதிக்கப்பட்ட மக்களிடம் தடையின்றி செல்வதற்கான தேவையானது நமது பொறுப்பை அமுல்படுத்துவதற்கான அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பேரிடரை எதிர்கொள்வதற்கான நமது நடவடிக்கையின் முதன்மையான நோக்கமானது மனித குலத்தின் துயரை நீக்குவதே, குறைந்த பட்சம் பேரிடர்களால் உருவாக்கப்படும் அழுத்தத்தை எதிர்கொள்வதற்கான சக்தியை அளிப்பதே. நாம் மனிதநேய உதவி அளிக்கும்போது அது பாரபட்சமாகவோ/அரசியல் நடவடிக்கையாகவோ இருக்கக் கூடாது அல்லது அப்படி பார்க்கப்படவும் கூடாது.

2 உதவி பெறுபவரின் இனம், கொள்கை அல்லது தேசிய இனத்தைப் பொருட்படுத்தாது எவ்வித பாரபட்சமின்றியும் உதவியானது அளிக்கப்படுகிறது. தேவையின் அடிப்படையில் மட்டுமே உதவியானது முதன்மைப்படுத்தப்பட்டு தீர்மானிக்கப்படுகிறது.

எங்கெல்லாம் முடிகிறதோ, பேரிடரினால் அந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளும் உள்ளூரிலுள்ள ஏற்கெனவே உள்ள திறன்களும் முழுமையாக மதிப்பிடப்பட்டு அதனடிப்படையில் நிவாரண உதவியானது அளிக்கப்பட வேண்டும். நமது மொத்த திட்டங்களுக்குள் ஒவ்வொன்றுக்குமான அளவுகளை பரிசீலிப்பது குறித்து நாம் சிந்திப்போம். மனிதன் எங்கு துயரப்பட்டாலும் அவனது துயர் நிச்சயம் துடைக்கப்பட வேண்டும். ஒரு நாட்டில் இருப்பது போலவே மற்றொரு நாட்டிலும் வாழ்க்கை என்பது விலை மதிக்க முடியாதது ஆகும். இவ்வாறு நாம் அளிக்கும் உதவியானது எந்த அளவிலான துன்பத்தை களையப்ப போகிறோம் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு செய்யப்படல் வேண்டும். இந்த அணுகுமுறையை அமுல்படுத்தும் போது பேரிடரினால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் சமூகங்களில் முக்கிய பங்காற்றும் பெண்களை நாம் அங்கீகரிக்கின்றோம். இந்த பங்கானது நமது உதவித் திட்டங்கள் மூலம் குறைக்கப்படாது. ஆனால் தொடர்ந்து ஆதரிக்கப்படும் என்பதை உறுதி செய்கிறோம்.

இத்தகைய உலகளாவிய பாரபட்சமில்லாத சுதந்திரமான கொள்கையானது சிறப்பாக அமுல்படுத்தப்பட வேண்டுமெனில், நமது கூட்டாளிகளுக்கும் அவசியமான வளங்களைப் பெறுவதற்கு உரிமை வேண்டும். காற்றை பெற்று பேரிடரினால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் சமமான முறையில் அளித்திட வேண்டும்.

3 ஒரு அரசியல் அல்லது மதக் கொள்கையை அமுலப்படுத்துவதற்கு உதவியைப் பயன்படுத்தக் கூடாது.

மனிதநேய உதவியானது தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின், தேவைக்கேற்ப அளிக்கப்படுகின்றது. மனிதநேய உதவி புரியும் நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட அரசியல் அல்லது மதக் கருத்துக்களை பிரசாரம் செய்ய உரிமை இருந்தாலும், இந்தக் கருத்துக்களை உதவி பெறுபவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது இல்லை என்றும் உதவியானது இக் கருத்துக்களைச் சார்ந்தது இல்லை எனவும் நாங்கள் உறுதி கூறுகிறோம். உதவி அளிப்பதை இந்த குறிப்பான அரசியல் அல்லது மதக் கொள்கையை ஏற்றுக் கொள்வதோடு சம்பந்தப்படுத்த மாட்டோம்.

4 அரசின் வெளியுறவுக் கொள்கைக்கான கருவிகளாக நாங்கள் செயற்பட மாட்டோம்.

மனிதநேய உதவி புரியும் நிறுவனங்கள் அரசாங்கங்களிடமிருந்து சுதந்திரமாக செயற்படுகின்றன. எனவே, எமது கொள்கைகளையும் அமுலப்படுத்தும் யுக்திகளையும் நாங்களே உருவாக்கிக் கொள்கிறோம். எங்களுடைய சொந்தமான சுதந்திரமான கொள்கையுடன் ஒத்துப் போவதாக இருந்தாலொழிய, நாங்கள் எந்த வித அரசின் கொள்கைகளையும் அமுலப்படுத்துவது இல்லை. நாங்கள் ஒருபோதும் தெரிந்தோ அல்லது கவனக் குறைவாகவோ எம்மையோ அல்லது எமது ஊழியர்களையோ, அரசாங்கங்களுக்கான முக்கியமான அரசியல், இராணுவம் மற்றும் பொருளாதார தகவல்களை சேகரிப்பதற்கு பயன்படுத்த விடமாட்டோம் அல்லது மனிதநேய நோக்கங்களைத் தவிர மற்ற நோக்கங்களுக்கு பயன்படமாட்டோம். அல்லது கொடை -யாளர் அரசுகளின் வெளியுறவுக் கொள்கைக்கான கருவிகளாக இருக்க மாட்டோம். நாங்கள் பெறும் உதவியை பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளுக்காகவே நாங்கள் பயன்படுத்துவோம். கொடையாளர் அரசுகள் உபரியாக உற்பத்தி செய்கின்ற சரக்குகளை இந்த உதவியைப் பயன்படுத்தி விற்பதற்கோ அல்லது எமது தலையில் கட்டவோ நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அல்லது கொடையாளரின் அரசியல் நலனுக்காக நாங்கள் செயற்பட மாட்டோம். எமது பணியை ஆதரிப்பதற்காக உழைப்பையும் நிதியையும் தன்னார்வத்துடன் அளிக்கும் சம்பந்தப்பட்ட தனிநபர்களை நாங்கள் மதிக்கின்றோம். அத்தகைய தன்னார்வத் தூண்டுதலினால் மேற்கொள்ளப்படும் சுதந்திரமான நடவடிக்கையை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். எங்கள் சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள ஒரே ஒரு நிதி ஆதாரத்தை கொடையாளரை சார்ந்திருப்பதைத் தவிர்க்க விரும்புகின்றோம்.

5 நாங்கள் பயன்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் மதிக்கின்றோம்

நாங்கள் பணிபுரியும் நாடுகள் மற்றும் சமூகங்களின் கோட்பாடு, அமைப்புக்கள் மற்றும் பழக்க வழக்கங்களையும் மதிக்கின்றோம்.

6 உள்ளூர் திறன்களின் அடிப்படையில் பேரிடரை எதிர்கொள்ளும் திறனை வளர்க்க நாம் முயற்சிப்போம்.

அனைத்து மக்களும் சமூகங்களும் பேரிடரில் பல்வேறு திறன்களையும் பலவீனங்களையும் கொண்டிருப்பர். நாம் இந்தத் திறன்களை வலிமைப்படுத்திட உள்ளூர் ஊழியர்களை பணிக்கு அமர்த்துவது, உள்ளூர் பொருட்களை வாங்குவது மற்றும் உள்ளூர்

நிறுவனங்களிடம் வர்த்தகம் புரிவது போன்றவற்றை எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மேற்கொள்ளலாம். திட்டமிடுவதிலும் அமுல்படுத்துவதிலும் எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம் தகுந்த முறையில் உள்ளூர் அரசாங்க அமைப்புக்களின் மூலமாக நாம் பணி புரியலாம். நெருக்கடிகளில் நாம் மேற்கொள்ளும் எதிர்கொள்ளல் நடவடிக்கைகளுக்கு ஒருங்கிணைப்புக்கு உயர்ந்த முக்கியத்துவம் நாம் அளிக்கின்றோம். நிவாரணப் பணிகளில் நேரடியாக ஈடுபட்டிருக்கும் நபர்களுக்குள்ள நாடுகளில் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. இதில் சம்பந்தப்பட்ட ஐ. நா. வின் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அடங்குவர்.

7 நிவாரண உதவியின் மேலாண்மைப் பணியில் திட்டத்தின் பயனா-ளிகளை ஈடுபடுத்துவதற்கு வழிமுறைகளை கண்டறிவது.

பேரிடர் எதிர்கொள்ளலுக்கான உதவியானது பயனாளிகளின் மீது திணிக்கக் கூடாது. இலக்காக உள்ள பயனாளிகள் வடிவமைப்பிலும் மேலாண்மை மற்றும் உதவித் திட்டத்தை அமுல்படுத்துவதிலும் ஈடுபடுத்தும்போதே சிறப்பான நிவாரணத்தையும் மற்றும் நீடிக்கின்ற மறுவாழ்வையும் சாதிக்க முடியும். நமது நிவாரணம் மற்றும் மறுவாழ்வு திட்டங்களில் சமூகத்தினரின் முழு பங்கேற்பையும் அடைய நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

8 பேரிடரினால் ஏற்படும் எதிர்கால பலவீனங்களையும் குறைக்கவும் அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றும்படியாக நிவாரண உதவியாக கண்டிப்பாக அமைய வேண்டும்.

நீண்ட கால வளர்ச்சிக்கான அம்சங்களை பாதிக்கும்படியாக, சாதகமான முறையிலோ அல்லது பாதகமான முறையிலோ அனைத்து நிவாரண செயற்பாடுகளும் இருக்க வேண்டும். இதை அங்கீகரித்தே நிவாரணத் திட்டங்களை அமுல்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். அதுவே எதிர்கால பேரிடர்களுக்கான பயனாளிகளின் பலவீனங்களைக் குறைத்து நிலைத்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்க முடியும். நிவாரணத் திட்டங்களின் வடிவமைப்பிலும் அவற்றை மேலாண்மை செய்வதிலும் சுற்றுச் சூழல் அக்கறைகளுக்கு நாங்கள் முக்கிய கவனம் செலுத்துவோம். மனித நேய உதவியின் பாதக விளைவை குறைக்க நாங்கள் முயற்சிப்போம். அதாவது வெளி உதவியை நீண்டகாலமாக பயனாளிகள் சார்ந்திருப்பதை தவிர்ப்பதாகும்.

9 நம்மிடமிருந்து உதவி பெறுபவர்களுக்கும், அதற்கான வளங்களைப் பெறும் நபர்களுக்கும் நாம் பொறுப்பானவர்களாக செயல்படுகிறோம்.

பேரிடரின் போது உதவி செய்ய விரும்புபவர்களுக்கும், உதவி தேவைப்படுபவர்களுக்கும் இடையில் நாம் ஒரு நிறுவனத் தொடர்பாக செயற்படுகிறோம். எனவே நாம் இரு தரப்பினருக்கும் பொறுப்பானவர்களாக செயற்படுகிறோம். கொடையாளர்களிடமும், பயனாளிகளிடமும் நாம் மேற்கொள்ளும் தொடர்புகள் திறந்த மனப்பான்மையுடன் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். நிதிப்பார்வையிலிருந்தும் அதன் வீச்சை ஏற்படுத்துகிறதா என்ற கண்ணோட்டத்திலிருந்தும் நமது நடவடிக்கைகள் எப்படி உள்ளன என்பதை அறிய அவை குறித்து அறிக்கை தர வேண்டியதன் அவசியத்தை நாம் அங்கீகரிக்கிறோம். உதவி விநியோகஸ்தர்களை தகுந்த முறையில் கண்காணிப்பதை உறுதி செய்யவும் பேரிடர் உதவியின் தாக்கத்தை முறையாக மதிப்பீடுகள் மேற்கொள்வதையும் ஒரு கடமையாக நாம் அங்கீகரிக்கிறோம். திறந்த மனப்பான்மையுடன் நமது பணியின் தாக்கத்தையும் அந்த தாக்கத்தை குறைக்கும் அல்லது அதிகரிக்கும்

காரணிகளையும் குறித்து நாம் அறிக்கை தரத் தயாராக உள்ளோம். மதிப்புக்குரிய வளங்களை வீணாக்குவதை குறைப்பதற்கு நமது திட்டங்கள் தொழில் சார்ந்தோரின் உயர் தரங்களையும் நிபுணத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

10. நமது தகவலிலோ, பிரசாரங்களிலோ மற்றும் விளம்பர நடவடிக்கைகளிலோ பேரிடரினால் பாதிக்கப்பட்டவர்களை நம்பிக்கை இழந்த பிறவிகளாக அல்ல கண்ணியத்துடனான மனிதர்களாகவே நாம் அங்கீகரிக்க வேண்டும்.

நமது செயற்பாடுகளில் பேரிடரில் பாதிக்கப்பட்டவர் நமது சமமான கூட்டாளி என்று மதிக்கப்படுவது எப்போது விட்டுவிடக் கூடாது. நமது பொதுத் தகவல்களில் பேரிடர் குறித்த புறவயப்பட்ட சித்தரிப்பையே காட்டவேண்டும். அதில் அச்சங்களை விடவும் பேரிடரினால் பாதிக்கப்பட்டவர்களின் திறமைக்கும் அபிலாசைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். மக்களின் ஆதரவை அதிகப்படுத்துவதற்காக நாம் ஒருங்கிணைந்து செயற்பட்டாலும் ஒட்டுமொத்த நிவாரண உதவியைவிட அதிகமான விளம்பரத்திற்காக உள்ளூர் அல்லது வெளியிலிருந்த கேளிக்கையை அனுமதிக்கக் கூடாது. மற்ற பேரிடர் எதிர்கொள்ளல் உதவி நிறுவனங்களுடன் போட்டிபோட்டுக் கொண்டு ஊடக விளம்பரத்திற்கு முயற்சிப்பதை தவிர்ப்போம். ஏனெனில் சில சூழ்நிலைகளில் இப்படி விளம்பரப்படுத்துவது பயனாளிகளுக்கு சேவை அளிக்கப்படுவதற்கு எதிராகவோ அல்லது நமது ஊழியர்கள் அல்லது நமது பயனாளிகளின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிப்பதாக முடியும்.

பணிச் சூழல்

மேலே முன்வைக்கப்பட்ட நெறிகளின் தொகுப்பை ஒருதலைப்பட்சமாக ஏற்று நடக்க முயற்சிப்பதாக கூறிய பிறகு, மனிதநேய அரச சார்பற்ற நிறுவனங்கள் பேரிடர் எதிர்கொள்ளல் நடவடிக்கைகளில் சிறப்பாக பங்கேற்பதற்கு, கொடையாளர் அரசாங்கங்களும், பாதிக்கப்பட்டவர்களை அடைக்கலம் வந்து உபசரிக்கும் அரசாங்கங்களும், அரசாங்கங்களுக்கு இடையிலான அமைப்புக்களும் முக்கியமாக ஐ. நா. வின் நிறுவனங்கள் போன்றவை ஒரு பணிச் சூழலை உருவாக்குவதற்கு நாங்கள் பின்வரும் அறிகுறிகளை, வழிகாட்டுதல்களை அளிக்கிறோம்.

இந்த வழிகாட்டுதல் வழிகாட்டுவதற்கு அளிக்கப்பட்டவை. இவை சட்டப்படி கட்டாயமல்ல அல்லது அரசுகளோ, அரசுகளுக்கு இடையிலான அமைப்புக்களோ இந்த வழிகாட்டுதல்களை ஏற்று நடப்போம் என்பதற்காக எந்த ஆவணங்களிலும் கையெழுத்துப் போட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இது எதிர்காலத்தில் பணி புரிவதற்கான ஒரு இலக்காக கருதலாம். அவை திறந்த மனதுடனும், கூட்டுறவுடனும் அளிக்கப்பட்டுள்ளன. அப்போதே நமது கூட்டங்கள் நாம் எத்தகைய இலட்சிய பூர்வ உறவை அவர்களுடன் மேற்கொள்ள விரும்புகிறோம் என்பதை அவர்களுக்கு உணர்த்தவே இப்படி செய்கிறோம்.

பிற்சேர்க்கை 1 பேரிடரினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் அரசுகளுக்கு பரிந்துரைகள்

1 பேரிடரினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் அரசுகளுக்கு பரிந்துரைகள்

அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களின் சுதந்திரமான மனிதநேய மற்றும் பாராபட்சமில்லா நடவடிக்கைகளை அரசுகள் அங்கீகரிக்கவும் ஆதரிக்கவும் வேண்டும்.

அரச சார்பற்ற மனிதநேய நிலையங்களின் சுதந்திரமான அமைப்புக்களாகும். இவற்றின் சுதந்திரமும் பாரபட்சமின்மையும் அடைக்கலம் தந்து உபசரிக்கும் அரசுகளால் மதிக்கப்பட வேண்டும்.

2 அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்கள்

பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவாக சென்றடைய உபசரிக்கும் அரசுகள் வழி வகை செய்ய வேண்டும்.

அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்கள் மனிதநேயக் கொள்கைகளின்படி முழுமையாக வழி நடக்கும் பட்சத்தில், அவை மனிதநேய உதவி புரிவதற்கு அவை விரைவாகவும் பாரபட்சமின்றியும் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களை அணுகி, அனுமதிக்கப்பட வேண்டும். இது உபசரிக்கும் அரசின் கடமையாகும். அதன் இறையாண்மைப் பொறுப்பின் ஒரு பகுதியை செயலாக்கும் விதமாக இத்தகைய உதவியை தடுக்கக் கூடாது. மாறாக அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களின் பாரபட்சமில்லாத அரசியலற்ற உதவியை அரசுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். உபசரிக்கும் அரசுகள் நிவாரண ஊழியர்கள் விரைவாக உள்ளே நுழையவும் குறிப்பாக உள்ளே வருவதற்கும் வெளியே செல்வதற்குமான விசாக்கள், பொருட்களை கொண்டு வருவதற்கான அனுமதிகளை இரத்து செய்வது அல்லது இவை விரைவாக கிடைக்க அனுமதிக்க வேண்டும். சர்வதேச ரீதியான நிவாரணப் பொருட்களையும் ஊழியர்களையும் கொண்டு செல்ல விமானங்கள் மேலே பறக்கவும் தரையிறங்கவும் உரிமைகள் நெருக்கடிக் காலம் முழுவதும் விரைவாக வழங்கப்பட வேண்டும்.

3 பேரிடர்களின் போது நிவாரணப் பொருட்களும் தகவலும் காலத்திற்கு கிடைக்கும்படி அரசுகள் வழி வகை செய்யவேண்டும்

நிவாரணப் பொருட்களும் கருவிகளும் ஒரு நாட்டிற்குள் முழுமையாக மனிதர்களின் துயர் துடைக்கவே கொண்டுவரப்படுகின்றன. வணிக நோக்கத்திற்காகவோ அல்லது இலாபத்திற்காகவோ அல்ல, அத்தகைய பொருட்கள் எவ்வித தடையூறுமின்றி இலவசமாக அனுமதிக்கப்படுகின்றன. அவை தூதரக சான்றிதழ்கள் அல்லது இரசீதுகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரியங்கள் அல்லது பிற தடைகள் அல்லது இறக்குமதி வரிகள், விமானம் இறங்குவதற்கான கட்டணங்கள் அல்லது கப்பல் நிற்பதற்கான துறைமுகக் கட்டணங்கள் போன்ற தேவைகளுக்கு நிவாரணப் பொருட்கள் உட்படுத்தப்படக் கூடாது.

தற்காலிகமாக அவசியமான நிவாரண கருவி ஒன்றை அதாவது வாகனங்கள், இலகு ரக விமானங்கள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் ஆகியவை இறக்குமதி செய்யும் போது உபசரிக்கும் அரசே உரிமம் அல்லது பதிவுத்தடைகள் ஆகியவற்றை தற்காலிகமாக நீக்கி விடவேண்டும். அதே அளவுக்கு சமமாக நிவாரணப் பணிகள் முடியும்போது நிவாரண கருவிகளை அங்கிருந்து மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கக் கூடாது.

பேரிடர் தகவல் தொடர்புகளை முறைப்படுத்த உபசரிக்கும் அரசுகள் சில வானொலி அலைகளை ஒதுக்கி விடலாம். அவற்றை நிவாரண அமைப்புக்கள் அந்நாட்டில் சர்வதேச தொடர்புகளுக்கும் பேரிடர் தகவல் பரிமாற்றங்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த வானொலி அலைகளை பேரிடர் நிகழக் கூடிய வாய்ப்புள்ள சமூகங்களுக்கு பேரிடர் முன்பாகவே தெரிவித்து விடலாம். நிவாரணப் பணியாளர்கள் தங்களின் நிவாரண

நடடிவக்கைகளுக்கு அனைத்து தகவல் தொடர்புகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர்களுக்கு அதிகாரங்கள் அரசுகளினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

4 ஒருங்கிணைக்கப்பட்ட பேரிடர் தகவலும் திட்டமிட்ட சேவையையும் அரசுகள் அளிக்க வேண்டும்.

நிவாரண உறுப்பினர்களின் ஒட்டுமொத்த திட்டமிடலும் ஒருங்கிணைப்பும் இறுதியில் உபசரிக்கும் அரசின் பொறுப்பையே சேரும். அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்களுக்கு நிவாரணத் தேவைகள் குறித்து தகவல்கள் அளிக்கும் பட்சத்தில் திட்டமிடலும் ஒருங்கிணைப்பும் பெரிய அளவில் அதிகரிக்கும். அதேபோல இந்நிறுவனங்களுக்கு திட்டமிடல் பற்றி அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிவாரண முயற்சிகளுக்கான அரசு அமைப்புக்கள் குறித்து தகவலும் அவர்கள் எதிர்கொள்ளக் கூடிய பாதுகாப்பு அபாயங்கள் குறித்தும் தகவல்களை அரசுகள் அளிக்க வேண்டும்.

நிவாரண முயற்சிகளை சிறப்பாக பயன்படுத்துவதற்கும் அவற்றை சிறப்பாக ஒருங்கிணைக்கவும் உபசரிக்கும் அரசுகள் பேரிடருக்கு முன்பாக அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்கள் தேசிய அளவில் தொடர்பு கொள்வதற்கான ஒரு முறை தொடர்பு மையங்களை உருவாக்க வேண்டும்..

5 ஆயுத மோதலின்போது பேரிடர் நிவாரணம்.

ஆயத மோதலின்போது நிவாரண நடவடிக்கைகள் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளால் ஆளுமை செலுத்தப்படுகின்றன.

பிற்சேர்க்கை 2 கொடையாளர் அரசுகளுக்கான பரிந்துரைகள்

1 அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்கள் சுதந்திரமான அமைப்புக்கள் இவற்றின் சுதந்திரமும் பாரபட்சமின்றியும் கொடையாளர் அரசுகளினால் மதிக்கப்பட வேண்டும். கொடையாளர் அரசுகள் அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்களை தங்களது அரசியல் அல்லது சித்தாந்த நோக்கங்களை நிறைவேற்ற பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

2 செயற்படும் சுதந்திரத்திற்கான உத்தரவாதத்துடன் கொடை அரசுகள் நிதியளிக்க வேண்டும்.

அரச சார்பற்ற மனிதநேய அமைப்புக்கள், கொடையாளர் அரசுகளிடமிருந்து நிதியும் பொருள் உதவியும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே வேகத்துடன் அவற்றை பேரிடரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டும். மனிதநேயம் மற்றும் சுதந்திரமான நடவடிக்கையாக இது இருக்க வேண்டும். நிவாரண நடவடிக்கைகளை அமுல்படுத்துவது அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களின் இறுதிப் பொறுப்பாகும். அவை அந்நிறுவனங்களின் கொள்கைகளின் படி மேற்கொள்ளப்படும்..

3 பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைய அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களுக்கு உதவி கொடையாளர் அரசுகள் தமது அலுவலகங்களை பயன்படுத்த வேண்டும்.

பேரிடரினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்கள் பாதுகாப்புடனும் சுதந்திரமாக செல்வதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வதிலுள்ள முக்கியத்துவத்தை கொடையாளர் அரசுகள் அங்கீகரிக்க வேண்டும். இப்பிரச்சினைகளில் உபசரிக்கும் அரசுகளிடம் அவசியமான தமது இராஜ தந்திரத்தை பயன்படுத்திட கொடை -யாளர் அரசுகள் தயாராக இருக்க வேண்டும்..

பிற்சேர்க்கை 3. அரசுகளுக்கிடையிலான அமைப்புக்களுக்கான பரிந்துரைகள்

1 அரசுகளுக்கு இடையிலான அமைப்புக்கள் உள்ளூரிலிருந்தாலும் அல்லது வெளிநாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களை தமது மதிப்புக்குரிய கூட்டாளியாக அங்கீகரிக்க வேண்டும்.

அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்கள் ஒரு சிறந்த பேரிடர் எதிர்கொள்ள் நடவடிக்கையை மேற்கொள்ள ஐ. நா. மற்றும் மற்ற அரசுகளுக்கிடையிலான அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணிபுரிய விருப்பமுடையவையாக உள்ள தோழமை உறவுடன் கூட்டாளிகளின் கண்ணியம் மற்றும் சுதந்திரத்தை மதிக்கும் கூட்டாளி உணர்வுடன் செயற்படுவர். அரசுகளுக்கிடையிலான அமைப்புக்கள் அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களின் சுதந்திரத்தையும் பாரபட்சமின்மையையும் மதிக்க வேண்டும். அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களுடன் நிவாரணத் திட்டங்கள் தயாரிப்பது குறித்து ஐ. நா. கலந்தாலோசிக்க வேண்டும்.

2 சர்வதேச அளவிலும் உள்ளூர் அளவிலும் பேரிடர் நிவாரணத்தை அளித்திடுவதற்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு வடிவத்தை அரசுகளுக்கிடையிலான அமைப்புக்கள் உபசரிக்கும் அரசுகளுக்கு அளிக்க வேண்டும்.

சர்வதேச அளவில் தேவைப்படுகின்ற பேரிடர் நிவாரணத்திற்கென ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு வடிவமைப்பை அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்கள் கொண்டிருப்பதில்லை.

இந்த பொறுப்பானது உபசரிக்கும் அரசுகளையும் சம்பந்தப்பபட்ட ஐ. நா. வின் அமைப்புக்களையுமே சாரும். கால வரம்புக்குள் சிறப்பான முறையில் பாதிக்கப்பட்ட அரசு மற்றும் தேசிய மற்றும் சர்வதேச பேரிடர் எதிர்கொள்ளும் சமூகத்தின் இந்த சேவையை அளிக்க இவ்வமைப்புக்கள் கடமைப்பட்டுள்ளனர். எந்த வகையிலும் அரசு சாரா மனித நேய நிறுவனங்கள் தம் சொந்த சேவைகளை சிறப்பாக ஒருங்கிணைத்து அளிப்பதை உறுதி செய்ய அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

ஆயுத மோதல் சூழ்நிலைமைகளில் நிவாரண நடவடிக்கைகளானவை சம்பந்தப்பட்ட சர்வதேச மனிதநேய சட்டத்தின் சரத்துக்களினால் ஆளுமை செலுத்தப்படுகின்றன.

3 ஐ. நா. அமைப்புக்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பை அரசுகளுக்கு இடையிலான அமைப்புக்கள் அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களுக்கும் அளிக்க வேண்டும்.

அரசுகளுக்கு இடையிலான அமைப்புக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு சேவைகள், எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ, அங்கே. கூட்டாளிகளாக செயற்படும் அரச சார்பற்ற மனிதநேய நிறுவனங்களுக்கு நீடிக்கப்பட வேண்டும்..

4 ஐ. நா. அமைப்புக்கள் சம்பந்தப்பபடட தகவலைப் பெறுவதைப் போன்று அதே முறையில் அரசு சாரா மனித நேய நிறுவனங்கள் பெறுவதற்கு அரசுகளுக்கு இடையிலான அமைப்புக்கள் வழியாக செய்து தரவேண்டும்.

அரசுகளுக்கு இடையிலான அமைப்புக்கள் தமது கூட்டாளியாக இணைந்து பணிபுரியும் அரசு சாரா மனித நேய நிறுவனங்களுடன் பேரிடர் எதிர்கொள்ளல் நடவடிக்கைகளை அமுல்படுத்துவது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்..

Annex 3

Abbreviations and Acronyms

ACT	artemisinin-based combination therapy
ALNAP	Active Learning Network for Accountability and Performance in Humanitarian Action
ART	anti-retroviral therapy
ARV	anti-retroviral
BCPR	Bureau for Crisis Prevention and Recovery (UNDP)
BEmOC	basic emergency obstetric care
BMI	body mass index
BMS	breastmilk substitutes
BTS	blood transfusion service
CDC	Centers for Disease Control and Prevention
CE-DAT	Complex Emergency Database
CEDAW	Convention on the Elimination of All Forms of Discrimination Against Women
CEmOC	comprehensive emergency obstetric care
CFR	case fatality rate
CHW	Community Health Worker
CIHL	Customary International Humanitarian Law
cm	centimetre
CMR	crude mortality rate
CRC	Convention on the Rights of the Child
CRPD	Convention on the Rights of Persons with Disabilities
CRS	Catholic Relief Services

CTC	cholera treatment centre
DAC	Development Assistance Committee
DPT	diphtheria, pertussis and tetanus
ECB	Emergency Capacity Building (Project)
ENA	Emergency Nutrition Assessment
EPI	Expanded Programme on Immunization
ETAT	Emergency Triage, Assessment and Treatment
EWARN	early warning
FANTA	Food and Nutrition Technical Assistance
FAO	Food and Agriculture Organization of the United Nations
FTE	full-time equivalent
GMO	genetically modified organism
HAP	Humanitarian Accountability Partnership
HIS	health information system
IASC	Inter-Agency Standing Committee
ICC	International Criminal Court
ICCPR	International Covenant on Civil and Political Rights
ICERD	International Convention on the Elimination of All Forms of Racial Discrimination
ICESCR	International Covenant on Economic, Social and Cultural Rights
ICRC	International Committee of the Red Cross
ICVA	International Council of Voluntary Agencies
IDLO	International Development Law Organization
IDP	internally displaced person
IFE	infant feeding in emergencies
IFPRI	International Food Policy Research Institute
IFRC	International Federation of Red Cross and Red Crescent Societies
IGC	International Grains Council
IHL	international humanitarian law
IMAI	Integrated Management of Adult Illness
IMCI	Integrated Management of Childhood Illnesses
IMPAC	Integrated Management of Pregnancy and Childbirth
INEE	Inter-Agency Network for Education in Emergencies
IPC	infection prevention and control
IRC	International Rescue Committee
IRS	indoor residual spraying
ISPO	International Society for Prosthetics and Orthotics

IYCF	infant and young child feeding
km	kilometre
LBW	low birth weight
LEDS	light-emitting diodes
LEGS	Livestock Emergency Guidelines and Standards
LLIN	long-lasting insecticide-treated net
MISP	Minimum Initial Service Package
MOH	Ministry of Health
MSF	Médecins sans Frontières
MUAC	mid upper arm conference
NCDs	non-communicable diseases
NCHS	National Center for Health Statistics
NFI	non-food item
NGO	non-governmental organisation
NICS	Nutrition in Crisis Information System
NRC	Norwegian Refugee Council
NTU	nephelolometric turbidity units
OAU	Organization of African Unity (now African Union)
OCHA	United Nations Office for the Coordination of Humanitarian Affairs
OECD	Organisation for Economic Co-operation and Development
OHCHR	Office of the United Nations High Commissioner for Human Rights
ORS	oral rehydration salts
PAHO	Pan American Health Organization
PEP	post-exposure prophylaxis
PLHIV	people living with HIV
PLWHA	people living with HIV and AIDS
PMTCT	prevention of mother-to-child transmission (of HIV)
PoUWT	point-of-use water treatment
Q&A	quality and accountability
RH	reproductive health
RNI	reference nutrient intakes
SCM	supply chain management
SEEP	Small Enterprise Education and Promotion (Network)
SKAT	Swiss Centre for Appropriate Technology
SMART	Standardised Monitoring and Assessment of Relief and Transitions

STIs	sexually transmitted infections
TB	tuberculosis
TIG	tetanus immune globulin
U5MR	under-5 mortality rate
UDHR	Universal Declaration of Human Rights
UN	United Nations
UNAIDS	Joint United Nations Programme on HIV/AIDS
UN-DDR	United Nations Disarmament, Demobilization and Reintegration
UNDP	United Nations Development Programme
UNFCCC	United Nations Framework Convention on Climate Change
UNFPA	United Nations Population Fund
UN-Habitat	United Nations Human Settlements Programme
UNHCR	Office of the United Nations High Commissioner for Refugees (UN Refugee Agency)
UNICEF	United Nations Children's Fund
UNISDR	United Nations International Strategy for Disaster Reduction
USAID	United States Agency for International Development
VCA	vulnerability and capacity analysis
VIP	ventilated improved pit (latrine)
WASH	water supply, sanitation and hygiene promotion
WEDC	Water, Engineering and Development Centre
WFH	weight for height
WFP	World Food Programme
WHA	World Health Assembly
WHO	World Health Organization
WSP	water safety plan

Visit the Sphere Project website

www.sphereproject.org

To order the Sphere Handbook please go to

www.practicalactionpublishing.org/sphere

மனிதநேய மறுசீரமைப்பில் மனிதநேய சாசனம் மற்றும் அடிப்படைத் தரங்கள்

கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமை

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் உலக சமுதாயம் பிரதிபலிக்க வேண்டிய தரங்களை வரையறுப்பதற்கும் மற்றும் தீர்மானிப்பதற்குமான ஒரு முயற்சியாக ஸ்பியர் திட்டம் காணப்படுகின்றது.

இந்த கையேட்டின் மூலம், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் தமது வாழ்க்கையையும் மற்றும் வாழ்வாதாரங்களையும் மீளக் கட்டியெழுப்புவதற்குமான உரிமை அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அவர்களின் குரல் மதிக்கப்படும், அவர்களுடைய கௌரவமும், பாதுகாப்பும் மேம்படுத்தப்படும் வகையில் செயற்படும் உலகத்திற்காக ஸ்பியர் செயற்படுகின்றது

இந்த கையேட்டில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியுள்ளன:

- **மனிதநேய சாசனம்:** அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பிரதிபலிக்கும் சட்ட மற்றும் ஒழுக்க கோட்பாடுகள்
- **பாதுகாப்பு கோட்பாடுகள்**
- **நான்கு பிரதான வாழ்க்கையை காப்பாற்கும் மனிதநேயத் துறைகளில் மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்கள்:** நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் போஷாக்கு மேம்பாடு: உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு: உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள்: சுகாதார நடவடிக்கை. **அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் நிலைத்திருக்கக் கூடிய சூழ்நிலையில் வாழ்வதற்கும் மற்றும் திரும்புவதற்கும் மற்றும் கௌரவத்துடன் வாழ்வதற்கும் மனிதநேய மறுசீரமைப்பில் எட்டப்பட வேண்டியது என்னவென்று** அவை விளக்குகின்றன.

நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களினால் பரந்த உரிமைத்துவத்தினை ஸ்பியர் கையேடு கொண்டுள்ளது. **அனர்த்தம் மற்றும் மோதல் சூழ்நிலைகளில் தரம் மற்றும் பொறுப்புடைமையை நோக்கிச் செயற்படுவதற்கு பொதுவான ஊடகம் ஒன்றை மனிதநேயத் துறைக்கு இவை வழங்குகின்றன.** மனிதநேயத் துறைக்குள் எழுந்துள்ள தேவைகளுக்கு பிரதிபலிக்கும் அளவை பரவலாக்கும் பொருட்டு ஸ்பியர் கையேடு பல ”சகத் தரங்களை” கொண்டுள்ளது.

பல மனிதநேய அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் செஞ்சிலுவை மற்றும் செஞ்சிலுவை சங்கங்களினால் 1997ஆம் ஆண்டு ஸ்பியர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.